தென்னிந்தியத் திருச்சபை

# கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு 2023



என் காலடிக்கு
**உம் வாக்கே விளக்கு!**
என் பாதைக்கு
**ஒளியும் அதுவே!**
திபா 119:105

தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கைபேடு

# 2023

**கருப்பொருள்**

**"கிறிஸ்துவின் அன்பு உலகை ஒப்புரவுக்கும் ஒன்றிப்புக்கும் நெருக்கி ஏவுகிறது"**

**(Christ's Love Moves the World to Reconciliation and Unity)**

**வெளியீடு**

**தொடர்புத் துறை, கன்னியாகுமரிப் பேராயம்**

# ஆசியுரை

"கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களை கடவுள் கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் பங்குகொள்ளச் செய்து எங்கள் வழியாகத் தம்மைப்பற்றி யாவரும் அறியச் செய்கிறார்; அவ்வறிவு நறுமணம் போல் எங்கும் பரவுகிறது. இவ்வாறு செய்யும் கடவுளுக்கே நன்றி உரித்தாகுக!" II கொரி. 2 : 14.

2023-வது வருடத்திற்கான அருளுரைக் கையேட்டிற்கு ஜெபத்தோடு ஆசியுரை எழுத கடவுள் கிருபை செய்தார். இந்த அருளுரை கைநூல் நமது பேராய ஆயர்கள்,, திருப்பணிவிடையாளர்கள் மிகுந்த ஜெபத்தோடு அருளுரைகளைஆயத்தம் செய்ய உதவிடும் என நம்புகிறோம். ஆலய ஆராதனை வேளையில் ஆண்டவரின் வார்த்தை மிக முக்கிய இடம் பெறுகின்றபடியால் அருளுரையாற்றுவோர் அதிக அக்கறையுடனும் அர்ப்பணிப்போடும் ஆண்டவரின் வார்த்தைகளை சொல்ல பரிசுத்தாவியானவர் அருள் செய்வாராக.

II தீமோத். 3 : 16, 17 இல் மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. இவ்வாறு கடவுளின் மனிதர் தேர்ச்சி பெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதி பெறுகிறார். எனவே கடவுளின் வார்த்தைகளை பிரயோகிக்க நாம் அதனை உட்கொண்டு அதன்படி வாழவும், போதிக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

ஆலய ஆராதனையில் போதகர்களின் அருளுரைகள் அனைத்தும் இறைமக்களை ஆண்டவருக்கு நேராய் அழைத்து செல்ல உதவியாய் இருத்தல் நன்று. அருளுரையினை அவசரமாய் அல்ல அனுதின வாழ்வு சார்ந்த அனுபவத்தோடும் ஆத்தும பாரத்தோடும் நிறைவேற்றுவோம். அனைத்து ஆராதனைகளிலும் ஆண்டவரின் வார்த்தைகளை திருமறை மற்றும் தின செய்தியாகியவைகளை படித்து தியானத்தோடு ஆயத்தப்படுவோம். பதட்டமில்லாமலும், பரவசமில்லாமலும், அதேவேளையில் மனிதநேய பண்புடன் மக்களுக்கு கடவுளின் வார்த்தையினை பரிசுத்தமாய் பகிர்ந்தளிப்போம்.

தென்னிந்தியத் திருச்சபையின் இவவாண்டிற்கான தியான நாட்குறிப்புகள் மற்றும் தலைப்பின் அடிப்படையில் பேராயத்தின் அனைத்து ஆலயங்களிலும் ஆராதனைகளை நடத்த ஆண்டவர் அருள் செய்வாராக. இந்த வருட அருளுரைக் கையேட்டினை வெளியிட மிகுந்த உதவியாயிருந்த தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவரோடு இணைந்து உழைத்த தொகுப்பாசிரியர்கள் அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தாமஸ், அருள்திரு. P. சாம் பிளசிங் மற்றும் அருளுரையினை ஆயத்தம் செய்து தந்த அனைவரையும் வாழ்த்துவதோடு அச்சுப் பணிகளை மேற்கொண்ட நாகர்கோவில் C.S.I. அச்சக பணியாளர்கள் மற்றும் அச்சக மேலாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் ஆகியோரயும் வாழ்த்தி பாராட்டுகிறேன். ஆண்டவரின் வார்த்தையின் முக்கியத்துவத்தினை இறைமக்கள் அறிய இறைவார்த்தையினை சரியாக அறிவிப்போம் என தந்தை மைந்தர், தூய ஆவியர் திருபெயரில் வாழ்த்து கூறி ஆசி கூறுகிறேன்.

இறைப்பணியில்

பேரருள்திரு. அறிவர் A.R. செல்லையா, M.A.,B.D., M.Th.,D.Min.
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# தொடர்புத்துறை இயக்குநரிடமிருந்து . . . .

இறைவார்த்தையின் வலிமையும் ஆற்றலும் எத்துணை பெரிது! அது திருச்சபைக்கு ஆதரவும், ஊக்கமுமாக இருக்கிறது. திருச்சபை மக்கள் நம்பிக்கைக்கு உறுதியளிக்கிறது. ஆன்ம உணவாகவும் அருள் வாழ்வின் தூய, நிலையான ஊற்றாகவும் இருக்கின்றது. இத்தகைய ஆற்றல் நிறைந்த இறைவார்த்தைகளை தொகுத்து, பகுத்து, காலச் சூழலுடன் பொருத்திப் போதிக்கும் பணிவிடைண்ய சீரிய முறையில் நிறைவேற்ற இவ் அருளுரைக் கைநூல் உதவுமென்று நம்புகிறேன்.

யாராவது விளக்கிக்காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்து கொள்ள முடியும் (திப. 8 : 31) என்ற ஏக்கக்குரலுடன் வாழும் மனிதருக்கு இறைவார்த்தைகளை விளக்கி கூறும் பிலிப்புகளைத் தேடி இறைமக்கள் ஆவலுடன் இறை இல்லம் வருகிறார்கள். அத்தகைய மக்களின் தாகத்தை தணிக்கும் வண்ணம் இறைவேண்டலோடு மறையுரைகள் ஆயத்தம் செய்யப்படவேணடும். இதனால் வார்த்தைத் திருப்பணி வலுவாக அமையும், இறைமக்களின் பற்றுறுதி வாழ்வும் உறுதியுடன் அமையும்.

சீடர்களின் மனக்கண்களை திறந்த உயிர்த்த ஆண்டவர் (லூக். 24 : 45) இவ்வருளுரைக் கையேடு நூல் வழி இறைமக்களின் மனக்கண்களை திறந்து, மனங்களில் தெளிவை அருள அருள்செய்வாராக!

அருளுரை மேடைகளில் பிரதிபலிக்கும் மறையுரைகள் இறைவார்த்தையின் ஆழத்திற்கு அழைத்து சென்று மனங்களை தெளிவடையச் செய்கிறது. காலத்தின் கண்ணாடியாக வாழ்வியல் சூழல்களை பிரதிபலிக்கிறது. பற்றுறுதி வாழ்வில் தடம் பிறழாது முன் செல்ல கலங்கரை விளக்காக வழி காட்டுகிறது. கடவுளோடு உள்ள உறவு நிலையில் வளர உதவி செய்கிறது. வாழ்வியல் சூழல்களில் உள்ள கடினங்கள் நடுவிலும் வாழ, வளர, வாழ்ந்து காட்ட உந்துதல் தருகிறது. அத்தகைய சீரிய நோக்கங்களை நிறைவேற்ற ஆண்டவர் நம் கரங்களில் தந்துள்ள அருளுரையாற்றும் பணியை சீருடன் நிறைவேற்றுவோம்.

அருளுரைக் கையேடு நன்முறையில் வெளிவர ஆலோசனை தந்த நமது பேராயர் பேரருள்திரு. அறிவர். A.R. செல்லையா அவர்களுக்கும் இவ்வாண்டு அருளுரை நூல் ஆயத்த அமர்வுகளில் பேராயர் அவர்களின் நல் வழிகாட்டுதலோடு தொகுப்பாசிரியர்களாக ஒப்படைப்புடன் செயல்பட்டு குறித்த நேரத்தில் நூல் வடிவம் பெற உழைத்த அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தோமஸ், அருள்திரு. P. சாம் பிளசிங் ஆகியோருக்கும் குறித்த காலத்தில் புத்தகம் அச்சிட உதவிய அச்சக மேலாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ், அவர்களுக்கும் மற்றும் அச்சகப்பணியாளர் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இறையாசி என்றும் நம்மில் பெருகுவதாக.

இவண்,
**அருள்திரு. C. கில்டன் தயானந்த்,** M.A.,B.D., M.Th.,
இயக்குநர்
தொடர்புத்துறை
கன்னியாகுமரிப் பேராயம்

# தொகுப்பாசிரியர்களிடமிருந்து . . . .

வரலாற்றில் வந்த இயேசுவும் விசுவாசிக்கப்படுகிறவராகிய கிறிஸ்துவும் (Jesus of history and Christ of faith) இருவரல்லர், அவர் ஒருவரே. இந்த நம்பிக்கையை இணைப்பது இறை வார்த்தையாகும். கிறிஸ்தவத் தொழுகையில் இறை வார்த்தைப் பகிர்வு நேரத்திற்கு அதிக முக்கியத்துவமுண்டு. தொழுகைக்குக் கூடி வருகின்ற இறைமக்கள் சமூகத்தின் மத்தியில்தான் இறை வார்த்தைகளை வாசிப்பதும் வியாக்கியானம் செய்வதும், இறை வார்த்தை (Word of God) உருவானதே ஆராதனை சமூகத்தினின்று தான். இறை வார்த்தையை வாசிப்பதும் (Reading), வியாக்கியானம் செய்வதும் (Interpreting) சபையின் நியமனத்தை பெற்றவர்களும் அதிகாரப்படுத்தப் பட்டவர்களும் தான். யூதர்கள் பாரம்பரியத்தினின்று உருமாறி வந்த "இறை வார்த்தைப் பணிவிடை" (Ministry of the word) கிறிஸ்தவத் திருச்சபையில் இன்று தொழுகை வழியாகத் தொடர்கின்றது. இது திருச்சபையின் தொடர்ச்சியான பணியும், கற்பித்தல் முறையுமாகும். அதனால் தொழுகையின் முக்கியமான பகுதி இறைவார்த்தைப் பணி விடை என்று நாம் உறுதிபட கூறிவிடமுடியும். திருச்சபைத் தொழுகை வருடத்தை (Liturgical year) ஒவ்வொரு காலகட்டமாகப் பிரித்து (Cycles or Periods) அதன்படி திருமறை வாசிப்பையும் வியாக்கியானத்தையும் நிர்வகித்து வருகிறது.

நமது தென்னிந்தியத் திருச்சபை, திருச்சபைத் தொழுகைகளில் இறை வார்த்தைப் பகிர்வுக்கு மிகவும் முக்கியத்துவமளித்துள்ளது. திருச்சபையின் ஒழுங்கின்படி அனைத்து திருச்சபைகளும் ஒரே கருப்பொருளில் அருளுரையாற்ற வாய்ப்பளித்துள்ளது. அருளுரையாளர் தூய ஆவியின் துணை கொண்டு மக்களைப் புரிந்து கொண்டு அருளுரையாற்ற நினைப்பூட்டப்படுகிறார். இந்த அருளுரைக் கைநூல் அதற்கு ஓர் வழிகாட்டியாக மட்டும் அமைகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு A பிரிவின் (Cycle- A )-ன் அடிப்படையில் இறை வார்த்தைகளை நாம் வாசித்து தியானிக்க உள்ளோம்.

நமது தொழுகைகளில், நாம் ஆற்றும் அருளுரைகள் சில எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. நமது அருளுரைகள், இறை மக்களின் கிறிஸ்தவ விசுவாசத்தை ஊட்டி வளர்ப்பதாகவும், தொழுகைக்கு வருவோரைக் கிறிஸ்தவ விசுவாச பாரம்பரியத்தில் அவர்களை இணைப்பதாகவும் திருச்சபையின் தொழுகைக்கு முழு வடிவத்தைத் தருவதாகவும், இறை மக்களின் உடல், உள்ளம் மற்றும்

சமூக, பொருளாதார ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும், இறை பிரசன்னத்தை உணர்த்துவதாகவும், சமூக உணர்வை வளர்த்துவதாகவும், மனிதனின் ஆன்மாவின் விலையை அவனே அறியச் செய்வதாகவும், இறைமக்களை பாவ அறிக்கைக்கும் மனமாற்றத்திற்கும் நேராக நடத்துவதாகவும் அவர்களின் பிரச்சனைகளுக்கு பரிகாரமாக அமைவதாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சிந்தனைப் பொருள் வழியாக கிறிஸ்துவை வெளிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என்பதாகும். நமது அருளுரைகள் இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யுமென்றால் அருளுரை வேளை ஆசீர்வாதமாக அமையும். ஏனெனில் இயேசுவின் அருளுரைவேளை கூடிவந்தோரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்தது.

அகில உலகத் திருச்சபை மன்றத்தின் 11-வது மாநாடு 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 8 வரை ஜெர்மனியிலுள்ள காள்ஸ்ரூகே (Karslruhe) என்னுமிடத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாநாட்டுக் கூடுகையில் கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது (2 கொரி. 5 : 14) என்ற திருவசனத்தின் அடிப்படையில் “கிறிஸ்துவின் அன்பு உலகை ஒப்புரவுக்கும் ஒன்றிப்புக்கும் நெருக்கி ஏவுகிறது” (Christ’s Love Moves the World to Reconciliation and Unity) என்னும் செம்பொருளில் இந்த மாநாட்டுக் கூடுகை அமர்வுகள் நடைபெற்றது. இந்த செம்பொருளையே நம்முடைய பேராயத்தின் 2023-ம் ஆண்டுக்கான செம்பொருளாக நமது பேராயர் தெரிந்தெடுத்துள்ளார்கள். இவ்வாண்டைய நம்முடைய ஆலய அருளுரைகள் யாவும் கிறிஸ்துவின் அன்பு நம் இறைமக்கள் யாவரையும் ஆட்கொள்ளும் விதத்தில் நம்மை அவரோடுள்ள ஐக்கியத்திற்கும் ஒப்புரவுக்கும் நேராக வழி நடத்துவதாக என உங்களை வாழ்த்துகிறோம்.

2023-ம் ஆண்டின் அருளுரை கைநூலை தொகுக்கும் பணியை இரு ஆயர்களாக இணைந்து பணியாற்றும் வாய்ப்பை நமது பாசமிகு பேராயர் Rt. Rev. Dr. A.R. செல்லையா, M.A.,B.D., M.Th., D.Min. அவர்கள் எங்கள் இருவருக்கும் அளித்துள்ளார்கள். இந்த அரிய வாய்ப்பை எங்களுக்குத் தந்த உயர்மதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய நமது பேராயர் அவர்களுக்கு எங்கள் நன்றியை உளமார கூறிக்கொள்கிறோம். இந்த மேலான பணியில் எங்களுக்கு வழிகாட்டியாக செயல்பட்டவர்கள் எங்கள் உடன்பணியாளரும் நமது பேராய தொடர்புத்துறை இயக்குனருமான அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களாகும். அவர்களின் அனுபவமிக்க வழிகாட்டுதலுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது (2 தீமோ. 3:16) என்ற இறை வார்த்தைப்படி, இந்த அருளுரை கைநூலைத் தொகுப்பதில் எங்களுக்கு உதவியாக தங்கள் பங்களிப்புகளைத் தந்தவர்கள் உயர்மதிப்பிற்குரிய பேராயர், பேராயரம்மா, சேகர ஆயர்கள், ஆயர்கள் மற்றும் இறைப்பணியாளர்கள் ஆகியோராவர். கடவுளின் ஆவியானவரின் தூண்டுதலின் அடிப்படையில் கருத்தாழமிக்க அருளுரைகளை நமக்கு ஆயத்தமாக்கித் தந்துள்ளார்கள். எழுத்தாளர்களின் இறையியல் சார்ந்த தரிசனங்கள் அடங்கிய அவர்கள் எழுத்துக்கள் இறைமக்களின் ஆன்மீக வாழ்வை வளமாக்கும் என நம்புகிறோம். எழுத்தாளர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இந்த அருளுரைத் தொகுப்புப் பணியில் குழுத்தலைவர்களாயிருந்து பணியாற்றியவர்கள் பலருண்டு. அருள்திருவாளர்கள், S. பெல்சன் கிராமணி, J. நேசபிரின்ஸ், R. சேம் பிரின்ஸ், A. மகேர் ஷால் அஸ்பாஸ், A. பிரைட் சாலமன், A. ஜெப சுஜி, S. வில்சன், முத்துசுவாமி கிறிஸ்துதாஸ், A. இராயப்பன் ஐசக், C. ஜெபகுமார், G. சதிலால் விஜின், M. இம்மானுவேல் கின்சன் பெல், T.P. சலீம் தங்ககுமார், V. சாமுவேல் ஜெபராஜ் ஆகியோராவர். இந்த வருடத்தின் அருளுரை கையேட்டில் புதுமையாக ஒவ்வொரு சிந்தனை பொருளுக்கேற்ற பாடல்களை தெரிவுச்செய்து இணைத்துள்ளோம். இந்த சீரிய பணியில் எங்களுக்கு உதவியாயிருந்த அருள்திரு. D. ஒனேசிமஸ் சகாயம் அவர்களுக்கு நன்றி. முன் அட்டைப்படம் தயாரித்த திரு. M.R. மில்டன் மார்க் அவர்களுக்கும், அருளுரை கையேடு தயாரிப்புப் பணியில் மிகவும் உதவியாயிருந்த திருப்பணியாளர்கள் B. சேம் ஜெபசிங், S. பீரித்திவ், A. பெபின் ஜாண் டேனியல் ஆகியோருக்கும், தமிழ் திருத்தப்பணியில் உதவி செய்த திரு. N. தாசையன், பேராசிரியர் முனைவர் ஐசக் அருள்தாஸ், பேராசிரியர் முனைவர் A. டெல்பின், பேராசிரியர் முனைவர் ஐஸ்வர்ய சுகிலா ஆகியோருக்கும் அச்சுப்பணிகளைத் திறம்பட நிறைவேற்றிய நாகர்கோவில் C.S.I. அச்சக பணியாளர்கள் அதன் கண்காணிப்பாளர், Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ் ஆகியோருக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இறையாசி நம்மில் பெருகுவதாக.

அருளுரை தொகுப்புப் பணியில்,

அருள்திரு. **P. சேம் இம்மானுவேல் தோமஸ்,** M.A., B.D.

அருள்திரு. **P. சாம் பிளசிங்,** M.A., B.D., M.Th.

# பொருளடக்கம்


**ஞாயிறு அருளுரைகள்** பக்கம் எண்

1. 01.01.2023 அனைவரோடும் தொடரும் கடவுளின் உடன்படிக்கை 19

**கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் சிந்தனைப் பொருள் அறிமுகம்**

3. 01.01.2023 நாள் 1 : நன்மை செய்ய கற்றுக் கொள்ளல் ... 26
4. 02.01.2023 நாள் 2 : நீதி நிலைநாட்டப்பெறும் போது ... 29
5. 03.01.2023 நாள் 3 : நீதியை நிறைவேற்றுங்கள், இரக்கம் கொள்வதை நாடுங்கள், மனத்தாழ்மையாய் நடந்து கொள்ளுங்கள். ... 32
6. 04.01.2023 நாள் 4 : ஒடுக்கப்பட்டோரின் கண்ணீரை நோக்குங்கள் ... 36
7. 05.01.2023 நாள் 5 : நாட்டில் அந்நியராக ஆண்டவரின் பாடலைப் பாடுதல் ... 41
8. 06.01.2023 நாள் 6 : மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்தது எனக்கே செய்ததாகும். ... 44
9. 07.01.2023 நாள் 7 : இப்போதிருப்பது இனி இருக்க வேண்டியதில்லை ... 49
10. 08.01.2023 நாள் 8 : நீதி கூட்டுறவை மீள்நிலைப்படுத்துகிறது... 54
11. 06.01.2023 கிறிஸ்துவின் திருவெளிப்பாடு ... 58
12. 08.01.2023 அனைவருக்கும் இறைவெளிப்பாடு ... 62
13. 08.01.2023 கடவுளின் திருக்கோவிலாக உடலை மதித்தல் ... 66
14. 15.01.2023 அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு ... 72
15. 22.01.2023 பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பு ... 77
16. 26.01.2023 நாட்டு கட்டுமானத்தில் பங்கேற்பு ... 81
17. 29.01.2023 உண்மையான பக்தி ... 87
18. 02.02.2023 கிறிஸ்துவின் அர்ப்பணம் ... 93
19. 05.02.2023 ஓய்வுநாள் : படைப்பின் நிறைவு ... 97
20. 12.02.2023 மனதுருகும் அன்பும் நலமருள்தலும் ... 102
21. 12.02.2023 படைப்பின் நோக்கத்தை மீறுதலே வீழ்ச்சி ... 106
22. 19.02.2023 தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்கத்தின் காலம் ... 112
23. 22.02.2023 சிலுவை : மனமாற்றத்திற்கோர் அழைப்பு ... 116

## நோன்புக்கால புதன் மற்றும் வெள்ளி அருளுரைகளுக்கான சிந்தனைப் பொருள் அறிமுகம்


24. 24.02.2023 உண்மை என்னும் இடைக்கச்சை ... 125

25. 26.02.2023 தூய்மையாக்கும் கிறிஸ்து ...
031

26. 01.03.2023 ஆண்டவர் காட்டும் நோன்பு ... 136

27. 03.03.2023 நீதியென்னும் மார்பு கவசம் ... 139

28. 05.03.2023 மன்னிப்பருளும் கிறிஸ்து ... 142

29. 05.03.2023 ஊழியத்தில் பெண்களின் பங்கு ... 148

30. 08.03.2023 ஆண்டவருக்கு உகந்த நோன்பு ... 155

31. 10.03.2023 அமைதியின் நற்செய்திக்குரிய ஆயத்தமெனும் மிதியடி ... 158

32. 12.03.2023 ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து ... 160

33. 15.03.2023 மனமாற்றத்தின் நோன்பு ... 164

34. 17.03.2023 நம்பிக்கையென்னும் கேடயம் ... 166

35. 19.03.2023 விடுவிக்கும் கிறிஸ்து ... 169

36. 22.03.2023 நல்லுறவின் நோன்பு ... 174

37. 24.03.2023 மீட்பு என்னும் தலைச்சீரா ... 177

38. 26.03.2023 சிலுவையும் மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும் ... 180

39. 29.03.2023 வெளிவேடமற்ற நோன்பு ... 184

40. 31.03.2023 இறைவார்த்தையென்னும் போர்வாள் ... 188

41. 02.04.2023 கிறிஸ்து அமைதியின் அரசர் ... 191

42. 03.04.2023 வெளி வேடத்திற்குத் தீர்ப்பு ... 195

43. 04.04.2023 கோவிலைத் தூய்மையாக்குதல் ... 198

44. 05.04.2023 மரியாளின் அர்ப்பணிப்பு ... 203

45. 06.04.2023 கிறிஸ்து : வாழ்வருளும் உணவு ... 207

46. 07.04.2023 சிலுவை : தற்கையளிக்கும் அன்பு ... 211

47. 08.04.2023 புது வாழ்வுக்கான எதிர்நோக்கு ... 215

48. 09.04.2023 உயிர்ப்பு : இயேசுவில் வாழ்வைக் கொண்டாடுதல் ... 220

49. 16.04.2023 கிறிஸ்துவை ஆண்டவராகவும் கடவுளாகவும் அறிக்கையிடுதல் ... 227

| | | | |
|---|---|---|---|
| 50. | 23.04.2023 | கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு | ... 232 |
| 51. | 25.04.2023 | நற்செய்தி அறிவிப்பவரின் பாதங்கள் | ... 240 |
| 52. | 30.04.2023 | அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு | 246 |
| 53. | 01.05.2023 | உழைப்பும் வாழ்வும் | ... 250 |
| 54. | 07.05.2023 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி | ... 254 |
| 55. | 14.05.2023 | கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தலாகிய அருட்பணி | 258 |
| 56. | 18.05.2023 | உயர்த்தப்பெற்ற கிறிஸ்து | ... 264 |
| 57. | 21.05.2023 | தூய ஆவியாரின் வாக்குறுதி | ... 269 |
| 58 | 21.05.2023 | இயேசு நல்ல தொடர்பாளர் | ... 273 |
| 59. | 28.05.2023 | வாரும் தூய ஆவியாரே முழுப்படைப்பையும் மாற்றுருவாக்கும் | ... 277 |
| 60. | 02.06.2023 | திருச்சபை இறைமக்களின் சமூகம் | ... 284 |
| 61. | 04.06.2023 | ஞானமும் அறிவும் : கடவுளின் அருட்கொடை | ... 288 |
| 62. | 04.06.2023 | நாம் மூவொரு கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம்.. | 293 |
| 63. | 11.06.2023 | படைப்பு விடுதலைக்காக வேதனையுற்று தவிக்கிறது | 297 |
| 64. | 18.06.2023 | வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம் | ... 302 |
| 65. | 25.06.2023 | சான்று பகிர்தலாகிய சீடத்துவம் | ... 307 |
| 66. | 02.07.2023 | பொறுப்பான்மை : பொறுப்புள்ள வள மேலாண்மை | 311 |
| 67. | 09.07.2023 | இறைமக்களைத் தகுதிப்படுத்துதல் | ... 315 |
| 68. | 16.07.2023 | இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள் | ... 320 |
| 69. | 23.07.2023 | அருட்பொழிவு திருப்பணி : மாற்றுருவாக்கப்பெற்றது மாற்றுருவாக்கவே | ... 324 |
| 70. | 30.07.2023 | திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம்... | 328 |
| 71. | 06.08.2023 | அருட்பணி : அனைவருக்கும் நற்செய்தி | ... 333 |
| 72. | 13.08.2023 | திருமுழுக்கு என்னும் திருவருள் சாதனம் | ... 338 |
| 73. | 15.08.2023 | நீதிக்கான விடுதலை | ... 344 |
| 74. | 20.08.2023 | தூய நன்றித் திருவிருந்து என்னும் திருவருள் சாதனம் | ... 349 |
| 75. | 27.08.2023 | பல் நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்பு நிலை | ... 353 |
| 76. | 03.09.2023 | ஆசிரியர்கள் விடுதலையின் பிரதிநிதிகள் (முகவர்கள்) | ... 356 |

77. 10.09.2023 மகளிர் : மாற்றத்தை உருவாக்குவோர் ... 360
78. 17.09.2023 அமைதியும் முரண்பாட்டுக்கான தீர்வும் ... 364
79. 24.09.2023 முதியோரின் நற்பலன் ... 369
80. 27.09.2023 சான்று பகிர்வதில் ஒன்றிப்பு ... 374
81. 01.10.2023 இறைமக்களின் சான்று ... 378
82. 08.10.2023 மாற்றுத்திறனுடையோர் : வாழ்வின் புனிதம் ... 384
83. 24.09.2023 ஆண்களும் பொறுப்பும் ... 388
84. 15.10.2023 தற்கால உலகில் இளையோரின்ஆன்மீகம் ... 391
85. 22.10.2023 இறையாளுகைக்கான இடர்வரவை ஏற்றல் ... 396
86. 29.10.2023 பற்றுறுதியைத் திரும்பக் கண்டுபிடித்தலும் மீள்வாழ்தலும் ... 400
87. 05.11.2023 பற்றுறுதியில் பேணி வளர்த்தல் ... 407
88. 12.11.2023 மண்பாண்டங்களில் செல்வம் ... 413
89. 19.11.2023 பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதி செய்தல் 417
90. 26.11.2023 ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தமாதல் ... 421
91. 03.12.2023 கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல் 426
92. 10.12.2023 இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம் ... 433
93. 17.12.2023 மீட்பின் நல்லெதிர் நோக்கு ... 437
94. 24.12.2023 பேருவகை கொள்ளுங்கள் ஆண்டவர் அண்மையில் உள்ளார் .. 443
95. 24.12.2023 கடவுள் நம்மிடம் வருகிறார் ... 447
96. 25.12.2023 கிறிஸ்து பிறப்பு : அமைதியின் அரசருக்கு இடத்தைக் கண்டறிதல் .. 450
97. 31.12.2023 குடும்பம் : கடவுளின் அருட்கொடை .. 452
98. 31.12.2023 நன்றியறிதலுடன் ஆண்டவரிடம் வாருங்கள். .. 456


## புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்


99. 01.02.2023 குணமாக்குவார் ... 460
100. 01.03.2023 விரும்புவது நிகழும் ... 463
101. 01.04.2023 அஞ்சாதிருங்கள் ... 466
102. 01.05.2023 இனி தீங்கில்லை ... 469
103. 01.06.2023 பெருக செய்வார் ... 473

104. 01.07.2023 வெற்றி நமதே ... 476
105. 01.08.2023 நாட்டிற்கு அமைதி ... 478
106. 01.09.2023 வெட்கமடைவதில்லை ... 481
107. 01.10.2023 இளைப்பாறுதல் தருவார் ... 484
108. 01.11.2023 பிள்ளைகள் சிறப்புறுவர் ... 489
109. 01.12.2023 தேடிவரும் விடியல் ... 492

**சிலுவைத் திருமொழிகள்**

110. பாவங்களை மூடும் அன்பு ... 497
111. அங்கீகரிக்கும் அன்பு ... 500
112. பராமரிக்கும் அன்பு ... 503
113. துன்பங்களை ஏற்கும் அன்பு ... 508
114. தம்மையே ஊற்றிவிடும் அன்பு ... 511
115. மீட்கும் அன்பு ... 514
116. ஒப்படைப்பின் அன்பு ... 517

**சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்**

117. கல்வி : கற்றுக்கொள்ளுதலின் நுகம் ... 521
118. தேர்வு பெற தேர்வெழுது ... 525
119. காணிக்கை : நன்றியறிதலின் வெளிப்பாடு ... 528
120. அனைவருக்குமான இறைவேணடலின் வீடு ... 532
121. அறுவடை : உழைப்பின் கொண்டாட்டம் ... 535
122. கடவுளின் சொல்லொணாக் கொடைகளை நினைத்துப்பார் ... 540
123. சிதறுண்டவைகளைக் கண்டுபிடித்தல் ... 547

**விழாக்கால அருளுரைகள்**

124. சிறுவர் : வளரும் விருட்சக் கன்றுகள் ... 554
125. இளையோர் : கிறிஸ்துவின் படைவீரர் ... 560
126. ஞானத்தை உரைக்கும் மகளிர் ... 563
127. சீரமைக்கும் சிற்பிகள் ... 568
128. மகிழ்ச்சி நிறை பாடலுடன் வாருங்கள் ... 573
129. இறைவேண்டல் தடைகளை உடைக்கும் ... 577
130. அறியாமை அகல அறிவைப் பெருக்கு ... 579

# Liturgical Colours - 2023

| | | |
|---|---|---|
| 1. | January 1 - January 6<br>(Christmas Season) | - White |
| 2. | January 7 - February 21<br>(Ephiphany Season) | - Green |
| 3. | February 22 - April 8<br>(Lenten Season) | - Purple |
| 4. | April 9 - May 27<br>(Easter Season) | - White |
| 5. | May 28 - June3<br>(Pentecost Season) | - Red |
| 6. | June 4<br>(Tritinity Sunday) | - White |
| 7. | June 5 - December 2<br>(Pentecost Season) | - Green |
| 8. | December 3 - December 24 morning<br>(Advent Season) | - Purple |
| 9. | December 24 Evening to December 31<br>(Christmas Season) | -White |

# வழிபாட்டு நிறங்கள் : ஓர் விளக்கம்

ஆலய வழிபாட்டில் இசை, பாடல், கலை, வழிபாட்டு முறை போன்ற பல அம்சங்கள் இருந்தாலும் நிறங்களும் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றுள்ளது, “நிறங்கள்” அலங்காரத்தை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனித வாழ்வோடு பல நிலைகளில் தொடர்புடைய நிறங்கள் ஒவ்வொன்றிற்கும் தனிச்சிறப்பு காணப்படுகிறது. பொதுவாக, வெள்ளை, பச்சை, சிகப்பு, ஊதா ஆகிய நான்கு நிறங்களை நாம் ஆலய வழிபாட்டின்போது பயன்படுத்துகின்றோம். கருப்பு நிறமும் சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் பயன்படுத்தபடுவதுண்டு. இந்த வழிபாட்டு நிறங்கள் நமக்கு உணர்த்துகின்ற ஆன்மீக அடையாளங்கள் மற்றும் உண்மைகள் இவை பயன்படுத்தப்படும் காலங்கள் ஆகிய இவைகளைக் குறித்து நாம் அறிவது நல்லது.

## ஊதா (Purple)

ஊதா நிறம் உண்மை மற்றும் நம்பகத்தன்மையை குறிப்பதாக அமைந்துள்ளது. தியாகம், தாழ்மை, கரிசனை, துக்கம் மற்றும் சுய ஒப்படைத்தலுக்கு அடையாளமான நிறமாக பயன்படுத்தபடுகிறது. திருமறை இந்த நிறத்திற்கு “இரத்தாம்ரம்” என்ற பெயரினை குறிப்பிட்டுள்ளது. இரத்தாம்பரம் பொதுவாக செல்வந்தர்களால் மட்டுமே பயன்படுத்த முடியும். ஏனென்றால் அது விலையுயர்ந்தது. இரத்தாம்பரம் கிறிஸ்துவின் ராஜரீகத்திற்கு அடையாளம்.

வருகை காலத்திலும் (Advent) லெந்து காலத்திலும் (Lent) இந்த நிறம் பயன்படுத்தபடுகிறது.

## வெள்ளை (White)

வெள்ளை நிறம் தூய்மை, சமாதானம் மற்றும் அமைதியைக் குறிப்பதாக அமைகின்றது. அதோடு, மகிமை, மகிழ்ச்சி, குற்றமின்மை, மற்றும் ஆன்மாவின் தூய்மையை இந்நிறம் வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்து பிறப்பு காலத்திலும் விண்ணக்கெழுந்த காலத்திலும் மட்டுமின்றி உயிர்ப்பு ஞாயிறு, திரித்துவ ஞாயிறு, இரத்த சாட்சிகளின் ஞாயிறு, ஆலய திருதிறப்பு, வியாகுல வியாழன், திருமுழுக்கு,

திருமணம், திடப்படுத்தல் மற்றும் ஆயர் அருட்பொழிவு தொழுகைகளில் பயன்படுத்தபடுகிறது.

## சிவப்பு (Red)

சிவப்பு நிறம் சிந்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. தியாகத்தின் நிறமான சிவப்பு பெந்தக்கோஸ்து காலத்திலும், தூயவாரத்திலும், சிறப்பு பண்டிகை காலங்களாகிய சபைநாள், பேராய நன்றி தொழுகை போன்ற சிறப்பு காலங்களின் தொழுகைகளிலும் பயன்படுத்தபடுகிறது. இரத்தசாட்சியாக மரித்தவர்களுக்கு சிவப்பு அடையாளமாக அமைகிறது.

## பச்சை (Green)

பச்சை நிறம் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. வாழ்க்கை, வளர்ச்சி, இயற்கை, செழுமை, ஆன்மீக வளர்ச்சி போன்றவற்றை பச்சை குறிக்கின்றது. லத்தின் மொழியில் ஓரியா் என்ற வார்த்தை கிளறுவது, எழுவது மற்றும் வளருவது என்ற பொருளினை கொண்டது. சூரியன் உதயமாவது போன்று நமது வாழ்விலும் நம்பிக்கை துளிர்விடும் என்பதை பச்சை நிறம் குறிப்பிடுகிறது.

திருச்சபையின் வழிபாட்டு கால அட்டவணையில் சிறப்பு நாட்கள் தவிர பொதுவான காலங்களிலும் குறிப்பாக கிறிஸ்து பிறப்பு காலத்தின் முடிவிலிருந்து தவக்காலத்தின் ஆரம்பம் வரையிலும், உயிர்ப்பின் கால முடிவிலிருந்து வருகை கால ஆரம்பம் வரையிலும் பச்சை நிறமே பயன்படுத்தபடுகிறது.

## கருப்பு (Black)

கருப்பு நிறம் பாவம், மரணம் மற்றும் நியாய தீர்ப்பு போன்றவற்றை அடையாளப்படுத்துகிறது. கருப்பு நிறம் பயன்படுத்தபடுவது இறந்தவர்களின் உயிர்த்தெழுதல் குறித்த கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரானது என்ற விவாதங்களும் உண்டு. அடக்க ஆராதனைகளிலும் துக்க வேளைகளிலும் கருப்பு நிறம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**தொகுப்பாசிரியர்கள்**

**01-01-2023** உடன்படிக்கையின் நாள், புத்தாண்டு நாள் & கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

# அனைவரோடும் தொடரும் கடவுளின் உடன்படிக்கை

## God's Continuing Covenant with All

தொநூ. 9 : 8-17 கலா. 4 : 21-31
திபா. 145 லூக். 22 : 14-23



. . . மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன். ( தொ.நூ. 9 : 10)

தந்தை, மைந்தர், தூய ஆவியாரின் திருப்பெயரில் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

புதிய வருடத்தின் ஆரம்ப நாளில் கடவுள் நம்முடன் தொடர்ந்து செயல்படுகிறவராகவும், அவர் நம்மோடும் மற்றும் படைப்புகள் மீதும் கொண்டுள்ள அன்பினை அவரது புது உடன்படிக்கை வழி புதுப்பிக்கின்றார் என்பதையும் உணர்ந்து அவரைப் போற்றுவோம்.

கடவுள், மனிதம் மற்றும் இயற்கை அல்லது படைப்புகள் என்ற மூன்றிலும் கடவுளின் அருள், அன்பு மற்றும் ஆற்றல் இவைகளை காண்கிறோம். இவைகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இவற்றின் தொடர்பால் அல்லது உறவால் உலகம் கடவுளின் திட்டத்தின்படி பழுது இல்லாமல் செயல்படுவது கடவுளின் சித்தம். இந்த உறவுகளில் பாதிப்புகள், விரிசல் வந்தால் அழிவுகளும், பேரிடர்களும் வருவதற்குச் சாத்தியம் உள்ளது.

நடைமுறையில் உறவுக்கும், உடன்பாட்டிற்கும் மிகுதியான இசைவு உள்ளது. உறவுகள் குறையும்போது உடன்பாட்டில் உடைவுகளும், விரிசல்களும் ஏற்படுவது இயல்பாக உள்ளது. எனவே இப்புத்தாண்டில் உறவுகளைப் புனிதமாகக் கருதி உறவுகளைப் பெருக்கிக் கொள்ளத் திருமறை ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவோம். திருமறையில் மகிழ்வு அல்லது சந்தோஷமாய் வாழ்வதென்பது என்பது கடவுளின் இரட்சிப்பில் (சங். 21 : 1), கடவுளின் பாதுகாப்பில் (சங். 63 : 7), மற்றும் கடவுளின்

ஆசீர்வாதங்களில் (சங். 106 : 5), கடவுள் தரும் நாட்களில் (சங். 118 : 24). மகிழ்வாய் வாழ்தலாகும். புத்தாண்டின் ஒவ்வொரு நாளும் கடவுள் உண்டு பண்ணின நாள் ஆகவே அவரில் களிகூர்ந்து மகிழ்ந்து அனுதினமும் வாழவேண்டும். புத்தாண்டில் கடவுளின் உடன்படிக்கை அனைவரோடும் தொடர்வதை புரிந்து கொள்ளும்போது . . .

**உறவில் மகிழும் கடவுள்** ( God Rejoices in Relationships)

ஆண்டவர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர் (*சங். 145 : 8).

கடவுள் தமது உறவினை வெளிப்படுத்த அவர் தமது செயல்பாட்டை விந்தையாக விளக்குகின்றார். அவருடைய மாட்சிமையான செயல்பாடுகள் உறவில் மகிழ நமக்கு முன் உதாரணமாக உள்ளன. இந்த கடவுளின் உறவு நிலைகளை நாம் புரிந்து கொள்ளும் நிகழ்வுகள், வரலாறுகள் பல உள்ளன. திருமறையில் இரக்கத்தால், மன உருக்கத்தால், நீடிய சாந்தத்தால், மற்றும் கிருபையினால் நடந்த சம்பவங்களைத் திரும்ப வாசித்து தியானித்தால் அநேக உண்மையான உறவு நிலைகளைக் கண்டு கொள்ள முடியும்.

ஆதி. 6 : 8-யில் நோவாவுக்கோ கடவுளின் கண்களில் கிருபை கிடைத்தது. இந்தக் கிருபையினால் அழிவில் இருந்து நோவாவைப் போன்ற மக்கள் வாழும்படியும், படைப்புகள் பாதுகாக்கப்படவும் கடவுள் கிருபை புரிந்தார்.

ரோமர் 11 : 6--இல் கடவுளின் மன்னிக்கும் செயல்பாடு கிருபையாக சொல்லப்பட்டுள்ளது. கடவுளின் இரக்கத்தினைத் தாவீது, சவுல் நிகழ்விலே தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. (1 சாமு. 24 : 10-17). தான் வேதனைப்படுத்திய தாவீதிடம், சவுல் நீ என்னிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய், ஆனால் நானோ உனக்குத் தீங்குச் செய்தேன் (1 சாமு. 24 : 17) என்கிறார். கிறிஸ்துவின் உறவுநிலை பாவிகளுக்கு நேராக எப்படி வெளிப்பட்டது என்பதனை “நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்” (மத். 9 : 13) என்பதின் மூலம் அறிய முடிகிறது.

ஆதி. 33 : 1-10 வசனங்களில் சகோதரர்களான ஏசா, யாக்கோபு - சந்தித்த நிகழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது. 10--வது வசனத்தில் ஒருவரை

ஒருவர் பார்த்துக் கூறியது, “உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பது போல் இருக்கிறது.” எனக் குறிப்படப்பட்டுள்ளது.

51-வது சங்கீதம் தாவீதின் மிக முக்கியமான வேண்டுதலும் கிறிஸ்தவ வாழ்வின் மதிப்புயர்வில் தனிப்பட்ட மனமாற்றமும் ஆகும். இதற்கு நமது தனிப்பட்ட நிலையில் பாவ அறிக்கை, மற்றும் மன்னிப்பு அவசியமாயுள்ளது. திருமறை வழி தெய்வீகத்தைப் புரிந்து கொள்ளும் செய்தி உள்ளது. அதாவது கடவுளோடுள்ள நட்புறவு என்பதைவிட ஏனைய மக்களோடும் நமது நல்உறவினைக் கடவுள் கண்டு மகிழ்கின்றார் எனக் காண்கிறோம். ஆகவே நாம் கடவுளோடும் சக மானிடரோடும் உள்ள உறவில் நிலைத்திருந்து வாழ்வோம்.

**உறவில் மகிழும் மனிதம்** (Humanity Rejoices in Relationships)

சங். 133 : 1-யில் சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது என வாசிக்கிறோம். மனிதம் இணைந்து வாழ தடையாய் உள்ள ஆசை, இச்சைகள், வன்செயல்கள், குற்ற செயல்கள் பல அனுதினமும் அரங்கேறுகின்றன. இத்தகைய சூழலில் திருச்சபை நம்பிக்கை தரும் சமூகமாக நிலைக்க வேண்டுமாயின் மனிதம் சந்திக்கின்ற பிரச்சனைகளுக்குப் பதிலுரை (Response) நல்கவேண்டும்.

இரத்த சாட்சியாய் மரித்த ஆர்ச் பிஷப் ஆஸ்கர் ரோமாரோ “திருச்சபை மக்களின் நெருக்கடியில், ஏழ்மையில், அநீதியான வன்செயல் நேரங்களில் மக்களோடு இணைந்து நல்வழியில் செயல்பட்டால், திருச்சபை நற்செய்தியினைப் பகிரும் அமைப்பாக உலகளவில் கருதப்படும்” என்கிறார்.

மனிதத்தின் முதன்மையினைக் கருதி ஆண்டவர் கூறிய வார்த்தைகளை மத்தேயு நற்செய்தியாளர் மத். 5 : 23--24-யில் தெளிவுபடுத்துகின்றார். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கே தானே, பலிபீடத்தின் முன் உன் காணிக்கைகளை வைத்து விட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. நாம் நமக்கு எதிராளியாக நினைப்பவரோடு நல்உறவுடன் வாழாமல் நாம் கொடுக்கும் கொடைகள் உண்மையாய் இராது. அத்தோடு

மட்டுமன்றி நாம் கொடுக்கும் கொடைகளைக் காட்டிலும் மனித உறவு ஒப்புயர்வானது என ஆண்டவர் கற்றுத் தருகின்றார்.

தாய்-தந்தை, கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளை, அண்ணன்-தம்பி உறவுகளின் தேக்கத்தை மன்னித்து, ஒப்புரவாகி உறவில் மனிதமாக வாழ ஆண்டவர் லூக்கா 12 : 15-20 வரை உள்ள உவமையின் வாயிலாக விளக்குகிறார். அதோடு, பொருளாசையினால் ஏற்படும் விபரீதங்களை விட்டுவிட தகுந்த ஆலோசனையும் வழங்குகின்றார். லூக்கா 12 : 20-யில் பொருளாசைக்காரனை மதிகேடனே என அழைத்து, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும் எனக் கேட்டார்.

இப்புதிய ஆண்டில் உறவினைத் தடுக்கும், கெடுக்கும் உடைக்கும் வழிகளைத் தவிர்த்து வாழ நம்மைத் தாழ்மைபடுத்துவோம்.

**உறவில் மகிழும் இயற்கை** (Nature Rejoices in Relationships)

ஆதி. 9 : 10-யில் பேழையிலிருந்து வெளிவந்து உங்களோடிருக்கும் உயிரினங்கள் பறவைகள், கால்நடைகள், நிலத்தில் உங்களுடன் உயிர்வாழும் விலங்கினங்கள் எல்லாவற்றோடும் மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன் எனக் கடவுள் உடன்படிக்கை செய்கிறார்.

கடவுள், மனிதம் மற்றும் இயற்கை அனைத்தும் ஒன்றாக இசைந்து, நல் உறவில் வாழ்வது கடவுளின் திட்டம். ஆனால் இந்த உறவுநிலைகள் சமச்சீர் இல்லாமல் காணப்படபுவதும், மனிதன் இயற்கையின் வளங்களைக் கொடையாக எண்ணாமல் அதனைத் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளினால் தன் சுயநலன்களுக்காக சுரண்டுவதும், அழிப்பதும், சேதப்படுத்துவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆயினும் கடவுள் தாம் படைத்த படைப்பின் மீது பரிதாபப்பட்டு அதனை அழிக்கமாட்டேன் என்ற தமது உடன்படிக்கையைத் (ஆதி. 9 : 11) தொடர்ந்து பாதுகாக்கின்றார். அதோடு, மனுக்குலத்தை தமது உருவில் படைத்து, அவர்களை ஆசீர்வதிக்யையில் நீங்கள் பலுகிப் பெருகி, மண்ணுலகை நிரப்புங்கள்;

அதை உங்கள் ஆற்றலுக்குட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என ஆசீர்வதித்தார் (ஆதி. 1 : 27, 28). எனவே கடவுள் மனுக்குலத்திற்கு தந்துள்ள ஆசீர்வாதம் படைப்பினை ஆண்டு, தாழ்நிலைபடுத்துவதல்ல, அவைகளைப் பண்படுத்தி பாதுகாப்பதாகும் (ஆதி. 2 : 15). ஏனென்றால் மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை (திபா. 24 : 1).

நமது வாழ்வுச்சூழலில் நிலம், நீர், காற்று இவைகளை மனிதன் மாசுபடுத்துவதினால் உள்ள பிரச்சனைகளைப் பற்றிய விழிப்புணர்வு இருந்தாலும் இயற்கையினைப் பாதுகாத்திட சரியான மாற்றுத்திட்டங்கள் இல்லை. இன்றைய அரசின் திட்டமிடுதலிலும் செயல்பாட்டிலும் இயற்கை வளங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைதான் மேலோங்கியுள்ளது.

நாமும் நமது திருச்சபைகளும் கடவுள் நமக்கு அருட்கொடையாகத் தந்துள்ள இயற்கை வளங்களை வீண் செய்யாதபடி அது வருங்கால சந்ததிக்கும் உரியது என்னும் தூரப்பார்வையில் செயல்பட்டால் இறைவன் மகிழ்வார், இயற்கை மகிழும், நாமும் மகிழலாம்.

புத்தாண்டு அனைவருக்கும் ஆசி நிறைந்ததாக அமைந்திட கடவுள் அருள்புரிவாராக.

பேரருள்திரு. அறிவர் Dr. A.R. **செல்லையா**

பேராயர்

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 390 | ஞா. | 391 |
| | கீர். | 467 | கீர். | 465 |

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் சிந்தனைப் பொருள் அறிமுகம்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் என்னும் திருச்சபையின் முயற்சியானது அகில உலகத்திருச்சபையின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான உயர்மன்றத்தின் பணியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடத்திலும ஒரு குறிப்பிட்ட திருமறைப்பகுதி மற்றும் செம்பொருளின் அடிப்படையில் ஒருவாரத்திற்கான தியானம் என்னும் அளவில் இந்த வார இறைவேண்டல் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு ஏசாயா 1 : 12 - 18 வரையிலான திருமறைப்பகுதி சார்ந்து குறிப்பாக எசாயா 1 : 17-ன் அடிப்படையில் நன்மைசெய்; நீதியைத்தேடு என்னும் செம்பொருளின் அடிப்படையில் இவ்வருட வார இறைவேண்டல் பின்பற்றப்படுகின்றது.

எசாயா இறைவாக்கினர் இஸ்ரயேலருக்கு கற்பித்தது என்னவென்றால், கடவுள் மனிதனின் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் எதிர்ப்பார்ப்பது நீதியும் நியாமும் என்பதாகும. எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் (வெளி. 7 : 9) உள்ளடக்கிய மானிடரில் தான் உருவாக்கவுள்ள புதிய சமுதாயத்திற்கு மனிதனின் பங்களிப்பாக உலகில் இந்த நீதியும் நியாயமும் மனிதரால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். எசாயா இறைவாக்கினர் காலத்து மக்கள் நீதிக்கும் நியாயத்திற்கும் பதிலாக செய்ததோ வீணாய் காணிக்கை படைத்தல், தூபம் காட்டுதல் ஒழுங்கீனமாய் கொண்டாடும் தொழுகைகள் மிகுதியான மன்றாட்டு . . . (வ. 13 : 15) போன்றவையாகும். இவைகளை அவர் கண்டனம் செய்ததோடு இவைகளுக்குப் பரிகாரமாக அவர் சொன்னதோ, உங்களைக் கழுவி தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள் தீமை செய்தலை விட்டோயுங்கள் (வ. 16) என்பதாகும்.

ஒவ்வொரு நாள் வார இறைவேண்டல் கூடுகையின்போதும் சிந்தனைப்பொருள் அடிப்படையில் தியானம் செய்வதோடு

குறிப்பிடப்பட்டுள்ள மன்றாட்டுக்குறிப்புகளை நினைவுபடுத்தி மன்றாடுவது பிரிந்து கிடைக்கின்ற திருச்சபைகளையும், உலகையும் கிறிஸ்துவில் ஒன்றிக்கவும், புத்தாண்டைக் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டங்கள் மற்றும் திருச்சபை விசுவாசிகளின் நம்பிக்கையின்படி கிறிஸ்தவர்களின் வாழ்வு துளிர்க்கவும், ஆசீர்வதிக்கப்படவும் இந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் கூடுகை பயனுள்ளதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

**தொகுப்பாசிரியர்கள்**

**01.01.2023** கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

நாள் 1

# நன்மைச் செய்யக் கற்றுகொள்ளல்

## Learning to do the right thing

எசா 1: 12-18 லூக் 10:25-36



"நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம் பெண்ணுக்காக வழக்காடுங்கள்." (எசா 1:17)

இஸ்ரயேலின் கடவுளைப் பற்றிய எண்ணம் உச்சநிலை அடைந்த காலம் எட்டாம் நூற்றாண்டு. குறிப்பாக, ஆமோஸ், ஒசேயா, எசாயா ஆகிய இறைவாக்கினர்கள் புதிய கருத்துகளைப் போதித்தனர். கடவுள் உயர்ந்தவர்; அவருடைய மகிமையை விவரிக்க இயலாது, ஆனால் அந்த மகிமையை உணர முடியும். கடவுள் தூயவர், நீதியுள்ளவர், அவர் தமது தூய்மையாலும் நீதியினாலும் நியாயம் தீர்க்கிறார் என்பதே எசாயாவின் மையக்கருத்து. இவ்வாறு நீதியும், தூய்மையும், மாட்சியும் உடைய கடவுள் தம் மக்கள் தமது விருப்பத்துக்கு இணங்கி நடக்க விழைகிறார். ஆனால் மனிதர் இத்தகைய கடவுளின் திருமுன் பாவியாகின்றனர். மனிதரின் பாவநிலை மாற வேண்டும். அதற்கு மக்கள் தீமையை வெறுத்து நன்மை செய்ய வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.

குறிப்பாக எது நன்மை? என்ற தேடல் மனிதர்களின் உள்ளத்தில் எப்போதும் புரையோடிப் போயிருக்கின்றது. விவிலியத்தின் தொடக்கநூல் இவ்வரலாற்றைப் பதிவுச் செய்கிறது (தொநூ 3:5). எது நன்மை? எது தீமை? என்ற தேடல் மனித குலத்தின் வீழ்ச்சிக்கு அடித்தளமாயிற்று. இத்தகைய சூழலில் நன்மை எது? என்ற படிப்பினையை எசாயா இறைவாக்கினரின் நூல் நமக்கு கற்றுத்தருகிறது. அதைப்பற்றி காண்போம்.

**1. இதயத்தில் தூய்மை வேண்டும்** (எசா 1:16)

பாவத்தினின்று தூய்மையாக்கப்பெற மனிதன் படைக்கும் பலிகள், சடங்காசாரங்கள் போதுமானவையல்ல. உதட்டில் கடவுளை

வாழ்த்தி உள்ளத்தால் அலட்சியம் செய்யும் மக்களின் போக்கைக் கடவுள் வெறுக்கிறார் என்னும் உண்மையை எசாயா வலியுறுத்துகிறார். இதயத்தில் தூய்மையில்லாது வெளிப்புற செயல்களினால் கடவுளைப் பிரியப்படுத்திவிடலாம் என்ற எண்ணம் காணப்பட்டது. போப் பத்தாம் லியோ அறிமுகப்படுத்திய பாவமன்னிப்புச் சீட்டை வியாபாரம் செய்ய டொமினிக்கத் துறவியான ஜாண் தெட்சல் (John Tetzel) கையாண்ட விதம் இப்படியாக இருந்தது: “குறிப்பிட்ட பாவத்திற்கு, குறிப்பிட்ட பணத்தொகைக்குச் சீட்டு வாங்க வேண்டும் என்றும், பணப்பெட்டியில் காசு விழுந்து, கிண் கிணி ஓசை கேட்டவுடன் ஆன்மாக்களுக்கு உத்தரிக்கும் இடத்திலிருந்து விடுதலையும், விண்ணக வாசலில் வரவேற்பும் நடைபெறும்” எனக் கூறினார். இது பாவத்தைக் குறித்த உணர்வை மழுங்கடித்து சாகடிக்கச் செய்து, வெளிப்புற அடையாளத்தை முன்னிலைப்படுத்தியது. அன்றும், இன்றும் இத்தகைய மனப்பாங்கு மக்களிடையே உள்ளது. நன்மை என்பது வெளிப்புற அடையாளமான வழிபாடு, காணிக்கைகள், விழாக்கள் சார்ந்தவை அல்ல; அது இதய தூய்மையைச் சார்ந்தது.

**2. தேவையோடிருப்பவருக்கு உதவ வேண்டும்** (எசா 1:17)

கடவுளின் மீது கொள்ளும் பற்றுறுதி நல்வாழ்வையும், வளத்தையும் அளிக்கும் என்பதை இஸ்ரயேல் மக்கள் மறந்து போயினர். எனவே தான், பிறர்மீது கரிசனையற்றவர்களாய் மாறிப் போயினர். இத்தகைய சூழலைத்தான் இயேசு கிறிஸ்து நல்ல சமாரியன் உவமை வழியாகச் சுட்டிக்காட்டினார் (லூக் 10:30-36). அடுத்திருப்பவரின் தேவையைச் சந்திக்காமல் இறைவனை சந்திக்க நினைப்பதும், அவரைப் பற்றிச் சிந்திப்பதும் வீணானது. எனவே தான் உன்னால் நன்மை செய்யக்கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய மறுக்காதே (நீமொ. 3:27) என்கிறது திருவிவிலியம்.

இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராகவே இருந்தார் (திப 10:38). அனைவருக்கும் விடுதலை என்பதை மையப்படுத்திய அவரது வாழ்வு நன்மை செய்ய நம்மையும் அழைக்கிறது. அவரது பணியில் நம்மையும் இணைத்து, இதயத்தில் தூய்மையுடன், தேவையில் இருப்போருக்கு உதவி செய்து நன்மை செய்து வாழ்வோம்.

## மன்றாட்டுக்காக

1. ஒவ்வொரு நாளும் பிறரின் உதவியை எதிர்பார்த்து வாழும் ஏழைகள், முதியோர், நோயாளர், ஆதரவற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டோர் ஆகியோரின் அனுதின தேவைகள் சந்திக்கப்பட.

2. மாணவ மாணவியர் ஆகியோரின் தேர்வு பயம் நீங்கவும் இவர்களிடையே அதிகரித்துவரும் தற்கொலை எண்ணங்கள் அகலவும் மற்றும் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடையே அதிகரித்து வரும் தற்கொலை எண்ணங்கள் அகல.

3. இள வயதினரிடையே அதிகரித்து வரும் மது போதை பழக்கம் மறையவும் வருங்கால திருச்சபை என வர்ணிக்கப்படும் நம் இளைய தலைமுறையினர் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர.

4. நமது பேராயத்துக்காகவும், நமது பாசமிகு பேராயரின் பேராயர் பணி திருச்சபைக்கு ஆசீர்வாதமாக அமையவும் அனைத்து திருச்சபையின் இறைப்பணியாளர்கள், என் பணி சிறக்கவும் இறைமக்கள் சமூகத்தினரின் ஆசீர்வாதத்திற்காகவும், பேராய கல்வி நிறுவனங்கள், காப்பகங்கள், மருத்துவ நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் இவைகளின் வளர்ச்சிக்காகவும், பேராய குழுக்கள் மற்றும் அனைத்து திருச்சபைகளின் கிளைச் சங்கங்களின் பணிகள் ஆசீர்வதிக்கபடவும்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

| | | |
|---|---|---|
| 𝄞 | கீர். | 47 |
| | ஞா. | 284 |

**02.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்
நாள் 2

# நீதி நிலைநாட்டப் பெறும் போது

## When justice is done . . .

நீமொ. 21 : 13 - 15 மத். 23 : 23 - 25



"வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கியப் போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டு விடுகிறீர்கள். இவற்றைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றையும் விட்டுவிடக்கூடாது." (மத் 23:23)

நீதி என்ற சொல் பரந்த பொருள் கொண்டது. கிரேக்க தத்துவவியலாளர் அரிஸ்டாட்டில் "அவரவர்க்குரியதைக் கொடுப்பதே நீதி" என்று கூறுவார். ஒருவருக்குரியதைக் கொடுப்பது மட்டுமல்ல, ஒருவருக்குரியதைப் பெற்றுக் கொள்வதும் நீதியாகும். எனவே ஒருவருக்குரியதைக் கொடுக்காத போதும் ஒருவர் தனக்குரியதை பெற்றுக்கொள்ளாத போதும் அல்லது பெற்றுக் கொள்ள முயலாக போதும் நீதியின் தன்மை, நீதியின் பொருள் உயிரற்றதாகி விடுகிறது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நீதி என்பது சார்புடையதாய் அதாவது ஒரு சாராருக்குரியதாய் இருந்தது. அந்த நீதியின் அளவுகோலாய் சட்டமும், சடங்கும் இருந்ததே தவிர மனித உறவுகளும், மனித நேயமும் மறக்கப்பட்டன. இத்தகைய சூழலில் இயேசு கிறிஸ்துவின் குரல் நீதியை நிலைநாட்டுவதாய், அநீதிகளுக்கான அடக்குமுறைகளுக்கு எதிர்க் குரலாய் அமைந்தது. அத்தகைய நீதி நிலைநாட்டப்பெறும்போது என்ன நிகழும் என்பதைக் காண்போம்.

### 1. சமத்துவம் மலரும்

ஜாண் ரால்ஸ் என்பவர் "ஒருவர் கொண்டிருக்கும் அடிப்படை உரிமைக்கிணையாக அடுத்தவரும் கொண்டிருக்க உறுதி செய்வது நீதியின் முதன்மைக் கொள்கை. சமூக மற்றும் பொருளாதார வாய்ப்புகள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கச் செய்வதே நீதி"

என்கிறார். ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஒருவர் இன்னொருவரை அடக்கி ஆள நினைப்பதிலும், அவரிடத்திலிருந்து வேறுபடுத்திக் கொள்வதிலுமிருந்து அநீதி உருவாகிறது. இயேசுவின் காலத்தில் இந்நிலையே வேரூன்றி இருந்தது. சமயத்தின் பெயரால், கடவுளின் பெயரால் சமூகத்தின் ஒரு சாரார் விளிம்பு நிலையில் வாழ்ந்த மக்களை ஒடுக்குவதிலும், அடக்கி ஆள்வதிலும், புறக்கணிப்பதிலும், வேறுபடுத்திக் காட்டுவதிலும் வேரூன்றி நின்றனர். இயேசு கிறிஸ்துவின் போதனை இப்படிப்பட்டவர்களைக் கடிந்து கொள்வதாய், சமூக நீதியை நிலைநாட்டுவதாய் இருந்தது. சமூகத்தில் நலிந்தோரையும், கைவிடப்பட்டோரையும் அரவணைப்பதாய் இருந்தது. திரு. மண்டல் சமூக நீதியைப் பின்வருமாறு வரையறுக்கிறார்: சமூகத்தில் நலிந்தோர், முதியோர், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஆகிய பிரிவினரைக் கடுமையான வாழ்வுக்கான போட்டியிலிருந்து ஓர் அரசு பாதுகாப்பது தான் சமூக நீதியாகும். ஒடுக்கப்பட்டவருக்கென சில வாய்ப்புகளைக் கொடுப்பதின் மூலம் தான் சமூகத்தின் முன்னேறிய பிரிவினருடன் அவர்களுக்குச் சமமான வாய்ப்பளிக்க முடியும். சமூக நீதி என்பது உரிமைகளின் தொகுப்பாகும். ஒரு வகையில் இது மற்றவர்களின் உரிமையைக் குறைப்பது போல தோன்றினாலும், வேறொரு வகையில் மற்றவர்களின் உரிமைகளுக்கான பாதுகாப்புமாகும். இருப்போரையும் சரி நிகராக செய்யும் ஒரு சமன் செய்யும் சக்கரமே சமூக நீதியாகும். நீதி நிலைநாட்டப் பெறும் போது சமூக நீதி தழைத்து சமத்துவம் மலரும்.

## 2. சகோதரத்துவம் மலரும்

தாமஸ் அக்குவினாஸ், ‘‘அடுத்தவரோடு நிலவும் சரியான உறவும், அவரவர்க்குரியதைக் கொடுப்பதற்கான இயல்பான மனநிலையும் நீதி’’ என்றார். மனித உறவுகளின் ஒன்றிப்பு நீதியால் உருவாகும். மனித நேயத்தை மையப்படுத்திய சட்டம் நீதிக்கான அடித்தளம். அதனால் உறவுகள் பலப்படும். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நிலைமையோ வேறுவிதமாக இருந்தது. கடவுளுக்குரிய கடமைகள் மனித உறவுகளுக்கடுத்த கடமைகள் எனப் பிரிக்கப்பட்டு, கடவுளுக்குக் கொடுக்க வேண்டியது காணிக்கை என்றும், அப்படிக் கொடுப்பதால் கடவுளை மகிழ்வுறச் செய்யலாம் என்ற நியதி உருவாக்கப்பட்டது. ஆனால், உரிமையிழந்த கைம்பெண்களும், ஆதரவற்ற குழந்தைகளும் அந்நியரும் பராமரிக்கப்படுவதற்காகவே

(இச 26:10-14) இது என்பதை மறந்து போயினர். இயேசுவின் காலத்தில் சமயத்தலைவர்களின் வாழ்வு இப்படி இருந்ததால் இயேசு கடுமையான எதிர்க் குரல் எழுப்பினார். நீதியும் கண்ணியமுமான வாழ்க்கையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நீதி செய்வது மகிழ்ச்சியைத் தரும் (நீமொ. 21:15). உறவுகளின் ஒன்றிப்பு உண்டாகி சகோரத்துவம் மலரும்.

பிளேட்டோ தாம் எழுதிய 'The Republic' என்ற நூலில் "பகுதிகளின் ஒத்தச் செயல்பாடே நீதி" என்கிறார். தனிநபரோ அல்லது சமூகமோ அவரவர் தங்களின் பங்களிப்பைச் சரியாகக் கொடுக்கும் போது அது நீதியாக பார்க்கப்படும். நீதியை நிலைநாட்டுவது தான் ஒவ்வொரு தனிநபர் மற்றும் சமூதாயத்தின் முழு முதல் கடமையும் பொறுப்பும் ஆகும். நாமும், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி அநீதிகளுக்கெதிராக நம் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்து, நீதியை நிலைநாட்டுவதின் வழியாக மலரும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் இவ்வுலகில் நிறுவுவோம்.

**மன்றாட்டுக்காக**

1. இந்தியாவில் மறைந்து வரும் சமத்துவ வாழ்வு அதாவது சமய சமத்துவமின்மை, வேலையில் சமத்துவமின்மை . . . ஆகியவைகளிலிருந்து மக்கள் விடுதலை பெற . . .
2. இந்தியாவில் மறைந்து வரும் கருத்து சுதந்திரத்திற்காக.
3. பருவ நிலை மாற்றத்தால் ஏற்பட்டுவரும் இயற்கை பேரழிவு குறித்த விழிப்புணர்வு வளர . . .
4. நமது பேராய கிறிஸ்தவ கல்வி வளர்ச்சித்துறை மற்றும் விடுமுறை விவிலிய அருட்பணித்துறையின் அருட் பணிகளுக்காக . . .

திரு. E. **ஐசக் பால்**

| 𝄞 | கீர். | 45 |
|---|---|---|
| | ஞா. | 233 |

**03.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

நாள் 3

# நீதியை நிறைவேற்றுங்கள், இரக்கம் கொள்வதை நாடுங்கள், மனத்தாழ்மையாய் நடந்துகொள்ளுங்கள்

## Do Justice, love mercy, walk humbly

மீக்கா 6 : 6-8 மாற்கு 10 : 17-31



ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைபிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடும் நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்? (மீக்கா 6 : 8)

இறைவாக்கினர் மீக்கா வாழ்ந்த காலத்தில் அதிகாரமும் செல்வமும் குறிப்பிடத்தக்க மக்களிடம் மாத்திரமே காணப்பட்டது. இது சமூக அநீதிக்கு வழி வகுத்தது. பேராசையும் ஊழலும் பெருகக் காரணமானது. போலி தீர்க்கர்கள் செழிப்பில் கொழுத்து வாழ்ந்தார்கள். ஆனாலும் நீதியின் ஆண்டவரின் பேரில் விசுவாசம் கொண்டோர் அவர் வாக்குறுதிகளிலும், ஆசியின் மேலும், அவருடைய பாதுகாப்பிலும் நம்பிக்கை கொண்டனர். எசாயா, ஒசேயா, ஆமோஸ் போன்ற இறைவாக்கினரைப் போல மீக்காவும் உண்மையான இறை விசுவாசத்தையும் சமூகத்தில் நீதி உடைய வாழ்வையும், நடைமுறை வாழ்க்கையில் தூய்மையையும் உருவாக்கும் எனப் போதித்து வந்தார்.

பாவியான மனிதனோ பலிகளை மாத்திரம் ஒழுங்காய்ச் செலுத்தி கடவுளின் உள்ளத்தை மகிழ்விக்க முயன்ற போது ஆண்டவர் மீக்காவின் மூலம், ஓ மானிடா! நல்லது எது என அவர் உனக்கு காண்பித்திருக்கிறாரே (மீக்கா 6 : 8) என அவருக்கு உணர்த்தினார். இன்றும் ஆண்டவர் விரும்புவது நன்மை செய்தலையே. எது அந்த நன்மை? கடவுளே அந்த நன்மை (திபா. 100 : 5, 136 : 1, மாற். 10 ; 18) அவரைப் பின்பற்றுபவர்களும் அவருடைய நன்மை செய்யும் குணங்களையே வெளிப்படுத்த விரும்புகிறார் (மீக்கா 6 : 8, எசாயா 1 : 17, ஒசேயா 6 : 6, மத். 23 : 23).

இஸ்ரயேலர் குற்றமிழைத்த போது அவர்களுக்கு அவர் நினைப்பூட்டியதோ அவர் செய்த நன்மைகளையாகும் (எசா 1 : 2, எரே. 2 : 6, இச. 32 : 7-14) ஆண்டவரின் நற்செயல்கள் தாம் இஸ்ரயேலரை

வாழவும் இயங்கவும் வைத்தன (விப. 20 : 2, இச. 5 : 6) ஆண்டவர் செய்த நன்மைகளை நினைவு கூர்தல் ஒருவரை முழுமையான சமர்ப்பணத்திற்கும், நற்கிரியைகளைச் செய்யவும் தூண்டுகிறது. நாம் சந்தித்திருக்கும் இப்புதிய ஆண்டிலும் நாம் நிறைவேற்றும்படி ஆண்டவர் தந்திருக்கும் செயல்திட்டங்கள் குறித்து சிந்திப்போம்.

## 1. நீதி செய்தல்

இறைவனின் நீதி என்பது அவருடைய பாரபட்சமற்ற வழிநடத்துதலைக் குறிக்கின்றது (மத். 20 : 1-16). அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. அவருடைய நீதி அனைவருக்கும் வாழ்வு தர வல்லது. அவருடைய நீதியே அவரின் தயாளகுணம். ஆண்டவரைப் பின்பற்றுவோர் அவரின் நீதியை வாழ்க்கையிலும் பின்பற்ற எதிர்பார்க்கப்படுகின்றனர் (ஆமோஸ் 5 : 14). அவர்கள் பலவீனர், நசுக்கப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர் ஆகியோரின் உரிமையை நிலைநாட்டுவதற்குக் கடமைப்பட்டவர்கள் (எரே. 5 : 28, 29, 22 : 3).

நியாயத்தை எடுத்துரைப்பவரை விலைகொடுத்து வாங்குவதும், மிரட்டுவதும், பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தி, இதிலும் இணங்கவில்லையெனில் அவர்களை ரகசியமாய் கொலை செய்வதுமான ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் நீதிப் பீடத்தின் மேல் நம்பிக்கையிழந்து சுயநீதியை நடப்பிக்கத் துணியாதபடி மனிதநேயத்தை வெளிப்படுத்தி பிறர் வாழும் உரிமையை நிலைநாட்டவே நாம் அழைக்கப்படுகிறோம் (யோவா. 8 : 1-11). தாழ்மையற்ற, தெய்வீகமற்ற மனிதர்களின் நீதி ஒருவருக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் தருமென்றால் ஆண்டவர் பெயரில் வாழும் மனிதரின் நீதி பிறர் வாழ்வில் எவ்வளவு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருமென்பதில் சந்தேகமேதுமில்லை (லூக். 18 : 1-8).

## 2. இரக்கம் கொள்வதை நாடுதல்

இரக்கத்தை நேசித்தல் என்பது ஆதரவற்றோருக்கு நேராக நம் கவனத்தைத் திருப்புதல் ஆகும். நீதி, இரக்கம் ஆகிய பண்புகள் பாதிக்கப்பட்டோரைத் தேற்றும் பண்புகள் ஆகும் (லூக். 10 : 33-35). நம் வாழ்க்கைப் பாதை நெடுகிலும் இப்படியாய்ப் பிறரின் அநியாயச் செயல்களால் பாதிக்கப்பட்டோரை நாம் காண இயலும் (மத். 26 : 11). நித்திய ஜீவனைப் பெற நான் என்ன செய்யவேண்டும் எனக் கேட்ட செல்வந்தனாகிய மனிதனைக் குறித்த செய்தியை (மாற்கு 10 : 17-31)

நாம் திருமறையில் படிக்கிறோம். அவன் ஒரு பணக்காரன் (Moneyed man), ஆனால் அவன் தனவான் அல்லன். தனவான் என்னும்போது வெறும் பணம் மாத்திரமல்ல, மாறாக, நல்ல உறவுகள், அன்பு, இரக்கம், கரிசனை ஆகிய செல்வங்களாகிய எண்ணற்ற மனிதநேயப் பண்புகளின் களஞ்சியம் தான் தனவான் என்னும் வார்த்தை குறிப்பிடுவது. மேற்குறிப்பிட்ட மனிதன் மனிதநேயப் பண்புகளற்ற வெறும் பணக்காரனாக இருந்தபடியால் இரக்கம் செய்ய மனமற்றவனாயிருந்தான். தரித்திரரை நினை அல்லது தரித்திரருக்கு இரக்கம் செய், அவர்களை நேசி என அவனுடைய குறைகளை சுட்டிக்காட்டி அறிவுரை கூறியவுடன் அதற்கு அவன் மனமற்ற நிலையில் அவரைவிட்டுப் போய்விட்டான்.

ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் தெருவின் இரு பக்கங்களிலும் வறுமையில் வாடுகின்றவர்களும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களும், உடல் ஊனமுற்றவர்களும் உடல் உறுப்புக்களை இழந்தவர்களுமான மனிதர்கள் அமர்ந்திருந்து பிச்சையெடுப்பதைப் பார்த்தான். உடனே அவனுக்குக் கடவுளின் மேல் கோபம் வந்தது. அவன் கோபமுடன் இறைவா! மக்கள் இவ்வளவு துன்பப்படுவதையும், அவதிப்படுவதையும் நீ பார்த்த பின்பும் ஏன் இப்படி அமைதியாயிருக்கின்றாய்? ஏதாவது உதவிகளை இவர்களுக்குச் செய்து இம்மக்களைக் காப்பாற்றக்கூடாதா? என்று கேட்டான். கடவுளோ அமைதியுடன் கூறினார்: நான் ஏன் அவர்களுக்கு உதவிகள் செய்யவில்லையென்றால், அதுதான் நான் உன்னைப் படைத்திருக்கிறேனே என்றாராம். அவன் சற்றே திகைத்து நின்றானாம்.

நாம் நல்ல உடல் சுகத்துடன் வாழ்வது பிறருக்கு இரக்கம் செய்யவே எனப் புரிந்துகொண்டோமானால் நாம் நித்திய ஜீவனைப் பெறும் நிலைக்கு உயர்த்தப்படுவோம்.

### 3. தாழ்மையுடன் நடத்தல்

தாழ்மையுடன் நட என்பது மனிதர் அவரவர் வழியில் நடவாமல் ஆண்டவரின் வழியில் நடப்பதாகும் (மத். 11 : 29). நம் ஆண்டவர் சாந்தமும் இரக்கமும் கொண்டவர். தாழ்மைகொண்டோர் மாத்திரமே அவருடன் நடந்தனர். மேட்டிமை கொண்டோர் (யூதர், அக்கால குருக்கள் . . .) அவர் வழியினின்று விலகியே நடந்தனர். தாழ்மை சிந்தையை இழந்த உசியா அரசர் அதிகார வெறியினால் ஆண்டவரின் ஆலயத்திலும் மேட்டிமை கொண்டார். தாழ்மையில்லாத பரிசேயன் பிறரை அவமதிப்பதற்கும் தயங்கவில்லை. மனத்தாழ்மையுடைய

ஆயக்காரன் அங்கீகரிக்கப்படவே செய்தான். நாகமான் சீரிய படைத்தளபதி தன் நோயின் மத்தியிலும் மனமேட்டிமை கொண்டிருந்தார். (2 அர. 5 : 11). அவர் மனத் தாழ்மை கொண்டபோதோ அற்புதம் கண்டார் (2 அர. 5 : 14) அவருடைய மனத்தாழ்மை அனேகர் வாழ்வில் முன்மாதிரியாயிற்று. நம்முடைய மேன்மைகள் ஆண்டவருக்கு முன்னும் மனிதருக்கு முன்னும் தாழ்மையுடன் நடக்க தடையாக உள்ளதா? எனில் நாகமானைப் போல உண்மை உணர்ந்து கீழிறங்கி வருவோம். நன்மைகள் நமக்குப் பிறக்கும்.

ஒரு புதிய ஆண்டில் பிரவேசித்திருக்கும் நாம் மானிடத்தை நீதி செய்பவர்களாகவும், இரக்கம் காட்டுபவர்களாகவும் ஆண்டவருக்கு முன் மனத்தாழ்மையுடன் நடப்பவர்களாகவும் திகழச்செய்யும் பொறுப்பு நமக்கு உண்டு என உணருவோம். அதற்கு நாம் முன்மாதிரியுடன் வாழ நம்மை நாமே அர்ப்பணிப்போம் (கலா. 6 : 9, 10).

## மன்றாட்டுக்காக

1. உரிமைகள் மறுக்கப்படுகிறவர்களுக்காகவும், நீதியைப் பெற தகுதியிருந்தும் நீதி மறுக்கப்படுவோரின் வாழ்வின் நன்மைகளை பெற . . .
2. கொரோனா காலத்தின் பாதிப்புகளால் பாடுபடுபவர்களின் புணர் வாழ்வுக்காக மற்றும் புலம் பெயர்ந்து வாழ்வோரின் முன்னேற்றத்திற்காக . . .
3. உக்ரைன் - ரஷ்யா ஆகிய நாடுகளிடையே நடைபெற்று வரும் போரில் கொல்லப்பட்டோரின் குடும்பங்களின் அமைதிக்காகவும் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட கலவரம் மற்றும் போரினால் சொந்த மண்ணைவிட்டு பிற நாடுகளல் அகதிகளாக வாழ்வோரின் மறுவாழ்வு . . .
4. நமது பேராய நலிவுற்றோர் நல்வாழ்வுத்துறையின் பிரதான பணிகளான நம்ம வீட்டுக்கல்யாணம், நோயாளிகள் உதவி, முதியோர் உதவி, . . . ஆகிய பணிகளுக்காக மற்றும் சமூக பொருளாதார கரிசனைத்துறையின் பணி ஆசீர்வாதமாக அமைய .

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

| 𝄞 | ஞா. 8 |
|---|---|
| | கீர். 319 |

**04.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

நாள் 4

# ஒடுக்கப்பட்டோரின் கண்ணீரை நோக்குங்கள்

## Look, the tears of the Oppressed

ச. உ. 4 : 1- 5 மத்தேயு 5 : 1 - 8



பிறகுநான் இவ்வுலகில் நடக்கும் கொடுமைகளையெல்லாம் பார்த்தேன். இதோ! மக்கள் ஒடுக்கப்பட்டு தண்ணீர் சிந்துகிறார்கள். அவர்களைத்தேற்றுவார் எவருமில்லை. அவர்களை ஒடுக்குவோர்கை ஓங்கி இருந்ததால், அவர்களைத் தேற்றுவார் எவருமில்லை (ச.உ. 4 : 1)

ஏதேனும் கஷ்டம் என்று
ஆற்றாமையில்
அரற்றினால்
யாருக்குதான் கஷ்டம் இல்லை
என்றுதேற்றுகிறார்கள்

இன்னொருவரின்
கஷ்டத்தைப் பார்க்க
எனக்கு ஆறுதலாக இல்லை
நம் கஷ்டம் சிறிதென
நிம்மதி அடைந்ததில்லை
என் கஷ்டத்தோடு
அதுவும் சேர்ந்து கொண்டுஅ முழ்த்துகிறது

ஆயிரம் கண்ணீர்த் துளிகளோடு
எனது ஒரு துளிக் கண்ணீரும்
சேரும்போது
இந்த உப்புக்கடலின் கரிப்பைத்
தாங்க முடியவில்லை.

- மனுஷ்யபுத்திரன்

உயிரினங்களின் உடலில் பெற்றிருக்கும் உறுப்புகளில் உன்னதமானவை கண்கள். கண்கள் பலவிதமான உடல் மொழிகளைப் பரிமாறுகின்றனர். உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

கடவுள் நமக்கு அருளியிருக்கும் அருள்கொடைகளில் ஒன்றுக ண்களில் பார்வைத்திறன் ஆகும். ஆனால் நாமோ பார்ப்பதற்கு மட்டுமல்ல, பார்க்காமல் இருப்பதற்கும் கண்களைக் கொண்டே அலட்சியம் செய்யும் உயிரினம் மனிதர்களைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது.

அன்றாட வாழ்வில் எவ்வளவோ துயரங்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பிறர் படும் வேதனைகள், வடிக்கும் கண்ணீர் சொல்லில் அடங்கா. சிலநேரங்களில் மற்றவர் கண்ணீருக்கு நாமே காரணமாகி விடுகிறோம். சிலவேளைகளில் கண்ணீர் சிந்தும் மனிதர்களைக் கண்டும் காணாமல் சென்றுவிடுகிறோம். ஆனால் இப்புதிய ஆண்டில் நாம் திருச்சபையாக பிறரது கண்ணீலைக் காணவும்,அதைத் துடைப்பதற்கு நம் கரத்தை நீட்டவும் ஆண்டவர் அழைக்கிறார். அதற்கு தம்மையே மாதிரியாகக் காட்டுகிறார். அது குறித்துத் தியானிப்போம்.

**1. கண்ணீரைக் காணும் கடவுள்**

பொதுவாக, மருத்துவ உலகம் கண்களிலிருந்து வெளியேறும் கண்ணீரை மூன்று வகையாகப் பிரிக்கின்றது.

**அ) அடிப்படைக் கண்ணீர்** (Basel tears)

இது இயல்பாகவே நம் கண்களில் உற்பத்தியாகும் கண்ணீராகும். இது அழுக்குகளைத் தடுப்பதற்கு,வெளியேற்றுவதற்கும் பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுகிறது.

**ஆ) எதிர்வினைக் கண்ணீர்** (Reflex tears)

இது கண்களில் தூசி விழுந்தால், எரிச்சல் ஏற்பட்டால் வருவதாகும்.

**இ) உணர்ச்சி சார்ந்த கண்ணீர்** (Emotional tears)

நேர்மறை உணர்வோ அல்லது எதிர்மறை உணர்வோ எதுவாயினும், மனிதர்களின் உணர்ச்சி வெளிப்பாடாக இவ்வகையான கண்ணீர் வருகிறது. துன்பக் கண்ணீர்,ஆனந்தக் கண்ணீர், முதலைக் கண்ணீர், நீலிக்கண்ணீர் என அனைத்து உணர்ச்சி சார்ந்த கண்ணீரும் இதில் அடங்கும்.

திருமறையில் ஆகாரின் கண்ணீர் உணர்ச்சி சார்ந்த கண்ணீராகும். தன் குழந்தைச் சாவதை சகிக்க முடியாமல் கண்ணீர் சிந்துகிறார். கடவுள் ஆகாரின் கண்ணீரைக் கண்டார்: குழந்தையின் அழுகுரலை கேட்டார். (தொநூ 21:14-19)

நம் சிந்தும் கண்ணீர்கூட ஒருவகையில் இறைவேண்டல் தான். துயரத்தின் மிகுதியில் கலங்கிய கண்களோடு பேச இயலாமல் விக்கித்து நிற்கின்றபோது நம் கண்ணீர்; இறைவேண்டலாகக் கடவுளிடம் சென்றடைகின்றது. (Tears are prayers too. They travel to God when we can't speak) கண்ணீர் - ஒரு திரவ நிலை மன்றாட்டு. (Tears is liquid form of prayer).

திபா 56:8 -ல், என் துன்பங்களின் எண்ணிக்கையை நீர் அறிவீர். உமது தோற்பையில் என் கண்ணீரைச் சேர்த்து வைத்துள்ளீர். இவையெல்லாம் உம் குறிப்பேட்டில் உள்ளனஅல்லவா? என்று பெலிஸ்தியரால் பெருந்துன்பம் அனுபவித்த தாவீது தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார். நாம் படைக்கும் காணிக்கைகளைக் கடவுள் கணக்கு வைத்திருக்கிறாரோ இல்லையோ, நாம் வடிக்கும் கண்ணீரைக் கணக்கில் வைத்துள்ளார். எனவே, வாழ்வின் அனைத்துத் தருணங்களிலும் நம்மைக் காண்கிற நம்மைக் கேட்கிற கடவுளிடம் கண்ணீரோடு மன்றாடுவோம். கடவுள் தம் காருண்யத்தால் நமக்கு ஆசி வழங்குவார்.

## 2. கண்ணீர் துடைக்க அழைக்கும் ஆண்டவர்

பழைய ஏற்பாட்டில் சபை உரையாளர் நூல், மானிடர் படும் அவலங்களை, துன்பங்களை, அநீதியால் அடையும் பாதிப்புகளை, இயலாமையை, நிலையாமையைப் பற்றிப் பேசுகின்றது.

இயேசுகிறிஸ்துவின் புரட்சி என்பது இதய சுத்தமானதும், நிர்க்கதியானோரின் கண்ணீர் துடைத்தலுமே என்கிறார் எழுத்தாளர் பால் சக்கரியா.

குறிப்பாக, 4-ஆம் அத்தியாயம் முதலாம் வசனத்தில், மக்கள் ஒடுக்கப்பட்டு கண்ணீர் சிந்துவதையும் அவர்களைத் தேற்றுவார் எவருமில்லை என்பதையும் நூலாசிரியர் விவரிக்கின்றார். ஒடுக்கப்படுவோரின் கண்ணீரைக் காணவும், துடைக்கவும் இறைமக்களுக்கு அழைப்பு தருகின்றார்.

மத் 5:4 -இல், துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர் என்றுமலைப் பொழிவில் இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். இங்கே, துயருறுவோர் என்கிற வார்த்தை, தங்கள்

சொந்தத் துன்பத்தாலும் பாவத்தாலும் புலம்பி அழுவோரை கிறிஸ்து குறிப்பிடவில்லை, மாறாக, வல்லாதிக்க அரசுகளின் அநீதியான மக்கள் விரோதச் செயல்பாடுகளினால் பாதிக்கப்பட்டோரையும், பாதிக்கப்பட்டோரைக் கண்டுமனம் பதறுவோரையும் குறிப்பிடுகிறார். ஆனால், கிறிஸ்து தரும் நம்பிக்கையின் நற்செய்தி துயருறுவோர் ஆறுதல் பெறுவர் என்பதாகும்.

பிறருடைய கண்ணீரில் பங்கெடுத்தலின் வாயிலாக அவர்களது கண்ணீரைத் துடைக்கமுடியும். அதைத் தான் லாசரை இழந்து கண்ணீரும், கம்பலையுமாக நின்ற மரியா, மார்த்தாவுக்கு இயேசுகிறிஸ்து செய்தார். (யோவா 11:35). தூயபவுலார், மகிழ்வாரோடு மகிழுங்கள்: அழுவாரோடு அழுங்கள் (உரோ 12:15) என பிறர் கண்ணீர் துடைக்க ஆலோசகை வழங்குகிறார்.

அமெரிக்காவில், ஜார்ஜ் ஃபிளாய்டுக்கு நடந்த கொடூரத்தைநாம் மறந்திருக்கமாடடோம். அந்த அநீதியைப் பலர் வேடிக்கை பார்த்தனர்: சிலர் காவல்துறை அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து ஒளித்துக் கொண்டனர். ஆனால் ஓர் இளம் பெண் மறைந்திருந்து அநீதியாலும் அராஜகத்தாலும் துன்புற்ற ஒரு மனிதனின் கதறலை கண்ணீரை காணொலியாகப் பதிவு செய்தார். இதனால் உலகமே அநீதிக்கு எதிராக வெகுண்டெழுந்தது. குற்றவாளிக் கைது செய்யப்பட்டனர்.

மனிதனின் அநீதி மற்றும் வன்துறையின் செயல்பாட்டால் கடவுளும் பாதிக்கப்படுகின்றார் (God is victimized by every human injustice and violence) என்கிறார் செட் மேயர்ஸ் (Ched Myers) எனவே துன்பத்தில் உழன்று தங்கள் கண்ணீரால் படுக்கையை மிதக்கச் செய்யும், இரவும் பகலும் கண்ணீரையே உணவாகவும் தாகம் தீர்க்கும் பானமாகவும் உட்கொள்ளும் மனிதரின் கண்ணீரில் பங்கேற்போம். அவர்களின் கண்ணீர் துடைக்க திருச்சபையின் கரங்கள் நீட்டப்படட்டும்.

## மன்றாட்டுக்காக

1. ஆதிவாசி மக்கள், தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியோரின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் சமூக இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சியினருக்காக.

2. ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் நடைபெற்றுவரும் பிறரன்புப் பணிகளுக்காக.

3. நமது பேராயத்தின் வளர்ச்சிதிட்டமான மருத்துவக் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி இறையியல் கல்லூரியின் துவக்கங்களுக்காக.

4. நமது பேராய இளையோர் கரிசனைத்துறை மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறையின் அருட்பணிகளுக்காக.

திரு. B. **சாம் ஜெபசிங்**

| 𝄞 | | |
|---|---|---|
| | கீர். | 8 |
| | ஞா. | 165 |

**05.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்
நாள் 5

# நாட்டில் அந்நியராக ஆண்டவரின் பாடலைப்பாடுதல்
## Singing Lord's Song as strangers in the Land

தியா. 137 :1 - 4 லூக். 23 : 27 - 31



"...அங்கு எங்களைச் சிறையாக்கினோர் எங்களைப் பாடும்படி கேட்டனர்; எங்களைக் கடத்திச் சென்றோர் எங்களை மகிழ்ச்சிப்பா இசைக்குமாறு கேட்டனர். சீயோனின் பாடல்களை எங்களுக்குப் பாடிக்காட்டுங்கள் என்றனர்." (திபா 137 : 3)

வேற்றுநாட்டில் அந்நியராக இருப்பது ஒரு பாதுகாப்பற்ற நிலையில் மக்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. மக்கள் போர், இயற்கைச் சீற்றங்கள் பொருளாதாரத் தேக்க நிலைகளின் காரணமாக இடம் பெயர்வது வழக்கம். ஆனால், இந்த 137ஆம் சங்கீதத்தில் அதன் ஆசிரியர் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனில் அடிமைகளாய் இருந்ததை நினைத்து எழுதுகிறார். இது வெகு காலம் பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருக்கும்போது எழுதப்பட்டது என்றும் அடிமைத்தனத்திலிருந்து வந்த பிற்பாடு எழுதப்பட்டது என்கிற இன்னொரு கருத்தும் இந்த 137ஆம் சங்கீதத்தைக் குறித்துச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் நடந்த ரஷ்யா - உக்ரைன் போர் அந்நியத் தேசத்தில் போய்ப் படிப்பது கூட எவ்வளவு பாதுகாப்பற்றது என்பதை நமக்கு உணர்த்தியது. இச்சூழலில் 137ஆம் சங்கீதம் கற்றுத் தரும் உண்மைகளை நாம் தியானிப்போம்.

### 1. அடைக்கலம் அருளும் ஆண்டவர்

இஸ்ரயேல் மக்களுடைய சமூக வாழ்வில் ஆறுகளின் கரைகள் நீங்கா இடம் பெற்றவை. இங்கே இந்தப் பகுதியில் அந்நிய நாட்டில் அதன் ஆறுகளின் அருகில் அமர்ந்து சீயோனை நினைத்து அழுகிறார்கள். பாபிலோனின் பெரிய ஆறுகளாகிய டைகிரீஸ், யூப்ரடீஸ் அல்லது அதன் கிளை ஆறுகளின் கரையில் அமர்ந்து இயற்கையோடு இணைந்து இறைவனை நோக்கிப் பார்க்கிறார்கள். கடந்து வந்த

காலங்களில் அவர்களை நடத்தி வந்த ஆச்சரியமான நடத்துதல்களை நினைத்து தங்களுக்குள்ளே தைரியம் கொள்கிறார்கள். இந்தப் புதிய ஆண்டின் தொடக்கத்தில் ஒருவேளை ஆபத்துகள், நோய்கள், கஷ்டங்கள் இவைகள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இதுவரை நடத்தி வந்த கடவுளை நினைப்போம். அது நாம் முன்னோக்கிச் செல்வதற்கான தைரியத்தை நமக்குத் தரும். ஏனெனில் சிறையிருப்பின் காலத்திலும் துன்பச் சூழலிலும் இஸ்ரயேல் மக்களுக்கு உடனிருந்ததைப் போல, கடவுளே, நம் அடைக்கலமாக இருக்கிறார். அவரிடம் நாம் தஞ்சம் புகுவோம்.

## 2. அச்சம் அகற்றும் ஆண்டவர்

எங்களைச் சிறை பிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும் எங்களைப் பாழாக்கினவர்கள் மங்களக் கீதத்தையும் விரும்பி சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்கும் பாடுங்கள் என்று சொன்னார்கள் (வ.4).

பொதுவாக மனிதர்கள் இருளில் நடந்து செல்லுகின்றபோது மனதிலே பாடல் பாடுவது இயல்பு. அப்படிப் பாடும்போது அவர்களுடைய பயம் அவர்களை விட்டு அகன்று தாங்கள் செல்ல வேண்டும் என்று நினைக்கிற இடங்களை அடைவார்கள். இங்கே இஸ்ரயேல் மக்கள் அந்நிய நாட்டில் பயந்து பாதுகாப்பற்று இருக்கும்போது கடவுள் இவர்களைச் சிறைப் பிடித்தவர்களை வைத்து இவர்களைப் பாடுவதற்காக ஏற்பாடு செய்கிறார். அப்படிப் பாடும்போது பயம் நீங்கி விடுதலை என்கிற இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும். இந்தப் புதிய ஆண்டில் கடவுள் நம் எல்லாப் பயத்தையும் மாற்றி நம் அனைவருக்கும் தம்முடைய பாதுகாப்பைத் தந்து தைரியமாய் இறைத் திட்டம் நிறைவேற்ற நாம் உழைக்க நமக்கு அருள்புரிவாராக.

### மன்றாட்டுக்காக

1. திருச்சபையின் தொழுகைகளை சிறப்பிக்கும் பாடகர் குழுவினரின் பணிகளுக்காக.
2. பிற சமயத்து மக்கள் மத்தியில் சான்றுடன் வாழும் கிறிஸ்தவ விசுவாசிகளுக்காக.

3. இயந்திர மயமாக்குதலால் இழந்து வரும் வேலை இழப்புகள் மீண்டும் சரிசெய்யப்பட, வேலை இழந்தோரின் மறுவாழ்வு சிறக்கவும், மற்றும் உலக மயமாக்குதலால் பாதிக்கப்பட்டு வரும் நமது தேச தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக.

4. நமது பேராய சிற்றாலயம் போதகர் பணித்துறை மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைத்துறை சார்ந்த அருட்பணிகளுக்காக.

திரு. M. **ஜெபு ஜெய்சிங்**

| 𝄞 | ஞா. | 279 |
|---|---|---|
| | கீர். | 28 |

**06.01.2023** கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

நாள் 6

# மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்தது எனக்கே செய்ததாகும்

**Just as you did it to one of the least of these . . . you did it to me.**

எசே. 34 : 15-20 மத். 25 : 31-40



அதற்கு அரசர், மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (மத். 25 : 40)

திருமறையில் சொல்லப்பட்டுள்ள மேய்ப்பன் அல்லது ஆயன் என்ற உருவகச் சொல் திருச்சபையின் ஆயர்களை மாத்திரமல்லாது மக்களை ஆளும் ஆட்சியாளரையும் இணைத்தே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் பிரதான மேய்ப்பராகிய கடவுளின் பிரதிநிதிகளாயிருந்து மக்களைக் காக்கவும் பரிபாலிக்கவும் கடமைப்பட்டவர்கள். முதலாம் திருமறைப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேய்ப்பவர்கள் என்ற ஆட்சியாளர்கள் மந்தையைக் காப்பதற்குப் பதிலாக தங்களைக் காப்பவர்களாகவும் செங்கோல் ஆட்சி செய்வதற்குப் பதிலாகக் கொடுங்கோல் ஆட்சி செய்பவர்களாகவும், நல்வழியில் நடத்துவதற்குப் பதிலாக தீயவழியிலும் நடத்தினார்கள். அதனால், மக்கள் வாழ்வின் அடித்தள நன்மைகளான மேய்ச்சலை இழந்தார்கள்.

ஆகவே, என் மக்களை மேய்க்கும் பொறுப்பை நானே ஏற்பேன் என்று கடவுள் தம் கரிசனையை வெளிப்படுத்துகிறார் (எசே. 34 : 15). இந்த என் கரிசனைக்கு உட்பட்டுப் பணி செய்பவர்கள் எவர்களோ அவர்களே எனக்கு உகந்த ஆயர்கள் என்று அர்த்தம் கொள்ளும் வகையில் மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் (மத். 25 : 40) என்று ஆயர் பணியின் மகத்துவத்தை ஆண்டவர் இயேசுவும் உணர்த்துகிறார்.

நாம் சந்தித்திருக்கும் இந்தப் புத்தாண்டிலும் ஆண்டவரின் உள்ளம் அறிந்து வாழவும், மேய்ப்புப்பணி செய்யவும், மேய்ச்சலைக்

கண்டடையும் அனுபவத்தில் இறைவனே நம்மை ஆளுகிறார் எனப்புரிந்து கொள்ளவும் திருமறை கூறும் இரண்டு சிந்தனைகளைத் தியானிப்போம்.

## 1. மேய்ப்பர்கள் ஆண்டவரின் இதயத்திற்கேற்ப செயல்பட விரும்புகிறார்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆண்டவர் முற்பிதாக்கள் தலைவர்கள், நீதி தலைவர்கள், இறைவாக்கினர், அரசர் என்பவரின் வழி தம் மக்களை மேய்த்தார். மேய்ப்புப் பணியின் மாதிரி இயேசுவே (யோவா 13 : 15). அதை நிறைவேற்றுவதின் சிறந்த முன்மாதிரியும் அவரே (யோவா 10 : 11).

மேய்ப்பர்கள் தங்கள் மேய்ப்புப்பணியைக் கடவுளின் மனம் அறிந்து மக்களுக்கு நிறைவேற்ற வேண்டுமென கடவுள் எதிர்பார்க்கிறார். தாவீதிற்குப் பின் இஸ்ரயேலரை ஆளும் பொறுப்பைப்பெற்ற சாலமோன் தம் ஜனத்தை நீதி வழியில் நடத்த ஞானம் கேட்டது ஆண்டவருக்கு மகிழ்ச்சி தந்தது (1 அர. 3 : 10). நல்ல மேய்ப்பர்களுக்குத் தீங்கு வரும் காலத்தில் உறுதியாக நிற்கத் துணைபுரிவது அவர்கள் நியாயமான செயல்கள் தான் (2 அர. 20 : 1-11). இதன் வழியாக ஆண்டவரின் வாக்குறுதியில் மக்கள் நம்பிக்கை வைக்க வாய்ப்பு கிட்டியது (எரே. 3 : 15).

எசேக்கியேல் தீர்க்கரின் காலத்தில் மேய்ப்பர்கள் யாவரும் சுயநலத்துடன் தங்கள் மேய்ப்புப் பணியை நிறைவேற்றினார்கள் (எசே. 34 : 4, 5). இதன் வழி அவர்கள் கடவுளின் இதயத்தின் உணர்வுகளுக்கு இசையாத மேய்ப்பர்களாக மாறினர் (எசே. 34 : 7-10) அவர்களை பகுத்தறிவற்ற மேய்ப்பர் எனக்கடிந்து கொள்கிறார் (எரே. 3 :2). அதேவேளையில் அவரின் விருப்பத்திற்கேற்ற மேய்ப்பர்களைப் பாராட்டத் தவறவும் இல்லை. (திப. 13 : 22).

மேய்ப்பர்கள் தம் பொறுப்பை மறக்கும்போது கடவுள் தாமே அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார் என்பது ஆடுகளாகிய இறைமக்களுக்கு ஆறுதல் தரும் செய்தியே. நான் என் ஆடுகளைத் தேடுவேன் (எசே. 34 : 11). நான் அவைகளை விடுவிப்பேன் (வ. 12) நான் அவைகளைப் புறப்படப் பண்ணுவேன் (வ. 13). நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன் (5. 14) காணாமற் போனதைத் தேடுவேன். துரத்துண்டதைத் திரும்பக் கொண்டு வருவேன். எலும்பு முறிந்ததைக் காயம்கட்டி நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன் (வ. 16).

ஆண்டவர் இயேசு தம் உயிர்ப்புக்குப்பின் தன்னுடைய பணியை செய்வது குறித்து பேதுருவிடம் கூறும்போது தம்மிடம் கொண்டிருக்கும் “அன்பின் ஆழத்தின் படி” அதை நிறைவேற்றிடக் கூறுகிறார் (யோவான் 21 : 15-19). ஏனெனில் உண்மை அன்பு அடுத்தவரின் இதயத்தை அறியும் என்பதாகும். பேதுருவுக்குப் பின் தம் பாரத்தை இறைமக்கள் செய்ய வேண்டும் (திருச்சபை) எனப் பொறுப்பு வழங்கினார் (சங். 41 : 1). தொடக்கக் காலத் திருச்சபையின் மேய்ப்புப் பணியில் குறை ஏற்பட்ட பொழுது திருத்தூதர்கள் தூய ஆவியாரின் துணை கொண்டு மாற்றுவழிகளைத் தேடி மேய்ப்புப்பணியைத் திறம்பட நிறைவேற்றினர் (திப. 6 : 1-6). ஆண்டவர் தம் ஆடுகளாகிய மக்கள் மேல் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பதை இதன்மூலம் அறிகிறோம் (மாற். 9 : 42). கார்டினல் சியூனன்ஸ் என்பவர் கூறும்போது “கவனிக்கத்தக்க செயல்களின் கூட்டுத் தொகையல்ல பரிசுத்தம்; மாறாக, நாம் செய்யும் எதையும் நல்ல இதயத்துடன் செய்வதில்தான் அடங்கியுள்ளது” என கூறுகிறார்.

**2. மனிதர் ஒவ்வொருவரும் தம் இதயத்திற்கேற்றபடி செயல்பட ஆண்டவர் எதிர்பார்க்கிறார்**

மனிதர் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் இசைவுடன் வாழ வேண்டும் என விரும்புகிறார் (யோவான் 15 : 12). கடவுள் அன்பானவர். அவருடய அன்பை இவ்வுலகில் வாழும் மனுக்குலம் அவருடைய நன்மைகளாக, நீதியின் செயல்களாக அனுபவித்து வாழ்கிறது. ஆண்டவர் நம்மேல் அன்புகூர்ந்து நமக்கு நன்மை செய்வதுபோல நாமும் ஒருவருக்கொருவர் அன்புகூர வேண்டும் என்ற புதிய கற்பனையை நமக்குத் தரும்போது நாம் பிறர்மேல் அன்புகூரக் கடமைப்பட்டவர்களாக மாறுகிறோம். ஏனெனில், மனப்பூர்வமான நன்மைகள் யாவும் மாயமற்ற அன்பின் அடித்தளத்தில் தான் நிறைவேற்றப்படுகின்றன.

மனிதர் நிறைவேற்றும் உபவாசங்கள் கடவுளின் மேலுள்ள அன்பினாலும், நம்பிக்கையினாலும் நிறைவேற்றப்படுகிறது. அது சடங்காக அல்லாது செயல்களாக மாறும்போது உருவாகும் ஜீவ ரட்சணை அவருக்கு உகந்த உபவாசமாக மாறுகிறது (எசா 58 : 7-14). எளியவருக்கு இரங்குதல் என்பது பக்தியின் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது (யோபு 22 : 6, 7, 9). ஆண்டவரின் பெயரில் கொண்டிருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் சீடத்துவ மனநிலையில்

அவைகளைத் தாழ்மையுடன் நிறைவேற்றும்போது மானிடர் நன்மைகளையே பெறுகின்றனர் (மத். 10 : 42).

உலகத்தின் இறுதியில் ஆண்டவர் தம் மக்களை நியாயம் தீர்க்கும்போது அவர்களின் செயல்களின்படி அவர்களை வலப்புறமாகவும், இடப்புறமாகவும் நிறுத்துவார். வலப்புறம் நிற்போர் நற்செயல்புரிந்தவர் என்றும் இடப்புறம் நிற்போர் நற்செயல்புரியாதோர் என்னும் நிலையில் நிறுத்தப்படுவதாகக் காண்கிறோம் (மத். 25 : 31-46). இவர்களில் எதிர்பார்க்கப்படும் தகுதி இவர்கள் ஒவ்வொருவரும் பிறர்பேரில் இரக்கம் காண்பித்தவர்களாக வாழ்ந்தார்களா? என்பது தான். இயேசு இங்கு "பிறரைக்" குறித்துக் குறிப்பிடும் வார்த்தை "சிறியவர்கள்" என்பதாகும். இங்கு சிறியவர்கள் என்போர் வாழ்வின் அடிப்படையான தேவைகள் சந்திக்கப்படாமலும், வாழ்வின் சுதந்திரம் இழந்து கட்டப்பட்ட நிலை கண்டவர்களும், முன்னேற்றத்திற்குப்பதில் தேங்கிய நிலை கண்டவர்களுமாவர். தாகம், பசி போன்றவை சிலர் வாழ்வில் தற்காலிகமும் சிலர் வாழ்வில் நிரந்தரமும் ஆகும். ஆனால் தேவை என்று வரும்போது ஏழையும் செல்வந்தரும் சிறியவர்களே. அவர்கள் அடையும் சிறுமை அவர்களை சிறியவர்களாகவும் மிகவும் சிறியவர்களாகவும் மாற்றுகிறது.

இயேசு கூறும் "மிகவும் சிறியவராகிய சகோதரர்" என்பவர்கள் வாழ்வில் சிறுமைப்படும் அனைவருமாவர். அவருடைய கரிசனை உலகின் அனைவருக்குமானது (மத்.25 : 40, மத். 18 : 6, 10, 14). அவருடைய கரிசனையான செயல்களில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார் (யோவா 15 : 12). மிகவும் சிறியவர்களான சகோதர சகோதரிகளின்மேல் சிந்தை கொண்டோரை அவர் பேறுபெற்றோராக (திபா. 41 : 1) மாற்றுகிறார். இப்படிப்பட்டோர் என்றென்றும் அவருடன் வாழவே விரும்புகிறார் (மத். 25 : 34).

ஹங்கேரி நாட்டிலே எலிசபெத்து என்னும் பெயருடைய ராணி ஒருவர் ஆட்சி செய்து வந்தார். தேவையிலுள்ளோர் எவருக்கும் பணத்தையும் பிற நன்மைகளையும் வாரி வழங்கும் கொடையுள்ளம் கொண்டவர். ஒவ்வொரு நாளும் இதயம் நிரம்பும் அன்பையும் கைநிறைய பணத்தையும் கொண்டு ஏழை எளியவர்களைச் சந்தித்து வந்தார். ஏழைகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்தபின் அவர் அவர்களுக்குச் சொல்லும் கனிவான அறிவுரை "நீங்களும் பிறருக்குக்கொடுங்கள்" என்பதாகும். அங்ஙனம் ஒருநாள் அவர்களிடம்

கூறும்போது, அவர்களில் சிலர், “எங்களிடம் பிறருக்குக் கொடுக்கத்தக்கதாக எதுவுமில்லையே” என்று சொன்னார்கள். அப்பொழுது ராணி அவர்களுக்குக் கூறியது: “உங்களுக்கு இதயமுண்டு, பிறருக்குப் போதுமானவரையில் அன்பை வழங்குங்கள்; உங்களுக்குக் கண்கள் உண்டு. அழுகிறவர்களின் கண்ணீரைக் காணுங்கள்; உங்களுக்குக் கால்கள் உண்டு; வேதனைப்படுவோரை நீங்கள் தேடிச்செல்லுங்கள். உங்களுக்கு நாவு உண்டு; துயரப்படும் மனிதருக்கு உங்கள் கனிவான வார்த்தைகளால் அவர்களை ஆறுதல்படுத்தவும் உற்சாகப்படுத்தவும் செய்யுங்கள்” என்பதாகும்.

ஆண்வடர் நமக்குக் கூறும் அறிவுரையும் அதுவே. அப்படி செய்வதனால் பிறர் வாழ்வு பெறுவதோடு நாமும் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அனாதியாய் என்றும் அவருடன் வாழ்வோம் (மத். 25 : 34).

## மன்றாட்டுக்காக

1. திருச்சபைகளில் மிகவும் சிறியோராய் எளியோராய் கைவிடப்பட்டோராய் மற்றும் குரலற்றோராய் வாழ்வோரோடு நின்று திருச்சபை நற்பணியாற்ற.
2. இந்தியாவில் அதிகரித்து வரும் ஏழ்மை மற்றும் வேலையில்லா திண்டாட்டம் குறை.
3. நிலமற்றோராய் புறம்போக்கு நிலங்களில் தற்காலிக வீடு அமைத்து வாழ்வோருக்காவும் இல்லம் இல்லாதோராய் சாலை ஓரங்களல் தங்கி வாழ்வோருக்காக.
4. நமது பேராய தொடர்புத்துறை, புத்தக சாலைகள், இவைகளின் இலக்கிய பணிகளுக்காகவும் மற்றும் ஆன்மிக எழுப்புதல் துறையின் பணிவிடைகளுக்காகவும்

.

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

| 𝄞 | | |
|---|---|---|
| | ஞா. | 165 |
| | கீர். | 8 |

**07.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

நாள் 7

# இப்போதிருப்பது இனி இருக்க வேண்டியதில்லை

## What is now does not have to be

யோபு 5: 11-16 லூக் 1: 46-55



**"**இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்**".** (லூக் 1:48)

தனது அங்கதமான உடல் மொழியாலும், தோற்றத்தாலும், நடிப்பாலும் உலகப் புகழ் பெற்றவர் நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின். உலகையே தன் நகைச்சுவையால் குலுங்கி குலுங்கி சிரிக்க வைத்தவர், தன் வாழ்வில் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருந்ததேயில்லை. தொடக்கம் முதலே அவர் அடையாத அவமானங்கள் இல்லை, தொடாத தோல்விகள் இல்லை, எதிர் கொள்ளாத துன்பங்கள் இல்லை. அமெரிக்கா நாடு இவரது நடிப்பை பாராட்டி உலகின் சிறந்த நகைச்சுவை நடிகர் என்ற விருதை இவருக்கு வழங்கியது. விருதை ஏற்றுக் கொண்டாலும், அமெரிக்காவில் தங்க விருப்பமின்றி, சுவிட்சர்லாந்து புறப்பட்டார். விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சூழ்ந்து நின்று, வாழ்நாள் முழுவதும் போராட்டமாக இருந்தாலும் எப்படி உங்களால் வெற்றி பெற முடிந்தது? அதன் இரகசியம் என்ன? என்று கேட்டனர்.சாப்ளின் புன்னகைத்தவாறு "இந்த நிலை மாறிவிடும் என்பதை நான் எப்போதும் மறந்ததில்லை. அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி, மாறிவிடும்! இதோ இந்தக் கணத்திலும் கூட" எனப் பதிலளித்தார்.

தோல்வியை கண்டு துவண்டு விடாதே, தொடர்ந்தொரு வெற்றி வரும். வெற்றியைக் கண்டு மயங்கி விடாதே தொடர்ந்தொரு தோல்வி வரும் என்பது கவிஞர் கண்ணதாசனின் வரிகளாகும்.

இந்த உலகில் எல்லாமும் மாறுதலுக்குட்பட்டது. துன்பத்தில் உழல்வோர் என்றும் அதில் உழன்று கொண்டிருப்பதில்லை.

அதிலிருந்து மீண்டு வருவதற்கான சாத்தியங்களைக் கடவுள் உருவாக்குகின்றவர் என்பது திருமறை காட்டும் நற்செய்தியாகும். திருமறையில் அடிமைத்தனத்தில் அகப்பட்டுக் கொண்டோர், சிறைப்பட்டோர், நோயுற்றோர், ஒடுக்கப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர் என அனைவருக்கும் சொல்லப்படும் ஒரு நற்செய்தி "இப்போதைய நிலை மாறிவிடும்", இனி நீ அழுது கொண்டிராய், "இன்று கண்ட பகைவரை இனி என்றும் காண்பதில்லை" போன்றவைகளையொத்த நற்செய்தியாகும்.

இப்போதிருப்பது இன்றைய துன்பம் இனி வேண்டாம் என விரும்புவோர் நற்செய்தியைத் தங்கள் வாழ்வில் ஏற்று அது நிறைவேற உழைக்கும்போது நற்செய்தியின் சத்தியங்கள் அவர்கள் வாழ்வில் சாத்தியமாகின்றன என்பதை மரியாவின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்வோம்.

### 1. மகிமையானவைகளைச் செய்யும் ஆண்டவர்

வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். (லூக் 1:49)

திருமறை, கடவுளை அரும்பெரும் செயல்கள் புரிபவராக, வல்லமை உடையவராக (Might one) காட்டுகின்றது. வல்லமையுடையவர் என்பது தம் மக்கள் சார்பில் நின்று மக்களுக்காகப் போர்புரியும் வீரராகக் கடவுளை சித்திரிக்கின்றது.

அனைத்து ஆற்றலும் வல்லமையும் பொருந்திய கடவுள் தம் மக்களை மீட்க எளியோர், ஏழையர், சிறியோர், பலவீனர் போன்றவை பயன்படுத்தினார். அதாவது மீட்புக்காக வாஞ்சிப்போரை மீட்டு, மீட்பின் பணிவிடையில் அவர்களைப் பயன்படுத்தினார்.

- எளியோரைக் கொண்டு வலியோரை வெற்றி கொள்கிறார். (லூக் 1:51- 53, 1கொரி 1:27) (1சாமு 17- தாவீது - கோலியாத்)

- மடமை என உலகம் கருதுபவற்றைக் கொண்டு ஞானிகளை வெட்கப்படுத்துகிறார் (1கொரி 1:27)

பெலவீனமான, எளிய, முக்கியத்துவம் தரப்படாத மரியாவைக் கொண்டு அரும்பெரும் செயலை, மகிமையான செயலைக் கடவுள் செய்துள்ளார். சிறிதானவைகளைக் கொண்டு பெரிதானவைகளைச் செய்கிறவர் கடவுள். முக்கியமற்றவை எனக் கருதப்படுபவைகளைக்

கொண்டு, கருதப்படுவோரைக் கொண்டு மகிமையானவைகளைச் செய்கிறவர் என்பதற்கு மரியா ஒரு முன் மாதிரி. கடவுளின்முன் நம்மை சிறியவராக்கிக் கொள்வதன் மூலம் பெரிதானவைகளைக் (மகிமையானவைகளை) காணமுடியும் (It is only by being little that we ever discover anything big) என்கிறார் பேராயர் ஃபுல்டன் ஷீன்.

வல்லமையுடைய கடவுள் மரியாவில் மகிமையானவைகளைச் செய்ய, மரியா, நான் ஆண்டவருக்கு அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் எனத் தம்மை ஒப்படைத்தார். (லூக் 1:38). கடவுளின் மகிமை அல்லது மாட்சி என்பது மனித வலிமையிலும், பராக்கிரமத்திலுமல்ல, மாறாக, அது தாழ்நிலையில் உள்ளோரை உயர்த்துவதிலும், பசித்தோரை நலன்களால் நிரப்புவதிலும், தடுமாறுவோர் வலிமை பெறுவதிலும் புழுதியினின்று ஏழைகளை உயர்த்துவதிலும் அடங்கியுள்ளது. (1 சாமு 2:4-8)

எனவே, இப்புதிய ஆண்டில் கடவுள் மகிமையானவைகளை நம்மில் நிறைவேற்ற நம்மைத் தாழ்த்துவோம்.

## 2. தாழ்நிலையைக் கண்ணோக்கும் ஆண்டவர்

ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர். (லூக் 1:48)

என்னை ஒரு பெண்ணாகப் படைத்திராத உலகை ஆளுகிற ஆண்டவராகிய கடவுளே, நீர் வாழ்த்தப் பெறுவீராக! (Blessed are you Lord, our God, ruler of the universe, who has not created me a woman) என்பது ஒரு யூதரின் இறைவேண்டல்.

ஒரு பெண்ணிடம் திருச்சட்டத்தை (Torah) ஒப்படைப்பதை விட அதை நெருப்பிலிடுவது மேலானது (Better to burn the words of Torah than to entrust them to a woman) என யூத ரபிமார் போதித்தனர்.

இச்சூழலில் கடவுளின் நோக்கங்களும், திட்டங்களும் சமூகத்தின் விளிம்பு நிலையில் இருந்த இரு பெண்களுக்கே (மரியா, எலிசபெத்து) முதலில் வெளிப்படுத்தப்பட்டது (God’s purposes and plans are first revealed between two women on the edge of the society – N.T.Wright). ஒடுக்கப்பட்ட சூழலில் இருந்த மரியாவின் தாழ்நிலையைக்

கடவுள் கண்ணோக்கினார். மீட்பரை உலகுக்குப் பெற்றுத் தரும் பேற்றைப் பெற்றார்.

நீமொழி-31:28,29 ஆகிய வசனங்களில் தன் பிள்ளைகளால் வாழ்த்தப்படும் (நற்பேறு பெற்றவள்) அன்னையைப் பற்றியும்; கணவரால் புகழப்படும் (சிறந்தவள்) மனையாளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சொந்தக் குடும்பத்தவரிடமிருந்து கிடைக்கும் பாராட்டு. ஆனால் மரியாவுக்குக் கிடைத்தது? அவரே சொல்கிறார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர் (லூக்1:48) அனைத்துத் தலைமுறையினராலும் வாழ்த்தப்பெறும் பேற்றைத் தாழ்நிலையிலிருந்த மரியாவுக்குக் கடவுள் வழங்கினார்.

மேலும் லூக் 1:48 - இல் உள்ள “இதுமுதல்” (apo tou nyn - from now on) என்கிற வார்த்தை கடவுளின் திட்டத்தின்படி எல்லாமும் மாறும் என்ற பொருளை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, லூக்கா நற்செய்தி நூலில் “இதுமுதல்” (from now on) என்கிற பதம் மிக அழுத்தம் பெற்றுள்ளது.

- “இதுமுதல்” நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய் (லூக் 5:10).

- “இதுமுதல்” ஒரு வீட்டிலுள்ள ஐவருள் இருவருக்கு எதிராக மூவரும், மூவருக்கு எதிராக இருவரும் பிரிந்திருப்பர் (லூக் 12:52).

- “இதுமுதல்” இறையாட்சி வரும்வரை திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பதில்லை (22:18).

- “இதுமுதல்” மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார் (22:69).

- “இதுமுதல்” என்னும் இந்தப்பதம் அடுத்த கட்டத்தை, அத்தியாயத்தை, புதிய தொடக்கத்தை, மாற்றுருவாக்கத்தை விளக்கி நிற்கிறது.

- “இதுமுதல்” மரியா தாழ்நிலையிலிருந்தார். “இதுமுதல்” எல்லாத் தலை முறையினரும் அவரைப் பேறுபெற்றவர் என்கின்றனர். (லூக் 1:48)

இப்போதிருக்கின்ற அடிமை நிலையை, இழிநிலையை, அவமானத்தை, தோல்வியை மாற்ற வல்லவர் ஆண்டவர். எனவே

இப்புதிய ஆண்டில் இப்போதிருந்தது இனி இருக்க வேண்டியதில்லை என உணர்ந்து கடவுள் நம்மை மாற்றுருவாக்கும்படியாய் அவரிடம் நம்மை ஒப்படைப்போம்.

## மன்றாட்டுக்காக

1. இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்திற்கும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கை சார்ந்த பணிகளுக்கும் எதிராக அதிகரித்து வரும் வன்முறை மற்றும் அடக்குமுறைகள் அகல.
2. தென்னிந்தியத் திருச்சபைக்கு எதிராக எழும்பி வரும் தீய சக்திகள் ஆற்றலிழக்க.
3. திருச்சபைகளுக்கிடையே காணப்படும் ஐக்கியமின்மை அகல.
4. நமது பேராய திருப்பணியாளர் நல்வாழ்வுத்துறை ஆற்றுப்பணித்துறை (Counselling), DMPB மற்றும் செனனா ஆகிய இயக்கங்களின் பணிகள் வளர.

திரு. B. **சாம் ஜெபசிங்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 228 |
| | கீர். | 46 |

**08.01.2023**

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்
நாள் 8

# நீதி கூட்டுறவை மீள்நிலைப்படுத்துகிறது

## The justice that restores Communion

திபா 82 : 1 - 4 — லூக். 18 : 1 - 8



“பின் ஆண்டவர் அவர்களிடம் நேர்மையற்ற நடுவரேச் சொன்னாரென்றால். . . ” (லூக். 18 : 7 )

நீதி, நியாயங்கள் புரட்டப்படுகின்ற உலகில் நாம் வாழ்கின்றோம். ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி, கற்றவருக்கு ஒரு நீதி கல்லாதோருக்கு ஒரு நீதி, செல்வந்தருக்கு ஒரு நீதி எளியோருக்கு ஒரு நீதி, என நீதியின் சமத்துவமற்ற நிலைப்பாட்டை வரிசைப்படுத்த முடியும்? தூமதமான நீதியும் அநீதியே (Delayed Justice is Danied Justice). அனைத்து துறைகளிலும், தலைமைத்துவப் பணிகளில் இருப்போரில் பலக் கடவுளுக்கு அஞ்சாமலும், கடவுளின் ஆலோசனையை நாடாமலும், சகமனிதர்கை ளமதியாமலும், தான் தோன்றிதனமாக அநீதி விளைவிப்பதினாலே இன்று உலகம் அமைதியையும், சமத்துவத்தையும் இழந்து நிற்கின்றது எனலாம். இவ்வருட ஆரம்ப நாட்களில் வைக்கப்பட்டிருக்கிற நாம், நீதியை செயல்படுத்தும் கருவிகளாய் செயல்பட கடவுள் நம்மை அழைக்கிறார்.

நீதி (Justice) நேர்மையான (righteous) நியாயம் என்று நிரூபித்தல் (Justify) போன்ற சொற்களெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடைவை. நீதி செய்வதும், நேர்மையாய் நடப்பதும், நியாயத்தை நிலைநாட்டுவதும், கூட்டுறவை மீள்நிலைப்படுத்துகிற நீதியை செல்வதும் இறைமக்களின் கடமையாயிருக்கிறது. தரப்பட்டுள்ள திருமறை பகுதிகளின் துணையோடு கூட்டுறவை மீள்நிலைப்படுத்துகிற நீதியை குறித்து சிந்தனைச் செய்லோம்.

**1) நேர்மையற்றநடுவர்:** (லூக் 8: 2)

"நீதி நிலைநாட்டுவது நேர்மையானவருக்கு மகழ்ச்சியளிக்கும்." (நீதி 21: 15) என்கிறார், நீதிமொழிகளில் ஆக்கியோன், இயேசுவால் அறிமுகப்படுத்தப்பட்ட நியாயதிபதியோ நேர்மையற்ற நடுவராக செயல்படுகிறர். ஏனெனில் அவர் கடவுளுக்கு பயப்படாதவர், சகமனிதர்களையும் மதிக்காதவர். நேர்மையுள்ள நடுவராக இருந்து, மக்களுக்கு நீதி வழக்கி அதன் வழியே மகிழ்ச்சியையும், மக்களுடைய நன்மதிப்பையும் பெற்றுக் கொள்ளவேண்டியர், பொறுப்பற்றவராக நடத்துக் கொள்கிறார். நீதியை வெளிப்படுத்த வேண்டிய தருணத்தில் பாராமுகமாய் நடந்துக் கொண்டார் என்பதாய் காண்கின்றோம். இந்த நியாயாதிபதியிடம் காணப்பட்ட குணநலன்கள் உலகில் மனிதராய் பிறந்த பலரிடம் இருப்பது சாத்தியமே. கடவுளுக்கு பயப்படாதவரும் சக மனிதரிடம் நன்மதிப்பை பெறாதவரும் ஏழைகளின் நியாயத்தை புரட்டுபவர்க்கும், நேர்மையற்றவராக சுட்டிக் காண்பிக்கபடுகிறார்கள்.

**2) நீதிக்காய் முறையிட்ட கைம்பெண்:** (லூக் 8:3)

இந்த கைம்பெண் பெயர் குறிப்பிடப்படாத எதிராளியால் துன்புறுத்தப்பட்டாள். நீதிக்காய் முறையிடுகின்றாள்; நியாயாதிபதியோ காலம் தாழ்த்துகிறார், செவிச் சாய்த்த பாடில்லை. நீதிச் செய்ய தருணம் இருந்தும் விருப்பமற்றவரால் நடந்து கொள்கிறார். "நீதிச் இல்லா இடத்தில் அமைதி இருக்காது" (where there is no iustic, Peace won't be there) என்கிறார் மார்ட்டின் லூத்தர் கிங். நீதி கிடைக்காததால் கைம்பெண் அமைதியிழந்து அலைந்து திரிகின்றார். அநுதினமும் நியாயாதிபதியிடம் முறையிட்டு கொண்டே இருந்தாள். இவ்வுலகில் அநீதியால் பாதிக்கப்பட்ட நியாயமாய் கிடைக்க வேண்டிய உரிமைகள் கூட கிடைக்க பெறாமல் துன்புறுகின்ற மக்களின் பிரதிநிதியாகத் தான் இங்கு இந்த கைம்பெண் பார்க்கப்படுகிறார்.

இன்று கூட நாம் வாழும் உலகில் செயல்படுகின்ற நீதி அமைப்புகள் கூட காலம் தாழ்த்துவதும், கையூட்டு வாங்கிக் கொண்டு அநீதி இழைப்பதும் பாரபட்சமான நீதியை வெளிப்படுத்துவதினாலும் அடித்தட்டு மக்கள் படுகின்ற வேதனைகளுக்கும், அவலங்களுக்கும், அளவேயில்லை. எத்தனையோ இடங்களில் நீதி, நியாயங்கள் மறுக்கப்படுகிறது. எனவே தான் திருப்பாடலாசிரியர் "எவ்வளவு காலம்

நீங்கள் நேர்மையற்ற தீர்ப்பு . . . விடுதலை அளியுங்கள்!" (திருப்பாடல் 82: 2 - 4) என வீர முழக்கமிடுகின்றார். "நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் . . . நிறைவு பெறுவர்"

(மத் 5: 6) என்னும் இறைவார்த்தையின்படி; இங்கு காணமுடிகிறது. நிறைவில் நியாயாதிபதியின் நீதியை, இரக்கத்தை பெற்றுக்கொள்கிறாள்.

**3) நீதிபரராகிய கடவுள்:** (லூக் 18: 7)

இந்த உவமையின் வழி கடவுள் தன்னை ஒரு நீதிபரராக வெளிப்படுத்தி சில உண்மைகளை மக்களுக்கு கற்றுக் கொடுக்கிறார். இங்கு கடவுளுக்கு பயப்படாத, மனிதரை மதியாத நேர்மையற்ற நடுவரை கைபெண்ணின் தொடர் முறையீடு அசைத்து பார்த்துவிட்டது என்கிறார்;. அதாவது தொடர் முயற்சியினாலும், முறையீட்டினாலும் நேர்மையற்ற நடுவர் தனது மனதை மாற்றிக் கொண்டு நீதி செய்தார் என்றால். கடவுள் நீதிபரர்; நேர்மையுள்ள நடுவர்;; அவர் ஒருபோதும் தமது பிள்ளைகளுக்கு நியாயம் செய்யாமல் இருக்கவேமாட்டார். ஏனெனில் அவர் நெறிந்த நாணலை முறியாதவர். மங்கி எரிகிற தீயை அணையாதவர்.

இன்று மனிதருள் கூட்டுறவு நிலைத்து இருக்கவேண்டும் என்றால், நீதி அடித்தளமாக இருக்கவேண்டும். உலகில் இழந்து போன உறவுகளை சரிச் செய்வதற்கு, அநீதியின் வழி பிரிந்துபோன கூட்டுறவை மீண்டும். நீதியற்ற செயல்களினாலும், நேர்மையற்ற பண்டிகைளினாலும் இறை உறைவை இழைந்து நின்ற இஸ்ரயேல் வீட்டாரை பார்த்து ஆமோஸ் இறைவாக்கினர் "நீதிவெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மைவற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!" ( ஆமோஸ் 5: 24) என்கிறார். ஏனெனில் கடவுள் நீதிக்கு காரணர், நீதிபரர், நீதியாய் நடத்துபவர் (யோபு 37: 23, திபா 11: 7, 89: 14)

எனவே தான் இயேசு தனது போதனையில் "தீயோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நற்கெட்டைகள் அளிக்க . . . நன்மைகள் அளிப்பார் அல்லவா! (மத் 7: 11) என்கிறார். ஏனெனில் இவ்வுலகில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் விளைவால் சிதறக்கப்பட்ட நிலையிலும், நல்லுறவை இழந்த நிலையிலும் சமாதானத்தையும், மகிழ்ச்சிண்யும், நம்பிக்கையும் இழந்து நிற்கின்ற

இறை மக்களனைவரும் நீதியின் சூரியனாம் கடவுளிடம் முறையிட்டு அவர் தருகின்ற நீதியை பெற்று ஐக்கியத்தோடு வாழஅர்ப்பணிப்போம்! ஆமென்.

## மன்றாட்டுக்காக

1. நீதிமன்றங்கள் இழந்துவரும் நம்பகத்தன்மை துளிர்க்கவும் அவைகள் நீதியுடன் செயல்படவும் . . .
2. இந்தியாவில் வாழும் தாழ்த்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மை சமயங்களின் பாதுகாப்பிற்காக . . .
3. பெண் குழந்தைகள், மற்றும் பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள், பாலியல் துன்புறுத்தல் போன்ற அநீதிகள் விலக . ..
4. நமது பேராய ஆண்கள் ஐக்கிய சங்கம், மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கம் அசிய துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் அருட்பணிகளுக்காக . . .

அருள்திரு. P. **சாம் பிளசிங்**

| 𝄞 | |
|---|---|
| | கீர். 17 |
| | ஞா. 208 |

**06-01-2023** திருத்தோற்றத் திருநாள்

# கிறிஸ்துவின் திருவெளிப்பாடு

## Manifestation of Christ

எசா. 45 : 18-25 திவெ. 21 : 22-27

திபா. 67 மத். 2 : 1-12



"யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள்." (மத் 2 : 2)

கடவுள் ஒவ்வொரு நாளும் தம்மை நமக்கு ஏதாவது ஒருவகையில் வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார். ஆனால் அதை உணர்ந்து கொள்வதற்கு நம் அகக் கண்கள் திறந்த நிலையில் இருக்க வேண்டியது தேவையாக இருக்கிறது.

உலகப் பார்வையில் நாம் சிலரை ஒரு கோணத்தில் பார்ப்போம். ஆனால் அவர்களின் உண்மையான வெளிப்பாடு என்பது வேறு விதத்தில் இருக்கும். இன்று ஜனவரி 6-ம் தேதி வேட்டி நாளாக தமிழகத்தில் கொண்டாடுகின்றனர். 2015-ம் ஆண்டு முதல் இது கொண்டாடப்பட்டு வருகிறது. இதனுடைய வரலாற்றைப் பார்ப்போமெனில், தங்களைத் தமிழகத்தின் காவலராகச் சொல்லிக் கொண்டு பணத்தை வாரிக் குவித்த சில நிறுவனங்கள் தங்கள் விழாக்களில் வேட்டி அணிந்து வந்த நபர்களை உள்ளே வரவிடாமல் தடுத்து வெளியேற்றின. அப்பொழுது தான் அந்த நிறுவனங்களின் உண்மையான முகம் தமிழ்நாட்டின் மக்களுக்கும் தெரியவந்தது. இது அச்சமயத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது மட்டுமல்ல, சில நிறுவனங்களின் குணத்தை மக்களுக்கு வெளிக்காட்டியது.

திருமறையில் கிறிஸ்துவின் திருவெளிப்பாட்டை நாம் பார்க்கிறோம். அது முழுமையான மனுக்குல மீட்பிற்கானது. நமக்கு தரப்பட்டிருக்கிற திருமறைப் பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு, திருமறையின் வெளிச்சத்தில் கிறிஸ்துவின் திருவெளிப்பாடு எப்படி அமைகிறது. அவர் எப்படி தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார் என்பதைச் சிந்திப்போம்.

### 1. நீதியுள்ளவராய் வெளிப்படுத்துகிறார்

கடவுள் எப்பொழுதும் நீதியுள்ளவராய்த் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பொழுதும் நீதியைச் செயல்படுத்துகிறவராய்ச் செயல்படுகிறார். நீதியுள்ள சமுதாயத்தை ஏற்படுத்துவதே அவர் விருப்பம். கடவுள் நடுநிலை தவறாத நீதிபதி நாள்தோறும் அநீதியைப் பொறுத்துக் கொள்ளாத இறைவன் என திருப்பாடல்கள் 7 : 11 தெளிவுப்படுத்துகிறது. "நான் வெல்வதை விட என் அக வெளிச்சத்தின்படியே வாழ விரும்புகிறேன். நியாயத்துக்காக யாரேனும் நின்றால் அவருடன் நான் தீர்க்கமாக உடனிருப்பேன்" என்றார் ஆபிரகாம் லிங்கன்.

ஏசாயா 45 ; 21-ல் நீதியுள்ளவரும், மீட்பு அளிப்பவருமான இறைவன் என்னையன்றி வேறு தேவன் எவரும் இல்லை எனத் தெளிவாக குறிப்பிடுகிறார். இது இறைநீதியின் உறுதிப்பாட்டை அழுத்தமாக பதிவு செய்கிறது. நீதியுள்ள கடவுளிடம் திரும்புங்கள் என்பதே ஏசாயா இறைவாக்கினரின் முழக்கமாக உள்ளது. இந்த உலகில் பல்லாயிரக்கணக்கான தேவர்களை, கடவுள்களை மனுக்குலம் பின்பற்றினாலும் நீதியை வெளிப்படுத்துகிற கர்த்தர், நீதிக்காக பாடுபடுகிற கடவுள் நம் இறைவனே . . . தாவீது அரசரால் உரியா கொல்லப்பட்ட போதும், ஆகாப் அரசரால் நாபோத் கொல்லப்பட்டபோதும் தம் கோபத்தையும், இறைநீதியையும் இறைவாக்கினர் வழியே உடனடியாக வெளிப்படுத்தினார் நம் இறைவன். இன்றும் நம்மைச் சுற்றி அநீதிகள் அரங்கேறும்போது இறைநீதி நம்மில் வெளிப்பட வேண்டும். அதற்காகவே நாம் ஒவ்வொருவரும் கடவுளின் பிள்ளைகளாய் வாழும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### 2. மெய்யான ஒளியாய் வெளிப்படுத்துகிறார்

நம் வாழ்வின் விளக்காய் ஒளிர்பவர் நம் இறைவனே. தொடக்கத்தில் முதன் முதலில் ஒளியை உருவாக்கி அதனை நல்லது என்று கண்ட இறைவன், தமது மக்களை மீட்டெடுக்க எரியும் நெருப்பின் ஒளியாக மோசேக்குக் காட்சி கொடுத்தார் (விடுதலைப் பயணம் 3 : 2). பின்னர் பகலில் மேகத் தூணாகவும், இரவில் நெருப்புத் தூணாகவும் இருந்து ஒளியின் வழியாக வழிநடத்திச் சென்றார் என நாம் அறிந்திருக்கிறோம். இறைமகன் இயேசுவின் ஒளியானது தமஸ்கு நகரில் சவுலைப் பிற இனத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்கும் ஊழியனாக்கியது.

யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாட்டில் இறைவன் ஒளியாய் விளங்குவதை வெளிப்படுத்துவதைத் தெளிவாகக் காணலாம். புதிய விண்ணகம், புதிய மண்ணகம் பற்றிய யோவானின் திருக்காட்சி மிகவும் உன்னதமானது. அதில் குறிப்பிடப்பட்டிருக்கிற புதிய எருசலேம் என்னும் திருநகர் ஆட்டுக்குட்டியானவரையே தம் விளக்காக கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் (திருவெளிப்பாடு 21 : 23) அதனால் அங்கு இரவே இல்லை. எப்பொழுதும் இறைஒளி நிறைந்திருக்கும். பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட கைப்பிரதி ஒன்றின் தலைப்பு விஜயனின் இதயம். அதில் ஒரு இதய படமானது வரையப்பட்டிருந்தது அதனுள் பல்லி, பூரான், பாம்பு போன்றவைகளின் படங்கள் இடம் பெற்றிருந்தன. அதாவது இந்த உயிரினங்களின் தன்மைகள் இதயத்தில் இருப்பதாக சித்தரிக்கப்பட்டிருந்தது. ஆனால் கிறிஸ்துவாகிய ஒளி அதில் வீசும்போது இருளின் தன்மைகள் வெளியேறுவது போல சித்தரிக்கப்பட்டிருந்தது. நானே உலகின் ஒளி (யோவான் 9 : 5) என்று தன்னை ஒளியாக வெளிப்படுத்திய கிறிஸ்தேசுவின் ஒளி நம்மில் வெளிப்பட்டால் இருளாகிய தீமை நம்மைவிட்டு அகலும்.

### 3. அரசராய் தன்னை வெளிப்படுத்துகிறார்

இயேசு கிறிஸ்து குழந்தையாய் இவ்வுலகில் வந்துதித்த போது கிழக்கிலிருந்து வந்த ஞானியர் எருசலேமில் யூதரின் அரசரைத் தேடினார்கள் (மத்தேயு 2 : 1, 2) விண்மீனை அடையாளமாகக் கொண்டு அரசரைத் தேடி வந்தவர்களால், மாபெரும் கலக்கம் எருசலேமில் உண்டாயிற்று. தன் பதவியைத் தக்கவைக்க சொந்த பிள்ளைகளையே கொல்லத் துணிந்தவர் ஏரோது. எனவே இந்தப் புதிய அரசரைப் பற்றிய சிக்கல் ஏரோதைக் கலங்கடித்து விட்டது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் அரசு இவ்வுலகிற்குரியது அல்ல என்பதை இவர்கள் யாருமே அறியவில்லை; உணரவில்லை.

இவ்வுலகின் அரசராய் அவர் தன்னை வெளிப்படுத்த நினைத்திருந்தால் அவரை அரசராய் நியமிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் நினைத்தபோதே அதை நிறைவேற்றி இருக்கமுடியும். ஆனால், இயேசு கிறிஸ்து அதனை விரும்பாமல் அதனை விட்டுவிலகி தனியே சென்றார் (யோவான் 6 : 15). மாறாக இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டிய அரசு என்பது இவ்வுலகைப் போன்றது அல்ல என்பதைப் பிலாத்தின் முன்பாக தெளிவுப்படுத்துகிறார். நீ யூதரின் அரசனா? என்ற பிலாத்தின் கேள்விக்குத் தாம் எப்படிப்பட்ட அரசராக வெளிப்படுத்த விரும்புகிறார் என்று தெளிவுப்படுத்துகிறார் இயேசு கிறிஸ்து (யோவான் 18 : 33-38)

இவ்வுலகின் அரசு என்பது நிரந்தரம் அல்ல. எவ்வளவு பெரிய அரசுகளும், அரசாங்கங்களும் காலப்போக்கில் கவிழ்வதும், மண்மேடாக மாறுவதுமே வரலாற்றின் பாடங்களாக உள்ளன. நெப்போலியன் மாமன்னராக வலம் வந்தபோது, யாரையும் மதிக்கவில்லை. தன்னுடைய அரசு காலம்காலமாய் நீடிக்கும் என்றே எண்ணினார். ஆனால் வாட்டர்லு போரின் தோல்வி அவரை செயின்ட் ஹெலினா எனும் தீவுச்சிறைக்குக் கொண்டு சென்றது. அங்கு அவர் சொன்னது. . . அலெக்சாண்டரும் நானும் ஆயுத பலத்தால் ஆட்சி செய்தோம். எங்கள் ஆட்சி நிலைநிற்கவில்லை. ஆனால், இயேசு கிறிஸ்து அன்பினால் ஆட்சி செய்கிறார். அவர் அரசு என்றும் நிற்கும் என்றார்.

அன்பர்களே, நீதியுள்ள இறைவராக, மெய்யான ஒளியைத்; தரும் விளக்காக, மாபெரும் அரசராய் வெளிப்பட்ட நம் கடவுளை நம் வாழ்வின் வழியே வெளிப்படுத்துவதே நம் கடமை, நம் பெருமை. நம்மில் இறைப்பண்பு வெளிப்படும்போது இந்த முழு உலகும் மாற்றம் பெற்று ஏற்றம் பெறும்.

அருள்திரு. M. **கிதியோன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 16 | ஞா. | 78 |
| | கீர். | 131 | கீர். | 121 |

**08-01-2023**

கிறிஸ்துப் பிறப்புக்கு பின் வரும்
இரண்டாம் ஞாயிறு

# அனைவருக்கும் இறைவெளிப்பாடு

## (God's Revelation to All)

| | |
|---|---|
| எசா. 60 : 1-7 | எபி. 1 : 1-12 |
| திபா. 98 | மத். 8 : 5-13 |



"பலமுறை பல வகைகளில் முற்காலத்தில் . . . இவர் வழியாக உலகங்களைப் படைத்தார்" (எபி. 1 : 1, 2).

கடவுள் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்தினாலேயன்றி மனிதர் அவரை அறிந்துகொள்ளவியலாது ஒளியில் வாழ்கிறவர்; மனிதர் ஒருவரும் சேரமுடியாத ஒளியில் வாழ்கிறவர்; மனிதர் ஒருவரும் காணாதவர் காணக்கூடாதவர் (I திமொ. 6:16), அவர் உயர்ந்தவர் உன்னதர் நிலைவாழ்வினர் (ஏசாயா 33:5, 57:15). மனிதருக்குத் தொலைவானவராதலால் மனிதர் தம் சுய அறிவினாலும், சிந்தனையினாலும் அவரை அறிந்துகொள்ள முடியாது. மனிதரால் அறியக்கூடாத கடவுள் தாமாகத் தம்மவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் முற்பிதாக்களுக்கு வெளிப்படுத்தினார். நீதி தலைவர்கள், இறைவாக்கினர், தம்மில் பற்றுறுதி கொள்ளுவோர் எவராயினும் அனைவருக்கும் தன்னைப் பல நிலைகளில் வெளிப்படுத்தினார் என்பது திருமறை நமக்குத் தரும் தெளிவு. இத்தெளிவினைத் தொடர்ந்து சிந்திப்பது நமது ஆன்மிகப் பற்றுறுதி பயணத்திற்குத் துணை செய்கிறது.

### I **இருள் சூழ்ந்த நிலையில் இறைவெளிப்பாடு :** (ஏசாயா 60:1-7)

இருள், இருள் என புலம்பிக் கொண்டிருந்த மக்கள் மீது ஒளி வீசுகின்றது. இறைவாக்கினர் வழி இறைவெளிப்பாடு கிடைக்கிறது. சிறையிருப்பினின்று நாடு திரும்பிய மக்களின் மறுகட்டுமான பணிகளில் ஏற்படும் தோய்வு நிலை, அனைவரும் நாடு திரும்ப வேண்டும் என்ற ஆதங்கநிலை இவைகளில் தடுமாறிய இஸ்ரவேலருக்கு இருள்சூழ்ந்த

காலமாகவே தோன்றியது. இறைவாக்கினர் கடவுளின் வெளிப்பாடாக ஆறுதலான, ஆசியுரைகளை வழங்கினார் (ஏசாயா 60:1-22).

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல்வேறு நிலைகளில் இருள் சூழ்ந்த துன்ப நேரங்களிலும், நெருக்கடியான வேளைகளிலும் கடவுளின் வெளிப்பாடு தம் பணியாளர்கள், வழியாகவும் நேரடியாகவும் நிகழ்ந்துள்ளது. (தொ.நூ. 16 : 11, 22:11-14, வி.ப. 3:7, 14:1-5, நீதி. 6:1-10, த.ப. 9, 10) கடவுள் தம் பிள்ளைகளை ஒருபோதும் கைவிடுகிறவரல்ல. அவரது வெளிப்பாடு அவரிலே நம்பிக்கை கொள்ளும் அனைவருக்கும் உண்டு. கடவுள் தம்மை வெளிபடுத்துவதை அருஞ்செயல்கள் வழியாகவும் காட்டுகிறார். அதற்கு அடையாளமாக நெருக்கப்படும் நேரத்தில் துணை செய்கிறார் (தானி. 2:24-49, 3:16-30). இருள் போன்ற துன்பச்சூழலில் வாழும் எவராயினும் அவரிலே நிபந்தனையற்ற பற்றுறுதி கொள்ளும்போது தம்மை வெளிப்படுத்துவார்.

II **இயேசுகிறிஸ்துவில் இறைவெளிப்பாடு :** (எபி. 1:1-12)

மனிதர்களால் காணக்கூடாத கடவுள் தம் அடியார் வழியாகவும், இயற்கை வழியாகவும் தம்மை வெளிப்படுத்தினார். தொடர்ந்து திருமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாகத் தம்மை முழுமையாக வெளிப்படுத்தினார். பற்றுறுதியில் தடுமாறுவோர், துன்பச் சூழலில் வாழுவோருக்கு இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு புதுவாழ்வைக் கொடுத்தது.

எபிரேயர் திருமுகம் யூத பின்னணியம் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. இத்திருச்சபை யூத கிறிஸ்தவத் திருச்சபை அவர்களது கிறிஸ்தவ அர்ப்பணிப்பில் அசைவுகண்டு பற்றுறுதியில் குழப்பமடைந்தனர். அச்சூழலில் பற்றுறுதியில், இயேசு கிறிஸ்துவில் கட்டப்படவும், பெலப்படவும், அவரில் நிலைத்திருக்கவும் வேண்டியது அவசியமாயிற்று. நமது பற்றுறுதி வாழ்வில் வளரவும் நிலைத்திருக்கச் செய்கிறவரும் அவரே. அவர்கள் யூத கிறிஸ்தவர்களாயிருந்தபடியால் அவர்களுக்குள் யூத பின்னணிய தாக்கமிருந்தது. தங்கள் முன்னோரிடம் கற்றவைகள், இறையியல் சார்ந்த கொள்கைகள் அவர்களில் இருந்தன. தூதர்கள் வழிபாடு போன்றவற்றை அறிந்திருந்தனர். சிலர் அதில் நம்பிக்கை கொண்டனர். சிலர் வழிபட்டனர். திருத்தூதர் அவர்களுக்குச் சொன்னவைகளை விட மோசேயின் நியாயப்பிரமாணம் சிலருக்குப் பெரிதாகத் தோன்றினது. இவ்வாறு பற்றுறுதியில் தடுமாறிய குழப்பமடைந்த இம்மக்களுக்கு எபிரேய கடித ஆக்கியோன் கூறுகையில்

இறைதூதர், மோசே, ஆரோன், பிரதான ஆசாரியர் யாவரும் மத்தியஸ்தர்கள் தான். இயேசு கிறிஸ்து கடவுளின் முழுமையான வெளிப்பாடாக இருப்பதால் நாம் இயேசுகிறிஸ்துவில் கட்டப்படுவது மிக அவசியமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், பணியும், போதனைகளும் கடவுளின் வெளிப்பாடுகள் ஆகும். எனவே இன்றைய திருச்சபை கிறிஸ்துவின் போதனைகளில் உறுதிப்படுவதும் செயல்படுத்துவதும் மிக முக்கியமாகும், அதுவே கிறிஸ்து வழியாக கடவுளின் வெளிப்பாட்டை நாம் பெற்றிருக்கிறோம் என்பதற்கு அடையாளம். (யோவான் 14:7-11, 15:1-11).

III **இறைப்பற்றாளர் அனைவருக்கும் இறைவெளிப்பாடு :** (மத். 8:5-13)

கடவுளிலே பற்றுறுதி கொள்ளும் எவராயினும் அனைவருக்கும் இறைவெளிப்பாடு உண்டு. மத். 8:5-13 வரையுள்ள பகுதியில் நாம் காணும் நூற்றுவர் தலைவன் யூதரல்லாதவர். இங்கே இயேசு கிறிஸ்துவின் ஆற்றல் வெளிப்படுகிறது. உமது நம்பிக்கையின்படியே உமக்கு ஆகக்கடவது என்றார். உடனே நூற்றுவர் தலைவனின் வேலைக்காரன் சுகம்பெற்றான். தன் வேலைக்காரன் சுகம் பெற்றதும், இயேசுநாதர் தனது தேவையில் உதவி செய்ய முன்வந்த தீவிரத்தையும் கண்ட நூற்றுவர் தலைவன் இன்னும் அதிக பற்றுறுதி கொண்டான். இயேசுகிறிஸ்து தம் ஆற்றலை வெளிபடுத்த, வல்ல செயல்களைச் செய்ய பற்றுறுதியை மட்டுமே முக்கியப்படுத்தினார். அவரை ஏற்றுக்கொண்டு அவரண்டை வருவோர் எவராயினும் அனைவருக்கும் தம் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

தி.ப. 10-ம் அதிகாரத்தில் கொர்னேலியு என்பவர் இத்தாலியா படைபிரிவில் நூற்றுவர் தலைவனாயிருந்தார். அவருக்குத் தூயாவியாரின் வெளிப்பாடு கிடைத்தது. (தி.ப. 10:1-6). பேதுருவுக்கும் வெளிப்பாடு கிடைத்தது. நிபந்தனையற்ற நிலையில் மன்றாடி, அவர் செய்த இரக்க செயல்களும் கடவுளது சந்நிதியில் எட்டியது. இந்த வெளிப்பாட்டின் நிறைவில் கொர்னேலியு கடவுளால் போற்றப்பட்டதையும், பேதுரு கற்பிக்கப்பட்டதும் நம்மையும் சிந்திக்கத் தூண்டுகிறது. கிறிஸ்துவிலே பற்றுறுதி கொண்டோர் எவராயினும் அனைவருக்கும் அவரது வெளிப்பாடு கிடைக்கும் (லூக். 19:1-10; தி.ப. 2:1-13; தி.ப. 2:14-41; தி.ப. 3:1-10; மத். 8:5-13; தி.ப. 10:1-6).

மனிதரால் காணக்கூடாத கடவுள் இன்றும் தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, திருப்பணிகள்

அவரது மரணம், உயிர்ப்பு, தூயாவியாரின் செயல்பாடுகள் அனைத்துமே அவரது வெளிப்பாடுகள்தான். பாடுகளும் துன்பங்களும் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்துவை நோக்கிப் பயணிக்கும் நம் வாழ்வு எப்போதுமே ஓர் எதிர் நீச்சல் அனுபவம் தான் எந்த நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பற்றுறுதியோடு பயணிப்போம். இருள் சூழ்ந்த நிலையில் பதறிய இஸ்ரவேலருக்குத் தம்மை இறைவாக்கினர் வழியாய் வெளிப்படுத்தியக் கடவுள், இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டு தம் ஆற்றல் (வல்லமை) வழியாக பற்றாளர்களுக்கு இரங்கியவர், பற்றுகொண்டோர் எவராயினும் அனைவருக்குமுரியவர் என தன்னை வெளிப்படுத்தியவர் இன்றும் வாழ்கின்றார். அவரில் பற்றுறுதி கொண்டு அவரது வெளிப்பாட்டைப் பெறுவோம்.

அருள்திரு. S. **பெல்சன் கிராமணி**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 9 | ஞா. | 436 |
| | கீர். | 28 | கீர். | 74 |


**08-01-2023** திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

# கடவுளின் திருக்கோவிலாக உடலை மதித்தல்

## Honouring the Body as Temple of God

ச.உ. 6:1-12 — 1 கொரி. 3:16-23

தி.பா. 1 — மத். 5:21-30



"... கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில்" 1 கொரிந்தியர் 3 : 17b

மனுக்குலத்தின் ஆரம்பத்திலிருந்தே கடவுள் தம் மக்களிடையே வாழவும் அவர்களோடு தொடர்பு கொள்ளவும் விரும்பினார். அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளோடு மென்காற்று வீசிய பொழுதினிலே உலவி, உரையாடி மகிழ்ந்தார் (தொ.நூ. 3:8). பின்னர் இஸ்ரவேலருடன் உடன்படிக்கைச் செய்து வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். என் உறைவிடத்தை உங்கள் நடுவில் நிறுவுவேன். நான் உங்களை வெறுப்பதில்லை. உங்கள் நடுவே நான் உலவுவேன், நானே உங்கள் கடவுள் நீங்கள் என் மக்கள் (லேவி. 26:11-12) என்றார். இஸ்ரவேலர் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது கடவுள் தம் மக்களுடன் வாசம்பண்ண விரும்பி, அவரைத் தொழுது கொள்ள மோசேயிடம் திருஉறைவிட முற்றத்தை உருவாக்க மாதிரியைக் காண்பித்தார். அதன்படியே மோசே கர்த்தருக்குத் திருஉறைவிடத்தை ஸ்தாபித்தார். கடவுளின் பிரசன்னம் அந்தத் திருஉறைவிடத்தில் தங்கியிருந்து (வி.ப. 27:21) எல்லா நிலையிலும் மக்களுக்கு வழிகாட்டும் ஆற்றலாகக் காணப்பட்டது. மன்னன் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை பண்ணின நாள் வரைக்கும் தேவன் திருஉறைவிட முற்றத்தில் வாசம் பண்ணினார். சாலமோன் கட்டிய தேவாலயத்தையும் கர்த்தர் தம் மகிமையால் நிரப்பினார் (1 அர. 8:10,11).

புதிய ஏற்பாட்டில் வார்த்தையாய் இருந்த கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டு மனுமக்களிடையே வாசம்பண்ணினார் (யோவான் 1:1-4) எனக் காண்கிறோம். அவரது பெயர் இம்மானுவேல் எனப்பட்டது. இம்மானுவேல் என்பதற்குக் கடவுள் நம்முடன் இருக்கிறார்

(மத். 1:21-23) என்பது பொருள். இயேசு கிறிஸ்து தம் சரீரமாகிய ஆலயத்தைப் பற்றிக் கூறியதாக யோவா. 2:21-ல் படிக்கிறோம். கிறிஸ்துவில், கடவுளின் முழுமையும் மனித உடலில் வாழ்கிறது என கொலோ. 2:9 சொல்லுகிறது. கடவுளில் வாழும் விசுவாசிகளின் உடல் கடவுளின் தூய கோவிலாக மாறுகிறது (1 கொரி. 3:16). இயேசுவும், என் மீது அன்பு கொண்டுள்ளவன் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பான். என் தந்தையும் அவன்மீது அன்புள்ளவராயிருப்பார். நாங்கள் அவருடன் வந்து அவருடன் குடி கொள்வோம் (யோவா. 14:23) என்று கூறினார். 1 கொரி. 6:19-ல் பவுலடியாரும் விசுவாசிகளின் உடல்கள் தூய ஆவியாரின் கோவில்கள் என விவரிக்கிறார்.

விசுவாசத்தின் மூலம் கடவுளின் கிருபையைப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்துவதுபோல, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறார்கள் (எபே. 2:21). கடவுள் தம் பிள்ளைகளை அவருடைய ஆவி வசிக்கும் உறைவிடமாகக் காண்கிறார். அவர் தம்முடைய இரத்தத்தால் அவர்களைக் கழுவி சுத்தப்படுத்துகிறபடியால் அவர்கள் தூய்மையானவர்களாக மாறுகிறார்கள். அசுத்தமுள்ள எதையும் கடவுள் தம் பிள்ளைகளில் அனுமதிப்பதில்லை. இந்தப் பின்னணியத்தில் கடவுள் தங்கும் சரீரமாகிய கோவிலை இறைமக்கள் எப்படித் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும் என்பதைக் கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகளைச் சார்ந்து தியானிப்போம்.

**1. உலகச் செல்வத்தால் ஆளுகைச் செய்யப்படாதிருத்தல்** ச.உ. 6:3

பழைய ஏற்பாட்டுத் திருமறைப்பகுதியான சங்கத் திருவுரை ஆகமத்தில் 6:1-12 வசனங்களில் மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்து வருகிற சம்பவங்களை ஞானி சாலொமன் குறிப்பிடுகிறார். சாலொமோன் செல்வத்தைப்பற்றி நன்றாக அறிந்திருந்தார். ஏனெனில் அவர்தம் காலத்தில் மிகப்பெரிய செல்வந்தனாயிருந்தார் (1 அர. 3 : 13). தாம் அனுபவித்துக் கண்டறிந்ததை அறிவுரையாக எழுதியுள்ளார். உலகத்தில் மனுஷனுக்குச் செல்வத்தையும் கனத்தையும் சம்பத்தையும் கடவுள் கொடுத்திருக்கிறார் (ச.உ. 6:2) அவர்களில் பலர் தங்களுடைய செல்வத்தை, எந்த நற்கிரியைகளுக்கும் பயன்படுத்தாமல் அவற்றைக் குவித்து வைக்கிறார்கள். அவைகளால் மனம் திருப்தியடையாமலும் இன்பம் காணாமலும் போகிறார்கள் (ச.உ. 6:7,8). காரணம் அவர்கள்

தங்கள் சரீரத்தை உலகக் காரியங்களுக்கு அடிமைப்படுத்தி வாழ்கின்றனர். எனவே சரீரமானது உலக செல்வத்தால் ஆளுகை செய்ய இடம் தராதிருத்தலே சிறப்பு என ஞானி தெளிவுப்படுத்துகிறார்.

உலகச் செல்வம் மனுஷனை மனிதனாகவே காட்டுகிறது. அது ஒருபோதும் மனிதனின் ஆத்துமாவைத் திருப்தியடையச் செய்வதில்லை. காரணம் மனுஷனுடைய சுபாவத்தில் தீயகுணங்கள் இயல்பாகவே இருக்கின்றன. ஐசுவரியத்தால் இருதயம் அமைதியாக ஓய்ந்திராமல் செல்வம் குவிந்தவுடன் ஆரவாரம் பண்ணுகிறது. லூக்கா 12-ஆம் அதிகாரத்தில் செல்வந்தன் தனக்குக் கிடைத்த விளைச்சல் அதிகரித்ததால் அனைத்தையும் தானே அனுபவிக்கவேண்டும் எனப் பேராசை கொண்டான். (லூக். 12:18). "ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்குவேன்" எனவும் "என் நெஞ்சமே நீ ஓய்வெடு, உண்டு குடித்து மகிழ்ச்சியில் திளைத்திடு" என்று தன் சுயசித்ததின்படி செய்ய தன் சரீரத்தின் அவயவங்களை ஆயத்தப்படுத்தினான். எனவே சரீரத்தின் உறுப்பான அவனுடைய இருதயம் மனமேட்டிமை அடைந்து, பேராசை, பெருமை, சுயநலம், ஆணவம், இவைகளால் ஆட்கொள்ளப்பட்டு தன் நித்திரையை இழந்தான் (லூக். 12:17). ஊதாரித்தனமும் கஞ்சத்தனமும் மனுஷனுடைய இரத்தத்தில் கலந்திருக்கிறபடியால் அவனது மனம் செல்வத்தை இச்சித்து, ஆத்துமாவையும் சரீரத்தையும் குறித்து கவலைப்படாதிருக்கிறது.

சிலர் ஊதாரித்தனமாகச் செலவு செய்கிறார்கள். சிலர் கஞ்சத்தனமாக இருக்கிறார்கள். கர்த்தர் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை நன்மையான காரியங்களுக்கு அநேகர் பயன்படுத்துவதில்லை. தேவன் வாழ்வில் தரும் ஆசீர்வாதங்கள் அதிகரிக்கும் போது தங்கள் சிந்தனையை உலக செல்வம் ஆளுகை செய்ய அனுமதித்து விடுகிறார்கள். அப்படி அனுமதிப்பதால் தங்கள் சரீரத்தைக் கெடுத்து ஆன்மிகத்தை இழந்து விடுகிறார்கள். சரீரம் கடவுள் தங்கும் கோவிலாகத் தூய்மையானதாக இருக்கமுடியாமல் போய் விடுகிறது. கர்த்தர் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை அவருடைய நாம மகிமைக்கென்று பயன்படுத்தினால் மட்டும்தான் ஆத்தும நன்மைகளைப் பெற்று மகிழ்வுடனும் மன நிறைவுடனும் வாழ முடியும்.

## **2. தூய ஆவியாரால் ஆளுகைச் செய்யப்படுதல்** (1 கொரி. 3:17)

கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்த விசுவாசிகள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் அவர்கள் தொடர்ந்து ஊனியல்புக்குரிய சிந்தையுடன் வாழக் கூடியவர்களாயிருந்தார்கள் (1 கொரி. 3:3). அவர்களிடையே பிளவுகள் ஏற்பட்டு தங்களுக்காகவே வாழ்ந்து வந்தார்கள். எனவே பவுல் அவர்கள் ஆவிக்குரிய நிலையில் முதிர்ச்சிப் பெறாமல் குழந்தைகளாகத்தான் இருக்கிறார்கள் என எண்ணி அறிவுரை கூறுகிறார். 1 கொரி. 3:16-ல் நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? எனக் கேட்கிறார். கடவுளுடைய ஆவி ஒவ்வொரு விசுவாசியிலும் வாசமாயிருக்கிறபடியால் தேவனுடைய கோவிலாகிய சரீரம் தூய்மையாய்க் காக்கப்பட வேண்டுமென்கிறார். சரீரத்தின் அவயவங்களால் நாம் செய்யும் பாவமான காரியங்கள் நம்மை நியாயத்தீர்ப்பில் நிறுத்த ஏதுவாயிருக்கிறது. சரீரத்தை ஒருவன் அழித்தால் கடவுள் அவனை அழித்துவிடுவார் (1 கொரி. 3:17). பவுலடியார் ஆவிக்குரிய தன்மையை அதிகரித்து ஆவியானவர் தங்கள் சரீரங்களைக் கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களை ஒப்படையுங்கள் என்கிறார் (ரோமர் 12:1).

கடவுளின் ஆவியார் தீட்டான பாவம் நிறைந்த சரீரங்களில் வசிக்கமுடியாது. நம்முடைய சரீரங்களைத் தீட்டுப்படுத்தும் பலவிதமான முறைகள் இருக்கின்றன. தூய்மையான சரீரமாகிய கோவிலை அசுத்தப்படுத்தும் மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதும்போது ஊனியல்பின் செயல்களாக பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலை வழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடி வெறி முதலியவற்றை மிகத் தெளிவாய்க் கூறுகிறார். நம் சரீரங்களை நல்ல பழக்க வழக்கங்களால் சுத்தமாய்க் காத்துக் கொள்ளாமல், சரியான உணவும் தகுந்த ஓய்வும் இல்லாமல், உடல் பயிற்சியுமின்றி கவலையின்றி வைத்திருப்பதும் அவைகளைக் கெடுப்பதாகும். எனவே ஆண்டவருடைய கோவிலாகிய நம் சரீரம் தூய்மையானதாகக் காக்கப்பட ஆவியாரின் வழிநடத்துதலை ஏற்க முன் வர வேண்டும்.

### 3. மெய்யான தெய்வபக்தியுடையவராயிருத்தல் (மத். 5:24)

மெய்யான தெய்வ பக்தி எனக்கூறும்போது எதையும் எதிர்பார்க்காமல் நம்மில் உள்ள அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாகும். அதாவது நம்மையும் நமக்குரியவைகளையும் கடவுளுக்குப் படைத்து மகிழ்வதாகும். இதில் நமது சரீர அவயவங்களும் உட்படும், கடவுள் தம்முடைய ஜனங்களுக்கு ஆதிமுதல் வெளிப்படுத்திய பிரமாணங்கள் அனைத்தையும் ஜீவனுள்ள வார்த்தைகளாக வெளிப்படுத்தினார். வேதபாரகர் பரிசேயர் போன்றோர் அந்த வார்த்தைகளுக்குத் தவறான அர்த்தம் தந்து மெய்பக்தியை மறுதலித்தார்கள். தங்களையும் கெடுத்துத் தங்கள் சரீரத்தையும் கெடுத்துக் கொண்டார்கள்.

சுவிஷேச பகுதியாகத் தரப்பட்ட மத்தேயு 5:21-30-ல் இயேசுநாதர் தம் மலைப் பொழிவில் பாவத்தில் விழப் பண்ணும் உடல் அவயவங்கள் பரிசுத்தமாய்க் காக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார். மனிதன் தனக்குள் இருக்கும் இருதயத்தின் நினைவுக்கும், மனசாட்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். புறம்பான தேவ பக்தியை விட இருதயத்துக்குள் காணப்படும் மெய்யான தேவ பக்தியே மேலானது என இயேசு போதித்தார். உள்ளத்தில் ஒருவரைக் குறித்து தீமையான எண்ணம் கொண்டால் அதுவே சரீரத்தைக் கெட்டுப்போகச் செய்கிறது. பிறருக்கு விரோதமாக உள்ளத்தில் கோபமும் வெறியும் கொண்டால் அதுவே கொலை செய்கிறவனுக்குச் சமமாகக் கருதப்படுகிறது. சரீரப்பிரகாரமான கொலையை விட நாவினால் கடுமையான வார்த்தைகளைப் பேசுவதும் கொலைக்குச் சமமாகும் (மத். 5:22). பாவத்துக்குக் காரணமாயிருக்கும் சரீர அவயவங்கள் களைந்தெறியப்பட்டாலொழிய சரீரம் தூய்மையானதாக கடவுளின் ஆலயமாய் இருக்கமுடியாது என்பது இயேசு உணர்த்தும் உண்மை (மத். 5:27-30). ஒருவனுடைய கண் அவன் பாவம் செய்வதற்குக் காரணமாயிருந்தால் அந்தக் கண்ணைப் பிடுங்கி எறிந்து விட வேண்டும் என்றும் (மத். 5:27-30). போதித்தார். ஆகவே ஒருவன் தன் சரீர அவயவங்கள் தூய்மையானதாகப் பாதுகாத்தால் மட்டுமே சரீரம் ஆண்டவர் தங்கும் திருக்கோவிலாக இருக்கமுடியும். ஏனெனில் கடவுள் பரிசுத்தர் அவர் பரிசுத்தமான இடத்தில் வாசம் பண்ணுகிறவர்.

கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ்ந்த மனிதா் ஒருவா், ஒருமுறை இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். அவருக்கு அருகில் பிரயாணம் செய்த சிலா் நேரத்தைப் போக்குவதற்காக சீட்டு விளையாட ஆரம்பித்தனர். ஆனால் விளையாட்டுக்கு ஒருநபர் குறைவாக இருந்ததால் அந்த இறையடியவரை அணுகி அவரையும் சீட்டாட்டத்தில் கலந்து கொள்ள அழைத்தனர். ஆனால் அவரோ "அன்பான நண்பர்களே வருந்துகிறேன். இந்த கரங்கள் எனக்குரியவைகள் அல்ல" என்று கூறி தன் கரங்களைத் தூய்மையாய்க் காத்துக் கொண்டாராம். இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்களாகிய நாம் அசுத்தமான கிரியைகளுக்கு இடம் தராமல் தூய்மையான கோவிலாகிய சரீரத்தைக் காத்து, தேவஆவியால் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. கடவுள் அருளும் இறையாசி புத்தாண்டில் அனைவரோடும் நிறைவாய்த் தங்க இறைவன் அருள்புரிவாராக!

அருள்திரு. அறிவர். P. **ராஜா ஜெயசிங்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 66 | ஞா. | 444 |
| | கீா். | 10 | கீா். | 370 |

**15-01-2023**

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும்
இரண்டாம் ஞாயிறு

# அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு

## Called to Unity

| | |
|---|---|
| எசே. 37 : 15-23 | எபே. 4 : 1 - 6 |
| திபா. 133 | யோவா. 15 : 1-12 |



“அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச் சேர்” (எசே. 37 : 17)

யார் சிறந்தவர் என நிறங்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டன.

**பச்சை** : நான் பசுமை ; அனைத்தும் என்னால்தான் உயிர் வாழ்கின்றன என்றது.

**நீலம்** : நானே கடல் ; நானே வானம் நானே அமைதி என்றது.

**மஞ்சள்** : சூரியனும் மஞ்சள்; நட்சத்திரங்களும் மஞ்சள் என்றது.

**ஆரஞ்ச்** : நானே நலமும், பலமும்; நானே விட்டமின் என்றது.

**சிகப்பு** : நான் இரத்தம், வீரம், தீ ஆகவே நான்தான் சிறந்தவன்.

**ஊதா** : நானே அரச நிறம்; அதிகாரத்தின் நிறம் ஞானத்தின் நிறம் என்றது.

**இன்டிகோ** : என்னால்தான் உள் அமைதி கிடைக்கும் நான் தியானம்.

இப்படி நிறங்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டபோது மழை வந்தது.

வானிலிருந்து ஒரு குரல் “சண்டையிடாதீர்கள் இணைந்திருப்பது தான் பலம்.” உடனே நிறங்கள் கைகோர்த்தன. தொடர்ந்து வானின் குரல் ஒலித்தது :

கடவுளுடைய படைப்பில் ஒவ்வொரு நிறமும் தனித்தன்மை வாய்ந்ததுதான்.எல்லாவற்றையும் விட அழகானது இப்படி ஒன்றாக இருக்கும்போது உருவாகுவது வானவில் தான் என்றது. “பிரிவினையும் வேற்றுமையும், இறையாட்சிக்கு எதிரானது. ஒற்றுமையும், ஒரு மனமும் இறையாட்சியின் மதிப்பீடுகள்.”

திருச்சபை அழைக்கப்பட்ட கூட்டம் என்றால் அது ஒன்றுபட்டு நிற்பதற்குத்தான், அழைக்கப்பட்டிருக்கிறது. “டான்ரூல்” திருச்சபையின்

ஒருமைப்பாட்டை இசை நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டு பேசுவார். "தொடக்க முதல் முடிவு வரை அனைத்து இசைக்கருவியினரும் மேடையில் இருந்து இசையுடன் இணைந்து செல்லவேண்டும்" என்பார்.

ஆம் திருச்சபை இந்த உலகம் என்னும்இசைமேடையில் முடிவுவரை இசைந்து செயல்பட அழைக்கப்பட்ட இசை கலைஞர்கள். "அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்" (பிலி. 2 : 2) என்கிறார் பவுலார்.

திருச்சபையின் ஒருமைப்பாட்டைக் குறித்து தியானிக்கும்போது :

**1. ஒருமைப்பாடு நம் சொல்லில்** எபே. 4 : 1-6

ஒன்றுபடுவதற்கு அழைக்கப்பட்டத் திருச்சபை தன்னுடைய சொல்லில் தன்னுடைய அழைப்பை வெளிப்படுத்தவேண்டும். அதாவது ஒருமைப்பாட்டிற்குரிய சொற்கள் நம் வாயிலிருந்து புறப்பட வேண்டும். இதைக்குறித்து பவுலார் குறிப்பிடும்போது :

"அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்" (எபே. 4 : 3) என்பார். மேலும் திமொத்தேயுவுக்கு எழுதும்போது, "நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத்தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் விளங்கு" (1 திமொ. 4 : 12) என்று ஆலோசனை சொல்லுவார்.

திருச்சபை மாதிரியின் வாழ்வைத்தரவேண்டும் அதுதான் ஒருமைப்பாடு இந்த ஒருமைப்பாட்டிற்கு நம் வார்த்தை, நம் சொல் ஏதுவாக இருக்கவேண்டும்.

இன்று கிறிஸ்தவர்களின் சொல்லில்

உண்மை உண்டா?

சொல்லை நம்பலாமா?

Think twice before you leap but

Think thrice before you speak.

"குதிப்பதற்கு முன் (செயல்படுவதற்கு) இரண்டு முறை யோசிக்கவேண்டும். ஆனால் பேசுவதற்கு முன் மூன்று முறை யோசிக்கவேண்டும்."

யோசிக்காமல் பேசின வார்த்தைகளால் எத்தனை விபரீதங்கள் இல்லையா?

"கெட்டவார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி, தேவைக்கு ஏற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்" (எபே. 4 : 29).

"என் உள்ளத்தின் நேர்மையை என் சொற்கள் விளம்பும்; அறிந்ததை உண்மையாய் இயம்பும் என் உதடுகள்" (யோபு 33 : 3).

"பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கின்றார்; உண்மையாய் நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கிறார்" (நீதி. 12 : 22).

இவைகள் எல்லாம் திருமறைதரும் எச்சரிப்புக்கள். ஆம், ஒருமைப்பாடு நம் சொல்லில் அதுவே நம் அழைப்பு.

**2. ஒருமைப்பாடு நம் வாழ்வில்** யோவா. 15 : 1-12

ஒருமைப்பாடு நம் வாழ்வு முறையில் வெளிப்படவேண்டும். இதை ஆண்டவர் ஓர் அழகிய உருவத்தின் வழியாய் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். அதுதான் "திராட்சை செடி" உருவகம்.

"நானே திராட்சை செடி : நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவா. 15 : 5).

இறைவனோடுள்ள உறவில் நம் ஒருமைப்பாடு நம்மை இறைமக்களோடு ஒருமைப்பட செய்கிறது. இறைவனோடு ஒருவன் தன்னை ஒன்றித்துக் கொள்ளும்போது மட்டுமே, இறைமக்களோடு ஒன்றித்து வாழமுடியும். தன் சகோதரனோடு ஒன்றித்து வாழ முடியாதவன் தான் இறைவனோடு ஒன்றித்து வாழுகிறேன் என்றால் அவன் பொய்யன் (1 யோ. 4 : 20).

ஒரு திருச்சபையில் ஒன்றித்து வாழ இயலாதோரால் இறையரசில் எவ்வாறு ஒன்றித்திருக்க இயலும். வில்லியம் பார்க்லே கூறும்போது, "திருச்சபையில் ஏற்படும் பெரும்பாலான பிரச்சனைகள், உரிமைக்காகவும், பதவிக்காகவும், புகழுக்காகவும்" என்று குறிப்பிடுவார். கருத்து வேறுபாடுகள் வருவது இயல்புதான். ஒரு கணவனும், மனைவியும் கருத்து வேறுபாடுகளை குடும்ப பலனை கருத்தில் கொண்டு தீர்ப்பதுபோல திருச்சபையின் நலன் கருதி

முரண்பாடுகள் தீர்வு செய்யப்படாவிட்டால் அது அழிவில் கொண்டு சேர்க்கும்.

ஒவ்வொரு தனி மனிதனும் தன் வாழ்வில் உணர்வடைந்து இறைவனோடு உறவு கொண்டு, சக மனிதர்களோடு ஒன்றித்து வாழ தன்னை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். சகேயுவின் வாழ்வில்; இந்த ஒருமைப்பாடு வெளிப்படுவதை பார்க்கமுடிகிறது (லூக். 19 : 8). ஆம், ஒருமைப்பாடு நம் வாழ்வில்; அனுதின வாழ்வில்.

**3. ஒருமைப்பாடு நம் கையில்** (எசே. 37 : 17)

அவை இரண்டும் உண்மையில் ஒரே கோலாயிருக்கும்படி அவற்றை ஒன்றாகச்சேர். இறைவாக்கினர் எசேக்கியேல் எருசலேம் வீழ்ச்சிக்கு முன்னும், பாபிலோனிய சிறையிருப்பின்போது இறைவாக்குரைத்தவர். இஸ்ரயேல் நாடு எசேக்கியல் காலத்தில் வடநாடு, தென்னாடு என்று பிரிந்து ஒருமைப்பாடின்றி காணப்பட்டது. இந்த சூழலில்தான், பிரிந்து நிற்கும் இஸ்ராயேலரை உன் கையில் ஒன்றாக்குவேன் என்கிறார் கடவுளாகிய ஆண்டவர்.

யூதாவின் கோல் : யூதாவுக்கும் அதை சேர்ந்த இஸ்ராயேல் புத்திரருக்குமானது.

யோசேப்பின் கோல் : எப்பிராயிமுக்கும் அதை சேர்ந்த இஸ்ராயேல் புத்திரருக்குமானது.

இப்படி இரண்டு கோல்களில் பெயர் எழுதப்பட்டு வைத்துக்கொள். “அவைகள் உன் கையில் ஒன்றாகும்” என்கிறார் கடவுள். நாம் இங்கு கற்றுக்கொள்ளும் உண்மை என்னவென்றால்; குடும்பமாக இருந்தாலும் சரி, திருச்சபையாக இருந்தாலும் சரி ஒருமைப்பாடு நம் ஒவ்வொருவரின் கரத்தில்தான் இருக்கிறது. குடும்பத்தில், கணவன் நினைத்தால்தான் ஒருமைப்பாடு என்று மனைவியும்; மனைவி நினைத்தால்தான் ஒற்றுமை என்று கணவனும் நினைப்பதால்தான் பல குடும்பங்களில் பிரிவினை தீரவில்லை. திருச்சபையில், இவர்களால்தானே பிரிவினை வந்தது. ஆகவே அவர்களே ஒருமைப்பாட்டை கொண்டு வரட்டும் என்று அல்ல. “ஒருமைப்பாடு நம் ஒவ்வொருவர் கரத்திலும் இருக்கிறது” என்று ஒவ்வொருவரும் கரம்கோர்க்க அழைக்கப்படுகிறோம். கரம் கோர்க்கப்படவில்லை என்றால் அழிவு. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய கரத்தை சிலுவையில் கோர்த்தார்.

“ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவைரையும் பிரித்து நின்று பகைமை என்னும் அவரை தமது

உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுப்படுத்தினார். .. . தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்." (எபேசி 2 : 14-16).

ஆப்பிரிக்க அருட்பணியாளர் ஒருவர் கண்ட ஓர் அனுபவம். ஆப்பிரிக்க கிராமத்து குழந்தை ஒன்று அருகே வளர்ந்திருந்த நீண்ட புதர்களடங்கிய காட்டிலுள்ளே காணாமல் போய்விட்டது. நாள் முழுவதும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. மறுநாள் அக்கிராமத்தார் எல்லாரும் ஒன்றிணைந்து ஒருவரோடொருவர் கைகோர்த்து நீண்ட வரிசை அமைத்து நீளமாக வளர்ந்திருந்த புதர்களுக்கிடையே கொஞ்சம், கொஞ்சமாக நகர்ந்து குழந்தையைத் தேடினார். விரைவில் குழந்தையைக் கண்டுபிடித்தனர். ஆனால்அந்த குழந்தை உயிரோடில்லை. அதைக் கண்ட குழந்தையின் தாய், "நாம் கொஞ்சம் முன்னரே கை கோர்த்திருந்தால் . . ." எனக் கதறி அழுதார்.

கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் கை கோர்த்து செல்ல வேண்டிய கட்டாயம் இந்தக் காலம். நாம் கைகோர்க்க வில்லை என்றால் திருச்சபைசெத்துவிடுமோ என்கிற அச்சம். நம் பிரிவினையை பயன்படுத்தி திருச்சபையை அழிக்கும் சக்திகள் இன்று பெருகி வருகிறது. இன்றைய நாட்களில் நாம் சந்திக்கும், ஒரே நாடு, ஒரே கார்டு, ஒரே மொழி, ஒரே சமயம் என்ற சவால்கள் சங்கடமானது. "ஊரு இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டமாம்." நம்மிடமிருக்கும் பிரிவினை மற்றவர்களை கொண்டாடச் செய்கிறது. விழிப்போடிருக்க அழைக்கப்படுகிறோம். "CALLED TO UNITY - அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு என்று உணர்ந்து

ஒருமைப்பாடு, நம் சொல்லில்

நம் வாழ்வில்

நம் செயலில் என்பதை உணர்ந்து ஒன்றிப்போம். அதற்காகவே அழைக்கப்பட்டோம். ஆமென்.

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 11 | ஞா. | 347 |
| | கீர். | 418 | கீர். | 407 |

**22-01-2023**

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும்
மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு

# பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பு

## Unity in Faith and Action

| | |
|---|---|
| யோசுவா 3 : 9-17 | திப. 9 : 20-25 |
| திபா. 53 | மாற். 1 : 21-34 |



"உடனடியாக அவர் இயேசுவே இறைமகன் என்று தொழுகைக் கூடங்களில் பறைசாற்றத் தொடங்கினார்"
(தி.ப. 9 : 20)

பற்றுறுதி என்பதற்குப் பயன்படுத்தப்படும் பிற தமிழ்ச் சொல் நம்பிக்கை ஆகும். பற்றுறுதி என்பது கிறிஸ்தவ அனுபவத்தில் இயேசுவின் மீது வைக்கும் நம்பிக்கையாகும். இயேசு அறிவித்த நற்செய்தியை அறிக்கையிடுதல் பற்றுறுதி. கடவுளுடன் சரியான தொடர்புகொள்ள உதவும் பாலம் போன்றது பற்றுறுதி. இயேசுவின் சொல்லும் செயலும் ஒன்றாயிருந்தது (லூக்கா 24 : 19). இதற்கு எதிர்மறையாக பரிசேயர், சொல் ஒன்றாகவும் செயல் இன்னொன்றாகவும் இருந்தது (மத். 23 : 3). தற்கால கிறிஸ்தவ அனுபவத்தில் ஆன்மீகமுடைய பலர் அடுத்திருப்போரிடம் அன்பு செலுத்தாத செயலைக் காணமுடிகின்றது. ஆலயத்தில் வந்து ஆண்டவரிடம் அன்பு செலுத்துதல் எளிதானது ஆனால் அடுத்திருப்போரை ஆதரிப்பதும், அழுக்கிலிருக்கும் அன்பானவர்களை ஆதரிப்பதும் கடினமானதாயிருக்கின்றது. ஆகவே பற்றுறுதியிலும் செயல் ஒன்றிப்பு இருந்தால் மட்டுமே இயேசுவைப் போன்று நமது சொல்லும் செயலும் ஒன்றாயிருக்கும்.

தூய பவுலின் யூதப் பற்றுறுதி செயலுக்குத் தடையாயிருந்தது எனவே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைத் துன்பப்படுத்துபவராக இருந்தார். பவுலின் தமஸ்கு அனுபவம் அவரது பற்றுறுதியும் செயலும் இணைந்து செயல்பட வழிகாட்டியது (கலா. 1 : 13, 23). அழிக்கத் தேடிய விசுவாசத்தை அறிவிக்கும் விசுவாசமாக்கியது.

**1. விரோதித்தவரை விண்ணப்பம் பண்ணுபவராக்கிய பற்றுறுதி** (தி.ப. 9 : 1, 2, 11)

யூத சமய பாரம்பரியத்தில் பற்றுறுதி கொண்ட பவுல் கிறிஸ்துவின் மீது பற்றுறுதியுடையவர்களை எதிர்ப்பவராக - விரோதித்தவராகச்

செயல்பட்டார். அக்காலத்தில் யூத சமய பற்றுறுதியிலிருந்து விலகுபவரை விசாரிக்க - தண்டிக்க ரோம அதிபதியால் பிரதான ஆசாரியருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. எருசலேமின் துன்பம் சீடர்களை எல்லை கடக்க செய்தது. சீடர்கள் சென்ற இடமெல்லாம் இயேசுவை அறிவித்தது பவுலின் கோபத்தை அதிகரித்தது. பவுல் ஸ்தேவான் கொலையில் பங்கு பெற்றார் தி.ப. 8 : 1) ஸ்தேவான் மரித்து சில வாரங்களிலேயே பவுலின் பார்வை தமஸ்கு நோக்கி விரைந்தது.

சீரியாவிலுள்ள தமஸ்குவில் எசீனியர் அதிகமிருந்தனர். ஏறத்தாழ பத்தாயிரம் யூதர்கள் தமஸ்குவில் அக்காலத்தில் வாழ்ந்தனர். தமஸ்கு எருசலேமுக்கு வடக்காக 135 முதல் 150 மைல் தூரத்திலிருந்தது. பவுல் பிரதான ஆசாரியரிடம் நேரடி தொடர்புள்ளவராக செல்வாக்குமிக்கவரா யிருந்தார். எனவே கிறிஸ்தவர்களை விரோதித்தபடியால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை விலங்கிட பிரதான ஆசாரியரிடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற்றார். தமஸ்கு செல்லும்போது யூத குருவாக அதிகார பத்திரம் பெற தகுதியுடையவராக இருந்தார். பவுல் தமஸ்கு செல்லும்போது 35-40 வயதுடைய இளைஞராக இருந்தார். பவுலிடம் இருந்த கடிதத்திற்கு யூதரிடம் அதிக ஆதரவுகிடைத்தது. (தி.ப. 26:10, 11).

இயேசுவை நேசிப்பவர்களை விரோதித்தவராக இருந்த பவுல் (அப். 26 : 9) தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவின் சந்திப்பால் விண்ணப்பம் பண்ணுபவரானார். (9 : 11). இல்லங்களில் நுழைந்து இழுத்து சிறையிலடைத்து, சபைகளைப் பாழாக்கின (8 : 3) பவுல் எதிரியாயிருந்தவர்களை ஏற்றுக்கொள்ளுகிறவரானார். வீடுகள்தோறும் விரோதச் செயல் செய்தவர் விண்ணப்பம் பண்ணும் பற்றுறுதிக்குள் மாற்றப்பட்டார். ஸ்தேவானை எறிந்த கற்கள் பவுலுக்குக் கிறிஸ்துவின் ஆன்மிக அனுபவத்தைக் கட்டும் கற்களாக மாற்றியது.

**2. விழுந்தவரை விரைந்திடச் செய்த பற்றுறுதி** (தி.ப. 9 : 4, 20)

யூதப் பற்றுறுதியாளரான பவுல் ஒரு நிமர்ந்த மனிதர். சட்டத்தில், பாரம்பரியத்தில், பரிசேயரில் நிமிர்ந்தவர். கட்டுவதில், கல்லெறிவதில், கல்வியில் நிமிர்ந்தவர் கிறிஸ்துவை நேசிப்பவர்களை துன்புறுத்தும் பயணப் பாதையில் விழுந்தார். தமஸ்குபாதையில் வானத்தின் ஒளி பவுலைத் தரையில் தள்ளியது. ஆண்டவரை எதிர்த்து அவருக்கே கேடுண்டாக்கியவர். விழுந்துகிடப்பவரையும் தூக்கும் ஆண்டவர் பவுலை விழுந்திட செய்தார். விழுந்தால் விசுவாசத்திற்கான சத்தம் கேட்கும்.

ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய் - 4

எழுந்து பட்டணத்திற்குள்ளே போ - 6

தரையிலிருந்தெழுந்து ....... தமஸ்கு சென்றவர்கள் - 8

கண்களிலிருந்து செதில்கள் போன்றவை விழுந்தன - 18

எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான் - 18

விழுந்த பவுலின் பார்வையும் விழுந்தது ஆனால் பரம தரிசனம் புது பார்வை கொடுத்து நற்செய்தியாக புதிய பற்றுறுதியில் விரைந்திட செய்தது. இந்த நற்செய்தியை இயேசுவே வெளிப்படுத்தினதாகக் கூறினார் (கலா. 1 : 12). புறஜாதிகளுக்கு உடனே நற்செய்தியை அறிவித்தவராக கூறுகிறார் (16). இயேசுவைப் பழைய ஏற்பாட்டுச் சிந்தனைபடி சபிக்கப்பட்டவராக நினைத்த பவுல் (உபா. 21 : 23) மேசியாவாக ஏற்று அறிவித்தார் (ரோமர் 1 : 5) கண்டதைச் சாட்சியாக அறிவிக்க தி.ப. 26 : 16, இருளை விட்டு ஒளியிடம் திரும்ப கண்களைத் திறக்க அனுப்பப்பட்டார் (18). கிறிஸ்தவர்களைத் துரத்தியவராக இருந்தவர் தூர தேசத்திற்கு அனுப்பப்பட்டார் (தி.ப. 22 : 20, 21). கடல் கடந்து களைப்பில்லாது நற்செய்தி பணிசெய்ய விரைந்தார்.

**3. விசாரித்தவரை விசுவாசியாக்கிய புதிய பற்றுறுதி** (தி.ப. 9 : 5, 22)

தமஸ்கு பாதையில் தள்ளப்பட்ட அனுபவத்தால் தன்னைத் தள்ளியது யார் என விசாரிக்கின்றார். யூத சமய வெறி இயேசு யார் என்பதைப் பார்க்க முடியாதபடி பார்வைகளை அடைத்து வைத்திருந்தது. யூத சமய அறிவு உண்மையை அறிய முடியாத அறிவாக இருந்தது. யூத சமய ஆன்மிகம் அழிக்கும் ஆன்மீகமாக இருந்தது. இருண்ட இதயமுடையவராக இருந்தபடியால் இயேசுவை மேசியாவாக அறிய முடியவில்லை எனவே தரையில் விழுந்தபோது “நீர் யார்” என்று விசாரித்தார்.

நீர் யார் என்றால் நான் யார் என்பதை பவுல் அறிந்தார். நான் துன்பப்படுத்துகின்றவன், கண் பார்வை இழந்தவன் 5, 8 என்பதை இயேசு பவுலுக்கு உணர்த்தினார். இயேசு யார் என்பதைக் கண்ட பவுல் உண்மையான பற்றுறுதியை ஏற்றார். புதிய பற்றுறுதி பவுலைப் புதிய மனிதனாக்கியது

- பரிசுத்தவான்களுக்குப் பொல்லாப்பு செய்தவர் (13) உதவி செய்பவராக மாறினார் (1 கொரி. 16 : 1)

- யூதர்கள் மட்டுமே கடவுளின் மக்கள் என்றவர் புற இனத்தவரும் கடவுளின் மக்களே என்றார்.

- யூதர்களைக் கடவுள் நேசிக்கிறார் என்றவர் அனைவரையும் நேசிக்கிறார் என்றார்

- துன்புறுத்திய பவுல் துன்பம் ஏற்கிறவரானார்.

- கிறிஸ்தவர்களைக் கலங்கப் பண்ணினவர் தமஸ்கு யூதர்களைக் கலங்கப் பண்ணினார் (தி.ப. 9 : 22).

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என (பிலி. 1 : 21) கிறிஸ்துவுக்காக மரணத்தையும் நறுமணமாக ஏற்கும் பற்றுறுதியாளரானார் பவுல்.

கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக். 2 : 20, 26)

அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே உதவும் (கலா. 5 : 6).

இன்று மனிதர்கள் பலர் பிரபலமாக வேண்டும் என்னும் உள்நோக்குடன் கிரியை செய்கின்றார்கள் (யோவான் 7 : 4). இயேசுவைப் போன்று கிரியை செய்ய ஆண்டவர் விரும்புகின்றார் (14 : 12). பவுலின் பற்றுறுதியும் செயலும் இயேசுவைப் போல ஒன்றித்திருந்தது. பவுலின் பற்றுறுதிப் பிரகடனம் அரசன் முன்னும், அறிஞர் முன்பும் உறுதியாக இருந்தது. பாடுகாலங்களில் பயந்து ஓடும் திருச்சபையாக அல்ல பக்தி வாழ்வைப் பற்றுறுதியால் செயலில் காட்ட ஆண்டவர் அழைக்கின்றார். திருச்சபை தந்தை போலிகார்ப் கைது செய்யப்பட்டு விளையாட்டரங்கில் முன்னிறுத்தப்பட்ட போது

“நன்மையிலிருந்து தீமைக்குத் திரும்புவதைவிட
தீமையிலிருந்து நன்மைக்குத் திரும்புவது நலம்”

என அறிக்கையிட்டார் கி.பி. 155-ல் தீக்கிரையாக்கப்பட்டு இரத்தசாட்சியாக மரித்தார். பற்றுறுதி பாடுகளில் பட்டுப் போவதாக அவ்வாறு செயல்களில் வெளிப்படுத்தும் வாழ்வாக அமையவேண்டும்.

**Rev. I. ரெஞ்சித் வேதகுமார்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 15 | ஞா. | 472 |
| | கீர். | 28 | கீர். | 284 |

**26-01-2023**

குடியரசு நாள்

# நாட்டுக் கட்டுமானத்தில் பங்கேற்பு

## Participation in Nation Building

நெகே. 2 : 11 - 18 | 1 பேது. 2 : 13 - 17

திபா. 101 | லூக். 3 : 7 - 14



. . . யூதாவின் நகரைக் கட்டி எழுப்ப என்னை அனுப்பும் என்று கூறினேன். (நெகே. 2 : 15)

ஞானி ஒருவர், தன் நாட்டு மக்களில் எத்தனை பேர் தங்கள் நாட்டைக் குறித்து பாரம் கொண்டுள்ளார்கள் என்பதை அறிய விரும்பினார். நகரம் ஒன்றில் நுழைந்த அவர் ஒருவர் துக்கத்துடன் இருப்பதைப் பார்த்து, ஏன் இவ்வளவு துக்கம் நாட்டின் இக்கால நிலையை நினைத்து வருத்தமோ? என வினவினார். நாடு எப்படிப் போனால் எனக்கென்ன நான் என் வியாபாரத்தில் நினைத்த இலாபம் இன்று என்னால் ஈட்ட முடியவில்லை அதனால் வருத்தம் என்றார். துக்கமுகமான ஞானி, மறுபடியும் தன் பயணத்தைத் தொடர்ந்தார் வரும் வழியில் டீ கடையில் சோகமாக சிலர் உட்கார்ந்து செய்தித் தாளைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள். ஏதோ, செய்திகளைப்பார்த்துப் பாரம் கொள்ளுகிறார்கள் என்று நினைத்து ஆவலாகக் கேட்டார். ஏன் அனைவரும் சோகமாக இருக்கிறீர்கள்? நாட்டின் அவல நிலைகளை எண்ணி வருத்தமா? நாடு எப்படிப் போனால் எங்களுக்கு என்ன? நாங்கள் படித்து, மகிழ்ந்து, அசைபோட விறுவிறுப்பான செய்திகள் இன்று கிடைக்கவில்லையே என்று தான் வருந்துகிறோம் என்றார்கள். சோகத்தின் உச்சிக்குச் சென்ற ஞானி, வரும் வழியில் பாரத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு கூட்டம் சபை மக்களைக் கவனித்தார். நாட்டைக் குறித்த பாரமான வார்த்தைகள் ஏதும் தன் காதில் விழுமா? என ஏக்கம் கொண்டார் . . . ஆனால் இங்கும் ஞானிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எங்களை ஆசீர்வதியும்! எங்கள் சந்ததியை ஆசீர்வதியும்! என்ற ஓங்கிய ஆசீர்வாதத்தின் வார்த்தைகளே அவர் காதுகளில் விழுந்தது. மிகுந்த ஏமாற்றத்துடனும், பாரத்துடனும் தன் இல்லம் புறப்பட்டார் ஞானி.

சுயநலம் கடந்த பொதுநலமே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாக இருந்தது. எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்து, பகிர்ந்துண்டே வாழ்ந்தது முதலாம் நூற்றாண்டு திருச்சபை. இன்று கிறிஸ்தவ வாழ்வு சுயநலம் சார்ந்து பயணிக்கும் வாழ்வாகவே மாறிவிட்டது. இந்த மனப்போங்கில் நாட்டுக் கட்டுமானத்தில் பங்கேற்கும் அர்ப்பண வாழ்வுக்கான ஒப்படைப்புக்கு இடமேது என்ற நிலையே இன்று காணக்கிடக்கின்றது. இன்று இறைவார்த்தை நாட்டுக் கட்டுமானத்தில் பங்கேற்க நமக்கு அழைப்பு விடுகின்றது. இந்த அழைப்பைத் தரப்பட்டிருக்கும் மூன்று திருமறைப் பகுதிகளின் வழியாக சிந்திக்க முயல்வோம்.

**1. சுகங்களை விட்டு சுமைகளை ஏற்கும் மனம் :** நெகே. 2 : 17

. . . இனியும் நமக்குச் சிறுமை வராதபடி எருசலேமின் மதில்களைக் கட்டி எழுப்புவோம் வாருங்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் பெற்றுக்கொண்ட அடிமைதனவாழ்வில், பாபிலோனின் 70 ஆண்டுகால அடிமை வாழ்வும் முக்கியமானது. நேபுகாத்நேச்சார் மன்னரால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் 70 ஆண்டுகளுக்கு பின் பெர்சியா ராஜாவாகிய கோரேஸ்-ன் விடுதலை அறிவிப்பினாலும், சமய சுதந்தரத்தினாலும் ஆறுதல் அடைந்தார்கள். வலுவிழந்து, கலையிழந்து போன தங்கள் தேசத்தைக் கட்ட தலைவர்கள் முயன்றார்கள். (2 குறிப். 36 : 17-21). இத்தலைவர்களில் சூசான் அரண்மனையில், மன்னர் அர்த்சஷ்டா-விற்குப் பானம் பரிமாறுகிறவராக பணியாற்றிய நெகேமியாவும் ஒருவர். தன்னுடைய சொந்த தேசத்தின் நிலையைத் தன் சகோதரரில் ஒருவராகிய ஆனான்-யின் வழியாக விசாரித்து அறிகின்றார். யூத தேசத்தின் அவல நிலையை அறிந்த நெகேமியா பாரம் கொண்டார் (நெகே.1 :4). தன் நாட்டிற்காகச் செயல்படவேண்டும் என்று முடிவெடுத்தார். ராஜாவிடம் மன்றாடி நாட்டிற்குத் திரும்பி உருக்குலைந்திருந்த பட்டணத்தையும், அதின் அலங்கத்தையும் கட்ட முயன்றார். சவால்களின் நடுவில் நடைபெற்ற அப்பணியை 54 நாட்களில் நிறைவேற்றவும் செய்தார்.

நெகேமியாவின் செயல்கள் நாட்டுக் கட்டுமானத்தில் நம் பங்களிப்பிற்கான பாடத்தைக் கற்றுத் தருகின்றது. தன் தேசத்தைக் குறித்து விசாரித்து அறிந்ததோடு நின்றுவிடாமல், மிகுந்த பாரத்தோடு ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும் என முடிவு செய்தார். அதன்

எதிரொலியாக அரண்மனையில் இருந்த தன் உயர்வான பணியையும், அதன் வழி கிடைக்கும் எல்லா சுகங்களையும்,அனுகூலங்களையும் தியாகம் செய்து, தன் நாட்டிற்கென்று பணிசெய்யும் பாரமான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கோரேஸ் மன்னரின் விடுதலை அறிவிப்புக்குப் பின் அநேக ஆண்டுகள் கழித்தும் கண்டு கொள்ளப்படாமலும் விடப்பட்டிருந்த அரங்கம் கட்டும் பணியைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டார். அதில் வெற்றியும் கண்டார்.

இன்று நம் சுகங்களையே பலநேரங்களில் எண்ணி ஓடும் நமக்குள் நம் நாட்டைக் குறித்த பாரமும் வேண்டும். நான் என்ன செய்ய முடியும்? என சிந்தனை செய்து, நம் பங்களிப்பைக் கொடுக்க முன் வருவதும் அவசியமானது.

## 2. துர்க்குணத்தை விட்டு – நற்குணத்தோடு செயல்படும் மனம்:

1 பேதுரு 2 : 16 "நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள்; விடுதலை என்னும் போர்வையால் தீமை செய்யாதீர்கள்; கடவுளுக்கே அடிமைகளாயிருங்கள் . . ."

இத்திருமுகத்தை எழுதிய திருத்தூதுவரான பேதுரு, கிறிஸ்தவ வாழ்வின் கடமைகளை அதிகமாய் வலியுறுத்துகின்றார். இக்குறிப்பிட்ட வேதப்பகுதியில் (1 பேதுரு 2 : 13-17) வேறுபட்ட இனமக்களும் வாழும் சமூகத்தில், கிறிஸ்தவர்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து எழுதுகின்றார். 1 பேதுரு 2 : 17-ல் ஒவ்வொரு கிறிஸ்தவரும் பின்பற்ற வேண்டிய பண்பை அழுத்தமாகப தெரியப்படுத்துகின்றார். "எல்லாருக்கும் மதிப்பு கொடுங்கள்; சகோதரர், சகோதரிகளிடம் அன்பு செலுத்துங்கள்; கடவுளுக்கு அஞ்சுங்கள்; அரசருக்கு மதிப்பு கொடுங்கள் . . ."

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மக்கள் வாழும் சமுகத்தில் வாழும்போது, கிறிஸ்தவ வாழ்வுக்குரிய நற்சான்றோடு வாழுங்கள் என்பதே திருத்தூதுவர் பேதுரு சொல்லும் அறிவுரை. இத்திருமுகம் (1 பேதுரு) எச்சூழலில் எழுதப்பட்டது என அறிவதில் குழப்பங்கள் இறையியலாளரிடம் இருந்தாலும், துன்புறுத்தப்பட்ட காலத்திலும், சோதனைக் காலத்திலும் கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தவும், நற்சான்று பகர ஊக்கப்படுத்தவும் எழுதப்பட்டது என சில விளக்க உரையாளர்கள் கூறுகின்றார்கள். இப்பின்புலமும், அது தொடர்பான ஆலோசனைகளும், இன்று நாம் வாழும் சூழலுக்கும் பொருத்தமானது. நம் தேசம், பல

சவால்களையும், துன்புறுத்தலையும் சிறுபான்மையினருக்குக் கொடுக்கின்றது. பல சுதந்தரங்கள், உரிமைகள் பறிக்கப்படும் சூழல் நிலவுகின்றது. அந்நிய மக்கள் நிறைந்திருக்கின்ற இடங்களில் தான், நாமும், நம் திருச்சபையும் நாட்டப்பட்டிருக்கின்றோம். இச்சூழ்நிலையிலும் பேதுரு நம்மை நற்சான்றோடு வாழவே ஊக்கப்படுத்துகின்றார்.துர்க்குணத்தை வெளிப்படுத்துவது இயேசுவைச் சொந்தமாகக் கொண்டிருப்பவர்களுக்கு அழகு அல்ல. அது தேசத்தின் ஒருமைப்பாட்டை அழித்து, அமைதியின்மையை உருவாக்கும் எனப் புரிந்து நற்குணங்களை வெளிப்படுத்தி நாட்டுக் கட்டுமானத்திற்கு நம் பங்களிப்பைத் தருவோம்.

முனிவர் ஒருவர் நீர்நிலையில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த தேள் ஒன்றைக் கரங்களில் பிடித்துத் தூக்கி வெளியே விட முயன்றார். ஆனால் தேள் அவரைக் கடித்தது. வலியில் தாங்கமால் தண்ணிரில் போட்டார். அதைக் காப்பாற்ற மறுபடியும் ஒருமுறை கரங்களில் எடுத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் முனிவரை ஏளனம் செய்தார். உனக்கு அறிவு இருக்கிறதா என்று வினவினார். முனிவர் சாந்தமாக பதில் தந்தார். வலியைத் தருவது தேளின் குணம். அதைக் காப்பாற்ற நினைப்பது என் குணம். என் நல்லெண்ணத்தை எந்த நிலையிலும் எதற்காகவும் நான் தியாகம் செய்யமாட்டேன் என்றார். கிறிஸ்தவ வாழ்வின் அணுகுமுறையும் இதுவே . . . நற்சான்றை எச்சூழலிலும் விட்டுவிடாமல் இறைவனுக்குச் சான்று பகரவேண்டும்.

### 3. கடமைகளை கண்ணியமாய் செய்யும் மனம் :

லூக்கா 3 : 10 “நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று? கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர் . . .”

ஆண்டவருக்கு வழியை ஆயத்தப்படுத்தவும், எச்சரிப்பின் வார்த்தைகளைப் பறைசாற்றவும் பயன்படுத்தப்பட்டவர் முழுக்கு முனிவர் யோவான். இவர் திருமுழுக்குக் கொடுக்கும்போது, மனம் மாறியவர்கள் என்பதை நீங்கள் செயல்களில் காட்டுங்கள் என்பதை அதிகமாய்த் தன் போதனையில் அழுத்தப்படுத்தினார். ஏனெனில் உண்மையான மனம் மாறுதல் இல்லாமல் பலரும் அவரிடம் திருமுழுக்குப் பெற நெருங்கினார்கள். இவர்கள் கடினமான வார்த்தைகளின் வழியாக ஆலோசனை பெறுகிறார்கள் (லூக்கா 3 : 7

விரியன் பாம்புக் குட்டிகளே) நாங்கள் என்ன செய்ய வேண்டுமென கேட்ட அவர்கள் தங்கள் கடமைகளை கண்ணியமாய் செய்ய வலியுறுத்துகின்றார். லூக்கா 3 : 11-14 இவ்வேத வசனங்கள் மூன்று தரப்பட்ட மக்களுக்கு ஆலோசனை வழங்குகின்றது. முதலாவது பொதுவான மக்கள் கூட்டம் (crowd) இவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து வாழ அறிவுறுத்துதல் தரப்படுகின்றது (லூக். 3 : 11), இரண்டாவது வரி தண்டுவோர் இவர்களுக்கு, அதிகமாய் வாங்கக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது (லூக். 3 : 13). மூன்றாவது படைவீரர்கள், இவர்களுக்கு . . . அறியாயமாய்ப் பணம் சம்பாதிப்பதும், கையூட்டு பெறுவதும் தவறு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது (லூக். 3 : 14). ரோமர்களின் ஆட்சி காலத்தில் அவர்களின் அரசாங்கத்தில் பணியாற்றியவர்களுக்குள் பெருமை மட்டுமல்ல, அதிகாரமும் தரப்பட்டிருந்தது. எனவே ரோம அரசின் அதிகாரிகளிலும் நேர்மையற்ற தன்மையே காணக்கிடந்தது. இச்சூழ்நிலையிலேயே நல்ல சமூக அமைப்பிற்கான நீதிநெறியாக (Ethics) யோவான் இவ்வாலோசனைகளை வழங்குகின்றார்.

இன்று, நாம் வாழும் சமூக கட்டமைப்பிலும், சமூக நீதிக்கான தேட்டம் தொடர்கின்றது. நீதி நேர்மையற்ற சமுதாயமாகவே நாம் வாழும் சமூகமும், அதன் மக்களும் செயல்படுகின்றார்கள். இதில் கிறிஸ்தவர்களும் விதி விலக்கானவர்கள் அல்ல. அமெரிக்க அதிபர் Joe Biden ஊழலைக் கூறும்போது, “Corruption is a cancer that eats away at a Citizen’s faith in democracy, Diminishes the instinct for innovation and Creativity”. என்று கூறுகிறார். ஊழலைப் புற்றுநோயோடு ஒப்பிடும் அவர் அது ஒரு மனிதன் தன் நாட்டின் ஜனநாயத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையே அழித்துவிடுவது மட்டுமல்ல. தொடர்ந்து முயற்சியோடு செயல்படுவதைத் தடுத்துவிடும் என்கின்றார். இன்று பொறுப்புகளில் இருப்பவர்கள் தங்கள் கடமைகளைக் கண்ணியமாய்ச் செய்வதில் கவனம் செலுத்துவது அவசியமானது. அதுவே நாட்டின் வளர்ச்சிக்கும், நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமையும். இப்பின்புலத்தோடு, கிறிஸ்தவத் தலைவர்களும் தங்களை அலசிப் பார்ப்பதும், பொறுப்புகளைக் கண்ணியமாகச் செய்கிறேனா எனக் கேள்வி எழுப்பிப்பார்ப்பதும் அவசியம். பொறுப்புகளை உண்மையுடன் நிறைவேற்றும் மனம், நாட்டுக் கட்டுமானத்தில் நம் பங்களிப்பைத் தரும் நிலை என்பதைத் புரிந்து செயல்படுதல் அவசியம்.

இன்று நம் நாட்டின் குடியரசு தினத்தைக் கொண்டாடி மகிழும்போது, நமக்காகத் தரப்பட்ட நாட்டின் சட்டங்களை நினைவு கூருவோம். திருமறையின் சட்டங்களோடு, நாட்டின்; சட்டத்திட்டங்களையும் நம் நேர்த்தியான அர்ப்பணமுளள வாழ்வுக்கு, நேராக பயன்படுத்துவோம். நாட்டுக் கட்டுமானத்தில் தொடர்ந்து இறைவன் தரும் தரிசனங்களோடு நம்மை இணைப்போம்! செயல்படுவோம்!

திரு. N.P. **அலக்ஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 16 | ஞா. | 466 |
| | கீர். | 131 | கீர். | 407 |

**29-01-2023**

திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும்
நான்காம் ஞாயிறு

# உண்மையான பக்தி

## True piety

மீகா 6 : 1-8 யாக். 1 : 19-27

தி.பா. 42 மத். 6 : 1-8



“தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு; . . . உலகத்தால் கறைபடாதபடி தம்மைக் காத்துக்கொள்வதும் ஆகும்.” (யாக். 1 : 27)

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, இஸ்ரவேல் மக்கள் மோசேயின் மூலமாக கடவுளுடைய நீதி நியாயங்களையும், உயர்ந்த வாழ்க்கை நெறிகளையும் பெற்றார்கள். ஆனால், அவைகளின் மூலமாக தங்கள் வாழ்க்கையைக் கடவுளுக்குப் பிரியமுடையதாக மாற்றுவதற்கு அவர்கள் பிரயாசப்படவில்லை. அதற்குப் பதிலாக, அவைகளைப் பெற்றுக்கொண்ட பெருமையில், தாங்கள்மட்டுமே கடவுளுடைய பிள்ளைகள் என்று மேன்மை பாராட்டினார்கள். இன்று இதேபோன்ற ஒரு மாய்மாலம் எங்கும் பரவி உள்ளது. தங்களை மேன்மை மிகுந்தவர்களாக பெருமை பாராட்டிக் கொண்டு, உண்மையான அன்புசார்ந்த, சரியான பரிசுத்த வாழ்க்கையை வாழாத மாய்மாலம் தான் அது.

அருமையானவர்களே, நாம் வாழும் இந்த உலக வாழ்வு ஆண்டவரால் நமக்குத் தரப்பட்டிருக்கும் அருட்கொடையாகும். நாம் நமக்காகப் படைக்கப்படாமல், ஆண்டவருக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றோம். அதனால், நம்முடைய நோக்கங்களை முன்னிறுத்தி வாழாமல், ஆண்டவருடைய நோக்கங்களுக்காக வாழ்வது தான் உண்மையான பக்தி வாழ்வாகும். எனக்கு ஆண்டவர் என்ன செய்வார் என்று எதிர்பார்க்காமல், ஆண்டவருக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நாம் தேவசாயலை நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுத்தவேண்டும். அவருடைய மகிமையை நாம் வாழும் வாழ்க்கை முறைகளால் மற்றவர்கள் பார்க்கவேண்டும். அதுவே உண்மை பக்தியாகும். இந்தச்

சிந்தனைகளை மனதில் கொண்டு, உண்மையான பக்தியை வெளிப்படுத்தும் மூன்று காரியங்களை ஆராய்வோம்.

**1. தாழ்மையாய் நடக்கவேண்டும்**

மீகா 6 : 8, மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் என்று சொல்கின்றது.

தாழ்மை என்பது ஆண்டவரால் வரும் உயர்வுகளுக்கு நம்மைக் கொண்டுச் செல்லும் ஏணியாகும். ஆவிக்குரிய நிலையில், தாழ்மை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, ஒருவர் தன்னுடைய ஆன்மீக நிலைக்காக அல்லது ஆண்டவர் மேல் கொண்ட பற்றுக்காகத் தானே முன் வந்து உருவாக்கிக் கொள்ளும் தாழ்மை. இன்னொன்று, ஆண்டவர் ஒருவரைப் பலவித சோதனைகளில் நடத்தி, அனுபவங்கள் மூலமாக ஒருவருக்குள் ஏற்படச் செய்கின்ற தாழ்மை.

முதல் வகை தாழ்மையை ஒரு மனிதன் மாறுகின்ற சூழ்நிலைகளில் விட்டுவிடும் தருணங்கள் வருவதுண்டு. ஆனால், இரண்டாம் வகைத் தாழ்மை, ஒரு மனிதனின் இரத்த ஓட்டத்தில் கலந்து இயல்பாகிவிடுகிறது. ஆண்டவர் நம்மை இரண்டாவது வகைத் தாழ்மைக்கு நேராகத்தான் நடத்துகிறார் என்பதுதான் உண்மையாகும். அவர் நம்மை உயர்த்த விரும்புகிறாரென்றால், முதலில் நாம் தாழ்ந்துப் போகத்தக்க சூழ்நிலைகளை அவர் அனுமதிக்கின்றார். அங்கே நாம் உண்மையிலேயே ஒரு தாழ்வான பலவீன நிலையில் இருப்பதை அறியச் செய்கின்றார். நாம் ஆண்டவரைத் தேடி அவரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு தேவை நிலையில் இருப்பதை நாம் உணர்ந்துக் கொள்ளச் செய்கின்றார்.

தாவீது ஆரம்பத்திலிருந்தே இறைப்பற்றின் விளைவாகத் தாழ்மையாக வாழ்ந்து வந்தவர்தான். கோலியாத்தோடு பேசும்போது கூட, அவர் கடவுளை உயர்த்தி, தன்னைத் தாழ்த்தினார். சவுல் ராஜா தன் மகளை அவருக்குக் கொடுக்க முன்வந்தபோது கூட, அவர் தாழ்மையுணர்வின் விளைவாக, தான் அதற்கு தகுதியானவன் அல்ல என்றே கூறினார். இருந்தாலும் கடவுள் அவரைப் பலவித சோதனையான பாதைகளில் நடத்தி, அவருக்குள் இயல்பான தாழ்மையுணர்வு ஏற்படும்படி செயல்பட்டார். இயற்கையாகவே ஆற்றல்கள் பல

பெற்றிருந்த தாவீது, சூழ்நிலைகள் மூலமாகவும் கடவுள் அவருக்குள் உருவாக்கிய தாழ்மை உணர்வின் வாயிலாகவும் தான் கடைசி வரை கடவுளின் கிருபையைச் சார்ந்து நிற்கும்படி அவரை வழி நடத்தியது.

ஒரு நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் எடுத்தார்கள். அது தொடர்பான நேர்காணலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், திறமையில் குறைந்தவர்கள். ஆனால் அவர்களிடம் காணப்பட்ட தாழ்மைப் பண்பு முக்கியத் தகுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர்களைவிட திறமை படைத்தவர்கள் நிராகரிக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி எழுந்தது. அதற்குக் கொடுக்கப்பட்ட பதில், நல்ல தாழ்மை உள்ளவர்களை எங்களால் திறன் படைத்தவர்களாக மாற்றமுடியும். திறமை மட்டுமே உள்ளவர்களைப் பணிவுடையவர்களாக/தாழ்மையுள்ளவர்களாக மாற்றுவது எங்களால் கூடாத காரியம் என்பதாகும்.

உயர்வுகளை அடைவதற்கு வெறும் திறமை மட்டும் போதாது. மனத்தாழ்மையும், பிறரை மதிக்கின்ற பண்பும் மிகவும் அவசியமாகும். இக்காலங்களில் நல்ல திறமையும், ஆற்றலும், புத்தி கூர்மையும் உடையவர்கள், மற்றவர்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும் தங்களுக்கு அவசியமில்லை என்று எண்ணுகின்ற நிலைதான் எங்கும் காணப்படுகின்றது.

கடவுளுக்கு முன்பாக நின்று நம்முடைய பக்தியின் விளைவாக நம்மை அற்பமாகவும் தூசியாகவும் எண்ணுவதல்ல. மனிதர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவும், மனிதர்களுக்கு மனதார மரியாதையும் கொடுக்கமுடிகிறதா என்பதே முக்கியம். மனிதர்களை மதிப்பதற்குத் தேவையான வலிமையான இருதயத்தை ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். மனிதர்களுக்கு முன்பாக நாம் தாழ்வாக எண்ணப்படுவதைப் பொறுத்துக் கொள்ளும் இதய ஆற்றலையும் ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான பக்தி.

### 2. வசனத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்

யாக்கோபு 1 :21-ல், ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கிராமத்தில் வாழ்ந்த துறவி ஒருவர், ஜனங்களுடைய வாழ்க்கை சீர்படும் விதமாக மிக நல்ல அறிவுரைகளை வழங்கி வந்தார். அவர் ஜனங்களை விட்டுவிலகி மிகவும் தூரமான இடத்தில் வாழ்ந்தப் படியினால், அவ்வளவு தூரம் எப்படிப் போய் வரமுடியும் என்று, பலர் அவரிடம் செல்வதில்லை. ஒருநாள், அந்த கிராமத்துத் துறவி, தன்னிடம் அறிவுரை கேட்க வருகின்றவர்களுக்குத் தங்கக் காசுகள் கொடுக்கின்றார் என்ற செய்தி ஊர் முழுக்க பரவியது. அந்தச் செய்தி பரவியதும், மிகவும் தூரமான இடங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் அங்கே வந்து குவிந்தார்கள்.

ஜனங்கள் எதிர்பார்த்தபடி அந்தத் துறவி தங்கக்காசு எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய அறிவுரைகள் தங்கத்தை விடப் பல மடங்கு விலையேறப் பெற்றவை. நான் தங்கக்காசு தந்தாலும் அதனால் நீங்கள் நன்றாயிருக்கப் போவதில்லை. ஆனால் என் உபதேசங்களைக் கேட்டு நடந்தால், நீங்கள் நன்றாயிருப்பீர்கள் என்றார்.

தேவனுடைய வார்த்தைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கது என்று திருமறை சொல்கிறது. ஏனென்றால், தங்கத்தை மிகுதியாய் வாங்கிக் குவிக்க முடிந்த சாலொமோன் ராஜாவை விட, தேவனுடைய வார்த்தைகளை அதிகமாக விரும்பிய தாவீதுதான் நல்ல ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, அதிக மகிழ்ச்சியைக் கண்டடைந்தான். அதனால்தான் அப். யாக்கோபுவும் கூட, நீங்கள் எல்லாவித அழுக்கையும்,கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுச் சொன்னார்.

இன்று பலருக்கு இறைவார்த்தைகள், கர்த்தருடைய இறை ஆலோசனைகள் கேட்டு தியானிப்பதால் ஆத்துமாவில் ஆவிக்குரிய பலம் வரும். மனதில் தெளிவு வரும். வாழ்க்கையில் நம்பிக்கை வரும். இருதயத்தில் நல்ல குணங்கள் தோன்றும். குழப்பமான சூழ்நிலைகளில் நல்ல வழிகாட்டுதல்கள் வரும். இவைகளையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு, மூளையறிவை மட்டுமே வளப்படுத்திக் கொண்டிருந்தால் அதனால் அதிக பலன் இல்லை.

கல்வியறிவு மூளைத்திறனை உருவாக்கும். இறை அறிவுதான் இருதயத்திற்குப் பக்குவத்தையும், பலத்தையும், பண்பையும் தரும்.

அதைக்கொண்டுதான் நாம் ஒரு நலமான வாழ்வைக் காணமுடியும். அதுவே உண்மை பக்திக்கு ஆதாரமாயும் இருக்கும்.

### 3. அந்தரங்கத்தில் ஜெபிக்க வேண்டும்

மத்தேயு 6 : 6-ல், “நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார்” என்று நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கின்றார்.

ஆரம்பக் காலங்களில் இருந்தே, யூதர்களைப் போலவே கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் கடவுள் மீது தாங்கள் கொண்டுள்ள பக்தியை, வைராக்கியத்தை வெளிப்படையாக பிறர் காணும் வண்ணமாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். ஒருவருடைய ஜெபம், உபவாசம், தருமம் செய்தல், காணிக்கை கொடுத்தல் போன்றவைகளெல்லாம் அவருடைய பக்தியை விளக்குவதாக அமைந்து விடுகின்றது. ஆனால் இப்படிப்பட்டவர்களை இயேசு கிறிஸ்து அஞ்ஞானியரென்றும், மாயக்காரரென்றும் வர்ணிக்கின்றார். ஆமோஸ் 5 : 21, 22 வசனங்களிலும், உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. உங்கள் தகனபலிகளையும் போஜன பலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன் என்று கடவுள் சொல்லியிருக்கின்றார்.

தனி மனித மற்றும் சமுதாய ஆன்மீக வாழ்வில் இவைகள் மிகவும் முக்கியமானவைகளானதால், நம்முடைய ஆண்டவர் தம்முடைய திருப்பணியின் ஆரம்பத்திலேயே இவைகளைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்தார் (மத்தேயு 6 : 1-12). ஆண்டவருடைய பிள்ளைகளாக, அவருடைய அடியவர்களாக நம்முடைய ஆன்மீக வாழ்வு, பாவிகள், அஞ்ஞானிகள், மாயக்காரர், பரிசேயர்களைப் போன்றவர்களைவிடவும் சிறப்பானதாகவும், மேலானதாகவும் இருக்கவேண்டும் என்பதுதான் ஆண்டவருடைய எதிர்ப்பார்ப்பு. குறிப்பாக, ஜெபம் பண்ணும்போது, மனிதர் காணவும், மனிதரால் புகழப்படவும் ஜெப ஆயலங்களிலும், வீதிகளிலும் நின்று ஜெபிக்கக்கூடாது. வீண் வார்த்தைகளினாலும், அதிக வசனிப்பினாலும் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் வெறும் அலப்புதல் என்கிறார் ஆண்டவர். அதற்குப் பதிலாக, நாம் ஜெபிக்கும்போதும்,

உபவாசிக்கும்போதும், அறைக்குள் சென்று பூட்டிக்கொண்டு, மற்றவர்கள் பார்க்காதபடி அந்தரங்கத்தில் பார்க்கிற மற்றும் நம் உள்ளத்தை அறிந்திருக்கிற தந்தையாகிய கடவுளை நோக்கி ஜெபிக்கவேண்டும் என்று சொல்கின்றார்.

நாம் அந்தரங்கத்தில் ஜெபிக்கும் ஜெபம், ஆண்டவரோடு நாம் ஐக்கியப்படுகின்ற, அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. தேவபிரசன்னத்தை உள்ளத்திற்குள் கொண்டு வருகின்றது. தேவ வெளிச்சத்தை இருதயத்தில் அதிகமாக வீசுகின்றது. அதனால் இருதயத்தில் இலகுவான உணர்வு ஏற்படுகின்றது. தேவ சமாதானத்தினால் மன அழுத்தங்களும், மனக்குழப்பங்களும் மறைகின்றன. தேவ ஐக்கியத்தை உணர ஜெபம் உதவி செய்வதால் கோபம், எரிச்சல், கசப்பு, வெறுப்பு போன்றவை கரைந்து போகின்றன. அதன் விளைவாக மனம் ஆரோக்கியம் அடைகின்றது. உண்மையான பக்திக்கும் அடையாளமாக மாறுகின்றது.

உண்மையான பக்தியை வெளிப்படுத்தும் மூன்று காரியங்களாக தாழ்மையாய் நடக்க வேண்டும், வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், அந்தரங்கத்தில் ஜெபிக்க வேண்டும் என்று சிந்தித்த வண்ணமாக, இவைகளை வாழ்க்கையில் செயல்படுத்தி, உண்மையான பக்தியை வெளிப்படுத்தி, உண்மையான பக்திக்குச் சான்றுகளாக இந்த உலகத்தில் வாழ்வோம். ஆமென்.

அருள்திரு. R. **ரஞ்சித் சுதிர்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 18 | ஞா. | 293 |
| | கீர். | 385 | கீர். | 338 |

**02-02-2023**

# கிறிஸ்துவைத் திருமுன்னிலைப் படுத்துதல்

## The Presentation of Christ

(திருக்கோவிலில் நம் ஆண்டவரின் நுழைவு)

**(Entry of Our Lord in Temple)**

| | |
|---|---|
| 1 சாமு. 1 : 19-28 | உரோ. 11 : 33-12 : 2 |
| தி.பா. 118 : 19-29 | லூக். 2 : 22-40 |



"குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது." (லூக். 2 : 40)

மோசேயின் சட்டப்படி பிறந்த முதல் குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். முதலில் பிறந்த குழந்தை தன் தகப்பனின் தலைமகன் (சேஷ்டபுத்திரன்) ஆற்றல் உள்ளவன், மாண்பிலும், வலிமையிலும் முதன்மையானது. (தொ.நூ. 49 : 3, இச. 21 : 17). எகிப்துக்கு அனுப்பப்பட்ட பத்து (வாதைகளில்) கொள்ளை நோயில் பத்தாவது கொள்ளை நோய் தலைப்பிள்ளை சங்காரமாகும். இதில் இஸ்ரவேலின் முதற்பேறானவைகள் அனைத்தையும் கர்த்தர் பாதுகாத்தார். இதின் நினைவாக முதற்பலனாக ஆண்டவரால் கொடுக்கப்பட்ட ஆண் குழந்தை எல்லாம் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். (விப. 13:15, 22:29, 34:20, 19; எண். 3:12,13,41,42; எண். 8:17,18; 18:15; லூக். 2:23) இந்த உடன்படிக்கையில் உறவில் முதற்பேறான வழி தோன்றல்களும் இணையாக உள்ளனர். ஏனெனல் இஸ்ரவேல் கடவுளின் மகன், கடவுளின் தலைப்பிள்ளை (விப. 4:22,23) குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருக்கிறார்கள் (விப. 19 : 6). தலைப்பிள்ளைகள் யாவும் ஒரு மாதத்தில் மீட்கப்பட்டு கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். (எண். 18:16). இந்த ஒப்படைப்பு தலைமகனைப் பெற்ற தாயின் தூய்மையடையும் காலகெடுவிற்கு பின்னர் நடைபெறும் (லேவி:12). இவ்வாறு இயேசுவின் பெற்றோரும் அவர்களின் தலைமகனை ஆலயத்திற்குச் சென்று ஆண்டவரிடம் ஒப்படைத்தனர். நீதியும், தேவபக்திமானுமாகியும், இஸ்ரவேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்தவராயும், தூய ஆவியால் நிறையப்பட்டவருமாய்

இருந்த சிமியோன் இயேசுவைத் தன் கையில் ஏந்தி ஆசீர்வதித்தார். அன்னாள் என்ற இறைவாக்கினரும் இயேசுவைக் குறித்துக் கடவுளை புகழ்ந்தார். லூக். 2:25-38, இயேசுவானவர் பிதாவின் சுதனாக இருந்தபோதும் உலகப் பெற்றோர் அவரை ஆலயத்தில் முறைமைகளின்படி ஒழுங்காய் தலைமகனான இயேசுவைக் கடவுளிடம் மீண்டும் கடவுளுக்காய் ஒப்படைத்தனர்.

இயேசுவானவர் விசேஷமான குழந்தையாய்ப் பிறந்த பின்னும் உலகத்தின் பெற்றோரான யோசேப்பும், மரியாளும் கர்த்தர் கொடுத்த ஈவைக் கர்த்தருக்காய்க் கொடுத்தனர். கடவுளுக்காய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்ட குழந்தையாய் இயேசுவின் வளர்ச்சியை லூக்கா நற்செய்தியாளர் பதிவு செய்யும் போது லூக். 2:52 இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். பேறுபெற்ற குழந்தையாய் இருந்த இயேசுவைப் பெற்றோர்தங்களுக்குரியது எனச் சொந்தம் கொண்டாடாமல் இவர் கடவுளுக்குரியவர் என ஒப்புக்கொடுத்தனர். நாமும் அந்நிலையிலே கடவுளுக்குச் சொந்தமான நம்மை கடவுளுக்கு முழுவதுமாக ஒப்படைப்பது சிறப்பு நிறைந்த செயல் ஆகும்.

(i) **திருநிலைப்படுத்தப்பட்ட சாமுவேல் :** (1சாமு. 1:19-28)

எல்கானாவிற்கும் அன்னாளுக்கும் சாமுவேல் வெகு காலத்திற்குப் பின்னர் பிறந்த குழந்தை. கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட குழந்தை. ஆகவே, குழந்தை சாமுவேல் தன் பெற்றோருக்குச் சொந்தமானவனாக இருந்தாலும் அவன் கர்த்தரால் கொடுக்கப்பட்டவன் என்பதை அன்னாள் தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறாள். அன்னாளின் ஜெபம் 1 சாமு. 2 : 1-10 இதற்கான முன் உதாரணமாய் அமைகின்றது. நாம் பிரயாசப்பட்டாலும் காரியத்தைப் பயனுள்ளதாக மாற்றுவது கர்த்தர். காரியத்தை ஜெயமாக்கிய கர்த்தருக்குச் சாமுவேலை அன்னாள் எல்க்கானாவின் முழு விருப்பத்தோடு கர்த்தருடைய சன்னிதியில் கொண்டு போய் விட்டாள். நம்மிலும் ஆண்டவரின் செயல் பல நிலைகளில் செயல்படுகின்றதாய் அமைகின்றது. ஆண்டவர் நம்மில் ஏற்படுத்திய நலமான செயல்களை முழுவிருப்பத்தோடு நம்மால் ஆண்டவருக்குக் கொடுக்க இயலுமா என்பதைச் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

(ii) **திருமுன்னிலைப்படுத்தபட்ட இயேசு :** (லூக். 2:22-40)

யோசேப்பு, மரியாளின் மகனான இயேசு பிதாவின் மகனாக இருந்த பின்பும் பெற்றோரின் நேர்த்தியான செயல், இயேசுவின் வாழ்வில் முழு ஆசீர்வாதத்திற்கும் காரணமாய் அமைந்தது. இயேசு திருமுன்னிலைப் படுத்தபட்டதினால் பிள்ளை வளர்ந்தது, வலிமை பெற்றது, ஞானத்தால் நிறைந்தது, கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது. (லூக். 2 : 40) வாழ்வில் தேவையான, முழுமையான வளர்ச்சியை நாம் காண முடியும். இயேசுவானவர் உடல், உளம், ஆன்மிக நிலையில் வளர்ந்தார். மேலும் லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடும்போது இயேசுவானவர் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்தவரானார். கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராக வாழ்ந்து வந்தார். லூக். 2 : 52. நம்மையும் முழுமையாக ஆண்டவருக்காக, சரணடைய செய்யும்போது, இவ்விதமான நன்மையை நம்மால் பெற்றுக்கொள்ள இயலும். தற்கால சமூகம் இச்செயலுக்கு எதிர்மறையாய் செயல்படுகின்றது. திபா. 118:8,9 வசனங்கள் நம்மை உணர்வடைய செய்கின்றது. மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சமடைவது நலம்! உயர்குடியினர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவது நலம்! கடவுளிடம் நம்மை முழுமையாகச் சரணடைய செய்வோம். இயேசுவில் காணப்பட்ட நலமான வாழ்வு நம்மையும் தொடரும்.

(iii) **வழிபாட்டில் நம்மை திருமுன்னிலைப்படுத்துதல் :**

(உரோ. 11:33-12:2)

வழிபாடு நம்மை ஆண்டவரிடம் சரணடைய செய்கின்ற ஒரு சிறந்த முறையாகும். எப்படி நம்மைக் கடவுளிடம் சரணடைய செய்வது என்பதற்கு உரோமையர் 12 : 1-ல் காணமுடியும். கடவுளுக்கு உகந்ததாய், கடவுளுக்கு முன் தூய்மையாய், கடவுளுக்கு உயிருள்ள பலியாய் நம்மை ஒப்படைப்பது ஆகும். இப்படி கடவுளுக்கு ஏற்ற நிலையில் வாழ்வதே உயிருள்ள வழிபாடு, இந்த உயிருள்ள வழிபாட்டினால் நம்மை ஆண்டவரிடம் சரணடையச் செய்கிறோம். கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு நம்மை அடிமையாக்காமல் தூய வாழ்வுக்கு நம்முடைய உறுப்புகளை அடிமையாக்க வேண்டும் (உரோ. 6 : 19).

திருமுன்னிலைப்படுத்தபடுதல் என்பது ஆண்டவருக்கு நம்மையே முழுமையாக ஒப்புக்கொடுப்பது. திருமுன்னிலைப்

படுத்தப்பட்ட சாமுவேல் கர்த்தரின் சமூகத்தில் வளர்ந்து தீர்க்கத்தரிசியாக, இஸ்ரவேலிலே அரசர்களை அபிஷேகம் செய்யும் அதிகாரம் பெற்றவரானார். திருமுன்னிலைப்படுத்தபட்ட இயேசு எல்லா நிலையிலும் விருத்தியடைந்து நம்மையே இரட்சிக்கின்றவராக மாறினார். நம்மையும் கடவுளின் தூய வாழ்வுக்கு ஒத்ததாக வழிபாடுகளின் ஊடாய் திருமுன்னிலைப் படுத்துவோம். நிச்சயம் நம்வாழ்விலும் ஆண்டவர் நலமானவைகளைச் செய்வார்.

அருள்திரு. Y. **மோகன் அருள்தாஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 79 | ஞா. | 455 |
| | கீர். | 120 | கீர். | 117 |

**05-02-2023** உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# ஓய்வுநாள் : படைப்பின் நிறைவு

## Sabbath as the culminationof creation

| | |
|---|---|
| எசா. 65 : 17-25 | எபி. 4 : 2-13 |
| திபா. 8 | மாற். 2 : 23-28 |



"... கடவுள் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்." (எபி. 4 : 4)

உடல் நலமற்றோர் பலர் மருத்துவமனையில் மருத்துவரைப் பார்ப்பதற்கு வரிசை எண் வாங்கி அமர்ந்திருந்தனர் . அன்று மருத்துவர் வர தாமதமாகிவிட்டது. தங்கள் வேலைகளை விட்டு வந்தவர்கள் கொஞ்சம் கோபமடைந்தனர். சீக்கிரம் மருத்துவரைப் பார்த்து விட்டுச்செல்ல வேண்டும் என்று அவசரப்பட்டனர். அந்நிலையில் வலியில் துடித்துக்கொண்டிருந்த வயது முதிர்ந்த அம்மா ஒருவரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். வரிசை எண் அடிப்படையில் செல்லக் காத்துக்கொண்டிருந்த அம்மனிதர் வயது முதிர்ந்த அந்த அம்மா வலியினால் வேதனையுறுவதைக் கண்டு மனமிரங்கி தமக்கு முன் போக அனுமதியளித்தார். ஆனால் அவருக்குப் பின்னால் இருந்த சிலரோ, இப்போது தானே வந்தார்கள். கடைசியில் செல்லட்டும். நாங்கள் தான் முதலில் வந்தோம் என சட்டம் பேசினார்கள். உடனே அம்மனிதர் எழுந்து "எனக்குப் பதிலாக அவர் முன் செல்லட்டும். அவருக்குப் பதிலாக நான் கடைசியில் செல்கிறேன். உங்களுக்கெல்லாம் மனிதாபிமானத்திற்கான விருது வழங்க வேண்டும்" என்று கோபமாகக் கூறிவிட்டு கடைசி இருக்கையில் சென்று அமர்ந்தார். இதைக் கேட்டவர்களில் சிலர் தங்கள் தலை கவிழ்ந்தவர்களாக வெட்கத்துடன் அமர்ந்திருந்தனர்.

இதைப் போன்ற அனுபவங்கள் எங்கும் நிகழ்கின்றன. மனிதனா? விதிமுறையா? என்ற கேள்வியில் விதிமுறை தான் என்ற விடை வரும் போது அவ்விடை நமக்காகக் கூறப்பட்டது என்றால் நாம் மனிதாபிமானத்தைத் தான் எதிர்பார்ப்போம். ஆனால் பிறரைக் குறித்ததாக இருந்தால் விதிமுறையை தான் பிடித்துக்கொண்டிருப்போம்.

இத்தகைய மனநிலையைத் தான் அன்றைய பரிசேயர்கள் பிரதிபலித்தனர். மனிதனுடைய பசி அவர்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. மாறாக ஓய்வுநாள் சட்டம் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது.

மாற். 2 : 23-28-ல் இயேசு கிறிஸ்துவும், சீடர்களும் வயல்வழியே நடந்து சென்றார்கள். அப்போது பசி மிகுதியினால் சீடர்கள் கதிர்களைக் கொய்து உண்ணத் தொடங்கினார்கள். இதைப் பார்த்த பரிசேயர்கள், பாரும் ஓய்வு நாளில் செய்யக்கூடாததை ஏன் இவர்கள் செய்கிறார்கள்? என்று இயேசு கிறிஸ்துவிடம் கேட்டார்கள். சீடர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து உண்டது சட்ட மீறல் என்பதால் பரிசேயர்கள் ஓய்வுநாளில் செய்யக்கூடாததைச் செய்துவிட்டதாக இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் மீது குற்றஞ் சுமத்தினார்கள். இச்சூழலில் ஓய்வுநாள் உணர்த்தும் உண்மைகளை இன்று தியானிப்போம்.

**1. மனிதத்தை மதித்து மக்களைப் பண்படுத்தவே ஓய்வுநாள் :**

மாற்கு 2 : 27 ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது

ஓய்வுநாள் என்பது இஸ்ரவேல் மக்கள் மோசேயால் வழிநடத்தப்பட்ட போது வழங்கப்பட்டது (விப. 35 : 1-3). மோசே கடவுளின் பெயரால் கொடுத்தச்சட்டங்கள் அனைத்தும் இஸ்ரவேல் மக்கள் பண்பட்ட மக்களாக வாழ வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டது. அவர்கள் கடவுளை மறந்து வாழ்ந்த போதும் அதிக வேலைப்பளுவினால் அடித்தட்டு மக்கள் துன்பப்பட்டப்போதும் கடவுளை நினைத்து, செபிப்பதற்காகவும், உழைக்கும் மக்களுக்கு ஓய்வுதரும் விதமாகவும் இந்தச் சட்டங்கள் கொடுக்கப்பட்டன (விப. 20 : 10). ஓய்வுநாள் சட்டம் இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் பல்வேறு மாற்றத்தைக் கொடுத்து கடவுளை வழிபடுவதற்கு உதவியாக இருந்தது.

ஆனால் இந்த ஓய்வுநாள் சட்டங்கள் அனைத்தும் பண்படாத இஸ்ரவேல் மக்களைப் பண்படுத்துவதற்காக ஒரு காலத்தில் தேவைப்பட்டாலும் இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலகட்டத்தில் அவ்வளவு பெரிதாகத் தேவைப்படவில்லை. எனினும் பரிசேயர்கள் சட்டத்தை அதிகமாக கையில் வைத்திருந்தபடியால் தாங்கள் தான் மோசேயின் வழிவந்தவர்கள் என்று பிதற்றக்கூடிய மனநிலை கொண்டவர்களாக வாழ்ந்தனர். அதன் வெளிப்பாடாகத் தான் ஓய்வுநாளில் சீடர்கள் கதிர் கொய்ததைப் பரிசேயர்கள் விமர்சித்தனர். ஆனால் இயேசுகிறிஸ்து

அத்தகைய மனநிலையை விமர்சித்தார். மனிதர் ஓய்வு நாளுக்கு கட்டுப்பட்டவரில்லை. மாறாக மனித மாண்புக்கும், மனித நேயத்திற்கும் கட்டுப்பட்டவர். மனிதமா? சட்டமா? என்று சிந்தித்துப் பார்த்தால் சட்டத்தை விட மனிதமே உயர்ந்து நிற்கும். மனிதம் மாண்புற வேண்டு மென்பதற்காகவே சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டங்களுக்காக மனிதன் கிடையாது. சட்டங்கள் அவசியம் தான். ஆனால் மனிதத்தையும் மனித நேயத்தையும் சீர்க்குலைத்தால் அந்தச் சட்டங்கள் தேவையில்லை. இதைத்தான் இயேசுகிறிஸ்து வலியுறுத்தினார்.

இயேசு கிறிஸ்து எப்பொழுதும் பொன்னுக்கும், பொருளுக்கும், பணத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மனிதனுக்கே முதலில் முக்கியத்துவம் கொடுக்கிறார். எனவே தான் ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது; மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வுநாள் சட்டமே மனிதருக்காக உண்டாக்கப்பட்டது என்றார் (மாற். 2 : 27). அப்படியிருக்கும் போது பசியாக இருந்த தன்னுடைய சீடர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஓய்வுநாளை முக்கியத்துவப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம் என்ற கேள்வியை இயேசு கிறிஸ்து முன் வைத்தார்.

இன்று நாம் நமது அன்றாட வாழ்வில் பரிசேயர்களைப் போல இவ்வுலகம் சார்ந்த விதிமுறைகளை மேற்கோள்காட்டி மனிதத்தை இழக்கச் செய்கிறோமா? அல்லது மனித நேயத்திற்கும் மனித மாண்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோமா? என்பதைச் சிந்தித்து மனிதத்தை மதித்து மக்களைப் பண்படுத்தவே ஓய்வுநாள் என்பதைப் புரிந்து செயல்படுவோம்.

### 2. கடவுளை மதித்துக் கர்த்தரைப் பணியவே ஓய்வுநாள் :

மாற். 2 : 28 “ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே”

கடவுளை மதித்துக் கர்த்தரைப் பணிந்து கொள்வதற்காகவே ஓய்வுநாள் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் கடவுளின் அன்பைத் திரும்ப திரும்ப ருசித்து கடவுளை மதித்து வாழ்ந்திட கடவுள் ஏற்படுத்திக் கொடுத்ததுதான் ஓய்வுநாள் (இ.ச. 5 : 14, 15). எனவே ஓய்வுநாள் என்பது பணிகளிலிருந்து விடுபட்டு உடல் ஓய்வெடுப்பது மட்டுமின்றி, கடவுளுக்கு மனிதர் கொடுக்கவேண்டிய இடத்தைக் கொடுத்து கர்த்தரைப் பணிந்துகொண்டு கடவுளோடுள்ள நல்லுறவினைப் பலப்படுத்துகிற நாள். ஆன்ம நோக்கிற்காக கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு மனிதரின்

அனுசாரத்திற்காகக் கட்டளையிடப்பட்ட நாள் இது. இதை உரிய முறையில் கடைப்பிடித்தே ஆக வேண்டும். எக்காரணம் கொண்டும் இதை உதாசீனப்படுத்துதல் கூடாது. ஓய்வுநாளில் இறைப்பிரசன்னத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற உண்மையைச் சிந்தித்து செயல்படுதல் வேண்டும்.

Sabbath என்னும் ஓய்வுநாள் இறைமக்கள் கடவுளை மதித்து, கடவுளை மட்டும் சிந்தித்து, கடவுளின் அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்தவும், உடல்நலம் பேணவும் கொடுக்கப்பட்டது. ஆனால் சமயத் தலைவர்கள் ஓய்வுநாளைப் பல ஒழுங்குமுறைகளுடன் இணைத்தனர். ஆகையால் அது தன் நோக்கத்தினை இழக்க நேரிட்டது. குறிப்பாக சமயக் காவலர்கள் என்று தங்களைக் காட்டிக்கொண்ட பரிசேயக் கூட்டம் ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது என்று விளக்கம் தந்தது (மாற். 2 : 24).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாரத்தின் ஏழாம் நாள் ஆண்டவருக்கான ஓய்வுநாள்; புனித சபை கூடும் நாள் (லேவி 23 : 3). ஆனால் இன்று இயேசு கிறிஸ்து உயிர்பெற்றெழுந்த வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைதான் ஓய்வுநாள். புனித சபை கூடும் நாள். அந்த நாளில் நாம் இறை இல்லம் வந்து கடவுளை மதித்துப் போற்றிப் பணிவது கடவுளுடைய ஆசியைப் பெற வழி வகுக்கின்றது. எனவே ஓய்வுநாளில் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து மற்ற அலுவல்களை ஒதுக்கிக் கடவுளை மதித்து பணிந்திடுவோம். பிறருக்கும் மாதிரியாவோம். இறைவனுக்கு உகந்தவர்களாகி இறை ஆசி பெறுவோம்.

### 3. உழைப்பை மதித்து உடலைப் பக்குவப்படுத்தவே ஓய்வுநாள் :

மாற்கு 2 : 27 “ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது”

ஓய்வு நாள் என்பது மனிதருக்காகவே உருவாக்கப்பட்டது. அதாவது ஆறு நாட்கள் உழைத்து உடலுக்கு ஓய்வு கொடுத்து உடலைப் பக்குவப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டதே ஓய்வுநாள்.

புத்துணர்ச்சியாக வேலை செய்வதற்கும், உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் ஓய்வு மிக மிக அவசியம். ஆன்டன் செக்கோவ் (Anton Chekhov) என்ற ரஷ்ய அறிஞர் “உழைப்பின் பின்னரான ஓய்வை விட வேறெந்த ஓய்வும் இனிமையானதல்ல” என்றார். எனவே வேலைச் செய்வது போல போதுமான ஓய்வெடுப்பதும் மிகமிக அவசியம்.

ஓய்வெடுத்தல் என்பது பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பது என்றோ, பொறுப்பிலிருந்து ஓடுகிறோம் என்பதோ அர்த்தமல்ல. மாறாக உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்துகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இரவும் பகலும் ஓய்வெடுக்காமல் தொடர்ந்து அயராது உழைக்கும் போது உடலும் உள்ளமும் தளர்ந்து விடுகின்றது. பணியில் கவனம் குறைந்து மனக்குழப்பம் எட்டிப்பார்த்து பணியினைச் சிறப்பாகத் தொடர முடியாத சூழல் உருவாகிறது. எனவே செய்யும் வேலையில் சுறுசுறுப்பையும் விரைவாகச் செய்து முடிக்கும் திறனையும் தக்க வைப்பதற்கு ஓய்வு மிக மிக அவசியம்.

ஓய்வை அலட்சியப்படுத்தினால் அது நிச்சயமாக உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும். எனவே அதற்கு இடம் கொடுக்காமல் ஆறு நாட்கள் கடினமாக உழைத்து உழைப்பை மதித்து ஏழாம் நாள் கட்டாயமாக ஓய்வெடுப்பது அவசியம். அப்படிச் செய்வதால் புத்துணர்ச்சியோடு மீண்டும் வேலையைத் தொடர முடியும்.

கடவுள் அனைத்துப் படைப்புகளையும் படைத்தபோது உழைத்தார். பின்னர் ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். (தொநூ. 2 : 2; விப. 20 : 11; எபி. 4 : 4). இச்செயல் உழைப்பினால் களைத்த உடலை ஓய்வின் வழியாகப் புத்துணர்ச்சி பெறச் செய்யவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே தான் உழைப்பையும் உழைக்கும் மக்களின் நலனையும் பேணும் வகையில் ஓய்வுநாள் சட்டம் தொடக்கத்தில் பிறப்பிக்கப்பட்டது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்ற முதுமொழிக்கேற்ப உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருந்தால்தான் உழைப்பு சிறக்கும் ஆகவே உழைப்பையும் முக்கியப்படுத்தி அதை மதித்து ஓய்வையும் முன்னிலைப்படுத்தி, உடலையும், உள்ளத்தையும் பக்குவப்படுத்திட ஓய்வுநாளை ஆசரித்து இறை ஆசிபெற முயல்வோம்.

அன்பர்களே! ஓய்வு நாளைப் படைப்பின் நிறைவாக்கிய கடவுள் ஓய்வுநாளை முக்கியப்படுத்தி அதன் வழியாக ஆசி வழங்கியுள்ளார். எனவே ஓய்வுநாளில் மனிதத்தை மதித்து மக்களைப் பண்படுத்தி, கடவுளை மதித்து கர்த்தரைப் பணிந்து, உழைப்பை மதித்து உடலைப் பக்குவப்படுத்தி ஓய்வுநாளை ஆசரித்திட முற்படுவோம். இறை ஆசி பெறுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 38 | ஞா. | 72 |
| | கீர். | 52 | கீர். | 72 |

**12-02-2023** நலமருளும் திருப்பணி ஞாயிறு

# மனதுருகும் அன்பும் நலமருள்தலும்
## Compassionate Love and Healing

| | |
|---|---|
| எசா. 42 : 1-9 | யாக். 5 : 13-18 |
| திபா. 103 : 1-14 | மாற். 7 : 31-37 |



‘அவர் உன் வாழ்நாளை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்’ (திருப்பாடல் 103 : 5)

ஒரு மனிதன் உடல் (Physical), உள்ளம் (Psychological), உணர்ச்சி (Emotional) ஆகியவைகளில் ஏற்படும் முழுமையான இயல்பு நிலையே நலமடைதல் (Healing) ஆகும். இதை **இறைச்சாயல்** என்று கூறுகிறது திருமறை. **ஹோப்மேன்** (Hoffman) என்ற அறிஞர் தனது, **“ஆப்பிரிக்காவின் பாரம்பரிய மருந்து”** (African Traditional Medicine) என்ற நூலில் ஆரோக்கியம் என்பது மகிழ்ச்சியின் அடித்தளம் என்றும், வாழ்வைப் பாதுகாக்கும் அறிவியல் என்றும் கூறுகிறார். நம்மை நலமாக்குபவர் கர்த்தர் (திரு. 10 : 3:3). இறைவனின் மனதுருக்கம் நமக்கு நலனை மீட்டுத் தருகிறது. (திரு. 103:8). ஆரோக்கியப்படுத்துகிறது.

இறைமகன் இயேசு தனது வார்த்தைகளாலும் (words), காயங்களாலும் (wounds), வல்லமையாலும் (power) நம்மை சுகப்படுத்துகிறார். நலமருளும் இறைவனின் மனதுருகும் அன்பில் வெளிப்படும் மூன்று **பார்வைகளை** நாம் சிந்திப்போம்.

### 1. அணையாமல் அருள் அருளுகிறார்

“நெரிந்த நாணலை முறியார்; மங்கி எரியும் திரியை அணையார்” (ஏசாயா 42 : 3)

பாலஸ்தீனாவில் நாணல் 10 அடி வரை உயரமாக வளரும். இந்த நாணல் வீடுகளின் கூரை அமைக்கவும், இசைக் கருவிகள் செய்யவும், குழந்தைகளைப் படுக்க வைக்கும் நாணல் பெட்டிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. எழுதுகோலாகவும் பயன்படும். ஆனால் இந்த நாணல் நெரிந்தால் அது பயனற்றதாகி விடும், நெரித்தல் என்பது

உள்காயம் ஏற்படுவதைக் குறிக்கிறது (Crushed Internaly), நெரிந்து இருப்பது வெளியே தெரிவதில்லை. சதைந்த நாணல் பலன் (grain), தருவதுமில்லை. கடவுள் உள் காயத்தைக் காண்கின்றார், ஆற்றுகிறார். அது மீண்டும்வளர, பயன்தர பலப்படுத்துகிறார். மடிந்தவைகளைப் புதுப்பிக்கிறார். மறு உயிர் தருகிறார். நமது உள்காயங்கள் வெளி காயத்தை விட ஆழமானவை. வேதனை தரக்கூடியவை. மனச் சிதைவுகள், வேதனை தரும் பிறர் வார்த்தைகள், பயங்கள், பொருளாதார இழப்புகள், நம்பிக்கை துரோகங்கள், தோல்விகள், நிந்தனைகள், நீதி மறுக்கப்பட்ட சூழ்நிலைகள், அகாலமரணங்கள், உறவு முறிவுகள், விபத்துக்கள்.... ஆழமான சிதைவுகளை நமது இதயங்களில் ஏற்படுத்துகின்றன. கடவுள் இவைகளில் பங்குகொண்டு மாற்று வழிகளை நமக்கு ஏற்படுத்துகிறார். நமது உயிர் அணையாமல் பாதுகாக்கிறார்.

மங்கி எரியும் திரியை நார் செடியின் வேரிலிருந்து தயாரிக்கிறார்கள். நார் திரியை ஒலிவ எண்ணெயில் ஊற வைத்து எரிய வைப்பார்கள். பிரகாசமாக எரியும் திரி ஒளி மங்கி, வெப்பம் குறைந்து, புகையும் போது விரல்களால் சாம்பலை அகற்றி, திரியை உயர்த்தி, எரிய வைப்பார்கள். அப்போது திரியில் மங்கிய பொறியாக (Spark) இருக்கும் தீ, புது பொலிவோடு சுடர்விட்டு (Flame) எரியும். கடவுள் மங்கிய திரியை அணைப்பதில்லை. நம்மிடமுள்ள சிறிய நன்மைகளை, எளிய தொடக்கங்களை, மங்கிய வாய்ப்புகளை, குறைந்து போன ஆரோக்கியங்களைத் தூண்டி, வளரச் செய்து நலமருளுகிறார். உடைந்த மனதைத் தேற்றி உள் காயங்களை ஆற்றுகிறார். மனதுருகும் இறை அன்பால் நம்மை உயிரூட்டுகிறார். நொறுங்குண்ட இதயத்துக்கு இறையன்பை மருந்தாக்குகிறார். புது ஆற்றலோடு செயலாற்ற நமக்குக் கிருபை தருகிறார். தூய ஆவியால் ஆற்றல்படுத்துகிறார்.

## 2. தொட்டு நலம் தருகின்றார்

“இயேசு அவரை தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார்.” (மாற்கு 7:33). தொடுதல் என்பது உரிமையைக்காட்டும் செயல். **“உமிழ்நீரால்”** தொடுவது அன்பின் அடையாளச் செயல். இயேசு அவனைத் தொட்டு அவனோடு அன்பையும், உறவின் உரிமையையும் (ஏசா. 42:7) வெளிப்படுத்தினார். யாக்கோபு 5:14 இல் சபையின் மூப்பர்கள் எண்ணெய் பூசி ஜெபிப்பது சொல்லப்படுகிறது. **“பூசி”** (Anointing)

என்பது ஒரு மருத்துவ வார்த்தை. அதன் சரியான மொழிபெயர்ப்பு **"மசாஜ்"** (Massaging) என்பதே ஆகும். மூப்பர்கள் தொட்டு, எண்ணெய் பூசி (மருந்திட்டு) ஜெபித்து பணிவிடை செய்தார்கள், இறைமகன் இயேசு உமிழ்நீரைப் பூசுகிறார்; தொடுகிறார் அவர் நாவைத் திறக்கிறார் (மாற்கு 7 : 14). உமிழ்நீரில் என்ன இருக்கிறது? 98 சதவிகிதம் தூய்மையான தண்ணீர் இருக்கிறது. யூரிக் அமிலம், பொட்டாசியம், கால்சியம் பை கார்பனேட், பாஸ்பேட், சோடியம், அயன், தயோ சயனேட், ஹைடிரஜன் பெராக்ஸைடு, என்ஸைம்ஸ் (Enzymes), சத்துக்கள், தாது உப்புகள், அயனிகள், வெள்ளை அணுக்கள் ஹார்மோன்கள் போன்றவை நிறைந்துள்ளன. நோய் எதிர்ப்பு மருந்தாக உமிழ்நீர் உள்ளது (Anti Bacterial, Anti Fungal, Anti Viral). உமிழ்நீர் ஓர் உயிர் நீராகும்.

ஆப்பிரிக்க பழங்குடியினர் இரத்தத்தோடு இணைந்த ஒன்றாக உமிழ்நீரை **உடன்படிக்கைச்** சடங்குகளில் பயன்படுத்தினர். கண் மருந்தாகவும், வெளிப்புற தோல் காயங்களில் களிம்பாகவும் யூத ரபிகள் பயன்படுத்தினர். நமது நாட்டிலும் பருக்கள், கட்டிகள், காயங்கள் ஆகியவைகளைச் சுகமாக்கும் அருமருந்தாக உமிழ்நீர் பயன்படுத்தப்படுகிறது.

திருமண உறவை உறுதி செய்ய மணமக்களின் இணைந்த கரங்களில் துப்புவது, உமிழ்ந்து இறையாசி வழங்குவது, அன்பு, நம்பிக்கை, பயமின்மை ஆகியவற்றின் அடையாளமாக **உமிழ்நீர் உமிழ்வது** பல நாடுகளில் நடைமுறையில் உள்ளது. (Abyssinia, Greece, Arabia, China) திருமறையில் இயேசு உமிழ்வது, கரங்களால் தொடுவது, சேற்றைப் பூசுவது அன்பின் அடையாளச் செயலாகும். அவர் அன்பின் அடையாளச் செயலாகத் விரல்களால் தொட்டு தனது வல்லமையை வெளிப்படுத்துகிறார். உமிழ்ந்து சுகம் தருகிறார். உரிமை பாராட்டுகிறார்.

### 3. முடிசூட்டி முதன்மையாக்குகிறார்

.... அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகிறார் (திருப்பாடல் 103 : 4).

இதயம் (heart), ஆவி (soul) எண்ணம் (mind), பலம் (Strength) ஆகியவை இணைந்து இறைவனைப் புகழும் பாடல் திருப்பாடல் 103. கடவுளின் மனதுருகும் அன்பை இப்பாடல் பிரதிபலிக்கிறது.

"அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்" (திருப்பாடல் 103 : 4)

**படுகுழி** (pit) என்பது **கடவுளின்மை நம்பிக்கையின்மை** என்று பொருள்படுகிறது. (without God and without hope) கடவுளின் பேரன்பு நம்மை விடுவிக்கிறது. குழியிலிருந்து தூக்குகிறது. மனதுருக்கம் (Compassion) என்ற ஆங்கில பதத்தின் எபிரேய வார்த்தை (Ra-chem)(ரேகாயீம்) கருவில் குழந்தையைத் தாங்கிய வயிறு (womb) என பொருள். அம்மா கருவில் வளரும் குழந்தை மீது கொள்ளும் மனதுருகும் அன்பு. இது எல்லை தாண்டிய தியாக அன்பு ஆகும். (A mother's strong emotion and action for her tender child) கடவுள் நம்மைக் கருவில் இருக்கும் குழந்தையாகக் கவனிக்கிறார். கருணை கொள்கிறார். இறைப் பாதுகாப்பைத் தருகிறார். கண்ணின் மணியென காக்கிறார். பேரரசன் தாவீது திருப்பாடல் 103 : 1-6 வரையுள்ள பாடல் வரிகளில் ஆறு ஆசிகளால் கடவுள் நம்மை மூடிசூட்டுகிறார் எனப் பாடுகிறார். அவைகள்

1. மன்னிப்பு (Forgiveness)
2. சுகம் (Healing)
3. மீட்பு (Redemption)
4. அன்பு (Love)
5. திருப்தி (Satisfaction)
6. புதுப்பித்தல் (Renewal)

அலங்கரித்து அழகு பார்க்கிறார். இவைகளால் கடவுள் நம்மை முடிசூட்டுகிறார். கடவுள் தாயின் கருவில் வளரும் குழந்தை போல் அணையாமல் அருள் அருளி, தொட்டு நலம் தந்து, முடிசூட்டி முதன்மையாக்கி, நலமருளி அவரது மனதுருகும் அன்பில் பொதிந்து கொள்கிறார். முதன்மைப்படுத்தி, முன்நிலைப்படுத்துகிறார். அவர் மனதுருகும் அன்பை உணர்ந்து வாழ நம்மை அழைக்கிறார். ஆமென்.

அருள்திரு. M. **பிறேம்சிங் ஜெயக்குமார்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 13 | ஞா. | 429 |
| | கீர். | 307 | கீர். | 134 |

**12-02-2023** உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு

# படைப்பின் நோக்கத்தை மீறுதலே வீழ்ச்சி
## Fall as the Violation of the Purpose of Creation

| | |
|---|---|
| தொநூ. 6 : 1-13 | உரோ. 7 : 4-25 |
| திபா. 32 | மத். 7 : 15-23 |



கடவுள் மண்ணுலகை உற்றுநோக்கினார். இதோ! அது சீர்கெட்டுப் போயிருந்தது. மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடந்து வந்தனர் (தொநூ. 6 : 12)

ஒரு புகழ்பெற்ற தனியார் பள்ளிக்கூடத்தில் சிறந்த கால்பந்தாட்ட அணி ஒன்று இருந்தது. அந்த அணி எங்கெல்லாம் போட்டிக்குச் சென்றதோ அங்கெல்லாம் வெற்றி மாலையைப் பரிசாகச் சூடி வந்தது. அந்த அளவுக்கு அந்தக் கால்பந்தாட்ட அணியிலிருந்த வீரர்கள் திறமையாக விளையாடினர். அதிலும் குறிப்பாக அந்த அணியில் முன்பக்கமாக(Frontline) விளையாடிய ஜாக்சனும் நிர்மலும் சிறப்பாக விளையாடி வந்தனர். இதனால் அந்த மாணவர்களுக்கு மட்டுமல்லாது, பள்ளிக்கும் நல்ல பெயரும் புகழும் கிடைத்தன. ஆனால் சிறிது நாள்களாகவே ஏறுமுகத்தில் இருந்த அந்தக் கால்பந்தாட்ட அணி இறங்குமுகத்திற்கு வரத் தொடங்கியது. காரணம் முன்பக்கமாக விளையாடி வந்த நிர்மல் தன்னலனோடு ஆடத் தொடங்கியதேயாகும். அவன் தன்னோடு முன்பக்கமாக ஆடி வந்த ஜாக்சனுக்குப் பந்தைக் கடத்தாமல் தானாகவே கோல் அடிக்க நினைத்ததால் நிறைய நேரங்களில் பந்து இலக்கை நோக்கிச் செல்லாமல், தாறுமாறாகச் சென்றது. இதனால் வெற்றிபெற வேண்டிய பல நல்ல போட்டிகள் தோல்வியில் போய் முடிந்தன. இந்த உண்மை அணியின் மேலாளருக்குத் தெரியவே தெரியாது. நன்றாக விளையாடிய அணி எதற்காக இப்படித் தோல்விகளைச் சந்திக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தனர். சில நாள்களுக்குப் பிறகு தான் உண்மை தெரிந்தது. உடனே மேலாளர் சுயநல ஆட்டம் (Selfish game) ஆடிய நிர்மலைக் கூப்பிட்டு எச்சரித்து "கால்பந்தாட்டம் என்பது தனிநபர் ஆட்டம் அல்ல; அது குழுவாக இணைந்து ஆட வேண்டிய ஆட்டம். ஆதலால் உன்னுடைய தன்னலத்தைத் தூர எறிந்து விட்டு எல்லோருக்குமான ஆட்டத்தை ஆடு;

இல்லையென்றால் உன் இடத்தில் வேறு ஆளை நியமிக்க வேண்டியது வரும்" என்றார். அப்பொழுது நிர்மல் தன்னுடைய தவற்றை உணர்ந்து கண்ணீர் விட்டு அழுதான். இனி மேலும் தான் அப்படிப்பட்ட தன்னலமற்ற ஆட்டம் ஆடப்போவதில்லை என வாக்குறுதி தந்து முன்னைவிடச் சிறப்பாக ஆடி தன்னோடு ஆடிய ஜாக்சனுக்குப் பந்தைக் கடத்திக் கொடுத்து பல வெற்றிகளைப் பெற்று பள்ளிக்குப் பெருமைத் தேடி தந்தனர்.

சுயநலனால் ஏற்பட்ட வீழ்ச்சி, சுயநலனை விட்டு விலகிய போது அகற்றப்பட்டது. எனவே தான் தூய பேசில் அவர்கள் "மனிதர் படைப்புகளின் பொறுப்பாளர் என்பதை மறந்து, உரிமையாளர் என்ற நிலைப்பாட்டை எடுத்ததாலே வீழ்ச்சி ஏற்பட்டது" என்கிறார். தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபோது மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது. வெறுமையாகவும் உருவமற்றும் இருந்த மண்ணுலகில் கடவுள் எல்லாவற்றையும் படைத்தார். எல்லாவற்றையும் படைத்தக் கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்ததை எண்ணி மகிழ்ந்தார். பின்னர் படைப்பின் மகுடமாக மனிதரைப் படைத்து, படைப்பைப் பராமரிக்கும் பொறுப்பை அவர்களிடம் கொடுத்தார். ஆனால் மனிதரோ கடவுளின் வார்த்தைகளை மதிக்காது சுயநலனோடு செயல்பட்டு, படைப்பின் நோக்கத்தை மீறியதால் வீழ்ச்சியைச் சந்தித்தார். கடவுள் மண்ணுலகை உற்று நோக்கி இதோ அது சீர்கெட்டு போயிருந்தது (தொ.நூ. 6 : 12) எனக் கண்டு, இவற்றை உருவாக்கியதற்காக மனம் வருந்துகிறேன் என்றாலும் பெரிய தடுமாற்றம் என்ற நூலில் இயேசு கிறிஸ்துச் சொன்ன அன்பின் கட்டளையை மீறியதால் ஏற்பட்டுள்ளதே இன்றைய தட்ப வெப்பநிலை தடுமாற்றம் - என அதன் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். படைப்புகள் அனைத்துமே நன்மையானது எனவும் (தொநூ. 1 : 31, ரோமர் 8 : 28) நன்மைச்செய்து வாழ்வதே நாம் படைக்கப்பட்டதன் நோக்கம் எனவும் (எபே. 2 : 10) செயல்படுவதே உண்மையான பக்தியின் நோக்கம். மாறாக நாம் படைக்கப்பட்டதன் நோக்கத்தை மீறுவதும் அதற்கு எதிராகச் செயல்படுவதும் வீழ்ச்சி என்னும் மாபெரும் துன்பத்தையே கொண்டுவரும். எனவே வீழ்ச்சிக்கானக் காரணங்களைத் தியானம் செய்வோம்.

**1) தீயச் சிந்தனையால் வீழ்ச்சி** (தொநூ. 6 : 5) :

“மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச்சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார்”.

படைப்பின் வீழ்ச்சிக்கான காரணமாகச் சொல்லப்படும் முதல் செய்தி மனிதர்களின் தீயச்சிந்தனைகளேயாகும். கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் படைப்பாளரை மறந்து, படைக்கப்பட்டவற்றை வழிபடத் தொடங்கியதால் (உரோ. 1 : 25) அவரின் சிந்தனைகள் அனைத்துமே தீயவைகளாகவே இருந்தன. இவர்களின் தீயச் சிந்தனைகளை அறிந்தக் கடவுள் மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது (தொ.நூ. 6:6). மனிதர்களில் இந்தத் தீயச் சிந்தனைகளே மண்ணுலகு சீர்கெட்டுப் போவதற்கும், படைப்புகள் வீழ்ச்சியடைவதற்கும் காரணமாக அமைந்தன. எனவே மனிதரின் நினைவுகள், எண்ணங்கள், சிந்தனைகள் அனைத்தும் எப்போதும் நல்லவையாக அமைதல் அவசியம். இது பற்றித் திருவள்ளுவர்,

“உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து” என்கிறார்.

அதாவது, எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வுக் கைக்கூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது என்கிறார். துய பவுலார், “கடவுளைப் பற்றிய அறிவுக்கு எதிராகத் தலைதூக்கும் அனைத்து மேட்டிமையையும் தகர்த்தெறிகிறோம் மனித எண்ணங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வருமாறு கட்டாயப்படுத்துகிறோம்” (2 கொரி. 10:5) என்கிறார்.

மனித சிந்தனைகளைக் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்போது அவை நல்லதாகவே அமையும் என்பதே உண்மை. எனவே தான் தூய பவுலார் “இறுதியாக சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ அவற்றையே மனத்தில் இருத்துங்கள்” (பிலி. 4 : 8) என்கிறார். “தூய வாழ்வின் இரகசியமோ, தூய சிந்தனை தான்” என்ற ஜாண் ஸ்டாட்

என்பவரின் கூற்றுக்கு ஏற்ப தீயச்சிந்தனையை விடுத்து தூயச் சிந்தனைகளுக்கு நேராக வாழ்வை அமைக்க முயலவேண்டும்.

**2. தீயவழியால் வீழ்ச்சி** (தொநூ. 6:12)

"..........மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீயவழியில் நடந்து வந்தனர்"

படைப்பின் வீழ்ச்சிக்கான காரணமாகச் சொல்லப்படும் இரண்டாம் செய்தி "மனிதர்களின் தீய வழிகளே"யாகும். கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் படைப்பாளர் காட்டிய வழியில் நடவாது, படைப்புகள் காட்டிய வழியில் நடக்கத் தொடங்கியதே வீழ்ச்சிக்கான காரணமாகும். தீயவழி என்பது தீயோனின் வழி. தீயவழி என்பது விசாலமான வழி, தீயவழி என்பது கேட்டுக்கான வழி, தீயவழி என்பது பாவிகளின் வழி. இதையே திருப்பாடலாசிரியர் "பாவிகளின் தீயவழி நில்லாதே" (1:1) என்கிறார். தீய வழியை விட்டு விலகாமல் சாதாரண மக்களைத் தொழுகை மேட்டுக் குருக்களாக அமர்த்திய அரசர் எரொபவாமின் வீடு பாவத்திற்கு உள்ளாவதற்கும் மண்ணிலிருந்து அழிந்தொழிந்து போவதற்கும் காரணமாயிற்று (1 அர. 13:33-34).

யூதாவின் நான்காவது அரசர் யோசபாத் நாட்டை ஆண்டவரின் விருப்பப்படி வழிநடத்தியவர். பல சீர்திருத்தங்களைச் செய்தவர். ஆண்டவர் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்து பல நன்மைகளை அனுபவித்தவர். ஒரு சமயம் இவர், தீயவழியில் நடந்த இஸ்ரயேலின் அரசர் அகசியாவுடன் சேர்ந்து தீய வழியில் நடக்கத் தொடங்கினார். உடனே யோசபாத்துக்கு "நீர் அகசியாவோடு சேர்ந்து கொண்டமையால் ஆண்டவர் உம் திட்டங்களை அழித்துவிடுவார்" என்ற இறைவாக்கு கிடைத்தது. எனினும் தீய வழியில் நடந்த அகசியாவுடன் சேர்ந்து தீய வழியில் நடந்ததால் அவர் வாழ்வில் வீழ்ச்சியையே சந்தித்தார் (2 குறி. 20 : 31-37). எனவே தான் திருப்பாடலாசிரியர் "தம் தீய வழிகளில் துணிந்து நடப்போரின் மணிமுடியை ஆண்டவர் நொறுக்குவார்" (68:21) என்கிறார்.

இளையமகனின் தீயவழி (லூக். 15:11-19) அவரை அறிவு தெளிவற்றவராகவும், வறியோராகவும் மாற்றிப்போட்டது. எனவே தான் ஞானி சாலமோன் நீ தீயவழியில் செல்லாமலும், வஞ்சகம் பேசும் மனிதரிடம் அகப்படாமலும் இருக்கும்படி ஞானம் உன்னைப் பாதுகாக்கும் (நீதி. 2:12) என்கிறார். எனவே தீய வழியைத் தவிர்த்துத் தூய வழியாம் ஆண்டவர் காட்டும் வழியில் நடந்து ஆண்டவரின் நன்மைகளை அனுபவிக்க முயலவேண்டும்.

### ૩. தீயச் செயலால் வீழ்ச்சி (உரோ. 7:19)

“. . . விரும்பாத தீமையையேச் செய்கிறேன்”

படைப்பின் வீழ்ச்சிக்கான காரணமாகச் சொல்லப்படும் மூன்றாம் செய்தி மனிதர்களின் தீயச் செயல்களேயாகும்.கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் படைப்பாளர் எதிர்பார்க்கும் நற்செயல்களைச் செய்யாது, படைப்பாளர் அருவருக்கும் தீச்செயல்களைச் செய்ததே வீழ்ச்சிக்கானக் காரணமாகும். நோவா காலத்து மக்களின் செயல்கள், வன்முறையானவைகளாக (தொ.நூ. 6:13), தீமையானவைகளாக (தொ.நூ. 6:5) இருந்ததால் கடவுள் அவர்களை மண்ணுலகோடு அழிப்பதாக நோவாவிடம் கூறினார். சோதோம் நகர மக்களின் தீச்செயலை அறிந்த லோத்து “என் சகோதரரே தீச்செயல் செய்யாதிருங்கள்” (தொ.நூ. 19:7) என்றார். இது குறித்து தூய பவுலார் மனிதர்கள் தீச்செயல் செய்யக் காரணம், அவர்கள் ஊனியல்பு கொண்டவர்கள், அவர்களால் பாவத்தின் ஆசையை எதிர்க்க முடியாததே (உரோ. 7:14-25) என்கிறார். மேலும் “நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால் சாகத்தான் போகிறீர்கள்; ஆனால் தூய ஆவியின் துணையால் உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள்” (உரோ. 8:13) என்கிறார். எனவே தீயச் செயல்களை விடுத்து நல்லச் செயல்களைச் செய்து ஆண்டவரிடமிருந்து நல்ல வாழ்வைப் பெற முயலுவதே சிறப்பு.

அமெரிக்காவைச் சார்ந்த ஜே.டி. என்ற எழுத்தாளர் சொல்லிய ஒரு செய்தி. அமெரிக்காவிலுள்ள ஒரு பாலைவனத்தில் இரண்டு பறவைகள் மேலே பறந்துச் செல்லும். ஒன்று ஹம்மிங் பறவை (Humming Bird) இன்னொன்று வல்லூறு (Vulture). முதல் பறவையோ தனது உணவாக நல்ல பழங்களை, தானியங்களை உட்கொள்ளும். ஆனால் வல்லூறுகளோ அப்படியல்ல; அது எப்போதும் செத்துப்போன விலங்குகளைத்தான் உணவாக உட்கொள்ளும். ஹம்மிங் பறவை நல்ல, பசுமையான கனிகளை உட்கொள்வதால் பாலைவனத்தில் நீண்ட நாள்கள் வாழும். வல்லூறுவோ எப்போதும் செத்துப் போன விலங்குகளை, உட்கொள்வதால் விரைவிலேயே இறந்துவிடும்.

இந்தச் சூழியல் உண்மையைச் சுட்டிக்காட்டி ஜே.டி. என்ற எழுத்தாளர் தொடர்ந்து சொல்வார், மனிதர்களிலும் இரண்டு விதமானவர்கள் இருக்கின்றனர். ஒருவகையினர் எப்போதும் நல்ல,

உயிரோட்டமான, ஆரோக்கியமானச் செயல்களை நாடிச் செல்வர். இதனால் அவர்களின் வாழ்வு சிறப்பானதாக இருக்கும். இன்னொரு வகையினரோ எப்போதும் தீமையையே நாடிச் செல்வதால் அவர்கள் விரைவில் அழிந்து போவர்.

ஆண்டவர் இயேசு முழுக்க முழுக்க அடுத்தவர் நலன் பற்றியே சிந்தித்தார்; தந்தையாம் கடவுள் காட்டிய நல்ல வழியிலே நடந்தார், நன்மை செய்வோராகவே திகழ்ந்தார். நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல சிந்திப்போம், அவர் காட்டும் வழியில் நடப்போம், அவர் திருவுளம் நிறைவேற்றுவோம், நிறைவான வாழ்வை அனுபவித்து மகிழ்வோம்.

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 8 | ஞா. | 279 |
| | கீர். | 30 | கீர். | 319 |

**19-02-2023** உயிர்ப்புக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிறு

# தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்கத்தின் காலம்

## Lent : A time of Transformation

எசா 44 : 21 - 28 உரோ. 11 : 13 - 24

திபா. 6 யோவா. 2 : 1 - 11



"உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்துவிட்டேன்." (எசா 44 : 22)

Lent என்பது லத்தீன் மொழியில் போர்க்காலங்களில் போரில் ஈடுபட்டுள்ள படைப்பிரிவினர் தங்களை மறுபடியும் ஆயத்தப்படுத்துவதற்காக அமர்ந்திருக்கும் காலத்தைக் குறிக்கும் சொல்.

இந்த ஒய்வு காலத்தில் படைப்பிரிவினர் தங்கள் ஆயுதங்களை சீரமைத்து, இழந்த ஆயுதங்களுக்காக புதிய ஆயுதங்களைப் பெற்று, போரில் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களையும் ஆற்றி தங்களை புதிய ஆற்றல் பெற்றவர்களாகப் போரிடத் தகுதி உடையவர்களாக மாற்றி கொள்வர். எனவே இந்தக் காலத்தை Lent என அழைப்பர்.

மனிதர்களும் தாங்கள் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட விசுவாசத் தடுமாற்றங்கள், அதினால் ஏற்பட்ட வீழ்ச்சிகள், அறிந்தும் அறியாமலும் நம்மைப் பிடித்துக் கொண்ட பாவக்கறைகள் ஆகிய இவைகளோடு தங்களை கடவுளுக்கு முன்பாக நிறுத்தி உற்று நோக்குவதின் மூலம் கண்டறியவும், இறைவனின் பாதத்தில் தங்களைத் தாங்களே அறிக்கை செய்து மன்னிப்பை பெற்று தங்கள் வாழ்வில் சிதைந்துபோன இறையுறவை சீர்படுத்துவதன்மூலம் புது ஆற்றல் பெற்றவர்களாய், இந்த உலகில் தீமைகளோடும் தீயவனோடும் தங்களுக்குள்ள போராட்டத்தைத் தொடரவும் தங்களை தகுதிப்படுத்திக் கொள்ளுகின்ற வேளை இந்த லெந்து காலம்.

மற்றொரு கோணத்தில் பார்ப்பதென்றால் எபே. 6 : 11-17-இல் கூறப்பட்டுள்ளபடி, நாம் தரித்துக் கொண்டிருக்கின்ற சர்வாயுத வர்க்கங்களில் ஏற்பட்டுள்ள குறைவுகளைக் கண்டறிந்து அவற்றை

செப்பனிட்டு போருக்கு ஆயத்தமாய்ப் புது ஆற்றலோடு இந்த உலகத்திற்குள் செல்ல ஆயத்தமாகின்ற காலம் எனலாம்.

நாம் தெரிந்து கொண்ட திருமறை வசனத்தில் மக்கள் கடவுளை விட்டு விலகி, பாவம் செய்தபடியால் சிறைப்பட்டுப்போய், அந்தச் சிறையிருப்பின் காலம் சீக்கிரம் முடிந்துவிடும் என அவர்கள் நினைக்க அது நீண்டு கொண்டே செல்கிறது. இதனால் பலர் சோர்ந்து போகின்றனர். இனி விடுதலை உண்டு என்ற நம்பிக்கை இழந்த நிலையில் கடவுள் எசாயா தீர்க்கர் மூலம் என்னிடம் திரும்புங்கள் என்கின்ற அழைப்பைக் கொடுக்கின்றார். அவரிடத்தில் திரும்பும்போது அவர் நம்மை தமது மகன்களாகவும், மகள்களாகவும் ஏற்றுக்கொண்டு, நமது பாவங்களைப் போக்கி, நம்மை மீட்டுக் கொள்வார். இதன்மூலம் நாம் நமது வாழ்வில் மாற்றுருவாக்கம் பெற்று கடவுளுடன் உள்ள இடைவெளியைச் சீர்செய்து அவரது கரம் பற்றி நடக்கும் வாய்ப்பைப் பெறுவோம். இன்றைய திருமறைப் பகுதிகளின் வழியாய் நாம் எவ்விதம் தவக்காலத்தைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்துவதால் மாற்றுருவாக்கம் பெறுகிறோம் என்பதைச் சிந்திப்போம்.

1. **பாவத்திலிருந்து விடுதலை பெற்று மாற்றுவாக்கம் பெறுதல்** (எசா. 44 : 22)

கடவுள் நம்மைப் படைத்தவர், நாம் அவரது பிள்ளைகள். நாம் தவறு செய்து அவரைவிட்டு விலகிச் சென்றாலும் ஒருபோதும் நம்மைவிட்டு அவர் விலகிச் செல்லமாட்டார். அவர் நம்மை மறப்பதில்லை. எப்போது என் மகன், என் மகள் என்னிடம் திரும்புவர் என்ற எதிர்பார்ப்புடன் கடவுள் நம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்.

இந்த எதிர்பார்ப்பை ஒசேயா தீர்க்கரின் மூலம் கடவுள் வெளிப்படுத்துகிறார். ஒசே. 11 : 3, 4, 7 ஆகிய வசனங்கள் பாவத்தினால் நாம் கடவுளை விட்டு விலகிச் சென்றாலும் கடவுளின் உள்ளம் தம்மைவிட்டு விலகிச் செல்லும் மாந்தர் மீது எவ்வளவு வாஞ்சை உள்ளவராகக் காணப்படுகிறார் என்பதை உணர்த்துகிறது.

லூக்கா 15 : 11 - 24-இல் இயேசு கூறிய மனம் திரும்பிய மகன் உவமை மூலம் தன்னிடம் திரும்பும் மகன் எவ்வளவு துரோகம் செய்திருந்தாலும், விலகிச் சென்றிருந்தாலும் எப்போது அவரிடம் திரும்புகிறானோ அப்போது அவன் இருக்கின்ற நிலையில் தன் மகனாக ஏற்றுக்கொண்டு அவனை மகனைப் போல் நடத்துகின்றார் என்பதின்

மூலம் கடவுள் தம்மிடம் திரும்பும் எவரையும் தள்ளிவிடுவதில்லை. மாறாக அவருக்கு புதுபிறப்பைக் கொடுத்து தம்முடைய பிள்ளைகளாய் ஏற்றுக் கொள்கின்றார் என்பதை உணர்த்துகின்றது.

இந்த லெந்து காலத்தில் நாம் மாற்றுருவாக்கம் பெறும்படி கடவுளையும் நம்மையும் பிரிக்கும் பாவத்தினின்று விடுபட்டு புதுபிறப்பை அனுபவமாக்கிக் கொள்வோம்.

**2. கடவுளின் தயவுக்குப் பங்குள்ளவர்களாகி மாற்றுருவாக்கம் பெறுதல்** (ரோமர் 11 :2 2)

கடவுள் தம்மைத் தேடுகிற மக்களிடம் தயவுடையவராக இருக்கிறார். அந்த தயவிலே நாம் நிலைத்திருந்தால் அந்த தயவுக்கு பங்காளிகளாவோம். பலவேளைகளில் கடவுளை முழுமையாகத் தேடாமல் அரைகுறை மனதோடு நாம் தேடுகிறவர்களாய் இருப்போம். அதை இறைவன் கண்டாலும் நமக்கு வாய்ப்புகளைக் கொடுத்து நம்மை அவரது தயவுக்கு உரியவர்களாக்க முயல்கிறார். லூக். 18 : 6 -9 வரையுள்ள வசனங்களில் இயேசு சொன்ன உவமை இதை உணர்த்துகிறது. அவர் கொடுக்கின்ற வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்தும் போது நாம் அவரது பிள்ளைகளாக அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்படி அவர் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார். இதை உணர்ந்த சங்கீதக்காரன் 119-ம் சங்கீதம் 58-வது வசனத்தில் முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன் என்கிறார்.

இந்த லெந்துக்காலத்தில் நமது வாழ்விலும் நம்மை தமது அன்புக்குரிய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கும் கடவுளின் தயவை முழு இருதயத்தோடு வாஞ்சித்து தேடி நம்மை கடவுளுடன் முழுமையாய் இணைத்து கொள்வோம். கடவுளின் தயவு நம்முடன் இருக்கும்போது நமது வழிகளை நாம் தெளிவாய் அறிந்து கடவுளுக்கு நேராக நம்மால் நடக்க முடியும் (சங். 119 : 59).

**3. முழுமையாய் இறைவனிடம் சரணாகதி அடைவதால் மாற்றுருவாக்கம் பெறுதல்** (யோவா. 2 : 5)

கானாவூர் திருமண இல்லத்தில் இயேசு விருந்தாளியாய் அழைக்கப்பட்டிருந்தார். ஒரு விருந்தாளி நம்முடன் இருந்தாலும் அவருக்கு நம்மீது ஒரு உரிமையும் கிடையாது. நமது அன்பை அவருடன் பகிர்வோம். அவர்தமது அன்பை நம்முடன் பகிர்வார். ஆனால் அவர்

நம்மீது உரிமை எடுத்து எதையும் நமது இல்லத்தில் செய்யமுடியாது. திராட்ச ரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் ஒரு விருந்தாளியாக நின்று அந்த குறையை நீக்க இயேசுவிடம் கூறுகிறார். ஆனால் இயேசு அதை மறுத்துவிடுகின்றார். ஆனால் மரியாள் வேலைக்காரரிடம் கூறும் ஆலோசனை அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இயேசுவை விருந்தாளியாக நினைத்து அவரது உதவியைக் கோராமல் அவருக்கு உங்கள் மீது முழு உரிமை கொடுத்து அவர் சொல்வதைக் கேளுங்கள் என்று ஆலோசனைக் கூறுகிறார். இப்போது இயேசு கூறிய அனைத்தும் எந்தக் கேள்வியும் இன்றி நிறைவேற்றப்படுகிறது. ஒருவேளை அந்த வேலைக்காரருக்கு திராட்ச ரசம் குறைவு பட்டதற்கும் கற்சாடிகளை தண்ணீராய் நிரப்புவதற்கும் உள்ள தொடர்பு புரியாமல் அவர் வார்த்தையை ஏற்பதற்கு கடினமாக இருந்திக்கலாம். ஆனால் தங்களை அவருக்கு முழுமையாக அர்ப்பணத்தபடியினால் அவர்கள் அதற்கு கீழ்ப்படிந்தார்கள் எனவே அங்கு குறைவு நிறைவாகியது.

நமது வாழ்விலும் இறைவனை இதுவரை வெறும் விருந்தாளியாய் வைத்து அவரிடம் அன்பு செலுத்தி வந்திருப்போமென்றால் இந்த லெந்துகாலத்தில் நம்மை அவருக்கு முழுமையாக அர்ப்பணம் செய்து அவர் மூலம் நாம் புத்துருவாக்கம் பெறுவோம்.

அன்புடையீர், லெந்து காலம் நாம் நமது வாழ்வில் புத்துருவாக்கம் பெறும் காலம். எனவே கடவுளுடன் நமக்கு உள்ள உறவை சிதைக்கும் பாவத்தினின்று விடுதலைபெற்று அவரால் மாற்றுருவாக்கம் பெறுவோம். அவரது தயவை வாய்ப்பாக எண்ணி நமது வாழ்வில் தவறி இருப்போம் என்றால் அவரது தயவை நாடி அதை பற்றிக்கொண்டு அவரது பிள்ளைகள் என்கிற உரிமையை பெறுவோம். கடவுளை நமது வாழ்வில் விருந்தினராக மட்டும் வைத்து அவரிடம் அன்பு செலுத்தி வந்தோம் என்றால் அவருக்கு நம்மை முழுமையாக சொந்தமாக்கி அவரால் வரும் நிறைவை அனுபவிப்போம். கடவுள் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துவாராக.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

| | | | |
|---|---|---|---|
| ஞா. | 113 | ஞா. | 137 |
| கீர். | 118 | கீர். | 138 |

**22-02-2023** சாம்பல் புதன் மற்றும் தவக்கால முதலாம் புதன்

# சிலுவை: மனமாற்றத்திற்கு ஓர் அழைப்பு

## Cross : A Call to Repentance

எசா. 1:16-20 | 2 கொரி. 7:8-16

திபா. 51 | மாற். 1:12-15



"காலம் நிறைவேறிவிட்டது, இறையரசே நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று கூறினார். (மாற். 1 : 15)

தவக்காலம் என்பது வசந்தகாலம் போன்றது. பழைய வாழ்வின் இலைகள் எல்லாம் உதிர்ந்து புதிய வாழ்வின் துளிர்கள் வரவேண்டும். ஆன்மிக வசந்த காலம் என்றறியப்படுகிற தவக்காலம் மனந்திரும்புதலின் காலம். "மனந்திரும்புங்கள்" என்பது இறைவன் நமக்குத் தரும் ஒரு தெய்வீக அழைப்பு. நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கும், இறைவனுடன் ஒப்புரவாவதற்கும் இந்த நாட்கள் இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாம்பல் புதன் அன்று தொடங்கும் தவக்காலம் நாம் இறைவனோடு நெருங்கி இணைய உதவும் உன்னத காலம்.

திருமறையில் சாம்பல் மனந்திரும்புதல், துக்கம், சுத்திகரித்தல் ஆகியவற்றின் அடையாளமாகக் காணப்படுகிறது (யோபு 42:3-6; தானி. 9:3; எரே. 6:26; யோனா 3:6; மத். 11: 21; லூக். 10:13; எபி. 9:13). தவக்காலத்தின் முதல் நாள் சாம்பல் புதன். இயேசுவின் நாற்பது நாட்கள் உபவாசத்தை முன்மாதிரியாகக் கொண்டு, ஈஸ்டருக்கு முந்தைய நாற்பது நாட்களும் லெந்து காலம் என்றறியப்படுகிறது. இந்தக் காலத்தில் வரும் ஆறு ஞாயிற்றுக்கிழமைகளும் ஓய்வுநாளாகக் கருதப்படுவதால், அந்த நாட்களை நாற்பது நாட்களுடன் சேர்த்துக் கணக்கிடுவதில்லை. சாம்பல் புதனன்று கடந்த வருட குருத்தோலை ஞாயிறு அன்று பயன்படுத்தப்பட்ட குருத்தோலைகள் எரிக்கப்பட்டு, அதிலிருந்து எடுக்கப்பட்ட சாம்பலைக் கொண்டு நெற்றியில் சிலுவை சின்னத்தை வரைவர். அயர்லாந்தில் இந்த நாள் "புகையிலைக்கு எதிரான நாளாக" அனுசரிக்கப்படுகிறது. தவக்காலத்தில் ஆடம்பர

வாழ்க்கை, அசைவ உணவு தவிர்க்கப்பட்டு, ஜெப, தவ, நோன்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம் வாழ்வில் நாம் எதிர்பார்க்கும் ஒரு புதிய மாற்றத்தை நமக்குப் பெற்றுத் தருவது இறைமகன் இயேசுவின் சிலுவை. இறைவன் தரும் நிலைவாழ்வை அடைய நாம் மனந்திரும்புதலின் காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்போம்

**மனம் வருந்த வேண்டும்** (Regretting for the Sins) (திபா. 51:1-4)

மனந்திரும்புதலின் காலத்தில் நாம் செய்த தவறுக்காக மனம் வருந்த வேண்டும். தவறுவது மனித இயல்பு. மனிதர்கள் தவறு செய்பவர்கள். ஏனெனில், இந்த உலகத்தில் மனிதர்களாய்ப் பிறந்த எல்லாரும் பாவிகள் (திபா. 51:5) எனத் திருமறை சொல்லுகிறது. அதாவது, "நேர்மையாளரே இல்லை... எல்லாரும் நெறிபிறழ்ந்தனர்; ஒருமிக்கக் கெட்டுப்போயினர். நல்லது செய்பவர் யாருமில்லை; ஒருவர்கூட இல்லை." என ரோமர் 3:10-ல் வாசிக்கிறோம். பாவம் என்பது நம்முடைய சுபாவத்திலேயே இருக்கிறது. எடுத்துக்காட்டாக, அகம்பாவம், ஜென்ம சுபாவம். தங்களுடைய தவறுகளுக்கு மேலோட்டமாக Sorry என்று சொல்லி வருந்துவோரும் உண்டு. வருத்தப்படாதவரும் உண்டு. ஆனால் தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தின மனிதர்கள் மாமனிதர்கள் (தாவீது, பேதுரு, பவுல்) என வரலாற்றில் போற்றப்பெற்றனர். மனம் வருந்துவதற்கு மனஸ்தாபமே அடிப்படை. நாத்தான் தீர்க்கதரிசி தாவீதிடத்தில் அவன் செய்த பாவங்களை உணர்த்திய போது உணர்வடைந்து தவறுகளுக்காக மனம் வருந்தினான் (திபா. 51). இளைய குமாரன் உவமையில் அவன் தந்தையிடமிருந்து சொத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு வெளியூர் போய் அனைத்தையும் அழித்து, வாழ வழியின்றி தவித்த போது, புத்தி தெளிந்து (லூக்கா 15: 17) தனது தவறை உணர்ந்து மனம் வருந்துகிறான். இஸ்ரவேல் மக்களைத் தமது சொந்த ஜனமாக கடவுள் அழைத்தார். அவர்களோ கடவுளின் வழிகளை விட்டுத் தங்களின் மனம்போன வாழ்க்கை வாழ்ந்தனர். பாவமுள்ள ஜாதி, பரஞ்சுமந்த ஜனம், பொல்லாதவர்களின் சந்ததி, பின்வாங்கிப்போனவர்கள் என அவர்களுடைய அவலநிலை ஏசா. 1:4-ல் சொல்லப்பட்டிருக்கிறது. எப்பொழுதெல்லாம் அவர்கள் கடவுளை விட்டுப் பிரிந்தார்களோ, அப்பொழுதெல்லாம் கடவுள் அவர்களை மனந்திரும்பும்படி தீர்க்கதரிசிகள் வழியாக "உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்"

(ஏசா. 1:15) என்று அழைப்பு கொடுத்தார். மனிதர்களின் பாவங்களுக்கு நிறமிருக்கின்றன, எடுத்துக்காட்டாக, விபச்சாரம் (Red Light Area); பச்சை பொய் (White lie), கரும்புள்ளி (Black mark). "உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன; எனினும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும்; இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன; எனினும் பஞ்சைப் போல் வெண்மையாகும்" (ஏசா. 1:18). ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்; நான் தூய்மையாவேன்; என்னைக் கழுவியருளும் உறை பனியிலும் வெண்மையாவேன் (திபா. 51:7) என தாவீது தன் பாவத்தின் நிறம் மாறும்படியாக மட்டும் அல்ல (Not just color change but eternal change) நிலையான மாற்றத்திற்காக கெஞ்சுகிறார். தன் மீது கறைபடிந்திருக்கிறது என்பதனை அறிந்த ஒருவரால் தான் அந்த கறையைப் போக்குவதற்கான முயற்சியை எடுக்கமுடியும். துடைத்தல் (Cleanse) தூய்மைப்படுத்துதல் (Clean), கழுவுதல் (Wash), சுத்திகரித்தல் (Purification), கறை நீக்குதல் (Remove stains) போன்ற வார்த்தைகள் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நாம் வருந்த வேண்டும் என்பதனைக் காட்டுகிறது. ஆண்டவரும் இஸ்ரவேலரின் பாவங்களைக் குறித்து வருத்தப்படுத்துகிறார் (ஏசா. 1:14). இரத்தத்தினால் நிறைந்தித்திருக்கும் கைகள் (ஏசா. 1:14), இரத்தத்தினால் கறைப்பட்டிருக்கும் கைகள் (ஏசா. 59: 3), அக்கிரமத்தால் கறைப்பட்டிருக்கும் விரல்கள் (ஏசா. 59: 3), பொய் நிறைந்திருக்கும் உதடுகள்(ஏசா. 59: 3), நியாயக்கேட்டை வசனிக்கும் நாவு (ஏசா. 59: 3) என ஒட்டுமொத்த பாவ வாழ்க்கைக்கும் வருந்த வேண்டிய நிலையில் இஸ்ரவேலர் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஷேக்ஸ்பியர் எழுதிய "மக்பத்" என்ற நாடகத்தில் லேடி மக்பத் அவரது கணவரான மக்பத்துடன் இணைந்து அந்நாட்டு அரசரைக் கொன்று பெரும் பாவத்தைச் செய்து, உறக்கமின்றி, குற்ற உணர்வுடன் அவள் சொன்ன உலகப் புகழ் பெற்ற வார்த்தைகள்: Here's the smell of blood still. All the perfumes of Arabia will not sweeten this little hand. "இன்னும் இரத்த வாடை இருக்கிறது. அரேபியாவின் அனைத்து வாசனை திரவியங்களும் இந்தச் சிறிய கையைச் சுத்திகரிக்க முடியாது" என்று கூறுகிறார். இரத்த கறைகளைப் போக்க இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்கிருக்கிறது என்கிற நம்பிக்கை நமக்கிருக்கிறதா? கொரோனா காலங்களில் கிருமி நாசினியைக் கொண்டு நம்முடைய கைகளைச் சுத்தம் செய்தோம். ஆனால் நம்முடைய பாவங்களைச் சுத்தம் செய்ய என்ன பரிகாரம் இருக்கிறது? பாவங்களைத் துணிகரமாக

செய்யும் நாம் அதற்காக வருந்துகிறோமா? அவரே மாசற்ற இயேசு கிறிஸ்து. நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே; நம் பாவங்களுக்கு மட்டும் அல்ல அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே. (I யோவா.2: 2) என்பதை உணர்ந்து நம் பாவங்களுக்காக வருந்துவோம்.

**மனம் திருந்த வேண்டும்** (Repenting from the Sins) (லூக். 15:18-19)

இரண்டாவதாக, மனம் திருந்த வேண்டும். மனம் திருந்துதல் என்பது மிக முக்கியமான காரியம். செய்த தவறுகளுக்கு வருந்துவதோடு, மீண்டும் தவறுகளோ, பாவங்களோ செய்யாமல், திருந்தவேண்டியதுதான் அதிமுக்கியமான தேவை. வெறுமனே வருந்துவது, செய்த பாவத்தை அவ்வருத்தத்துக்குப் பின்னால் மறையச் செய்திடும். ஆனால், "அறிக்கை செய்து விட்டுவிடுவதே" (I யோவா.1:9) வேதத்தில் வலியுறுத்தப்படுகிறது. இளைய குமாரன் புத்தி தெளிந்த போது தந்தையிடம் வந்து தனது பாவத்தை அறிக்கையிடுகிறான் (லூக். 15:18-19). விட்டுவிடப்படாத பாவங்கள், நம்மை நிழல் போல் தொடர்ந்து விடாது பிடிக்கும். அதாவது முதலில் மனஸ்தாபம் வரவேண்டும். அது தான் நம்மை மனம் திருந்துதலை நோக்கி வழிநடத்தும். மனஸ்தாபப்படும்போது தான் தந்தையின் விருப்பத்துக்கு நம்மை அர்ப்பணிக்க முடியும். ஆனால் வெறும் மனஸ்தாபம் மட்டுமே நம்மை மீட்புக்குள் கொண்டு செல்லாது. யூதாஸ் ஸ்காரியோத்து. இயேசுவைக் காட்டிக் கொடுத்தபின் மனம் வருந்தினான் (குற்றமில்லாத இரத்தம்) (மத். 27:4). மனம் வருந்திய அவன் பாவத்திலிருந்தும், செய்த குற்றத்திலிருந்தும் விடுபடக்கூட விரும்பாமல், தற்கொலை செய்து கொண்டு செத்துப் போனான் (மத். 27:5). அவனுடைய மனஸ்தாபம் அவனை மனம் திருந்துதலுக்குக் கொண்டு செல்லவில்லை. "திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்? வருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம்?" என்ற கவிஞர் வாலியின் அர்த்தமுள்ள வரிகள் திருந்துவதற்கான எச்சரிப்பை நமக்குத் தருகின்றன. இயேசுவை மறுதலித்த பேதுருவின் மனமோ, தேவபாதத்தில், திருந்தும்படி மனங்கசந்து அழுதது (மத். 26:75). செய்த தவறுக்கு வருந்தினால் மட்டும் போதாது. திருந்தவும் வேண்டும். யூதாஸ் வருந்தினார் ஆனால் பேதுரு திருந்தினார். மனம் திருந்துதலும் மன்னிப்பும் என்றுமே ஒன்றாக இணைந்து நிற்கின்றன. உண்மையாகவே நாம் நம் பாவங்களுக்காக மனம் வருந்தி, திருந்தி இனி இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று தீர்மானம் எடுத்துக்கொண்டு வாழும்போது நன்மைகளும் உண்டாகின்றன.

நினிவே நகர மக்கள் பாவ வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். எனவே அவர்களை அழிக்க இறைவன் முடிவெடுத்தார். அதை அறிந்த மக்கள் மனஸ்தாபப்பட்டு, மனம் திரும்பினார்கள். அவர்கள் மனம் திரும்பியதைப் பார்த்த இறைவன் மனஸ்தாபப்பட்டார். இந்நாட்களில் மத ரீதியான, மாம்ச ரீதியான மனந்திரும்புதல் தான் அதிகமாகப் பிரசங்கிக்கபடுகிறது. மனந்திருந்திய வாழ்க்கையில் இதயத்தில் மாற்றம் ஏற்படுகிறது. மனந்திரும்புதல் என்பது மத மாற்றமல்ல (Not conversion but character change) அது மனமாற்றம். தவறு செய்த தாவீது மனம் திருந்துகிறார். திருந்திய தாவீது சொல்லுகிறார்: அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். (திபா. 51:13) என்று. ஆகவே, எல்லாரும் மனம் திரும்பி பாவங்களிலிருந்து குணப்படும்படி எல்லாருக்கும் இந்த சுவிஷேசம் அறிவிக்கப்படுகிறது. பயணம் செல்லும் ஒருவர் தான் அதுவரை நடந்துசென்ற பாதை தவறானது என உணர்ந்ததும் உடனேயே திரும்பி, வந்த வழியே மீண்டும் நடந்து சரியான பாதையில் போகிறார் என்பது "மனம் திரும்புதல்" ஆகும். ஒருவர் பாவம் செய்யும் போது சௌகரியமாக இருக்க முடியாது சாக்கடை பன்றிக்குச் சௌகரியம் ஆனால் ஆட்டுக்குட்டிக்குச் சௌகரியமில்லாத இடம். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது (லூக்கா 15: 7, 10) என்று சொல்லுகிறது. நம்முடைய பாவங்களுக்காக மனம் வருந்திய நாம் மனம் திருந்தியிருக்கிறோமா?

**மனம் பொருந்த வேண்டும்** (Rejoining with the Saviour) (ஏசாயா 1:19)

மூன்றாவதாக, மனம் பொருந்த வேண்டும். நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். மனம் வருந்தி, திருந்திய பின்பு இறைவனோடு மனம் பொருந்தி வாழ வேண்டும். மனம் திரும்புதலின் அழைப்பு தேசத்தின் நன்மைக்கானது. "நீங்கள் மனம் திரும்பினால் தேசத்தின் நன்மையைக் காண்பீர்கள்" (ஏசா. 1:19). எங்கெல்லாம் மனமாற்றம் நிகழ்கிறதோ அங்கெல்லாம் தேசம் மிகப்பெரிய நன்மையைப் பெற்றுக் கொள்கிறது. மோசே தனியே வாழ்ந்து கொண்டிருந்தபோது கடவுள் அவரை அழைத்தார். எரியும் முட்செடியில் அவரிடம் பேசுகிறார். இஸ்ரேல் மக்கள் கண்ணீர் கவலை துக்கத்தோடு இருக்கின்றனர். ஆனால் மடிந்து

போகவில்லை. அந்த மரண வேதனையில் இருக்கும் மக்களின் விடுதலைக்கு இறைவன் மோசே எனும் மனிதனுடைய மனதை மாற்றினார். யோனா எனும் ஒரு இறைவாக்கினரின் மனமாற்றத்தால் நினிவே தேசம் நன்மையைப் பெற்றுக் கொண்டது.

மனம் திரும்புதலின் அழைப்பு மகிழ்ச்சிக்கானது. யார் ஒருவர் இந்த மனம் திரும்புதலின் அழைப்பைப் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்கிறார்கள். கூடவே அவர்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கின்றனர். இளைய குமாரனின் மனம் திரும்பிய வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைத்தது. அத்துடன் தந்தையையும், கூட இருந்தவர்களையும் அதிக மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. "கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்; அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்; அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்; ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர்" என்கிறது (ஏசாயா 55:7).

கிறிஸ்தவக் கம்பன் என்று தமிழ் மக்களால் பாராட்டப்பட்ட H.A. கிருஷ்ண பிள்ளை ஹென்றி ஆல்பர்ட்டாக மனம் மாறினார். இரட்சண்ய யாத்திரீகம் போன்ற பல நூல்களை எழுதியவர். முன்பு கிறிஸ்தவத்தின் மீது தீராத வெறுப்பு கொண்டவர். கால்டுவெல் ஐயர் அவர்களின் அன்பு, இரக்கம், நடத்தையில் காட்டிய ஒழுக்கம் ஆகியவை இவரை வெகுவாகக் கவர்ந்தன. ஹக்ஸ்டபிள் ஐயர் இவரது ரோல் மாடலாக இருந்தார். இந்நிலையில் இவரது நண்பரும், சகோதரரும் கிறிஸ்தவர்களாக மாறினர். குடும்பத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. இவரது மனமாற்றத்தை அறிந்த மனைவி, அழுது கூக்குரலிட்டுத் தாய் வீட்டிற்குச் சென்று விட்டார். 3 பெண் குழந்தைகளுடன் தவித்த சூழலில், சத்தாய் நிஷ்களமாய்...என்ற முதல் கீர்த்தனையை எழுதினார். இவரது அன்பு, பொறுமை ஆகியவை மனைவியை மனம் மாறச் செய்தன. மனைவியும், குழந்தைகளும், தாயும் கிறிஸ்தவர்களாயினர். மிஷனறிகளின் மாதிரி வாழ்வு கிருஷ்ண பிள்ளையை மனம் மாற்றியது. அவரின் முன்மாதிரியான வாழ்வு அவரது மனைவியையும், தாயையும், குழந்தைகளையும் மாற்றியது. ஒரு தனிமனிதனின் மனம் திருந்திய வாழ்வு இறைவனோடும் தன் குடும்பத்தினரோடும் மனம் பொருந்தி வாழ வைத்தது.

இவ்வுலகில் பாவச்சேற்றில் உழன்று கொண்டிருந்த மனுக்குலத்தை மீட்க பிதாவானவர் தமது குமாரன் இயேசுவை மானிடராக அனுப்பினார். "மனம் திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபம்" என்று அவர் பிரசங்கித்தார் (மாற்று 1:15). தம்முடைய சீடர்களை "மனம்திரும்புங்கள்" என்ற செய்தியுடன் அனுப்பினார். ஆனாலும் ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசுவைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். இயேசு மரித்தார் கடவுளோ அவரை உயிரோடு எழுப்பினார். பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்தவராக இன்றும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்குப் பாவமன்னிப்பின் வாழ்வைத் தருகிறார். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய படைப்பு. பழையவை ஒழிந்து போயின, எல்லாம் புதியவை ஆயின என்று 2 கொரி. 5:17 சொல்லுகிறது. கிறிஸ்துவுக்குள் வாழ்வு என்பது புதிய வாழ்வு- மனம்திரும்பிய வாழ்வு. புதிய வாழ்வைப் பெற்ற நாம் இந்தத் தவக்காலத்தில் நாம் செய்த பாவங்களுக்கு மனம் வருந்தி, அவைகளிலிருந்து மனம் திருந்தி, இறைவனிடம் மனம் திரும்பி மனம் பொருந்தி புதுவாழ்வு வாழ நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

முனைவர். திருமதி. **ஷோபனா கின்சன் பெல்**

| 𝄞 | ஞா. | 115 | ஞா. | 189 |
|---|---|---|---|---|
| | கீர். | 293 | கீர். | 296 |

# தவக்கால புதன் & வெள்ளி அருளுரைகள் சிந்தனைப் பொருள் அறிமுகம்

2023-ஆம் ஆண்டின் தவக்கால வாழ்வை வலுப்படுத்த, தவக்கால புதன்கிழமைகளில், **“நோன்பு”** என்ற கருப்பொருளை மையப்படுத்தியும், தவக்கால வெள்ளிக்கிழமைகளில் **“கடவுள் அருளும் அனைத்துப் படைக்கலன்கள்”** என்ற கருப்பொருளை மையப்படுத்தியும் தியான உரைகள் தரப்படுள்ளன.

‘நோன்பு’ என்ற வார்த்தைக்கு எபிரேயத்தில், “சோம்” (som) என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. “சும்” (sum) என்றால், ‘நோன்பிருப்பது’ என்று அர்த்தம். ‘நோன்பு’ என்ற வார்த்தைக்கு கிரேக்கத்தில் “னெஸ்டிஸ்” (Nestis) அல்லது, ‘னெஸ்டியா’ (Nesteia) என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. “நோன்பிருப்பது” என்பதற்கு “னெஸ்டியோ” (Nesteuo) என்ற கிரேக்க வார்த்தையும் பயன்படுத்தப்படுகிறது. ‘ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உண்ணும் உணவையும், குடிக்கும் பானத்தையும் தவிர்த்தல்’ என்பது நோன்பின் பொருள். உணவைக் குறைத்தல், உண்ணா நிலை மற்றும் பிற புலனடக்க கட்டுபாடுகளைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது சமயச்சடங்கின் ஒரு பகுதியாகும். யூதர்கள் சூரியன் உதிக்கும் நேரம் முதல் மறையும் நேரம் வரை நோன்பிருந்தனர். கடவுளின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்திடவும், தங்கள் மனம் வருந்துதலின் அடையாளமாகவும், மக்கள் பார்க்க வேண்டுமெனவும் மூன்று வகை மனநிலையுடன் நோன்பிருந்தனர். நோன்பிருத்தலை பக்தி வைராக்கியத்தின் உயர்நிலை எனக்கருதினர். திருமறை அடிப்படையிலும், திருச்சபையின் மரபுப் பின்னணியிலும் தவக்காலம் என்னும் நாற்பது நாள்கள் நோன்புக் காலமாகக் கருதப்பட்டு வருகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் மக்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனம்வருந்தி, சாம்பலை உடலெங்கும் பூசி, சாக்குஉடை உடுத்தி, தலைக்கு எண்ணெய் பூசாமல் சாம்பலில் உட்கார்ந்து நோன்பு இருப்பார்கள். எனவே, தவக்காலம் என்பது தவறுகளை உணர்ந்து மனந்திரும்பவும், நம்மை நாமே ஆய்ந்தறிந்து ஆண்டவரின் வழிக்குக் கொண்டுவரவும் தரப்படுகிறது.

நோன்பு கடைப்பிடிக்கும் காலத்தில் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த கட்டுப்பாடுகள் ஒரு பகுதியாக அமைந்தாலும், ஆன்மிகத்தை நெறிப்படுத்தவும் இறைவனில் உறுதிப்பட்டு வளரவும் 'கடவுள் அருளும் படைக்கலன்கள்' முக்கியமானவை. திருமறையில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து படைக்கலன்களையும் (எபே 6:10-17) தவக்காலத்தில் அணிந்துகொள்வது நெறிதவறாமல் வாழ்ந்து ஆன்மாவைக் காத்துகொள்ள உதவும். கிறிஸ்தவ வாழ்வின் போராட்டம் என்பது இருளின் ஆற்றல்களோடும், அலகையோடும் உள்ள போராட்டம். கடவுளின் ஆவியால் இயக்கப்படுபவர்கள் தவக்காலங்களில் அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நின்று, தாங்கள் சந்திக்கின்ற போராட்டங்களை எதிர்கொள்ள உண்மை, நீதி, அமைதி, நம்பிக்கை, மீட்பு மற்றும் கடவுளின் வார்த்தை ஆகிய கடவுள் அருளும் படைக்கலங்களை அணிந்து அவரில் வலிமைபெற வேண்டும். தவக்காலங்களில் இவைகளை அணிந்துகொண்டு ஆன்மிகத்தை உறுதிப்படுத்தி முன்னேறுவோம்.

அருள்திரு. **T.P. ஸலீம் தங்க குமார்**

**24-02-2023** தவக்கால முதலாம் வெள்ளி

# உண்மை என்னும் இடைக்கச்சை

மத்தேயு 25 : 14 - 30



"ஆகையால், உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்டு" (எபே 6 : 14a)

உண்மையும் பொய்மையும் ஒருநாள் குளிக்கச் சென்றன. இரண்டிற்கும் இடையே ஒரு போட்டிக்கான உடன்பாடு ஏற்பட்டது. யார் அதிகநேரம் தண்ணீருக்குள் மூழ்கியிருப்பது என்பது தான் போட்டி. உண்மையும் பொய்ம்மையும் போட்டி போட்டுக் கொண்டு தண்ணீர்ருக்குள் மூழ்கின. சற்று நேரத்திற்குப் பின்னர், பொய்மை, உண்மைக்குத் தெரியாமல் தண்ணீரிலிருந்து வெளியேறி தனது ஆடைக்குப் பதிலாக கரையிலிருந்த உண்மையின் ஆடையை அணிந்து கொண்டு ஊருக்குள் சென்றுவிட்டது. நீண்ட நேரத்திற்குப் பின்னர், தண்ணீருக்குள்ளிருந்து வெளிவந்த உண்மை, பொய்மையைக் காணாமல் ஏமாற்றத்தோடு கரையேறியது. கரைக்கு வந்து பார்த்தபோது தனது ஆடையைக் காணாமல் பதறியஉண்மை, வேறு வழியின்றி அங்கிருந்த பொய்மையின் ஆடையை அணிந்து கொண்டு ஊருக்குள் சென்றது. அது முதல் ஆடையைக் கொண்டே எல்லோரும் உண்மையை, பொய்மையாகவும், பொய்மையை உண்மையாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என கதையை நிறைவு செய்கிறார் பாரசீகக் கவிஞர் கலீல் ஜிப்பரான்.

நாம் வாழும் காலத்தைத் தத்துவவியலாளர்கள் "உண்மைக்குப் பிந்தையகாலம்" (The Post Truth Period) என்று அழைக்கின்றனர். அதாவது, உண்மையின் வடிவில் பொய்ம்மை உலாவரும் காலம் என்கின்றனர். ஆன்மிகம் தொடங்கி அரசியல், அயல்நாடு என பொய்மை உண்மையைப் போல் பாவனை புரிந்து கொண்டிருக்கின்றது. இச்சூழலில் உண்மையின் இயல்பை அறிந்து கொள்ளவும்,

இடைக்கச்சையாகக் கட்டிக் கொள்ளவும், உண்மையாகத் திகழும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவும் அவர் நம்மை அழைத்துள்ளார்.

திருமறையில் உண்மை என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. "கடவுளின் வார்த்தையே உண்மை", " கடவுள் உண்மையுள்ளவர்", "கடவுளின் உண்மையே கவசமும் கேடகமுமாகும்", எல்லாவற்றுக்கும் நிறைவாக, "கிறிஸ்துவே உண்மை", (திபா 119: 160; 85: 11; 89: 1; 91: 4; யோவா14: 6) எனக் குறிப்பிடப்படுள்ளது.

**1. வாழ்வின் நடுவமான உண்மை** (Truth is the Center of Life)

எபே 6-ஆம் அத்தியாயத்தில் தூய பவுலார் கிறிஸ்தவப் பற்றுறுதியாளரை, போர்க்களத்தில் போர் புரியும் ஒரு போர் வீரரோடு ஒப்பிட்டு, போர்வீரர் எத்தகைய ஆயத்தத்தோடும் ஆயுதங்களோடும், படைக்கலன்களோடும் இருப்பாரோ அவ்வண்ணமாய் ஒவ்வொரு கிறிஸ்தவரும் இருக்கவேண்டும் என அறிவுரை வழங்குகிறார். ஒரு போர் வீரருக்கு இடைக்கச்சை எவ்வளவு முக்கியமோ, அதற்கு மேலாக ஒரு கிறிஸ்தவருக்கு உண்மை முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றார்.

தூயபவுலார், இங்கு இடையில் (Waist) ஆடையைத் தாங்கி இறுகப் பிடிக்கும் வாரைக் (belt) குறிப்பிடவில்லை. மாறாக, போர்க்களத்தில் போர்புரியும் ஒரு வீரர் அணியும் இடைக்கச்சையைப் பற்றிப் பேசுகிறார். கிரேக்க - உரோமைக் கலாச்சாரத்தில் போர்வீரர் அணியும் இடைக்கச்சை இராணுவத் தளவாடங்களில் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் போருக்கான முக்கிய ஆயுதங்களான வாள் மற்றும் குறுவாளைத் தாங்கி நிற்பது போர்வீரர் இடையில் அணிந்திருக்கும் இடைக்கச்சையாகும் (1சாமு 17: 39; 18: 4; 25: 13; நெகே. 14: 18) ஒரு போர் வீரர் தவறு செய்கின்றபோது அவருக்கு வழங்கப்டும் இழிவான தண்டனைகளில் ஒன்று, அவரது இடைக்கச்சையைக் கழற்றும்படி செய்வது தான். அந்த அளவிற்கு இடைக்கச்சை ஒரு போர் வீரருக்கு முக்கியமான ஒன்றாகும்.

பவுலார் அந்த இடைக்கச்சையை உண்மைக்கு உருவகமாகக் குறிப்பிடுகிறார். எவ்வாறு இடை உடலின் நடுவில் இருக்கின்றதோ அவ்வாறு, உண்மை ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வாழ்வின் நடுவமாக (மையமாக) இருக்கவேண்டும் என அறிவுரை வழங்குகிறார். எவ்வாறு இடையில் கச்சை கட்டப்படுகிறதோ, அவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவரும்

உண்மைக்குக் கட்டுப்படுகிறவர்களாயும் இருக்கவேண்டும் என அழுத்தம் தருகின்றார்.

பொய்மைகளும் போலிகளும் மலிந்து காணப்படுகிற இவ்வுலகில் உண்மைக்கு இலக்கணமாக, உண்மையின் வடிவமாகத் திகழும் கிறிஸ்துவை வாழ்வில் நடுவமாக்கி (மையமாகக் கொண்டு) உண்மையாகிய அவருக்குச் சான்று பகர நம்மைஅழைக்கிறார்.

## 2. வாழ்வின் நங்கூரமான உண்மை

கப்பல் நடுக்கடலில் அலைகளாலும் பெருங்காற்றினாலும் தத்தளிக்காமல், அலைவுபடாமல் ஓரிடத்தில் நிலைத்து நிற்பதற்கு நீருக்குள் இடும் கனமான இரும்புக் கருவியே நங்கூரமாகும். இவ்வுலகில் தீமைகளும், போராட்டங்களும், இருளில் ஆற்றல்களும் நம்மை நெருக்குகின்றபோது, அலைக்கழிக்கும்போது, நாம் அசையாமல், அலைவுப்படாமல் நிலைத்து நிற்பதற்கு உண்மையே நங்கூரமாயிருக்கின்றது.

கடவுள் நம்மிடம் உள்ளத்து உண்மை (திபா 51: 6) கொஞ்சத்திலே உண்மை (மத் 25: 2;1, 23), “ஆம்” என்றால் “ஆம்” எனவும், “இல்லை” என்றால் “இல்லை” எனவும் சொல்வது; ஏனெனில் அதற்கு மிஞ்சினது தீயோனிடத்திலிருந்து வருகிறது (மத் 5: 37) என்கிறார்.

ஏசா 11-ஆம் அத்தியாயத்தில் ஈசாயின் மரபிலிருந்து வரும் அரசரின் ஆட்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எளியோருக்கு நீதி வழங்குபவராகவும், கொடியோரையும் தீயோரையும் தண்டிப்பவராகவும் விளங்குவார். நேர்மை அவருக்கு அரைக்கச்சை; உண்மை அவருக்கு இடைக்கச்சை (எசா 11: 5) என்கிறார்.

இயேசுகிறிஸ்து உண்மையை அரைக்கச்சசையாகவும் இடைக்கச்சையாகவும் கட்டிக்கொண்டார். தீமையை எதிர்த்து நிற்கும் உண்மையாகவே திகழ்ந்தார். இவ்வுலகில் முதல் பாவமே (மூலப் பாவமே) உண்மையைச் சந்தேகித்ததால் விளைந்தது (கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா? - தொநூ 3: 1). உண்மையைச் சந்தேகித்ததால், பொய்மைக்குத் துணைபோனதால் விளைந்த பாவத்தை இயேசுகிறிஸ்து உண்மையாய்த் திகழ்ந்து அதைப் போக்கவே உலகத்திற்கு வந்தார். ஆனால் அவரை போலிகள் நிறைந்த உலகம்

அடையாளம் கண்டிருதென்றால், பொய்மைக்கும் போலிகளுக்கும் துணை போயிருக்கமாட்டார்கள்.

கவிக்கோ அப்துல் ரகுமான், அடையாளம் காணப்படாமல் ஆதரவற்று விடப்பட்டஉண்மையைக் குறித்து ஒரு கவிதை எழுதியுள்ளார். அநாதை என்ற கவிதையில் அநாதையை ஆதரிப்பார் யாருமில்லையா? என்று ஒருவர் கடைத்தெருவில் கூவிக் கொண்டிருந்தார்.

யார் அந்த அநாதை? என்று கேட்டேன்

உண்மை என்றவன்,

கடைத்தெருவில் அது அநாதையாக அழுது கொண்டிருந்தது அதை யாருமே அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று கூறினான்.

ஏன்? என்றேன்.

நேற்றியில் திருநீறோ நாமமோ இல்லை. மார்பில் சிலுவை இல்லை, தலையில் தொப்பி இல்லை அதனால் யாரும் அதை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றான்

நீ மட்டும் எப்படி அடையாளம் கண்டு கொண்டாய் என்று கேட்டேன் யாருமே அடையாளம் கண்டு கொள்ளாததிலிருந்து அதை நான் அடையாளம் கண்டு கொண்டேன். மேலும் அதன் உடலில் சிலுவையில் அறையப்பட்ட காயங்களும் குண்டு காயங்களும் இருந்தன. கழுத்தில் தூக்குக் கயிற்றன் வடு இருந்தது. அதன் உதடுகள் விஷத்தால் கறுத்திருந்தன் அதனாலும் அடையாளம் கண்டு கொண்டேன் என்றான். உண்மைக்கும் பொய்மைக்குமான வேறுபாட்டைஅறியவும் உண்மையை அடையாளம் காணவும், ஏற்றுக்கொள்ளவும் அழைக்கப்படுகிறோம்.

உண்மைக்கும் பொய்மைக்குமான வேறுபாடு தெரிந்திருந்தால் முப்பது வெள்ளிக்காசுக்காக யூதாசு இயேசுவைக் காட்டிக் கொடுத்திருக்கமாட்டார். உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே உள்ள வேறுபாடு தெரிந்திருந்தால், அந்த மனுஷனை அறியேன் என்று பேதுரு சபிக்கவும் சத்தியம் செய்திருக்கவுமாட்டார்.

உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே உள்ள வேறுபாடு தெரிந்திருந்தால், பரபாசை விடுதலை செய்யும், இயேசுவைச் சிலுவையில் அறையும் என்று யூதர் சத்தமிட்டிருக்கமாட்டார்கள்.

உண்மைக்கும் பொய்மைக்கும் வித்தியாசம் தெரிந்திருந்தால், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்று சொல்லியிருக்கமாட்டார்கள்.

உண்மைக்கும் பொய்மைக்கும் வேறுபாடு தெரிந்திருந்தால் "இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என அறிவித்த பின்னர், கையைக் கழுவி அவரை சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கமாட்டார்கள்.

உண்மைக்கும் பொய்மைக்கும் வித்தியாசம் தெரிந்திருந்தால், அநியாயக்காரனை ஆண்டவனாகவும் ஆண்டவரை எத்தனாகவும் கண்டிருக்கமாட்டார்கள். உண்மைக்கும் பொய்மைக்குமிடையே உள்ள வேறுபாடு தெரிந்திருந்தால், மரணத்தின் மீது அதிகாரம் படைத்தவரை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கமாட்டார்கள்.

இத்தனைக்கும் நடுவில், இயேசு கிறிஸ்து எதற்காக உலகிற்கு அனுப்பப்பட்டாரோ அந்தநோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர் உறுதியாக இருந்தார். காட்டிக் கொடுத்தல், அவமானப்படுத்தப்படுதல், நித்தித்தல், தாம் நம்பியிருந்தோரால் கைவிப்படுதல் உமிழப்படுதல் சிலுவையறைப்படுதல் எனத் தொடர்துன்பங்களினால் மனம் அலைவுபடாமல் பிதாவின் அன்பில் நிலைத்திருக்க உண்மையை அடித்தளமாகக் கொண்டார்; உண்மையின் அர்த்தமாகத் திகழ்ந்தார். சத்தியத்தின் சத்தமாகவும் அர்த்தமாவும், உண்மையாகவும் விளங்கும் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு உண்மையைத் தரித்துக் கொள்வோம். உண்மையாகிய கிறிஸ்து நம்வாழ்வில் நடுவமாகவும் நங்கூரமாகவும் திகழ்வாராக!

திரு. B. **சாம் ஜெபசிங்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 78 |
| | கீர். | 121 |


**26-02-2023**

உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு &
தவக்கால முதலாம் ஞாயிறு

# தூய்மையாக்கும் கிறிஸ்து

## The cleansing Christ

| | |
|---|---|
| செக். 13 : 1-9 | I யோவான் 1 : 5-10 |
| தி.பா. 130 | மாற். 1 : 40-45 |



மாறாக நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்துக் குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். (I யோவான் 1 : 9 (a))

தூய அவிலா தெரெசா, தான் எழுதிய நிறைவழி என்னும் புத்தகத்தில் நாம் ஏதாவது தவறு செய்யும்போது, நான் கடவுளல்ல; வானிலிருந்து வந்தவனல்ல; தூயவராய் இருப்பதற்கு நான் என்ன கடவுளா? என்று சொல்வோமானால் அந்த வார்த்தையே நமக்குப் பாவத்தைச் சம்பாதித்துத் தருகிறது. மாறாக, இறையாற்றலின் உதவியுடன் நாம் முயற்சி செய்தால் நாமும் தூயவராகலாம் என்பதை எடுத்துச் சொல்கிறார். நான் பாவி, நான் பாவி என்று எத்தனை நாட்கள் சொல்லிக் கொண்டே இருப்பீர்கள்? நீங்கள் தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமான நான் தூயவர் என்பதை லேவி. 19 : 2-ல் பதிவு செய்கிறார்.

எபிரேய மொழியில் தூய்மையாக்கு எனப் பொருள்படும் ஹிக்டிஷ் (Hiqdish) என்னும் புறவினை தூய்மை எனப் பொருள்படும் கோடெஷ் (Qodesh) என்னும் பெயர் சொல்லிலிருந்து எழுந்ததாகும். கோடெஷ் எனும் எபிரேயச் சொல்லின் பொருள் வேறுபடுத்துதல் என்னும் பொருள்கொண்டது. கடவுள் மாட்சிமையின் உயர்வையும் மனித வாழ்க்கையின் இழிவையும் இப்பொருள் எடுத்துக்காட்டுகிறது. தெய்வத்துடன் தொடர்புடைய யாவும் தெய்வத்தன்மை வாய்ந்தவையாதலால் அவை பாவச்சூழ்நிலையினின்று வேறுபடுத்தவேண்டும் அல்லது தூய்மையாக்கப்பட வேண்டும். தீட்டிலிருந்து தூய்மைபெற வேண்டும். பழைய ஏற்பாட்டில் பிறப்பு, இறப்பு, ஆண் - பெண் எனப் பால் சார்ந்தவை, தொழுநோய், சிலை வணக்கம், சில விலங்குகள் யாவும் தீட்டானவை (எண். 19 : 11, இ.ச. 26 : 14; I சாமு. 21 : 4; லேவி. 15 : 18, இ.ச. 14). பழைய ஏற்பாட்டில்

தீட்டு அகற்ற பல வழிகளை வகுத்துக்கூறுவதைக் காணலாம். இவற்றின்படி தூய்மையாக்கப்பட்டோர் கடவுளைக் காணலாம். லேவி. 16 : 1; விப. 19 : 10, எண். 8 : 18, கழுவுதல் முக்கிய இடம் பெறுகிறது. வெளிப்படையான சடங்காச்சாரங்கள் இந்த வேறு பிரிப்பில் முதன்மை பெற்றதைக் கண்ட இறைவாக்கினர் இதைக் கண்டனம் செய்தனர். ஏசாயா 1 : 15, எரே. 33 : 8; திபா. 51 : 8, பழைய ஏற்பாட்டுச் சடங்குகள் வெளியரங்கமான உடல் தூய்மையை மட்டும் தரக்கூடும். ஆனால் கிறிஸ்துவின் குருதியோ பாவங்களை நீக்கும். தூய்மையாக்குதலை உண்டுபண்ணும்.

புதிய ஏற்பாட்டில் எல்லா உணவையும் உண்ணலாம் தி.ப. 10 : 15 தீயது என எண்ணப்பட்ட விலங்குகளைத் தூய்மையானவை எனக் கருதி உண்ணவும் கட்டளையிட்டார் மாற். 7 : 9 தூய்மையான உள்ளத்தார் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் மத். 5 : 8. தீமை செய்தோர் கடவுளைக் கண்டதில்லை யோ. 1 : 11. உண்மையான தூய்மை என்பது மனம், உடல் மற்றும் ஆன்மாவைச் சுத்தம் செய்வது. இதற்கு ஆன்மீகப் பாதையில் செல்லவேண்டும். தீமைகளை விலக்கி நற்பண்புகளை அனுமதிக்கவேண்டும். தூய்மையான இதயமில்லாமல் தூய்மையான நடத்தைக்காக பாடுபடுவது அழுக்கு பாத்திரத்தின் வெளிப்புறத்தை மட்டும் சுத்தம் செய்வது போன்றது. உள்ளேதான் குழப்பமிருக்கிறது. இன்றைய திருமறைப் பகுதியின் வழியாக தூய்மையாக்கும் கிறிஸ்துவின் சிறப்பைச் சிந்திப்போம்.

### I **தூய்மையாக்கும் கிறிஸ்துவால் மனமாற்றம் :**

செக். 13 : 1 அந்நாளில் பாவத்தையும் தீட்டையும் நீக்கி தூய்மையாக்கும் நீரூற்று தாவீதின் குடும்பத்தாருக்கெனவும் எருசலேமில் குடியிருப்போருக்கெனவும் தோன்றும்.

இஸ்ரவேலுக்கு ஓர் அற்புதமான நாள் வரப் போகிறது. சகரியா அதை இஸ்ரவேலின் சுத்திகரிப்பு அல்லது தூய்மையாக்குதல் என்கிறார். இது அவர்களது வருங்கால வளத்தையும் மீட்பையும் மையமாகக் கொண்டது. யாவேயின் தூய்மை மனிதரைவிட்டுத் தூரமானதாக அல்ல; மனிதர் நடுவில் செயல்படும் ஒன்றாகக் காணப்படுகிறது. நான் தூயவராக விளங்கி மக்களெல்லாருக்கும் முன்பாக நான் மாட்சிமைப்படுவேன். லேவி. 10 : 3. அவ்விடத்தில் இஸ்ரவேலருக்குக் காட்சியளிப்பேன். அது என் மாட்சிமையினால் தூய்மையாகும் (யாத். 24 : 43). இங்கே இஸ்ரவேலர் பாவம் மற்றும் அசுத்தத்திலிருந்து மனம் மாற கடவுள் சகரியா மூலம் முன்னறிவிக்கிறார். சகரியா 12-ல்

எதிர்காலத்தில் கர்த்தருடைய நாள் என அழைக்கப்படும். அந்நாள் மகா உபத்திரவத்தின் நேரம். இஸ்ரவேலர் படுகொலைக்குப் பிறகும் எஞ்சியவர்கள் மனம் மாறி கிறிஸ்துவிடம் திரும்பப் போகிறார்கள் சகரியா 12 : 10. நான் தாவீது குடும்பத்தார் மேலும் எருசலேமில் குடியிருப்போர் மேலும் இரக்க உள்ளத்தையும் மன்றாட்டு மனநிலையையும் பொழிந்தருளுவேன் .....ஒரே பிள்ளையைப் பறிகொடுத்து ஓலமிட்டு அழுபவரைப் போலவும், இறந்துபோன தலைப்பிள்ளைக்காக கதறி அழுபவர் போலவும் மனம்கசந்து அழுபவர்கள் மனம் மாறுகிறார்கள்.

சகரியா 13-ம் அதிகாரத்தில் தேசத்தில் தூய்மையாக்குதல் நிகழ்கிறது. சகரியா 13 : 1-ல் தூய்மையாக்கும் ஒரு நீரூற்று திறக்கப்படும். தூய்மையான நீரூற்று - அழுக்குகள் அசுத்தங்களை அடித்துச் செல்கிறது. தேசத்தை அநீதி, பாவ அழுக்கிலிருந்து வேறு பிரிக்கிறது. சிலை வணக்கம் மற்றும் பொய் தீர்க்கதரிசிகளின் தேசத்தைக் கடவுள் எவ்வாறு சுத்தப்படுத்துவார் என்பதைத் தூய நீரூற்றோடு ஒப்பிட்டு விளக்குகிறார். இந்த மனிதர்கள் வெட்கமடைந்து நாங்கள் உண்மையான தீர்க்கதரிசிகள் என்று மக்களை ஏமாற்றுவதற்காக அணிந்திருந்த முகமூடிகளை அவிழ்த்து விடுங்கள். தவறான கோட்பாடு தூய்மையற்ற வாழ்வோடு தொடர்புடையது (4 : 6). தாவீது மற்றும் எருசலேமின் வீட்டைச் சுத்தபடுத்துவதற்காகவும், அவர்களது மனமாற்றத்திற்காகவும் சுத்தமான நீரூற்றைக் கடவுள் திறக்கிறார். இதில் அரசக் குடும்பம் மற்றும் நாட்டின் பாமர மக்களும் தூயவர்களாக சுத்திகரிக்கப்பட சுத்தமான குளியல் அல்லது கழுவுதல் அவசியம். இதற்குக் கடவுள் தண்ணீர் வழங்குகிறார். தீர்க்கத்தரிசிகள் உயிர்தப்ப விவசாயி என பொய் சொன்னார்கள்; சிலைவணக்கக்காரர்கள் பெற்றோரால் ஏற்படுத்தப்பட்ட பலத்த காயங்களைச் சகித்தார்கள். நண்பர்களிடம் சிறுகாயம் என பொய் சொல்லித் தப்ப முயன்றனர். சகரியா பொய்களைக் களைந்து மெய்யைப் பின்பற்றவும், மனந்திரும்பவும் அழைப்பு விடுகிறார். தீர்க்கன் வழியாக சுத்திகரிப்பின் ஆறு புரண்டோடியது. அரசனையும் சுத்திகரித்தது. "திறக்கப்பட்ட நீரூற்று" எபிரேயத்தில் தொடர்ச்சியான நிரந்தரமான திறப்பு என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இப்போது "கல்வாரியின் சுத்திகரிப்பு நீரூற்று" திறக்கப்பட்டிருக்கிறது. அது ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்துகிறது.

பவுல் சொல்கிறார் விசுவாசிகளாகிய நாம் அவருடைய ரத்தத்தில் களங்கமில்லாமல் கழுவப்பட்டுப் பரிசுத்தமாகிறோம் (எபி. 10 : 10). இயேசுவின் இரத்தத் தியாகம் ஒரு செயலற்ற விஷயமல்ல; அது ஒரு நிலையான கழுவுதல். மனம்மாறி தூயவர்களாக வாழ

வழங்கப்பட்டிருக்கும் அடையாளம் நாமும் மாசுபட்டவர்களாகவும், மாசுபடுத்துகிறவர்களாகவும் வாழாமல் மனமாற்றம் பெற்று தூய்மையான வாழ்வு வாழத் தீமையை விட்டு இயேசுவிடம் வருவோம்.

### II **தூய்மையாக்கும் கிறிஸ்துவால் மன்னிப்பு :**

I யோ. 1 : 9 நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார்.

புனித யோவானின் திருமுகம், நாம் உண்மையான கிறிஸ்தவர்களா என நமது வாழ்வைச் சோதித்துப் பார்க்கவே எழுதப்பட்டுள்ளது. **ஜான் நியூட்டன்** என்பவர், என்னைப் போன்ற பாவிகளை மீட்கும் அந்த வியக்கத்தக்க அருள் எவ்வளவு இனிமையானது. நான் காணாமல் போயிருந்தேன், ஆனால் இப்பொழுது காணப்படுகிறேன்; நான் ஒளி இழந்தேன் இப்பொழுது பார்க்கிறேன் என்கிறார். யோவான் கிறிஸ்தவர்கள் கடவுளின் தூய ஒழுங்கின்படி நடந்துகொள்ள வேண்டும்; பாவம் செய்யக்கூடாது எனக் கூறுகிறார். கடவுளுடனான தூய்மையான நமது கூட்டுறவுக்கான அடிப்படையையே நமக்காக முன் வைக்கிறார் (5-7). மேலும், கிறிஸ்தவ ஐக்கியம் தொடர்கின்றன. (8-10) தொடர்ந்து நாம் கடவுளின் தூய்மையான இயல்பின்படி வாழாதபோது அல்லது பாவம் செய்யும் போது, நம் பாவத்தைக் கடவுளிடம் ஒப்புக்கொண்டு மன்னிப்பு வேண்டும் போது புனித உறவு தொடர்கிறது. நம்மிடம் பாவம் இல்லை என்று சொன்னால் (வச. 8), இரண்டு காரியங்கள் விளைகின்றன. (1) நாம் சுய ஏமாற்றுக்காரர் (2) உண்மை நம்மில் இல்லை. இவை நற்செய்தியின் உண்மையைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் பாவம் செய்யும் போது கடவுளிடம் பாவத்தை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். ஒப்புக்கொள்ள மறுக்கும்போது நீங்கள் ஒரு பொய்யர் ஆகிறீர்கள். (வச. 6). மேலும் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள் (6-10).

பாவங்களை ஒப்புக்கொள்வோமென்றால் நம்மை மன்னித்துத் தூய்மைப்படுத்துகிறார். I யோ. 1 : 9. உங்கள் சரீரங்களைத் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள். இதுவே நீங்கள் செய்யதக்க புத்தியுள்ள தொழுகை. இயேசுகிறிஸ்துவின் பிறப்பினால் எல்லா தரபட்ட மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற உறவுநிலையைப் பாவமன்னிப்பின் வழியாக பெற்றுக்கொள்கிறோம். இந்த உறவு சார்ந்தப் பார்வையைக் கொண்டிருந்த யோவான் மீட்கப்பட்ட உலகம் உருவாக வேண்டும் என்கிறார். அது ஆரோக்கியம் நிறைந்த மனிதர்கள்,

தூய்மையான தண்ணீர், வாழ்வு தரும் மரம், மாசில்லா உலகம் இவைகளை உருவாக்குவதே என்கிறார். இயேசு கிறிஸ்து தூய்மைக்கும், நேர்மைக்கும், தியாகத்திற்கும் அடையாளமாக அப்பத்தைப் பிட்டு இது என் சரீரம்; இது என் இரத்தம்; என்னை நினைவு கூரும்படி இதனை உட்கொள்ளுங்கள் என்று உலகிற்கு அர்ப்பணித்தார். நற்கருணை விருந்தில் நம்மைத் தாழ்த்தி மன்னிப்பு வேண்டி ஏற்றுக்கொள்கிற நாம் அனைவரும் இயேசுவின் தூய்மையில் வளர நினைப்பூட்டப்படுகிறோம்.

III **தூய்மையாக்கும் கிறிஸ்துவால் மனித நல்லிணக்கம் :**

மாற்கு 1 : 40-இல் உமக்கு விருப்பமாக இருந்தால் நீர் என்னைக் குணமாக்கி என்னைச் சுத்தப்படுத்தமுடியும் என்று அவர் சொன்னார்.

இயேசுவுக்கும் தொழுநோயாளிக்கும் இடையிலுள்ள சந்திப்பு அசாதரணமானது. தொழுநோய் நரம்புமண்டலத்தைத் தாக்கும் பாக்டீரியாக்களால் ஏற்படுகிறது. உடலின் உணர்வை இழக்கச்செய்யும். தோல், நரம்புகள், கைகால்கள் மற்றும் கண்களுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தும். இது உடல்ரீதியாக மட்டும் பலவீனமடைவதில்லை; மாறாக, சமூகரீதியாக தனிமைப்படுத்தும் நோயாக இருந்தது. குடும்பம், வீடுகளிலிருந்தும் கூட ஒதுக்கப்பட்டார்கள். தொழுநோயாளியைத் தொட்டால் தொட்டவருக்கும் தொற்று ஏற்படலாம். ஆனால் இயேசு அவரைத் தொட்டார். மக்கள் எதிர்பார்ப்பிற்கு நேர்மாறான விளைவு. இயேசு தொழுநோயாளியாவதற்குப் பதிலாக தொழுநோயாளி குணமடைந்தார். பரிசுத்தமான கடவுள் மட்டுமே இத்தெய்வீக தன்மையை வெளிப்படுத்தியிருக்க முடியும். வார்த்தையின் மூலம் அவரது சக்தி வெளிப்பட்டது. சுத்தமாயிரு என்றார். நோயுற்ற மனிதரால் தீட்டுப்படாமல் அவரைச் சுத்தப்படுத்தினார்.

லேவி 14-ல் தொழுநோயாளி சமூகத்தில் சகமனிதரோடு மீண்டும் இணைய சில பரிந்துரை வழிகள் உள்ளன. மறுபரிசீலனைக்குப் குருவை அணுகவும். அவர்கள் சுத்திகரிப்புக்குப்பின் மீண்டும் சமூகத்தில் இணைக்கிறது. மாற். 1 : 43-44. இயேசுவின் தூய்மையாக்குதல் மற்றும் அவரது அறிவுரை இரண்டு முக்கிய உண்மைகளை வெளிப்படுத்துகிறது. (1) மனிதனின் நல்லிணக்கம் (சமூகத்தில் மீண்டும் இணைவதற்கு) (2) வெளியேற்றப்பட்டவர்களின் மறுசீரமைப்பு. உலகெங்கிலுமுள்ள பல நாடுகளில் இணைந்து வாழமுடியாத பாகுபாடு மற்றும் தவறான கோட்பாடுகளை வரைதல் இன்றும் உள்ளது.

எ.கா. 1. இந்தியாவில் தீண்டதகாதவர்கள் 2. கறுப்பின

தென்னாப்பிரிக்கர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இடையிலான பாகுபாடு பிரிவினை. தொழுநோயைப் பாவத்திற்குத் தண்டனையாக கருதினர். இன்று இந்த மனிதனை தொழுநோய் போல பாவமும் தனிமைப்படுத்துகிறது. நம் வாழ்விலும் பாவம் பிரிவினையாகிய தூய்மைக்கேட்டை ஏற்படுத்துகிறது. எனவே, உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு அவர் மீது நம்பிக்கை வையுங்கள். அவர் உங்களிடம் சுத்தமாயிருங்கள் என்று கூறுகிறார். கடவுள் நம் பாவங்களை மன்னித்துக் குற்றம் அனைத்திலுமிருந்து நம்மைத் தூய்மைப்படுத்துவார் I யோ. 1 : 9.

பிறர் மேல் அக்கறையற்ற அல்லது அன்பற்ற வாழ்வு ஒட்டுமொத்த சுயநலத்தின் வெளிப்பாடு. இவை வெறுப்பு, பகைமை, வன்முறை ஆகிய தீமைகளுக்கு இட்டுச்செல்லும். அன்பு பிறர் மேல் அக்கறைகொள்ளச் செய்கிறது. பிறர்மேல் கொண்டுள்ள அக்கறை பிறர் துயர் துடைக்கும் தூய செயல்பாடுகளுக்கு அழைத்துச் செல்கிறது. ஆண்டவர் இத்தொழு நோயாளியைத் தொட்டுக் குணப்படுத்த நமக்கு உணர்த்தவில்லை. இந்த சமூகத்தில் தனிமையாயிருப்பவர்களையும் தனிமைபடுத்தப்பட்ட வர்களையும் அன்புடன் கருணையுடன் அணுக வேண்டும். அதுவே, தூய்மையாக்கும் கிறிஸ்துவின் நல்லிணக்கம்.

அருள்திரு. அறிவர். T. **ராஜன்**

| 𝄞 | ஞா. 117 | ஞா. 441 |
|---|---|---|
| | கீர். 28 | கீர். 273 |

**01-03-2023** தவக்கால இரண்டாம் புதன்

# ஆண்டவர் காட்டும் நோன்பு

மத். 4 : 1 11



"அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார்..."
(மத் 4: 2)

ஆண்டவர் இயேசுவின் காலத்திலும் நோன்பு கடைப்பிடிக்கும் வழக்கம் இருந்தது. "உண்ணா நோன்பு" (அசிஸ்டோஸ் - Asistos) என்ற கருத்து வழக்கத்தில் இருந்தது. ஆனால் இயேசுவின் காலத்தில் யூதர்கள் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் மட்டும் கட்டாய நோன்பு கடைப்பிடித்தனர். இந்த நாள் வருடந்தோறும் "திஸ்ரி" எனும் யூதர்களின் பத்தாவது மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது (திப 27:9). இயேசு கிறிஸ்து தன் மீட்புப் பணியை வெளிப்படையாகத் தொடங்குமுன், நாற்பது நாள், நோன்பிருந்தார். இது பழைய ஏற்பாட்டின் நாற்பது நாள் நோன்பின் நிறைவு ஆகும்.

நோன்பைக் கடைப்பிடிக்கும் நமக்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்றுத்தரும் பாடம் என்னெவென்றால் நோன்பு காலத்தில் நம்மைக் கவர்ந்திழுக்கும் சோதனைகளில் அகப்படாமல் கவனமாயிருக்க வேண்டும் என்பதாகும். இயேசு நோன்பை முடிக்கும் சூழலில் அலகை அவரைச் சோதித்ததையும் இயேசு அதை மேற்கொண்டதையும் நம் திருமறைப் பகுதி கூறுகிறது.

**1. தன்னலம் சார்ந்த கவர்ச்சிகளில் விழாதிருத்தல் (மத் 4: 3,4)**

நாற்பது நாள்கள் நோன்பிருந்து பசியாய் இருந்த இயேசுவிடம் கல்லை அப்பமாய் மாற்றச் சொன்னது அலகை. இயேசுவிடம் இருந்த சக்தியைப் பயன்படுத்தி அவரது தேவையைப் நிறைவு செய்துகொள்ளத் தூண்டியது சாத்தான். இது நேரம் அறிந்து, தேவை உணர்ந்து கொண்டு வரப்பட்ட ஒரு சோதனை. "நீர் இறைமகன் என்றால், இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்" (லூக் 4:3) என்று இயேசு கிறிஸ்துவின் சுய அடையாளத்தை, இறை ஆற்றலைச் சவால் விட்டுக் கவர்ச்சியான வார்த்தைகளால் சோதித்தான். இறைமைந்தர் எப்படிப்பட்டவராய் இருக்கவேண்டும் என அலகையே இலக்கணம் வகுத்துக்

கொடுப்பதையும் காண்கிறோம். இறைமைந்தர் என்றால், புதுமைகள் நிகழ்த்தவேண்டும்; அதுவும் தன்னுடைய சுயநலத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் புதுமை செய்யவேண்டும் என்பது அலகை, இறைமகனுக்கு வகுத்த இலக்கணம். இயேசு சாத்தானுக்குச் சொன்ன பதில், அழகானது. தன் உடல் பசியை விட, ஆன்மப் பசி தீர்க்கும் உணவைப்பற்றி பேசினார், இயேசு "மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை" என்று, மோசே சொன்னதை இயேசு இங்கு எடுத்துக் கூறுகிறார் (இச 8:3). தன் சொந்த பசியைத் தீர்த்துக்கொள்ள மறுத்த இயேசு, இவ்வுலக மக்களின் பசியைத் தீர்க்க தன் ஆற்றலைப் பயன்படுத்தினார் என்பதுதான் உண்மை.

தன் சுயநலத் தேவையை நிறைவு செய்ய புதுமைகள் செய்பவர்கள், வித்தைகள் காட்டும் மந்திரவாதிகளாய் இருக்கமுடியுமே தவிர, கடவுளுக்கு ஏற்புடையவர்களாகவோ, இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகவோ இருக்க முடியாது. நமக்கு இறைவன் கொடுத்துள்ள ஆற்றல்கள், திறமைகள், அருட்கொடைகள் அனைத்தும் சுயத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அல்ல. நம் அருட்கொடைகளை முதன்மைப் படுத்தும் கவர்ச்சிகளை விலக்குவோம்.

### 2. குறுக்கு வழியில் பலன் தேடாதிருத்தல் (மத் 4: 5-7)

இறைமைந்தராம் இயேசு கிறிஸ்து உலகை வெல்வதற்கும், உலகை மீட்பதற்கும் எந்தத் தொந்தரவும், துன்பமும் இல்லாத குறுக்கு வழியொன்றை அலகை காட்டுகிறது. எருசலேம் கோவிலின் மேலிருந்து இயேசு குதிக்கவேண்டும். உடனே, வானங்கள் திறந்து, விண்தூதர் இறங்கி வந்து, இயேசுவின் பாதம் தரையைத் தொடாமல் அவரைத் தாங்கிய வண்ணம், தரைக்குக் கொண்டு வருவார்கள். எருசலேம் முழுவதும், ஏன், உலகம் முழுவதுமே இயேசுவின் சீடர்களாகிவிடுவர். முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்வில், மூன்றரை ஆண்டுகள் கடினமானப் பணி, இறுதி மூன்று நாட்கள் கொடிய வேதனை, இறுதி மூன்று மணி நேரங்கள் சிலுவையின் கொடூரச் சித்ரவதை என இவை எதுவும் தேவையில்லை. ஒரு நொடிப்பொழுது போதும். எருசலேம் கோவில் சாகசம் ஒன்று போதும். உலகம் இயேசுவின் காலடியில் கிடக்கும் என்ற கனவுகளை அலகை அடுக்கிவைத்தது. குறுக்கு வழியில் பெயரும், புகழும், அனைவருக்கும் மேலான நிலையும் பெற இச்சோதனை முன்வைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து "உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்கவேண்டாம்" எனவும் எழுதியுள்ளதே" (இச 6:16) என்ற இறைவார்த்தையைச் சுட்டிக்காட்டி

இச்சோதனையை மேற்கொண்டார். உயர் பதவிகளும், அந்தஸ்தும் பெற குறுக்கு வழிகள் காட்டப்படும்போது அவ்வழியில் சென்று கடவுளின் அங்கீகாரத்தை இழந்து விடாமல், துன்பமானாலும் நேர்வழியில் வாழ்ந்து கடவுளுக்கு ஏற்புடையோராக வேண்டும்.

**3. தீய சக்திகளுடன் சமரசம் பண்ணாதிருத்தல் (மத் 4: 8-10)**

இங்கு, உலகமனைத்தையும் இயேசுவிடம் ஒப்படைக்க விரும்புவதாக அலகை சொல்கிறது. உலகை வென்று, அதைத் தந்தையிடம் ஒப்படைக்க மனுவுருவான இயேசு இப்படி ஒரு வாய்ப்பு வரும்போது, ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அங்கு அலகை வைத்த நிபந்தனை, அதிர்ச்சியளிக்கிறது. இயேசு உலகை வெல்லவேண்டுமானால், அவர் ஒரு செய்யவேண்டும். சாத்தானோடு சமரசம் செய்து, சாத்தானிடம் சரணடைய வேண்டும் என்பதுதான் இந்த ஹக்த்ன்ள்ற்ம்ங்ய்ற். இங்கு வந்த சோதனையில், "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்" என்ற (இச 6:13) இறைவார்த்தையைக் கையாண்டு, சோதனையை மேற்கோண்டார். சோதித்தது போதும் என்று, இயேசு, அலகையை விரட்டியடித்தார்.

சாத்தான் முன் சரணடைய மறுத்த இயேசு, சிலுவையில் தொங்கியபோது,"தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று கடவுளிடம் சரணடைந்து, உலகைத் தன் வசமாக்கினார். தவறான வழிகள், தவறான, தீய சக்திகளுடன் சமரசம் செய்தல் இறையரசுக்குரிய வழியினின்று நம்மைத் திசை திருப்பும். அச்சக்திகளுக்குமுன் சரணடைதல் நம் வாழ்வை அழிவுக்கு கொண்டு செல்லும். எதற்கும், எச்சூழலிலும் தீமையோடு சமரசம் செய்ய வேண்டாம்.

நம்மைக் கவர்ந்திழுக்கும் நுகர்வுக் கலாச்சாரத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி, சுயதேவைகளைப் பெருக்கிக் கொள்ளுதல், குறுக்கு வழிகளில் பலன் தேடுதல், சுய விளம்பரத்திற்காக எதையும் செய்தல், உலகின் தீயச் சக்திகளோடு சமரசம் செய்தல் என்று நம்மைக் கவர்ந்திழுக்கும் அழகான சோதனைகளுக்கு இடம்கொடாமல், இவற்றை விலக்கும், ஆண்டவர் காட்டும் நோன்பைக் கடைப்பிடித்து ஆன்மிகத்தை வலுப்படுத்துவோம்.


அருள்திரு. **T.P. ஸலீம் தங்க குமார்**

| 𝄞 | | |
|---|---|---|
| | ஞா. | 115 |
| | கீர். | 135 |

**03-03-2023** தவக்கால இரண்டாம் வெள்ளி

# நீதி என்னும் மார்புக் கவசம்

ஆமோஸ் 5 : 20 - 24



"நீதியை மார்புக்கவசமாக அணிந்து நில்லுங்கள் "
(எபே 6 : 14b)

**நீதி என்னும் மார்புக் கவசம்** (எபே. 6 : 14)

அவர் நீதியை மார்புக் கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் தலைசீராவைத் தமது சிரசில் தரித்து (ஏசாயா 59 : 11) என்கின்ற ஏசாயா இறவைாக்கினரின் வார்த்தைகளை மனதில் வைத்து பவுல் நீதி என்னும் மார்புக் கவசம் என்று குறிப்பிடுகிறார். மார்புக் கவசம் என்பது ஒரு ராணுவ வீரரின் முக்கிய உறுப்புகளைப் பாதுகாக்கும் ஓர் கருவியாகும். போர் முனையில் ஒரு வீரர் மார்புக் கவசம் அணியாமல் நின்றால் மரணம் நிச்சயம். குறிப்பாக ரோம படை வீரர்கள் தங்கள் இருதயத்தை பாதுகாக்க மார்புக் கவசம் அணிவது வழக்கம் இது அம்புகள், ஈட்டிகள், வாளிலிருந்து வரும் ஆபத்துகளை தடுத்து நிறுத்துகிறது மார்புக் கவசம் என்பதை தூய பவுலார் இங்கே உருவகமாக குறிப்பிடுகிறார். குறிப்பாக ஒரு மனிதன் நீதியோடு வாழ்வதினாலும், கிறிஸ்துவின் நீதியினாலும், வாழ்வதினால் வாழ்வும், பாதுகாப்பும் உண்டு என்பதைக் குறிப்பிடுகிறார்.

**நம் நீதியினால் பிறருக்கு வரும் வாழ்வும் பாதுகாப்பும்**

கிரேக்கர்கள் நீதியை தங்கள் பாரம்பரியத்துடன் இணைந்ததாகவும், யூதர்கள் நீதியை தங்கள் தோரா சட்டத்துடன் இணைந்ததாகவும் கருகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ நீதி என்பது கிறிஸ்துவினால் தரப்படுகின்ற கிருபையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த நீதியானது ஒரு மனிதனுடைய வாழ்விலும், நடத்தையிலும் வெளிப்பட்டு பிறனுடைய இருதயம் காயப்படாமல் வாழ்வு

கொடுக்கிறது. ஒரு தனி மனிதன் நீதி பிரளுகிறபோது அது பிறருடைய வாழ்வையும் பாதுகாப்பையும் சீர்குலைத்து விடுகிறது. கிறிஸ்துவின் நீதி உலகின் அனைத்து சமூகத்திற்கும் வாழ்வையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. அது போலவே, நாமும் தூய்மையாய் நம் இருதயத்தை பாதுகாத்து, நீதி என்னும் மார்பு கவசத்தை அணிந்து நம் நீதியுள்ள வாழ்வினாலும், செயல்பாடுகளினாலும் பிறருக்கு வாழ்வும், பாதுகாப்பும் கொடுக்க அழைக்கப்படுகின்றோம்.

**நம் நீதியினால் நமக்கே வரும் வாழ்வும் பாதுகாப்பும்**

மார்பு கவசம் என்படி ஒரு போர் வீரனை பாதுகாக்கிறதோ அதுபோலவே நீதியும் ஒரு மனிதனை பாதுகாக்கிறது. இன்றைய சூழலில நீதியினால் மனிதன் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியுமா? என்றால் அது மிகப் பெரிய கேள்விதான். பண பலத்திற்கு நீதி விலை போகக்கூடிய காலத்தில் இன்று நம் மனித சமூகம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. காலம் மாறினாலும் கோலம் மாறாமல் வாழ்ந்தால் பாதுகாப்பு உண்டு. நீதி தீமை செய்வதிலிருந்து நம்மை பாதுகாத்து பெரும் தண்டனைகளுக்கு நம்மை விலக்குகிறது. நீதி செய்கின்ற பண்பு இருந்தாலே நம்மை அது சோதனைகளிலிருந்தும் பாதுகாக்கிறது. நீதிக்கு எதிராக செயல்பட பல வாய்ப்புகள் கிடைக்கிறது. அவ்வாறு செயல்பட்டால் சில வசதி வாய்ப்புகளும் கிடைக்கிறது என்பதில் மாற்றம் இல்லை. ஆனால் அது நம்முடைய வாழ்வையும், பாதுகாப்பையும் எடுத்துப் போடும் என்பதில் மாற்றமில்லை.

ஒரு அலுவலகத்தில் பணியாற்ற கூடிய பணியாளர் ஒருவர் தன் பணிகளை நிறைவு செய்து தன் வீட்டிற்கு வருகிறான். அன்றைய நாள் இரவு சாப்பிட்டு விட்டு நித்திரைக்கு செல்லுகிறார். அங்கும் இங்கும் புரண்டு பார்க்கிறான் தூக்கம் வரவில்லை. என்றைக்கும் போல காலை 5 மணிக்கு மனைவி bed coffee கொடுக்க வருகிறாள். இவர் முகத்தை பார்க்கின்றபோது சரியாக தூங்காமல் இருப்பவர்களின் முகம்போன்று வாடிப் போய் இருந்தது. மனைவி சரியாக தூங்கவில்லையா என்று கேட்கிறாள். அலுவலகத்தில் நடந்ததை கூறுகிறார். அலுவலகத்தில் உள்ள மேல் அதிகாரி சட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தாத ஒரு நிறுவனத்தின் கோப்பில் எல்லாம் சரியாக இருக்கிறது என்று சான்றளிக்கவும் அதற்கு லஞ்சமும் தருவதாகவும் கூறினதை

தெரிவிக்கிறார். உடனே மனைவி சான்றிதழ் கொடுப்பதற்கு முன்பதாகவே உங்களுக்கு தூக்கம் இல்லை என்றால் கொடுத்த பின்பு நாம் சமாதானமாக வாழமுடியாது. ஆகவே நீங்கள் வேலையே போனாலும் நீதி மாறவேண்டாம் என்றாள். மனைவியின் உற்சாகமான வார்த்தைகளினாலே எச்சூழலிலும் நீதி தவறமாட்டேன் என்று உறுதி பூண்டார். வாழ்வில் தைரியம் பெருகியது. தைரியமாய் நீதி பிரளாமல் பணிகளை தொடர்ந்தார்.

அன்பர்களே, இந்த தவ காலத்தில் நாமும் நீதி என்னும் மார்புக் கவசத்தை அணிந்து நம் இருதயம் காயப்படாமலும் பிறர் இருதயம் காயப்படுத்தப்படாமலும் இருந்து அனைவரும் வாழ்வும் பாதுகாப்பும் பெற நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து உதவி புரிவாராக. ஆமென்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 138 |
| | கீர். | 133 |

**05-03-2023**

உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு &
தவக்கால இரண்டாம் ஞாயிறு

# மன்னிப்பருளும் கிறிஸ்து

## The Forgiving Christ

தொநூ. 4:8-16 உரோ. 5:6-11
திபா. 25 மாற் 2:1-12



மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார். (மாற் 2 : 10)

மன்னிப்பு என்பது முறிந்த உறவுகளை நிலைப்படுத்தி தடைகளை நீக்கி ஒருவரை ஏற்றுக் கொள்ளுதலாகும். நாம் பிறரை மன்னிக்கிறோம் என்பதைவிட நாம் ஏற்கனவே மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பது தான் உண்மை. கடவுளின் மன்னிப்பைப் பெற்ற மக்கள் கூட்டமே திருச்சபை. ஆண்டவர் கற்பித்த இறைவேண்டலிலும் “எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்” (மத். 6:12) என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் சொல்வது நாங்கள் மன்னிக்கிறது போல எங்களுக்கு மன்னியும் என்று சொல்லுகிறோம். இதனால் மன்னிப்பு நிபந்தனைக்குட்பட்டது என அறிகிறோம். மன்னிக்க மறுப்பதால் அநேகருடைய வாழ்வு சந்தோஷம் இழந்து காணப்படுகிறது. இறையரசுக்குள் நுழைய பாவ மன்னிப்பு மிக அவசியம். பாவத்தால் இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் அருளால் அவருடைய இரத்தத்தால் தூய்மையாக்கப்படுவதே பாவ மன்னிப்பு. அதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம்.

பன்னிரெண்டாம் லூயி மன்னர் பல போராட்டங்களிடையே எதிரிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றார். அரியணை ஏறியதும் இவரைக் கண்டு பகைவர்கள் பலர் பயந்தனர். சிலர் தங்களை மாய்த்துக் கொண்டார்கள். வேறு சிலர் இடம் மாறிச் சென்றார்கள். மன்னர் எதிரிகளைப் படம் எடுத்து அலுவலக மேசையின் மீது வைத்து படங்களின் இடையில் ஒரு சிறிய சிவப்புச் சிலுவையைக் கட்டி வைத்தார். மன்னரை சந்தித்தவர்கள், ஏன் உமது எதிரிகளின் படங்களின் இடையில்

ஒரு சிறிய சிலுவையைக் கட்டி வைத்திருக்கின்றீர்கள்? உமது எதிரிகள் மீது பகை தீர்த்துக் கொள்ள போகிறீர்களா? என்று கேட்டனர். அதற்கு மன்னர் பகையைத் தீர்த்து கொள்ள மாட்டேன் என்றும், சிவப்புச் சிலுவை பகைவர்களை நினைத்து மன்னிப்பதற்காகவும், எக்காரணத்தைக் கொண்டு தண்டிக்காமலிருக்கவும், என்னுடைய பாவங்களும் இந்தச் சிலுவையால் தான் மன்னிக்கப்பட்டது என்பதை நினைவு கூறவுமே என்றார். சிலுவையினால் மன்னிப்புப் பெற்ற லூயி மன்னர் மற்றவர்களை மன்னித்தார். நாமும் ஒருவரையொருவர் மன்னித்து வாழ்வோம். இன்றைய தியானமான "மன்னிப்பருளும் கிறிஸ்து" வழியாக கற்றுக்கொள்ளும் உண்மைகள் எவை? என்பதை பற்றிச் சிந்திப்போம்.

**1. மன்னித்து வாழ்வு அளித்த கடவுள்** (ஆதி. 4:15)

ஆண்டவர் அவனிடம் "அப்படியன்று காயனைக் கொல்கின்ற எவனும் ஏழுமுறை பழிவாங்கப்படுவான்" என்று சொல்லி, காயீனைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்.

கடவுளின் மன்னிப்பு முழுமையானது. கடவுளின் மன்னிப்பு சுதந்தரமானது. கடவுள் அருளினால் மன்னிக்கிறார். திருமறை காட்டும் கடவுள் மன்னித்து விடுதலை வழங்கும் கடவுளாகவே வெளிப்படுகிறார். தொ.நூ. 4:4--16 திருமறைப்பகுதியில் காயீன், ஆபேல் நிகழ்வு வருகிறது. காயீனும், ஆபேலும் சகோதரர்கள் இருவரும் கடவுளுக்குக் காணிக்கை வைத்தார்கள். கடவுள் ஆபேலின் காணிக்கையை ஏற்றார். காயீனின் காணிக்கையை நிராகரித்தார். இதனால் பொறாமை கொண்ட காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்து (தொநூ.4:8). கடவுளுக்கு எதிராக தவறு செய்தான். இது கடவுளுக்குத் தெரிந்த போது கடவுள் காயீனைக் கண்டித்து தண்டனை வழங்குகிறார் (தொநூ. 4:11, 12). அப்போது காயீன் கடவுளிடம், கடவுளே எனக்குக் கொடுத்த தண்டனை பெரியது என்னால் தாங்க முடியாது. எனக்கு இரக்கம் காட்டும் என்று முறையிடுகிறான். (தொநூ. 4 : 13, 14). கடவுள் காயீனுக்கு மனம் இரங்கி அவனை மன்னித்து அவனுக்குப் பாதுகாப்பளிக்கிறார் (தொநூ. 4:15). இவ்வாறு தவறு இழைத்தவர்கள் தங்கள் தவறை உணர்ந்து கடவுளிடம் அறிக்கையிடும் போது கடவுள் அவர்களை மன்னிக்கிறார். புதுவாழ்வு வழங்குகிறார். ஏனென்றால் கடவுள் இரக்கமும் மனதுருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர், (திபா. 103:8--13). அதனால்

நம் பாவங்களின்படியும் அக்கிரமங்களின்படியும் நம்மைத் தண்டிக்காமல் தமது கிருபையினால் மன்னித்து இரக்கம் பாராட்டுகிறார். தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவது போல ஆண்டவரும் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார். அதனால் தான் இன்றும் கடவுளின் மன்னிப்பைப் பெற்று நாம் வாழ்கிறோம். அதுபோல நாமும் பிறரது தவறுகளை மன்னிக்கக கடமைப்பட்டுள்ளோம். நாம் இறைவனிடம் வேண்டும் போதும் எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத். 6:12) என்கிறோம். ஆனால் அதை நம் வாழ்க்கையில் அநேக வேளைகளில் நடைமுறைப்படுத்துவதில்லை.

திபெத் பகுதிக்கு சாது சுந்தர்சிங் நற்செய்தி அறிவிக்கச் சென்றார். அங்குப் பணியாளர்கள் அறுவடைப் பணி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக சில பணிகளைச் செய்து கொடுத்தார். அந்த நேரத்தில் நற்செய்தியையும் கூறினார். சிலர் அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஒரு வாலிபன் கல்லை எடுத்து எறிந்தான். அது சாது சுந்தர்சிங்கின் நெற்றியில் பட்டுக் காயம் ஏற்பட்டது. அவர் அதையும் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அவர்களோடு உதவி பணிகளைச் செய்து கொண்டிருந்தார் அப்போது அவரைக் கல்லால் எறிந்த வாலிபன் திடீரென்று மயக்கமுற்று விழுந்தான். அவனுக்குச் சாது சுந்தர்சிங் முதலுதவி செய்து அவனை எழுந்து நடக்க செய்தார். தனக்குத் துன்பத்தை ஏற்படுத்தியவனுக்கும் சாது அவனது துன்பத்தில் உதவியதைப் பார்த்து அவனோடிருந்த மற்ற பணியாளர்கள் சாதுவைக் குறித்து உண்மையாகவே இவர் கடவுளுடைய மனிதர் என்று உணர்ந்து கொண்டனர். மட்டுமன்று அவர் அறிவித்த இயேசுவின் நற்செய்தியையும் ஏற்றுக் கொண்டனர். சாதுவைத் துன்பப்படுத்தின வாலிபனும் மனம் திரும்பிக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான். சாது சுந்தர்சிங் காட்டின மன்னிப்பு ஒரு சமுகத்தினரை மனமாற்றமடைய செய்தது. கடவுளின் மன்னிப்பைப் பெற்ற நாம் பிறரையும் மன்னிப்போம்.

### 2. மன்னித்து இறைவனோடு ஒப்புரவாக்கிய இயேசு (உரோ 5:10)

"நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்."

இரு மனிதர்கள் தங்களுக்குள்ளே பகையை நீக்கிக் கொள்வது ஒப்புரவாகுதல் ஆகும். அதாவது பகைவர்கள் நண்பர்களாக மாறுவது

ஒப்புவாகுதலின் அடையாளம். இங்குக் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் பகை ஏற்படுகிறது. அது பாவத்தால் ஏற்பட்டதாகும். இந்த பாவத்தால் துண்டிக்கப்பட்ட உறவை, அதாவது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த பகையை இயேசு கிறிஸ்து கல்வாரியில் நமக்காக உதிரம் சிந்தி மீட்டு ஒப்புரவாக்கினார். இந்த உண்மையை உரோ. 6:11 பகுதியில் படிக்கிறோம். ஒரு காலத்தில் தொலையில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள் என்று எபே 2:13-இல் பவுலடியார் கூறுகிறார். இப்படி இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் இறைவனோடு ஒப்புரவாக்கப்பட்டு அவர் தங்கியிருக்கும் ஆலயமாயிருக்கிறோம். நாம் மற்றவர்களோடும் பகை நீங்கி சமாதானம் உள்ளவர்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

மத்தேயு 18:21-35 வரையுள்ள திருமறைப் பகுதியில் மன்னிக்க மறுத்த பணியாளரின் உவமை கூறப்பட்டுள்ளது. அந்த உவமையில் பத்தாயிரம் தாலந்து கடன்பட்டவன் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் செல்வந்தனின் காலில் விழுந்து என்னைப் பொறுத்தருள்க எல்லாவற்றையும் உமக்குத் திருப்பி தந்து விடுகிறேன் என்று மன்றாடினான். அந்தத் தலைவனும் அவன்மேல் பரிவு கொண்டு அவன்பட்ட கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். அதற்கு மாறாக, மன்னிப்பு பெற்ற அந்தக் கடன்காரனோ அன்பற்றவனாய் மன்னிக்கும் சிந்தனையில்லாதவனாய் நடந்து கொண்டான். எப்படியெனில் தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அவளிடம் தன்னைப் பொறுத்துக் கொள்ள பணிவாய் வேண்டினான். அவனோ அதற்கு இசையாது கடனைத் திருப்பி அடைக்கும் வரை சிறையில் அடைத்தான். இதைக் கேள்விபட்ட செல்வந்தர் கோபம் கொண்டு தன்னிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்டவன் அதை அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். நாமும் நம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் நம் தந்தையும் நம் குற்றங்களை மன்னிக்கமாட்டார்.

கணவன் மனைவி சமாதானமற்று பகையோடு வாழ்ந்த ஒரு குடும்பம் விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தைத் தொடர்பு கொண்டது. அவர்களது வழக்கை விசாரித்த நீதிபதி, உங்களிடம் இருக்கும்

தவறுகளை, குற்றங்களை ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுங்கள் பின் அவற்றை ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். அடுத்த மாதம் குறிக்கப்பட்ட நாளில் மறுபடியும் நீதிமன்றத்துக்கு வாருங்கள் என்று கூறினார். அவ்வாறே வழக்கு வந்தநாளில் கணவன் மனைவி இருவரும் தங்கள் குழந்தையோடு வந்து நீதிபதியிடம் தாங்கள் ஒருவரையொருவர் தங்கள் தவறை அறிக்கையிட்டு அதை ஏற்றுக் கொண்டு, மன்னித்து வாழ கற்றுக் கொண்டுள்ளோம். இப்போது நாங்கள் இருவரும் சமாதானமாயிருக்கிறோம் எங்களுக்கு விவாகரத்து தேவையில்லை என்று கூறினார்களாம். இயேசு மூலம் இறைவனோடு ஒப்புரவாகுவோம். மற்றவர்களின் தவறுகளையும் மன்னித்து வாழ்வோம்.

### 3. மன்னிப்பருளும் அதிகாரம் பெற்ற இயேசு (மாற் 2:10)

மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

இயேசு கிறிஸ்து கடவுளின் மகன் என்பதால் மன்னிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். யூத பாரம்பரியப்படி பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கடவுளுக்கு மட்டுமே உண்டு. வேறு எவருக்கும் கிடையாது என்பர். ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரே இவ்வுலகில் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற கடவுளின் ஆட்டுக்குட்டியானவர் என (யோவா 1:29) அவரே. தந்தையின் ஒரே மகனாக இவ்வுலகத்தில் வந்து பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தைத் தந்தையிடமிருந்து பெற்றிருந்தார்.

மாற். 2:1-12 பகுதியில் இயேசு முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தும் சம்பவம் கூறப்பட்டுள்ளது. இயேசு கப்பர்நகூமிலுள்ள ஒரு வீட்டில் இருந்ததைக் கேள்விப்பட்டுத் திரளான பேர் கூடினர். இயேசு அவர்களுக்கு முதலாவது இறைவார்த்தையை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அப்போது நால்வர் சேர்ந்து முடக்குவாதமுள்ள ஒருவனைச் சுமந்து இயேசுவின் முன் கொண்டு வர இயலாத போது அவர் இருந்த இடத்திற்கு மேல் வீட்டின் கூரையை உடைத்துத் திறப்பு உண்டாக்கி முடக்குவாதமுற்றவரைப் படுக்கையோடு இயேசுவுக்கு முன் இறக்கினர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாதமுற்றவனிடம் “மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போ” என்றார். அதைக் குறித்து மறைநூல் அறிஞர் சிலர் கடவுள் ஒருவரே அன்றி பாவங்களை மன்னிக்க யாரால் இயலும் என்று

நினைத்துக் கொண்டிருந்தபோதே இயேசு அவர்களிடம் மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார் . 1 யோவான் 1:9-ல் நம் பாவங்களை ஒப்புக்கொள்ளும்போது கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மை தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர், நேர்மையுள்ளவர் என்று கூறுகிறார். எனவே மன்னிப்பருளும் அதிகாரம் பெற்ற இயேசு கிறிஸ்துவிடம் நம் பாவங்களை ஒப்புக்கொண்டு மீட்படைந்து வாழ்வு பெறுவோம்.

பேரரசர் நெப்போலியனுடைய படையில் தவறு செய்த ஒரு போர் வீரனுக்கு மரண தண்டனை என்று முடிவு செய்யபட்டது. அந்தப் போர் வீரரின் தாய் பேரரசரை நேரில் சந்தித்து மகனின் தவறை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். அதற்குப் பேரரசர் நெப்போலியன், நீதியின் அடிப்படையில் பார்க்கும்போது அவன் செய்த தவறை மன்னிக்க முடியாது ஏனென்றால் அவன் சாவுக்குரியவன் என்று பதிலளித்தார். அந்தத் தாய் பணிவுடன் நான் வேண்டி நிற்பது நீதியல்ல. பேரரசரே, நீங்கள் மன்னிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறீர்கள், மன்னிக்கும் குணம் உங்களிடம் உள்ளது. எனவே அவனை மன்னித்து விடுதலையாக்கும் என்று வேண்டிக் கொண்டாள். அதைக் கேட்ட பேரரசன் வேறு வழியின்றி அந்த வீரன் செய்த தவறை மன்னித்து அவனை விடுவித்து வாழ்வழித்தார்.

அன்பானவர்களே இயேசு கிறிஸ்து இன்றும் மன்னிப்பருளும் மாபெரும் அரசராக இருக்கிறார். அவர் மன்னித்துப் பாவிகளுக்கு வாழ்வு வழங்குகிறார். மன்னித்து இறைவனோடு ஒப்புரவாகச் செய்கிறார். மன்னிப்பருளும் அதிகாரத்தினால் நம் பாவங்களை மன்னித்து புது உறவினை ஏற்படுத்துகிறார். நாமும் மன்னிப்பைப் பெற்று விசுவாசத்தோடு அவரிடம் செல்வோம். இயேசுவால் மன்னிப்பைப் பெற்று மன்னிப்பருளும் தன்மையுடையவர்களாக வாழ்ந்து இறையரசைச் சொந்தமாக்குவோம்

அருள்திரு M.P. **விஜயகுமார்**

| 𝄞 | ஞா. | 118 | ஞா. | 200 |
|---|---|---|---|---|
| | கீர். | 260 | கீர். | 261 |

**05-03-2023** பெண்கள் ஞாயிறு

# ஊழியத்தில் பெண்களின் பங்கு

## Women's Role in Ministry

1அர. 17: 17-24 உரோ. 16: 1-5

திபா. 25 லூக். 8: 1-3



. . . மேலும் பல பெண்களும் அவரோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்கு பணிவிடை செய்து வந்தார்கள். (லூக். 8 : 3)

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் (தொடக்க நூல் 1: 27)

கடவுளின் திட்டம் ஆண்களும் பெண்களும் சமமாக கடவுளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும் சமமாக ஆட்சி செய்வதும் ஆகும். கடவுளின் படைப்பு மற்றும் இரட்சிப்பு மற்றும் இறுதி விதியின் அடிப்படையில் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள். பெண்களுக்குத் தாங்கள் பெண்கள் தானே என்னும் தாழ்ந்த எண்ணமும் (Inferiority - complex) ஆண்களுக்கு, தாங்கள் ஆண்களல்லவோ என்னும் பெருமையான எண்ணமும் (Superiority - complex) நீங்கி சமநிலைக்கு வரவேண்டும். கிறிஸ்தவ சமயம் துவங்கிய காலத்திலும், சீர்திருத்தம் (Reformation) நடந்த காலத்திலும் ஆண்களும், பெண்களும் இணைந்து ஒத்துழைத்துப் பல பாடுகள் பட்டு இரத்த சாட்சிகளாக மரித்து கடவுளின் இராஜ்ஜியத்தை நிலை நாட்டியதை வரலாற்றில் அறிய முடிகிறது.

கடவுளுக்காக தன்னால் இயன்றதைச் செய்த பெண்களைப் பற்றி அறிந்து கொள்ளுவோம்.

**1. கடவுளின் இறைவாக்கினருக்குத் திருத்தொண்டு செய்து அற்புதம் பெற்றுக்கொண்ட விதவைப் பெண் :** (1 அரசர்கள் 17: 17-24)

பல கலாச்சாரங்கள் விதவைகளை ஒருபோதும் வலிமையான, மதிப்பான,மற்றும் செல்வாக்கு மிக்க பெண்களாகக் கருதியது இல்லை.

ஆனால் கடவுள் பல விதவைப் பெண்களைப் பல நிலைகளில் தன் பணி செய்யப் பயன்படுத்தியிருக்கின்றதை திருமறை வாயிலாக அறியமுடிகிறது.

இந்தப் பகுதியிலும் எலியா இறைவாக்கினரைப் போஷித்து, தங்குவதற்கு இடமளித்த, கைம்பெண்ணின் மகன் நோயுற்று மூச்சு நின்று போன நிலையில், இந்தக் கைம்பெண் இறைவாக்கினர் வாயிலாக கடவுளிடம் இருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொண்டார். அது மட்டுமல்லாமல் அந்தப் பெண் எலியாவிடம், நீர் கடவுளின் அடியவரென்றும் உம் வாயிலிருந்து வரும் ஆண்டவரின் வாக்கு உண்மையானதென்றும் தெரிந்து கொண்டேன் (1 அரசர்கள் 17: 24) என்று சாட்சி பகர்ந்தார். நம்முடைய ஆண்டவர் ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை ஆதரிக்கிறவராக இருக்கிறார் என்பதை சங்கீதக்காரர் தனது திருப்பாடல்களில் “ஆண்டவர் அயல் நாட்டினரைப் பாதுகாக்கின்றார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார் . . .” (திருப்பாடல்கள் 146: 9) என்று குறிப்பிடுகிறார். இயேசுக் கிறிஸ்துவின் காலத்தில் காணிக்கையாக இரண்டு காசு போட்ட கைம்பெண் இயேசுவால் பாராட்டப்படுகிறார்.

“ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்” (மாற்கு 12 : 44).

இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பின்போது ஆசேர் குலத்தைச்சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும் இறைவாக்கினர், மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தபின் கைம்பெண் ஆனவர். எண்பத்து நான்கு வயதாகிய இவர், கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்து வந்தார். அவரும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப் பற்றிப் பேசினார் (லூக்கா 2: 36-38).

இயேசுவின் காலத்தில் நற்செயல் செய்த பெண்கள் பாராட்டப்பட்டார்கள். தேவாலயத்தில் பேசும் உரிமையைப் பெற்றார்கள்.

எந்தத் தயக்கமும் இல்லாமல் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிந்து நம்மிடம் இருக்கும் சிறந்ததை இறைவனுக்குக் கொடுத்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க முடிந்தவரை முயற்சி செய்யும்போது நம்மிடம் இருக்கும் கொஞ்சத்தைக் கடவுள் மிகுதியாக ஆசீர்வதிப்பார்.

**2. உடைமைகளால் திருப்பணிக்கு உதவிய பெண்கள்** (லூக்கா 8: 1-3)

அவருடைய சீடர்கள் குழுவானது ஒரு தேவாலயத்தை முன்னிறுத்துகிறது. அதில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து தூய்மையாக வழிபாடு செய்தார்கள் (தி.ப. 1 : 13, 14). இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லை என்பதைப் பவுல் யூதர், கிரேக்கர், அடிமை, சுதந்திரன், ஆண் அல்லது பெண் என்று யாரும் இல்லை, ஏனென்றால் நீங்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாக இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3: 27, 28) என்று குறிப்பிடுகிறார். மகதலேனா மரியாள் இயேசுவையும் சீடர்களையும் ஊர் ஊராகப் பின் தொடர்ந்தது மட்டுமல்லாமல், அவரும் சில பெண்களும் கிறிஸ்துவையும் சீடர்களையும் பண ரீதியாக ஆதரிக்க உதவினார்கள். பெண்கள் பின்தொடர்ந்து பணி செய்தது இயேசுவின் ஊழியக் காலம் முழுவதும் தொடர்ந்தது. அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி கொடுக்கும் பெரும் பாக்கியத்தையும் பெற்றார். மகதலேனா அவர்களின் நன்றியுணர்வு மற்றும் அன்பு, அவர் கிறிஸ்துவிடம் காட்டிய பக்தியில் வெளிப்பட்டது. அவள் நிறைய கடன்பட்டாள், நிறைய கொடுத்தாள், அதிகம் நேசித்தாள், அதிகம் சேவை செய்தாள், இயேசு தனது ஊழியத்தின் போது, பயணத்தில் தன்னைப் பின் தொடர்ந்து தனது பொருள் தேவைகளைக் கவனித்துக்கொண்ட பெண்களுக்கு நன்றியுள்ளவராக இருந்தார். மேலும் அவர் அவர்களைத் தனது உயிர்த்தெழுதலின் முதல் சாட்சியாக்கினார்.

மகதலேனா மரியாள், யோவன்னாள், மற்றும் சூசன்னா ஆகியோர் முக்கியமானவர்கள். அவர்கள் இயேசுவை நேசித்ததாலும், தங்கள் நேரம், திறமைகள் மற்றும் வளங்களைக் கொண்டு அவருக்குச் சேவை செய்ததாலும், இயேசுவின் உணவு, உடை, தங்குமிடச் செலவுகள், அவருடைய பன்னிரண்டு சீடர்கள் மற்றும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அவருடைய பிரசங்கப் பணியின் தற்செயலான செலவுகள் ஆகியவற்றை ஆதரிக்க முன்வந்தனர்.

இயேசுவின் காலத்தில் பல நகரங்கள் மற்றும் கிராமங்களில் விருந்தோம்பல் பெருமளவில் இருந்தது. ஆனால் இந்தப் பெண்கள் தங்கள் நிதி வசதிகளை மீண்டும் மீண்டும் கொடுக்க முன்வந்தனர். தேவைப்படும் போதெல்லாம் இயேசுவுக்குப் பல நிலைகளில் உதவி செய்தார்கள். அவ்வாறே, வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். (28) உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்து விட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். (29) எவரும் கடவுள் முன் பெருமை பாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார். (1 கொரிந்தியர் 1: 27-29) என்று பவுல் அப்போஸ்தலர் கடவுளின் தெரிந்தெடுத்தலைக் குறித்து விளக்குகிறார். இயேசு பெண்களைப்பொது இடங்களில் கௌரவித்தார். பெண்களின் குரலை வெளியிட்டார்.

பெண்களுக்கு நம்பிக்கையளிக்கிறவராக தன் ஊழியத்தை நிறைவேற்றினார். உண்மையாக இயேசுவைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்டவர்களுக்கு வாழ்வில் பிறர் மீது கரிசனை, அன்பு தானாக வரும். தங்கள் உடைமைகளை பிறரின் தேவை அறிந்து பகிர்ந்து வாழுவர். சகேயுவின் வாழ்வும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் விசுவாசிகளின் வாழ்வும், இதற்குச் சாட்சி.

நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். (திருத்தூதர் பணிகள் 2: 45). லூக்கா 8: 1-3-ல் சொல்லப்பட்ட பெண்கள் தங்களால் முடிந்தவரை இயேசுவுக்குச் சேவை செய்தார்கள். நாமும் நம்மால் இயன்ற வரையில் திருச்சபையின் பணிகளுக்கும், தேவையில் இருப்போருக்கும் உதவ முன் வரவேண்டும்.

### 3. திருத்தொண்டராகப் பணியாற்றிய பெண் (ரோமர் 16: 1-5)

திருத்தொண்டு என்பது "உடல், உணர்ச்சி, உறவு ஆகியவற்றின் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்வதாகும்." தம்முடைய பெயரில் கொடுக்கப்பட்ட ஒரு கோப்பை குளிர்ந்த நீர் கூட ஊழியமாக கருதப்பட்டு, வெகுமதி பெறாமல் போகாது என்று இயேசு கூறினார். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் சில திறமைகளைக் கொடுத்துள்ளார். இந்தத் திறமைகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல, என்றாலும்

நம்மிடம் என்ன திறமைகள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்து, அந்தத் திறமைகளை, கடவுளை மகிமைப்படுத்த பயன்படுத்தவேண்டும். பெயிபாவும் பலருக்கு உதவி செய்திருக்கிறாள், எனக்கும் அவர் தனது செல்வத்தைப் பயன்படுத்தி தேவாலயத்திற்கும் அப்போஸ்தலருக்கும் ஆதரவளித்தார் (உரோ. 16: 2) அப்போஸ்தலன் பவுல் ஏதென்ஸை விட்டுக் கொரிந்துக்குச் சென்றார். இந்த நகரம் ஏதென்ஸிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஒரு பெரிய தெற்குத் தீபகற்பத்தை கிரீஸின் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் நிலத்தின் குறுகிய பகுதியில் அமைந்துள்ளது. கொரிந்து பட்டணம், இதற்கு இரண்டு துறைமுகங்கள் இருந்தன. ஒன்று மேற்குக் கடற்கரையில் அட்ரியாடிக் கடலில் மற்றும் கிழக்குக் கடற்கரையில் சரோனிக் வளைகுடாவில் கிரேக்கத்தில் உள்ள ஒரு ரோமானிய நகரம். மிகவும் மாறுபட்ட இன மக்கள் இங்கு வசித்தார்கள். இங்கு மக்களால் அறியப்பட்ட ஒவ்வொரு தெய்வத்திற்கும் (எகிப்திய தெய்வங்கள் உட்பட) ஏராளமான கோயில்களைக் கொண்ட ஒரு பரபரப்பான வணிக நகரமாக இருந்தது. ஒருமுறை கொரிந்துவில் பவுல் பதினெட்டு மாதங்கள் தங்கி, பிரசங்கித்து புதிய கிறிஸ்தவ தேவாலயங்களைத் தொடங்கினார். இங்குதான் பெயிபாவைச் சந்திக்கிறார். கொரிந்துவில் இருந்தபோது பவுல் ரோம் நகரத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதியிருந்தார். மேலும் அந்த கடிதத்தை அவர்களிடம் எடுத்துச் செல்ல ஒருவர் தேவைப்பட்டார். பெயிபா வணிக நோக்கங்களுக்காகப் பயணம் செய்ததாகவும், ரோமுக்கு அடுத்த பயணத்தில் கடிதத்தை எடுத்துச் செல்ல முன்வந்ததாகவும் தெரிகிறது. கொரிந்து துறைமுகமான கெங்கிரேயாவில் உள்ள தேவாலயத்தின் ஊழியரான பெயிபாவைப் பவுல் பாராட்டிய ஒரு பகுதியை நாம் பார்ப்போம். நம் சகோதரியாகிய பெயிபாவைக் குறித்து நற்சான்று அளிக்க விரும்புகிறேன். இவர் கெங்கிரேயாவில் இருக்கும் சபையில் திருத்தொண்டராய் இருக்கிறார் (உரோமையர் 16 : 1) பெயிபாவை விவரிக்கப் பவுல் பயன்படுத்திய இரண்டு வார்த்தைகளைக் கவனியுங்கள்.

**1. இவர் தேவாலயத்தில் ஒரு டீக்கனாக இருந்தார்.**

2. கிரேக்க வார்த்தை ப்ரோஸ்டாடிஸ். கிரேக்க வார்த்தையானது ஆண்பால் வார்த்தையான புரோஸ்டேட்டின் பெண்பால் வடிவம். பொதுவாக தலைவர் என்று மொழிபெயர்க்கப்பட்டது. அது கர்த்தருடைய

மேஜையில் பிரசங்கித்து, போதித்து, தலைமை தாங்குகிற ஒருவரைக் குறிப்பிடுகிறது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் பெயிபா வாணிபப் பெண்.அவள் செங்கிரேயிலுள்ள தேவாலயத்தின் தலைவராக இருந்தாள். தொழிலதிபர் லிடியாவைப் போலவே, பெயிபா தனது செல்வத்தையும் செல்வாக்கையும் கிறிஸ்தவ தேவலாயத்தை வளர்க்க பயன்படுத்தினார். கொரிந்துவில் இருந்தபோது பவுல் ரோம் நகரத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதியிருந்தார். மேலும் அந்தக் கடிதத்தை அவர்களிடம் எடுத்துச் செல்ல ஒருவர் தேவைப்பட்டார். பெயிபா வணிக நோக்கங்களுக்காக பயணம் செய்ததாகவும், ரோமுக்கு அடுத்த பயணத்தில் கடிதத்தை எடுத்துச் செல்ல முன்வந்ததாகவும் தெரிகிறது. சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு அவள் ஒரு வணிகப் பயணத்தையும் பயன்படுத்தினார். திருச்சபைக்கான கடிதத்தைத் தன்னுடன் எடுத்துச் சென்றார். கடிதத்தைக் கொண்டு செல்கின்றவர்களுக்கு மொழி அறிவு தேவை. ஏனென்றால் கொரிந்துவில் பேசப்படும் மொழி கிரேக்கம். ரோமாபுரியில் பேசப்படும் மொழி லத்தீன். பவுல் அப்போஸ்தலர் அறிந்திருந்த மொழி கிரேக்கம். பெயிபா வணிகத்தினிமித்தமாக ரோமிற்கு அடிக்கடி சென்று வந்ததால் கடிதத்தை மொழி பெயர்க்கும் திறமையைப் பெற்றிருந்தார். ஆதலால் தான் பவுல் பெயிபாவிடம் கடிதத்தை கொடுத்தனுப்புகிறார்.

கிறிஸ்துவுக்குத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த பெண்கள் வாயிலாகக் கிறிஸ்து எவ்வளவு சாதிக்க முடியும் என்பதற்குத் தெய்வீகமான சாட்சி பெயிபா. பெயிபா ரோமுக்குச் சென்றபோது ரோமத் திருச்சபையாருக்குப் பவுல் கடிதம் கொடுத்து அனுப்புகிறார் அதில் “இறை மக்களுக்கு ஏற்றவாறு ஆண்டவரின் பெயரால் அவர் வரவேற்று, அவருக்குத் தேவையான உதவி செய்யுங்கள். ஏனெனில் அவரும் பலருக்கு உதவி செய்திருக்கிறார். எனக்கும் உதவி செய்திருக்கிறார்.” (உரோமையர் 16: 2) என்று பவுல் எழுதியிருப்பதன் வாயிலாக பெண்களைப் பற்றிய பவுலின் உயர் சிந்தனையை அறிய முடிகிறது. வீட்டிலேயே பெண்கள் அடங்கி இருக்க வேண்டும் என்ற கருத்தைப் பவுல் வற்புறுத்தவில்லை. பெயிபா அவரது சபையிலும், பிற சபைகளிலும் திருப்பணி செய்ததைப் பவுல் ஏற்றுக்கொண்டிருக்கிறார். “. . . பலருக்கு உதவி செய்திருக்கிறார், எனக்கும் உதவி செய்திருக்கிறார்” என்று பவுல் கூறுவதன் வாயிலாக பெயிபா தேவையில் உள்ள பலருக்கும் மற்றும் திருத்தொண்டர்களுக்கும் உதவி

செய்திருப்பதை அறிய முடிகிறது. உலக மக்கள் தொகையில் பாதிபேர் பெண்கள். எனவே உலகின் பாதி சக்தி பெண்கள். எந்த நாட்டில் பெண்களுக்கு மதிப்பு இல்லையோ, அந்த நாடு பாதி சக்தி இல்லாதது என்று அர்த்தம். இயற்கையாகவே, பெண்கள் தங்கள் அனைத்துக் கடமைகளையும், பொறுப்புடன் செய்து ஆரோக்கியமான குடும்பம், திடமான சமுதாயம் மற்றும் சக்தி வாய்ந்த நாட்டை உருவாக்கும் திறன் கொண்டவர்கள். நாம் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல. நாமே திருச்சபை என்பதைப் பவுல் “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் . . .” என்கிறார். ஏற்றத் தாழ்வு இல்லாமல் இறைவன், தன்னை ஏற்றுக்கொள்கிறவர்கள் எல்லாரிடமும் வாசஞ்செய்கிறார். இறைவனை உடையவர்கள் அனைவரும் திருத்தொண்டர்களே. முழு மனுக்குல விடுதலையே இயேசுவின் திருப்பணியின் நோக்கமாகும். ஆணும் பெண்ணும்; இறைச்சாயலில் படைக்கப்பட்டவர்கள் (தொ.நூ. 1: 27). இதில் ஒரு சாயலை மட்டும் மதிப்பது, படைத்த இறைவனை அவமதிப்பதாகும். இறையரசைக் கட்டும் பணியில் எதிர்ப்புகள் மத்தியிலும், பெண்கள் தங்களையே அர்ப்பணித்தும், தங்கள் உடைமைகளை அர்ப்பணித்தும், திருப்பணியாளர்களாயும் பணி செய்திருப்பது போற்றுதற்குரியது.


அருள்திருமதி S. **ராஜலின் ஜெயம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 12 | ஞா. | 437 |
| | கீர். | 126 | கீர். | 319 |

**08-03-2023** தவக்கால மூன்றாம் புதன்

# ஆண்டவருக்கு உகந்த நோன்பு

எசா 58:1-14



‘பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு’ (எசா 58:7)

இஸ்ரயேலரின் உண்ணாநோன்பு புலம்பலுடனும், அழுகையுடனும் கடைபிடிக்கப்பட்டது (2சாமு 1:12). சாதாரண இறைவேண்டலுக்கு வலுச்சேர்க்கும் முயற்சியாகவே இஸ்ரயேலர் இதனைக் கண்டனர். உண்ணா நோன்பிருக்கிறவர்கள் சாக்குடை உடுத்தி, சாம்பலைத் தடவி, வெறும் தரையில் அமர்ந்தனர். உண்ணாநோன்பு மூலமாக கடவுளின் வெளிப்படுத்தல்களை கண்டுகொள்ளலாம் என்ற நம்பிக்கை கிரேக்கர்களின் காலத்தில் வளர்ந்தது. போரில் வெற்றி பெறுவதறக்காகவும் உண்ணா நோன்பு கடைபிடிக்கப்பட்டது (1சாமு 14:24). பபிலோனிய இடப்பெயர்விற்கு பின்னர், இந்த உண்ணாநோன்பு முறை கடவுளுடைய நேரடி தலையீட்டை பெற முயற்சிக்கும் ஒரு நிகழ்வாக மாறியது. இந்த அதிகாரத்தில் (58) எசாயா உண்மையான நோன்பின் மகத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

மக்களிடம் காணப்பட்ட போலியான நோன்பும் (58:1-6) அந்த நோன்பின் பின்னால் இருப்பது சுயநலமும், ஆன்மீக வெறுமையும்தான் என்பதைக் எசாயா சுட்டிக்காட்டுகிறார். இதற்கு மாறாக ஆண்டவருக்கு உகந்த நோன்பு எப்படி இருக்கவேண்டும் என்பதை அடுத்த பகுதி (58:7-12) விளக்குகிறது. நோன்பு என்பது உணவைத் தவிர்த்தலும், உறவை விலக்கலும், உலகைத் துறத்தலும் மட்டும் ஆகாது. அற்கும் மேலான ஒரு தூய பண்பட்ட வாழ்வுக்கு நம்மை அது வழிநடத்த வேண்டும். அது தான் ஆண்டவருக்கு ஏற்ற நோன்பு ஆகும். ஆண்டவருக்கு உகந்த நோன்பு என்பது,

**1. தீய நடத்தைகளை விட்டுவிடுதல்**

“அவர்கள், நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம்போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள்...” (58:2)

மக்களின் நேர்மையற்ற, தீமைநிறைந்த வாழ்வு இவ்வார்த்தைகளால் பகிரங்கமாக்கப்படுகிறது. தங்கள் சுய ஆதாயத்தை நாடி, தங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகிறார்கள். வழக்காடுதல், வீண்சண்டையிடுதல், கொடிய கைகளால் தாக்கிக்கொள்ளுதல் இது போன்ற தீமைகளை தங்களில் வைத்துக்கொண்டு நோன்பிருந்தார்கள். இத்தகைய நிலையில் உண்ணா நோன்பிருந்தால், “உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது” (58:4) என்பதுதான் கடவுளின் நிலைப்பாடு. நேர்மையற்ற, கடவுள் வெறுக்கும் செயல்களைச் செய்துவிட்டு, நாணலைப் போல் தம் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வது போலியானது; அது கடவுளுக்கு ஏற்ற நோன்பு அல்ல. இவ்வகை நோன்பைக் கடவுள் வெறுக்கிறார்.

**2. தேவையிலிருப்போர்க்கு உதவுதல்**

கடவுளுக்கு உகந்த நோன்பு என்பது தேவையிலிருக்கும் மக்கள்மீது இரக்கம் காட்டி, அத்தகையோருக்கு உதவுவதாகும். அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிட்டு, மனித வாழ்வை அழுத்தி இறுக்கும் நுகத்தடிகளை இறக்கி,ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் வாழ விடுதலைசெய்து, சுமையான அனைத்தையும் உடைத்தெறிந்து விடுதல் உண்மையான நோன்பாக கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதற்கு இணையான செயல்களாக திருமறைப்பகுதியில் கூறப்பட்டுள்ளவை:

**1) பசித்தோருக்கு உணவை பகிர்ந்து கொடுத்தல்:**

உண்ணா நோன்பு செய்து உணவை சேமித்து வைக்க முடியும், அத்தோடு உண்ணா நோன்பிருந்து பின்னர் மாலையில் அதிகமான உண்ணவும் முடியும். ஆனால் உண்மையான உண்ணா நோன்பு என்பது, தவிர்க்கப்படும் உணவை பசிப்போருக்கு கொடுப்பதில் ஏற்புடையதாகின்றது என்ற அழகான உண்மை இங்கு உணர்த்தப்படுகின்றது. உண்ணா நோன்பு என்பது ஒரு அடையாளம் மட்டுமே, இது கடவுளின் பார்வையை ஈர்க்காது ஆனால் நல்ல எண்ணமான உணவுப் பகிர்வு கடவுளின் பார்வையை நிச்சயமாக ஈர்க்கும் என்பதுதான் உண்மை. உணவைத் தவிர்ப்பவர், அந்த உணவை பசிப்போருக்குக் கொடுக்கவேண்டும். இதுதான் உண்மையான உண்ணா நோன்பு.

**2) தங்க இடமில்லா வறியோருக்கு இல்லத்தில் இடம் தருதல்:**

பாபிலோனிய இடப்பெயர்விற்கு பின்னர், வறியவர்கள் மேலும் வறியவர்கள் ஆனார்கள். அதாவது, பணக்காரர்கள் தங்கள் நிலங்களை பெரிதாக்கின அதே வேளை ஏழைகள் வீடு, நிலமற்றவர்களாய் மாறினார்கள். சகோதரத்துவத்தை பாராட்டுகின்ற இஸ்ரயேல் மக்களிடையே மோசே காலம் தொடங்கி பாபிலோனிய இடப்பெயர்வு காலம் வரைக்கும், வீடற்றவர்களுக்கு வீட்டில் இடம் கொடுத்தல் ஒரு மேன்மைமிக்க செயலாகப் பார்க்கப்பட்டது. அனைத்து உலகும் கடவுளுக்கு சொந்தம் என்பதால், வீடற்றவர்களுக்கு இடம்கொடுப்போர் கடவுளின் உண்மையான மக்களாகின்றனர். இது உண்மையான நோன்பாக கடவுள் ஏற்கிறார்.

**3) உடையற்றோருக்கு உடையளித்தல்:**

உடை அக்காலத்தில் வெறும் ஆடையை மட்டுமல்ல அது ஆளையும் காட்டியது. ஒருவருடைய உடையை வைத்து அவரின் அந்தஸ்து, செல்வம், படிப்பு, சமூக நிலை போன்றவை கணிக்கப்பட்டன. இவ்வாறு உடையில்லாதிருப்பவர் அனைத்தையும் இழந்தவராக்க் கருதப்படுகிறார். உடையற்றவருக்கு உடையளிப்பது, அவருக்கு மனிதத்தை, மனித மாண்பைக் கொடுப்பதற்கு சமம். இச்செயல் உண்மையான நோன்பாக ஏற்கப்படுகிறது.

**4) இனத்தாருக்கு உதவிசெய்தல்:**

"உன் இனத்தாரை," என்பதற்கு எபிரேய மொழியில், "உன் சதைக்கு" என குறிப்பிடப்படுகிறது. இது அனைவரும் ஒரே உடல் என்பதை உணர்த்துகிறது. தேவையிலிருக்கும் இனத்தாருக்கு ஒருவர் தன் இன அடையாளத்தை மறைத்தல் என்பது, அவருக்கு உதவிசெய்ய முடியாது, என்ற இனவெறுப்பையே காட்டுகிறது. இது ஒரு பாவம் என்பது இப்பகுதி உணர்த்தும் உண்மை. இப்பாவச்செயலுடன் உண்ணா நோன்பு கடைபிடித்தல் பயனற்றது என்பது விளங்குகிறது.

நோன்பை உண்மையாகக் கடைபிடிப்பது, நாம் பாவத்தை விலக்கி கடவுளோடு நெருங்கிய உறவு கொள்வதற்கு உடலுக்கும் மனதிற்கும் ஒருங்கிணைந்த முழு மனிதனுக்கு உதவுகின்றது. அதேசமயம், நோன்பானது, தேவையில் இருக்கும் அனைவர் மீது நம் கண்களைத் திறக்கின்றது என்றும், மனமுவந்து மேற்கொள்ளும் நோன்பானது நல்ல சமாரியன் போல துன்புறும் சகோதரருக்கு உதவ நம்மைத் தூண்டுகின்றது. இதையே கடவுளுக்கு உகந்த நோன்பாகக் கடவுள் ஏற்றுக்கொள்கிறார். மனித நேயத்தின் மாண்பினை தெளிவாக உணர்ந்து, அதை நிறைவேற்றுவதே ஆண்டவருக்கு ஏற்ற நோன்பாகும்.

| 𝄞 | ஞா. | 117 |
|---|---|---|
| | கீர். | 137 |

அருள்திரு. **T.P. ஸலீம் தங்க குமார்**

**10-03-2023** தவக்கால மூன்றாம் வெள்ளி

# அமைதியின் நற்செய்திக்குரிய ஆயத்தம் என்னும் மிதியடி

மத்தேயு 25 : 1 - 13



"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்தநிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள் " (எபே 6:15)

போர்களின் வரலாறு, போர்க்கருவிகள், போர்வீரர்கள், போர்ப்படைகள், போர்புரியும் அரசர்களின் ஆட்சிகள் போன்றவை குறித்து பல செய்திகளை பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காணமுடியும். எசாயா 59:17 - இல் கடவுளை ஒரு போர் வீரராக இறைவாக்கினர் சித்தரிக்கின்றார். இயேசு கிறிஸ்து தமது சிலுவை பயணத்தின்போது, ஆயுதங்கள் ஏந்திய போர்வீரர்கள் மற்றும் அவர்களது தாக்குதல் அனைத்தையும் அனுபவித்தார் என்பதை நற்செய்தியாளர்கள் பதிவு செய்துள்ளனர். திருத்தூதுவர் பவுல் தமது எபேசு திருமுகத்தில் 6:10-20 இறைவார்த்தைகளில் இறைமக்கள் தங்கள் குணநலன்களை ஆயுதமாக கொண்டு போர் புரிதல் குறித்து பதிவு செய்துள்ளார். எபே 6:15-இல் சொல்லப்பட்டுள்ள அமைதியின் நற்செய்திக்குரிய ஆயத்தம் என்னும் மிதியடி குறித்த ஒப்புமை தவக்காலத்தில் அறைகூவலாக இருக்கின்றது. இந்த இறைவார்த்தை நாம் எவ்வாறு ஆயத்தமாகுதல் வேண்டும் என்பதை இரு நிலைகளில் கற்றுத்தருகிறது.

**1. கிறிஸ்துவுக்காக உறுதியுடன் நிற்க ஆயத்தம்**

ஹோமர் எழுதிய "இலியட்" என்ற படைப்பில் ஒரு போர்வீரன் பலத்தை நிரூபிப்பதும், போரில் உறுதியுடன் நிற்பதும் போற்றப்படத்தக்க குணநலன்களாகக் கருதப்படுகின்றது. ரோம படைவீரர்களின் மிதியடிகளின் அடிப்பகுதியில் ஆணிகள் பதிக்கப்பட்டிருப்பது வழக்கம். வீரர்களின் கால்கள் இடறிவடாமல் இருக்கவும் கடினமான நிலப்பரப்புகளிலும் அவர்கள் உறுதியுடன் நிற்க வேண்டும் என்பவைகளே ஆணிகள் பதிக்கப்பட்டிருப்பதன் நோக்கமாகும்.

பவுல் "ஆயத்தம்" என்பதை போர்வீரன் மிதியடிக்கு ஒப்புமைப்படுத்துகின்றார். எதற்காக இந்த ஆயத்தம் தேவை என்றால்

கிறிஸ்துவுக்காக உறுதியுடன் நிற்க எத்தனை ஆயுதங்களை ஒரு போர்வீரன் வைத்திருந்தாலும் அவற்றை ஏந்திக்கொண்டு அவன் உறுதியுடன் நிற்க வேண்டும். அவ்வாறு செயல்பட மிதியடி முக்கியபங்கு வகிக்கின்றது.

ஒரு போர்வீரன் போர் புரியும் போர் களம், பள்ளத்தாக்குகள், மலைச்சரிவுகள், கற்குவியல்கள், கரடுமுரடான பாதைகள் போன்றவற்றால் நிறைந்திருக்கும் நிறைந்திருக்கும். இத்தகைய அசாதாரணமானச் சூழல்களில் லட்சியத்தை அடைய வேண்டுமாயின் அவனது மிதியடி உறுதியுடன் காணப்பட வேண்டும். எனவே பவுல், எபேசு மக்களிடம் கிறிஸ்துவின் அமைதியின் நற்செய்தியை பறைசாற்ற வாழ்வில் வரும் பல்வேறு சாவால்களை எதிர்கொள்ள கிறிஸ்துவின் அமைதியை இறைமக்கள் பெற்றுக்கொள்வதே தலைச்சிறந்த ஆயத்தம். எந்த அளவிற்கு கிறிஸ்துவின் அமைதி நம்மில் இருக்கின்றதோ அந்த அளவிற்கு நாமும் உறுதியுடன் நிற்க வேண்டும்.

## 2. கிறிஸ்துவை உரக்க அறிவிக்க ஆயத்தம்

நாம் வாழும் உலகம் செய்திகளின் உலகம் (World of News) எனக்கூறலாம். எப்போதும் செய்திகள் பல துறைகளிலிருந்து அறிவிக்கப்படுகிறது. அத்தகைய செய்திகள் மக்களின் வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது; சில செய்திகள் மக்களின் அமைதியை குலைக்கின்றது. இத்தகைய அமைதியற்ற வாழ்க்கை அனுபவங்கள் கொண்டவர்கள் எபேசு சபை மக்கள் (எபே 2:1). ஆனால் அவர்களை "நற்கிரியைகளை" அதாவது அமைதிக்கேற்ற கிரியைகளைச் செய்ய கிறிஸ்து ஆயத்தமாக்கினார் (எபே 2:10) என்று பவுல் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவினால் ஆயத்தம் செய்யப்பட்டவர்கள், அவரினால் கொடுக்கப்பட்ட அமைதியின் நற்செய்தியை அறிவிக்க தகுந்த ஆயத்தம் தேவை என்பதே எபே 6:15-ன் மையமாக உள்ளது.

கிறிஸ்து இயேசு சிலுவையைச் சுமந்து, சிலுவையில் மரித்து மெய்யான அமைதியின் நற்செய்தியாய் திகழ்ந்தார். இன்றைய உலகில் போர், வன்முறை, இயற்கைப் பேரிடர்கள், குடும்பப் பிரச்சனைகள், வறுமை, வலிகள் போன்றவற்றால் அமைதியை இழந்து வாடும் மக்களுக்கு இந்த தவக்காலம் தரும் நற்செய்தி மெய்யான அமைதியின் நற்செய்தியாய் இயேசு மரித்தார். அவரை ஏற்றுக்கொண்டோர் அவர் தரும் அமைதியைப் பெறுவர் என்பதாகும்.

இத்தகைள அமைதியின் நற்செய்தியை அறிவிக்க இந்த தவக்காலம் நம்மை ஆயத்தமாக்கும் காலமாக அமைந்திட கடவுளிடம் மன்றாடுவோம்.

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 84 |
| | கீர். | 408 |

திரு. Y. **சுஜின் ராஜ்**


**12-03-2023** உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு & தவக்கால மூன்றாம் ஞாயிறு

# ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து

## The Accepting Christ

ஓசே. 2 : 14-23 பில. : 1-21

தி.பா. 87 மத். 15 : 21-28



.... என்னை ஏற்றுக்கொள்வது போல் அவனையும் ஏற்றுக்கொள்ளும் (பில. 17)

நாம் வாழும் சமூக அமைப்பு பல நிலை கட்டமைப்புகளினால் உருவாக்கப்பெற்றுள்ளது. அன்பு செய்தல், ஏற்றுக்கொள்ளுதல், மன்னித்தல், அக்கறையுடன் நடத்தல், பரிவிரக்கம் காட்டுதல், அர்ப்பணிப்புடன் உதவி செய்தல், அனைவரையும் சமநிலையில் நடத்தல் எனும் உயரிய பண்புகளோடும், ஒன்றிணைவுப் பெற்ற மானிட உறவோடும், ரத்த பந்த பிணைப்போடும் இணைக்கப்பட்டிருப்பதாகும். வேற்றுமையில் ஒற்றுமை என்பதே மானிட வாழ்வின் உறவுப் பாலமாகும். ஆனால் நோக்கம் தவறியதின் வாயிலாக தன்னலம் மானிட இதயத்தை ஆக்கிரமித்துக் கொள்ள, உறவுகளில் இடைவெளி ஏற்பட்டது. இதனால் உள்ளன்போடும், உண்மையோடும், ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதில் முரண்பாடும், முடக்கமும், மமதையான அடக்குமுறைப் போக்கும் மேலோங்கி உறவுச்சூழல் சிதைந்திருப்பதைக் காணலாம். இந்நிலையிலே இறை இரக்கம் நீதியின் எல்லை, சட்டம், பழக்கவழக்கம் இவைகளைத் தாண்டி இருக்கும் நிலையிலே நம்மை கடவுளுக்கு ஏற்புடையவராக ஏற்றுக்கொள்கிறது. இது நமது தகுதியின் அடிப்படையிலன்று, மாறாக தகுதியின்மையை உணர்ந்து மனமாற்றமடைதல் வாயிலாக பெற்றுக்கொள்ளும் பெருங்கொடையாகும். இந்த முழுமை கிறிஸ்துவில் நமக்கு வழங்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் அளவீடுகளை அறிந்து செயல்படுதலே ஏற்புடைமையாகும்.

### 1. மனம் வருந்துவோரை மனதுருக்கத்துடன் ஏற்கிறார் (ஓசே. 2 : 14-23)

தவறு செய்வது, தடம் மாறிச் செல்வது மானிட இயல்பு. ஆனால் தவறென உணர்ந்து மாற்றுருவாக்கத்துக்கு ஒப்படைப்பதுதான் இறை

இயல்பு, மட்டுமன்று அதுவே கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புமாகும். வாழ்வுக்குரிய நெறிமுறைகளையும், ஒழுக்கவியல் நியதிகளையும்,திருச்சட்டத்தின் போதனைகளையும் புறந்தள்ளி உலக மயக்கத்தில் வேரூன்றி வீழ்ந்துபோன இஸ்ரயேல் மீது கடவுள் காட்டும் மனதுருக்கம் அவரது அளப்பரிய அன்பின் ஆழத்திற்கான அடையாளமாகும். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது (வி.ப. 20 : 3, இ.ச. 5 : 7) என்ற கட்டளைக்கு எதிராக பாகால்களுக்குப் பொன், வெள்ளியில் சிலை செய்தார்கள் (ஓசே. 2 : 8). பாகால்களின் விழாக்களைக் கொண்டாடினார்கள், நறுமணப்புகை எழுப்பினார்கள் (ஓசே. 2 : 13). ஆனாலும் பேரன்பால் இஸ்ரயேலரை நல்வழிப்படுத்த விரும்பி மனமாற்றத்துடன் திரும்பி வர அழைக்கும் கடவுள் மனதுருக்கத்துடன் ஏற்பதாக உறுதி வழங்குகிறார். அதற்காகவே பாலை நிலத்துக்கு கூட்டிப்போவேன் என்கிறார் (ஓசே. 2 : 14). பாலை நிலம் வரலாற்றை நினைப்பூட்டும் இடமாக மட்டுமன்று அவர்களை நன்னெறிப்படுத்தும் பயிற்சி கூடமாகவும் அறிந்து கொள்ளலாம். இஸ்ரயேலர் தங்களை ஆய்ந்தறிந்து, அப்பழுக்கற்ற நிலையில் அர்ப்பணிக்கும் தடமாகவும், கடவுளின் மனதுருக்கத்தில் உரிமைப் பேற்றின் உறவுக்குரியோராகவும் (ஓசே. 2 : 23) தகுதிபெறும் இடமாகவும் ஏற்றுக் கடவுளோடுள்ள உடன்படிக்கையால் ஏற்கப்பட ஒப்படைக்கும் அனுபவமாகவும் அமைந்து விடுகிறது. இந்த அறிதலே இஸ்ரயேலர் புது உறவையும், புது வாழ்வையும் பெறுவதற்குரிய அளவுகோலாகிறது. கடவுளின் பேரன்பும், மனதுருக்கமும் தொய்ந்து போனவர்களையும், தொலைந்துப் போனவர்களையும் தேடி ஏற்பதாகவும், ஒப்புரவாகுதலுக்கு உடன்படுத்துகிறதாகவும் அமைகிறது. தூய பவுலார் இந்த உண்மையைக் கிறிஸ்துவின் ஒப்புரவு எனக் குறிப்பிடுகிறார் (2 கொரி. 5 : 19, எபே. 2 : 14). இதுவே வாழ்விற்குரிய போதனையாக நமக்கும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அனைவரையும் ஏற்க தன்னையே கையளித்த திருமகனில் (யோவா. 3 : 16) நாமும் சான்றுடன் வாழ்வோம்.

**2. மன்னிப்புக்காக ஏங்குவோரை இரக்கத்துடன் ஏற்கிறார்** (பில. 12-21)

கடவுளின் இரக்கம் என்பது ஏற்க இயலாதவரை ஏற்றுக்கொள்வது தான். அதாவது தகுதியற்றவர்கள் மேல் அல்லது தகுதியிழந்தவர்கள் மேல் வெளிப்படும் தயாளத்துவமாகும். இதையே பவுலாரின் திருவுரையிலும் அறிந்துகொள்ளலாம். தவறிழைத்தோரை விலக்கிவிடாமல், சூழலுக்கு முன்னுரிமை வழங்காமல் மன்னித்து ஏற்பதே நல்லுறவுக்கான அடையாளமாகும். இந்த உண்மையிலே தூய பவுலாரின் அணுகுமுறையும் அமைந்தது. கொலோசெ பட்டணத்தில்

நற்செய்தியால் நம்பிக்கையாளரானவரே பிலமோன் ஆவார். செல்வந்தரான இவரது இல்லத்தில் அடிமைப்பணிக்கு அமர்த்தப்பட்டவரே ஒநேசிமு. இவரது உண்மையற்ற செயல்களும், நடவடிக்கைகளும் தலைவருக்கு எதிராகவும், ஏமாற்றமுமாக அமைந்து விட்டதை உணர்ந்தவர் அவ்விடத்திலிருந்து தலைவருக்கு அறிவிக்காமல் உரோமைக்குத் தப்பி ஓடிவிட்டார். அன்றைய நடைமுறைச் சட்டத்தின்படி ஒநேசிமு மரணத் தண்டனைக்குரியவரே. ஆனால் ஒநேசிமு பவுலாரின் நற்செய்தியால் புதிய வாழ்வுக்கு மாற்றம் பெறுகிறார். பழைய இயல்புகள் முழுமையும் மாறிவிட்ட நிலையில் பவுலாரின் அன்புக்கும், உரிமைப்பேற்றின் உறவுக்கும் ஏற்புடையவராகிறார். இந்த நல்ல செயல்களால் ஒநேசிமுவை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி உரோமைச் சிறையிலிருந்து பிலமோனுக்குத் திருமடல் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறார். எவரையும் அவரது செயல்களைக் கொண்டு தீர்ப்பிடவோ, ஒதுக்கிவைப்பதோ கூடாது. ஏனெனில் அனைவரும் படைப்பின் நோக்கத்திற்கும், கடவுளின் எதிர்பார்ப்புக்கும் எதிராக நடந்து அவரது உள்ளத்தைத் துயரமடையச் செய்தவர்களே (தொ. நூ. 6 : 5, 6). இதை உணர்ந்த நிலையிலே பவுலார் ஒநேசிமுக்காக பிலமோனிடம் அறிவுறுத்துகிறார். கிறிஸ்தவ வாழ்வு வார்த்தையாலன்று மாறாக வாழ்வால் வெளிப்படவேண்டும். அதுவே சமூக மாற்றத்துக்கும், சகோதரத்துவ உறவுக்கும் அச்சாக அமையும். மன்னிப்பு என்பது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் போது மட்டுமே உறவுகளால் கள்ளமற்ற, கபடமற்ற உண்மைநிலை வெளிப்படும். இதுவே கிறிஸ்துவில் காண்பிக்கப்பட்ட மகிமையான மேன்மையாகும் (எபே. 4 : 32, கொலோ. 3 : 13). திருச்சிலுவையை உயர்த்திக்காட்டும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் மன்னிப்பு வேரூன்றிவிட்டால் இயேசுவின் இறையரசு இயக்கம் பெற்றுள்ளது என்பதே அடையாளமாகும்.

**3. மனத்தாழ்மையுடையோரை மதிப்பிற்குரியோராக ஏற்கிறார்** (மத். 15 : 21 - 28

மனத்தாழ்மை கிறிஸ்தேசுவின் அலங்காரத்துவம் (மத். 11 : 29). கிறிஸ்தவர்களின் அடையாளத்துவம் (I பேது. 3 : 8). தன்னடக்கத்தோடு, பின்வாங்காமல், பற்றுமையின் உறுதியுடன் பணிந்தடங்குவதே வாழ்விற்குரிய வழித்தடமாகிறது என்பதையே மத். 15 : 21-28 தெளிவுபடுத்துகிறது. இயேசுநாதர் யூதர்களால் புற இனத்தவர் எனக் குறிப்பிடப்பட்டிருந்த மக்களின் வாழிடமாகிய தீரு, சீதோன் பகுதிக்கு

வருகிறார். அந்த இடத்தின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த கானானியப் பெண்மணி (மத். 15 : 22) துன்பியலின் தாக்கத்தால் துவண்டிருந்தவர், தன் மகளின் இயலாமையால் சோர்புற்றிருந்தவர் இப்போது இயேசுவிடம் இரக்கத்துக்காக வேண்டுகிறார். ஆனால் இயேசுவோ அமைதியாக இருக்கும் நிலையில் சீடர்களோ இவரை அனுப்பிவிடும் எனக் கூற ஒரு பழமொழி உவமையால் (மத். 15 : 26) தம் கருத்தை உறுதிப்படுத்துகிறார். பொதுவாக பிள்ளைகளுக்கு உணவுக்கொடுத்த பின்னரே வளர்க்கும் நாய் குட்டிகளுக்கு உணவைக் கொடுப்பர். இது வழக்கமான செயல் தான். இந்தக் கூற்றின் வாயிலாக யூதர்கள் முன்னிலை பெறுவது போன்று தோன்றினாலும் உண்மை என்னவெனில் மெசியாவின் ஏற்புடைமை எல்லைத் தாண்டி எல்லோரையும் தன்னுடையவராக்குவது என்பது தான். கானானியரிடம் காண்பிக்கப்படும் பகைமையின் போக்கு நோவாவின் (தொ.தி. 9 : 25-27) காலத்திலிருந்தே தொடங்கினாலும் இந்நிகழ்வு அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் மெசியா நிகழ்வாகவும் புரிந்துக்கொள்ள முடிகிறது. எப்படியாயினும் கானானியப் பெண்மணியின் பற்றுறுதியை அசைத்துவிட இயலவில்லை. அவரது உறுதியும், தாழ்மையும், மெய்யறிவோடு கூடிய பதிலுரைத்தலும் (மத். 15 : 27) இயேசுநாதரின் அருஞ்செயலைப் பெறுவதற்குரிய அங்கீகாரத்தைப் பெறுகிறது. அன்புக்கொடையால், அருளாற்றலால் வியத்தகுச் செயல் நடைபெறுகிறது. இப்போது அவரது மகள் நலம் பெறுகிறார். நீண்ட நெடிய நாட்களாக வலிகளோடும், வருத்தங்களோடும், வருங்கால கவலையோடும் காணப்பட்டதில் வெளிப்பட்ட மனத்தாழ்மையே அவரது நம்பிக்கைக்கு அங்கீகாரம் வழங்கிச் சிறப்புப்படுத்தியது. நம்பிக்கை என்பது மலைகளை மட்டுமன்று, மகிபனின் இதயத்தையும் இளகச் செய்தது. மட்டுமன்று இறையரசுப் பணியில் சிறப்பும் பெறுகிறார்.

வாழ்வின் பாதை எதிர்காற்றுப் போன்ற கவலை, இயலாமை, நலமின்மை, ஒதுக்கப்படுதல், ஒடுக்கப்படுதல் போன்றவைகளால் அழுத்தப்படும் போதும், எனக்கென்று எவருமில்லையே என கலக்கமுறுகின்ற போதும் துன்பியல் பாதையின் துயரங்களை ஏற்றுக்கொண்டவர் என்னோடிருக்கிறார் என்ற பற்றுறுதியுடன் இறை ஆதரவையும், அரவணைப்பையும் பெற்று இறையாசீருடன் வாழ்வோம்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 79 | ஞா. | 474 |
| | கீர். | 129 | கீர். | 286 |

**15-03-2023** தவக்கால நான்காம் புதன்

# மனமாற்றத்தின் நோன்பு

யோனா. 3 : 1 - 10



“நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்”
(யோனா 3:5)

தவக்காலம் உடலை வருத்திக் கொள்வதற்காக மட்டும்மல்ல. மாறாக உள்ளத்தை திருத்திக் கொள்ளவே கடைபிடிக்கப்படுகிறது. தவக்காலத்தின் அடிப்படையே நம்முடைய பாவ வாழ்க்கையை விட்டு விட்டு மனம் திரும்ப வேண்டும் என்பதுதான். இது நமது பாவங்களை குறித்து சிந்தித்து அதிலிருந்து மனம் திரும்பி வெளியே வருவதற்கு தூய ஆவியின் உதவியை நாடும் காலம்.

**1. பாவங்களிலிருந்து மனந்திரும்புதல்**

நினிவே நகரோ யூதர்கள் வாழ்ந்த நகரம் கிடையாது. அது புறவினத்தார் வாழ்ந்த நகரம். அப்படிப்பட்டவர்களிடம்தான் இறைவாக்கினர் அனுப்பப்படுகின்றார் . இங்கே நாம் இன்னொரு உண்மையை உணர்ந்துகொள்ளவேண்டும். அது என்னவென்றால், யூதர் மட்டும்தான் மீட்படைய வேண்டும் என்பதல்ல, எல்லா மக்களும் மீட்படைய வேண்டும் என்பதுதான் கடவுளின் கடவுளின் விரும்பம். அதனால்தான் புறவினத்தார் வாழ்ந்த பகுதியாக நினிவே நகருக்கு இறைவாக்கினர் யோனாவை அனுப்பி வைத்து, அவர்களுக்கு மனமாற்றச் செய்தியை அறிவிக்கச் செய்கின்றார். “இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார்.” யோனாவின் செய்தியைச் கேட்ட நினிவேயின் அரசர், “மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும்; தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும்” என்ற கட்டளையைப் பிறப்பித்தார் (யோனா 3:8). நினிவேப் பட்டணத்து மக்கள் - சிறுவர் முதல் பெரியவர் வரை - சாக்கு உடை உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து நோன்பிருந்தார்கள். தாங்கள் போகின்ற போக்கை மாற்ற முடிவு செய்கின்றனர். அந்த மாற்றத்தை உடனே செயல்படுத்துகின்றனர்.

பாவமன்னிப்பிற்காக நோன்பிருந்த வேறு நிகழ்வுகளையும் திருமறை கூறுகிறது. எலியாவின் காலத்தில், ஆகாப் மன்னன் பாவ அறிக்கையிட்டு நோன்பிருந்தான் (1அர 21:27). நெகேமியா மக்களை ஒன்றுகூட்டி நோன்பிருந்து பாவ அறிக்கையிட்டார் (நெகே 9:1-2). தானியேல் நோன்பிருந்து, சாக்கு உடை அணிந்து, சாம்பலில் அமர்ந்து, பாவ அறிக்கையிட்டார் (தானி 9:3-4).

நினிவே மக்கள், அரசர், சிறுவர் முதல் பெரியவர் என அனைவரும், நோன்பிருந்து, பாவ அறிக்கையிட்டனர் (யோனா 3:5-8). கடவுள் அவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து, தன்னுடைய முடிவினை மாற்றிக்கொண்டு அவர்களை அழிக்காமல் விட்டுவிடுகின்றார். இறைவனின் விருப்பம் நாம் அழிந்து போகவேண்டும் என்பதல்ல, மாறாக , நாம் அனைவரும் மனம்மாறி, அவரிடம் திரும்பி வரவேண்டும் என்பதே ஆகும்.

## 2. கடவுளின் இரக்கம் பெறுதல்

கடவுளது இரக்கத்தையும், பேரன்பையும், மன்னிப்பையும் அதிகமாக பெற்றுக்கொள்ளும் காலம் தான் தவக்காலம். இன்னும் நாற்பது நாளில், நினிவே அழிக்கப்படும் என்ற யோனாவின் எச்சரிக்கையை கேட்ட போது, பெரியோர், சிறியோர், அனைவரும் சாக்கு உடை உடுத்தினர் (யோனா 3:5). நினிவே அரசர் சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்கார்ந்தார் (யோனா 3:6). நினிவே மக்கள் கடவுளின் இரக்கத்திற்காக நோன்பிருந்து மன்றாடினர். எனவே, கடவுள் அம்மக்களுக்கு அளிக்க இருந்த தண்டனையைக் கொடுக்கவில்லை (யோனா 3:10). பெரிய அழிவிலிருந்து அவர்கள் காக்கப்பட்டார்கள். மீட்பின் வாழ்வை அவர்கள் அனுபவித்தார்கள்.

போர் வேளையில், கடவுளின் உதவி பெற, மக்களிடம் நோன்பிருக்குமாறு, யோசேபாத் கட்டளையிட்டார் (2குறி 20:3-4). மக்களின் குற்றத்திற்காக எஸ்ரா உண்ணாமலும், குடிக்காமலும், நோன்பிருந்து அழுது புலம்பினார் (எஸ் 10:6). தங்கள் மீட்புக்காக மூன்று நாட்கள் நோன்பிருக்க எஸ்தர் மக்களை ஆயத்தப்படுத்தி அவரும் தன் செவிலியரும் நோன்பிருந்தனர் (எஸ் 4:15-17). மாபெரும் அழிவினின்று யூதகுலம் மீட்கப்பட்டது.

நோன்பு காலத்தை மன்ந்திரும்புதலின் காலமாகப் பயன்படுத்துவோம். மனந்திரும்பி, பாவமன்னிப்பு பெற்று, கடவுளின் பேரிரக்கத்துடன் முன்னேறுவோம்.


| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 113 |
| | கீர். | 138 |

அருள்திரு. **T.P. ஸலீம் தங்க குமார்**

**17-03-2023** தவக்கால நான்காம் வெள்ளி

# நம்பிக்கை என்னும் கேடயம்

மாற்கு 7 : 24 - 30



"எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். அதைக்கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்துவிட முடியும்"
(எபே 6:16)

தொடக்க வரலாற்றில் தீயோனின் தீக்கணையாகிய தந்திரத்தால் மனிதன் பாவத்திற்கு உள்ளானான். பாவத்தை சிலுவையில் சுமந்து தீர்க்க வந்த இயேசு கிறிஸ்துவை பல்வேறு தக்கணைகளைக் கொண்டு தீண்டிய தீயோனின் தந்திரங்களை தந்தையாம் கடவுளின் துணைக்கொண்டு அவர் முறியடித்தார். இன்று இறைமக்களாகிய நம்மையும் இவ்வுலகில் காணப்படும் பல்வேறு தீக்கணைகளைக் கொண்டு தீயோன் சோதிக்கிறான். இத்தகையச் சூழலில் இன்றைய திருமறைப்பகுதியாகிய எபே 6:16-இல் பவுல் எபேசு சபைக்கு கூறும் அறிவுரை நம்பிக்கை என்னும் "கேடயத்தை" இறைமக்கள் பிடித்துக்கொண்டு தீயோனை எதிர்க்க வேண்டும் என்பதே. இத்தகைய நம்பிக்கை என்னும் "கேடகம்" எத்தகைய நன்மைகளை தருகிறது என்பதை சிந்தித்தல் என்பது அவசியமானது.

**1. தீயோனிடமிருந்து காக்கும் கேடயம்** (The Shield which Protects)

எபே 6:16-இல் குறிப்பிடப்படும் கேடயம் என்ற சொல்லின் கிரேக்க பதம் "தைரோஸ்" (thyros) என்பதாகும். இந்த பதம் சாதாரணமாக போர் வீரர்கள் வைத்திருக்கும் வட்ட வடிவிலான கேடயம் அல்ல, மாறாக முழு உடலையும் மறைக்கின்ற வகையில் தோல் போர்த்தப்பட்ட பலகையாகும். பொதுவாக உடலின் முக்கிய உறுப்பாக கருதப்படும் இதயத்தை பாதுகாக்கவே போர்வீரர்கள் கேடயத்தை பயன்படுத்துவர். ஆனால் இங்கு பவுல் குறிப்பிடும் வார்தகை முழுஉடலையும் காக்கின்ற அல்லது மறைக்கின்ற கேடயமாகும்.

யோவானின் முதல் கடிதத்தில் “நாம் கடவுளைச் சார்ந்தவர்கள்; ஆனால் உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது. இது நமக்கு தெரியும்” (1 யோவா5:19) என்று குறிப்பிடுகின்றார். எனவே தீயோனின் பிடியிலிருக்கும் உலகம் பல தீமைக்குரிய அம்புகளை நம்மீது எறியக்கூடும். அத்தகைய அம்புகளை எதிர்த்து நம்மைக் காத்துக்கொள்ள இந்த நம்பிக்கை என்னும் கேடயம் உதவுகின்றது. அப்படியென்றால் இந்த நம்பிக்கை யார் மீது வைப்பது என்ற கேள்விக்கு பவுல் தெசலோனிக்கேய திருச்சபைக்கு எழுதிய இரண்டாம் கடிதத்தில் பதில் தருகிறார். “ஆனால் ஆண்டவர் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களை உறுதிப்படுத்தி தீயோனிடமிருந்து காத்தருளுவார்” (2 தெச 3:3). எனவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீது நமது நம்பிக்கை வைப்பதே நம்பிக்கை என்னும் கேடயமாக மாறுகின்றது.

எந்நிலையிலும் (besides all, above all) எல்லாவற்றிற்கும் மேலாக (Power) என்ற வார்த்தைகள் இந்த வசனத்தில் பவுல் பயன்படுத்தி இந்த நம்பிக்கை என்னும் கேடயத்தின் முக்கியத்துவத்தை அழுத்தமாக கூறுகின்றார். இயேசு தனது சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த இறைவேண்டலில் “தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்” என்று குறிப்பிடுகின்றார். (மத் 6:13). யோவா 17:15-இல் “தீயோனிடமிருந்து அவர்களை காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்” என்கிறார். உலக மனிதர்கள் தீயோனின் தந்திரங்களுக்குள் சிக்கித் தவிப்பதை விரும்பாது ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கை என்னும் கேடயத்தால் தீயோனை எதிர்த்து காத்திட அவர் உதவிச் செய்வாராக.

### 2. வெற்றி பெறச்செய்யும் கேடயம் (The Shield which brings Victory)

ஒரு போர்வீரன் தனக்கு முன்பாக தன்னை எதிர்த்து தாக்கும் ஆயுதங்களை தனது கேடயத்தைக் கொண்டு எதிர்கொள்ளும்போது அவன் காக்கப்படுவதுமட்டுமல்ல, அவன் எதிர்பார்க்கும் வெற்றியை தனதாக்குகிறான். பவுல் குறிப்பிடும் நம்பிக்கை என்னும் கேடயத்தின் பயன்பாடு அல்லது நன்மை யாதெனில் ஆன்மீக வாழ்வில் நாம் சந்திக்கும் அனைத்து சோதனைகள், எதிர்ப்புகள், சிக்கல்கள், குழப்பங்கள், கடினங்கள் அனைத்தையும் தாண்டி கடவுள் தரும் வெற்றி வாழ்வைப் பெற முடியும் என்பதே. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தாவீதின் வாழ்வு இதற்கு சான்றாகிறது. தாவீதிடம் போர் ஆயுதங்கள் இல்லை. தாவீதை சவுல் தாக்க முயற்சி செய்வதற்கு

முன்னரே மிகப்பெரிய ஆயுதங்கள் அவனைத் தாக்கின. அந்த ஆயுதங்கள் போர் ஆயுதங்களல்ல; வார்த்தைகளால் சொல்லப்பட்ட ஆயுதங்களே. தாவீதிடம், தன் சகோதரன் "நீ இங்கே வந்தது என்ன?" என்று கேட்டது; சவுல் தாவீதிடம், "நீ இளைஞன்" (1 சாமு 17:28,33) என்று கேட்டதும் தாவீதை எதிர்நோக்கி வந்த அம்புகளாக இருந்தது. ஆனால் கடவுள் மீது அவன் கொண்ட நம்பிக்கை என்னும் கேடயத்தால் தன்னை எதிர்த்து வந்து "வார்த்தைகள்" என்னும் அம்புகளை எதிர்த்த கோலியாத்தை நம்பிக்கை என்னும் கேடயத்தால் வெற்றி சிறந்தான்.

இன்றும் ஆன்மீக வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் வார்த்தைகள் பல நம்மை சோர்வடையச் செய்யலாம். நாம் சந்திக்கும் பிரச்சகைகள் நமக்கு குழப்பங்களை ஏற்படுத்தலாம். ஆனால் நம்பிக்கை என்னும் கேடயத்தைக்கொண்டு வெற்றியடைய கடவுள் நமக்கு உதவிச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை அனுபவம் நமக்கு கற்றுத்தரும் உண்மையும் இதுவே. நம்பிக்கை என்னும் கேடயத்தைக் கொண்டு நாம் காக்கப்பட்டு வெற்றியைப் பெற கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக உள்ளார். இந்த தவக்காலத்தில் நாமும் நமது நம்பிக்கையை சிலுவை சுமந்த இயேசு நாதர் மீது வைத்து, நம்பிக்கை என்னும் கேடயத்தால் வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 474 |
| | கீர். | 292 |

**19-03-2023** உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு & தவக்கால நான்காம் ஞாயிறு

# விடுவிக்கும் கிறிஸ்து

## The Liberating Christ

விப. 3 : 1-13 — கலாத். 5 : 1 - 12

தி.பா. 82 — லூக். 13 : 10-17



கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்; அதில் நிலைத்திருங்கள் . . .உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள். (கலாத். 5 : 1)

ஜெர்மனியிலுள்ள எவர்டன் நகர் பேராலயத்தின் கோபுரத்தில் ஓர் அழகிய செம்மறி ஆட்டின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அந்த சிலையின் பின்னணியத்தில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்பு அப்பேராலயத்தின் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருந்தது. ஆலய கோபுரத்தில் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர்களில் ஒருவர் கால் இடறி கோபுரத்திலிருந்து கீழே விழுந்து விட்டார். ஆலயத்தின் முன் பகுதியிலிருந்த கரடுமுரடான கற்கள் மீது அப்பணியாளர் விழுந்திருந்தால் அவ்விடத்திலேயே மரணமடைந்திருப்பார்.

ஆனால் நடந்தது என்னவெனில், அப்பணியாளர் கோபுரத்தின் அடிப்பகுதியில் நின்று கொண்டிருந்த செம்மறி ஆட்டின் மீது விழுந்தார். இப்பணியாளர் ஆட்டின் மீது விழுந்ததால், உயிர் பிழைத்துக் கொண்டார். ஆனால் அந்த செம்மறி ஆடோ செத்துப் போயிற்று. அப்பணியாளரின் உயிரைக் காப்பாற்றும்படித் தியாகம் செய்யப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு நன்றி கூறும் வண்ணமாக அவ் ஆட்டுக்குட்டியின் சிலையினை வடிவமைத்து அவ்வாலய கோபுரத்தில் வைத்தார்கள். இயேசு விடுதலை அருளும் கிறிஸ்து என்று சிந்திக்கும்போது மேற்குறிப்பிட்ட நிகழ்வில் தியாகம் செய்த ஆட்டைப் போன்று இயேசுவும் உலக மக்களின் மீட்பிற்காக தன் வாழ்வைக் கல்வாரியில் தியாகம் செய்தார். இவ்வாறு கிறிஸ்துவின் தியாகத்தினால் மீட்பு பெற்ற மனுக்குலம் அம்மீட்பின் வாழ்வு நிலையில் நிலை நிற்க வேண்டும் என்பதே பவுலடியாரின் சிந்தனையின் அழுத்தமாகும்.

கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளைச் சார்ந்து விடுவிக்கும் கிறிஸ்து என்ற கண்ணோட்டத்தில் பின்வருமாறு இவ்வருளுரை அமைகின்றது.

**1.விவிலியம் காட்டும் கடவுள் விடுதலையின் கடவுள்** (விப. 3 : 1-13) **Bibilical God is a God of Liberation**

ரூசோ என்பவர் மனிதன் விடுதலைக்காகப் படைக்கப்பட்டான். ஆனால் அவன் கட்டுகளால் கட்டப்பட்டவனாகக் காணப்படுகின்றான் என்றார். (Man is born free but he is in Chains) அதாவது விவிலிய நாட்களிலும் இன்றும் மனித வாழ்வில் சமூக அநீதி, சாதியம், வகுப்புவாதம், லஞ்சம் மற்றும் பல்வேறு ஒடுக்குதல் போன்ற கட்டுகள் மனிதனை ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆனால் விவிலியம் சார்ந்து கற்றுக் கொள்ளும்போது விவிலியம் காட்டும் கடவுள் இத்தகைய கட்டுகளிலிருந்து மனிதனை விடுவிக்கின்றார் என்பது நற்செய்தி. மேற்குறிப்பிட்ட விவிலியப் பகுதியில் இக்கருத்து தெளிவுபடுத்தப்படுகின்றது.

விப. 3 : 7-9-ல் ஆண்டவர் கூறியது, “எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். . .” ஒடுக்குதலைச் சந்தித்த இஸ்ரயேல் மக்களின் அழுகையினைக் கேட்டு அவர்தம் ஒடுக்குதல்களைக் கண்ட இறைவன் அவர்களை விடுவிக்க முதற்படியெடுக்கின்றார் எனக் காண்கிறோம். (YHWH hears the cry, he sees the oppression and initiates the Exodus). எகிப்தியரின் பிடியிலிருந்து விடுவிக்கவும், கானானில் உயர்வுடையவர்களாக்கவும் இறங்கி வந்த விடுதலையின் கடவுள் என இங்குக் கடவுள் சுட்டிக்காட்டப்படுகின்றார் (விப. 3 : 8). மேலும் 3 : 13-15 வரையுள்ள விவிலியப் பகுதியில் இவ்விடுதலையின் கடவுள் தன் பெயரை “இருக்கிறவராகவே இருக்கிறேன்” (I am who I am) எனத் திருவுளம் பற்றுகின்றார். இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை வாழ்வை வழங்கிய கடவுள் இயேசு கிறிஸ்துவின்மூலம் உலக மக்களுக்கு இன்றும் விடுதலை வாழ்வை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதே விவிலியத்தின் அழுத்தம் (மத். 1 : 21; லூக். 4 : 16-19). விவிலியம் சுட்டிக்காட்டும் கடவுள் விடுதலை எண்ணம் கொண்ட கடவுள் என்பதனை Allen Bossale என்ற இறையியல் சிந்தனையாளர் “விவிலியம் சுட்டிக்காட்டும் கடவுள் அடக்குமுறையின் கடவுள் என்பதைவிட அவர் விடுதலையின் கடவுள். அநீதியின் கடவுள்

என்பதைவிட விடுதலை மற்றும் மனிதர் தன்மையின் கடவுள்” எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய விடுதலை எண்ணம் கொண்ட இயேசு நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்தார் எனப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகின்றது. விவிலியம் காட்டும் விடுதலையின் கடவுளை இயேசுவில் புரிந்துகொள்ளும் நாம் மனித அடிமைத்தனத்திற்குத் துணை போகாது விடுதலையின் பாதையில் மக்கள் பணியில் ஈடுபட அழைக்கப்படுகின்றோம்.

**2. தேவை உள்ளவர்க்குச் சேவை செய்வதில் விடுதலைப்பணி**
(At the service of the Needy)

நற்செய்தி நூல்களில் இயேசுவின் பணியில் அவர் தேவையுள்ள மக்களோடு தம்மை ஒன்றுபடுத்தி விடுதலைப் பணிபுரிந்தார் எனக் காண்கிறோம். இத்தகைய ஒன்றுபடுதலின் அடையாளமாகத் தமது திருமுழுக்கையும் புரிந்து கொண்டார். தேவையுள்ள மக்களைக் கண்டபோது, “திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார். அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப் போல அலைக்களிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்” (மத். 9 : 36) என அவர்கள் மேல் மனதுருகி விடுதலைப் பணி செய்தார். மேலும் “பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள்...” என அழைத்துத் தம் விடுதலை தழுவிய கரிசனையினை வெளிப்படுத்தினார்.

லூக். 3 : 10-17 வரையுள்ள விவிலியப் பகுதியில் 18 ஆண்டுகளாக தீய ஆவியின் ஆற்றலினால் தீய ஆவியினால் உடல் நலம் குன்றிய பெண்மணிக்கு ஓய்வுநாளில் விடுதலை கொடுத்தார். ஓய்வுநாளில் மனிதநேயத்துடன் கூடிய விடுதலைப் பணி சிறப்பு என கற்றுத் தந்தார். யோவானின் சீடர்களிடம் இயேசு தமது பணி தேவையுள்ளவர்களுக்குரியது என்பதைத் தெளிவுபடுத்தினார் (லூக். 7 : 18-23). விவிலியம் சார்ந்து இயேசுவின் வல்ல செயல்கள் இவ்வுலகில் கடவுளின் ஆளுகையின் ஒருங்கிணைந்த பகுதியாகத் தேவை உள்ளவர்களுக்குச் சேவை செய்ததின் நிலையாக அமைந்தது எனலாம் (யோவா 5 : 1-14).

இன்றைய திருச்சபையில் இயேசுவின் பணி சார்ந்து தேவையுள்ளவருடன் ஒன்றுபட்டு விடுதலைப் பணி நிறைவாய் செய்கின்றோமா? அழகிய ஆலயங்கள், வானை எட்டும் கோபுரங்கள்,

இதமான வழிபாடுகள் இவற்றில் உணர்வு சார்ந்து பங்குபெறும் நாம், நம் கண்களின் முன் நிற்கும் ஏழைகள் மற்றும் வாழ்விழந்தவர்களை எப்படி நோக்குகின்றோம். நாம் செய்யும் மருத்துவப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி போன்றவை வியாபார நோக்கில் அமைந்து ஏழைகளை அடிமைப்படுத்துவதில்லையா? "மனித வாழ்வின் நோக்கம், சேவை செய்து, மனதுருக்கத்தைக் காண்பித்து மற்றவர்களுக்கு உதவுவதற்கான விருப்பநிலை என்பதாகும்" என்கின்றார் ஆல்பிரட் சுவைட்சர் என்பவர் (The purpose of human life is to serve, and show compassion and the will to help others). தேவை உள்ளவருடன் ஒன்றுபட்டு உதவுவதை விவிலியமும் ஆதரிக்கின்றது. எ.கா. நீதிமொழி. 19 : 17, 22 : 9; எபிரேயர் 13 : 16; பிலி. 2 : 4. கடவுளுக்குச் சேவை செய்வது, மக்களுக்குச் சேவை செய்வதின் மூலமாக அமைய முடியும் என்பதை மறந்திடவேண்டாம்.

**(3) இயேசுவின் அடக்குமுறையான சமூக அமைப்புகளுக்கான சவால்** (Jesus challenged the oppressive social structures)

இயேசுவின் கால பாலஸ்தீன சமூகம் ஏற்றத்தாழ்வுள்ள சமுகம். இயேசுவும் சீடர்களும் அப்போதே சமூகத்தின் கடைநிலையைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இயேசு அக்கால சமூகத்தின் கல்லாதவர், ஏழைகள், தொழுநோயாளர், சிறுவர், பெண்கள் மற்றும் சமாரியருடன் தன் தொடர்பை நன்கு வளர்த்துக் கொண்டார் (Identifying with the social out cast of his time). மறைநூல் அறிஞர்கள், குருக்கள், சதுசேயர், பரிசேயர் போன்றவர்கள் சமூகத்தில் உயர் நிலையில் காணப்பட்டனர். அவர்கள் திருச்சட்டம் குறித்த அறிவுடையவராயும் காணப்பட்டனர். பொதுவாக யூதேயாவைச் சார்ந்தவர்கள் கலிலேயர்களைத் தாழ்வாகக் கருதினர். திருச்சட்டம் தெரியாத சாதாரண மக்கள் நிலத்தின் மக்கள் ((People of the Land) என அறியப்பட்டனர். இறைப்பணியில் இவர்களுடன் இயேசு தம்மை இணைத்துக் கொண்டார். ஒழுக்கம் மற்றும் ஒருவர் செய்கின்ற வேலை போன்றவை சமூக அடுக்கமைவினை (Social stratification) வடிவமைப்பதில் பங்காற்றின. ஜெரமியாஸ் என்பவரது கூற்றின்படி ஒழுக்கக்கேடான வாழ்வை நடத்துபவர்கள், (எ.கா. விபச்சாரக்காரர் மற்றும் ஏமாற்றுக்காரர் லூக். 18 : 11) வரி வசூலிப்பவர் மற்றும் மேய்ப்பர் போன்ற பணிகளைச் செய்தவர்கள் பாவிகள் எனப்பட்டனர். ஆனால் இயேசு இப்படிப்பட்டவர்களோடு நல்லத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். எல்லா மக்களையும் இறைமக்களாகக் கருதி அன்புடனும்

இரக்கத்துடனும் நடத்தினார். இயேசுவின் கண்ணோட்டத்தில் விடுதலைப் பணி செய்யும் நாமும் இன்று மக்களை விட்டு ஒதுங்கி நிற்பதில் தூய்மை காணமுயலாது மக்களுடன் ஈடுபட்டு விடுதலைப்பணி புரிவோமாக.

மார்டின் லூதர் கிங் Jr. என்பவர் அமெரிக்க நாட்டைச் சார்ந்த பாப்டிஸ்ட் சபைப் போதகர். சிறந்ததொரு அருளுரைஞர். கறுப்பின மக்களின் உரிமைக்காக, விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். இவர் 1968-ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இயேசுவின் மீட்புப்பணியைப் புரிந்து விடுதலைப்பணிபுரிந்த இவர் குறிப்பிடும்போது, Freedom is never voluntarily given by the oppressor, it must be demanded by the oppressed என்பார். அதாவது, விடுதலை என்பது ஒருபோதும் ஒடுக்குகின்றவரால் தன்னார்வ நிலையில் தரப்படுவதில்லை இந்த விடுதலை ஒடுக்கப்படுகின்றவர் உரிமைக் கோருவதின் மூலமாக கொடுக்கப்படுகின்றது என்கிறார். தற்கால விடுதலைப்பணியும் ஒடுக்கப்படுபவரின் சார்பில் நின்று உரிமை கோரும் விடுதலைப்பணியாக அமையட்டும். இயேசுவின் விடுதலைப்பணியின் பங்கேற்பு நிலையின் பின்னணியத்தைப் புரிந்து திருச்சபையில் சமூகத்தில் விடுதலைப்பணிபுரிய நம்மை அர்ப்பணிப்போமாக.

அருள்திரு W. **ஸ்டான்லி ஜோண்ஸ்**

| 𝄞 | ஞா. | 59 | ஞா. | 449 |
|---|---|---|---|---|
| | கீர். | 3 | கீர். | 282 |

**22-03-2023** தவக்கால ஐந்தாம் புதன்

# நல்லுறவின் நோன்பு

செக். 8 : 18 - 23



“நான்காம் மாதத்தின் நோன்பும், ஐந்தாம் மாதத்தின் நோன்பும், ஏழாம் மாதத்தின் நோன்பும், பத்தாம் மாதத்தின் நோன்பும் யூதா குடும்பத்தார்க்கு மகிழ்ச்சியும் களிப்பும் நிறைந்த மாபெரும் திருவிழா நாள்களாக மாறிவிடும். ஆதலால் வாய்மையையும் நல்லுறவையும் நாடுங்கள்” (செக் 8:19)

எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டதிலிருந்து, பாபிலோனியர்கள் உட்புகுந்து அதை பாழாக்கியதிலிருந்து யூதர்கள் தொடர்ச்சியான நோன்புகளைக் கடைபிடித்தார்கள். இந்த நோன்பு காலங்கள் அழுகை, புலம்பல், துக்கம் மற்றும் கசப்பின் காலங்களாக இருந்தன. ஒவ்வொரு நோன்பிலும் உணவின்றி இருந்து அழுது புலம்பிக்கொண்டே சென்றனர். பட்டணம் மீண்டும் கட்டப்பட்டு, ஆலயம் மீண்டும் கட்டப்படும் நிலையில் மக்கள் வாழ்வில் எழுச்சி உண்டானது; எல்லாம் சிறப்பானதாகத் தோன்றியது. இந்நிலையில் பெத்தேலிலிருந்து ஒரு கூட்டம் மக்கள் குருக்களிடமும் இறைவாக்கினரிடமும் வந்து, எல்லாம் நன்றாயிருக்கும் சூழலில் இனி நோன்புகள் தேவையா? எனக் கேட்டனர். இக்கேள்விக்கு 7-ஆம் அதிகாரத்தில் எதிர்மறையான பதிலும், 8-ஆம் அதிகாரத்தில் நேர்மறையான பதிலும் தரப்பட்டுள்ளன. 7-ஆம் அதிகாரத்தில், நான்காம், ஐந்தாம் மாத நோன்புகளில் மக்கள் கடவுளுக்காக நோன்பிருக்கவில்லை. எனவே, கடவுள் அவர்களை அன்பினால் கடிந்துகொண்டு, மனந்திரும்ப எச்சரிக்கை விடுத்தார். 8-ஆம் அதிகாரத்தில் அம்மக்களுக்கு வருங்காலத்துக்குரிய மாபெரும், அளப்பரிய வாகுறுதியைக் கொடுக்கிறார். மேலும், நோன்புகளை உண்மையாய் கடைபிடிப்பதால் நல்லுறவு உருவாகும் எனவும், இறைவேண்டலால் மக்கள் காப்பற்றப்பட்டு, மக்களின் வாழ்வு களிப்பாகும் எனவும் உறுதி கூறப்படுகிறது. (செக் 8: 19-22). நல்லுறவுக்கான நோன்பில் கடவுளின் எதிபார்ப்பு என்ன?

### 1. உண்மை பேசுங்கள்

“நீங்கள் கடைப்பிடித்து ஒழுகவேண்டியவை இவையே: ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள்; ... பொய்யாணை இடுவதை விரும்பாதீர்கள்; ஏனெனில், இவற்றையெல்லாம் நான் வெறுக்கிறேன்,” என்கிறார் ஆண்டவர் (செக் 8:16-17).

நான்காம், ஐந்தாம், ஏழாம் மாதங்களில் நோன்பு கடைபிடித்த 70 ஆண்டு காலங்களில் நோன்பில் போலித்தனம் நிறைந்திருந்தது. மக்கள் கடவுளுக்கு நேராக நோன்பிருக்கவில்லை. அவர்கள் உண்டு குடித்த காலங்களிலும் தங்களுக்காக உண்டு குடித்தனர். ஒருவரோடொருவர் பொய் பேசினார்கள். பொய்யாணை இடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இவைகளெல்லாம் கடவுளின் பார்வையில் வெறுக்கப்பட்டவைகளாய் காணப்பட்டன. நோன்பில் உண்மைத்தன்மை முதன்மையானது. எனவே, உண்மை பேசி, உண்மையை நாடவேண்டும் எனவும், இவைகளை வாழ்வின் ஒழுக்கங்களாகக் கடைபிடிக்கவும் கடவுள் அழைப்பு விடுக்கிறார்.

இயேசு கிறிஸ்துவும் உண்மையற்ற நோன்பை வெறுத்தார். பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர்களை வெளிவேடக்காரர்கள் எனச் சுட்டிக்காட்டி அவர்களைக் கடிந்து பேசினார். அவர்கள் தாங்கள் நோன்பிருப்பதை பிற மனிதர் பார்க்கவேண்டும் என நோன்பிருந்தார்கள். அவர்கள் தங்கள் தலையில் எண்ணெய் தேய்க்காமல், முகங்களை விகாரப்படுத்திக் கொண்டு நோன்பிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் கடவுள் காண. அவருக்கு ஏற்புடைய நிலையில், உண்மையான நோன்பு கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார் (மத் 6:16-18). எனவே, உண்மை பேசி, உண்மையை நாடி நல்லுறவுக்கான நோன்பு கடைபிடிக்க வேண்டும்.

### 2. நல்லுறவை நாடுங்கள்

“...உங்கள் நகர வாயில்களில் நீங்கள் அளிக்கும் தீர்ப்பு நீதியாகவும் நல்லுறவுக்கு வழிகோலுவதாயும் இருக்கட்டும்; ஒருவருக்கு எதிராக மற்றொருவர் தீமை செய்ய மனத்தாலும் நினைக்க வேண்டாம்” (செக் 8:16-17)

எழுபது ஆண்டுகள் தொடர்ச்சியாக நோன்பு கடைபிடித்த மக்கள், உடன் வாழ்ந்த மக்களுடனும், கடவுளோடும் உள்ள உறவை வளர்க்காமல் தங்கள் விருப்பப்படி போலியான நிலையில் நோன்பிருந்தனர். பிறருக்கு நீதி வழங்குவதில் நேர்மையற்றிருந்தனர்;

ஒருவர்க்கொருவர் அன்பும் கருணையும் காட்டாமல் கடின உள்ளத்துடன் காணப்பட்டனர். கைம்பெண்கள், அனாதைகள், அன்னியர், ஏழைகள் போன்றவர்களாய் ஒடுக்கி வாழ்ந்தனர். சகோதரருக்கு எதிராகத் தீமை செய்து வாழ்ந்தனர். கடவுளின் வார்த்தைக்குச் செவிகொடுக்க மறுத்தார்கள்; இறுகிய உள்ளத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். தங்கள் காதுகளைப் பொத்திக்கொண்டார்கள். தங்கள் இதயங்களை பாறையைப்போல் கடினப்படுத்திக் கொண்டார்கள்.

இச்சூழலில் நல்லுறவை உருவாக்கும் நோன்பு கடைபிடிக்க அழைப்பு விடுக்கிறார். “உங்கள் நகர வாயில்களில் நீங்கள் அளிக்கும் தீர்ப்பு நீதியாகவும் நல்லுறவுக்கு வழிகோலுவதாயும் இருக்கட்டும்; ஒருவருக்கு எதிராக மற்றொருவர் தீமை செய்ய மனத்தாலும் நினைக்க வேண்டாம்” என அறிவுறுத்துகிறார். சடங்கு முறைகளைவிட கடவுள் உறவையே விரும்புகிறார் (7: 8-14). நல்லுறவு உருவாகும்போது, மக்களினங்களும் பல நகர்களில் குடியிருப்போரும்கூட கடவுளைத் தொழுதுகொள்ள இணைந்து வருவார்கள். ‑ஒருநகரில் குடியிருப்போர் மற்றொரு நகரினரிடம் சென்று, “நாம் ஆண்டவரது அருளை மன்றாடவும் படைகளின் ஆண்டவரை வழிபடவும், தேடவும், நாடவும் விரைந்து செல்வோம், வாருங்கள்; நாங்களும் வருகிறோம்“ என்று சொல்வார்கள். மக்களினங்கள் பலவும் வலிமை வாய்ந்த வேற்றினத்தாரும் படைகளின் ஆண்டவரை நாடவும் அவரது அருளை மன்றாடவும் எருசலேமுக்கு வருவார்கள் (செக் 8:21-22). கடவுளை நம்புகிறவர்கள் பலர் புதிதாக ஆண்டவரைத் தொழுதுகொள்ள இணைந்து கொள்வார்கள்.

நாம் கடைபிடிக்கும் நோன்பு எப்படிச் செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம், யாருக்காகச் செய்கிறோம் என்பதில் தெளிவாய் இருக்க வேண்டும். கடவுள் மீதும், பிறர்மீதும் அன்பும் காட்டுவது முக்கியம். “பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே” (மத் 7:12) என்னும் கிறிஸ்துவின் வாக்கை நிறைவேற்றி, நல்லுறவை வளர்க்க நோன்பைக் கடைபிடிப்போம்.


| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 123 |
| | கீர். | 140 |

அருள்திரு. **T.P. ஸலீம் தங்க குமார்**

**24-03-2023** தவக்கால ஐந்தாம் வெள்ளி

# மீட்பு என்னும் தலைச்சீரா

லூக்கா 2 : 36 - 38



"மீட்பைத் தலைச்சீராவாகவும்"
(எபே. 6 : 17அ))

பெரிகெபஹலெயான் (Perikephalaian) என்ற கிரேக்க வார்த்தை தலைச்சிரா என்ற பெயர்ச்சொல்லிற்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த வார்த்தையின் தன்மை "பெண்பால்" (Femininegender) பிரிவின் கீழ் வருவதாகும். இந்த வார்த்தைக்கும் "மீட்பு" என்ற வார்த்தைக்கும் சில தொடர்பு இருப்பதை பழைய ஏற்பாட்டில் கடவுள் பெண்ணை ஆணிற்க்கு துணையாக படைத்ததை வைத்து புரிந்துகொள்ளலாம். கடவுள் மனிதனை படைத்த பின்னர் படைப்பின் முழுமையற்ற தன்மையை கண்டார். அந்த முழுமையை நிகர செய்வதற்கு ஆதாமின் விலாவிலிருந்து ஏவாளை உருவாக்கினார். எனவே பெண் ஒரு முழுமையின் அடையாளமாக புரிந்து கொள்ளலாம். இந்த வசனத்தில் (எபே. 6 : 17அ) சொல்லப்பட்டு தலைச்சீராவையும் முழுமையின் அடையாளமாக நாம் காணலாம். ஏனெனில் தலைச்சீரா என்பது பெண்பால் பயன்பாடு.

பவுல் தலைச்சீராவை மீட்பிற்க்கு உருவகமாக குறிப்பிடுகின்றார். கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் இந்த மீட்பு என்பதை மறுக்கலாகாது. உலகத்தின் மக்கள் யாவரையும் பாவங்களிலிருந்து மீட்க மீட்பராக வந்த இயேசு (மத். 1:21) மீட்பின் செயலை சிலுவையில் செய்து நிறைவேற்றினார். அந்த மேலான மீட்பு மனிதரால் உண்டானதல்ல அது கடவுளின் பரிசு (எபே. 2:8). அந்த பரிசாகிய மீட்ப்பை ஒருவர் தலைச்சீராவாக அணிந்துகொள்வதே கிறிஸ்தவ வாழ்வின் முழுமையின் அடையாளமாகும். இந்த மீட்பென்னும் தலைச்சீராவின் முக்கியத்துவம் குறித்தும், இத்தலைச்சீராவை குறித்த செய்தியை எடுத்துரைப்பது குறித்தும் சிந்தித்தல் ஏற்புடையதாகும்.

மீட்பு என்னும் தலைச்சீராவின் முக்கியத்துவம் The Importance of the Helmet of Salvation இன்று நமது அன்றாட வாழ்வில் இருசக்கர வாகனத்தில் பயணிக்க தலைக்கவசம் "Helmet" கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பல மாநிலங்களில் இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் இருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்று சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளது. இதற்கு காரணம் என்னவெனில் தலை மிகவும் முக்கியமானது. மனித உடலில் தலைக்கும் அனைத்து உறுப்புகளுக்கும் தொடர்புகள் உண்டு. தலையில் ஏற்படும் சிறிய காயங்கள் உடலில் வேறு உறுப்புக்கள் செயலிழக்கவும், காரணியாகின்றன. உடலில் தலை தவிர பிற உறுப்புகளில் ஏற்படும் கடினமான காயங்களையும் சரிச்செய்யும் மருத்துவ உலகில் தலையில் ஏற்படுகின்ற சிறிய காயங்களினால் ஏற்படும் பாதிப்புகள் மிக பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துவதை காணலாம். எனவே தான் தலைக்கவசம் மிகவும் அவசியம் என்று அரசு அறிவுறுத்துகின்றது.

இக்கண்ணோட்டத்தில் பவுல் கூறும் தலைச்சீரா, அதாவது போருக்கு செல்லும்போது தலையை காக்க பயன்படுத்தும் இக்கருவியின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்தல் சிறப்பானது. ஒரு போர் வீரன் தனது தலையை காத்துக்கொள்ள பயன்படுத்தும் அனைத்து கவசங்களும் முக்கியமானது. ஆனால் அவற்றில் தலைசீரா மிக முக்கியமானது. இதை மீட்புடன் தொடர்புபடுத்துகின்றபோது ஆன்மீக வாழ்வில் திருமறை குறிப்பிடும் பல தகவுகள் இன்றியமையாதது ஆனால் அவற்றிற்கெல்லாம் மேலாக, முழுமையின் அடையாளமாக மீட்பு காணப்படுகின்றது. இந்த மீட்பின் முக்கியத்துவத்தை கிறிஸ்துவின் பாடுகளை சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளமுடியும். இந்த மீட்பிற்கு அச்சாணியாக திகழ்வது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை.

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவை பாடுகளில் அவர் பல காயங்களை ஏற்றுக்கொண்டார். அதில் முக்கியமான ஒன்று அவரது தலையில் சூட்டப்பட்ட முள்முடி. பவுல் கூறும் தலைச்சீராவாகிய மீட்பிற்க்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் முள்முடி ஒரு காரணமாக இருந்தது. எனவே, தவக்காலத்தில் ஆண்டவர் இயேசுவின் பாடுகளை சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த தலைச்சீராவாகிய மீட்பு குறித்த முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த மீட்பு குறிப்பிட்ட நபருக்கு உரியதல்ல அது எல்லோருக்குமானது.

(I தீமோ. 2:4). "அனைவரின் மீட்புக்காக அவர் தம்மையே ஈடாகத் தந்தார்" (Iதீமோ. 2:6) என்று பவுல் குறிப்பிடுகின்றார்.

மீட்பின் வழியாக நமது கடந்த காலம் மன்னிக்கப்பட்டுள்ளது. நமது நிகழ்காலம் அர்த்தம் பெற்றுள்ளது. நமது எதிர்காலம் பாதுகாக்கப்பட்டுள்ளது. (Through Salvation our part has been for given, our present is given meaning and our future is secured) என்று ரிக் வாரன் குறிப்பிடுகின்றார். எனவே இந்த மீட்பு என்னும் தலைச்சீராவை அனைவரும் அணிந்து கடவுளோடு இணைந்து பயணிப்போம் ஆமென்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 213 |
| | கீர். | 269 |

**26-03-2023** உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு, தவக்கால ஐந்தாம் ஞாயிறு & பாடுகளின் ஞாயிறு

# சிலுவையும் மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும்

## Cross and the Restoring Christ

| | |
|---|---|
| யோபு 42 : 10-17 | எபே. 2 : 1-10 |
| திபா. 126 | மாற். 10 : 46-52 |



குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே. (எபே. 2 : 5)

ஒரு பெரிய ஆற்றின்மேல் இடுக்கமான பாலம் ஒன்றிருந்தது. ஆற்றைக் கடந்து அக்கரைச் செல்ல ஒருவர் அப்பாலத்தின் மேல் நடந்து சென்றார். அப்போது நிலை தடுமாறி ஆற்றில் வீழ்ந்துவிட்டார். அவர் விழும்போது எழுப்பிய அபயக்குரலைக் கேட்டு அநேகர் கூடினர். நீரில் தத்தளித்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் மனிதரைப் பார்த்த மக்கள் : எப்படி விழுந்திருப்பான்? சிறுவர் முதல் முதியவர் வரைப் பயன்படுத்தும் பாலம் தானே ! குடித்திருப்பானோ? அல்லது தலைச்சுற்றி விழுந்திருப்பானோ? பார்த்துச் சென்றிருக்கக்கூடாதா? யாரையாவது துணையாக அழைத்துச் சென்றிருக்கக் கூடாதா? என்று பரபரப்புடன் அவனைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு அவன் விழுந்த நிலையை ஆய்வு செய்தவண்ணம் நின்றனர். சிலர்; தத்தளித்த மனிதனைப் பார்த்து அப்படி வா / இப்படி வா என ஆலோசனை சொன்ன வண்ணம் நின்றனர். திடீரென ஒரு மனிதர் வந்தார். சூழலைப் புரிந்து கொண்டார். உயிருக்குப் போராடும் மனிதனைக் காப்பாற்ற ஆற்றில் குதித்தார். அம்மனிதனைத் தோளில் தூக்கியவாறு நீந்திக் கரை சேர்த்தார்.

மனித வாழ்வில் எத்தனையோ சறுக்கல்கள், இடர்பாடுகள் வருகின்றன. சுயலாபம் தேடுவதிலும், புகழ்ச்சி நாடுவதிலும், செல்வம் சம்பாதிப்பதிலும், பாவங்களிலும், இச்சையிலும் வீழ்ந்து விடுகின்றோம். அறிந்தும், அறியாமலும் இடறுகின்றோம். அழிவினின்று மீள முடியாதபடி தவிக்கின்றோம். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு திருச்சபைக்கு எழுதுகின்றபோது கிறிஸ்துவின் மீட்பின் செயலை முன்வைத்து இவ்விதமாய் கூறுகின்றார். "குற்றங்களின் காரணமாய்

இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே.”

இன்றைய மூன்று திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் சிலுவையின் வழியாய்க் கிறிஸ்து நம்மை மீட்கும் செயலை மூன்று குறிப்புகள் வாயிலாகச் சிந்திப்போம்.

**1. சாத்தானின் சோதனையிலிருந்து மீட்கும் கடவுள்** (யோபு 42 : 10)

மாசற்றவன், நேர்மையானவன், கடவுளுக்கு அஞ்சி தீமையானதை விலக்கி நடப்பான் (யோபு 1 : 8) என்று கடவுளால் சான்று பெற்றவன் யோபு. அவனுக்கு வியாதியைக் கொடுத்தான் சாத்தான். யோபு உடமைகளை இழந்தான். உறவுகளை இழந்தான். மனைவியும் வெறுத்துவிட்டாள். (19 : 17) நண்பர்களான எலிப்பாசு, பில்தாது, சோப்பார் ஆகியோர் யோபுவின் துன்பத்திற்க் காரணம் அவனது பாவமே என எடுத்துரைத்தனர். சரீர வேதனையின் மத்தியில் தங்கள் வார்த்தைகளால் யோபுவின் உள்ளத்தை ஊடுருவக் குத்தினர். யோபுவின் மனைவி இன்னுமா மாசின்மையில் நிலைத்திருக்கிறீர். கடவுளைப் பழித்து மடியும் (2 : 9) என்கிறார். தனது அவலநிலையை 19 : 19 முதல் 22 வசனங்களில் யோபு எடுத்துரைக்கிறார்.

ஆனால், முடிவில் யோபு கடவுளுக்கு முன்பாகத் தன் நிலையை உணருகின்றான். கடவுளின் ஆற்றலை உறுதி செய்கின்றான். தன்னைத் தாழ்த்தி தன் நண்பர்களுக்காக மன்றாடுகின்றான். கடவுள் யோபுவின் விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்கு மீள்நிலை வாழ்வை அருளுகின்றார். முன்னைய நாட்களை விட பின்னைய நாட்களின் ஆசீர்வாதம் இரண்டு மடங்காகக் கிட்டியது. இழந்த வாழ்வைப் பெற்றான். உறவுகள் திரும்பி வந்தது. பிள்ளைகளைப் பெற்றான். மிருக ஜீவன்கள், செல்வங்கள் யாவும் உடையவனானான். சாத்தான் சோதித்த எல்லா நிலைகளிலிருந்தும் மீட்கப்பட்டான் (யோபு 42:10-17).

**2. பாவக் கட்டிலிருந்து மீட்கும் கடவுள்** (எபே. 2 : 1, 5)

“உங்களுடைய குற்றங்களையும் பாவங்களையும் முன்னிட்டு நீங்கள் இறந்தவர்களாயிருந்தீர்கள்.” அத்தகைய நிலையிலிருந்து உயிர்பெறச் செய்தார். வ. 8 இது கடவுளின் கொடை. மாற்கு 10 : 15-ல் இயேசு கூறும்பொழுது “பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்கிறார். லூக். 19 : 10-ல் “இழந்து

போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்” என்றார். அச்செயலை வருணிக்கின்ற பொழுது பவுல் அப்போஸ்தலன், “சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்.” (பிலிப். 2 : 8) என்றும், “நாம்பாவிகளாயிருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்” (ரோமர் 5 : 8) என்றும் கூறுகிறார். ஏசாயா இறைவாக்கினன் கூறும்போது, “அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்” (ஏசா 53: 5) என்கிறார். ரோம அரசில் தேவ விரோதிகளுக்குத் தண்டனை வழங்கும் சிலுவையிலே தொங்கி மக்களின் பாவங்களைப் போக்கும் பலிபீடமாகச் சிலுவையை ஏற்றார். எபிரேய ஆக்கியோன் எபி. 9 : 12-ல் “அவர் பலியாகப்படைத்த இரத்தம் . . . அவர் ஒரே ஒருமுறை தூயகத்திற்குள் சென்று எக்காலத்திற்குமென அதைப்படைத்து நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார்.” என்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான். 1 யோவான் 1 : 7-ல் “அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும்” என்கிறார். நற்செய்தி நூலில் (யோவான் 3 : 16-ல்) இதைக் கடவுளின் அன்பு எனச் சொல்லுகிறார். பாவச் செயல்களினால் கடவுளுக்கும் மனுக்குலத்துக்கும் ஏற்படும் பிளவைச் சரி செய்ய கடவுள் தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பிராயச் சித்தப்பலியாக சிலுவையில் ஈந்து நமக்குப் பாவக்கட்டிலிருந்து மீட்பை வழங்கியுள்ளார். நாம் மறுபடியும் மீள்நிலை பெற்று கடவுள் பிள்ளைகளானோம்.

**3. பாரம்பரியக் கட்டிலிருந்து மீட்கும் கடவுள்** (மாற். 10 : 48)

பார்வையற்ற பர்திமேயு “தாவீதின் மகனே எனக்கு இரங்கும்” எனச் சத்தமிட்டார். ஏன் இயேசுவைத் தாவீதின் மகனே,என அம்மனிதர் அழைத்தார்? மத்தேயு 1 : 1-ல் இயேசுவின் வம்ச வரலாறில் இயேசு தாவீதின் மகன் என்னப்படுகிறார். இயேசுவைப் பற்றிய இறைவாக்கில் ஏசாயா 11 : 1-ல் “ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர் விடும்” என்கிறார். இவைகள் இயேசு தாவீதின் சந்ததியில் தோன்றினார் என்று குறிப்பிடுகின்றன. ஆனால் பர்திமேயு தாவீதின் மகனே ! எனக்கு இரங்கும் என்று வேண்டுவது, தனக்கு மட்டுமல்ல பார்வையிழந்த அனைவருக்கும் தாவீது அரசன் காலம் தொடங்கி பாரம்பரியமாக இருந்து

வரும் கட்டுப்பாட்டினை அல்லது தடைகளை நீக்கும்படியான ஓர் விண்ணப்பம் எனலாம்.

2 சாமுவேல் 5 : 8-ல் தாவீது உளமார வெறுக்கிறவர்களின் பட்டியலில் பார்வையற்றவர்கள் இடம் பெற்றனர். எருசலேம் தேவாலயத்தில் பிரவேசிக்க முடியாமல் ஏங்கினர். 5 : 6-ல் எபூசியரின் கூற்று தான் இதற்குக் காரணமாயிற்று. எப்படியாயினும் தாவீதின் இக்கட்டளை பார்வை இழந்தவர்களைத் தேவாலயத்திற்குள் அனுமதிக்கவில்லை. மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் எருசலேம் பவனியில் நிறைவில் தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டதை விவரிக்கின்றபோது மத்.21 : 14-ல் பார்வையற்றோர் கோவிலுக்குள் சென்றனர் என்கிறார்.

இங்கே பர்திமேயு சரீர ஊனத்துடனும், வாழ்க்கையில் பார்வை அற்று இருளடைந்த நிலையிலும் ஆலயம் செல்லமுடியாத பாரம்பரியக் கட்டையும் அகற்ற தாவீதின் மகனே என வேண்டுகின்றார். மாற். 10 : 51-ல் இயேசு அவனிடம் “உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” என்று கேட்க அவன் “நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்” என்றான். இயேசு அவனுக்கு இழந்த வாழ்வையும், இழந்த கடவுளுடன் உள்ள உறவையும் மீள்நிலைப்படுத்தினார்.

அன்புக்குரியவர்களே! கடவுள் தமது அன்பினாலே, மன்னிக்கும் தன்மையினாலே சிலுவையில் தமது ஒரே பேறான மகனைத் தந்து நம் ஒவ்வொருவரையும் சாத்தானின் சோதனைகளிலிருந்தும், பாவக் கட்டுகளிலிருந்தும், பாரம்பரியக் கட்டுகளிலிருந்தும் மீட்டுத் தம்முடன் இணைக்கிறார். இழந்த வாழ்வை மீண்டும் பெறுவோம்.


அருள்திரு. அறிவர். D. **சேம் கிறிஸ்டோபர்**

| 𝄞 | ஞா. | 126 | ஞா. | 442 |
|---|---|---|---|---|
| | கீர். | 122 | கீர். | 282 |

**29-03-2023** தவக்கால ஆறாம் புதன்

# வெளி வேடமற்ற நோன்பு

மத். 6 : 16 - 18



நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம் (மத் 6:16)

நோன்பு என்பது உன்னதமான ஒன்று. கடவுளோடு இணைந்திருக்க, நம்மையே அடக்கி ஆள்வதற்கு உந்துசக்தியாக இருக்கிறது. நோன்பு என்பது பக்தியின் அடையாளம். அது வெளிவேடமாக, பக்தியின் பெயரால் நடத்தப்படும் நாடகமாக்கப்படுவதை இன்றைய திருமறைப் பகுதியில் இயேசு கண்டிக்கிறார். ஆண்டிற்கு ஒருமுறை பாவக்கழுவாய் நாளன்று, அனைத்து யூதர்களும் நோன்பிருக்க கட்டாயப்படுத்தப்பட்டனர். இது தவிர, சில பாரம்பரிய யூதர்கள் வாரத்திற்கு இரண்டுமுறை, திங்களும், வியாழனும் நோன்பிருந்தனர். இந்த இரண்டு நாட்களும்தான் சந்தை கூடும் நாள். எனவே, கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் எருசலேமுக்கு மக்கள் அனைவரும் கூடும் நாட்கள், இந்த இரண்டு நாட்களாகும். பக்தியின் பெயரால் பகல் வேடம் போடும், ஒரு சில யூதர்கள் இந்த நாட்களை தங்களின் பக்தியை தம்பட்டம் அடிப்பதற்கு பயன்படுத்த ஆரம்பித்தனர். மற்றவர்கள் முன்னிலையில் தாங்கள் நோன்பிருக்கக்கூடியவர்கள் என்பதையும், அதனால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதையும் அவர்கள் பெருமைப்பாராட்டிக்கொண்டனர். இத்தகைய நோன்பை இயேசு கண்டித்து, வெளிவேடமற்ற நோன்பு கடைபிடித்தலை முன்மொழிகிறார். வெளிவேடமற்ற நோன்பு எப்படியிருக்க வேண்டும்?

### 1. தெளிந்த தோற்றத்துடன் நோன்பு

"... நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்..." (மத் 6: 16).

வெளிவேடக்காரர் என்பவர்கள் வெளியில் பகட்டாக நடிப்பவர்கள். இங்கு யூத சமயத்தில் உள்ள பரிசேயர் போன்றோரை 'வெளிவேடக்காரர்கள்' என இயேசு குறிப்பிடுகிறார். இவர்கள் நோன்பிருக்கும்போது தாங்கள் நோன்பிருப்பது மற்றவர்களுக்கு தெரிய வேண்டும் என்பதற்காக, தங்கள் தலைமுடிக்கு எண்ணெய் தேய்க்காமல், தங்களது தலைமுடியை சீவாமல் வாட்டமாக முகத்தை வைத்துக்கொண்டனர். அழுக்கடைந்த ஆடைகளை உடுத்தினர். தாங்கள் சோகமாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்ள முகத்தில் வெள்ளை வண்ணம் பூசிக்கொண்டனர். இது அப்பட்டமான பக்தியின் வெளிவேடம்.

நோன்பு என்பது ஒறுத்தல் முயற்சி. தற்பெருமைக்காக அல்ல, மாறாக, உணர்வுகளை அடக்கி ஆளவும், அதன் வழியாக கடவுளோடு நெருங்கி வரவும் முன்னெடுக்கு முயற்சி. தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளவும், தங்களை முன்னிறுத்தவும், தங்களை பெருமைப்பாராட்டிக்கொள்ளவும் செய்கின்ற அனைத்துமே, வெளிப்புறத்தில் மக்களால் பாராட்டப்பட்டாலும், கடவுள் முன்னிலையில் அருவருக்கத்தக்கவை. பிறர் பார்க்க வேண்டும், பிறரின் பாராட்டைப் பெறவேண்டும், நல்ல பெயர் வாங்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு நோன்பு கடைபிடிக்கும்போது, அங்கே வெளிவேடம் புகுந்துவிடுகிறது. உள்நோக்கம் நுழைந்துவிடுகிறது. மனிதரின் பாராட்டும், நற்பெயரும் கிடைக்கும்போது, உள்நோக்கம் நிறைவேறிவிடுகிறது. ஆனால், இறையாசி இழந்துபோகிறது. எனவே, முகவாட்டமாய், வெளிவேடமாய் நோன்பு கடைபிடிப்பதல்ல; மாறாக, தலைக்கு எண்ணெய் தேய்த்து, தலைமுடியைச் சீவி, முகங்கழுவி மலர்ந்த முகத்துடன் கடவுள் காண நோன்பிருக்க வேண்டும். தெளிந்த தோற்றம் நோன்பின் உண்மையையும், உறுதியையும் வெளிப்படுத்த வேண்டும்.

## 2. கடவுளுக்குத் தெரியும் நோன்பு

"...நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக, மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும்..." (மத் 6: 18).

தவச்செயல்கள் வெளிவேடமாக மாறிவிடக் கூடாது என்று ஆண்டவர் இயேசு எச்சரிக்கிறார். தவக்காலத்தின் முக்கிய செயல்பாடுகளான அறச்செயல்கள், இறைவேண்டல், நோன்பு

ஆகியவை மனிதர் காணவேண்டும் என்று வெளிவேடமான நடிப்பாக மாறக்கூடாது. காரணம், இவற்றின் வழியாக பிறரின் பாராட்டையும், மதிப்பையும் பெற்றுவிட்டால், அதுவே இத்தவக்காலச் செயல்களின் பலன்களை வீழ்த்திவிடுகிறது. பரிசேயர்கள் இவ்வாறுதான் இறையருளை இழந்தனர் என இயேசு சுட்டிக்காட்டுகிறார். தம்மைப் பின்பற்றும் சீடர்கள், மனிதரின் பார்வைக்கு அல்ல, கடவுளின் பார்வைக்கு தெரிய நோன்பிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். அதாவது, வெளித்தோற்ற நோன்பை அல்ல, உள்ளத்தின் மாற்றமாகிய நோன்பை இயேசு வலியுறுத்துகின்றார். தப்பட்டம் அடிக்காமல், மறைவாக நாம் கடைபிடிக்கும் நோன்பின் உண்மைத்தன்மையைக் கடவுள் காணும்போது அவர் அதற்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார் என்பது இறைவாக்குறுதி.

நாம் செய்கிற அறச்செயல்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்ப இறைவன் கைம்மாறு தருவார் என்பதுதான் இங்கே கொடுக்கப்படுகிற செய்தி. தன்னுடைய நற்செய்தியிலே மத்தேயு நற்செய்தியாளர், "கைம்மாறு" என்கிற வார்த்தைக்கு அதிக அழுத்தும் கொடுப்பதை நாம் பார்க்க முடிகிறது. "என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும்" (மத் 5: 11-12). "இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார்" (மத் 10:42). இறுதித்தீர்ப்பிலும், தேவையில் இருப்பவர்களுக்கு உதவுகின்ற உள்ளங்களுக்கு, கடவுள் கைம்மாறு தருவார் என்கிற செய்தி அழுத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது (மத் 25:31-46).

பொதுவாக, கைம்மாறு என்றால் "பிரதிபலன், பதில்உதவி, நன்றிக்கடன்" என்று பொருள்படுத்தலாம். அதாவது, ஒருவர் செய்த உதவிக்கு, அதாவது அவர் செய்த உதவியை ஊக்கப்படுத்தும்விதமாக பணமோ, பதவியோ, பொருளோ அல்லது தேவையான ஏதாவது ஒன்றோ கொடுப்பதின் பெயர் தான் கைம்மாறு. இங்கு நற்செய்தியில் சொல்லப்படுகிற கைம்மாறு என்பது, உலகக்கண்ணோட்டம் தொடர்பான பணமோ, பதவியோ, பொருளோ அல்ல. மாறாக, மனநிறைவுள்ள வாழ்வுதான். ஏழைகளுக்காக, எளியவர்களுக்காக,

அடிமைப்பட்டு நொறுக்கப்படுகிற மக்களுக்காக உழைக்கிற, பணிவிடை செய்கிற ஒவ்வொரு மனிதருக்கும் கடவுள் தருவது இத்தகைய மனநிறைவான வாழ்க்கையைத்தான். இங்கு மறைவாக, அதே வேளையில், உண்மையாகக் கடைபிடிக்கும் நோன்பிற்கும் உரிய கைம்மாறு மறைவாய் உள்ள தந்தையாம் கடவுள் தருவார் என்பதுதான் இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதி.

வாழ்வில் துன்பங்களும் துயரங்களும் வந்தாலும், அதற்கு பயந்துவிடாமல், கைம்மாறு கிடைக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றி எதிர்பார்க்காமல், வாழ்வை நிறைவோடு வாழ்வதுதான் சரியான பார்வையாக இருக்க முடியும் என்பது இயேசு தரும் பாடம். நம்முடைய அன்றாடவாழ்வில் மனநிறைவை, மன அமைதியை பணத்திலும், பதவியிலும், பொருட்களிலும் தேடிக்கொண்டிருக்கிறோம். எனவேதான், வாழ்வில் நிம்மதியின்றி அலைந்துகொண்டிருக்கிறோம். அறச்செயல், இறைவேண்டல், நோன்பு வழியாக கடவுள் தரும் கைம்மாறான மனநிறைவின் வாழ்வைப்பெறுவதற்கு முயற்சி எடுப்போம். வெளிப்புறத்தில் தெளிந்த, மலர்ந்த தோற்றத்துடனும், மறைவாக, பிறருக்குத் தெரியாமல், இறைவனுக்கு மட்டுமே தெரியும் வண்ணம் நமது நோன்பு அமையட்டும். நமது வாழ்விலும், நடத்தையிலும் புதிய மாற்றம் பெற்று இத்தவச் செயல்களை நாம் செய்வோமானால், அச்செயல்களுக்குரிய கைம்மாறு இறைவனின் பேரன்பும், இரக்கமும், ஆசியும் நமக்குக் கிடைக்கும்.

A Ús § Ú. **T.P. ஸலீம் தங்க குமார்**

| 𝄞 | | |
|---|---|---|
| | ஞா. | 124 |
| | கீர். | 136 |

**31-03-2023** தவக்கால ஆறாம் வெள்ளி

# இறைவார்த்தை என்னும் போர்வாள்

மத். 4 : 1 - 4



"கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர்வாளாகவும் எடுத்துக் கொள்ளுங்கள்"
(எபே 6:17b)

எபேசியர் 4-6 அதிகாரங்களில் கிறிஸ்துவினுடையவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பில் எப்படி மதிப்புடன் வாழ வேண்டும் என்கிற உண்மையை சொல்லுகிறார் பவுலடியார். அதிலும் குறிப்பாக 6 ஆம் அதிகாரத்தில் குடும்ப வாழ்வில் உள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் என்னும் உறவில் ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பை கிறிஸ்துவுக்குள் எப்படி காத்துக் கொள்ள வேண்டும் என்று பவுலடியார் விவரிக்கிறார். எபே 6:10- 20 வசனங்களில் சவாலான உலக வாழ்வில் ஆன்மீக ரீதியாக எப்படி கடவுளுக்கு ஏற்ற வாழ்வே வாழ்வது என்று கற்றுத் தருகிறார். இறுதியாக, எபே 6: 13-17 வசனங்கள், கடவுளின் முழு கவசத்தையும் அணிவதை பற்றி கூறுகிறது. பவுலடியார், ரோமானிய வாளை கடவுளின் வார்த்தையான ஆவியின் படைக்கலத்தோடு ஒப்பிடுகிறார். கிறிஸ்தவர்களின் போர்வாள் என்பது கடவுளின் வார்த்தையை குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. அது தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது. அப்படிப்பட்ட அதிகாரமிக்க கடவுளின் வார்த்தை, எப்படிப்பட்ட படைக்கலன் என்பதை திருமறையின் துணை கொண்டு தியானிப்போம்.

## 1. இறைவார்த்தை: வேதனைகளைப் போக்கும் கருவி

உலகத்தில் பல ஆயுதங்கள் உள்ளன. ஆயுதம் என்றாலே, ஒருவரை தாக்கவோ, அழிக்கவோ, காக்கவோ பயன்படுத்தப்படுபவை. பிறரை அச்சமூட்டவும், தன்னை தற்காத்துக் கொள்ளவும் மனிதர்கள் ஆயுதங்களை பயன்படுத்துகிறார்கள். உருவகங்களாக கூட பல பொருட்கள் ஆயுதங்களாக வர்ணிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக,

பேனா ஒரு ஆயுதம், அன்பு ஒரு ஆயுதம், அறிவுக்கூர்மை ஒரு ஆயுதம் என பலவற்றை ஆயுதங்களாக உருவகப்படுத்தி கூறுவது உண்டு. அந்த வகையில் நம் உடலும் உயிர்மூச்சும் கூட ஒரு ஆயுதமாக பார்க்கப்படுகிறது. ஏனென்றால் உரிமைகள் இழக்கும் போது கடைசி ஆயுதமாக போராட இந்த உடலே மிச்சம் என்கிற எண்ணம் தான் அதற்கான காரணம். உலகத்தின் படைக்கலன்கள் எல்லாம் ஒரு நாளில் துடிப்பிடிக்கலாம், உடல் மற்றும் அறிவு போன்ற உருவக ஆயுதங்கள் கூட ஒரு நாளில் அழிந்து போகலாம். ஆனால் கடவுளின் வார்த்தையாகிய போர்வாள் என்னும் ஆயுதம் ஒருபோதும் துருப்பிடிப்பதோ, அழிந்து போவதோ இல்லை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் கடவுளுடைய வார்த்தைகள் ஒருநாளும் ஒழிந்து போவதில்லை. ஏனென்றால், கடவுளுடைய வார்த்தை வேதனையை தரும் ஆயுதம் அல்ல மாறாக வேதனையை தீர்க்கும் ஆயுதம். ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை, ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் (லூக் 5:5), ஒரு வார்த்தை சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சுகமடைவான் (மத் 8:8), யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் அல்லவோ உள்ளது (யோவா. 6:68), என்று பலரும் கடவுளின் வார்த்தையை குறித்து சான்று பகிர ஒரே உண்மை என்னவென்றால் கடவுளின் வார்த்தை வேதனையை போக்கும் ஆற்றல் உடையது என்பதுதான். அப்படிப்பட்ட வல்லமையுடைய போர் வாளாகிய கடவுளுடைய வார்த்தையை வேதனையை தீர்க்கும் ஆயுதமாக உணர்ந்து படிப்போம், வேதனை நீங்கி நலம் பெறுவோம்.

## 2. இறைவார்த்தை: சோதனைகளை மேற்கொள்ளும் கருவி

சோதனைகள் உலக வாழ்வில் இயல்பான ஒன்று. சோதனையை கொண்டு வந்த அலகை மத் 4:4-இல் கற்களை அப்பங்களாக மாற்றும் என இயேசுவை சோதித்த போது, இணைச்சட்டம் 8:3 ஐ மேற்கோள் காட்டி, அலகையை வென்றார். உம்மை காப்பாற்ற கடவுள் தேவதூதர்களை அனுப்புவார், தாழக்குதியும் என்றபோது, இணைச்சட்டம் 6:16ஐ மேற்கோள்காட்டி, அலகையை ஜெயித்தார். கீழே விழுந்து என்னை வணங்கினால் உலகம் முழுவதையும் கொடுக்க தயார் என்று அலகை முன்வந்தபோது, இணைச்சட்டம் 6 :13ஐ பயன்படுத்தி அலகையை துரத்தினார். அலகையின் சோதனைகளில் தன்னை காப்பாற்றிக் கொள்ள இயேசு கடவுளின் வார்த்தையை ஆயுதமாக

பயன்படுத்தினார். அதே அலகையை கடவுளின் வார்த்தையாகிய ஆயுதத்தை கொண்டே அடித்து விரட்டினார்.

நாமும் வசனமாகிய போர் வாளை வைத்திருந்தால் மட்டும் போதாது. அதை சரியாக பயன்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு தினமும் திருமறை தியானம் மிகவும் அவசியம். அப்போது தான் சோதனைகள் வரும்போது அதற்கேற்ற வசனத்தை பயன்படுத்தி அலகையின் சூழ்ச்சிகளை நம்மால் முறியடித்து முன்னேற முடியும். பொதுவாக, உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சி செய்வதுண்டு. அதுபோல ஆன்மிக வாழ்வில் நம்மை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள இறை வார்த்தை என்னும் போர்வாளை தினமும் படித்து, பழகி, பயன்படுத்துவோம். அப்போது, நாம் துருப்பிடித்து அழிந்து போகாமல் இருக்க இறைவார்த்தை என்னும் போர்வாள் நமக்கு உதவி செய்யும்.

திரு. J. **ஜோஸ் டோபின்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 424 |
| | கீர். | 214 |

**02.04.2023**

உயிர்ப்புக்கு முன்வரும் ஞாயிறு &
குருத்தோலை ஞாயிறு

# கிறிஸ்து : அமைதியின் அரசர்

## Christ : The King of Peace

செக். 9 : 1 - 12 எபே. 2 : 11-22
திபா. 24 மாற். 11 : 1 - 11



“ . . . ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா! என்று ஆர்ப்பரித்தனர் (மாற். 11 : 9, 10)

இந்தியாவில் ஒருமைப்பாட்டை உருவாக்கவும் இந்தியர் அனைவரும் இணைந்து நாட்டை வலிமைப்படுத்தவும் வெறுப்பரசியலை வேரறுத்து பன்மைத்துவத்தைக் கட்டிக் காக்கவும் நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டது ‘இந்திய ஒற்றுமைப் பயணம்’ (Bharat Jodo Yatra) என்று இந்நடைபயணத்திற்கான காரணத்தை அது தொடங்கப்பட்ட நாளில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார் திரு. ராகுல் காந்தி. செப்டம்பர் 7 அன்று கன்னியாகுமரியில் தொடங்கப்பட்ட இந்நடைபயணம் 12 மாநிலங்கள் வாயிலாக சுமார் 3500 கிலோமீட்டர்களைக் கடந்து 150 நாட்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்திய ஒற்றுமைப் பயணத்தைத் தொடங்கிய ராகுல் காந்தி, சமூக ஊடகத்தில், பகிர்ந்த ஒரு செய்தி, “பிரிவினைகளாலும் வெறுப்பு அரசியலாலும் என் தந்தையை நான் இழந்துவிட்டேன். ஆனால், நான் நேசிக்கும் என் நாட்டை ஒருபோதும் அவைகளுக்காக இழக்க மாட்டேன். அன்பு வெறுப்பை வெற்றி கொள்ளும்; எதிர்நோக்கு அச்சத்தை முறியடிக்கும்; நாம் இணைந்தே மேற்கொள்வோம்” (I lost my father to the politics of hate and division. I will not lose my beloved country to it too. Love will conquer hate; hope will defeat fear; together we will overcome) என்பதாகும்.

உலக வரலாற்றில் பல பேரணிகள் மக்களை ஒன்றிணைஆக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடைபெற்றுள்ளன. சில பேரணிகளால் புரட்சிகள் நிகழ்ந்துள்ளன; சில கலகத்தில்

முடிந்துள்ளன; சில அடக்கு முறையின், அநீதத்தின் வெளிப்பாடுகளாய் அமைந்தன. ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து எருசலேமில் நடத்திய பேரணி அவரை அமைதியின் அரசராக உலகிற்குக் காட்டியது. அதைக் குறித்துத் தியானிப்போமாக.

## 1. அநீதிக்கு எதிரான அமைதியின் அரசர்

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நீதி செய்பவராக இவ்வுலகத்திற்கு வந்தார். அவரது பணிவிடை முழுவதையும் நீதியை மையப்படுத்தி அமைத்துக் கொண்டார். அமைதியை உலகில் உருவாக்க வேண்டுமென்றால் நீதி அதற்கு அடித்தளமாக இருக்க வேண்டுமென்று எல்லாச் சூழல்களிலும் நீதி சார்ந்து நிலைப்பாடு எடுத்தார். உரோமைப் பேரரசின் அநீதிகளையும் யூத சமயத் தலைவர்களின் அநீதமான செயல்பாடுகளையும் எதிர்க்க அவர் ஒருபோதும் தவறியதே இல்லை. தமது வாழ்வு, பணிவிடை, போதனை எல்லாவற்றிலும் நீதியின் வெளிச்சம் வீசும்படி செய்தார். நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டு பேறுபெற்றோர் எனவும் நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் எனவும் கற்பித்தார். சிலுவைக்கு முன்னர், தம் மானிட வாழ்வின் நிறைவில் தாம் நடத்திய மக்கள் பேரணியிலும் நீதியின் தகவுகளை வெளிப்படுத்தினார்.

இயேசு கிறிஸ்து நடத்திய பேரணியும் அதிலே முழங்கின மக்களின் ஆரவாரமும் எருசலேமின் அரசியல் மற்றும் சமய அதிகாரங்களை அதிரவும் அச்சப்படவும் வைத்தது. உரோமைப் பேரரசு வல்லாதிக்கத்தோடு மக்கள் மீது அதிகமான வரிகளைச் சுமத்தியும் மக்களை ஏய்த்தும் மிரட்டியும் தனது அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொண்டது. வலியோரை வாழ்த்தும் வறியோரைத் தாழ்த்தும் மையமாக உரோமைப் பேரரசின் அதிகாரம் மையம் விளங்கியது. இத்தகைய அநீதிகளுக்கு மறுமொழியாக அமைதியின் பேரணியை நடத்திய அமைதியின் அரசர், உரோமைப் பேரரசல்ல; கடவுளே அனைத்து அதிகாரமும் படைத்தவர், அனைத்தையும் ஆளுபவர், அனைத்தும் அவர் கட்டுப்பாட்டில் உள்ளன (Rome is not in charge; but God is in charge) என்பதை வெளிப்படுத்தினார்.

பொதுவாக அரசர்கள் யுத்தக் காலங்களில் குதிரைகளில் வலம் வருவர். ஆனால், சமாதானக் காலங்களில் மட்டுமே கழுதையில் வலம் வருவர். செக்கரியாவின் இறைவாக்கின்படி கழுதைமேல் பயணப்படும் அரசர், தன் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவார். தேர்களும் போர்க்

குதிரைகளும் அம்புகளும் இருக்காது. எல்லா நாடுகளுக்கும் அமைதியை அறிவிப்பதால் அவர் அமைதியின் அரசர் என அழைக்கப்படுவார் என்பது கிறிஸ்துவில் இப்பேரணி வாயிலாக நிறைவேறியது.

அநீதியை எதிர்த்து அமைதியை நிலைநாட்ட இயேசு கிறிஸ்து ஆயுத வழியைத் தெரிந்து கொள்ளவில்லை. மாறாக, அமைதி வழியில் அன்பின் வழியில் அநீதிக்கு எதிராகப் போராடினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தைச் சாத்வீகமாக முழுமூச்சோடு முன்னெடுத்தவர் மகாத்மா காந்தி. அவரைக் குறித்து அப்போதைய இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் சொன்னது, ''காந்தி ஆயுதங்களோடு எங்களை எதிர்க்க வந்திருந்தால் அவரை எளிதில் வென்றிருப்போம். ஆனால் அவர் உண்மையோடும் அகிம்சையோடும் எங்களை எதிர்த்து வந்தார். எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை'' என்கிறார்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து நெப்போலியன் போனபார்ட் சொன்னது, ''மகா அலெக்சாண்டர், சார்லிமேன், நெப்போலியன் உள்ளிட்ட நாங்கள் அனைவரும் பேரரசுகளை நிறுவி உள்ளோம். அது எங்களின் அதிகார, ஆயுதப் பலத்தால். ஆனால், இயேசு கிறிஸ்து தம் அன்பினால் அவரது அரசை நிறுவியுள்ளார்'' என்கிறார். இந்த குருத்தோலை ஞாயிற்றில் நீதி சார்ந்த நிலைப்பாடு எடுக்கவும் அநீதியை எதிர்த்து அமைதியை நிலைநாட்டவும் உறுதிபூண ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

## 2. ஆலயத்தைத் தூய்மையாக்கும் அமைதியின் அரசர்

எருசலேம் தேவாலயத்தைப் பற்றிய யூதர்களின் எண்ணம் இதுவே: அது உலக மையம்; இறைவன் தங்கும் இல்லம்; உலக மானிடர் அனைவரும் இங்கு வர வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கி இருந்தது. ஆலயம் கடவுளின் உடனிருப்பை, அவரது மன்னிப்பை, இரக்கத்தைச் சுட்டி நின்றது. என் இல்லம் அனைத்து மக்களின் இறைவேண்டலின் வீடு என்பதே கோவிலைக் குறித்த கடவுளின் வெளிப்பாடாக இருந்தது.

ஆனால் கிறிஸ்துவின் காலத்தில், ஆதிக்க வர்க்கம் பாமர மக்களை வஞ்சித்து அடிமைப்படுத்தியதை தேவாலயத் தலைமை நியாயப்படுத்தியது. முதலாம் நூற்றாண்டில் தேவாலயத்தை மையமாகக்

கொண்டு ஆன்மிகத் தலைவர்கள் செய்த அடக்குமுறையும் கோவிலை உள்ளடக்கிய உரோமை அரசியல் தலைவர்கள் செய்த அடக்குமுறையும் எனத் தேவாலயம் அடிமைப்பட்டுப் போயிற்று. தேவாலயத் தலைமை அநீதியான அதிகார மையமாக மாறிவிட்டது. ஏழையரின் நிலங்கள் அபகரிக்கப்பட்டன. தேவாலயத்தில் ஏழை எளியோர், நோயுற்றோர் நுழைய அனுமதியில்லை. மொத்தத்தில் எருசலேம் தேவாலயம் முரண்பாடுகளின் மையமாக விளங்கியது.

எனவே, கிறிஸ்து தேவாலயத்தைத் தூய்மையாக்கினார். விற்பவர்களையும் வாங்குபவர்களையும் வெளியே துரத்தினார். நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும் புறா விற்பவர்களின் இருக்கையையும் கவிழ்த்துப் போட்டார். கோவில் வழியாக எந்தப் பொருளையும் எடுத்துச் செல்ல அவர் விடவில்லை. வழிபாட்டு இடம் வியாபாரம் செய்யும் இடமாக மாறி போன சூழலில், புதிய பார்வையை இயேசு கிறிஸ்து முன் வைக்கிறார். ஏழையர், ஊனமுற்றோர் வறியோர் ஆகியோரை ஆலயத்தில் நுழையச்செய்தார். எல்லா மக்களின் இறைவேண்டலின் வீடாக அதை மாற்றினார். அமைதியின் வீடாக மாற்றுருவாக்கம் செய்தார். எருசலேமே இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் என்று அமைதியின் அரசர் அமைதி வாழ்வுக்குத் திரும்ப அழைக்கிறார்.

இந்தக் குருத்தோலை ஞாயிற்றில் நாம் நீதி சார்ந்து நிலைப்பாடு எடுக்க வேண்டும். அனைத்து மக்களின் இறைவேண்டலின் இல்லமாகத் திகழும் ஆலயத்தின் மாண்பைக் காத்துக் கொள்ள வேண்டும். திருச்சபையின் வாயிலாக கிறிஸ்துவே உலகிற்கு அமைதி அருளும் அரசர் என்பதை வெளிப்படுத்த வேண்டும். பொருளுள்ள வண்ணம் இந்தக் குருத்தோலை ஞாயிற்றைக் கொண்டாடுவோம்.


அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

| 𝄞 | ஞா. | 128 | ஞா. | 129 |
|---|---|---|---|---|
| | கீர். | 143 | கீர். | 145 |

**03-04-2023** தூய வாரம் - திங்கள்

# வெளிவேடத்திற்குத் தீர்ப்பு

மத்தேயு 21 : 17-20



" . . . இந்த அத்திரமரம் எப்படி உடனே பட்டுப்போயிற்று?"
(மத். 21 : 20)

கிறிஸ்தவ வாழ்வுக்கு அடித்தளமாய் அமைவது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தும் பல நிகழ்வுகளில் முக்கியமானவைகள் கிறிஸ்துவின் போதனைகளும் அவரது செயல்களும் ஆகும். இந்தச் சாதனைகளின் உச்சகட்டம் சிலுவைக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதற்கு முன் அவர் பேசிய பேச்சுகளும் செய்த சாதனைகளும் ஆகும். பட்டணத்தார், கிராமத்தார் அனைவரையும் கவர்ந்த நிகழ்வு கழுதை மேல் பவனி, (மத். 21 : 10). எருசலேம் ஆலய சுத்திகரிப்பு (மத். 21 : 13). இவை அனைத்தும் நடைபெற்ற காலம் - பஸ்கா பண்டிகை காலம். இவைகள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பறைசாற்றும் நிகழ்வுகள். ஆகவே இந்த நிகழ்வுகளை ஒன்றுபடுத்தி இந்த வாரத்தைத் தூய வாரம் எனத் திருச்சபை தந்தையர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள்.

தூய வாரத்தின் முதல் நிகழ்வு கழுதை மேல் எருசலேம் பவனி, மற்றும் ஆலய சுத்தம் செய்தல். மாலையில் பெத்தானியா வந்து தங்கிவிட்டு மறுநாள் காலையில் பெத்தானியாவிலிருந்து எருசலேம் போகும் பாதையில் நடந்த நிகழ்வு இன்றைய தியான பகுதி.

அத்திமரம் யூதேயா தேசத்து மக்களோடு இணைந்த ஒன்று, மருத்துவ குணம் நிறைந்தது. இஸ்ரயேலர்கள் கடவுளின் ஆசியைப் பெற்றவர்கள் என்பதன் அடையாளம் அத்திமரம் (உபா. 8 : 8). அத்திமர நிழலில், அமர்வது, குடியிருப்பது, இஸ்ராயேலர்களின் ஆசீர்வாதங்களின் ஒரு பகுதி. ( I இராஜா. 4 : 25, மீகா. 4 : 4). கனியற்ற சபிக்கப்பட்ட அத்திமரம் யூதர்களின் குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில்,

ஆன்மீக வாழ்வில் உள்ள தோல்விகளாக, பின்னடைவுகளாக இயேசு கிறிஸ்து உருவகப்படுத்தியுள்ளார் இன்றைய திருச்சபைக்கு இந்த நிகழ்வுகள் உணர்த்தும் உண்மைகள் என்னவெனில் ....

**1. பாதை அருகே நின்ற அத்திமரம் :** (21 : 19)

எருசலேம் - பெத்தானியா சாலை பலர் பயணம் செய்யும் பாதை. பண்டிகைக் காலங்களில் அனைத்துலக யூதர்களும் அதிகமாக பயன்படுத்தும் பாதை. இயேசுவின் 33 ஆண்டு வாழ்வில் பலமுறை இந்த பாதையில் சென்றிருக்கலாம். கனி எதிர்பார்க்கப்பட்ட மரத்தைக் கவனித்திருக்கலாம். கனியில்லாத காலத்திலும் கனி எதிர்பார்க்கப்பட்ட மரம் அல்ல ஒருபோதும் கனியில்லாமல் இலைகளையே அடர்த்தியாக வைத்திருக்கும் மரம்.

இன்று பிரதான பாதைகளின் அருகே வானுயர உயர்ந்து நிற்கும் ஆலயக் கோபுரங்களால் மக்களின் தேவை சந்திக்கப்படுகிறதா? ஆன்மீக தேவைகளை திருச்சபை நிறைவேற்றுகிறதா? அத்திமரத்தைப் போல பல கனியற்று காணப்படுகிறதா? 18, 19-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அருட்பணி புரட்சியால் லட்சக்கணக்கான ஆலயங்கள், பேராயங்கள் உருவாகின. அருள்பணியாளர்கள் சென்ற இடமெல்லாம் கல்வி, நாகரீக வளர்ச்சி, வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. இவைகளைப் பிரதான பணியாய் நிறைவேற்றிய பின்தான் ஆலயக் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. ஆனால் இன்று..... சுயநலமே. பிரதான திருப்பணியாய் மாறிவிட்டது போலியான தோற்றம்.....

**2. பகட்டாய் நின்ற அத்திமரம்** (21 : 19 )

மாற்கு 11 : 13-ன் படி அது அத்திப்பழ காலமாய் இராதபடியால் கனி இல்லை என்பது உண்மை. ஆனாலும் கனி தருவதற்கு ஏற்றச் சூழல் இல்லையானாலும் கனி எதிர்பார்க்கப்படுகிறது. இலைகள் அதிகமாய் இருப்பதால் கனி இருப்பதற்கான வாய்ப்பு உண்டு, ஆனால் கனி இல்லை. ஏன் சபித்தார்? பலமுறை இயேசு சந்தித்த மரம் இந்த மரம். பசியோடும், களைப்போடும், வந்த அனைவரையும் ஏமாற்றியது உண்டு. இன்று கிறிஸ்தவ நற்பண்புகள் மக்களிடம் எதிர்ப்பார்க்கப்படுன்றன. வெளிவேடமாய், போலியாய் பலர் அலைகிறார்கள். ஆவியின் கனிகள் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் உண்மையான விசுவாசிகளும் மிக விரைவாக வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆகவே பகட்டு வாழ்வை விட்டுவிட்டு இந்த லெந்து காலத்தில் சிலுவையைத் தரிசித்து

எச்சூழலிலும் கனி கொடுக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். Christian life is not a seasonal fruit bearing life, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிடிலும் கனிதரும் உண்மையான வாழ்வைத் தெரிவு செய்வோம்.

**3. பட்டுப் போன அத்திமரம்** (மத். 21 : 19)

மத். 21 : 19-ன் படி அத்திமரம் உடனே பட்டுப்போயிற்று, என்றும் மறுநாளிலே பட்டுப் போயிற்று என்னும் இருவேறு கருத்துக்கள் இருந்தாலும் கனி இல்லையேல் நியாயத்தீர்ப்பின் நாளில் பட்சமும், பாதகமும் இல்லாமல் நீதியின் தண்டனை வழங்குவார் என உறுதியாயிற்று. இயேசு இரக்கம் உள்ளவர், பலரை மன்னித்தவர், என்றாலும் நியாயத்தீர்ப்பு காலத்தில் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று திருச்சபைகள் நியாயத்தீர்ப்பு நாளை மறந்து உலக ஆசீர்வாதங்களை முன்னிறுத்திக் கனியற்ற வாழ்வைத் தொடர்கின்றன. இந்த லெந்து காலங்களில் இதை உணர்ந்து கிறிஸ்துவுக்காக எப்படிக் கனி உள்ள வாழ்வு வாழ்வது எனச் சிந்திக்கவேண்டும். மாறாகக் கிறிஸ்து எனக்கு என்ன செய்தார் என எதிர்மறை சிந்தையோடு உள்ள நாம் நம்மை ஆராய்ந்து பார்த்து வாரத்தில் தங்களைத் தூய்மைபடுத்திக் கொள்ளவேண்டும்.

அருள்திரு. L. **ராபர்ட் பெனடிக்ட்**


| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 118 |
| | கீர். | 206 |

**04-04-2023**

தூய வாரம் - செவ்வாய்

# கோவிலைத் தூய்மையாக்குதல்

மத். 21 : 12 - 16



"என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும்" (மத். 21 : 13)

யூத மக்களின் வாழ்விலும், வழிபாட்டிலும் எருசலேம் கோவில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. யோசியா அரசரின் சமய சீர்திருத்தத்திற்குப் பின்னர் எருசலேம் கோவிலில் மட்டுமே பலி செலுத்த வாய்ப்பு வழங்கப்பெற்றிருந்தது. இதனால், பஸ்கா பண்டிகை நாள்களில் இங்கு வருவோரின் எண்ணிக்கை எண்ணிலடங்காததாய் இருந்தது. பஸ்கா கொண்டாட்டமும், பலி செலுத்துதலும் ஆண்டவர் இயேசுவின் திருப்பணிக் காலத்திலும் வழக்கில் இருந்தன. வாழ்வு மாற்றத்திற்கு வழி வகுக்க வேண்டிய வழிபாடுகள் ஒருசிலரின் சுயநல சூழ்ச்சிகளால் பொலிவிழந்துப் போயின. இறைவேண்டலின் இல்லமாக இருக்க வேண்டிய "இறை இல்லம்" அநீதிகளாலும், அகந்தையின் செயல்களினாலும் தூய்மையிழந்து "கொடியவர்களின் கூடாரமாக" மாறியது. இந்நிலையில், எருசலேமை நோக்கிப் பேரணி சென்ற ஆண்டவர் இயேசு கோவிலில் நிகழ்ந்த தீயச்செயல்களைக் கண்டு வேதனையடைந்தார்.கோவிலின் தூய்மைத்தன்மையைக் கறைப்படுத்திய அழுக்கான தீமைகளை ஆண்டவர் இயேசு எங்ஙனம் தூய்மைப்படுத்தினார் என்பதைச் சிந்தனை செய்யலாம்.

**1. அநீதியை அகற்றித் தூய்மையாக்கினார்** (மத்தேயு 21 : 12, 13)

எருசலேம் கோவிலை நெருங்கியதும் ஆண்டவர் இயேசுவை வருந்த செய்த ஓர் அழுக்கான தீமை "அநீதி" ஆகும். பார் முழுவதும் நீதியும் நேர்மையும் வற்றாத ஆறாகப் பாய்ந்து ஓட வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். நீதி எனும் தண்ணீர் வழிந்தோடும்போது அநீதியால் வாடிப்போன எளியோரும், ஏழையரும் செழிப்பான

வாழ்வைப் பெற இயலும். ஆனால், எருசலேம் கோவிலில் நீதியும் நேர்மையும் வற்றி வறண்டு போயின. அங்குக் குவிந்திருந்த அநீதி எனும் அழுக்கு கோவிலின் அழகை அழித்ததுடன், இறைப் பெயருக்கு இழுக்காகவும் அமைந்துவிட்டது.

ஆண்டவர் இயேசு வாழ்ந்த காலத்தில் யூதரிடையே பலி செலுத்துதலும், வரி செலுத்துதலும் வழக்கத்தில் இருந்தது. பலியாக கொண்டு வரப்படும் புறா, ஆடு, மாடு ஆகியவற்றை ஆசாரியர்கள் பார்வையிட்டு “பழுதில்லாதது” என்று சான்று வழங்கவேண்டும். பலி பொருள்களைப் பரிசோதனை செய்து உண்மைச் சான்று கூற வேண்டிய ஆசாரியர்கள் தவறான ஆதாயம் பெறும் நோக்கில் அநீதியாக செயல்பட்டனர். மக்கள் கொண்டு வரும் உயிரினங்களைப் “பழுது” எனக் கூறி ஒதுக்கினர். கோவிலில் விற்கப்படும் உயிரினங்களை வாங்க மக்களைக் கட்டாயப்படுத்தினர். ஏனெனில், கோவிலில் நடந்த வியாபாரத்தில் அவர்களுக்கும் குறிப்பிட்ட அளவு பங்கு கிடைத்து வந்தது. வியாபாரிகளும் அநியாயமாக உயிரினங்களுக்கு அதிக விலை நிர்ணயம் செய்தனர்.

யூத சமய வழக்கத்தின்படி இருபது வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஆண்களும் “கோவில் வரி” செலுத்த வேண்டும். உரோமை நாணயங்களில் உருவம் பொறிக்கப்பட்டு இருந்ததால் அவற்றைக் “கோவில் வரியாக” செலுத்த முடியாது. தீரு நாட்டு நாணயத்தில் உருவம் ஏதும் இல்லாததால், அந்த நாணயத்தில் அரை வெள்ளிச் சேக்கல் வரியாக வசூலிக்கப்பட்டது. இதுவே கோவில் நாணயம் என அழைக்கப்பட்டது. உரோமை நாணயத்திற்கு மாற்றாகக் கோவில் நாணயங்கள் வழங்குவதில் அநீதி வெளிப்பட்டது. நாணயமாற்றம் செய்வோரில் சிலர் கூலியாகப் பெற்றத் தொகை வரிப்பணத்தை விட அதிகம் என்கின்ற வரலாற்றுக் குறிப்பு அதிர்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது. யூதரல்லாதோரும், மாற்றுத்திறனாளிகளும் கடவுளை வழிபட ஒதுக்கப்பட்டிருந்த இடத்தை தான் இந்த வியாபாரிகளும், நாணயம் மாற்றம் செய்வோரும் ஆக்கிரமித்திருந்தனர். இது, கடவுளை அனைவரும் விடுதலையுடன் வழிபடுவதற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியாகும்.

அநீதி நிறைந்த இத்தகைய தீயச்செயல்களை எல்லாம் கண்ணுற்ற ஆண்டவர் இயேசு அதிக வேதனையடைந்தார். கடவுளின் பெயரால் ஏழை எளியோர் கொள்ளையடிக்கப்பட்டதை அவரால் ஏற்றுக்கொள்ள

இயலவில்லை. இறைவேண்டலின் வீட்டைக் கள்வர் குகையாக்கினதை அவரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. கோவிலுக்குள்ளே விற்பவர்கள், வாங்குபவர்கள் எல்லாரையும் வெளியே துரத்தினார். நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும் புறா விற்போரின் இருக்கைகளையும் கவிழ்த்துப்போட்டார். யோவான் நற்செய்தியாளரின் கூற்றுப்படி ஆண்டவர் இயேசு அநீதி செய்தோரைச் சாட்டையால் துரத்தினார். (யோவான் 2 : 15) எளியோரிடம் ஆண்டவர் வைத்திருந்த அளவற்ற கருணையும் இரக்கமும் அவரை அநீதிக்கு எதிராக ஆத்திரமுறச் செய்தது எனலாம். அநீதி எனும் அழுக்கை அகற்றியதால் கோவில் தூய்மையானது. மனம் மகிழ்ந்து கடவுளை வழிபட இனிய சூழல் உருவானது.

**2. அகந்தையை அகற்றித் தூய்மையாக்கினார்** (மத்தேயு 21 : 14-16)

அநீதி எனும் அழுக்கை அகற்றிய ஆண்டவர் இயேசு, மக்களின் சிந்தையில் குடிகொண்டிருந்த “அகந்தை” எனும் அழுக்கையும் அகற்றினார். உடல் நலன் சார்ந்து தங்கள் உள்ளத்தில் உயர்வு மனப்பான்மைக் கொண்டிருந்த சமயத்தலைவர்கள் மாற்றுத்திறன் உடையோரைத் தாழ்வாகக் கருதினர். அவர்கள் கோவிலின் உள்ளே வருவதை இத்தகையோர் விரும்பவில்லை. இந்த அகந்தை நிறைந்த ஆதிக்க சிந்தை பல நூற்றாண்டுகளாக யூத மக்களின் மனத்தில் நிறைந்து இருந்தது. இந்த தீமைக்கான விதையைத் தூவியவர் தாவீது அரசர் ஆவார். தாவீதின் தொடக்க கால ஆட்சியின் போது எபூசியருக்கு எதிராக அவர் எருசலேம் சென்ற போது, எபூசியர் தாவீதை நோக்கி “நீர் இங்கே வர முடியாது பார்வையற்றவரும் முடவரும் கூட உம்மை அப்புறப்படுத்தி விடுவார்கள்” என்று கூறினார். இவ்வாறு கூறக் கேட்டதால், மாற்றுத்திறன் பெற்றோரைத் தாவீது அரசர் உளமார வெறுத்தார். மிகுந்த கோபத்துடன் மாற்றுத்திறன் பெற்றோரைக் கைப்பற்ற உத்தரவிட்டார். ஆகவே, “பார்வையற்றவரும் முடவரும் கோவிலினுள் நுழையலாகாது” என்றதோர் செய்தி மக்களிடையே பரவியது. (2 சாமுவேல் 5 : 6-8) தொடர்ந்து வந்த தலைமுறையினரும் இதைக் கடவுளின் கட்டளையாகத் தவறாக எண்ணியதால், மாற்றுத்திறன் பெற்றோரை ஓரங்கட்டத் தொடங்கினர். ஆண்டவர் இயேசுவின் காலத்திலும் இந்த ஆதிக்கப்போங்கு நிலவி வந்தது.

உடல் திறன் அடிப்படையில் மாற்றுத்திறன் பெற்றிருந்தோரைப் புறந்தள்ளியிருந்ததை ஆண்டவர் இயேசு விரும்பவில்லை. அனைவரும் ஒன்றிணைந்து இறைவேண்டல் ஏறெடுக்கும் இல்லமாக கோவில் அமைய வேண்டும் என்பதே அவரது விருப்பம். உடலளவிலும் மனதளவிலும் திறன் குறைந்தோருக்கு இறைவேண்டல் உதவி அதிகம் தேவை என்பதை அன்றைய சமூகம் உணர்ந்திருக்கவில்லை. கோவிலினுள் வைத்தே எளியோருக்கு எதிராக அநீதி செய்த வியாபாரிகளை வெளியே துரத்திய ஆண்டவர், வேதனையுடன் வெளியே நின்ற மாற்றுத்திறனாளிகளை உள்ளே வரவழைத்தார். அகந்தை சிந்தையுடையோரில் அன்பின் சிந்தை உருவாகும் விதத்தில், கோவலினுள் வைத்தே அவர்களுக்கு நலம் வழங்கினார். இயேசு வியத்தகு செயல்களைச் செய்வதைக் கண்ட தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும் கோபமடைந்தனர். சமயத்தலைவர்கள் ஆதிக்க உணர்வுகளிலிருந்து உடனடியாக வெளிவரவில்லையெனினும், ஆண்டவர் இயேசுவின் புரட்சிகரமான இந்தச் செயல்பாடு, மாற்றுத்திறனாளிகளை மதிக்கும் சிந்தை சமூகத்தில் துளிர்விட்டு வளர விதையாக அமைந்தது. பழைய தவறான மரபுகளைப் பின்பற்றுவதே இறைபக்தி எனத் தவறாக எண்ணியிருந்த மக்கள் இறையவரின் திருவுளத்தை அறிந்துணரவும் இந்நிகழ்வு ஏதுவாக அமைந்தது.

ஆண்டவர் இயேசு கோவிலைத் தூய்மையாக்கின நேரத்தில், சிறுபிள்ளைகள் “தாவீதின் மகனுக்கு ஓசன்னா”, என ஆர்ப்பரிப்பதைக் கண்ட சமயத்தலைவர்கள் கோபமடைந்தனர். வயதின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் அவர்களுக்கு இருந்த அகந்தையே சமயத் தலைவர்களின் காரணமில்லாத இந்தக் கோபத்திற்கானக் காரணம் ஆகும். ஆர்ப்பரிக்கிற குழந்தைகளை ஆண்டவர் இயேசு அதட்ட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. யூத சமூகத்தில் சிறுவர்கள் மிகவும் தாழ்வாகக் கருதப்பட்டனர். உடலளவில் ஆற்றல் குறைந்தோராகவும், பிறரைச் சார்ந்து வாழ்வோராகவும், படிப்பறிவை வளர்த்துக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளோராகவும் இருப்பதால் அன்றைய சமூகம் சிறுவர்களை முழு மனிதராக அங்கீகரிக்கவில்லை. குழந்தையாகவே உலகில் வந்து பிறந்து, அதட்டலுக்கு நடுவிலும் சிறு குழந்தைகளை அரவணைத்து, ஆசி வழங்கி, அன்பு செய்த ஆண்டவர் இயேசு இம்முறையும் அதட்டவில்லை. “பாலகரின் மழலையிலும்

குழந்தைகளின் மொழியிலும் உம்மைப் புகழ ஏற்பாடு செய்தீர்” என்ற மறைநூல் திருமொழியைச் சுட்டிக்காட்டி இறையன்பை உணரச் செய்தார்.

இறைமக்கள் இனிதே இணைந்து இறைவனை வேண்டுகின்ற இறைவேண்டலின் இல்லத்தில் இன்றும் அநீதி, அகந்தை ஆகிய தீமைகள் அவ்வப்போது வெளிப்படுகின்றன. இதனால் எளியோரின் உள்ளம் வேதனையால் உடைகின்றது. அவர்களால் விடுதலை உணர்வுடன் கடவுளை வழிபட இயலவில்லை.

வாழ்விலும், வழிபாட்டிலும் நீதி வற்றாத நதியாகப் பாய்ந்தோடும் போது அநீதி என்ற அழுக்கு தூய்மையாக்கப்படும். பணிவுடனும், முழுமனதுடனும் ஆண்டவரை வழிபடும்போது சிந்தையிலிருந்து அகந்தை என்ற அழுக்கு அகன்றோடி விடும். அன்று, ஆண்டவர் இயேசு எருசலேம் கோவிலைத் தூய்மையாக்கினதைப் போன்று, இன்று நம் வாழ்வையும், வழிபாட்டிடத்தையும் தூய்மையாக்குவோம், ஆண்டவர் இயேசு கோவிலைத் தூய்மையாக்கின நிகழ்வு அவர் சிலுவை மரணத்தை எதிர்கொள்ள ஓர் முதன்மையான காரணமாக அமைந்துவிட்டது. இன்று இத்தகைய சீர்திருத்தங்களில் ஈடுபடுவோருக்கும் சவால்கள் காத்திருக்கின்றன. ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து அவர் விருப்பம் நிறைவேற்றுவோம்.

அருள்திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 474 |
| | கீர். | 148 |

**05-04-2023** தூய வாரம் - புதன்

# மரியாளின் அர்ப்பணிப்பு

மத்தேயு 26 : 6-13



"உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக்கூறப்படும்; இவரும் நினைவு கூரப்படுவார். என்று நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (மத். 26 :13)

நவீன உலகில் மானிட வாழ்க்கையில் காண்பதற்கு ஓர் அரிதான பண்பு அர்ப்பணிப்பு ஆகும். இந்த உணர்வானது ஒருவரின் மனப்பான்மையைச் சார்ந்ததாகும். வாழ்க்கையில் பெரிய வெற்றிகளை அடைந்து பிறருக்கு முன்மாதிரியாத் திகழ்ந்தவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் வாழ்ந்தவர்கள் ஆவர். அந்த வகையில் திருமறையில் சொல்லப்பட்டுள்ள மரியாளின் அர்ப்பணம் உள்ள வாழ்வு ஒரு தலைசிறந்த வாழ்வாகும். எனவே இச்செய்தியை இயேசுநாதர் குறிப்பிடும்போது இது உலக முழுவதும் அறிவிக்கப்படும் என்று சொல்கிறார். ஆம் இன்று உலக முழுவதும் இந்நாளில் இச்செய்தி அறிவிக்கப்படுகிறது.

**திருமறையில் மரியா என்பதன் பொருள் :**

மரியாள் என்றால் கண்ணீர் என்று அர்த்தமாகும். கிரேக்க மொழியில் மரியாள் என்பதும் எபிரேய மொழியில் மிரியாம் என்பதும் ஒன்றுதான். மேலும் மரியாள் என்பதற்கு "புரட்சி" என்றும் பொருள் உண்டு.

திருமறையில் மரியாள் என்கின்ற பெயரில் ஐந்து பேர்கள் உண்டு.

(i) கன்னிமரியாள் (இயேசுவின் தாய்)

(ii) மகதலேனா மரியாள் (ஏழு பிசாசு நீங்கியவள் மற்றும் இயேசுவின் உயிர்த்தெழுதல் காட்சியை முதலில் கண்டவள்).

(iii) பெத்தானியா மரியாள் (லாசர் மற்றும் மார்த்தாளின் சகோதரி, இயேசுவின் பாதத்தில் தைலம் பூசியவர்)

(iv) யாக்கோபு, யோசே என்பவர்களின் தாயாகிய மரியாள் (கிலேயோப்பா மரியாள்)

(v) மாற்குவின் தாயாகிய மரியாள்

**நான்கு நற்செய்தியாளர்களின் பதிவுகள் :**

இந்த மாபெரும் நிகழ்ச்சியானது நான்கு நற்செய்தி நூற்களிலும் வருகிறது. (மத். 26 : 6-13, மாற். 14 : 3-9, லூக். 7 : 36-50, யோ. 12 : 1-8)

யோவான் நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்து எருசலேமில் பவனியாக நுழைவதற்கு முந்தின இரவில் நடந்ததாகக்கூறும் செய்தியில் இயேசுவுக்குத் தைலம் பூசியப் பெண் மார்த்தாவின் சகோதரி மரியா என்று பதிவு செய்கிறாள்.

லூக்கா நற்செய்தியில் இந்நிகழ்ச்சி நேரடியாகக் கூறப்படவில்லை. ஆனால் பாவியானப் பெண்ணொருத்தி அவருடையப் பாதங்களைக் கண்ணீரால் நனைத்து தன் தலைமுடியைத் துடைத்துத் தைலம் பூசிய நிகழ்ச்சி கலிலேயாவிலே நடந்ததாகப் பதிவு செய்யப்பட்டள்ளது.

தூய மத்தேயு தரும் இந்த நிகழ்ச்சிப் பதிவில் இந்தப் பெண்ணை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? என ஆண்டவர் கேட்பதிலிருந்து சீடர்கள் தடுமாற்றமடைந்தது மட்டுமன்று. இந்த மரியாளைத் தடைசெய்ய முன்வந்தார்கள் என்பது தெரிகிறது. ஆனால் யோவான் நற்சய்தி நூலில் தடுமாற்றமடைந்தது யூதாஸ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாற்கு நற்செய்தியாளரும் தனது பதிவில் தைலமானது இயேசுவின் தலைமேல் ஊற்றப்பட்டதாகப் பதிவு செய்துள்ளார்.

ஆக நான்கு நற்செய்தியாளர்களின் பதிவுகளின் படி பார்க்கும்போது மரியாளின் ஆழமான அர்ப்பணிப்பு இங்கு வெளிப்படுகிறது.

**காலடிகளைக் கழுவும் பழக்கம் :**

பந்தி இருக்கும்போது விருந்து படைப்பவரின் வீட்டு வேலையாள் விருந்தினரின் கால்களைச் சுற்றி வந்து கழுவுவது வழக்கம் (லூக். 7 : 44, யோவா. 13 : 3-5). ஆனால் சீமோன் வீட்டில் இயேசு வந்தபோது அவன் இயேசுவின் கால்களைக் கழுவவில்லை. ஏற்கனவே இயேசு

தொழுநோயால் புறக்கணிக்கப்பட்ட சீமோனுக்குக் குணத்தை கொடுத்தவர். தொடக்கூடாத அவனைத் தொட்டார். ஆனால் சீமோன் இயேசுவைத் தொட்டு அவர் கால்களைக் கழுவ மறுக்கிறார்.

இந்நிலையில் தான் இயேசு மரியாளின் செயலை மெச்சிப் பேசுகிறார். எனவே சீமோன் செய்யாத பணிவு செயலை ஒரு பெண் செய்வது ஆச்சரியப்பட வேண்டிய நிகழ்ச்சிதான்.

நான்கு நற்செய்தி நூற்களிலும் இந்நிகழ்ச்சி இயேசு பந்தியிலிருக்கும்போது நடைபெற்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நற்செயல் செய்வதில் அர்ப்பணிப்பு :**

இதை அறிந்த இயேசு, ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே (மத். 26 : 10).

ஒவ்வொரு மானிடரும் தம்மால் இயன்ற அளவு நல்லது செய்ய வேண்டும் என்று தான் விவிலியம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது. ஒழுக்க நெறி நூல்களும் வலியுறுத்துகின்றன.

இச்செய்தியில் சீடர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பெண்ணின் வெளிப்படையான அர்ப்பணிப்பு ஒரு நெருடலைக் கொடுத்தது. எனவே ஏழைகள் மீது கரிசனைக்கொள்வதை இங்குச் சொல்கிறார்கள்.

ஆனால் இயேசுவோ ஏழைகள் எப்போதும் உங்களுடன் இருக்கிறார்கள் என சொன்னார். இது உபா. 15 : 11-யை நினைப்பூட்டுவதாக அமைந்தது. ஆனால் உபாகமத்தில் சொல்லப்பட்ட சட்டத்தை மீறி தங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டார்கள். எனவே ஏழைகள் பெருகிக் கொண்டே வந்தார்கள். எனவே உபா. 15 : 11-ன்படி ஏழைகள் மீது பரிவுகாட்ட வேண்டும் என்ற ஆலோசனையைக் கொடுத்தார்.

நற்செயல் செய்வது தான் மானிட வாழ்வின் ஒரு அடிப்படை நோக்கமாக அமைய வேண்டும். எனவே நல்ல செயல்கள் செய்வதற்கு மரியாவைப் போல நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

**தன்னலமற்ற அர்ப்பணிப்பு :** (மத். 26 : 7, லூக். 10 : 42)

இந்த உலகில் பலரைப் பார்க்கும் போது தன்னலமற்ற வாழ்வு வாழ்வது போல் தோன்றும். ஆனால் பக்கத்தில் நெருங்கினால் கனியற்ற

அத்திமரத்தைப் போல வேறு விதமாக தோன்றும் வார்த்தைகளைச் சுவையாகப் பேசுவார்கள். மேலும் யூதாசைப் போன்று இதை 300 பணத்திற்கு விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே என்று ஏழைகள்பால் கரிசனையாய்ப் பேசுவார்கள். ஆனால் நல்லது செய்யமாட்டார்கள்.

வெள்ளைக்கல் பரணி என்பது கழுத்துப் பாகத்தை எளிதில் உடைத்து திறக்கக் கூடிய கண்ணாடி சிமிழ் போன்றதாகும். நளதம் என்பது இந்தியாவில் உள்ள அபூர்வமான செடியிலிருந்து கிடைக்கும் நறுமணப் பொருள் ஆகும்.

இதனை மரியாள் தனக்கென்று வைத்திராமல் உடைத்து அப்படியே இயேசுவின் தலை முதல் பாதம் வரை ஊற்றினாள். யூதர்கள் விருந்து சமயத்தில் எண்ணெயால் அபிஷேகம் செய்தல் வழக்கம். ஆனால் இங்கு நறுமணத் தைலத்தால், இயேசுவை அடக்கம் பண்ணுவதற்கு ஆயத்தம் செய்தாள் என்று கூறப்படுகிறது.

தன்னலமற்ற அர்ப்பணிப்பு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஒரு மதிப்பாகும். ஏனெனில் இது ஒருவரைத் தனது குறிக்கோளையோ வெற்றிகளையோ அடைய அனுமதிக்கிறது. அன்றைய ஆணாதிக்கவாதிகளின் மத்தியில் மரியா ஒரு வெற்றிப் பெண்ணாகவே காணப்பட்டாள்.

நிறைவாக, அன்றைய ஆணாதிக்க கலாச்சாரத்தின் மத்தியிலும் நான்கு நற்செய்தியாளர்களும் மரியாவின் அர்ப்பணமுள்ள வாழ்வைப் பாதுகாத்துத் தந்திருக்கிறார்கள். விவிலியம் தூய ஆவியாரின் தூண்டுதலால் எழுதப்பட்டது என்பதற்கு இது ஒரு முக்கியமான சான்றாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே இந்தத் தவக்காலத்தின் நிறைவில் வந்திருக்கின்ற நாம் மரியாளைப் போல நம்மை முழுமையாக ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. அறிவர் K. **பிறின்ஸ் குமார்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 431 |
| | கீர். | 136 |

**06-04-2023** வியாகுல வியாழன்

# கிறிஸ்து : வாழ்வருளும் உணவு

## Christ : The Life - Giving Bread

வி.ப. 12 : 12-20 — 1 கொரி. 11 : 23-29

தி.பா. 116 — யோவா. 6 : 47-58



"எனது சதை உண்மையான உணவு எனது இரத்தம் உண்மையான பானம்." (யோவா. 6 : 55 )

"நற்கருணை இல்லாமல் திருச்சபை இல்லை; திருச்சபை இல்லாமல் நற்கருணையும் இல்லை."

திருச்சபையின் இதயம் எங்கே இருக்கிறது? 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட ஆப்பிரிக்காவில் அபித்தினியா என்ற நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் ஞாயிறு தோறும் ஒன்று கூடி நற்கருணை கொண்டாட்டத்தை நடத்தக்கூடாது என்று தடை செய்யப்பட்ட போது, அவர்கள் "நற்கருணை இல்லாமல் எங்களால் வாழ இயலாது" - எனவே நற்கருணையே திருச்சபையின் இதயம் எனக் கூறினர்.

**1. உணவைத் தரும் விருந்து :** (யோவா. 6 : 53)

"மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்."

பிறந்த நாள் விருந்து, திருமறை விருந்து, ஆண்டு விழாக்கள் விருந்து என எத்தனையோ வகையான விருந்துகள் இருக்கின்றன. ஆனால் திருவிருந்து எல்லா விருந்துகளைக் காட்டிலும் வித்தியாசம். திருமண வீட்டில் விருந்து கொடுப்பவர் திருமண வீட்டார், அவர் கொடுக்கும் விருந்து பலவகையான உணவு வகைகள். ஆனால் திருவிருந்தில் விருந்து கொடுப்பவரும், விருந்தாகவே மாறுகின்றார்.

[Jesus Himself is a host as well as the meal]பேராயர் புல்டன் ஷீன் தன்னுடைய Life of Christ என்ற புத்தகத்தில் இயேசுநாதர் வாழ்வளிக்கும் உணவு என்று அழகாக வர்ணித்துள்ளார்.

இயேசுநாதர் பிறந்த ஊர் பெத்லகேம் என்று நமக்குத் தெரியும். அந்தப் பெயருக்கு எபிரேய மொழியில் “House of Bread”(அப்பத்தின் வீடு) or (ரொட்டி துண்டு தயாரிக்கும் வீடு) என்பது பொருள். இயேசு ஏன் இந்த உணவு வீட்டில் பிறந்தார்? எல்லாருக்கும் உணவாகப் போகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே. இயேசுநாதர் பிறந்தவுடன் மரியாள் எங்கே கிடத்தினாள்? முன்னணை. காரணம் என்னவென்றால் இயேசுநாதர் ஒருநாள் உலகம் முழுவதற்கும் உணவாக போகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகும்.

இயேசுநாதர் பிறப்பு முதல் இறப்பு வரை தான் வாழ்வளிக்கும் உணவு என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

(a) கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை ரசமாக மாற்றி திருமண வீட்டின் மானத்தைக் காப்பாற்றினார்.

(b) கப்பர்நகூம் வனாந்தரத்தில் 5 அப்பம், 2 மீன்களைக் கொண்டு 5000 பேருக்கு உணவளித்தார்.

(c) பரிசேயர் சீமோன் வீட்டில் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார் அங்கு பாவத்தை மன்னிக்கிறார்.

(d) கடைசியில் நற்கருணையில் தன்னையே உணவாகக் கொடுத்தார்.

**2. உணர்வு தரும் உணவு :** (லூக். 24 : 35)

“அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும் போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்துள்ளார்கள்.”

விருந்தின் மூலம் இறைவன் மக்களை உணர்வடைய செய்கிறார். நாம் வாழும் இவ்வுலகம் உணர்வு இழந்த உலகமாக மாறிக்கொண்டிருப்பதை மறுக்க முடியாது.

உணர்வற்ற இவ்வுலகில் மக்கள் கண்கள் இருந்தும் குருடர்களாகவும், காதுகள் இருந்தும் செவிடர்களாகவும் உயிர் இருந்தும் செத்தவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

அதோடு மற்றவர்களின் துன்பம், துயரம் நம்மை பாதித்து விடாதபடி நம்மைச் சுற்றிலும் கவசம் மாட்டி சுயநலத்தோடு வாழ்கிறோம்.

இச்சூழலில் நமது ஆண்டவர் இயேசுநாதர் நற்கருணையின் மூலமாகத் தாழ்மையைக் கற்றுக்கொடுக்கின்றார். தாழ்மை என்பது

மனிதனின் அடிப்படை புண்ணியமாகும். புனித அகஸ்டின் நல்வாழ்வுக்குத் தேவையான மூன்று புண்ணியங்களை அழகாக விளக்குகின்றார்.

1. முதல் புண்ணியம் தாழ்மை

2. இரண்டாவது புண்ணியம் தாழ்மை

3. மூன்றாவது புண்ணியம் தாழ்மையிலும் தாழ்மையாகும்.

போப்பாண்டவர் பிரான்ஸ்சிஸ் அவர்கள் தெற்கு சூடான் அதிபர் மற்றும் அதிகாரிகளுக்கு தியானம் கொடுத்துவிட்டு, அவர்களின் காலில் விழுந்து அவர்களிடம் அமைதிக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டார். இதைப் பார்த்து கண்ணீர் விடாதவர் எவரும் இல்லை. தாழ்மை அந்த மனிதர்களை உணர்வடைய செய்தது.

இன்று இயந்திரங்களோடு பழகிபோன மனிதன் இயந்திரமாகி விட்டான். கணினியோடு பழகிபோன மனிதன் கணக்கு போட ஆரம்பித்துவிட்டான். பெற்றவர்களின் அன்பு உட்பட அனைத்துக்கும் விலை பேசுகிறான். மனிதன் உணர்வற்ற ஜடமாக மாறிவிட்டான். உணர்வுமிக்க வாழ்வுக்கு அருமருந்தாக விளங்குவது நற்கருணையாகும்.

### 3. உயிர் தரும் விருந்து :

"எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்." (யோவா. 6 : 56)

நற்கருணை வழியாக இறைவன் நமக்கு அளிக்கும் மற்றொரு மாபெரும் கொடை உயிர் மற்றும் உறவு தரும் வாழ்வாகும். நமது ஆதி பெற்றோர் விலக்கப்பட்ட கனியை உண்டதால் கடவுளுக்கும் - மனிதனுக்கும் இடையே இருந்த உறவு முறிக்கப்பட்டது. ஆனால் இயேசு தனது உடலை உணவாகக் கொடுத்ததின் மூலம் முறிக்கப்பட்ட உறவு மீண்டும் சரி செய்யப்பட்டது.

காயீன் தன் தம்பி ஆபேலின் இரத்தத்தைச் சிந்தினார். கடவுள் முன்னிலையில் ஒடுகின்றார். (ஆதி. 4 : 12-14) கடவுள் முன்னிலையில் பிரிந்து சென்ற மானிடத்தை தன் சொந்த இரத்தத்தைச் சிந்தியதன் மூலம் கடவுளோடு மீண்டும் இணைத்தவர் இயேசு கிறிஸ்து. இன்றைய

மனிதன் இறைவனோடு இணைந்திராமல் அவரை விட்டுப் பிரிந்திருப்பதன் காரணமாக தன்னுடைய அடையாளத்தை (Identity) பொருட்களிலும், செல்வத்திலும், வீண் புகழ்ச்சியிலும் தேடுகின்றான். ஆனால் இறைவனோடு இணைந்துள்ள மனிதன் தன்னுடைய அடையாளத்தை இறைவனில் மட்டுமே தேடுகிறான். இதனை தூய பவுலார் “நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” (கலா. 2 : 20) என்கிறார்.

நயாகரா நீர்வீழ்ச்சியின் மதிப்பு அங்கு வாழ்பவர்களுக்குத் தெரிவதில்லை என்று சொல்வார்கள். அதாவது விலைமதிப்புள்ள ஒன்று நமக்குக் கொடுக்கப்பட்டாலும், அது நமக்கு அருகிலேயே எப்பொழுதும் இருந்தால் அதன் மதிப்பை நாம் அறிந்திருப்பதில்லை. நற்கருணையும் அதுபோலதான்! சிறு பிள்ளைகள் முதலே அதைச் சடங்காச்சாரமாக பெற்றுக்கொள்ள பழகிவிட்டதன் காரணமாக அதன் மதிப்பை நாம் அறிந்திருப்பதில்லை. இயேசு நமக்குத் தந்த விருந்து உயிர் தரும் விருந்தாகும்.

அருள்திரு. அறிவர். C. **சுதீபன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 376 | ஞா. | 371 |
| | கீர். | 153 | கீர். | 154 |


**07-04-2023** புனித வெள்ளி

# சிலுவை : தற்கையளிக்கும் அன்பு

## Cross : Self Giving Love

எசா. : 52 : 13-53 : 12 | 1 பேது. : 2 : 21-25

தி.பா. : 22 | மாற். : 15 : 22-41



அவருக்கு எதிரே நின்று கொண்டிருந்த நூற்றுவர் தலைவர், அவர் இவ்வாறு உயிர் துறந்ததைக்கண்டு "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்றார் (மாற்கு 15 : 39)

புனித வெள்ளியாகிய இந்நாள், கிறிஸ்துவை பின்பற்றும் நமது வாழ்வின் பயணத்தில், வாழ்வில் எத்தகைய துன்பங்களையும் இழப்புகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள நம்மை ஒப்படைக்கும் நாள். இந்நாள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, உலகின் மீட்பிற்காக இறையன்பின் அடையாளமாய்ச் சிலுவை மரணத்திற்குத் தம்மைத் தாமே தியாகபலியாக ஒப்புக்கொடுத்த நாள். இந்நாளில் இயேசுவைச் சிலுவையில் இணைத்தது இறையன்பு ஒன்றே தவிர அடிக்கப்பட்ட ஆணிகள் இல்லை. அன்பு தன்னை இழப்பதைத் தவிர வேறொன்றையும் தருவதில்லை. அதைப்போன்று அன்பு தன்னைத் தவிர்த்து வேறொன்றையும் நம்மிடமிருந்து பிரித்தெடுத்து விடுவதுமில்லை. அன்பு எதையும் தனக்கென வைத்துக்கொள்வதில்லை. ஏனெனில், அன்புக்கு அன்பு மட்டுமே போதுமானது. இயேசுவின் வாழ்வு முழுவதும் அவர் நம்மிடத்தில் கொண்ட அன்பு வெளிப்பட்டது. இன்றைய திருவிவிலிய பாடங்களும் நமக்கு அவைகளைக் கற்றுத் தருகிறது.

### தற்கையளிக்கும் அன்பு

கடவுளின் அன்பினைப் புரிந்து கொள்ள பழைய ஏற்பாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் "அகாப்" (ahab) மற்றும் "கெசத்" (hesed) என்பவைகளாகும். இது இரக்கம், தாராள குணம், மாறாத அன்பு, விரும்புதல், பிரமாணிக்கம் எனப் பொருள்படும். புதிய ஏற்பாட்டில் இந்த அன்பினைக் குறிப்பதற்கு "அகப்பாவோ" (agapao) என்ற வினைச் சொல்லும், இதிலிருந்து வருகின்ற பெயர் சொல்லாகிய

“அகாப்பே” (agape) என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அகாப்பே என்பது கடவுளின் ஈடு இணையற்ற அன்பு. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்தின் வழியாக இவ்வுலகில் இவ் அன்பினை வெளிப்படுத்தினார். சிலுவை வாயிலாக இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்பே தற்கையளிக்கும் அன்பாகும். இவ்வன்பினை இன்றைய திருமறைப்பகுதிகள் வாயிலாக தற்கையளிக்கும் அன்பாக இரு நிலைகளில் புரிந்துகொள்ளலாம்.

**(i) நிபந்தனை இல்லாத அன்பு :** I பேதுரு 2 : 24

“சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார்”

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடம் எதையும் எதிர்பார்க்காமல், நம் அனைவருக்கும் மீட்பு வழங்க, நமது பாவங்களைத் தனது உடலில் சுமப்பது தான் சிறந்த வழி என உணர்ந்து, விரும்பி, சிலுவையை ஏற்று நமக்காக மரித்தார். அதற்காக அவர் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. இதற்கு முன்னர், எத்தனை எத்தனையோ மனிதர்கள் எபிரேய மொழியில் கொல்கதா என்றும் இலத்தீனில் கல்வாரி என்றும், தமிழில் தலையோட்டு ஸ்தலம் என்றும் அழைக்கப்படும் அந்த இடத்திற்குச் சிலுவையினைச் சுமந்து சென்றிருக்கிறார். அது போலவே திஸ்மாஸ், கெஸ்ற்றாஸ் என்கிற இரண்டு கள்ளரும் மரக்கட்டையிலானச் சிலுவையினை எளிதாய்த் தூக்கிச் சென்றனர். ஆனால் இயேசுநாதரின் சிலுவை பாரமோ தாங்கொணா வேதனையை அவருக்குக் கொடுத்தது. பாரமான சிலுவையினை வாரினால் அடிபட்ட காயத்தினாலும் உடைத்து நொறுக்கப்பட்ட உடல்வேதனையாலும் தூக்கிச் செல்ல இயலாதவராய் பலமுறை கீழே விழுந்தார். ரோம சட்டத்தின் அடிப்படையில் கொடிய குற்றம் செய்தவர்களுக்கு கொடுக்கும் சிலுவை மரணத்தை உலக மக்களின் குற்றங்களுக்காக இயேசு நிபந்தனையில்லாமல் தாமாக ஏற்றுக் கொள்கிறார். இயேசு எந்த நிலையிலும் குற்றமில்லாதவர். அவரை விசாரித்த பிலாத்து கூட அவரிடத்தில் குற்றம் ஏதுமில்லை என்று மூன்று முறை அறிக்கை செய்கின்றார். ஆனால் ஆண்டவர் இயேசு நிபந்தனை இல்லா அன்பின் அடையாளமாய் துன்பங்களை சுமந்தார். இத்தகைய அன்பின் பரிமாற்றம், சாதி, மதம், மொழி, நாடு ஆகியவைகளைக் கடந்து செயல்படும் போது, இந்த உலகம் அன்பின் உலகமாகவும், அமைதியின் உலகமாகவும் மாறும். எனவே நாமும் கடவுள் படைத்த அனைத்து உயிர்களிடமும் நிபந்தனை இல்லாத அன்பினைக் காட்டுவோம். ஏனெனில் வாழ்வின் உண்மையான பொருள்,

அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்து காணப்படுகிறது.

**(ii) தயாள குணம் கொண்ட அன்பு** : ஏசாயா 53 : 10

"அவர் தம் உயிரைக் குற்ற நீக்கப் பலியாகத் தந்தார்"

ஏசாயா 53-வது அதிகாரம் துன்புறும் கடவுளின் ஊழியரையும் அவரது துன்பங்களையும் குறிப்பிடுகின்றது. இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் குற்றமற்றவராகவும் துன்பங்களை ஏற்பவராகவும்,சிறையிருப்பில் வாழும் மக்களை மீட்பதற்கு தம்மையே முழுமையாக அர்ப்பணிக்கும் தயாள குணம் கொண்டவராகவும் இருக்கிறார். இவ்வாறு அன்பின் வெளிப்பாடாக தன்னையே கையளிக்கும் இந்த கடவுளின் ஊழியர் யார்? என்பதில் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் உள்ளன. திருச்சபையும், புதிய ஏற்பாடும், இயேசு கிறிஸ்துவில் இந்தக் கடவுளின் ஊழியரைக் காண்கின்றன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் விலங்குகளைப் பலியிடுவதன் வழியாகத் தங்கள் பாவங்களிலிருந்து விடுதலைப் பெறலாம் என நம்பினர். அவ்வாறு விலங்குகளை பலியிட்டும் வந்தனர். ஆயினும் பாவச் செயல்கள் குறையவில்லை. மனிதனது குற்றங்கள் இறைச் சமூகத்திலிருந்து அவனைப் பிரித்துவிட்டது. அத்துடன், மனிதனையும், இயற்கையையும் பிரித்து விட்டது. ஆகவே ஆண்டவர் இயேசுகிறிஸ்து தனது சிலுவை மரணம் வழியாக உலக மக்கள் அனைவரின் குற்றத்திற்கான பரிகாரத்தைத் தனது தயாள குணத்தினால் விலைக் கிரயமாய் செலுத்தினார்.

தயாள குணம் என்பது தண்ணீருள்ள பாத்திரத்தைக் கவிழ்த்து வைப்பது போன்றது என்று உவமானப்படுத்துகிறார் புத்தர். அதாவது கடைசிச் சொட்டு உள்ளவரை கொடுக்கவேண்டும் என்பதையே அது குறிப்பிடுகிறது. அனைத்தையும் கொடுத்தாகிவிட்டது, கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்பதே தயாள குணம். இதைத்தான் இயேசு கிறிஸ்து நமக்காக நிறைவேற்றினார். தாராளமாக வாரிக்கொடுக்கும் அன்புள்ள இருதயத்தின் குணாதிசயமே இந்த தயாள குணம். நாமும் நமது வாழ்வில் ஆவிக்குரிய ஓட்டத்தைச் சரியாய் நிறைவு செய்ய தெய்வீக நற்குணமான தயாள குணத்தில் நிலைத்திருப்பது அவசியம். தினசரி, நமது தயாள குணத்தினை வெளிப்படுத்த ஆயிரமாயிரம் வாய்ப்புகள் வருகின்றன. அவ்வாய்ப்புகளைத் தவற விடாமல், நமது தயாள குணத்தினை வளர்த்துக் கொள்வோமாக.

நிறைவாக, சிலுவை என்னும் அன்பின் சுமையால், கடவுள் மனிதரின் துன்பத்தில் தன்னை இணைத்துக் கொண்டு துன்புற்றார். ஏனெனில், அவர் மனிதரில் கொண்ட அன்பு அத்தகைய விலையேறப்பெற்றது. அன்பு இல்லாமல் மனிதன் மனிதனாக இருக்க வாய்ப்பில்லை. எனவே கிறிஸ்துவின் தற்கையளிக்கும் அன்பினை, நாமும் அனுபவிப்போம். நமது சக மனிதர்களிடமும் விதைப்போம். அன்புக் கடலில் நீந்துவோம். என்றும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் வாழ்வோம்.

அருள்திரு. T. **லிபின் ராஜ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 134 | ஞா. | 431 |
| | கீர். | 162 | கீர். | 170 |

**08-04-2023** புனித சனி

# புது வாழ்வுக்கான எதிர்நோக்கு

## Hope for the New Life

தானி. 12 : 1 - 4 1 பேது. 4 : 12 - 19

தி.பா. 4 மத். 27 : 62 - 66



. . . கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள் அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள். 1 பேதுரு 4: 13.

புனித சனி என்பது புனித வாரத்தின் கடைசி நாளாகவும், தவக்காலத்தின் நிறைவு நாளாகவும், அமைதியின் நாளாகவும், பற்றுறுதியில் துளிர்விடும் நாளாகவும், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை எதிர்நோக்கியிருந்த நாளாகவும் கருதப்படுகிறது.

புனித சனி (Holy Staurday). எப்படி ஓர் புதிய எதிர்நோக்கிற்காய் அமைதியாய் எதிர்பார்த்திருந்ததோ, அதுபோலவே நம் வாழ்வும் "கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையை" எதிர்நோக்கியிருக்கிறது (1 பேதுரு 4 : 13). எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போகலாம். ஆனால், நாம் எதிர்நோக்கும் புதுவாழ்வு பொய்த்து போய்விடக்கூடாது. எனவே பேதுரு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளைக்கு நம்மையே தயார்படுத்தும் தருணமாய் நம் நாட்களை நியமிப்போம் என சக விசுவாசிகளுக்கு அறிவுரை கூறுகிறார்.

அது மட்டுமல்லாமல் புதுவாழ்வை எதிர்நோக்கியிருப்போர் எதிர்கொள்ள வேண்டிய பாதை பாடுகளின் பாதை என்றும், அப்பாடுகளைக் குறித்து ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள் (1 பேதுரு 4 : 12) என்றும், 1 பேது. 5 : 1-ல் கிறிஸ்துவின் துன்பங்களுக்குத் தன்னை சாட்சி என்றும் கூறுகிறார். நம்பிக்கையின் அப்போஸ்தலனாகிய இவரின் ஆலோசனைகள் பாடுகளின் நடுவே புதுவாழ்வை எதிர்நோக்கியிருக்கும் நம்மையும் ஆறுதல்படுத்தும், ஆயத்தப்படுத்தும், ஆனந்தப்படுத்தும்.

புது வாழ்வுக்கான எதிர்நோக்கு எப்படி அமையவேண்டும் என்பதைப் பேதுருவின் அறிவுரைவழி சிந்திப்போம்.

**1. பாடுகளில் மனஉறுதி** (1 பேது. 4 : 14)

"கிறிஸ்துவின் பொருட்டு பிறர் உங்கள் மீது வசை கூறும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள் மேல் தங்கும்."

பேதுரு திருமுகம் கி.பி. 60 முதல் கி.பி. 65 வரையிலான காலத்தில் எழுதபட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இக்காலத்தில் ரோமப் பேரரசர் நீரோ (கி.பி. 54-65) ஆட்சி செய்ததாகவும், கிறிஸ்தவ மதம் ரோமப் பேரரசில் சட்டவிரோதமானது என இவரால் அறிவிக்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் பல இன்னல்களைச் சந்தித்ததாகவும் வரலாறு பதிவிடுகிறது.

கி.பி. 64-இல் ரோம் நகரில் ஒன்பது நாட்களாக எரிந்த தீயின் அகோரத்தினால், நகரத்தின் பெரும்பகுதி இடிந்து விழுந்தது. நீரோதான் இந்தத் தீயைப் பற்ற வைத்ததாக செய்திகள் பரவியது. தீயின் அகோரத்தைப் பார்த்து, நீரோ யாழ் இசைத்துப் பாடிக்கொண்டிருந்ததாக நீரோ மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் நீரோ, இந்தப் பெரிய தீ விபத்திற்கு கிறிஸ்தவர்கள் தான் காரணம் என பழி சுமத்தியதால் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர்.

கிறிஸ்தவர்கள் காட்டு மிருகங்களின் தோல்களினால் இறுக்கமாக கட்டி நாய்களால் கடித்துக் குதறப்பட்டனர். விளையாட்டு அரங்கங்களில் இரவு நேரத்தில் கிறிஸ்தவர்களைத் துணிகளில் சுற்றி, அங்கிருந்த தூண்களில் கட்டி, தீப்பந்தங்களாக (Burning Torch) எரிக்கப்பட்டனர். பல கிறிஸ்தவர்களின் உடல்களில் கொதிக்கும் எண்ணெயை ஊற்றினார்கள். பலருடைய கைகளையும் கால்களையும் கட்டி, கொப்பரைகளில் வைத்து தண்ணீரைச் சூடுபண்ணி, சித்ரவதை செய்தார்கள். நூற்றுக்கணக்கானோர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்கள்.

நீரோவின் குற்றச்சாட்டால் பாடுபட்டோருக்குப் பேதுரு அறிவுறுத்தும்போது மத் 5 : 11-ல் இயேசு மலைப்பொழிவில் குறிப்பிட்டதுபோல, நீங்கள் பேறுபெற்றவர்கள் என்றும், புதுவாழ்வுக்கான எதிர்நோக்கில் கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள்மேல் தங்கும் என்றும் கூறினார்.

ஆம், பாடுகளில் மனஉறுதி கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவியை நம்மேல் தங்கச்செய்யும்.

**2. பாடுகளில் மனமகிழ்ச்சி** (1 பேது. 4 : 12, 13)

. . . கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்.

உபத்திரவத்தின் நேரம் மிகவும் அவநம்பிக்கையானது என்றாலும், அது உண்மையில் மகிழ்ச்சி கொள்ளும் நேரம். ஏனெனில் அது கிறிஸ்துவின் துன்பங்களில் பங்குகொள்ள செய்கிறது எனவும், இப்பாடுகள் கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் மேலும் மகிழ்ந்து பேருவகைக் கொள்ள செய்யும் எனவும் பேதுரு குறிப்பிடுகிறார்.

ஒருமுறை பாடுகளில் எப்படி மகிழ முடியும் என்று அன்னை தெரசாவிடம் கேட்டபோது, பணம் மட்டுமே மகிழ்வைத் தரும் என்பது இக்கால தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். பாடுகள் என்பது விரும்பதக்கதல்ல, எனினும் பாடு நிறைந்த வாழ்விலும் இறைவன்மீது மனிதன் வைத்திருக்கும் புன்னகை கலந்த நம்பிக்கை மிகப் பெரியது என்று பதிலுரைத்தார்.

பாடுகள் நம்மை பலவீனப்படுத்துகின்றன என எண்ணுகிறோம். ஆனால் வலுவின்மையிலும் சிறந்தோங்கும் வலிமைதான் பாடுகளில் மகிழ்ச்சி. இதைக் குறித்து இயேசு குறிப்பிடும்போது, மத். 5 : 12-ல் “மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும்” என்கிறார்.

பாடுகள் நாம் எதிர்நோக்கும் புதுவாழ்வுக்கான படிநிலைகள். ஆகவே மகிழ்ந்து பேருவகை கொள்வோம்.

**3. பாடுகளில் மனமார்ந்த ஒப்படைப்பு** (1 பேது. 4 : 19)

. . . கடவுளின் திருவுளப்படி துன்பப்படுகிறவர்கள் நன்மை செய்வதில் நிலைத்திருந்து படைத்தவரிடம் தங்களை ஒப்படைப்பார்களாக! அவர் நம்பத்தக்கவர்!

தளர்ந்துபோன நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப துன்பப்படுவோருக்கு அறிவுரை கூறும் பேதுரு, படைத்தவரிடம் ஒப்படையுங்கள் எனக் கூறி நிறைவு செய்கிறார். எதிர்நோக்கில்

நிலைத்திருத்தல் அவசியமானது. நம்பதக்கவரிடம் தங்களையே ஒப்படைத்தல் அத்தியாவசியமானது.

கீர்த்தனைக் கவிஞர் மரியான் உபதேசியார் திருநெல்வேலி மாவட்டத்தில் கழுகு மலைக்கு அருகிலுள்ள குளக்காட்டா குறிச்சி என்னும் ஊரில் பல்வேறு எதிர்ப்புகள் மத்தியில் பாடுகள் பலபட்டு ஓலையால் வேயப்பட்ட ஆலயம் ஒன்றைக் கட்டினார். இதைக் கண்டு வெகுண்டு எழுந்த அவ்வூரிலுள்ள பிற மதத்தினர், எங்களது ஊரில் கிறிஸ்தவ ஆலயம் தேவையில்லை எனக் கூறி ஆலயத்திற்குத் தீ வைத்தனர். தீயினால் ஆலயக்கூரை எரிந்து சாம்பலானது. இதைக் கேள்விபட்ட மரியான் உபதேசியார் மிகுந்த மனவருத்தமடைந்தார். ஆலயத்தை எரித்தது மட்டுமன்றி மரியான் உபதேசியாரைக் கொலை செய்யவும் தேடி அலைந்தனர். இதையறிந்த உபதேசியார் ஆலயத்தின் அருகிலுள்ள கிறிஸ்தவர் ஒருவரின் வீட்டிலுள்ள பரண்மீது ஏறி மறைந்திருந்தார். அச்சோர்வான சோதனை நேரத்தில்,

என் ஐயா தினம் உனை நம்பி தான்
இருப்ப தறியாயோ? - மன
தேங்கும் என்கலி நீங்கும்படிநல்
பாங்கு புரியாயோ?

எனத் தொடங்கும் கீர்த்தனையை எழுதினார். மூன்று நாட்களில் நிலமை மாறியது. புதுவாழ்வு பிறந்தது.

துன்ப வேளையில் அசையாமல் உறுதியுடன் நிலைத்திருந்து படைத்தவரிடம் ஒப்படைப்பதே புதுவாழ்விற்கான எதிர்நோக்கு.

சிறுவன் ஒருவன் ஆசை ஆசையாய்ப் படகு ஒன்று செய்து, அதைக் குளத்தில்விட்டு வேடிக்கை பார்க்க தொடங்கினான். பெரிய காற்று படகைக் குளத்திற்கு உள்ளே அடித்துச் சென்றதைப் பார்த்ததும், அழுதான். தன் சகோதரனிடம் எடுத்துக் கூறினான். அவன் சகோதரனோ குளக்கரையில் கிடந்த கூழாங்கற்களை எடுத்துக் குளத்தில் எறிய ஆரம்பித்தான். சிறுவனுடைய படகுக்கு அப்பால் கூழாங்கற்களை தொடர்ந்து எறிந்ததால் உண்டான சிறு சிறு அலைகள் படகை அவனுக்கு அருகில் கொண்டுவந்து சேர்த்தன. கூழாங்கற்களைப் போல நம்முடைய வாழ்க்கையிலும் பல துன்பங்கள் வரலாம் உண்மையில், அவையெல்லாம் துன்பங்கள் அல்ல ; சிறுவனின் படகை அவனிடம் கொண்டு சேர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கூழாங்கற்கள் போன்று,

நம்முடைய வாழ்வில் வரும் துன்பங்கள் நம்மை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்க்கும் கருவிகள். எனவே பாடுகளில் மனஉறுதியுடன் மகிழ்ந்து, மன்னவனிடம் நம்மையே அர்ப்பணிப்போம். புனித சனி உயிர்ப்பை எதிர்நோக்கியிருப்பது போல் கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் நாளை எதிர்நோக்கும் நாமும் பாடுகளினூடாய்ப் பரலோகைச் சுதந்தரிப்போம்.

திரு. R. **பிரீத்திவ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 78 | ஞா. | 130 |
| | கீர். | 3 | கீர். | 291 |

**09-04-2023** உயிர்ப்புப் பெருவிழா

# உயிர்ப்பு: இயேசுவில் வாழ்வைக் கொண்டாடுதல்

## Resurrection: Celebrating Life in Jesus

1 அர 17:17-24 1 கொரி 15: 42-58

திபா 118:1-4, 14-17 லூக் 24:1-12



"அவர் இங்கு இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்"
(லூக். 24 : 6)

உலக வரலாற்றில் நடைபெற்ற மிகப்பெரும் அரிய செயல் இயேசுவின் உயிர்த்தெழுதல் ஆகும். பலமிக்க அரசியல் மற்றும் மத தலைவர்களால் அடித்தமர்த்தப்பட்ட மானிடம் (இயேசுவின் இயக்கம் - Jesus Movement) இயேசுவின் உயிர்த்தெழுந்த நிகழ்வால் புது நம்பிக்கையுடன் வீறுக்கொண்டு எழுந்த நிகழ்வே உயிர்ப்பின் நிகழ்வு. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கந்தசாமி செட்டி என்பவர், "இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் உலக வரலாற்றின் துவக்கம்" எனக் கூறினார். கி.பி. நான்காவது நூற்றாண்டில் வாழ்ந்த புனித அகஸ்டின் (கிப்போலின் பேராயர்), "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ பற்றுறுதியின் தனித்துவம் வாய்ந்த அடையாளம்" என்றார். மேலும், "கிறிஸ்தவ நம்பிக்கை என்பது அவரது உயிர்த்தெழுதல் மீது வைக்கும் நம்பிக்கை என்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நடைபெறாதிருந்தால் அவரது மனுவுருவாதல் மற்றும் மரணம் பயனற்றதாயிருக்கும்" என்றார். இத்தகைய சிறப்பு வாய்ந்த விடுதலையின் நிகழ்வை உலக மானிடர் அனைவரும் பண்டிகையாக கொண்டாடும் வேளையில் நம் வாழ்வில் எவ்விதம் கொண்டாடுவது என்பதுவே செய்தியின் கருப்பொருள். ஆனால் மறுபுறம், நாம் ஏன் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம் வாழ்வில் கொண்டாட வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது. ஆகவே உயிரோடெழுந்த இயேசுவில் வாழ்வைக் கொண்டாடுதலை லூக் 25.1-12 வசனங்களிலிருந்து சிந்திப்போம்.

**1. உயிரோடெழுந்த இயேசுவைத் தேடிச்சென்று கண்டடைவோம்** (லூக் 25:1-4)

அதிகாலையில் தேடிச்சென்ற பெண்கள் இயேசுவை உயிரோடெழுந்தவராக கண்டனர். யூதவழக்கத்தின்படி சனிக்கிழமை வாரத்தின் இறுதிநாள் மற்றும் ஓய்வு நாளாக இருந்தது. ஆகவே பெண்கள் ஞாயிற்றுக்கிழமை அதாவது வாரத்தின் முதல் நாள் கல்லறையைப் பார்க்கச்சென்றனர் என்று மத்தேயு மற்றும் யோவான் நற்செய்தியாளர்கள் கூறுகின்றனர் (மத் 28:1; யோவா 20:1-2), மாற்கு மற்றும் லூக்கா நற்செய்தியாளர்கள் வாசனை திரவியங்களுடன் வந்தனர் (மாற் 16:1-2; லூக் 24:1) எனவும் கூறுகின்றனர். கல்லறைக்குச் சென்ற பெண்களின் எண்ணிக்கையிலும் வேறுபாடு உண்டு. மத்தேயு நற்செய்தி நூலில் மகதலேனா மரியாள் மற்றும் யாக்கோபு யோசேப்பின் தாய் மரியாள் (மத் 28:1), மாற்கு நற்செய்தி நூலில் மகதலேனா மரியாள் யாக்கோபின் தாய் மரியாள் மற்றும் சலோமே (மாற் 16:1), லூக்கா நற்செய்தி நூலில் சில பெண்கள் அதாவது மகதலேனா மரியாள் யாக்கோபின் தாய் மரியாள் (லூக் 8:3 ஏரோதுவின் பணியாளர்களின் மனைவி) மற்றும் சில பெண்கள் (லூக் 24: 1-10) யோவான் நற்செய்தி நூலில் மகதலேனா மரியாள் (யோவான் 20:1-2) எனக்கூறப்பட்டுள்ளது.

இந்தப் பெண்கள் பல சவால்களைக் கடந்து வந்தவர்கள். குறிப்பாக: அதிகாலை இருள், ரோம காவலர்கள், ரோம அதிகாரிகள், யூத சமய தலைவர்கள் மற்றும் பெரிய கல் (2500-3000 கிலோ) ஆகும். அவர்கள் வந்து பார்த்த பொழுதோ கல் புரட்டப்பட்டிருந்தது, சரீரம் இல்லை (லூக் 24. 3). இயேசுவின் உயிர்த்தெழுதலை மறுப்போர் அவருடைய உடலை சீடர்கள் திருடிச் சென்றுவிட்டனர் எனக்கூறினர் (Stolen Body Theory). குறிப்பாக பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் பிலாத்துவிடம் இது குறித்து எச்சரித்து காவலர்களை நியமிக்கக் கூறினர் (மத் 27: 62-66). இயேசு உயிர்த்த செய்தியை அறிந்தவுடன் காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்து சீடர்கள் அவரது உடலை எடுத்துச் சென்றதாக கூறவும் வைத்தனர். (மத் 28.11-15) மற்றொரு சாரார் பெண்கள் தவறான கல்லறைக்குச் சென்றனர், ஆகவே அவர் உடலைக் காணவில்லை எனக் கூறினர் (Wrong Body Theory). கிர்சோம் பேக் என்பவர், அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு

இயேசுவின் அந்தரங்கச் சீடன். ஆதலால் அவர் எங்கு இயேசுவின் உடலை அடக்கம் செய்தார் என்பது வெளியரங்கப்படுத்தப்படவில்லை என்பதால் பெண்கள் தவறான கல்லறைக்குச் சென்றனர் என்றார். ஆனால் திருமறை விளக்கப்படி இந்தப் பெண்கள் கல்லறையினின்று திரும்பிச் சென்று நறுமணப் பொருள்களையும், நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தனர் (லூக் 23.54-56) என்றும், இயேசு அடக்கம் செய்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேப்பின் தாயாகிய மரியாளும் பார்த்தனர் (மாற் 15. 42-47) என்றும், இந்த பெண்கள் இயேசுவின் திருப்பணியில் பங்கு பெற்றவர்கள் எனவும் லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 8.2-3).

பெண்களாக இருந்தாலும், பல சவால்களைச் சந்தித்திட நேர்ந்தாலும் தளராமல் இயேசுவைத் தேடிச் சென்று அவர் உயிரோடெழுந்த நிகழ்வுக்கு முதல் சாட்சிகளானார்கள். அவர்கள் இயேசுவை எந்த அளவுக்கு நேசித்தனர் என்பதற்கு அதுவே சாட்சி. பல இடங்களில் இருந்தும் சமுதாயத்தின் பல நிலைகளிலிருந்தும் வந்தனர். ஆனால் இயேசுவைக் காணவேண்டும் என்ற வாஞ்சையுடன் சென்றவர்களின் கவலை மாறிட, "அவர் இங்கே இல்லை உயிரோடு எழுந்தார்" என்ற தூதரின் வார்த்தைக்கு சாட்சிகளாயினர். தேடுவோர் கண்டடைவர் என்ற இயேசுவின் கூற்றுப்படி நாமும் உயிர்த்த இயேசுவை வாழ்வில் தேடிக் கண்டடைவோம். அவரது உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவோம்.

**2 உயிரோடெழுந்த இயேசுவை உயிரோடிருப்பவராகக் கொண்டாடுவோம்** (லூக் 24:5-6)

அதிகாலை கல்லறைக்கு வந்து உடலைக் காணாமல் தவித்த பெண்களுக்கு தூதன் இரண்டு செய்திகளைக் கூறினான். முதலாவது, "அவர் இங்கு இல்லை; அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்". இரண்டாவது, "உயிரோடிருப்பவரை நீங்கள் கல்லறையில் தேடுவது ஏன்?" என்று கடிந்து கொண்டான். தூதர்கள் எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் உண்டு. யோவான் மற்றும் லூக்கா இரண்டு தூதர்கள் (யோவான் 20:11,12; லூக்கா 24:4) எனவும், மாற்கு மற்றும் மத்தேயு ஒரு தூதன் (மாற் 16:5; மத் 28:2-4) எனவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இயேசுவின் உயிர்த்தெழுதலை மறுத்தோர், இயேசு

மரணமடையவில்லை மாறாக மயக்கமடைந்திருந்தார். அவர் நினைவு திரும்பியவுடன் கல்லைப்புரட்டி கல்லறைக்கு வெளியே வந்தார் என்றனர் (Swoon Theory). இந்தியாவில் தோன்றிய அகமதியா (Mirza Ghulam Ahmad) பிரிவினரும் இத்தகைய நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அதாவது, இயேசு மரணமடையாமல் மயக்கம் தெளிந்து இந்தியா வந்து ஜம்மு காஷ்மீரில் குடும்பமாக வாழ்ந்து மரித்தார் என நம்புகின்றனர். ஆனால் இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தி அவரது மரணத்தை உறுதிப்படுத்திய பின்னர் அவரது உடலை அடக்கம் செய்ய கொடுத்தனர் என்று திருமறையும் பிற வரலாற்று ஆசிரியகளும் குறிப்பிடுகின்றனர்.

ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டவர்கள் இறந்து விடுவர் என்று பிளேலியஸ் ஜோசிபஸ் என்னும் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். அவருடைய நினைவில் ஒருவர் மட்டுமே சிலுவையில் இருந்து உயிருடன் கீழ் இறக்கப்பட்டார், அவரும் அடுத்த 24 மணிநேரத்திற்குள் இறந்து விட்டார் என்றார். மேலும் குற்றவாளிகள் யாரையாவது  ரோம அதிகாரிகள் தப்பவிட்டால் அந்த அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டனர். ஆகவே அவர் மரித்து உயிர்த்தார் என்பது மறுக்க முடியாத செயல். கேசப் சந்திரசென் என்னும் இந்திய கிறிஸ்தவ இறையியலாளர், “இயேசுவின் சிலுவை மரணம் ஒரு தியாகம். அது மனிதர்களைப் பாவத்தினின்று கடவுளுக்கு நேராக திருப்புகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதலை ஒவ்வொரு உண்மையான இறைமக்களும் இன்றளவும் உணர்ந்து அனுபவிக்க முடிகிறது. இயேசு மட்டுமல்ல உயிர்த்தெழுந்தார்; அவரில் பற்றுடையோர் அனைவரும் உயிர்த்தெழுந்து ஆவியில் அவருடன் உயரே வானத்திற்கு எடுத்து செல்லப்படுவார்” என்றார். ஆனால் உயிரோடு எழுந்த இயேசுவை, மரித்துப்போன சமய பாரம்பரிய பிரிவினை மற்றும் சடங்குகளால் மூடி வைக்கும் நிலை திருச்சபைகளில் காணப்படுகிறது உலகில் உயிரோடு வாழும் இயேசுவை உயிரோடு இருப்பாராக காண முயற்சிக்கும் மக்களுக்கு இவைகள் தடையாக மாறலாம்.

பெண்களுக்கு முன் தோன்றிய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியைக் கூறி அவரது வார்த்தைகளை நினைவுக்கூர அறிவுறுத்தினார் (லூக்கா 24.6). உயிரோடு எழுந்த இயேசுவை அனுபவித்து அவர்

அருளும் விடுதலையை வாழ்வில் கொண்டாட அழைக்கப்படுகிறோம். இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல் வரலாற்றில் எப்பொழுதோ ஒருமுறை நடைபெற்ற நிகழ்வு அல்ல மாறாக மனித வாழ்வில் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். ஆகவே தான் பில் கைதர் (Bill Gaither) எழுதிய பாடல், "ஏனெனில் அவர் வாழ்வதால்" (Because he lives) கீழ்கண்டவாறு கூறுகிறது, " An empty grave is there to prove my Saviour lives... and because he lives I can face tomorrow" உயிரோடு எழுந்த இயேசுவை உயிர்களற்ற உலகில் தேடும் மக்கள் கண்டு கொண்ட உயிருள்ளவராய் வாழ்ந்து வழி காட்டுவதே, இயேசுவைக் கொண்டாடுவதாகும்.

### 3. உயிரோடு எழுந்த இயேசுவை நற்செய்தியாகக் கூறிக் கொண்டாடுவோம் (லுக்கா 24 :7-12)

பெண்கள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைக் கொண்டு சீடர்களிடத்தில் அறிவித்தனர் ஆனால் சீடர்கள் அதை நம்ப மறுத்தனர். அது அவர்களுக்கு விசித்திரமான அல்லது பொருளற்ற பேச்சாக (கிழவிச் சொல் - Idle talk) காணப்பட்டது (லூக் 24:11). யூத கலாச்சாரத்தில் பெண்கள், குழந்தைகள், அடிமைகள் ஆகியோரது சாட்சிகள் ஆண்களுக்கு இணையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒருவேளை இயேசு கிறிஸ்துவின் சீடர்களும் அவர் பெண்களாதலால் அவர்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். மற்றொரு கூட்டத்தார், இயேசுவின் உயிர்த்தெழுதல் காட்சி ஒரு மாயத்தோற்றம் அல்லது பயத்தால் ஏற்பட்ட மரூட்சியின் விளைவு என்றனர் (Hallucination Theory).

ஸ்காட்லாந்தில் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பொருளாதார மற்றும் தத்துவ ஞானியான ஆடம் ஸ்மித் (Adam Smith), தனது Theory of Moral Sentiments என்ற நூலில், "பணக்காரர்களையும், அதிகாரமிக்கவர்களையும் போற்றி வணங்கும் மன நிலையையும்; ஏழைகள் மற்றும் தாழ்மையான நிலையில் இருப்பவர்களை இகழ்வதும் புறக்கணிப்பதும் உலகிலேயே தார்மீக ஒழுக்கமின்மையின் (Corruption of Moral Sentiments) முக்கிய காரணம்" என்றார். ஆனால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சிப்பகர சமுதாயத்தில் இரண்டாம் குடிகளும், சமயத்தால் நற்செய்திக்குத் தூரமானவர்கள் என

வைக்கப்பட்ட பெண்களும் சாட்சிகளானார்கள்.

கிபி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் கிறிஸ்டோன் (Arch Bishop of Constantinoble), தான் வழங்கிய உயிர்ப்பின் பண்டிகை அருளுரையில், “Come you all, enter the joy of your Lord... no one grieve over your poverty, for the universal kingdom has been revealed; let no one weep over their sins, for pardon has from the grave; let no one fear death, for the death our Saviour has set us free” எனகூறினார். இது அனைவருக்குமான கொண்டாட்டம்; இயேசு கிறிஸ்துவின் மரணம் பலருக்கு முன்பாக நிகழ்ந்தது போன்று, இயேசுவின் உயிர்த்தெழுதல் காட்சியும் பலருக்கு முன்பாக நடைபெற்றது என்று தூய பவுலார் (1 கொரி 15:3-8) கூறினார். அவரது உயிர்த்தெழுதலை அனுபவித்தவர்கள் அனைவரும், அதற்கு சாட்சிகளான பெண்களும், சீடர்களும், பிற மக்களும் துணிவுடன் இயேசுவின் உயிர்த்தெழுதலைச் சாட்சியாக உலகமெங்கும் அறிவித்தனர். மார்ட்டின் லூத்தர் உயிர்த்தெழுதலைக் குறித்து, “ ஒருவர் நற்செய்தியை கூற வேண்டுமானால்; அது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்ததாய் இருக்க வேண்டும். ஏனெனில் இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது நம்பிக்கையின் முக்கிய ஆதாரம். அவர் உயிர்த்தெழாதிருந்தால் நமக்கு நம்பிக்கை எதுவும் ஏற்பட்டிருக்காது. அவரது மரணம் வீணாயிருக்கும். நற்செய்தி என்பது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கூறுவது” என்றார். எத்தனை உண்மை செய்தி.

மேலும் இறையியலாளர் இஸ்ரயேல் செல்வநாயகம் அவர்கள், இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே பேச்சில் அல்ல; செயலில் நல்ல இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே...; ஆண்டவர் தொழுவத்தின் வெளியிலுள்ளார், ஆடுகள் தேடியே ஆவல் கொண்டே...; வாய்சொல்லால் நேசித்தல் மா எளிதாம் வாய்மை செயலுள்ளோர் நல்அன்பராம் என எழுதியுள்ளார். இயேசுவை நமது வாழ்வின் மூலம் உயிருரோடிருக்கிறவராய் காண்பிப்பதே உண்மையான சாட்சியின் கொண்டாட்டம். உயிரோடு இருக்கும் அயலகத்தார் தேவைகளை அறிந்து உதவாமல் உயிரற்ற பொருட்கள் மற்றும் பொருள்கள் உள்ள சடங்குகள் மீது பரிவுக் காட்டுவதால் உயிர்த்த இயேசுவுக்கு எப்படி சாட்சியாக இருக்க முடியும்? நாம் இயேசுவை நமது வாழ்வில்

உயிரோடிருக்கிறவராய் காண்பிப்பது, அவரது உயிர்த்தெழுதலுக்கு வாழ்வில் சாட்சியைப் பகிருதலாகும்.

இயேசுவின் உயிர்த்தெழுதலை நாம் அனுபவித்து கொண்டாடுவது சிறப்பு. ஏனெனில் நற்செய்திக்கு புறம்பானவர்களாகி பாவத்தில் வாழ்ந்த நாம் கடவுளை கண்டடைய அழைப்பு விடுத்து விடுதலை அருளிய இயேசுவின் அன்பை வாழ்வில் கொண்டாடுவோம். அவரது வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதலால் அடைந்த மன்னிப்பை வாழ்வில் கொண்டாடுவோம். நமது பற்றுறுதி வாழ்வில் நாம் வலுப்பெற அவரது உயிர்த்தெழுதல் உதவியால் அவரது உயிர்த்தெழுதலை வாழ்வில் கொண்டாடுவோம். இறுதியாக சாட்சியாக நம்மையும் ஏற்படுத்திய ஆண்டவரின் உயிர்த்தெழுதலை வாழ்வில் கொண்டாடுவோம்.

அருள்திரு. அறிவர். M. **ஜஸ்டின் மோசஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 147 | ஞா. | 145 |
| | கீா். | 179 | கீா். | 178 |

**16-04-2023** உயிர்ப்புக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு

# கிறிஸ்துவை ஆண்டவராகவும் கடவுளாகவும் உறுதிமொழிதல்

## Affirmation of Christ as Lord and God

விப. 3 : 13 - 17 கொலோ. 1 : 15 -23

திபா. 93 யோவா. 20 : 24 - 29



"நீரே என் ஆண்டவர். நீரே என் கடவுள்"
(யோவான் 20 : 28)

உரோம ஏகாதிபத்தியச் சூழலில் (Roman Imperialism) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கடவுளாகவும் ஆண்டவராகவும் உறுதியாக அறிக்கை செய்வதில் கடினங்கள் பல இருந்தது. இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாது, உரோம ஆளுநரை ஆண்டவராக அறிக்கையிட (Ceaser is the Lord) மக்கள் வலியுறுத்தப்பட்டனர். அவ்வாறு அறிக்கையிடாதவர்கள் தண்டிக்கப்படுகின்ற சூழல் இருந்ததாலும், யூதருக்கு பயந்ததாலும் இயேசுவின் மரணத்திற்கு பின்னர் அவரது சீடர்கள் மறைந்து வாழ்ந்தனர். இந்நிலையில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தோடு சீடர்கள், தாங்கள் மறைந்திருந்த இல்லத்தின் அறைக்கதவினைப் பூட்டி அமைதியின்றி விரக்தியோடு இருந்தனர். உயிர்த்தெழுந்த ஆண்டவர் அமைதியிழந்திருந்த அவர்கள் நடுவே வந்து நின்று, "உங்களுக்கு சமாதானம் என்று கூறி, "உயிர்த்தெழுந்த ஆண்டவராய்" அவர்களுக்கு முன் தன்னை அடையாளப்படுத்தினார்" (யோவான் 20 : 19).

உயிர்த்த ஆண்டவர் சீடர்களுக்கு காட்சி கொடுத்தபோது தோமா அக்கூட்டத்தில் இல்லாதிருந்தார் (யோ. 20 : 24). நமது ஆண்டவர் உயிர்த்தெழுந்தார், நாங்கள் அவரை அறைவீட்டில் கண்டோம் என மற்ற சீடர்கள் குறிப்பிட்டபோது (யோ. 20 : 25) தோமா ஆணிகளினால் உண்டான காயத்தினை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு என் கையை அவர் விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் எனக் கூறினார். இச்சூழலில், தோமா கிறிஸ்துவை ஆண்டவராக உறுதிமொழிந்து, அவரைப்பற்றிய நற்செய்தியினை

அறிவிக்க வேண்டுமென்ற நிலையில், மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு, அவர் சீடர்களோடு அமர்ந்திருக்கையில், உயிர்த்த ஆண்டவர் காட்சி கொடுத்தார் (யோவான் 20 : 26). இக்காட்சியில் தோமா உயிர்த்த கிறிஸ்து அனுபவத்தினை தனது வாழ்வின் அனுபவமாக்கி, கிறிஸ்துவை ஆண்டவராகவும் கடவுளாகவும் உறுதிமொழிந்தார். நமது வாழ்வு சூழலில் இவ்வனுபவத்தை வாழ்வாக்கி செயல்பட திருமறை சார்ந்து தியானிப்போம்.

**அ) ஆண்டவரது ஆற்றலை அறிந்து உறுதிமொழிதல்** (விப. 3 : 13-17)

அனைத்து ஆற்றலும் நிறைந்த படைப்பாளராம் கடவுளின் பெயரை வாயாலே உச்சரிப்பது உயர்வானதல்ல என்னும் நிலையில் ஆண்டவர் என பொருள் தரும் "யாவே" என்னும் எபிரேய பதத்தை "அதோனாய்" என் இஸ்ரவேலர் உச்சரித்தனர். ஆண்டவர் எனும் வார்த்தை கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்தும் வார்த்தையானதால் அதனை உச்சரிப்பது தகுதியானதல்ல என எண்ணினர். ஏனென்றால் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு கடவுள் தமது பெயரை ஆண்டவர் என வெளிப்படுத்தவில்லை. அதோடு அவர்களுக்கு நேரடியாகவும் அவர் தரிசனமாகவில்லை. அதோடு கடவுள் "ஆண்டவர்" என்ற பெயரால் தன்னை வெளிப்படுத்தாமல், எல்லாம் வல்ல கடவுளாக (அனைத்து ஆற்றலும் நிறைந்த கடவுளாக) காட்சியளித்தார். ஆனால் மோசேக்கு "இருக்கிறவராக இருக்கின்ற ஆண்டவர்" எனத் தன்னை வெளிப்படுத்தினார் (யாத். 3 : 14). ஆண்டவரது உடன்படிக்கையின் மக்களாகிய இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாயிருந்தபோது, அவர்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுவிக்க கடவுள் மோசேக்கு மட்டும் தரிசனமானார்.

மோசேக்கு தன்னை வெளிப்படுத்தியபோது உங்கள் மூதாதையரின் கடவுள், ஈசாக்கின் கடவுள் நானே என்றுரைத்தார் (யாத். 3 : 6). மோசேக்கு கடவுளின் வெளிப்பாடு, கடவுளை எவரும் உற்றுநோக்க முடியாத நிலையில் அமைந்திருந்தது. ஆகவே மோசேயும் தனக்கு தரிசனமான கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தமது முகத்தை மூடிக்கொண்டார் (யாத். 3 : 6). ஆனால் நாடோடியாய் அலைந்து திரிந்த ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து, நான் உன்னை ஆசீர்வதிப்பேன், உன்னை பலத்த இனமாக்குவேன் என்றவர் எகிப்தில் வேதனைப்பட்ட தமது உடன்படிக்கையின் மக்களை விடுவிக்க "நான் உன்னோடு இருப்பேன்" என்று மோசேயுடன் கூறி (யாத். 3 : 12)

அடிமைத்தன வாழ்விலிருந்து விடுவித்து, தனது ஆற்றலை வெளிப்படுத்தினார்.

மோசே கடவுளின் ஆற்றலை அறிந்தபடியினால் அவரை அனைத்து ஆற்றலும் நிறைந்தவர், அனைவரையும் ஆளும் ஆண்டவர், என மக்களுக்கு முன்பாக அறிக்கையிட்டார். அதோடு ஆண்டவராக தன்னை வெளிப்படுத்திய கடவுள், மக்களின் வேதனையினைக் கண்ணாலே கண்டுகொள்ளச் செய்தார் (வ. 16) எனவும், அடிமைத்தன வாழ்விலிருந்து விடுவித்து வழிநடத்திச் செல்லும் ஆண்டவராய் வெளிப்படுத்தினார் எனவும் உறுதிமொழிந்தார். இன்று இறைமக்களும் திருச்சபைகளும் கடவுளின் ஆற்றலை அறிந்து, அவர் அனைவரையும் விடுவிப்பவர் என்பதை உலகிற்கு உறுதிமொழிந்து சான்றாகிட வேண்டும்.

**ஆ) ஆண்டவரை அனுபவமாக்கி உறுதிமொழிதல்** (கொலோ. 1 : 15-23)

பவுல் கொலோசெ திருச்சபைக்கு நிருபத்தை எழுதிய போது யூத-கிரேக்க-ரோம பாரம்பரியங்களும், நம்பிக்கையும் கொலோசெ திருச்சபையில் இருந்தது. ஞான உணர்வு கொள்கையின் தொடக்க வடிவமும் யூத சிந்தனைகளும் இணைந்த சில கொள்கைகள் பரவிக் கிடந்தன. சடங்கு விதிகளுக்கு முக்கியத்துவம் தருதல், உடல் ஒறுத்தல், வானதூதர் வழிபாடு, மனித ஞானத்திலும் மரபிலும் மிகுந்த நம்பிக்கை வைத்தல் போன்றவை திருச்சபை மக்களிடையே பரவிக் கிடந்தன.

ஆகவே இப்பகுதியில் பவுல் போலிப் போதகர்களின் தவறான போதனைகளைக் கண்டித்து, கிறிஸ்துவை ஆண்டவராக வெளிக்காட்டுகிறார். அதோடு, கிறிஸ்து இல்லாத வாழ்வு கிறிஸ்தவ வாழ்வு அல்ல எனவும், கிறிஸ்தவ வாழ்வில் வெளிப்பட வேண்டிய கிறிஸ்து அனுபவத்தை இறைமக்கள் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிடுகிறார். மட்டுமல்லாது, கிறிஸ்துவை கடவுளின் சாயல் (வ. 15), அனைத்தையும் படைத்தவர் (16), அனைத்துக்கும் முந்தியவர், அனைத்தையும் நிலைக்கச் செய்பவர் (1 : 17), திருச்சபையின் தலைவர் (18), இறந்து உயிர்த்தெழுவோரின் தலைப்பேறு (1 : 18), கடவுளின் தன்மையை மனித உருவில் நிறைவாய் கொண்டவர் (1 : 19), கடவுளோடு தம்மை மீண்டும் ஒப்புரவாக்குகிறார் என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

ஞான அறிவு கோட்பாட்டுச் சூழலில் ஆண்டவராகிய கிறிஸ்துவின் மேன்மை என்ன என்பதை தெளிவுபடுத்தி, கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கையிட்டு, ஆன்மீக வாழ்வில் நிலைத்திருக்க தூய பவுலார் கூறும் அறிவுரைகள் கிறிஸ்து அனுபவத்தில் (Christ Experience) திருச்சபை கட்டப்பட துணைச் செய்கிறது. கிறிஸ்துவை ஆண்டவராக அனுபவமாக்கி உறுதிமொழிந்திட, ஆண்டவரை பகைக்கும் உள்ளம் கொண்ட மக்களாய் தீமையான செயல்களைச் செய்து இறைவனோடு உறவற்றவர்களாய் வாழ்ந்த மக்களை மீட்பதற்காக கடவுள் மானிட வடிவில் தமது திருக்குமாரனைத் தந்து, அவரது சாவினாலே மக்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். இன்று கிறிஸ்துவே ஆண்டவர் என்ற நற்செய்தியைப் பெற்றுக்கொண்ட திருச்சபை அதிலிருந்து விலகிச் செல்லாது, நம்பிக்கையில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும்.

**இ) ஆண்டவரை அறிவித்து உறுதிமொழிதல்** (யோவா. 20 : 24-29)

கடவுளது ஆற்றலை உயிர்த்தெழுந்த கிறிஸ்து அனுபவத்தினால் (Risen Christ Experience) சொந்தமாக்கிய தோமா உரோம ஆளுநரை ஆண்டவராக அறிக்கையிடாது, கிறிஸ்துவை கடவுளாகவும் ஆண்டவராகவும் அறிவித்து உறுதிமொழிந்தார். இத்தகைய உறுதி மொழிதலினால் வரும் பாடுகளையும், துன்பங்களையும், வேதனைகளையும் ஏற்றுக்கொள்ள தன்னை தகுதியுடையவராக்கினார். தோமாவின் உறுதி மொழிதல் வெறும் உதட்டிலிருந்து வெளிப்பட்டதன்று, உள்ளத்திலிருந்து வெளிப்பட்டதாகும். உயிர்த்தவர் உலகை வென்றவர், உள்ளம் சோரும்போது உதவி செய்பவர் என்பதை தனது அனுபவம் சார்ந்து திடமாக அறிவித்து உறுதி மொழிந்தார்.

தோமாவின் அறிக்கைக்கு உயிர்த்த கிறிஸ்து பதிலளிக்கும்போது, “நீ என்னைக் கண்டதால் நம்பினாய் காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” (யோ. 20 : 24) எனக் குறிப்பிட்டது, “நம்புகிறவர்கள் பேறுபெற்றோர்” (லூக். 1 : 45), “அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்” (யோபு 4 : 48) எனும் இறைவார்த்தைகளை உணர்த்துவதாய் அமைந்துள்ளது. அதோடு இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் முன்பும் எவ்வித ஆதாரமுமின்றி அவரை ஆண்டவராகவும் கடவுளாகவும் ஏற்றுக்கொண்டவர்களும் பாக்கியவான்கள் எனவும், அவரைக் குறித்து

சொல்லப்பட்டவைகளையும் எழுதப்பட்டவைகளையும் தோமாவைப் போல ஆதாரத்தோடு ஏற்றுக்கொண்டவர்களும் பேறுபெற்றவர்கள் என்பதையும் உணர்த்துகிறது. மட்டுமல்லாது, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய இவ்விரண்டு நம்பிக்கையும் ஒன்றுதான் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

தோமாவின் இவ்வறிக்கையினை திருவெளிப்பாட்டு நூலில், விண்ணகத்தின் அரியணையில் வீற்றிருக்கும் கடவுளை வழிபடுகிறவர்கள் தங்கள் வழிபாட்டில் எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே, மாட்சியும் மாண்பும் வல்லமையும் பெற நீர் தகுதிப்பெற்றவர் எனப் புகழ்ந்து பாடினார்கள் (வெளி. 4 : 11). இன்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்ட திருச்சபைகளும், இறைமக்களும் ஆண்டவர் ஒருவரே வழிபாட்டுக்குரியவர், அவரே உலகின் மீட்பர், அவரே போற்றுதலுக்கும் புகழ்ச்சிக்கும் உரியவர் என்பதை தனது சான்றுள்ள வாழ்வின் மூலம் அறிவிக்க வேண்டும்.

தோமாவின் இந்திய வருகை, திருப்பணி, அவரது மரணம் ஆகியவை இயேசு கிறிஸ்துவைப்பற்றி சொல்லப்பட்டவைகளுக்கும், அவர் தமது வாழ்வில் கண்டவைகளுக்கும், உணர்ந்தவைகளுக்கும், இயேசுவை குறித்து திருமறையில் எழுதப்பட்டவைகளுக்கும் ஏற்றுக்கொண்டவைகளுக்கும் சான்றாக அமைந்துள்ளது. நமது வாழ்வுச் சூழலில் அனுதினமும் ஆண்டவரது ஆற்றலை அறிந்து உறுதிமொழிகின்றவர்களாகவும், ஆண்டவரை அனுபவமாக்கி உறுதி மொழிகின்றவர்களாகவும், ஆண்டவரையும் அவரது நற்செயல்களையும் அறிவித்து உறுதிமொழிகின்றவர்களாகவும் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

| 𝄞 | ஞா. | 78 | ஞா. | 74 |
|---|---|---|---|---|
| | கீர். | 131 | கீர். | 277 |

**23-04-2023** உயிர்ப்புக்கு பின் வரும் இரண்டாம் ஞாயிறு

# கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு
## (Invitation to Christ's Hospitality)

| | |
|---|---|
| தொ.நூ. 18:1-10 | எபி. 13:1-8 |
| தி.பா. 15 | யோவா. 21:1-14 |



"இயேசு அவர்களிடம் உணவருந்த வாருங்கள்" யோவா. 21:12

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (திருக்குறள் 9:4)

என்ற திருக்குறளில் தமிழ் கவிஞர் திருவள்ளுவர் தமிழரின் உயர்ந்த பண்பாடாகிய விருந்தோம்பல் என்பது அன்னியரான விருந்தினருக்கு மலர்ந்த முகத்தோடு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்வோரின் இல்லத்தில் அறம் நிறைவு பெற்று இறை ஆசி தங்கும் என்கிறார். விருந்தோம்பல் என்பது அறவழியில் வாழும் இறைமக்கள் கடைபிடிக்கவேண்டிய ஓர் தியாகம் நிறைந்த செயலாகும். உறவினரை மட்டுமல்ல அறிமுகமில்லாதவரையும் விருந்தோம்பல் செய்யவேண்டும். சந்தோஷத்தோடும் முகமகிழ்ச்சியோடும் செய்வோரின் இல்லத்தில் அறத்தின் நிறைவும், இறை ஆசியும் நிறைவாய்த் தங்கும். விருந்தோம்பல் என்னும் வேள்விக்கு (அறச்செயல்) தியாகங்கள் பல இருந்தாலும் அச்செயலால் வரும் பயன்கள் பல உண்டு. விருந்தோம்பலாகிய அறத்தை செய்யாமல் விட்டுவிட்டால் நன்மை செய்ய கிடைத்த நல்வாய்ப்பை பயன்படுத்தாதவர்கள் என்று தான் பொருள்.

விருந்தோம்பல் கடவுளின் நற்குணங்களில் ஒன்று (Hospitality is a characteristic of God) இது இறைமக்களிலும் வெளிப்படவேண்டியதே. அதிநவீன, அதிவேகமான உலகில் அடுத்தவர்களுக்காக நேரம் ஒதுக்கவும், கரிசனை கொள்ளவும், கவனிக்கவும், அடுத்தவரோடு உரையாடவும் விருந்தோம்பவும் நேரமில்லை. சொந்த காரியங்கள் கவனிக்ககூட நேரம் போதாது என்ற நிலையிருப்பதால் விருந்தோம்பல்

என்னும் அறச்செயல் மங்கிக்கொண்டே போகிறது. ஆகவே மேரி ஆஷ் என்பவர் “நீங்கள் செய்யும் வேலையில் எவ்வளவு ஈடுபாட்டோடு இருந்தாலும் சரி, உங்களை தேடி வரும் ஒருவரை உபசரித்து அவருக்கு நேரம் ஒதுக்கி, அவர் உங்களுக்கு முக்கியமானவர் என்பதை உணரச் செய்யுங்கள்” என அறிவுறுத்துகிறார். விவிலியத்தில், விருந்தோம்பல் என்ற இரக்கத்தின் செயல் இஸ்ரவேலரின் வாழ்க்கை முறையில் ஆழமாக வேரூன்றியிருந்தது என அறிய முடிகிறது. இது கடவுள் மீதான ஒருவரின் நம்பிக்கையின் வெளிப்புற வெளிப்பாடு. விருந்தினர் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், விருந்தினரின் முழுமையான பாதுகாப்பிற்கு விருந்தளிப்பவர் பொறுப்பு. ஒரு அந்நியன் ஒரு விருந்தினரை எதிர்பார்த்து நகரத்தின் நுழைவாயிலில் காத்திருப்பான் (தொ.நூ. 18:1, 19:1). வழக்கமாக விருந்தினர்களின் விலங்குகளுக்கு தீவனமும் தண்ணீரும் வழங்கப்பட்டன. (தொ.நூ. 24:14,32). சில விருந்தினர்களுக்கு தங்குவதற்கு சிறப்பு அறைகள் வழங்கப்பட்டன. (2 அரச. 4:10). இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமான இடம் இல்லாததால், அவரும் திருத்துவர்களும் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டனர். இயேசு பரிசேயர்களின் வருந்தினராக இருந்தார் (லூக். 7:36). அப்படிப்பட்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்து பாலைவனத்தில் உணவின்றி தவித்த ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார். கடல் மீது தவித்தவர்களை தவிக்கவிடாமல் தாயன்போடு கண்ணோக்கினார். மீன் கரைக்கு வருவதற்கு முன்பு, கரையில் நெருப்பில் மீன்கள் இருப்பதும், ரொட்டி துண்டுகள் இருப்பதும் அவரது பேரன்பை உணர்த்துவதாகும். அவர் கடலிலிருந்து படகைவிட்டு இறங்கி கரையில் வந்த சீடர்களை உணவருந்த வாருங்கள் என அழைத்த அழைப்பும், அப்பத்தையும் மீனையும் எடுத்து கொடுத்து விருந்தோம்பிய உன்னத செயலும் உயர்ந்த உண்மைகளை கற்றுத் தருவதை தியானித்து புரிந்துகொள்வோம்.

### 1. உள்ளன்போடு அழைக்கிறார்

பகிர்ந்துண்டு வாழ்வதில் சுகம் உண்டு, ஆனால் அதை விட பெரும் சுகம் விருந்தோம்பலில் உண்டு என்று கிறிஸ்து அறிந்து உள்ளன்போடு அழைத்து உபசரித்தார். ஆண்டவருடைய மரணத்திற்குப் பின் ஏற்பட்ட குழப்பத்தில் தங்கள் விசுவாசத்தை இழந்துவிட்டனர் சீடர்கள். எல்லா செயல்களிலும் முந்திக்கொள்ளும் பேதுரு, மாம்சீகமாக சிந்தித்து, சுயமாக செயல்படுகிறார். அதாவது

“மீன்பிடிக்கப் போகிறேன்” என்று தனிப்பட்ட, அவருடைய விருப்பத்தைக் கூறினார். மற்ற சீடர்களும் அவருடன் இணைந்து மீன்பிடிக்க படகில் ஏறினார்கள். மனிதரை பிடிபவர்களாக வாழ வேண்டும் என்னும் உன்னதமான உயர்வான தொழிலுக்கு அழைக்கப்பட்டவர்கள், வலைகளைத் தேடி பிடித்து, கிழிந்த வலைகளை சரி செய்து, தங்கள் பழைய படகுகளைச் சரிசெய்து, மீண்டும் தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளப் புறப்பட்டுவிட்டனர். இங்குதான் ஆண்டவரின் உள்ளன்பை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. பழைய தொழிலுக்குச் சென்றவர்களை கடிந்துகொள்ளவில்லை. கடலை கொந்தளிக்க செய்யவில்லை. காற்றால் அலைக்கழிக்கப்படவில்லை. மாறாக இயேசு அவர்களிடம் “பிள்ளைகளே! மீன் ஒன்றும் படவில்லையா?” என்று கேட்டார் (யோவா. 21:5). அவர் “பிள்ளைகளே” என்று அழைத்தது ஒரு புதிய அழைப்பாக இருக்கிறது. இதுவரையில், நணபர்களே, சகோதரர்களே என்று அழைத்தவர், முதன் முதலாக “பிள்ளைகளே” என்று அழைத்தது சீடர்களிடம் கொண்டுள்ள உள்ளன்பை காட்டுகிறது. பொதுவாக, உள்ளன்போடு உபசரிக்கிறார்களா? இல்லையா? என்பது அவர்களது உதட்டிலிருந்து உதிரும் வார்த்தையிலிருந்தும் உடல் மொழியிலிருந்தும் அறிந்துகொள்ள முடியும். தொ.நூ. 18-ல் ஆபிரகாம் பகலில் வெப்பம் மிகுந்த வேளையில் மம்ரே என்ற இடத்தில் கண்ட மூன்று மனிதர்களை உள்ளன்பினால் உற்சாகமாய் உபசரித்தார். அவரது உள்ளன்பை உதட்டிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளிலும் உடல்மொழியிலும் வெளிப்பட்டது. எப்படியெனில், ஆபிரகாம் அவர்களை கண்டவுடன், அவர்களை சந்திக்க கூடார வாயிலை விட்டு “ஓடினார்”. அவர்கள் முன் தரைமட்டும் தாழ்ந்து “வணங்கினார்” (18:2). கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும், கொஞ்சம் உணவு கொண்டு வருகிறேன் (18:4,5) என்று கூறியவர், மிக மிக விரைவாக செயல்படுகிறார். அவர் “விரைவாக” தன் கூடாரத்திற்கு சென்றார், சாராளிடம் விரைவாய் நல்ல மாவைப் பிசைந்து அப்பஞ் சுட கூறினார் (V. 6), மாட்டு மந்தைக்கு “ஓடி”, ஒரு நல்ல இளங்கன்றைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுத்தார். வேலைக்காரன் “விரைவாக” சமைத்தார் (18:7). இப்படி ஆபிரகாம், மனைவி சாராள், வேலைக்காரன் ஆகியோர் உள்ளன்போடு விரைந்து விருந்தோம்பலில் ஈடுபட்டனர்.

கேரள மாநிலம் கொச்சியில் உணவகம் நடத்தி வரும் மினு பவுலின் என்ற பெண், ஆதரவற்றவர்களாக தெருத்தெருவாக, ஊர்

ஊராக சுற்றி திரியும் மக்கள் மீது கொண்டுள்ள உள்ளன்பால், தனது உணவக வாசலில் குளிர்சாதனப்பெட்டி ஒன்றை வைத்துள்ளார். இதில் சாப்பிட வழியில்லாத ஐம்பது பேருக்கு தினமும் உணவுகளை வைக்கிறார். இதற்கு "நன்ம மரம்" என்று பெயரும் வைத்துள்ளார். 24 மணி நேரமும் இந்த குளிர்சாதனப் பெட்டியில் உணவு இருக்கும். எந்த நேரமும் எவரும் இதில் உணவு வைக்கலாம். இவ்வாறு வைக்கப்படும் உணவுகளைப் பசியால் வாடும் யாரும் எடுத்து உண்ணலாம். இது தொடர்பாக மினு பவுலின் கூறும் போது வயதான பலர் வீடில்லாமல் உணவுக்காகக் குப்பைகளில் தேடுவதைப் பார்த்தேன். பசியை போக்க பலர் வழியில்லாமல் தவிப்பது என்னை பாதித்தது. இதற்காக எனது உணவகத்தில் "நன்ம மரம்" என்னும் "உணவு வங்கியைத் தொடங்கி இருக்கிறேன்", என்றாராம். இப்படி உள்ளன்போடு செயல்படும் இறைமக்களால் சபையிலும் சமுதாயத்திலும் இறையன்பை வெளிப்படுத்த முடியும்.

## 2. உணர்ந்திட அழைக்கிறார்

கப்பலை கரை சேர்க்க வழி தெரியாது தவிக்கும் மாலுமி போல, கலங்கிய நிலையில் கடலில் தவித்த தனது சீடர்களுக்கு முன்பாக கலங்கரை விளக்காய் கரையில் நின்றார் இயேசு. ஆனால், உண்மையென்னவெனில், அதிகமான சரக்குகளை ஏற்றிக்கொண்டு சென்ற இரயில் திடீரென தீப்பிடித்து கொண்டது. செய்வதறியாது திகைத்து இரண்டு ஓட்டுநர்களும் சற்று நேரத்திற்குள் தீயணைக்கும் படையினரைத் தொலைபேசியின் மூலம் அழைத்தனர். அவர்கள் வந்து தீயை அணைப்பதற்குள் பாதி எரிந்து சாம்பலானது. ஆனால் அந்த இரயிலேயே தீயணைக்கும் வசதிகள் பொருத்தப்பட்டுள்ளது என்பதை உணராதது போல, சீடர்களும் முன்னுரைத்தபடி மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தருள்வார் என்பதையும் கரையில் நிற்பவர் ஆண்டவர் இயேசுவே என்று உணராதிருந்தார்கள். மனிதர்களைப் பிடிக்க அழைக்கப்பட்டவர்கள் இப்பொழுது தங்களுக்குத் தெரிந்த மீன்பிடிக்கும் தொழிலிலும் தோற்றுப்போனார்கள். இவர்களின் உள்ளத்தில் உண்மையை உணர்த்திடவும் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், ஆண்டவர் இயேசு "படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார் (யோவா. 21:6). அவ்வாறே வலையை வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பட்டதால் அவர்களால்

வலையை இழுக்க முடியவில்லை. அப்பொழுது இயேசுவின் அன்பு சீடர் யோவான் அதை கண்டு பேதுருவிடம், “அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்” என்றார் (யோவா. 21:7). அவர்கள் ஆண்டவரேயல்லாமல் வேறு யாராலும் இத்தகைய ஆலோசனையை தர முடியாது என உணர்ந்து கொண்டனர். அளவுக்கு அதிகமான இரசம் (யோவா. 2:6). அளவுக்கு அதிகமான அப்பம் (யோவா. 6:11). அளவுக்கு அதிகமான வாழ்வு தரும் தண்ணீர் (யோவா. 4:14). அளவுக்கு அதிகமான நிலைவாழ்வு (யோவா. 10:10). அளவுக்கு அதிகமான தூய ஆவி (யோவா. 3:34) ஆகியவற்றிற்கு காரணமான இயேசுவே இந்த அளவுக்கு அதிகமான மீன்பாட்டிற்கும் காரணம் என்பது யோவானுக்குப் பளிச்சென்றுத் தெரிகிறது. மனித முயற்சிகள் வெறுமையை தரும் என்பதையும் ஆண்டவரின் ஆலோசனை நிறைவைத் தரும் என்பதையும் ஆண்டவரின் ஆலோசனை நிறைவைத் தரும் என்றும் உணர்ந்த வேளை இது. மேலும் “....என்னை விட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது” (யோவா. 15:5) என்றுரைத்த இயேசு கிறிஸ்துவின் வார்த்தை உண்மை என உணர்ந்திட்டனர்.

“நான் ஆடையின்றி இருந்தேன் எனவே நான் ஒளித்துக் கொண்டேன்” (தொ.நூ. 3:10) என்று கடவுளின் திருமுன்னிருந்து விலகி ஒளிந்துகொண்ட ஆதாம் கூறியது போல, “ஆடையைக் களைந்திருந்த (Poorly Clothed)’ (யோவா. 21:7) சீமோன் பேதுரு ஆண்டவரின் திருமுன்னிருந்து விலகி ஒளிந்துக்கொள்ள கடலில் குதித்தார். அதோடு மேலாடை இல்லாமல் யூதர்கள் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்து கூறுவதில்லை அவ்வாறு கூறுவது மரியாதை குறைவாக கருதப்பட்டது. எனவே தான் அவசரத்திலும் மேலாடையை கட்டிக்கொள்ள விரைகிறார் பேதுரு. உண்மையாகவே சீடர்களை சிந்திக்க வைத்தது செயல்பட தூண்டியது. கிறிஸ்துவின் விருந்தோம்பல் வாழ்வில் மாற்றமடைய வாய்ப்பினை வழங்குகிறது (Christ’s Hospilality offers room for people to entre into the possibility of changing themselves) சூழல்கள் ஏற்படுத்தும் மனசோர்புகளால் கடவுளை தேடாமல் அவர் சத்தத்திற்கு செவிகொடுக்காமலும் அவர் அருகில் இருக்கிறார், ஆற்றுள்ளவராயிருக்கிறார் என்பதை உணராமல் போகிறோம். எனவே திருப்பாடலாசிரியர் போல “உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்கு மெய்யுணர்வு தாரும்” (திரு.பா. 119:34) என்று வேண்டுதல் செய்து உணர்வடைந்திடுவோம்.

### 3. உள்ளம் புத்துயில் பெற அழைக்கிறார்

உயிர்த்தெழுந்த கிறிஸ்து கடற்கரையில் மரணத்தின் வெற்றியை குறித்து கொண்டாடவோ, சிலுவையில் அறைந்தவர்களிடம் சென்று வெற்றியின் சான்றிதழ் பெறவோ, வெற்றியின் கிரீடம் அணிந்து வரவோ செல்லவில்லை மாறாக நொந்து போன சீடர்களை பலபடுத்தி உள்ளத்திற்கு புத்துயுரூட்டவே “உணவருந்த வாருங்கள்” என்று அழைத்த ஆண்டவரிடம் சீடர்களும் எவரும், நீர் யார்? என்று கேட்கத் துணியவில்லை, ஏனெனில் அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் (யோவா. 21:12) ஆண்டவருடைய ஆற்றல் மிகுந்த வார்த்தையின் வழியாக உணர்ந்தனர் புத்துயிர் அடைந்தனர். மூன்றரை ஆண்டுகள் அவர்களுடனே இருந்த கிறிஸ்து “உணவருந்த வாருங்கள்” என்று அழைத்தபோது எளிதாக ஆண்டவரின் சத்தத்தை அறிந்துகொண்டனர். நமக்கு மிகவும் நெருக்கமானவர்களின் சத்தத்தை எளிதில் அறிந்துகொள்வதுண்டு, நாம் “யார்” என்று கேட்பதுமில்லை. அங்ஙனமே சீடர்களும் செயல்பட்டனர். பசியோடு இருந்த சீடர்களுக்கு உணவை தயார் செய்து பகிர்ந்துகொண்டதன் வழியாக தானே வாழ்வளிக்கும் உணவு என்றுணர்ந்து ஊக்கப்படுத்தினார். உணவை உண்டதும் மகிழ்ச்சியடைந்தனர், உள்ளம் புத்துயிர் அடைந்தது. நம்பிக்கை வெளிச்சம் உதித்தது. இவ்வாறு இயேசுவின் விருந்தோம்பல் வழி சீடர்களின் உள்ளம் புத்துயிர் பெற்று புதிய சாத்தியக் கூறுகளையும் (New Possibilities) புதிய ஆரம்பத்தையும் (New Beginnings) காணமுடிந்தது.

உள்ளன்போடு விருந்தோம்ப முன் வந்த ஆபிரகாம் கடவுளுடைய மனிதர்களிடம் “கொஞ்சம் உணவு கொண்டு வருகிறேன், நீங்கள் புத்துணர்வு பெற்றபின் பயணத்தைதங தொடருங்கள்....” (தொ.நூ. 18 : 5) என்று கேட்டுக் கொண்டதோடு, அம்மனிதர்கள் புத்தணர்வு பெற வேண்டியவைகளை ஆபிரகாம் குடும்பமாக இணைந்து விரைந்து செய்தார்கள். உள்ளம் கலங்கி, குழம்பி, விரக்தியோடு இருப்போர், தங்களை வழிநடத்தின குருநாதர் தங்களோடு இல்லை என்ற உணர்வோடும், எதிர்காலத்தை குறித்த பயத்தோடும் தெளிவற்ற மனநிலைமையிலும் இருப்போர்க்கும் இயேசுவின் அழைப்பும் அவருடைய பிரசன்னமும் புத்துயிரை தரும்.

### 4. உறவுடன் வாழ அழைக்கிறார்

"உணவிற்கு அறுசுவை, உறவுக்கு விருந்தோம்பல்" என்பர். எப்போதும் உறவுடன் வாழ்வதுதான் செல்வப்பேறு. காரணம் உறவு தொடர்பை வளர்க்கிறது, தோழமையை உறுதி செய்கிறது. கிறிஸ்துவின் விருந்தோம்பல் அவருக்கும் சீடர்களுக்கும் இடையே இருந்த உறவை மீண்டும் இணைக்கும் ஓர் பாலமாகவே மாறிற்று. இந்த இணைப்பு பாலம் சீடர்களின் நம்பிக்கையை வளர்க்கவும், உறவினை வலுப்படுத்தவும் உதவியது. இயல்பாகவே கடவுளுக்கும் படைப்பிற்கும் இடையேயான உறவு முறிக்கப்படும் போதெல்லாம் ஆண்டவரே முந்திச் செயல்பட்டு அதை புதுப்பிக்கிறார். உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம் சீடர்களோடு மீண்டும் உறவைப் புதுப்பிக்க விழைகிறார். காரணம், சீடர்கள் அவரைக் காட்டிக் கொடுத்தும், மறுதலித்தும், விலகி ஓடியும், ஒரு குடும்ப உறவினை முறித்துவிட்டனர். மூன்றரை ஆண்டுகளாக தம் வாழ்வையே அனுபவமாக அவர்களிடம் பகிர்ந்து கொண்ட இயேசு அவர்களை அப்படியே விட்டுவிட எண்ணாமல் உறவை மீண்டும் புதுப்பித்து உயிர்ப்பின் நம்பிக்கைக்குள் நிலைநிறுத்துகிறார். எப்படியெனில் ஆரம்பத்தில் திருப்பணியை ஆற்ற அழைத்ததை மீண்டும் நினைவுபடுத்துகிறார் (மத். 4:18-22, யோவா. 21:15-19). மீன்பிடியிலிருந்து மனிதனை பிடிக்கின்ற அந்த அனுபவ அழைப்பை திரும்பவும் கொண்டு வந்து உறுதிபடுத்துகிறார். சிறப்பாக, இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தார். மீனையும் அவ்வாறே கொடுத்தார் (யோவா. 21:13), இங்ஙனம் உறவுடன் இணைந்து விருந்து உண்டார்கள். "Eating together is universsally a chief means of friendship" என்பது உண்மையாயிற்று. நம்பிக்கை, துரோகம் செய்தவர்களையும், பயத்தில் நிறைந்தவர்களையும் மறுபடியும் அழைத்து ஐக்கியப் பந்தியில் அமர்த்தி உணவருந்தி உறவை வலுபடுத்தும் அனுபவம் இறைமக்களாகிய நமக்கு ஒரு நல்ல முன் மாதிரி.

ஆதி. 18:8-ல் "சமைத்த உணவை அவர்கள் முன் வைத்தார் அவர்கள் உண்ணும்பொழுது அவர்களருகே மரத்தடியில் நின்று கொண்டிருந்தார்", இப்படி ஆபிரகாமும் வாயார அழைத்து வயிராற இன்முகத்தோடு விருந்தளித்து உறவாடி மகிழ்ந்தார். ஆண்டவரோடு உறவு கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே இன்னும் காட்டிகொடுத்து கொண்டும் மறுதலித்து கொண்டும்,

நம்பிக்கையில்லாமல் பின் வாங்கி வாழ்நேரிட்டால் ஆண்டவர் நம்மை மீண்டும் அழைத்து தம்முடன் உறவை புதுப்பித்து கொள்வார். இறை மக்களாகிய நாம் "தம் நாவினால் புறங்கூறாமல், தம் தோழருக்கு தீங்கிழையாமல், தம் அடுத்தவரைப் பழித்துரையாமல் (திரு.பா. 15:3) பிறரோடு நல்லுறவுடன் வாழ அர்ப்பணிப்போம்.

விருந்தோம்பலில் தான் ஒருவனுடைய உண்மையான குணம் வெளிப்படுகிறது. இக்குணம் கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ விரும்பு இறைமக்களில் இருக்கவேண்டியதாகும். ஆகவே எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் "அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள், இவ்வாறு விரும்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமல் வானதூதர்களை மகிழ்ச்சிபடுத்தியதுண்டு" (எபி. 13:2) என கோடிட்டுக்காட்டுகிறார். இறைமக்களாகிய நாம் கிறிஸ்துவின் விருந்தோம்பலின் சாரத்தை புரிந்துகொண்டு, அது அன்பு, மன்னிப்பு, உறவுகளை குணப்படுத்தல் போன்ற நறுமணங்களால் நனைந்திருந்தது போல நம் வாழ்வு அமைந்திட முயற்சிப்பது நலமாயிருக்கும். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் அழைப்பு வழியாக மனித தன்மை மாறி உன்னதரின் உள்ளன்பை அறிந்து, உணர்வடைந்து, உள்ளம் புத்துயிர் பெற்று, உறவுடன் வாழ நம்மை அர்ப்பணிக்காமல் போனால், இயேசுவின் விருந்தோம்பல் நிகழ்வு இன்னும் ஓர் வரலாற்று கதையாகத்தான் இருக்கும்.

அருள்திரு. G.S. **அஸ்வின் ஜெய்சிங்**


| 𝄞 | | | |
|---|---|---|---|
| | ஞா. 11 | ஞா. 439 | |
| | கீர். 133 | கீர். 309 | |

**25-04-2023** ரிங்கல்தௌபே - வேதமாணிக்கம் நாள்

# நற்செய்தியை அறிவிப்பவரின் பாதங்கள்!

எசா. 52 : 1-8 ரோமர் : 1 : 16, 17

லூக். 10 : 1-12



''நற்செய்தியை அறிவிக்கவும் . . . வருவோரின்பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன!'' (எசா. 52 : 7)

இவ்வுலகில் செய்திகள் பலவுண்டு. அவற்றிலும், நற்செய்தி துர்ச்செய்தி என இருவகைச் செய்திகள் உள்ளன! துர்ச்செய்திகளால் இவ் உருண்டை உலகு உருக்குலைந்து போகின்ற அவலக்காட்சிகள் நடைபெற்றிடக் கண்டிடலாம். இதனூடே நற்செய்தியால் உலகில் உருப்படும் நற்கிரியைகள் நடைபெற்றிடக் கண்டிடலாம்!

இறைவாக்கினர் ஏசாயா கூறிச்சென்ற நற்செய்தியாளர் இயேசுக்கிறிஸ்துவைக் குறிப்பதாகக் கண்டிடலாம்! இவ்வுலகில் அரசியல் ஆதிக்கங்களும், அவலங்களும் அடியெடுத்துச் சென்றிடும் காலகட்டத்தில்; உலகில் சமாதானம் நலிந்தன! சஞ்சலமும் மலிந்தன! "கடவுளே உலகில் கடந்து வந்தாலொழிய இவ்வுலகம் உருப்படாது" என மக்களினம் அஞ்சி... அதற்கெனக் கடவுளைக் கெஞ்சி மன்றாடியிருக்கும் பொழுதினில் தான்... ஏசாயா இறைவாக்கினரை.... இறையவர் இவ்வுலகில் அனுப்பி இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறைகூவல் விடுக்கிறார். இச்செய்தி பாலைநிலத்தில் பாய்ந்தோடும் நீரோடை போல..... வறண்டு போன மக்களுக்கு நற்செய்தியாக அமைந்திட்டமை அற்புதமானதெனக் கொள்ளலாம்! மூவகைத் தலையங்களின் கீழ் அறிந்திடல் தனிச் சிறப்புடைமையாகும்.

### 1. நற்காரியங்கள்!

"சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை" ஏசாயா 52 : 7

நற்காரியங்கள் நடக்கவேண்டும் என்றே கடவுள் உலகைப் படைத்திட்டார்! உலகில்... வெறுமையும், இருளும் உறைந்து கிடந்தன.... இவையெல்லாம் மாறிட, ஒளியையும், உலகில் உள்ளனவை அனைத்தையும் படைக்கிறார்! மனிதனுக்கேற்ற மனைவி.... இவையெல்லாம் நம் கடவுள் அருளிய நற்காரியங்கள்!

மேற்கு ஜெர்மானிய அருட்தொண்டர் அருள்திரு. உல்லியம் தொபியாஸ் றிங்கல் தௌபே ஆயர் அவர்கள் இன்று.... நம்மால் அழைக்கப்படும் "தென் திருவிதாங்கூரின் அப்போஸ்தலர்" என்பவர் 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி மைலாடி வந்திட்டார். அவரை மகராசன் வேதமாணிக்கம் மிகவும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்!

மகாராசர் வேதமாணிக்கம் என்பவர் திருவிதாங்கூரிலுள்ள நாஞ்சில் நாட்டைச் சார்ந்தவர்! வலங்கை மாந்தார் என்னும் பிரபல ஜோசியரின் வம்சத்தில் தோன்றியவர்! இவரது முன்னோர் முதலில் தஞ்சாவூரிலிருந்து திருநெல்வேலிக்கும் பின்னர் அங்கிருந்து 18-ம் நூற்றாண்டில் நாஞ்சில் நாட்டிலுள்ள மைலாடிக்கும் வந்து குடியேறினர்! இவரது குடும்பத்தார் ஜோதிடம், வைத்தியம், இலக்கியம் முதலியவற்றில் பாண்டித்தியம் பெற்றவர்களாய் விளங்கினர். சிவ பக்தனாகிய மகாராசன், தம் சகோதரன் புதல்வராகிய சிவகுருநாதனையும் அழைத்துக்கொண்டு, பண்டாரவேடம் பூண்டு சிதம்பரம் சென்றார்! அமைதியிழந்த அவர் அங்கே கல்தூண் ஒன்றிலே சாய்ந்தவாறே தூங்கிவிட்டார்! அங்கே ஓர் தரிசனம் கண்டார். தரிசனத்தில் தோன்றிய கண்ணியம் மிகுந்த ஒருவர் பிரம்பு ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு.... அவரை எச்சரித்து... உன் குற்றத்தை மன்னிக்க மனதாயிருக்கிறேன்! உடனே திரும்பிப் போ! நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் எனக் கூறி பிரம்பால் அடியொன்றைக் கொடுத்தார். திடுக்கிட்டு விழித்தெழுந்தார் வேதமாணிக்கம் தேசிகர் அவர்கள்!

இந்த நற்காரியம்..... தமஸ்குவுக்குப் போன வழியில் சவுலைச் சந்தித்த இயேசு பிரான் மகாராசன் வேதமாணிக்கத்தையும் சந்தித்தார்!

தஞ்சைக்கு வந்தவர் தம் உறவினர்களுடன் தேவாலயத்திற்குச் சென்று ஜே.ஸி. கோலப் ஐயரின் செய்தியைக் கேட்டு, திருமுழுக்குப் பெற்றனர். அன்றே மகாராசன் என்ற பெயரை மாற்றி வேதமாணிக்கம் என்றும், சிவகுருநாதன் என்னும் பெயரை மாற்றி மாசிலாமணி என்னும் பெயர் மாற்றமுடன் ஓராண்டுக்குப்பின் இருவரும் மைலாடிக்கு வருகை தந்திட்டனர்! அது தொடர்ந்து தனது ஆஸ்தியில் பெரும் பகுதியை வெறும் 14 ரூபாய்க்குக் கிரய பத்திரம் செய்து தந்துள்ளார்.

இப்பூமியில் தான் ரிங்கல் தௌபே ஐயர் அவர்கள் பஞ்சத்தால் வாடிய மக்களுக்குப் போஜனம் கொடுத்து குடி தண்ணீரின்றி பல கல் தொலைசென்ற மக்களுக்குத் தாகம் தணித்திட கிணறு ஒன்றை வெட்டி ஊர்கூட்டி நீர் ஊட்டி சாதனை படைத்திட்டார்! அக்கிணறு கல்வெட்டுகளோடு இன்றும் மைலாடி ஆலய வளாகத்தில் உள்ளமை அருட்பணியின் நற்காரிய சின்னம் ஆகும்!

அன்றியும், வயல்கள், குளங்கள் மைலாடி கல்லுக்கு மவுசு என்பதற்கு அடிகோலியதில் நல்ல பங்கு அருட்பணியர் அவர்களுக்கும் உள்ளன !

பசியுற்றோருக்கு உணவும், வேலையற்றோருக்குத் திராட்சைத் தோட்டத்தில் பணியமர்த்தும் செயல் சார்ந்த செய்தியும், அருட்பணிக்கான ஆட்களை ஆயத்தப்படுத்தியும், பிணியாளர்களுக்குக் குணமும் கொடுத்திட்ட இயேசு பரனின் நற்காரியங்களின் பிரதிபலிப்பு எனலாம் ! ஒருமுறை முடமான குழந்தையை றிங்கல் தௌபே ஐயரிடம் கொண்டு வந்தனர் ! குழந்தையைத் தம் கையில் வாங்கி ஜெபித்து தரையில் விட்டார் ! குழந்தை குதித்து ஓடி குணம் பெற்ற காட்சி ! சாட்சி ! மாட்சி ! லூக்கா 10 : 9-ன்படி இன்றும் மைலாடித் திருச்சபையில் இயேசு கிறிஸ்துவின் நற்காரிய நிகழ்வுகள் அருட்பணிகள் வாயிலாய் நடைபெற்றிடக் காண்பது வரலாற்றுச் சிறப்பு !

**2. நற்சாட்சிகள் !!**

"நற்செய்தியாய் அறிவித்து" - (ஏசா. 52 : 7)

நற்பரன் இயேசு நற்காரியங்களைப் புரிவது மட்டுமன்று, நற்செய்தியைக் கூறித் திரிவதும் தன் கடமையாகக் கொண்டார் !

சிறையில் சித்திரவதைப்படும் முனிவர் யோவான் தம் சீடர்கள் இருவரை இயேசுவிடம் அனுப்பி வினவுகின்றார். இயேசு அவர்களுக்குப் பதிலளித்த போது நற்செய்தியில் வரும் நோக்கங்கள், அது சார்ந்திட்ட இறையியல் தாக்கங்கள் எவையெனப் புகல்கின்றார்.... தரித்திரருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது ! லூக்கா 7 : 22 b படித்திடக் கண்டிடலாம்.

அருள்நாதர் பிறந்திட்ட போதும் வானகத்தூதர் காபிரியேல் வந்து வயல்வெளி மேய்ப்பர்களுக்கு அறிவித்தது "அஞ்சாதிருங்கள் அனைத்து மாந்தர்க்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்பதாகும். லூக்கா 2 : 10-ல் கண்டிடும் நற்செய்தி அறிவிக்கும் அருட்பணி விண்ணுலகுத் தூதுவர்களின் பணியெனக் கண்டிடலாம்.

ஓய்வுநாளில், நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில், சென்றிட்ட இயேசு, படித்திட்ட ஏசாயாவின் நூலின் தாக்கம் "கர்த்தருடைய ஆவியார் என் மேலிருக்கிறார் தரித்திரருக்கு நற்செய்தியை அறிவிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்" லூக். 4 : 18-ல் கண்டிலாம்.

இத்தகைய நற்செய்தி பிரதிபலிப்பின் பிரயோஜனம் எண்ணி றிங்கல் தௌபே ஐயர் அவர்கள் வேதமாணிக்கம் தேசிகருக்கும்

அருட்பொழிவு கொடுத்துக் குமரி மாவட்டத்தில் நற்செய்தி கேட்டோர் மனம் திரும்பி திருமுழுக்கேற்று திருப்பணிக்கும் தங்களை அர்ப்பணித்தனர். 1812-ல் மைலாடியில் நற்செய்தி வாயிலாய் மனமாற்றமுற்றோர் 300 பேருக்குத் திருமுழுக்காட்டினார். இவ்வேளைதனில், உதயகிரிக்கோட்டையில் இடையே தங்கியிருந்து அம்மாண்டிவிளை அனந்தநாடார் குடி, பேயன்குழி, மூலச்சல், மத்திகோடு எனும் கிராமங்களுக்குச் சென்று, நற்செய்திப் பணியாற்றியிருக்கிறார். கிறிஸ்து இயேசுவின் நற்செய்தி காட்டுத்தீ போல் நாட்டில் பல பாகங்களிலும் பரந்தது. அதன் விளைவாக குமரி மண்ணில் மைலாடி, பிச்சைக்குடியிருப்பு, தாமரைக்குளம், புத்தளம், ஆத்திக்காடு, கோவில்விளை, ஈத்தாமொழி என்னும் ஏழு கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டு ஆத்துமாக்கள் கூட்டப்பட்டு ஆராதனைகள் ஆரம்பமாயின.

நற்செய்தியால் விளைந்த பலன்கள் கல்விக்கூடங்கள் கட்டப்பட்டு நற்செய்தியாளர்கள், நல்லாசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். குமரி மாவட்டத்திலேயே முதன் முதலாய் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடம் ரிங்கல்தௌபே பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்விக்கூடம் வரலாற்றுச் சிறப்புடன் இன்றும் மேல்நிலைப்பள்ளியாய் இனிதெனச் செயல்பட்டு வருவது நற்செய்தியின் சின்னமேயாம்!

இன்று அவர் தம் நற்செய்தியின் பயனாய், குமரிப் பேராயம், தென் கேரளப் பேராயம், கொல்லம்-கொட்டாரக்கரை பேராயம் உதயமாயின என்பவை திருச்சபை வரலாற்று உண்மைகள்.

தொடக்கக்காலத் திருச்சபைக்குப் பவுலார் “நற்செய்தியை அறிவிப்பது என் கடன்” “நற்செய்தியை யான் அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ” என கடிதம் எழுதலானார். இத்தகையச் செயல்பாட்டால் வந்திட்ட பயன்பாட்டால் தான் நாதனின் நற்செய்திப்பணி, நானிலமெங்கும் தொடர்வது எத்துணை உண்மை.

**3. நற்பாதங்கள் :** ஏசா. 52 : 7c

“நற்பணியாளரின் பாதங்கள் மலைகளின் மேல் எத்துணை அழகாயிருக்கிறது”

யூதா நாடு மலைநாடு, மரம் செடி கொடிகள் அடர்ந்த நாடு பகைவர்களின் சேனைகள் படையெடுத்து வரும்போது போர்க்காலச் செய்திகளைக் கூறி அறிவித்திட, ஜாமக்காரர்களை வைத்திருப்பர் அவர்கள் இறைமக்களுக்கு அமைதிச் செய்தியினை உரத்த குரலில் கூவிக்கூவித் தாவித்தாவி மலைகளின் மேல் அறிவிப்பார்கள்!

இஸ்ரயேலருக்குக் கலக்கம், கவலை, கண்ணீர், கண்ணிகள் மாறிடும் நற்செய்தியை, நல்குகின்ற சேனைகளின் கர்த்தர் வெற்றிச் செய்தியை மலைகளின் மேல் அறிவிப்பார். அவருடைய பாதங்கள் திருமறையில் தெள்ளத் தெளிவாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். இத்தகைய சமாதானத்தை அருளும், சமாதானப்பிரபு இயேசுவின் நற்பாதங்களைப் பற்றிக்கொண்டு மரியாள் மகதலை கற்பரணிப் பரிமளத் தைலத்தைப் பூசினாள். இந்த நற்பரனின் நற்பாதங்கள் மலைகளின் மேல் நடந்து திரிந்து நற்பணி புரிந்தமையும், பசித்தோர் பல்லாயிரங்கட்டுப் புசித்திட போஜனம் கொடுத்ததும் அல்லாமல் ஒலிவ மலையில்பாடல் ஒலியுடன் நடந்து சென்றமை சிறப்பாகும். கல்வாரி மலையின் சிகரத்தில் கால்பதித்துச் சென்று சிலுவை மேல் நின்று பாதங்களில் ஆணி கடாவபட்டமையும் கண்டிடாத கண்கள் தான் உண்டோ எனப் பாடுகின்றார் பக்தன்.

வேலுத்தம்பி தளவாய், வேதமாணிக்கத்தையும் ரிங்கல் தௌபே அருட்தொண்டரையும் கொன்றிட கங்கணம் கட்டிப் படைகளையும் அனுப்பினபோது வேதமாணிக்கமும், ரிங்கல் தௌபேயுடன் மைலாடி கிறிஸ்தவர்களும் மிக ஆபத்தான நிலையிலிருந்தனர். இவர்கள் தப்பியோடி மருந்துவாழ் மலையில், போர் முடியும் வரை மலையில் தானே பாதங்கள் பதித்து மறைந்திருந்தனர். ரிங்கல் தௌபே ஐயரின் பாதங்கள் பாளயங்கோட்டைக்கு நடந்தன! 1809 பெப்ருவரி 10-ல் நாகர்கோவிலையடுத்திட்ட கோட்டாற்றிலும் பழையாற்றின் கரையான ஒழுங்கினசேரியில், நடந்த யுத்தத்தில் நமது படைகளுக்கு கர்னல் எம். லியோட் என்ற பிரிட்டீஷ் தளபதி தலைமை தாங்கியுள்ளார். வேலுதம்பி தளவாய் தோற்றுப் போனமையால் , அவர் தம் பட்டாளம் திருவனந்தபுரத்துக்குத் தப்பி ஓடின. நிறைவாக வேலுத்தம்பி கொட்டாரக்கரையை அடுத்த மண்ணடியிலுள்ள கோவிலுக்குள் (பகவதியம்மன் கோவில்) பதுங்கியிருந்த இடத்தில் இனித்தப்பிட இயலாது என எண்ணி தனது பட்டயத்தை நாட்டி அதன் மேல் விழுந்து தற்கொலை செய்ய முயன்றும், மாளாத நிலையில் அவர்தம் சகோதரன் பத்மனாபன் தம்பி, தலையை வெட்டி வேலுதம்பியின் உயிரைப் போக்கினான். இந்நிகழ்வு நமது திருமறையில் 1 சாமு. 31 : 4b “அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்,” 2 சாமு 31 : 9. பெலிஸ்தர் “. . . அவன் தலையை வெட்டி, அவன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களின் கோவில்களிலும் ஜனங்களுக்குள்ளும், செய்திப் பிரசித்தப்படுத்தினார்” (மத். 26 : 52)

நமது இயேசு நவின்ற நல்வாக்கு “பட்டயம் எடுப்பவன் பட்டயத்தால் மடிவான்! பேதுருவிடம் சொன்ன வாக்கு காலங்கள்

கடந்தாலும் வீணாய்ப் போகவில்லை! காரணம் கர்த்தர் உங்களுக்காய் யுத்தம் செய்வார்! நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" நமது போராட்டக்காலங்களில் சமாதானமின்றியிருந்த நம்மண்டை நமது இயேசுவின் பாதங்கள் நடந்து வந்து சஞ்சலத்தைப் போக்கின! அவர்தம் நற்பாதங்களை எவர்தான் மறந்திடக்கூடும்?

Dr. சாமர்வேல் மேலைநாட்டு அருட்பணியர்! அவர் இந்தியாவின் வடஎல்லையில் பனிப்படலங்களுடன் உயர்ந்து நிற்கும் இமயமலையின் மேல் உச்சியிலும் எவரெஸ்டில் பாதங்களைப் பதித்து சாதனை புரிந்தார்! இயேசு மீட்பரின் பாதங்கள் கொல்கொதா மலையின் கபாலத்தலச் சிகரத்தில் சிலுவையுடன் பாதங்கள் பதித்திட்ட காட்சிகள் மலையின் மேல் எத்துணை அழகாய் உள்ளன? இதைத்தான் தீர்க்கன் ஏசாயா இயேசுவின் நற்பாதங்களை ஒப்பிட்டு அவர்தம் பாதைகளில் பாதங்கள் பதித்திட்ட அருட்பணியர்களின் பாதங்களைப் பார்த்திட அழகு! அழகு! எத்துணை அழகு!!!

இமய மலைமேல் பாதங்களைப் பதித்த Dr. சாமர்வேலின் பாதங்கள் நெய்யூரில் நமது மருத்துவ மிஷன் மேல் பட்டது. இன்று மருத்துவக் கல்லூரிக்காய் தயாராகும் நெய்யூர் மருத்துவ மிஷனுடன், கேரளாவின் தென்கோடியில் அமைந்திருக்கும் C.S.I. காரக்கோணம் மருத்துவக் கல்லூரியும், அருட்பணியர் டாக்டர் சமார்வேல் அவர்களின் பாதங்கள் பட்ட இடங்கள் தான் இந்நிகழ்வுகளுக்கு முன்னரே மலைகள் மேல் நற்பாதங்களைப் பதித்திட்ட இயேசு என்னும் நல்ல சமாரியரின் காயங்கள் கட்டும் அருட்பணிப்பாதங்கள் எத்துணை அழகாயிருக்கின்றன?

கீர்த்தனை 296-ல் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் தம் பாடல்களின் வரிகள் எத்துணை அழகாயிருக்கின்றன!

நெஞ்சமே நீ கலங்காதே சீயோன்மலையின்
இரட்சகனை மறவாதே
நான் என் செய்வேன் என்று
நெஞ்சமே நீ கலங்காதே
வஞ்சர் பகை செய்தாலும் வாராவினை பெய்தாலும்
-நெஞ்சமே நீ கலங்காதே

அருள்திரு. D.S. **செல்வராஜ்**

| 𝄞 | ஞா. | 12 | ஞா. | 350 |
|---|---|---|---|---|
| | கீர். | 411 | கீர். | 409 |

(இந்த அருளுரை குறிப்பிட்ட நாளில் அல்லது அந்த வார தொழுகை ஒன்றில் பயன்படுத்துவது நல்லது)

**30-04-2023** உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

# அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு

## Communion with the Risen Christ in Dailylife

| | |
|---|---|
| வி.ப. 40 : 34-38 | பிலி. 3 : 8-16 |
| திபா. 23 | லூக். 24 : 13-35 |



"இப்படி அவர்கள் உரையாடிக்கொண்டும், வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கிவந்து அவர்களோடு நடந்து சென்றார்" (லூக். 24 : 15)

மனித வாழ்வு என்பது ஒரு பயணம். ஓர் இடம் துவங்கி, மற்றொரு இடம் நோக்கி நம் பயணம் தொடர்கிறது. நம் அனுதின வாழ்வின் பயணத்தில் உயிர்த்த கிறிஸ்துவும் நம்முடன் பயணிக்கிறார். அவருடன் நாம் கூட்டுறவுடன் இணைந்து பயணிக்கிறோமா? என்பது முக்கியமானது.

இன்றைய தியான பகுதிகள் அனைத்தும், மனிதனின் அன்றாட வாழ்வில் இறைவனும் பயணிக்கிறார் என்றும், அந்த இறைவனுடன் நாம் கூட்டுறவு கொண்டு வாழவேண்டும் என்பதையும் கூறுகின்றது. வி.ப. 40 : 36, 37-ல் ஆண்டவரின் மாட்சி இஸ்ரவேல் மக்களுடன் பயணித்தது அல்லது இறைவன் இஸ்ரவேல் மக்களுடன் பயணித்தார் என்பது வெளிப்படுகிறது. மேலும் மக்களும் இறைவனுடன் கூட்டுறவு கொண்டு பயணித்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. பிலி. 3 : 8-16-லும் பவுலின் தொடர் ஓட்டத்தையும், உடனிருக்கும் இறைவனைப் பற்றியும் காணலாம். பவுலும் இயேசுவுடன் கூட்டுறவு கொண்டு அன்றாட வாழ்வைத் தொடர்ந்தார். லூக்கா 24 : 13-33-லும் எம்மாவு சென்ற இரு சீடர்களின் பயணமும், அவர்களுடன் சென்ற உயிர்த்த கிறிஸ்துவைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களும் உயிர்த்த இயேசுவுடன் கூட்டுறவு கொண்டு வாழ்ந்தனர் என அறிய முடிகிறது. லூக். 24 : 13-33-ல் கூறப்பட்டுள்ள "எம்மாவு பயணம்" மூலம் இன்றைய தியானப் பொருளில் சில உண்மைகளைச் சிந்திப்போம்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளன்று, சீடர்களில் 2 பேர் எருசலேமிலிருந்து 7 அல்லது 8 மைல் (சுமார் 11 கிலோமீட்டர்) தூரமுள்ள எம்மாவு என்னும் கிராமத்துக்கு நடைபயணம்

மேற்கொண்டனர். அந்தப் பயணம்-புனிதப் பயணம் அல்ல; பூரிப்பின் பயணமும் அல்ல. மாறாக, புலம்பலின் பயணம்; பாதுகாப்புத் தேடித் தப்பிப் பிழைத்து ஓடும் பயணம்; நம்பின நம்பிக்கை நொறுங்கி போய் வாழ வழி தெரியாமல் சென்ற பயணம்; துக்கத்தின் பயணம்; இனி வாழ்வு உண்டா? இனி வாழமுடியுமா? என்ற கேள்விகளுடன் அமைந்த பயணம். ஆனால் அப்படிப்பட்ட பயணத்தில் உயிர்த்த கிறிஸ்து சீடர்களுடன் நெருங்கி வந்து, சேர்ந்து நடந்து போனார். உயிர்த்த இயேசு தொலைவில் போகவில்லை கூடவே பயணித்தார். இது போன்றே, நம் அன்றாட வாழ்விலும் அழுகை, கண்ணீர், நம்பிக்கை நொறுங்கிப் போன நிலை, இனி வாழ்வு உண்டா? வாழ முடியுமா? என்ற நிலை காணப்படுகிறது. ஆனால் நம்முடன் உயிர்த்த இயேசு பயணிக்கிறார் என்பதைப் புரிந்து, அவருடன் கூட்டுறவு கொண்டு வாழவேண்டும். அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு கொள்வது எப்படி? என்பதை சிந்திப்போம்.

**1. உயிர்த்த கிறிஸ்துவுடன் உடன் பயணியாகப் பயணித்தல்** (லூக். 24 : 17)

உயிர்த்த கிறிஸ்து எம்மாவு நோக்கி பயணித்த சீடர்களைப் பார்த்து “நீங்கள் ஏன் துக்கத்துடன், முக வாட்டத்துடன் இருக்கிறீர்கள், உங்களுக்குள் என்ன பேசுகிறீர்கள்?” போன்ற கேள்விகளை எழுப்பினார். தங்களோடு பயணிக்கின்ற உடன் பயணி இயேசு என்பதை அறியாதபடி அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. நமது அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு கொள்ள அவருடன் பயணிக்கின்றவர்களாக மாறவேண்டும். லூக். 19 : 6-ல் சக்கேயு என்ற வரி தண்டுவோரின் தலைவர், செல்வந்தர் தீமையான வாழ்வில் இருக்க வேண்டியவர் அல்ல, துன்பத்தை (சமூகத்தால் பாவி எனக் கருதப்படுதல்) அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியவர் அல்ல. ஆனால் அவர் ஆண்டவர் இயேசு தன்னுடன் உடன் பயணியாக வரவேண்டும் வாழ்வு பெறவேண்டும் என விரும்பினார். இயேசுவுடன் இணைந்து உடன் பயணியாக மாறிட இழக்க வேண்டியதை இழந்து, அவரைப் பின்தொடர்ந்தார். இன்று நாமும் பாவத்தின் உடன் பயணியாக அல்ல; பிசாசின் உடன் பயணியாக அல்ல; தீயவர்களின் உடன் பயணியாக அல்ல; அன்றாட வாழ்வில் இயேசுவுடன் உடன் பயணியாக பயணித்து, அவரோடு கூட்டுறவு கொண்டு, ஆன்மிக வாழ்வில் முன்னேறிச்செல்வோம்.

## 2. உயிர்த்த கிறிஸ்துவுடன் உடன் பயணியாக உரையாடுதல் (லூக். 24 : 17

எம்மாவு நோக்கி துக்கத்தோடு பயணித்த சீடர்களுடன் உயிர்த்த கிறிஸ்து உரையாடினார். அவ்வுரையாடலில் இயேசுவின் சீடர்களிடையே மனித உயிர்த்தெழுதல் குறித்த அறியாமை அகன்றது. இயேசு எங்களை ரோம அடக்குமுறை ஆளுகையிலிருந்து மீட்டு இரட்சிப்பார் என எதிர்பார்த்த நிலையில் அவரைச் சிலுவையில் அறைந்து மரண ஆக்கினைக்குட்படுத்தினார்கள். சில பெண்கள் மூன்றாம் நாள் கல்லறைக்குச் சென்றபோது சரீரத்தைக் காணாது, அவர் உயிரோடிருக்கிறார் என்ற சொன்ன தேவதூதரை தரிசித்ததாக சொன்னதை கேட்டு எங்களில்சிலர் சென்றபோது அவரைக் காணவில்லை எனக் கூறினார்.

தம்மோடு உரையாடின சீடர்களின் அறியாமையினை அறிந்த உயிர்த்த கிறிஸ்து தம்மைக் குறித்த இறைவாக்கினரது இறைவாக்குகளைக் கூறி, தானே உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்பதை தனது உரையாடல் மூலம் உறுதிப்படுத்தினார் (லூக்கா 24 : 27). எம்மாவு சீடர்களின் உயிர்த்த கிறிஸ்துவுடனான உரையாடல் அவரோடிருந்த கூட்டுறவு வாழ்வினை உறுதியாக்கியது. ஆகவே அவரை தங்களோடு தங்கியிருக்க கேட்டுக் கொண்டனர் (லூக்கா 24 : 24).

நமது அனுதின வாழ்வில், நாம் உயிர்த்த ஆண்டவருடன் அனுதினமும் உரையாடாமல் இருப்போமானால் நாம் வாழ்வது உண்மையான கிறிஸ்தவ வாழ்வல்ல. பிலி. 4 ; 6, மத். 6:6 இறைவனிடம் அனுதினமும் உரையாட வேண்டுமென்பதைக் கூறுகின்றது. நம் பிரச்சனைகள் மாற, நாம் அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் உரையாடவேண்டும். அது நமக்கும் பிறருக்கும் பலருக்கும் நன்மை தரும். அதுவே உயிர்த்த கிறிஸ்துவுடன் நமக்குள்ள கூட்டுறவை வெளிப்படுத்தும். “நாம் இறைவனிடம் உரையாடவில்லையெனில், யார் நமக்காய்ப் பிறருக்காய் பேசுவது?” சிந்திப்போம்.

## 3. உயிர்த்த கிறிஸ்துவுடன் உடன் பயணியாக உடன்படிக்கை செய்தல்

உயிர்த்த இயேசுவுடன் உரையாடிப் பயணித்த சீடர்கள், மாலை நேரத்தில் தங்களோடு தங்கியிருக்கக் கேட்டபோது அவர் இணங்கி அவர்களோடு தங்கினார் (லூக். 24 : 29). மாலை நேரத்தில் குடும்பமாக

இணைந்து இராவிருந்து உண்ணும் நிலையில் உயிர்த்த கிறிஸ்து சீடர்களோடு பந்தியிருந்தார். கூட்டுறவை வெளிப்படுத்தும் நிலையில் தனது இறுதி இராவிருந்தில் அப்பத்தைப் பிட்டு சீடர்களுக்கு பங்கிட்டதுபோல இங்கேயும் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார் (லூக். 24 : 30). உயிர்த்த கிறிஸ்து சீடர்களோடு ஏற்படுத்திய உடன்படிக்கை விருந்து மறைக்கப்பட்டிருந்த அவர்களது கண்களைத் திறந்தது. சீடர்கள் தங்களோடுப் பயணித்து உரையாடி, உடன்படிக்கை செய்து உணவு உட்கொண்டது உயிர்த்த கிறிஸ்து என்பதை அறிந்தார்கள்.

இன்று நமது வாழ்வு சூழலில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உடனிருப்பை உணர்ந்திடாமல் துன்ப நேரங்களில் துவண்டு போகிறோம். சிலுவை வழியாக உடன்படிக்கை உறவில் கிறிஸ்துவோடு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள நாம் வாழ்வில் சந்திக்கும் எதிர்மறைச் சூழல்களில் சோர்ந்து போகாதபடி உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்னோடு உரையாடி, உடன் பயணித்து, உடன்படிக்கை செய்து அமைதி நிறைவாழ்வு வழங்குகிறார் என்ற நம்பிக்கையோடு பயணத்தினைத் தொடர்வோம்.

நமது அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடனான கூட்டுறவு வாழ்வில் உடன் பயணிப்போம். உடன் பயணியாக உரையாடி தெளிவு பெறுவோம். கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்து, நல்லுறவில் நிலைத்திருப்போம்.

அருள்திரு. P. **பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ்**


| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 36 | ஞா. | 76 |
| | கீர். | 16 | கீர். | 307 |

**01-05-2023** உழைப்பாளர் தினம்

# உழைப்பும் வாழ்வும்

தொ.நூ. 1 : 26 - 2 : 3 2 தெச. 3 : 6-15

தி.பா. 15 யோவா. 5 : 1-10



எவரிடமும் இலவசமாக நாங்கள் உணவருந்தவில்லை. மாறாக, உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, இராப்பகலாய் பாடுபட்டு உழைத்தோம். (2 தெச. 3 : 8)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் பலரும் நாளொன்றிற்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டனர். தொழிலாளர்களின் உழைப்பு அதிகமாகவே சுரண்டப்பட்டது. இதனால் அவர்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படித் தோன்றியதுதான் தொழிலாளர் தினமாகும். இது உழைப்பதற்கு எதிரான தினமன்று மாறாக, பிறர் உழைப்பை மூலதனமாக்கி வாழ்வதைத் தவிர்த்து, அவரவர் தங்கள் உழைப்பால் உயரவேண்டும் என்பதை வலியுறுத்தும் தினமாகும்.

கடின உழைப்பே நம் வாழ்க்கையில் உயர்வதற்கு மிகவும் சிறந்த வழி. உழைப்பில்லாமல் ஒருவர் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பது வெறுமனே கனவு காண்பது போலாகும். சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்காமல் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக உழைப்பவர்களே வாழ்க்கையில் மிக உயர்ந்த இடத்தை அடைய முடியும். நம் கண் உறங்கிய பின்னும் இதயம் முதலான நம் உடல் உறுப்புகள் அனைத்தும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அதுபோல நாம் நம்முடைய வாழ்வில் உயர கடினமாக உழைக்க வேண்டும். எப்போதும் வேலை செய்ய தயாராக இருக்கும் மனநிலையில் உள்ள ஒரு மனிதனை வெற்றி தேடி வருகிறது. எந்த ஒரு பணியையும் மிகவும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செய்தால் வாழ்வில் உயர முடியும். இதற்குச் சிறந்த உதாரணம், மறைந்த தமது முன்னாள் குடியரசுத் தலைவர் Dr. A.P.J. அப்துல்கலாம் அவர்கள். இதனை “தம் அலுவலில் திறமை காட்டுகின்ற

ஒருவரைப் பார்; அவர் பாமர மனிதரிடையே இரார்; அரசு அவையில் இருப்பார்” (நீதிமொழிகள் 22 : 29) எனத் திருமறை உறுதிப்படுத்துகின்றது. ஆகவே உழைக்கும் மக்களுக்கு விவிலியம் தரும் மறுமொழி என்ன என்பதை நமக்குத் தரப்பட்டிருக்கும் விவிலிய பகுதிகளிலிருந்து சிந்திப்போம்.

### 1. உழைப்பிற்கு முன்மாதிரி காட்டின கடவுள் :

தொடக்க நூலில், கடவுள் ஆறுநாட்கள் வேலை செய்துவிட்டு, ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார் என்று படிக்கின்றோம் (தொ.நூ. 2 : 2). இங்குக் கடவுள் ஒரு கடின உழைப்பாளி என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். கடவுள் மனித சமூகத்திற்கு வகுத்தளித்த வாழ்வியல் முறைகளில் முதன்மையானது உழைத்து வாழவேண்டும் என்பதாகும் (தொ.நூ. 2 : 15). இன்றைக்கு மனிதர்களிடம் இருக்கும் மிகவும் தவறான கருத்துக்களில் ஒன்று உடல் உழைப்பு என்பது மிகவும் இழிவானது என்பதும் உழைக்காமல் எல்லார் மீதும் ஆதிக்கம் செலுத்துவதுதான் உயர்ந்தது என்பது மாகும். இத்தகைய எண்ணங்களை நம்முடைய வாழ்விலிருந்து நாம் அகற்ற வேண்டும்.

நேர்மையாக உழைப்பவரின் குடும்பம் ஆண்டவரிடம் ஆசி பெறுகின்றது. இதற்குச் சிறந்த உதாரணம் ரூத். அந்நிய நாட்டில் உழைத்து, தனது வாழ்வினைக் கட்ட முயன்ற போது, தக்க தருணத்தில் ஆண்டவரும் உதவினார். ரூத்தின் கடின உழைப்பு, அன்பு, மனஉறுதி அனைத்தும் அவருக்கு நன்மைகளைப் பெற்று தந்தது. நாமும் கடவுளுக்கு அஞ்சி நேர்மையாகவும், அர்ப்பணத்தோடும் உழைத்தால் நன்மைகளைப் பெற முடியும். உழைப்பிற்கு மதிப்பு கொடுத்து அனைவரையும் மதிப்புடனும், மாண்புடனும் நடத்தி நிறைவான வாழ்வினை உழைப்பால் பெற்று மகிழ்வுடன் வாழ்வோம்.

### 2. உழைத்து உண்ண வலியுறுத்தும் பவுல் :

உணவு வாழ்க்கைப் பயணத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். உணவு அருந்தாமல் நம்மால் நீண்ட நாள் உயிர்வாழ முடியாது. அடிப்படையான வாழ்வாதாரங்களில் ஒன்றாக உணவு கருதப்படுகின்றது. 2014-ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவையின் முதல் பட்ஜெட் அறிவிப்பிற்கு முன் ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் சி. ரங்கராஜன் தலைமையிலான திட்டக் கமிஷன் குழு வறுமைக்கோடு குறித்த அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் படி

இந்தியாவில் உள்ள ஏழைகளின் எண்ணிக்கை 36.3 கோடி ஆகும். இதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று உழைக்காமலேயே உணவு உண்ண மக்கள் விரும்புவதும் அதனால் ஏற்படும் உணவு பற்றாக்குறைவுமே.

தூய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய 2-ஆம் திருமுகத்தில், வாழ்வியல் முறைகளில் ஒன்றாக "உழைப்பதை, உழைத்து உண்பதை" குறிப்பிடுகின்றார். மேலும் அதை பின்பற்றாதவர்களை, விட்டு விலகி நில்லுங்கள் எனக் கூறுகிறார் (3 : 6). நாம் வாழும் இன்றையச் சூழலிலும், சிலர் தங்கள் உழைப்பால் உணவைப் பெறுகின்றவர்களாகவே இருக்கிறோம். நம் வழிமரபினரையும் உழைக்காமல் பிறர் உழைப்பில் உண்ணவே பழக்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே தூய பவுலின் வார்த்தை நம்மையும் எச்சரிப்பதாகவே அமைகின்றது. திருத்தூதுவர்கள் மக்களிடம் நற்செய்தியைக் கொண்டு வந்தபோது யாருக்கும் சுமையாய் இருக்கவில்லை. தங்களுடைய உழைப்பாலேயே தங்கள் தேவைகளைக் கவனித்துக்கொண்டார்கள். உழைத்து உண்ண வேண்டும் என்பதும் அவர்கள் நற்செய்தியில் உள்ளடங்கியதே. உழைத்து வாழாதவர் நற்செய்தியைப் பின்பற்றி வாழாதவரே ஆவர். உழைத்து உண்டு நாம் அனைவரும் நற்செய்திக்குச் சான்றுள்ளவர்களாய் வாழ தூய பவுல் வாயிலாக அழைக்கப்படுகின்றோம்.

உழைத்து வாழ்பவர்களை ஆண்டவரும் ஆசீர்வதிக்கிறார். நாமும் உழைத்து ஆசிபெற்று நம் உழைப்பில் உண்டு நிறைவோடும் மகிழ்வோடும் வாழ்வோம்.

### 3. முயற்சியை அங்கீகரிக்கும் கிறிஸ்து :

எருசலேமில், பெதஸ்தா என்ற குளமருகில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலமற்றிருந்த ஒரு மனிதரை இயேசு கண்டு நலம் பெற உதவுகின்றார். அவன் நலம் பெற்றதில் அவனுடைய பங்களிப்பு பெரிதாக இருக்கின்றது. இயேசு அம்மனிதரிடம் நலம்பெற விரும்புகிறீரா? என்று கேட்டபோது, அவர் தன்னுடைய இயலாமையை மட்டுமல்ல கூடவே தான் எடுக்கின்ற முயற்சியையும் வெளிப்படுத்துகிறார். "...நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்...." (5 : 7). "நான் போவதற்கு முன்" என்ற வாக்கியம் அவர் எடுக்கும் முயற்சியை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. இயேசு கிறிஸ்து அம்மனிதரின் முயற்சியை அங்கீகரித்து அதற்கு மதிப்பளிக்கின்றார்.

ஆகவே தான், அம்மனிதருடைய முயற்சியிலேயே அவர் நலம்பெறும்படி செய்கின்றார்.அம்மனிதரே தம் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கும்படி செய்தார் (5 : 9).

இன்று இயலாமையால் வீழ்பவர்களைவிட முயலாமையால் வாழ்வில் வீழ்பவர்களே அதிகம். எப்போதுமே, முயற்சி செய்பவர்களை இயேசு கிறிஸ்து அங்கீகரித்து, அவர்களோடு இணைந்து செயல்படுகின்றவராகவே இருக்கிறார். ஒருமுறை சீடர்கள் இரவு முழுவதும் வலை வீசியும் ஒன்றும் கிடைக்கவில்லை என்றபோதும், மீண்டும் முயற்சி செய்யும் மனதுடையவர்களாய் படகின் வலப்பக்கத்தில் வலையை வீசிய போது மீன்கள் மிகுதியாய் அகப்பட்டன (21 : 3-6) எப்போதும் முயற்சிகளை அங்கீகரிக்கும் கிறிஸ்து, நம்முடைய வாழ்விலும் நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியின் வழியாகவும் புதுமைகளைச் செய்பவராகவே இருக்கின்றார். ஆகவே விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும், கிறிஸ்துவின் அருளாலும் வாழ்வில் உயர்வு பெறுவோம்.

திரு. M. **பிரிஸ்டன் வினோ**

| | | |
|---|---|---|
| 𝄞 | கீர் 36 | ஞா. 467 |

**07-05-2023**


உயிர்ப்புக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி

## Believing in Christ : The Way

விப. 14 : 10-20 தி.ப. 16 : 19 - 34

திப. 116 யோ. 14 : 1 - 7



இயேசு அவரிடம், "வழியும் உண்மையும் வாழ்வும் நானே". என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. (யோ. 14 : 6)

ஒரு இடத்திற்குச் செல்ல பாதை வழி என்பது மிக முக்கியமானது ஆகும். புதிய இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அதற்கான பாதையைக் கண்டுபிடிக்க கூகுள் வரைபடத்தை (Google Map) நாடுவதுண்டு. ஆனால் இவ்வரைபடத்தின் உதவியால் சென்ற சிலர் தவறான இடத்திற்கும், சிலர் இடுக்கமான இடங்களில் சிக்கிக்கொண்ட நிகழ்வுகளும் அரங்கேறியதுண்டு. ஆகவே, இவ்வரைப்படத்திலிருந்து நம்பகமான செய்தி பெறமுடியாது என்பது உண்மை. சில இடங்களில் வழியைக்காட்ட வழிகாட்டிப்பலகைகள் வைக்கப்பட்டிருக்கும். குறும்புக்காரர்கள் வழிகாட்டிப்பலகைகளை வேறுபாதைகளில் திருப்பி வைத்து, புதிதாய் வருபவர்கள் வழி தவறிச் செல்வதற்கு வழி செய்வதுண்டு.

இயேசு கிறிஸ்து காட்டும் பாதை இவ்வழிகாட்டிகளுக்கெல்லாம் முற்றிலும் வேறுபட்டது. காரணம் அவர் வழியாகி வாழ்கிறார் எனத் திருமறை தெளிவுப்படுத்துகிறது. இன்றைய நற்செய்திப் பாடத்தில் இயேசுவின் சீடர்கள், நீர் எங்கு போகிறீர்? எவ்வழியாய் போகிறீர்? என்று இயேசுவிடம் புலம்பிய வேளை, நானே வழி... என்று உறுதிப்பட தெரிவிக்கிறார் இயேசு கிறிஸ்து. வழியாகிய இயேசு கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கை கொண்டு பயணிக்கும்போது, புதிய பாதை தென்படும் என்பது திண்ணம். இவ்வுண்மையை இன்றைய திருமறைப்பாடங்கள் சார்ந்து இவண் தியானிப்போம்.

**1. நம்பிக்கையிழந்தோருக்கு நம்பிக்கை** (வி.ப. 14 : 15)

இஸ்ரவேல் மக்களின் 430 ஆண்டு கால அடிமைத்தன வாழ்விலிருந்து மோசே வழியாகக் கடவுள் அவர்களை விடுதலையாக்கி

கானான் நாட்டிற்கு நேராக வழிநடத்தி வந்தார். பகல் வேளையில் சூரியனின் வெப்பக் கதிர்களைத் தம்மீது தாங்கி மேகத்தூணையும் இரவில் தம்மக்கள் வழி தவறிப் போகா வண்ணமும், கொடிய உயிரினங்களின் தாக்குதலிலிருந்து தப்புவிக்கவும் நெருப்புத்தூணோடும் தம் மக்களுடன் பயணித்தார். இச்சூழ்நிலையில், இஸ்ரயேலர் செங்கடலை எதிர்கொண்டனர். முன்னால் செங்கடலின் தண்ணீர் அவர்களை அச்சுறுத்தியது; பின்னால் பார்வோன் அரசரின் படைகள் துரத்தி வந்து கொண்டிருந்தனர். பயணிக்கமுடியாத பாதைகளைக் கண்டு பதறிய இஸ்ரயேலர், எகிப்திலே எங்களுக்குச் சவக்குழிகள் இல்லையென்றா இங்கே எங்களை இழுத்து வந்தீர்? என மோசேயிடம் கூக்குரலிட்டனர் (வி.ப. 14 : 11). இனி வாழ்வதற்குச் சாத்தியம் இல்லை என்று எண்ணிய மக்களுக்கு மோசே வழியாக புதிய பாதையைக் கடவுள் காட்டுகிறார். முன்னோக்கிச் செல்லும்படி மக்களிடம் சொல் (Go Forward) என மோசேயிடம் கூறினார் (வி.ப. 14 : 15). மோசே, கோலை உயர்த்திப் பிடித்துக் கடலில் நீட்ட கடலில் பாதை தென்பட்டது. அவர்கள் அந்தப் பாதை வழியாகப் பயணித்தனர்; அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்த தண்ணீர் அவர்களுக்குப் பாதுகாப்புதரும் மதிற்சுவராய் இருந்தது என்பது சிறப்பு (வி.ப. 14 : 22).

ஆபிரகாமின் பணிப்பெண்ணாகிய ஆகார், சாராயின் கொடுமையால் வழி தெரியாமல் நம்பிக்கையிழந்து தப்பி ஓடும்போது பாலைநிலத்தில் கடவுள் அவரைக் கண்டு புதிய பாதை காட்டினார். எனவே ஆகார் கடவுளைக் காண்கின்ற இறைவன் நீர் எனப் பெயரிட்டு அழைத்தார் (தொட. 16 : 13).

வாழ வழி தெரியாமல் தவித்த இறைவாக்கினர் ஒருவரின் மனைவி எலிசா இறைவாக்கினரைச் சந்தித்து உதவி கோரிய வேளை ஒரு புதிய பாதையைக் காட்டி மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிநடத்தினார் (2 அர. 4:1-7).

தூய பவுலார் கைதியாக உரோமைக்குக் கொண்டு செல்லப்படுகையில், புயல் காற்றால் மிகவும் வேதனைப்பட்டார்கள். “இனி தப்பிப் பிழைப்போம் எனும் எதிர்நோக்கே இல்லாமல் போய்விட்டது....” (திப. 27 : 20) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பதினான்காம் நாள் இரவு, ஒரு கரைப்பக்கம் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள் (திப. 27 : 27), நம்பிக்கையிழந்திருப்போருக்கு புதிய நம்பிக்கை எனும் பாதையினூடாய்ப் பயணிக்க கடவுள் துணை செய்கிறார்.

## 2. ஆற்றலிழந்தோருக்கு ஆற்றல் (திப. 16 : 26-28)

பிலிப்பி நகரில் தூய பவுலார் திருப்பணி செய்யும்போது, குறி சொல்லும் ஆவியைக் கொண்டிருந்த ஒருவர் விடுதலைபெற்றார். இதனால் அவரை அடிமையாய் வைத்திருந்தவர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. (திப. 16 : 19). எனவே பவுலாரையும், சீலாவையும் பிடித்து உட் சிறையில் அடைத்து அவர்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டி வைத்தனர். நள்ளிரவில் அவர்கள் இருவரும் கடவுளைப் புகழ்ந்துப் பாடவே, இவர்களது விலங்குகள் கழன்று விழுந்ததுடன் கதவுகளும் திறவுண்டன. சிறைக்காவலர் விழித்தெழுந்து கட்டுண்டவர்கள் தப்பியோடியிருப்பார்கள் என எண்ணி வாளை உருவி தற்கொலை செய்ய முயன்றார். உடனே பவுலார் நீர் உமக்குத் தீங்கு ஏதும் செய்து கொள்ளாதீர்; நாங்கள் அனைவரும் இங்கே தான் இருக்கிறோம் என்று முழக்கமிட்டார்கள். கட்டுகள் கழன்றிருந்தும், கதவுகள் திறந்திருந்தும் தப்பிச் செல்லாத அனுபவம் சிறைக்காவலருக்கு ஒரு புதுமையாகவே இருந்தது. இதன் விளைவாக அந்த இரவிலேயே சிறைக்காவலரும், அவரது வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர். (திப. 16:33) அசாதாரண வழியில் தப்பித்துச் செல்லாமல் அங்கேயே அமர்ந்திருந்ததால் சிறைக்காவலர் உண்மையான ஆற்றலாய் அதைப் பார்க்கிறார். அப்பாதையில் தாமும் பயணிக்கத் தம்மை அர்ப்பணித்தார் அவரது வீட்டார் அனைவரோடும் சேர்ந்து பேருவகை அடைந்தார் (திப. 16 : 34).

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து தப்பித்துவிடுவார் என எதிர்பார்த்திருந்தோருக்கு நடுவில், அவர் உரக்கக் கத்தி உயிர்துறந்தக் காட்சியைக் கண்ட நூற்றுவர் தலைவர் அதனாலே உண்மையான ஆற்றலாகப் பார்க்கிறார். எனவே, இம்மனிதர் உண்மையாகவே இறைமகன் என சான்றுரைத்தார் (மாற். 15 : 39).

ஆற்றலிழந்தது போன்று உலகிற்குத் தென்படும் வாழ்வுப் பயணங்களில் அசாதாரண வழிகளில் தப்பித்துச் செல்வதல்ல, கிறிஸ்துவில் கொண்டிருக்கும் நம்பிக்கையில் உறுதியாய் பயணிப்பதே ஆற்றல் (புதிய பாதை) என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். இப்பாதையே பலரை ஆண்டவருக்குள் வழிநடத்தும் (உண்மையான சான்று வாழ்வு) என்பது நோக்கற்பாலது. இந்த பின்னணியத்தில் சாத்ராக், மேசாக், ஆபேத்நெகோவின் நம்பிக்கை அறிக்கையையும் (தானி. 3 : 16-18), ஆபகூக்கு இறைவாக்கினரின் கூற்றினையும் (ஆபகூக்

3 : 17, 18) தூய பவுலாரின் நம்பிக்கையையும் (உரோ. 8 : 35-39) நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

**3. பாடடைந்தோரின் பாதை** (யோவா. 14 : 6)

இயேசுகிறிஸ்து "நானே வழி" என்று கூறும் கூற்றினைப் பின்வருமாறு ஒரு அறிஞர் விளக்கமுற்படுகிறார். குறிப்பிட்ட ஓர் இடத்திற்குச் செல்வதற்காக உதவி கேட்ட எனக்கு எவரும் உதவி செய்யாத போதும், ஒருவர் எனக்காக உதவிட வந்தார். அவருடன் நானும் பயணமானேன். சில கரடுமுரடுகளிலும், சறுக்கல்களிலும் அவர் என்னைத் தாங்கிக் கொண்டார். சில முட்கள் நிறைந்த பாதையில் எனக்கு முன்னாகச் சென்று, தம்முடைய கால்களைப் பதித்த இடத்தில் எனது காலைப் பதித்து நடக்கச் செய்தார். நான் சோர்ந்து போனேன். அதிகமான முட்கள் நிறைந்த பாதையாயிருந்ததால், "நான் இதன் மீது படுத்துக்கொள்கிறேன் நீ என் மீது உன் காலைப் பதிந்து முன்னேறிச் செல்" என்று கூறிப் படுத்துக்கொள்ள நான் அவர் மீது நடக்கலானேன். என் பாதம் பதிய முட்கள் அவரது உடலைக் கிழித்தன. நான் சேருமிடம் சேர்ந்து விட்டேன். இவ்வாறே இயேசுவே வழி என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது என்கிறார் அவர்.

இந்தப் பின்னணியத்தில் தான் பாலைநிலத்தில் சுமார் 50 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்திற்கு அதிகமாக இருக்கும் வெப்பத்தைத் தம்மீது தாங்கிக்கொண்டு தம் மக்களுக்கு மேகமாய் அவர்களுடன் சென்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும் (விப. 13 : 22). நெருப்பின் நடுவிலும் நம்பிக்கைப் பயணத்தல் வழுவாதிருந்தோர் நடுவில் புதிய பாதை தென்படச் செய்தார் (தானி. 3 : 25, 26).

கிறிஸ்துவில் ஆழ்ந்த நம்பிக்கைக்கொண்டு வாழும் போது வாழ்வில் நம்பிக்கையிழந்து போகின்ற சுழல் வந்தாலும் புது நம்பிக்கை பிறக்கவும், சோர்ந்து போகும் சூழலில் ஆற்றலாகவும், பாடுகள் நிறைந்த வாழ்வில் தாமே பாதையாகவும் கடவுள் செயல்படுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். எனவே கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையில் முன்னேறிச் செல்ல கடவுள் துணை செய்வாராக.

அருள்திரு. A. **பிறைட் சாலமன்**

| 𝄞 | ஞா. | 16 | ஞா. | 228 |
|---|---|---|---|---|
| | கீர். | 28 | கீர். | 292 |

**14-05-2023** உயிர்ப்புக்கு பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

# கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தலாகிய அருட்பணி

## Mission as Sharing Christ's Peace

| | |
|---|---|
| மீக் 4 : 1-7 | பிலிப். 4 : 4-9 |
| திபா. 85 | லூக்கா 24 : 36-49 |



சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது இயேசு அவர்கள் நடுவில் நின்று உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என்று அவர்களை வாழ்த்தினார். (லூக். 24 : 36)

நமது வாழ்க்கைச் சூழல் மாற்றங்களுக்கு உட்பட்டது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை மனிதர் தங்கள் வாழ்வின் மீது நம்பிக்கை இழக்கிறபோது அமைதி குறைவு ஏற்படுகிறது. அதுவே சோகத்திற்கும் காரணமாகிறது. உதாரணமாக வடஅட்லாண்டிக் ஒப்பந்தத்தில் (NATO) உக்ரைன் இணைந்துவிட்டால் தனது நாட்டிற்குப் பாதுகாப்பு இல்லை, ஏற்கெனவே NATO-வில் இணைந்த நாடுகளெல்லாம் அமெரிக்கா மற்றும் NATO நாடுகளின் போர் காலணிகளாக மாற்றப்பட்டுள்ளது என்று ரஷ்யா ஐயப்படுகிறபோது, அதன் உள்நாட்டு பாதுகாப்பின் மீது நம்பிக்கை குறைகிறது. அதனால் இரு நாடுகளுக்குமிடையே அமைதி அற்றுப்போகிறது. அதுபோல நமது குடும்பத்திலும், தொழில்களிலும் பிரச்சனைகள் வருவது இயல்பு. அதைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை எப்போது குறைகிறதோ அப்போது கவலை வந்து அமைதியும் காணாமல் போகிறது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குப்பின் சீடர்களின் வாழ்க்கைச் சூழல் மாறிப்போனது. அதுவரை பல எதிர்பார்ப்புகளோடும் கனவுகளோடும் வாழ்ந்தவர்களின் நம்பிக்கைக் கோட்டைகளெல்லாம் தகர்ந்துபோனது. வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் தாங்கள் ஆயத்தப்படுத்தின நறுமணப் பொருள்களோடு கல்லறைக்குச் சென்ற பெண்களுக்குக் கிடைத்தது இயேசு இங்கே இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் என்ற செய்தி. இந்த மகிழ்ச்சியின் செய்தியோடு அவர்கள் சீடர்களைச் சந்தித்தபோது அவர்களோ கவலையுற்று முற்றிலும் நம்பிக்கை இழந்திருந்தார்கள்.

அவர்கள் கூற்று வெறும் பிதற்றலாகத் தோன்றியதால் அதனை நம்பவில்லை (லூக்கா 24 : 11) .

இன்னொரு முறை அவர்களில் இருவர் வழியில் பிரயாணப்பட்டு எம்மாவு ஊருக்குச் சென்றார்கள். அவர்களுடன் இணைந்து பிரயாணித்த உயிர்த்தெழுந்த இயேசுவை அறியாமல் அவரிடம் தங்கள் உள்ளக் குமுறலைக் கொட்டினார்கள். லூக்கா 24:21-ல் அவர் இஸ்ரயேலை மீட்கப்போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் எங்கள் நம்பிக்கை இன்று பொய்த்துவிட்டது என்று தங்கள் ஏக்கத்தைச் சொன்னார்கள். அவரைப் பற்றி பேசிய சிறிது நேரத்திலேயே மாலையின் இருள் சீடர்களில் அச்சத்தின் இருளைத் தந்தது (லூக்கா 24 : 29) அதனால் அவர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி மாலை ஆயிற்று பொழுதும் போயிற்று எங்களோடு தங்கும் என்று துணைக்கு ஆள்பிடித்தார்கள். எதைப் பார்த்தாலும் பயம், நம்பிக்கையின்மை வாழ்க்கைச் சூழலை முற்றிலும் மாற்றிவிட்டது, அமைதியிழந்து தவித்தார்கள்.

சீடர்களின் தற்போதைய தேவை ஆத்மார்த்தமான ஒரு அமைதி. அதை ஏற்படுத்துவதுதான் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் சந்திப்பின் நோக்கம். சீடர்களுக்கு மட்டுமல்ல பலவித வாழ்க்கைச் சூழல்களால் அமைதி இழந்து வாழ்ந்துகொண்டிருக்கும் யாவருக்கும் அமைதி கொடுப்பதுதான் அருள்நாதரின் அருட்பணி. அதனை உயர்த்தி சொல்ல வேண்டும் என்பதுவே லூக்கா நற்செய்தியாளரின் நோக்கம் என்று அருட்பணி இறையியலாளர் David J. Bosch குறிப்பிடுகிறார். (Peace making is a major ingredient of Lukes missionary Paradigm)

அமைதிபடுத்தும் எண்ணத்தோடு சீடர்களைத் தனி இடத்தில் சந்திக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர்இயேசு, அவர்கள் நடுவில் நின்று, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று அவர்களை வாழ்த்தினார். அவர் வெறும் வார்த்தைகளைக் கொண்டு அருட்பணியாற்றுகிறவரல்ல வாழ்வின் வழியாக அருட்பணியாற்றுகிறவர். வார்த்தைகளினால் கூறிய வாழ்த்தினை நம்பிக்கை ஏற்படுத்தும் செயல்களால் நிறைவேற்றி அருட்பணியாற்றுகிறார். Marxist Philosopher Ernst Bloch சொல்கிறார், “Where there is hope, there is religion”. ஆகையினாலே தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நாம் நமது கண்ணீர் கவலை அமைதியின்மை சூழல்களிலும் நம்பிக் கொண்டிருக்கிறோம். அவர் எப்படி சீடர்களுக்குள் நம்பிக்கை ஏற்படுத்தி அமைதி வழங்கினார் என்பதை இங்குத் தியானிப்போம்.

## 1. உணவருந்தி அமைதி ஏற்படுத்துகிறார் :

லூக்கா 24 : 41-43-ல் உயிர்த்தெழுந்த இயேசு சீடர்கள் நடுவில் வந்து அமைதி உரித்தாகுக என்றதும் அமைதி ஏற்பட்டுவிடவில்லை. ஏனென்றால் அவர்களில் நம்பிக்கையின்மை முற்றியிருந்தது. உயிரோடிருந்தபோது சீடர்களின் முன்னிலையில் எத்தனையோ அசுத்த ஆவிகளை துரத்தின அவரை ஒரு ஆவியை காண்பதாய் நினைத்து இன்னும் நம்பமுடியாதவர்களாயிருந்தார்கள். சீடர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அதன் வழி அவர்களை அமைதிப்படுத்துவதும் அவசியம் என்று உணர்ந்த இயேசு நாதர் அவர்களுடன் அமர்ந்து அவர்கள் கொடுத்த வேகவைத்த மீன் துண்டை உண்டு சீடர்களின் மனக்கலக்கத்தை மாற்றி அமைதி வழங்கினார்.

வாழ்வில் நீங்காத கவலைகளோடு கஷ்டங்களோடு இருப்பவர்களை வெளியே அழைத்துச் சென்று அவர்களுடன் உணவருந்துதல் அவர்களின் உள்ளக் கவலையை மாற்றி அமைதிபடுத்துகிறது. இதனை அருட்பணியில் திட்டமிட்டு செய்தவர் இயேசு கிறிஸ்து. மத்தேயு 9 : 9-12-ல், சமூகத்தில் சக யூதர்களால் ஒதுக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து வந்த மத்தேயுவுடனும், மற்றும் பாவிகள் என்று முத்திரையிடப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தவர்களுடனும் உணவு அருந்தியே அவர்கள் உள்ள காயங்களை கட்டினவர் இயேசு கிறிஸ்து (லூக். 5 : 30, லூக். 15 : 2). தொழுநோயாளியாகிய சீமோன் வீட்டில் உணவருந்தியதும் அமைதி ஏற்படுத்தும்அவரது அருட்பணி மாதிரி என்பதைப் புரியவைக்கிறது (மத்தேயு 26 : 6-7). கிறிஸ்துவின் இவ்வமைதிப் பகிர்தலை புரிந்துகொண்ட Gaventa என்ற இறையியலாளர் கூறும்போது, “Inclusion of Gentiles and table fellowship with them were inseperably related” என்கிறார்.

இத்தகு அமைதி ஏற்படுத்தும் உணவு பந்தியை தமது அருட்பணி பயணத்தில் இறையரசுக்கு இணையாக இயேசுநாதர் உருவகப்படுத்தியிருப்பதையும் நாம் நினைவுகூரவேண்டும். Kingdom of God often described as Big Banquet (மத்தேயு 22 : 4). இங்கு இயேசு சீடர்களுடன் எற்படுத்தியது சிறிய விருந்து. இறையரசு உறவுகளினால், உலகத்தினால் காயப்படுத்தப்பட்டவர்கள் காயம் ஆறி குணமடைந்து அமைதியும் மகிழ்ச்சியும் காண்கிற இடம். அவ்வரசை சனாதன தர்மங்கள் தலைதூக்கி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேறுபாடு மறுபடியும் உருவாக்கி காயப்படுத்தப்படும் நம் சமூகத்தில் சமதர்மத்தை

ஏற்படுத்தும் கடமை நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ளது. இது முதலில் நம் சொந்த குடும்பங்களிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். நம்மால் வெறுக்கப்படுபவர்களுடன் விருந்துண்டு பாருங்கள். நீங்கள் ஏற்படுத்தும் நம்பிக்கையினால் அமைதியை அகத்தில் அனைவரும் உணருவீர்கள்.

**2. உரையாடி அமைதி ஏற்படுத்துகிறார் :**

லூக்கா 24 : 44-47-ல் அமைதியிழந்திருந்த சீடர்களுடன் இயேசுநாதர் இரண்டாவது அருட்பணி மாதிரியாக உரையாடி அமைதி ஏற்படுத்துகிறார். மோசேயின் சட்ட புத்தகத்திலும், இறைவாக்கினர் நூல்களிலும், திருப்பாடல்களிலும் எழுதப்பட்ட மெசியாவின் உயிர்த்தெழுதலின் செய்திகளை நினைவுபடுத்தி, தானும் உயிரோடிருந்தபோது சொன்ன மறையுரைகளையும் மேற்கோள் காட்டி அவர்களின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படுத்துகிறார்.

பவுல் மற்றும் தீமோத்தேயு அப்போஸ்தலர்கள் சிறைப்பட்ட போது பிலிப்பியர் எப்பப்பிராத்திடம் பணம் கொடுத்து சிறையில் பவுலுக்கும் தீமோத்தேயுக்கும் பணிவிடை செய்யுமாறு அவரை அனுப்பினார்கள் (பிலிப்பியர் 4 : 18). ஆனால் அவர் பவுலிடம் வரும்போது, உடல்நலம் குன்றிப்போனார் என்ற செய்தியைப் பிலிப்பியர் அறிந்து மனங்கலங்கிப் போனார்கள் (பிலிப்பியர் 2 : 27). துயரத்தில் மூழ்கி அமைதியிழந்து போயிருந்த பிலிப்பியரை அமைதிப்படுத்தி நம்பிக்கை ஏற்படுத்த பவுல் அப்போஸ்தலர் எடுத்த முயற்சி கடித வழியிலான உரையாடலே. அவ்வுரையாடலின் ஒரு பகுதிதான் பிலிப்பியர் 4-ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டவரோடுள்ள உறவில் நிலைத்திருங்கள், ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள், எதைப் பற்றியும் கவலைப்படாமல் இறைவேண்டல்களையும், விண்ணப்பங்களையும், மன்றாட்டுகளையும் கடவுளிடம் தெரியப்படுத்துங்கள் (பிலிப்பியர் 4 : 5-7). அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறைஅமைதி கிறிஸ்துவுடன் இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும் என்று நம்பிக்கையின் வார்த்தைகளை எழுதி எப்பப்பிராத்திடமே கொடுத்து (பிலி. 2 : 25) பிலிப்பியரை அமைதிப்படுத்துகிறார். இங்கு உரையாடலின் உன்னத நோக்கம் உடைந்த உள்ளங்களில் அமைதி ஏற்படுத்துவதாகும். இயேசுநாதர் சமாரியப் பெண் ஒருவருடன் உரையாடியதும் இவ்வகையே எனப் புரிந்திட வேண்டும் (யோவான் 4).

இயேசு கிறிஸ்துவின் சீடர்களுடனான உரையாடல் வெற்று வார்த்தைகளைக் கொண்டதல்ல. கடமைக்காகக் கூறப்பட்டவைகளும் அல்ல. நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்று ஆதாரங்களுடன், அர்த்தமுடன் கூறப்பட்டவை. இன்று பல்வேறு சூழல்களினால் அமைதியிழந்து தாருமாறும் மக்களது வாழ்வில், அமைதிக்கான நம்பிக்கை ஏற்படுத்தும் உரையாடலை அருட்பணியாக்கிட நம்மை அழைக்கிறார். ஒரு மணி நேர அருளுரையைவிட ஐந்து நிமிட தனி உரையாடல் அமைதியைக் கொடுக்கும்.

### 3. உயிர்ப்பித்து அமைதி ஏற்படுத்துகிறார் :

லூக்கா 24 : 48, 49-ல் இயேசு சீடர்களின் இறந்து போன பற்றுறுதி வாழ்வை உயிர்ப்பித்து, இனி நீங்களே என் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகள் என்று புது உத்வேகம் கொடுத்து, உன்னதத்தின் வல்லமையையும் வாக்குப்பண்ணி, அகத்தில் நிலையான அமைதி ஏற்படுத்தி அருட்பணியாற்றுகிறார். நமது ஆண்டவர் திக்குவாயும் மந்த நாவும் கொண்ட மோசேயை அருட்பணிக்குச் சாட்சியாக்கினவர், ஆண்டவரின் சபைக்கு எதிரானவனாயிருந்த சவுலை அவருக்குச் சாட்சியாக்கினவர், இதுவரை சீடர்கள் எனப்பட்டவர்களை இப்போது திருத்தொண்டர்கள் என்னும் திருப்பணி நிலைக்கு உயர்த்துகிறார். அவர்களின் பற்றுறுதியைப் பலப்படுத்தி அதற்குச் செயல்வடிவம் கொடுக்கிறார். இதனை Margull என்ற இறையியலாளர் Our Missionary Calling as hope in action என்கிறார்.

ஆண்டவர் இயேசு சீடர்களிடம் இனி நீங்கள் சாட்சிகள் என்று கூறுகிறபோது ஒரு New energy -ஐ வாக்குப் பண்ணுகிறார். அதுவே தூயாவியாரின் ஆற்றல். தூயாவியாரின் ஆற்றல் நம்மையும் சாட்சிகளாக்கும் (திருதூதர் பணிகள் 1 : 8).

இஸ்ரவேலர் பாவம் செய்வதில் முந்திக்கொண்டபடியால் அசீரியரிடம் அடிமைகளாக சிறைப்பட்டுப் போனார்கள். சிறையிருப்பினால் வாழ்வே முடிந்துபோயிற்று என்று நம்பிக்கையிழந்து வாழ்ந்தவர்களை மீகா இறைவாக்கினர் வழியாக உயிர்ப்பிக்கும் நம்பிக்கையின் வார்த்தைகளை 4-ம் அதிகாரத்தில் கொடுக்கிறார். 4-ம் மற்றும் 5-ம் அதிகாரங்கள் ஒரு புதிய அரசு உருவாதலை விவரிக்கிறது. அது மெசியாவின் அரசு. அவ்வரசு மலைகளுக்கெல்லாம் உயர்ந்ததாய் குன்றுகளுக்கெல்லாம் மேலாய் உயர்த்தப்படும் என்று 4 : 1-ல் கூறப்பட்டுள்ளது.

ஆண்டவரின் மூன்றாவது அருட்பணி மாதிரி நலிவுற்றவரைப் பெலனடையச் செய்வது. அதனை மீகா 4 : 6-7 வசனங்களில் தெளிவுபடுத்துகிறார். மெசியாவின் அரசின் நோக்கம் முடமாக்கப்பட்டோர், விரட்டியடிக்கப்பட்டோர், தண்டிக்கப்பட்டோர் ஆகியோரை ஒன்றுகூட்டி அவர்களையும் வலியதோர் இனமாக மாற்றுவது. அவர்களுக்கு ஆட்சியாளராக தாமே இருப்பது என்கிற அருட்பணி மாதிரி இங்கு விளக்கப்படுகிறது. எங்கு நலிவுற்றோர், ஒடுக்கப்பட்டோர் உரிமை பெறுகிறார்களோ, வலிமையடைகிறார்களோ அங்கு அமைதி இயல்பாகிறது.

David J Bosch என்கிற அருட்பணி இறையியலாளர் சொல்கிறார், Mission as witnessing to the Gospel of present Salvation and future hope. இங்கு Present Salvation என்பது தற்கால நம் சமூக அடிமைத்தளைகளிலிருந்து விடுதலையடைவதைக் குறிப்பிடுகிறது. நம்பிக்கையின்மையின் அடிமைத்தளைகளில் உறைந்து போயிருந்த சீடர்கள் எதிர்கால நம்பிக்கைப் பெற்று கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு நாங்களே சாட்சிகள் என்கிற நிலைக்கு உயர்ப்பிக்கப்படுகிறார்கள். இதுவே கிறிஸ்துவின் அருட்பணி மாதிரி.

இன்றும் வாழ்வில் நம்பிக்கையின்மையால் அமைதியிழந்து கலங்கித் தவிப்போர் பலர். ஆண்டவர் இயேசு கிறிஸ்து அன்று சீடர்களிடம் ஏற்படுத்திய அருட்பணி மாதிரிகளாகிய உணவருந்தி அமைதி ஏற்படுத்துதல், உரையாடி அமைதி ஏற்படுத்துதல், உயிர்ப்பித்து அமைதி ஏற்படுத்துதல் ஆகிய மாதிரிகளினால் நம்பிக்கை ஏற்படுத்தி அமைதியைப் பகிர்வோம். அருட்பணியாளர்களாக வாழ்வோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் அவரது அருட்பணியாளர்களாக பயன்படுத்துவாராக, ஆமென்.

அருள்திரு. J. **ஹெறால்டு அனித்**

| 𝄞 | ஞா. | 18 | ஞா. | 472 |
|---|---|---|---|---|
| | கீர். | 11 | கீர். | 405 |

**18-05-2023** விண்ணேற்றத் திருநாள்

# உயர்த்தப்பெற்ற கிறிஸ்து

## Exalted Christ

தானி. 7 : 9-14 தி.ப. 1 : 1-11

தி.பா. 47 லூக். 24 : 44-53



"அவர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டிருந்த போதே அவர் அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றம் அடைந்தார்".

லூக். 24 : 51.

இயேசு கிறிஸ்துவின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் ஒரு இடைநில்லாப் பயண அனுபவமாகும். அவை :

→ உலக தோற்றமுதல் தந்தையாம் கடவுளுடன் பயணம். (கொலோ. 1 : 15-17)

→ மனு மைந்தனாகப் பிறந்தது விண்ணிலிருந்து மண்ணிற்கு வந்த பயணம். (பிலி. 2 : 6, 7)

→ தமது திருப்பணியின் நாட்களில் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்த பயணம். (தி.ப. 10 : 38; மத். 9 : 35)

→ மீட்பின் பணிக்கான சிலுவைப் பயணம். (மத். 27 : 31-32)

→ திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கையில் குறிப்பிடப்படும் பாதாளத்திற்கு (தாழ்விடங்கள்) இறங்கிய பயணம். (எபே. 9 : 10)

→ உயிருடன் எழுந்த பின்னர் சீடர்களுடன் பயணம். (லூக். 24 : 15)

→ உயிர்ப்புக்குப் பின்னர் 40-வது நாள் விண்ணேற்றப் பயணம். (லூக். 24 : 15)

→ மீண்டும் இரண்டாம் வருகை என்னும் நிறைவேறப்போகும் பயணம். (யோ. 14 : 3)

இப்பயணங்கள் அனைத்தும் இறைமக்களுக்குக் கற்றுத்தரும் செய்தி இயேசுகிறிஸ்து பயணத்தை நேசிப்பவர். தம் மக்களின் வாழ்வு பயணத்தில் துணை நிற்பவர், வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை அடைந்திட உதவி செய்பவர் என்பதாகும்.

இயேசு கிறிஸ்துவின் பயணங்கள் அனைத்திற்கும் குறிப்பிட்ட நோக்கங்களும், முக்கியத்துவமும் உண்டு. அவ்வகையில் இயேசு கிறிஸ்து உயர்த்தப்பெற்ற விண்ணேற்றப் பயணம் இறைமக்களுக்குப் பல படிப்பினைகளைத் தருகின்றன. கிறிஸ்துவின் விண்ணேற்ற அனுபவம் சீடர்களுக்கும் சமகால இறைபற்றாளர்களுக்கும் உந்துதல் தரும் அனுபவமாகக் காணப்படுகின்றது. எனவே கடவுள் இந்த உலகின் மீது வைத்த திட்டத்தின் ஒரு பகுதியான இயேசுகிறிஸ்துவின் உயர்த்தப்பெற்ற அனுபவம் இன்றைய உலகிற்கு தரும் செய்தி என்ன என்பதை மூன்று சிந்தனைகள் வாயிலாகத் தியானித்தல் ஏற்புடையதாகும்.

**1. எழுதப்பட்டவைகளின் நிறைவேறுதலான உயர்த்தப்பெற்ற கிறிஸ்து :** (தானி. 7 : 9-14)

இரவில் நான் கண்ட காட்சியாவது; வானத்தின் மேகங்களின் மீது மானிடமகனைப் போன்ற ஒருவர் தோன்றினார்.... அவரது ஆட்சியுரிமை என்றுமுள்ளதாகும்; அதற்கு முடிவே இராது : அவரது அரசு அழிந்து போகாது. (தானி. 7 : 13, 14)

தானியேல் புத்தகம் இரு நோக்கங்களுக்காக எழுதப்பட்டது. (1) பிற இனத்தவரின் நாடுகளின் கீழ் கடவுளின் மக்கள் அனுபவிக்கும் சிறையிருப்பு நிரந்தரமல்ல என்பதை வலியுறுத்தவும் (2) பூமியில் இறை அரசு முடிவில் வெற்றி சிறக்கும் என்று இறைமக்கள் உணரும்படியாகவுமாகும். இப்புத்தகத்தில் "சொப்பனம்", "சொப்பனத்திற்கு விளக்கமளித்தல்" போன்றவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தானி. 7 : 1-12 வரை உள்ள பகுதி தானியேல் கண்ட விலங்குகள் குறித்த சொப்பனம் ஆகும். தானி. 7 : 13, 14 ஆகிய வசனங்கள் மெசியாவை குறித்த முன்னறிவிப்பைக் கூறும் பகுதிகளாகும். இப்பகுதியில் "மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார்" (13) என்ற சொற்றொடர் மெசியாவின் ஆட்சி குறித்தும், "அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும், அதற்கு முடிவே இராது அவரது அரசு அழிந்து போகாது" (14) என்ற சொற்றொடர் மானுட மகனின் ஆட்சி குறித்த முன்னறிவிப்புமாகும்.

தானியேலின் மானுடமகன் குறித்த இறைவாக்கு அன்றைய இஸ்ரவேலருக்குப் பெரும் நம்பிக்கையூட்டும் செய்தியாக அமைந்தது. ஏனெனில் இஸ்ரயேலர் பல்வேறு மன்னர்களின் ஆட்சியின் கீழ் அடக்கி

ஆளப்பட்டனர். பல்வேறு நிந்தனைகளை அனுபவித்தனர். ஒரு அமைதியான நல்லாட்சி தரும் மெசியா வருவார் என்று நம்பினர். இந்தச் சூழலில் வருகின்ற மானுடமகனின் ஆட்சி நேபுகாத்நேச்சார் போன்ற அரசர்களின் ஆட்சியல்ல. அரசர்கள் ஆள்வது போல் மானிடமகனின் ஆட்சி ஒரு எல்லைக்கு உட்பட்டதல்ல, அது எல்லோருக்குமான ஆட்சி, எல்லோரையும் உள்ளடக்கிய ஆட்சி என்பதை மக்களுக்கு உணர்த்துவதாக தானியேலின் இறைவாக்கு அமைந்துள்ளது.

தானியேல் 7 : 13-ல் குறிப்பிடப்படும் "மானிட மகன்" குறித்த இறைவாக்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பிறப்பு வாழ்வு மற்றும் விண்ணேற்றம் ஆகியவற்றில் நிறைவேறியது. ஆண்டவர் இயேசு "மானிட மகன்" என்ற பதத்தை மூன்று நிலைகளில் பயன்படுத்தியுள்ளார்.

1. அவரது பாடுகள் மற்றும் மரணத்தைக் குறிக்க

(மாற். 8 : 31, 10 : 45; 14 : 21, லூக். 9 : 22, 44)

2. நியாயாதிபதியாக வருவதைக் குறிக்க

(மத். 6 : 27, 25 : 31, யோ. 5 : 27)

3. ராஜியத்தை அமைக்க மகிமையில் வருவதைக் குறிக்க

(மத். 16 : 28; 19 : 28; மாற். 13 : 26, 27; 14 : 62)

எனவே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் விண்ணேற்றம் என்பது எழுதப்பட்டவைகளின் நிறைவேறுதல் என்பதைப் புரிந்துகொள்ள இறைமக்கள் அழைக்கப்படுகின்றனர். எழுதப்பட்டவைகள் நிறைவேறியிருக்கின்றன, நிறைவேறிக்கொண்டிருக்கின்றன, நிறைவேறப் போகின்றன என்ற எண்ணத்துடன் வாழக் கடவுள் அழைக்கின்றார்.

**2. எங்கும் சான்று பகரக் கற்பிக்கும் உயர்த்தப்பெற்ற கிறிஸ்து** (லூக். 24 : 42-55)

"இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்" (24 : 48)

லூக்கா 24 : 48 மற்றும் தி.ப. 1 : 8 ஆகிய இரண்டு வசனங்களும் இயேசுகிறிஸ்து தமது விண்ணேற்ற அனுபவத்தின் போது உரைத்தவைகள். இயேசுகிறிஸ்து உயர்த்தப்பெற்ற அனுபவம் அடையும் போது சீடர்களுக்கு ஒரு பெரும் பொறுப்பை (Task) கொடுக்கின்றார். அந்தப் பொறுப்புதான் சான்றுகளாக வாழ்தல். லூக்கா தனது நற்செய்தி

நூலின் முடிவு பகுதியில் அழுத்தமாக அறிவுறுத்தும் சான்று பகருதல் அவருடைய அடுத்த நூலான "திருத்தூதுவர் பயணத்தின்" அடிநாதமாகத் திகழ்கின்றது. "மார்ற்றுரஸ்" (Martures) என்ற கிரேக்க பதத்திற்குப் பல அர்த்தங்கள் உள்ளன.

1. இரத்தசாட்சி (Martyr)

2. பதிவு (Record)

3. சான்று (பார்த்த அல்லது கேட்ட) (witness; an eye or ear witness)

இந்த மூன்று அர்த்தங்களும் சீடர்களுக்குப் பொருந்துவன சீடர்கள் கேட்டனர், பார்த்தனர், பதிவு செய்தனர், பின்னர் கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சியாக மரித்தனர்.

"பார்த்த சான்றுகள்" (eye-witness) என்ற பதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சாதாரணமாக இது ஒரு நீதிமன்றத்தில் (Court Room) பயன்படுத்தப்படுகின்ற சொல். ஒரு வழக்கிற்கு "பார்த்த சான்று" மிகவும் (eye witness) முக்கியமானது. பார்த்த சான்றுகளில் ஒருவர் நினைத்தால் அந்த வழக்கின் போக்கை மாற்றமுடியும். அதே நேரத்தில் பார்த்த சான்றின் வழியாக ஒரு வழக்கிற்கு நீதி பெற்று தரவும் இயலும். இயேசுகிறிஸ்து சீடர்களைச் சான்றுகளாக வாழுங்கள் என்று கூறும்போது இயேசுவிடம், கற்றவைகள், கண்டவைகள், கேட்பவைகள் அனைத்தையும் உலகிற்குப் பறைசாற்ற வேண்டும் என்பதைச் சீடர்கள் புரிந்துகொள்ள விண்ணேற்றம் அவர்களுக்கு உதவி செய்தது. எனவே உயர்த்தப்பெற்ற ஆண்டவரின் எதிர்பார்ப்பு இக்காலத் திருச்சபைக்கு ஒரு அறைகூவலாக இருக்கின்றது. இறைமக்கள் எங்கும் சான்று பகருகின்றவர்களாக அழைக்கப்பட்டவர்கள் என்பதை இயேசு நாதரின் விண்ணேற்ற அனுபவம் வாயிலாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. "உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.ப. 1 : 8).

### 3. எதிர்நோக்குடன் வாழ அழைக்கும் உயர்த்தப்பெற்ற கிறிஸ்து (தி.ப. 1 : 1-11)

"கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" (1, 11).

பிரிவு என்பது மனித வாழ்க்கையில் வெற்றிடங்களை ஏற்படுத்துகின்றது. இயேசுகிறிஸ்து விண்ணுக்குச் செல்வதை நேரடியாகக் கண்ட சீடர்களும் பிரிவின் அனுபவத்தினால் அடுத்து என்ன நடக்குமென்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் வெண்ணுடை அணிந்த இருவர் தோன்றி அவர்களைத் தேற்றி, திடப்படுத்துகின்றனர். அந்த வேளையில் அவ்விருவரும் கூறிய வார்த்தைகளான “அவ்வாறே மீண்டும் வருவார்” (1 : 11) என்பது சீடர்களை எதிர்நோக்குடன் வாழத் தூண்டுவதாக அமைந்தது. இஸ்ரவேலரின் வரலாற்றிலும், இறைவாக்கினர்களின் இறைவாக்குகளிலும் மெசியாவைக் குறித்த எதிர்நோக்குக் காணப்பட்டது. வாக்களிக்கப்பட்ட மெசியா மானுட உருவில் உலகில் வந்து கடவுளின் சித்தத்தை நிறைவேற்றினார். அந்த மெசியாவின் விண்ணேற்றம் சீடர்களை நல்லெதிர்நோக்குடன் வாழ அழைப்பதாகக் காணப்படுகின்றது. திருச்சபை வரலாற்றிலும், சீடர்களைப்போல குழப்பத்துடன் காணப்பட்ட பிலிப்பிய திருச்சபை மக்களுக்குப் பவுல் கூறிய அறிவுரையும் நல்லெதிர்நோக்குடன் வாழுங்கள், கிறிஸ்து மீண்டும் வர எதிர்பாருங்கள் என்பதுதான். (பிலி. 2 : 20). இன்றைய திருச்சபைக்கும் விண்ணேற்றம் தரும் செய்தி நல்லெதிர்நோக்குடன் காணப்படவேண்டும் என்பதே. இன்றைய உலகம் மற்றும் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பயம் நிறைந்த, நெருக்கடி நிறைந்த, நீதியற்ற, வன்முறைகள் நிறைந்த சூழல்கள் உலக மக்களிடையே பல கேள்விகளை எழச் செய்யலாம். ஆனால் மெசியாவின் இரண்டாம் வருகை இத்தகைய கடினமான உலகின் சூழல்களை மாற்றி நல்லாட்சி தரும் என்ற எதிர்நோக்குடன் வாழ்வதே விண்ணேற்றம் தரும் செய்தியாக உள்ளது.

எழுதப்பட்டவைகளின் நிறைவேறுதலாகவும், எங்கும் சான்று பகர கற்பிப்பவராயும், எதிர்நோக்குடன் வாழ அழைப்பவருமாகிய உயர்த்தப்பெற்ற கிறிஸ்து தரும் உயர் வாழ்வுக்காய் நம்மை ஒப்படைத்து வாழ்வோம்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 17 | ஞா. | 429 |
| | கீர். | 131 | கீர். | 123 |

**21-05-2023** உயிர்ப்புக்கு பின்வரும் ஆறாம் ஞாயிறு

# தூய ஆவியாரின் வாக்குறுதி

## Promise of the Holy Spirit

யோவேல் 2 : 28-32 கலா. 5 : 22-26

திபா. 42 யோவா. 14 : 15-21



"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்" யோ. 14 : 21

யோவான் 14 : 15-21 பகுதியில் இயேசு தாம் இந்த உலகத்துக்கு அனுப்பப்பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றி மீண்டும் பிதாவினிடத்துக்குச் செல்லுவதாக கூறிய பொழுது சீடர்கள் கலக்கமடைந்தனர். இன்னும் சிறிது காலம் உங்களோடு இருப்பேன் (யோவா. 13 :33). நான் தந்தையிடம் போகிறேன் 14 : 12, இப்போது என்னை அனுப்பியவரிடம் போகிறேன் (யோவா. 16 : 5), நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன், இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன் (யோவா. 16 : 28), இனி நான் உலகில் இருக்க போவதில்லை அவர்கள் உலகில் இருப்பார்கள் நான் உம்மிடம் வருகிறேன் (யோவா. 17 : 11), அத்துடன் சீடர்களிடம் உங்களுக்கு ஓர் இடம் ஏற்பாடு செய்ய போகிறேன் (யோவா. 14 : 2) என்று கூற, தோமா அவரிடம் ஆண்டவரே நீர் எங்கே போகிறீர் என்று எங்களுக்கு தெரியாது உம்மை நம்பியல்லவா படகையையும் வலையையும், தொழிலையும் உறவுகளையும் விட்டு வந்தோம், வாழ்வின் எல்லாப் பகுதியிலும் உம்முடைய அன்பை அனுபவித்தோமே என்றார். இச்சூழலில் இயேசு தனது பிரியாவிடையாக அவர்களுடன் என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை அனுப்புவேன் நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். துணையாளராக இருந்து உங்களைத் தேற்றுபவராக, ஆறுதல் அளிப்பவராக, உற்சாகமூட்டுபவராக உடன் இருப்பேன் என வாக்குறுதி அளிக்கின்றார்.

**1. ஊக்கம் தந்து வழிநடத்தும் வாக்குறுதி** (யோ 14 : 18)

இம்மட்டும் உடன் இருந்து தகப்பனை போல குறை இல்லாமல் வழி நடத்தவும், குருவைப்போல கற்றுத் தரவும், பண்படுத்தவும் ஆள் இல்லையே என்று கலங்கி நிற்கும்போது நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்கிறார்.

திக்கு என்றால் திசையென்று பொருள் அதாவது திசை தெரியாது போயிற்றே என்று அங்கலாய்க்கிற வாழ்க்கையிலே நான் உங்களை ஆதரவற்றவர்களாய் விட்டுவிடேன். திசையாக மாறி பாதை காட்டுகின்ற ஆண்டவராக துணையாளராக உடன் இருப்பேன். தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன். (எசா. 66 : 13) என்றவர் அச்சமும் பயமும், பலவீனமும், அவநம்பிக்கையும் கோழைத்தனமும் கொண்ட அவர்களுக்கு திடனளித்தார். துணையாளர் என்னும் சொல் படை வீரர்கள் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தும் சொல்லாக பயன்படுத்தப்பட்டது. ஆவியானவர் பயந்த சீடரைப் பலப்படுத்தி, ஊக்குவித்து எதிர்மறைச் சூழ்நிலைகளில் இருந்து எழுந்து ஆற்றலுடன் எதையும் எதிர்கொள்ளும் துணிவை அருளுகின்றார். இங்கேயும் சீடர்களின் வாழ்வில் பயம் நீக்கி, அச்சம் இல்லாமல் பகிரங்கமாக நற்செய்தியின் மதிப்பீடுகளின்படி வாழ்வதற்கு ஆற்றல் கொடுத்தார். நற்செய்தி பணிக்காக தங்களையே முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டு உலகோர் அனைவரும் நற்செய்தியை நம்பி ஏற்று கொள்வதற்காக உயிரையும் அர்ப்பணிக்க முன் வந்தனர். ஆக அச்சம் அகற்றி துணிவுடன் இயேசுவின் நற்செய்தி சொல்லும் தூதுவர்களாக மாற்றுகிறார் தூய ஆவியார்.

**2. உடனிருந்து வழிநடத்தும் வாக்குறுதி** (யோ. 14 : 17)

. . . அவர் உங்களோடு தங்கியிருக்கிறார்; உங்களுக்குள்ளும் இருக்கிறார் (யோவா. 14 : 17). தூய ஆவியாரின் உடன் இருப்பு ஒன்றே வலிமையானது. ஆற்றல்மிக்கது. பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படுகிறபோதும், ஆதரவின்மையினால் சோர்ந்து போகிறபோதும், மனக்குமுறுதலினால் கொந்தளிக்கிறபோதும், அஞ்சாதீர் நான் உடன் இருக்கிறேன் என்று தேற்றித் திடப்படுத்தி நெறிப்படுத்துகிறவர். எனவே தான் இயேசு உடலளவில் அவர்களை விட்டு பிரிந்து இருந்தாலும் தந்தை அனுப்பும் தூய ஆவி (துணையாளர்) அவர்களோடு இருப்பார் என அறிய முடிகிறது. அவர் காற்றுக்கு ஒதுங்கிடமாகவும், புயலுக்குப் புகலிடமாகவும் வறண்ட நிலத்தில் நீருள்ள

கால்வாய் போலும் காய்ந்த மண்ணில் பெரும் குன்றின் நிழல்போலும் இருப்பார் (எசா 32 : 2) உடன் இருக்கும் தூய ஆவியானவர் உள்ளத்தைத் தூய்மை செய்பவராக, துணையாளராக, உறுதிபடுத்துபவராக, அன்பில் இணைப்பவராக, பணியில் திடப்படுத்துபவராக, நோயில் சுகம் தருபவராகச் செயல்படுவார். உடனிருப்பு உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகத்திற்கு வந்தேன் என்றவர் (யோவா 18 : 37) உடன் இருக்கும்படியாக தரும் தூய ஆவியார் (துணையாளர்) உண்மைக்குச் சான்றாக மாற்றுவார். இதனை, . .. நீங்கள் அவரை மறுதலித்தீர்கள், நீங்கள் தூய்மையும், நேர்மையுமானவரை மறுதலித்து கொலையாளியை விடுதலை செய்யுமாறு வேண்டிக் கொண்டீர்கள், வாழ்வுக்கு ஊற்றானவரைக் கொலை செய்தீர்கள் (அப். 3 : 13-15) என வாசிக்க முடிகிறது. ஆகவே ஆவியானவர் எவ்வித அநியாயத்தையும் தட்டிக் கேட்க பெலன் அளிக்கிறார், உடனிருந்து அனைத்தையும் கற்றுத் தருகிறார். அனைத்தையும் நினைவூட்டுகிறார் (யோ. 14 : 26), ஆலோசனைத் தருகிறார். இறையாட்சியின் மதிப்பீடுகளின்படி வாழ்வதற்கு உற்சாக மூட்டுகிறார்.

### 3. உறவுடன் வாழ வழிநடத்தும் வாக்குறுதி (யோ. 14 : 15)

இயேசு அன்பின் திருவுருவமாகவே வாழ்ந்தார். அவரது உள்ளத்திலும், உடலிலும், சொல்லிலும், செயலிலும் அன்பே வெளிப்பட்டது. அந்த அன்பை வாழ்வாக்குவதற்காக இயேசு சீடர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள் (யோவா. 14 : 15), என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என் மீது அன்பு கொள்பவர் மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன் (யோவா. 14 :21). இத்தகைய அன்பு நம்மை இயக்கும் ஆற்றலாக இருக்க தூய ஆவியை (அல்லது) துணையாளரைத் தந்துள்ளார். அன்பு உறவு எங்கு இருக்கின்றதோ அங்குத் தூய ஆவியானவர் இருக்கின்றார். அன்புறவு எங்கு இல்லையோ. அங்குத் தூய ஆவியார் இல்லை. நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது (ரோம. 8 : 5). அந்த அன்பினை நாம் செயல்களால் காட்டவேண்டும். ஆப்பிரிக்காவில் போதக பணியில் ஈடுபட்டிருந்த இந்திய துறவியிடம் உங்கள் தாய் நாட்டில் அக்கிரமங்களும்,

அநியாயங்களும், தீமைகளும் நிறைந்திருக்கும் நிலையில் ஆப்பிரிக்கரிடம் எப்படி அன்பைப் போதிக்கிறீர்கள் என்று கேட்டபோது அவரது பதில் அற்புதகரமானது. நாங்கள் அன்பைப் பற்றிப் போதிப்பதில்லை. மாறாக அங்குள்ள மக்களை அன்பு செய்கிறோம் எனப் பதிலளித்தார். அன்பில் நம்மை நிறைத்துப் பிறரை அன்பு செய்ய கற்றுத் தருபவர் தூய ஆவியார். இதனை ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன் (யோ. 13 : 34) நான் உங்களிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே கட்டளை (யோவ. 15 : 12); உன்மீது அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர்கள் மீதும் அன்பு கூர்வாயாக (கலா. 5: 14) நீங்கள் தொடக்கத்தில் இருந்து கேட்டறிந்த செய்தி இதுவே நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்தவேணடும் (1 யோ. 3 : 11) எனும் வசனங்கள் மூலம் அறிய முடிகிறது.

அன்பினால் இ;த உலகத்தை இயக்கி, புதிய படைப்பாக்கமுடியும். இயேசுவின் அன்பைச் சுவைத்த அன்னை தெரசா அம்மையார் துன்புறுவோர், கைவிடப்பட்டோர், விதவைகள், அனாதைகள், முதியோர், தொழுநோயாளிகள் போன்றவர்களிடம் தனது அன்பின் பணிவிடையால் இயேசுவின் அன்பை உணரச் செய்தார்.

இயேசு கிறிஸ்துவும் தனது பணிகாலத்தில் துன்புற்ற மக்களிடம் அன்பு செலுத்தி; தம் உயிரை அந்த அன்புக்காக கல்வாரியில் தியாகம் செய்து அன்புக்கு இலக்கணம் வகுத்தார். உலகத்தில் இருக்கிறவர்களிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர் (1 யோவா 4) என்பதற்கிணங்க ஆவியானவரை உள் வாங்கியவர்கள் ஆண்டவரின் அன்பை உலகிற்கு உணர்த்த முதலாம் இரத்த சாட்சி ஸ்தேவான் முதல் கிரகாம் ஸ்டெயின்ஸ் வரை இரத்த சாட்சிகளாக மடிந்தனர். ஆகவே நாமும் தூய ஆவியாரின் வாக்குறுதியை வாழ்வில் சொந்தமாக்கி, ஆவியாரின் உடனிருப்பை உணர்ந்து, அன்பின் பணிவிடையினை நிறைவேற்றி, நற்சான்றுடன் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.


அருள்திரு. N. **ஜாண் பென்டிங்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 41 | ஞா. | 169 |
| | கீர். | 207 | கீர். | 207 |

**21-05-2023** அகில உலக தொலைத்தொடர்பு நாள்

# இயேசு நல்ல தொடர்பாளர்

யோவான் 4 : 1 - 26



அச்சமாரியாப் பெண் அவரிடம் . . . யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை (யோவான் 4 : 9)

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்காலம் தொடர்பு சாதனங்களின் பாதிப்புக்களால் நேரிடையாகவும் மறைமுகமாகவும் மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இச்சூழலில் தொடர்பு வெறும் கருத்துப் பரிமாற்றமன்று; மாறாக அடிப்படையில் தொடர்பு என்பது உறவு நிலை எனலாம். இந்த உறவு நிலை சமூக வளர்ச்சிக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. திருப்பணிக்கு இலக்கணம் தந்த இயேசுநாதர், தம் திருப்பணியில் அனைவரும் விளங்கும் வண்ணம் சிறந்த தொடர்பாளராகத் திகழ்ந்தார். உலகத் தொடர்பு நாளை நிறைவு கூருகின்ற நாம், இச்சூழலில் இயேசு நல்ல தொடர்பாளராக எப்படி செயல்பட்டார் என்பதனை சிந்திதது அவர் பயன்படுத்திய தொடர்பு முறைகளைப் பயன்படுத்தி நமது திருப்பணிகளை எப்படி அமைப்பது என்ற கண்ணோட்டத்தில் இயேசு பயன்படுத்திய சில தொடர்பு முறைகளைக் குறித்து சிந்திப்பது சிறந்தது. நமது பணித்தள சூழல் சார்ந்து அவற்றினை பயன்படுத்தி நற்செய்தியினை தொடர்புபடுத்துவோமாக.

## 1 இறையரசை மையப்படுத்தியத் தொடர்பாளர்

பொதுவாகத் தொடர்பின் நடைமுறை அல்லது வழியைக் குறித்துக் கற்றுக் கொள்ளும்போது செய்தியை அனுப்புகிறவர் செய்தி, ஊடகம், செய்தியைப் பெறுபவர் என நான்கு அடிப்படைகள் இருக்கக் காணலாம். தொடர்பு வழிமுறையின் கருவுள் core எனலாம். நல்லத் தொடர்பாளர் நற்செய்தியினை அனுப்பும் போது செய்தியைப் பெற்றுக் கொள்பவரின் கவனத்தை ஈர்க்கும் அளவில் கவர்ச்சியடையதாகச் செய்தியினை வடிவமைக்க வேண்டும். நல்லதொரு தொடர்பாளராக

இயேசு தாம் அனுப்ப வேண்டிய இறையரசின் செய்தியைக் குறித்த தெளிவுடன் நற்செய்தியைத் தொடர்புபடுத்தினார். தமது போதனையின் மையமாக இறையரசினை முதன்மைப்படுத்தினார். இதனைக் குறித்து,

காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி விட்டது. மனம் ........ நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு 1 : 15).

அவர் கலிலேயாப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார் . . . விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார் . . . குணமாக்கினார் (மத். 4 :12-17) என நற்செய்தியாளர்கள் இயேசுவின் இறையரசின் செய்தியின் முதன்மையை புரிந்து கொண்டதாக தங்கள் நூற்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இயேசு தாம் பயன்படுத்திய பெரும்பாலான உவமைகளில் இந்த இறையரசின் மையச் செய்தியினை குறிப்பிட்டார். எ.கா. மத். 13-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள 8 உவமைகள் இறையரசு என்ற ஒரேக் கருத்தை மையமாகக் கொண்டதாகும். நற்செய்தி குறித்த எந்த ஒரு குவிமையமும், இல்லாமல் தங்களைப் பற்றியும், தங்கள் நிறுவனங்களைக் குறித்தும் உணர்வு சார்ந்து வீரமுழக்கமிடும் வகையில் அருளுரைகள் ஆற்றப்படும் இந்நாட்களில் இறைமக்களும் இறைப்பணியரும் இறையரசினை மையப்படுத்தி, சமூக மாற்றத்தை வலியுறுத்தும் அருளுரைகள் திருச்சபையின் அருளுரை மேடைகளை நிரப்பவேண்டுமென்ற நிலையில் செயல்படவேண்டும். இந்நிலையில் இயேசு நல்ல தொடர்பாளர் என சிந்திக்கும்போது அவர் . . .

### மக்கள் மொழி சார்ந்த தொடர்பாளர்

மொழி நமது முழு வாழ்வையும் வடிவமைக்கின்றது. மொழி நம்மை அடையாளங்காணவும் உருவாக்கவும் மற்ற மக்களோடு உறவை வளர்த்துக் கொள்ளவும் நன்கு உதவுகின்றது. நற்செய்தியை ஆக்கப்பூர்வமாகத் தொடர்புப்படுத்த இயேசு பொதுவாக அரமேய மொழியை பேச்சு மொழியாகப் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டின் பின்வரும் சில எடுத்துக்காட்டுக்கள் அதற்குச் சான்றாகும்.

தலித்தா கூம் (மாற். 5 : 41)

ஏலோயி, ஏலோலி, லெமாசபக்தானி (மாற். 15 : 34)

பாஸ்கா (மாற்கு 14 : 14; மத்.26 : 21)

ஓய்வுநாள் Sabbath (மாற்கு 3 : 4, மத். 12 : 5)

அரமேய மொழி முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தின் நாட்டு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியாகும். இதுவே இயேசுவின் தாய் மொழி என அறியப்படுகின்றது. மேலும் ஏல் (மத். 27 : 46) எப்பத்தா (மாற்கு 7 : 34) கொர்பான் (மாற்கு 7 : 11) போன்ற எபிரேய வார்த்தைகளை இயேசு பயன்படுத்தியிருப்பதால் எபிரேய மொழி அறிவும் இயேசுவிடம் காணப்பட்டது எனலாம். மேலும் பாலஸ்தீனத்தில் பேசப்பட்ட கிரேக்க மொழி குறித்த அறிவும் இயேசுவிடம்அமைந்திருந்தது எனலாம். எ.கா. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குறித்த உரையாடல் (மத். 8 : 5-13) சிரோபேனிக்கேயா நாட்டுப் பெண்ணுடன் உரையாடல் (மாற்கு 7 : 24-30) சிறப்பாக மக்களின் சூழலிற்க்கேற்ப இயேசு மொழியினைப் பயன்படுத்தினார். யோவான் 3-ம் அதிகாரத்தில் நிக்கோதேமுடன் அவரது நிலைக்கு ஏற்ப பேசினார். மறுபடியும் பிறத்தல், இறையரசு இருளில் வெளிச்சம் போன்ற இறையியல் சார்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அதுபோல் யோவான் 4-ம் அதிகாரத்தில் சமாரியா நாட்டுப் பெண்மணியுடன் அவர்தம் தேவையுடன் ஒன்றுபட்டு பேசினார். தனி ஆள்த்துவ நிலையில் பேசி அவரது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தினார். நம் நாட்டில் பணிபுரிந்த மேலைநாட்டு அருட்பணியாளர்கள் கால்டுவெல், போப், சீகன்பால்க் போன்றவர்கள் தமது அருட்பணியில் பணிக்களம் சார்ந்த மொழிகளை நன்கு கற்று நற்செய்தியினைத் தொடர்புபடுத்தினர். நாம் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டு பணிபுரிய வேண்டும்.

**பல்சமயக் சூழலில் சிறப்பானத் தொடர்பு**

நற்செய்தி நூல்களைப் படித்துப்பார்க்கும்போது இயேசு இதர சமய மக்களின் பாரம்பரியங்களையோ பழக்க வழக்கங்களையோ பழித்துரைக்கவோ திறனய்வு செய்ததாகவோ கூறமுடியாது. ஆனால் அதேநேரத்தில் தான் சார்ந்திருக்கும் யூத சமயத்தின் வாழ்விழந்த பாரம்பரியங்களைத் திறனாய்வு செய்தார். இயேசுவுக்கு இதர சமய மக்களுக்குமிடையோன ஆரோக்கியமான உறவு நிலையைத் திருமறை சுட்டிக்காட்டுகின்றது. இயேசுவின் பிறப்பு “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி” என்கிறார் (லூக்கா 2 : 10, 11). உலகிற்கு மீட்பு வழங்க தம் திருமகனை கடவுள் உலகிற்கு ஈந்திட்டார் என யோ. 3 : 16, 17-ல் காண்கிறோம். இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை (மத். 8 : 10) என நூற்றுவர் தலைவரின் பற்றுறுதியைப் பாராட்டினார். கானானியப் பெண்ணின்

பற்றுறுதியைப் பாராட்டினார் (மத். 15 : 28). சிறப்பாக யோவான் 4-ம் அதிகாரத்தில் யூதரால் புறக்கணிக்கப்பட்ட சமாரியா நாட்டுப் பெண்ணுடன் உரையாடினார். இனம், கலாச்சாரம் தாண்டி, பாவியென அறியப்பட்ட பெண்ணுடன் உரையாடல் வழி தொடர்பு கொண்டார். வாழ்வுதரும் தண்ணீர் (living water) என்ற செய்தியுடன் புறக்கணிக்கப்பட்ட பெண்ணுடன் தொடர்பு கொண்டு நற்செய்தியுடன் உலகளாவிய கரிசனையினை வெளியிட்டார். கானானிய பெண் மற்றும் சமாரியப் பெண்களுடனான இயேசுவின் தொடர்பு பல்சமய சூழலில் கிறிஸ்தவ சாட்சிக்கு பெரிய எடுத்துக்காட்டாக அமைந்தது. அறிவர் ஸ்டான்லி சமர்த்தா அவர்கள் குறிப்பிடுக்கையில் பல்சமய சூழலில் அருட்பணியில் உரையாடல் முறையில் ஈடுபடும் நமக்கு “ஒப்படைப்பும் திறந்தமனமும் தேவை” என்கிறார். அதாவது நாம் ஒருவருக்கும் கிறிஸ்தவப் பற்றுறுதியின் ஒப்படைப்பும், இதர சமயம் குறித்த திறந்த மனம் கொண்ட பார்வையும் தேவை. எனவே இன்றைய இந்திய பல்சமயச் சூழல் இன்றைய ஆட்சியாளர்கள் தரும் பல நெருக்கங்கள் துன்பங்கள் நாம் நற்செய்தியின் சாரம்சத்தில் வாழவும், நற்செய்தியைத் தொடர்புப்படுத்தவும் தடையில்லை எனலாம். பேராயர் செல்வமணியவர்கள் கூறும்போது “Religious plurality is not an obstacle but it is an oppertunity” என்பதைப் போன்று சமயப்பன்மை நற்செய்தி அறிவிப்பின் வாய்ப்பாகும் என்பதைப் புரிந்து கொண்டு, இயேசுவைப் போன்று நற்செய்தியினைத் தொடர்படுத்த நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. W. **ஸ்டான்லி ஜோன்ஸ்**

| 𝄞 | ஞா. 7 அல்லது 8 |
|---|---|
| | கீர். 439 அல்லது 424 |

(இந்த அருளுரை குறிப்பிட்ட நாளைத் தொடர்ந்து ஏதாவது ஒரு தொழுகையில் ஆற்றுவது பயனுள்ளதாயிருக்கும்)


**28-05-2023** பெந்தக்கோஸ்து ஞாயிறு

# வாரும் தூய ஆவியாரே, முழுப் படைப்பையும் மாற்றுருவாக்கும்

## Come Holy Spirit Transform the Whole Creation

எசே. 36 : 24-36 தி.ப. 2 : 1-13

தி.பா. 29 யோவா. 20 : 19-23



. . . தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். (தி.ப. 1 : 8)

தூய ஆவியார் வருகை மாற்றுருவாக்கத்தின் செய்தி என்பதைத் தனிநபருக்குரிய செயல்பாடாகப் பார்க்காமல் இறையவர் அனைத்துப் படைப்புக்குரிய செய்தியாக பரந்த கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். இத்தகைய சரியான புரிதல் இன்மையால் பல்வேறு குழப்பங்களும் பிரிவினைகளும் கருத்து மோதல்களும் தற்கால கிறிஸ்தவர்களிடத்தில் காண முடிகிறது. தூய ஆவியார் குறித்துக் கிறிஸ்தவ பிரிவினரின் விளக்கங்கள் இன்று பல வினாக்களுக்கும், குழப்பங்களுக்கும், ஐயங்களுக்கும் இடமளிக்கும் போதனைகளாக அமைந்துள்ளன. இந்த ஆவியார், பழைய ஏற்பாட்டுக்கால பின்னணியில் உருவமற்று வெறுமையாக இருந்த மண்ணுலகில் உயிரினங்கள் தோன்றவும், இயங்கவும் துணைபுரிகிறார். உருவமற்று அனைத்துமே அசைவற்று கிடக்கிற நிலையில் கடவுளின் ஆவியார் மட்டுமே அங்கு அசைவாடிக் கொண்டிருக்கிறார், இயங்கிக்கொண்டிருக்கிறார் (தொநூ. 1 : 2). இயல்பிலேயே அவருடைய இயங்குத்தன்மை - உயிராற்றல் காணக்கிடக்கிறது. பிறகுதான் படைப்பே பரிணமிக்கிறது. மானிடரைப் படைத்தபோதும், களிமண்ணின் மீது "ரூவா" எனப்படும் உயிர்மூச்சை ஊதிய போது அவர் உயிருள்ளவரானார் என விவிலியம் விளம்புகிறது (தொநூ. 2 : 7). இவ்வாறு உருவாக்கும் ஆற்றலையும், உய்விக்கும் சக்தியையும் இயல்பாகவே தூய ஆவியார் கொண்டிருக்கிறார்.

படைப்பின்போது உயிரோட்டத்துடன் செயல்பட்ட தூய ஆவியார் பராமரிப்பின் போதும் அதே உத்வேகத்துடன் செயல்பட்டார். மோசேயுடன் தூய ஆவியார் தங்கி ஆற்றல் அளித்து ஆண்டவரின் அளப்பரிய கருவியாகச் செயல்பட துணைபுரிந்தார் (எண். 11 : 25). யோசுவாவை

ஆட்கொண்டு வழிநடத்தினார் (எண். 27 : 18). மனாசே வழிமரபில், யோவாசின் நலிவுற்ற குடும்பத்தில் சிறியவராக இருந்தவர் கிதியோன். ஆண்டவரின் ஆவியார் கிதியோனை ஆட்கொண்டு, இஸ்ரயேலரை மிதியானியர் கையிலிருந்து விடுவிக்க ஆற்றல் படுத்தியது (நீதி. 6 : 34). நீதித்தலைவர்களை வழிநடத்திய தூய ஆவியார், அடுத்த தலைமுறையினரையும் அவர்கள் அரசர்கள் தேர்ந்து கொள்ளும்போது கைவிடாமல் ஆற்றல் அளித்து வழிநடத்துகிறார். சவுலை, தாவீதை, சாலமோனை ஆசீர்வதித்துத் திறம்பட வழிநடத்துகிறார்.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவரின் உயிர்ப்பு ஆறுதலைத் தந்தாலும் சரியான புரிதலின்மையால் திருத்தூதுவர்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அச்சம் அகலவில்லை. கதவுகளை மூடி உயிருக்கு அஞ்சிய கோழைத்தனம் குறையவில்லை. சீடர்கள் தத்தளித்து அழைப்பில் தடுமாறிய சூழலில் இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதி அவர்களை ஆற்றல்படுத்தியது. வாழ்வுக்குரிய வழி தெரியாமல் எருசலேமில் தங்கும்படி செய்தார். படைப்பின் போது செயல்பட்டதுபோல "ஊதி தூய ஆவியரைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார். மானுடத்தைப் படைத்தப்போது உயிர் மூச்சை ஊதியதுப் போன்று அவருடைய திருத்தூதுவர்கள் மீதும் புதிய படைப்பாகிட ஊதுகிறார் அவர்களை மாற்றுருவாக்கம் செய்கிறார். எப்படி ஆதாம் ஆண்டவரின் ஆவியரால் இறையவர் சாயல் ஆனாரோ அப்படியே திருத்தூதுவர்களும் கிறிஸ்துவின் சாயலாக மாறுகின்றனர்.

தொடக்க காலத் திருச்சபையில் பன்மொழி கலாச்சாரத்தைக் கொண்ட மக்கள் ஓரிடத்தில் கூடி மொழி வேற்றுமையில் தெளிவான புரிதலை அனுபவிக்க காரணமாயிருந்தது (திப. 2). ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு (2 கொரி. 3 : 17). தூய ஆவியார் ஆள்தன்மையுடையவர் (ஏசா. 34 : 16) வரலாற்றில் அவர் இறையவர் ஆற்றலாக அனுப்பப்படுகிறார். இறையவர் மானுடத்துடன் கொள்ளும் உறவில் ஆவியார் இணைப்பாக உள்ளார். உமது ஆவிக்கு மறைவாக எங்கே ஓடுவேன்? எனத் திருப்பாடகர் கூறுகிறார் (திப. 139 : 7). இங்கு ஆவியார் கடவுளின் எழுந்தருளாக உலகிலும், அடியார்களின் வாழ்விலும் நிறைந்திருக்கிறார். தூய ஆவியார் எவ்வாறு முழுபடைப்பையும் மாற்றுருவாக்கம் செய்கிறார் என்பதைச் சிந்தனை செய்வோம்.

**1. தூய்மைப்படுத்தும் தூய ஆவியார்** (எசே. 36 : 24-36)

தூய்மையில்லாமல் மானிட வாழ்வில் மாற்றுருவாக்கம் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் இல்லை. எசேக்கியேல் என்னும் பெயருக்கு "ஆண்டவர் ஆற்றல் அளிப்பவர்" என்பது பொருள். இஸ்ரயேலருள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டோருக்கு மட்டுமன்றி, எருசலேமில் எஞ்சியிருந்தோருக்கும் இறைவாக்கு உரைத்தார். எசேக்கியேல் 2 : 1, 2 ஆகிய வாசகங்களில் எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பு உள்ளது. இறையவர் எசேக்கியேலை நோக்கி, "மானிடா எழுந்து நில்" என்றார். இறைத்திருமுன் நிற்க ஆற்றலின்றி எசேக்கியேல் விழுந்து கிடக்க ஆவியார் அவருள் புகுந்து அவரை நிற்கச் செய்து, இறையவர் பேசியவற்றைக் கேட்டார். ஆவியார் எசேக்கியேலில் புகுந்து அவர் வாழ்வை மாற்றுருவாக்கம் செய்து ஆற்றல்மிக்க செயல்களுக்கு அவரை வழிநடத்தினார். ஆவியரால் ஆற்றல்படுத்தப்பட்ட இறைவாக்கினர் எசேக்கியேல், இஸ்ரவேலருக்கு இறையவர் அருளும் புதுவாழ்வு குறித்து இறைவாக்குரைத்தார்.

இறையவர் மானுடத்தைத் தூய்மைப்படுத்தித் தூய்மையான பண்புடைய மக்களினமாக்குகிறார். ஆகவே இஸ்ரயேலரை மாற்றுருவாக்கம் செய்து தூய்மைப்படுத்தும் வாழ்வை அருளும் இறையவர், இஸ்ரயேலரின் மறு ஆக்கத்தைப் பற்றிப் பேசும் முன் அவர்களின் சீர்கேட்டை நினைப்பூட்டுகிறார் (எசே. 36 : 16-23). இஸ்ரயேலரை மாற்றுருவாக்கம் செய்து புது வாழ்வை அருளும் ஆவியார். அவர்களின் மாற்றுருவாக்கத்தின் முதற்படியாக அவர்களிடத்திலுள்ள தீட்டை நீக்கி அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். இங்கே தீட்டு என்பது லேவியர் நூலில் சொல்லப்படும் தூய்மையின்மை அல்ல, மாறாக உள்ளத்திலிருக்கும் தீய குணங்களே. இவற்றிலிருந்து விடுபடுவதே தூய்மைப்படுதலின் அடையாளம். தூய பவுலார் தூய்மையாக்குதலை கொரிந்து திருச்சபையாருக்கு எழுதிய முதல் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பரத்தமையில் ஈடுபடுவோர், சிலைகளை வழிபடுவோர், விபச்சாரம் செய்வோர், தகாத பாலுறவு கொள்வோர், ஒருபால் புணர்ச்சியில் ஈடுபடுவோர், திருடர், பேராசையுடையோர், குடிவெறியர், பழிதூற்றுவோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை.... ஆனால் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலும் தம் கடவுளின் ஆவியராலும் கழுவப்பட்டுத் தூயவரானீர்கள்; கடவுளுக்கு ஏற்புடையவராகவும் இருக்கிறீர்கள் (1 கொரி. 6 : 9-11).

மாற்றுருவாக்கத்தின் இரண்டாவது படியாக இறையருளால் தீய குணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மன்னிப்பு பெற்றவருக்கு இறையவர் புதிய இதயத்தையும், புதிய ஆவியாரையும் அருளுகிறார். இதயம் என்பது நம்முடைய ஆள் தத்துவம் முழுவதையும் குறிக்கிறது. இந்த மாற்றத்தை நிலையானதாக்க இறையவர் தம் ஆவியாரை நமக்குள் ஊற்றவேண்டும். இந்த ஆவியார் மாற்றுருவாக்கப்பட்டவருக்குப் புத்துயிர் அளித்து மீண்டும் தீமையில் விழாதவாறு காத்துச் செம்மையான பாதையில் பயணிக்க ஆற்றலை அருளுவார். இஸ்ரயேலரை மாற்றுருவாக்கம் செய்து புதுவாழ்வை அருளும் இறையவர். சிதறுண்ட இஸ்ரயேலரின் பாவங்களிலிருந்து அவர்களைத் தூய்மையாக்கி அவர்களின் நகரில் மீண்டும் குடியமரச் செய்வார். அவர்களின் அழிவிடங்களைக் கட்டியெழுப்புவார். பாழான நிலம் பயிர் செய்யப்படும், அது ஏதேன் தோட்டம் போல் ஆகும் என்கிறார். ஆக மானுடத்தை மாற்றுருவாக்கம் செய்யும் இறையவர் அவர்களுக்கு அருளும் புதுவாழ்வு மிகவும் சிறப்பானது (செழுமையானது). இறைமக்களாகிய நாம், நம் பாவ வாழ்வை விட்டு இறையவரைச் சார்ந்து வாழ்வோம்.

## 2. புதியவராக்கும் தூய ஆவியார்

தூய ஆவியார் செயல்பாடுகள் தூய்மைப்படுத்துதலோடு நின்றுவிடுவதில்லை. மாறாக நம்மைப் புதியவராக்குவதுடன் நம்மை பார்ப்பவர்களுக்கும் புதியவராகக் காட்டுகிறார். தூய ஆவியார் மானுட வாழ்வை மாற்றுருவாக்கம் செய்து புதியவராக்குகிறார். தூய ஆவியரைத் தருவதாக இறையவர் அருளிய வாக்குறுதி எசா. 44 : 3 இல் உள்ளது. தூய ஆவியாரை இறைமகன் இயேசு கிறிஸ்து தருவதாக இரண்டு இடங்களில் (யோ. 14 : 16-20, 16 : 5-10) வாக்களித்துள்ளார். இரண்டு இடங்களிலுமே தூய ஆவியாரைக் குறித்து சான்று பகர்ந்துள்ளார். தூய ஆவியாரை துணையாளர், உண்மையை எடுத்துக்காட்டுபவர், உங்களோடு தங்குபவர், உங்களுக்குள் இருக்கிறவர் என்றெல்லாம் இறைமகன் இயேசு கிறிஸ்து சான்று பகர்ந்துள்ளார். திருத்தூதுவர்களின் புதுமைச் செயல்களில் மையமாக அமைவது தூய ஆவியராவார். நற்செய்திப் பணியின் துவக்கமாய் அமைந்து செயல்படுத்தும் ஆற்றல் அருள்பவர் தூய ஆவியார். தூய ஆவியாரின் ஆற்றல் குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் அருளப்படுகிறது. தூய ஆவியார் புதுமைகளை நிகழ்த்தி புதியவர்களாக சமூதாயத்தில் வாழ்வதற்குரிய வழி செய்கிறார். எகா. பாஷைகள் பேசுவது (தி.ப. 10 : 46). எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவது (தி.ப. 11 : 28),

மானிடர்களின் சிந்தையை அறிவது (தி.ப. 5 : 1), அலகையின் பிடியிலிருந்து விடுதலை கொடுப்பது (தி.ப. 16 : 16).

தொடக்க காலத் திருச்சபை தூய ஆவியாரின் தன்மைகளை உணர்ந்து மாற்றுருவாக்கம் அடைந்த அனுபவம் புதுமைக்குரிய செயல்களின் ஆன்மீக அடையாளமாக இன்றும் அறியப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வு பெந்தேகோஸ்தே அனுபவம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அனுபவம் மக்களைப் புதியவர்களாக்கும் அனுபவமாகவே பார்க்க வேண்டியுள்ளது. பெந்தேகோஸ்தே பெருநாளில் பொழியப்பட்ட தூய ஆவியரால் பலமொழிகள் பேசும் மக்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். மொழிகள் வேறானாலும் சிந்தனையால் ஒன்றுபட்டு நின்றனர். இறைப்பற்றுள்ளவர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்டனர். ஒரே இனம் என்ற ஒருமைத்துவத்தை அடைந்தனர். சமுதாயம் சமைக்கப்பட்ட ஒன்றாக, பக்குவப்பட்டு நிற்கிறது. ஒருவர் பிறரது குற்றங்களை மன்னிக்கின்றனர். மானிட நேயமும்அன்பும் மலர்ந்து நிற்கிறது. இத்தகைய புதுமைகள் தூய ஆவியரால் சமுதாயத்தில் ஏற்பட்டது. வேற்றுமைகளைக் களைந்து புதியவர்களாக அல்லது புதிய சமுதாயமாக வாழ உதவிச் செய்கிறார்.

தூய ஆவியார் வருகை திருச்சபையை நிர்மாணிக்கிறது. தூய ஆவியார் வருகையால்தான் பெந்தேகோஸ்தே பெருவிழாவில் திருச்சபை அமைப்பாக, இயக்கமாக கட்டியெழுப்பப்படுகிறது. படிக்காத பாமரரான பேதுரு தூய ஆவியார் வருகைக்குப் பின் மிகச் சிறந்த தலைவராக, தலைமைத் திருத்தூதுவராக, புதுமை செய்பவராக செயல்பட்டு, நடக்க இயலாதவரை நலமாக்கினார் (தி.ப. 3), ஐனேயா நலம் பெற்று (தி.ப. 9 : 23-35). திருச்சபையை வழிநடத்தினார். தூய ஆவியார் கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையை மறுமலர்ச்சி அடையச் செய்கிறார். கட்டி எழுப்புகிறார். பிரிவினைகளைக் களைந்தெறிகிறார். ஒருவர் மற்றவருக்கு எதிரான நிலைகளைத் தகர்த்தெறிகிறார். திக்கெட்டும் சிதறிய சீடர்களை அரவணைத்துத் திருச்சபையை ஒருங்கிணைப்பவர் தூய ஆவியார். புதுமை அருளும் தூய ஆவியரில் ஒன்றித்து வாழ்வோம்! இறையாசி பெறுவோம்!.

### 3. புதுமை காட்டும் தூய ஆவியார் (யோவா. 20 : 19)

மாற்றுருவாக்கம் என்பது புதுமைகளை உள்ளடக்கியது. அவைகளை நமக்கு தூய ஆவியார் காட்டுகிறார். தூய ஆவியார் மானுட

வாழ்வை மாற்றுருவாக்கம் செய்து புதுமை செய்கிறார்.இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடு எல்லாம் முடிந்தது என்றிருந்தது. ஆனால் கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு நம்பிக்கையை விதைத்தது. ஆனாலும் அச்சம் திருத்தூதர்களை விட்டு அகலவில்லை. தூய ஆவியார் வருகைக்கு முன்னர், சீடர்கள் கோழைகளாகவும், உயிருக்கு அஞ்சி ஓடியவர்களாகவும் இருந்தனர். சமய, அரசியல் தலைவர்களுக்கும், ஏன் அரண்மனை பணிப்பெண்ணுக்கும் கூட அஞ்சினர், கைது செய்த போது ஓடி ஒளிந்தனர். இயேசு கிறிஸ்துவை மறுதலித்தனர். உயிர்த்த கிறிஸ்து புதுமைகளைக் காட்டி அவர்களைப் புத்தாக்கம் செய்யும் பணியில் ஈடுபடுகிறார். அச்சத்துடன் வாழ்வது கிறிஸ்துவின் சீடர்களுக்கும், அவரைப் பின்பற்றியவர்களுக்கும் அழகல்ல என்பதை வலியுறுத்தி மாற்றுருவாக்கத்துடன் கூடிய புதுமை நிறைந்த காட்சிகளைக் காட்டி உயிர்த்தெழுதலுக்குப் பின் ஆற்றல்படுத்துகிறார். கோழையர்களை வீரர்களாக, பாமரர்களை மீட்பின் நற்செய்திக்குச் சான்றாளர்களாக (திப. 2 : 24-32) உயிரைப் பணயம் வைத்து சிறை செல்ல, துணிவு பெறும் மானிடர்களாக மாற்றப்படும் அனுபவங்களை அருள்கிறார். அச்சத்துடன் இருந்த இவர்கள், தூய ஆவியரால் ஆட்கொண்டவர்கள் முன்நின்று "நீங்கள் தான் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்" (திப. 2 : 23) என்று துணிவுடன் கூறினர். ஆக பெந்தேகோஸ்தே நாளன்று தூய ஆவியார் முதல்முறையாக கிறிஸ்துவின் சீடர்களை முழுமையாக ஆட்கொண்டு, அவர்கள் இயேசு கிறிஸ்துவை நற்செய்தியாக அறிவிக்க மனோதிடத்தைக் கொடுத்து அவர்களைப் புத்தாக்கம் செய்தார். அதுவரை மூடப்பட்ட கதவுக்குப் பின்னால் அஞ்சி, முடங்கிக் கிடந்த சீடர்கள் துணிச்சலோடு இயேசு கிறிஸ்துவுக்குச் சாலமோன் மண்டபத்திலும் (திப. 3 : 11-26). யூதத் தலைமைச் சங்கத்தின் முன்பும் சான்றுபகரத் தொடங்கினர். தூய ஆவியரால் புத்தாக்கம் பெற்று சாட்சிய வாழ்வு வாழ்ந்தனர். திருத்தூதுவர்களால் துன்புறுத்தப்பட்டனர். ஆயினும் திருத்தூதுவர்கள் அனைத்தையும் மகிழ்ச்சியோடு தாங்கிக் கொண்டனர் (திப. 5 : 17-42).

வட இந்தியாவில் அருட்பணியாளர் (Missionary) திருப்பணி வழியாக ஆதிவாசி மக்கள் பலர் மனம்மாறி இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டனர். இந்து சமய அடிப்படைவாத இயக்கத்தினர் அருட்பணியாளருக்கு எதிராக வழக்கு தொடுத்தனர். அவர் கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணைக்கு வரவே நீதிமன்றத்தில் நடுவர் முன் நிறுத்தப்பட்டார். சான்று சொல்ல மனம்மாறிய ஆதிவாசி மக்கள் சிலர் நடுவர் முன் நிறுத்தப்பட்டனர். நடுவர் சான்றுக்காக

கொண்டுவரப்பட்ட ஆதிவாசி மக்களிடம், நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு இந்து சமயத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு சமய மாற்றம் செய்யப்பட்டீர்களா? என வினாவினார். அதற்கு அவர்கள் ஐயா உங்கள் வினாவே தவறு. எங்களுக்கு இவர்கள் சொல்லும் கிருஷ்ணரையும் தெரியாது. இராமரையும் தெரியாது. நாங்கள் ஆவிகளை வழிபடும் மக்கள். எங்களை இந்து எனக் குறிப்பிடுவது தவறு. குடும்பமாய் சாராயம் குடித்து, எங்கள் குழந்தைகளுக்கும் கொடுத்து வாழ்ந்த எங்கள் வாழ்வை மாற்றியமைத்தவர்கள் இந்த அருட்தொண்டர் தான். இன்று நாங்கள் மனம்மாறி நல்லவர்களாக வாழ்வதற்கு இவர் தான் காரணம் என்றனர். இப்பதிலைக் கேட்டு நடுவர் அதிர்ந்து போனார். பொய் குற்றம் சுமத்திய பஜ்ரங்தல் அமைப்பினரையும், தவறான அறிக்கை சமர்பித்த காவல்துறை அதிகாரிகளையும் கண்டித்து, வழக்கை தள்ளுபடி செய்தார். அருட்பணியாளர் திருப்பணி, ஆதிவாசி மக்கள் வாழ்வை மாற்றுருவாக்கம் செய்தது.

மாற்றுருவாக்கத்தின் புதிய பாதை என்பது புத்தாக்கம் பெற்று கடமைகளைத் தொடர்வதாகும். முடக்கமான நிலைகள் மாறி முழுமையான ஈடுபாட்டுடன் இயேசு கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவிப்பதேயாகும். புத்தாக்கத்தின் மாற்றங்கள் மாற்றுருவாக்கத்தின் முன்னேற்றங்களாகப் பார்க்கப்படுகிறது. தூய ஆவியார் அனைவரையும் புத்தாக்கம் செய்து ஒருங்கிணைக்கிறார். கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்புகிறார். தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் புத்தாக்கம் பெற்று இறைத்திருவுளம் நிறைவேற்றி வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அனைவரையும் ஒருங்கிணைந்து வழிநடத்தும் தூய ஆவியாரிடம் சரணாகதி அடைந்து, அவரில் புத்தாக்கம் பெற்று இறைத்திருவுளம் நிறைவேற்றி வாழ்ந்து இறையாசியைப் பெறுவோம்.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 43 | ஞா. | 437 |
| | கீர். | 30 | கீர். | 72 |


**02-06-2023** பேராயத் தொடக்க நாள்

# திருச்சபை : இறைமக்களின் சமூகம்

## Church : Community of the people of God

இச. 32 : 1-12 | 1 பேது. 2: 1-10

திபா. 136 | மத். 16: 13-19



" . . . இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்." மத்தேயு 16 : 18

**கன்னியாகுமரிப் பேராயத்தோற்றப் பின்னணி**

தென்திருவிதாங்கூர் பேராயத்தைப் பிரிக்கும் திட்டத்தை ஆராய 1958 ஆகஸ்ட் 28, 29 தேதிகளில் திருவனந்தபுரத்தில் பேராய மாமன்றக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராயத்தைப் பிரிக்கும் வாக்கெடுப்பில் பெரும்பான்மை அடிப்படையில், பேராயர் A.H.லெக் அவர்கள் பேராயம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்பதை முறைப்படி அறிவித்தார். ஆகவே தென்திருவிதாங்கூர் பேராயம், தென்கேரளப் பேராயம் எனவும் கன்னியாகுமரிப் பேராயம் எனவும் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை தென்னிந்தியத் திருச்சபை காரிய நிர்வாகக் குழுவுக்கு அனுப்பி அதன் முடிவைப் பெற்றுக் கொள்ளவும், பிரதமப் பேராயரின் வசதியைப் பொறுத்து பேராயத்தை 1.6.1959 அன்றோ அல்லது அதற்கு முன்போ தொடங்கி வைக்கக் கேட்டுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

1958 செப்டம்பர் 16, 17 ஆகிய தேதிகளில் கூடிய சினாட் நிர்வாகக் குழுவில் கன்னியாகுமரிப் பேராயம், தென்கேரளப் பேராயம் என இரண்டு பேராயங்களாக 1959 ஜூன் மாதம் முதல் செயல்படத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் 2.6.1959 அன்று நடைபெற்ற தென் திருவிதாங்கூர் பேராயத்தின் இறுதிக்கூட்டத்தில் பிரதமப் பேராயர் கலந்துகொண்டு தென் கேரளப் பேராயம், கன்னியாகுமரிப் பேராயம் ஆகிய இரு பேராயங்கள் உருவாக்கப்பட்டதை அறிவித்தார். இதன் விளைவாக, கன்னியாகுமரிப் பேராயம் 1959-ஆம் ஆண்டு ஜூன்2-ஆம் நாள் உருவானது.

தென் திருவிதாங்கூரில், நற்செய்திப் பரப்புரை செய்த கனம் ரிங்கல்தௌபே, முதற்கனி மகராசன் வேதமாணிக்கம் அவர்களால் நற்செய்தி என்னும் அருட்கொடையைப் பெற்று, இறைப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. கல்வி, மருத்துவம், பெண்களின் மறுவாழ்வு, சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, கன்னியாகுமரிப் பேராயம் தென்னிந்தியத் திருச்சபைக் கூட்டுறவில் சிறந்த திருப்பணியாற்றி இறையரசுக்கு நேராக இறைமக்களை வழி நடத்தி வருகிறது. திருச்சபை: இறைமக்களின் சமுகம் என்ற அருளுரை செம்பொருள், திருச்சபை, இறைமக்களின் தூரதரிசனமான இறைவேண்டல், இறைப்படைப்புகளுடன் ஒன்றிணைந்த வாழ்வு, பிறசமய மக்களுடன் நல்லுறவு, துன்பத்தில் இருப்போருடன் உடனிருப்பு, பேராய அருட்பணிக் களங்களில்; பங்களிப்பு, கல்வி, மருத்துவம், பெண்கள், பெண் குழந்தைகள், மாற்றுத் திறன் படைத்தோர், முதியோர்கள் போன்றோரைத் திருச்சபையில் முன்னிறுத்தி **திருச்சபை: இறைமக்களின் சமூகம்** என்பதைச் சிந்திப்பதற்கு இறைவன் நம்மை அழைக்கிறார்.

### 1. இறைஉண்மையை வெளிப்படுத்தும் – இறைமக்களின் சமூகம்

*அவரே பாறை! அவர் செயல் நிறைவானது! அவர்தம் வழிகள் அனைத்தும் நீதியானவை! வஞ்சகம் அற்ற உண்மைமிகு இறைவன்! அவரே நீதியும் நேர்மையும் உள்ளவர்!* (இச. 32 : 4)

திருச்சபை இறைமக்களின் சமூகமாக உலகில் செயல்படுவதற்கு இறைமக்கள் உண்மை, நேர்மையினை வாழ்வில் வெளிப்படுத்தி வாழ இறைவன் விரும்புகின்றார். உண்மை, நேர்மைக்கு எடுத்துக்காட்டாக இறைவன் இருக்கின்றார். அவரைப் பின்பற்றுவோரும் உண்மை, நேர்மையாளர்களாக வாழ்வது நம் ஆன்மீக வாழ்வின் முதற்படியாகும்.

*அவர்தம் கேடுகெட்ட பிள்ளைகள் அவரிடம் பொய்மையாய் நடந்து கொண்டனர்: அவர்கள்; நெறிபிறழ்ந்த வஞ்சகம் மிக்க தலைமுறையினர்!* (இச. 32 : 5)

உலகில், திருச்சபையில், இல்லத்தில், தனிநபர் வாழ்வில் உண்மை இல்லை. யோவான் 14: 6-இல் *இயேசு வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை* என்கிறார். மத்தேயு 25: 21-இல் *. . . சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும்*

*வந்து பங்கு கொள்ளும்* எனப்பட்டுள்ளது. மோசேயைக் குறித்து எபிரேயர் 3 : 5-இல் *ஊழியன் என்னும் முறையில் மோசே கடவுளின் குடும்பத்தார் அனைவரிடையேயும் நம்பிக்கைக்குரியோராய் இருந்தார். கடவுள் பின்னர் அறிவிக்கவிருந்தவற்றுக்குச் சான்று பகர்வதே அவரது ஊழியமாயிருந்தது* எனப்பட்டுள்ளது. எனவே உண்மையுடன் வாழ்ந்து கிறிஸ்தவ நற்பண்புகளை வெளிப்படுத்தி இறைமக்களின் சமூகமாவோம்.

## 2. இறைவழி நடத்துதலைப் பெற்றுக்கொள்ளும் இறைமக்களின் சமூகம்

*பாழ்வெளியில் அவர் அவனைக் கண்டார்; வெறுமையான ஓலமிடும் பாலையில் அவனைக் கண்டார்; அவர் அவனைப் பாதுகாத்துப் பேணினார்; கண்ணின் மணியென அவனைக் காத்தருளினார்.* (இச. 32: 10).

அடிமைத்தனத்தின் கோரத்தில் அகப்பட்டிருந்த கடவுளின் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டுப் பாலும் தேனும் நிறைந்த கானானுக்கு நேராக வழி நடத்தப்படடார்கள். விடுதலையின் மகிழ்வை முழுமையாக அனுபவமாக்கும் பயணமாக பாலை நிலப் பயணம் அமையவில்லை. பாடுகளும் பாதிப்புகளுமான பயணமாய் இருந்தபோது கடவுள் அவர்களைப் பேணிப் பாதுகாத்து கண்ணின் மணியென அவர்களைச் சேதமின்றிக் காத்தருளினார். அழிவை அனுமதியாது அடைக்கலம் அருளும் இறை வழி நடத்துதலை வழங்கினார்.

*கழுகு தன் கூட்டின்மேல் அசைத்தாடித் தன் குஞ்சுகளின் மேல் படர்ந்து அணைப்பது போலும், தன் சிறகுகளை விரித்து அவற்றைச் சுமந்து செல்வது போலும் அவற்றைத் தன் சிறகுகளில் சுமப்பது போல் ஆண்டவர் ஒருவரே அவனை வழிநடத்தினார் . . .* (இச. 32 : 11, 12) என்பது கடவுளின் வழிநடத்துதலை உணர்த்துகிறது. எனவே கடவுளைச் சார்ந்து அவரது நடத்துதலைப் பெற வாஞ்சிக்கும் திருச்சபைக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கி இறைமக்களின் சமுகமாக்குகிறார்.

## 3. இறையாளுகையில் பங்கு கொள்ளும் இறைமக்களின் சமூகம்

*இத்திருச்சட்டத்தின் எவ்வார்த்தையும் வீணானதல்ல. அதுவே உங்களது வாழ்வு . . . இந்த வார்த்தைகளால் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்* (இச. 32: 12).

உலகில் வாழ்வது கொஞ்ச நாட்கள், இறைவார்த்தையின்படி

இறைப்பணியில் பங்குபெற்று வாழும் இறைமக்கள் அவர் ஆளுகையில் பங்குபெறும் மாபெரும் பாக்கியத்தைப் பெறுவார்கள். இச. 32: 13 முதல் 40 வரையிலுள்ள வசனங்களில் இறை உண்மையுடன், இறைவழி நடத்துதலைப் பெற்றுகொண்ட இறைமக்கள் இறைவிருப்பத்திற்கு உடன்படாமல், மீறி நடந்து, தண்டனைக்குள்ளானார்கள். இறையாளுகையில் பங்கு கொள்ள இயலாமல் போயிற்று. நாமும் இறையாளுகையில் பங்குகொள்ள, இறைவன் விரும்பும் வாழ்வு வாழ்வது சிறப்பு.

1 பேதுரு 2 : 1 - 10 ஆகிய வசனங்களில் கடவுளுடைய மக்கள், இரக்கம் பெற்று அவர் அளிக்கும் இறையரசில் பங்குகொள்ள விரும்புகிறார். அத்தகையோரிடம் விண்ணரசின் திறவு கோல்களைத் தருவதாக வாக்கு பண்ணியுள்ளார் (மத்தேயு 16: 19).

இறைஉண்மையை வெளிப்படுத்தி, இறைவழி நடத்துதலுடன் அனுதினமும் வாழ்ந்து இறையாளுகையில் பங்குகொள்ளும் திருச்சபையாக இறைச் சமுகமாக அன்பினால், பண்பினால், பகிர்வதினால் இறைச்சான்றுடன் உலகில் வாழ்ந்து இறையரசுக்குரியவர்களாவோம்.

அருள்திரு. K. **எட்வின் ஜாண் தேவகுமார்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 433 | ஞா. | 354 |
| | கீர். | 513 | கீர். | 409 |

**04-06-2023** மாணவர் ஞாயிறு

# ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடை

## Wisdom and Knowledge : Gift of God

நீதி. 2 : 1-12 யாக். 3 : 13-18

திபா. 119 : 9-16 லூக். 2 : 41-52



உங்களிடையே ஞானமும் அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால் ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும். (யாக்கோபு 3 : 13)

**முகவுரை :**

சிறுவன் ஒருவன் தன்னுடைய ஏழ்மையில், மூன்றுவேளை உணவு கிடைப்பதே கேள்வியாக இருக்கும் நிலையில் படிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். விதவையான அவனுடைய தாயினால் அவனைப் பள்ளிக்கூடம் அனுப்ப இயலவில்லை. ஆனால் அந்தச் சிறுவன் எப்படியாவது கற்றுக்கொள்ள வேண்டும் என வாஞ்சித்தான். தான் தெருவில் கண்டெடுத்த உடைந்த மண்வெட்டியின் தகரத்தை இல்லத்தில் கொண்டு வைத்து கரிக்கட்டையால் அதில் எழுத்துக்களை எழுதி படித்து, எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டான். வளர வளர தன்னுடைய நண்பர்களிடமும், தெரிந்தவர்களிடமும், புத்தகங்களை இரவலாக வாங்கிப் படித்தான். எளிதாக புத்தகங்கள் கிடைக்காத அக்காலத்தில் சுமார் 15, 20 கிலோ மீட்டர்கள் நடந்து சென்று நண்பர்களிடம் புத்தகங்களை வாங்கிப்படித்தான்.

தன் தாயார் ஊட்டிய இறை அறிவோடு புத்தகங்கள், அனுபவங்கள் வாயிலாக அறிவைச் சேர்த்துக்கொண்டு இறையியலிலும் உலக அறிவிலும் சிறந்து வளர்ந்தார். இத்தகைய அறிவு தேடலும் அறிவு வளர்ச்சியும் (கர்த்தருக்கு பயப்படுதல்) பின் நாட்களில் உலகறியும் உன்னத இடத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர்வு பெற்றார். அவர் தான் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி “ஆபிரகாம் லிங்கன்”.

அவரது உலக அனுபவம் சார்ந்த அறிவும், இறை ஞானம் சார்ந்த இறை பயமும் தான் மானுடம் போற்றும் பண்பாளராக அடிமை

வியாபாரத்தை ஒழித்த மாமனிதனாக வரலாறு ஆபிரகாம் லிங்கனை உலகிற்கு உயர்த்தி காட்டுகிறது.

திருமறையில் நீதிமொழிகள் 2-ம் அதிகாரம் கடவுள் பயம் நம்மை ஞானவானாக்கும் எனச் சொல்லித் தருகிறது. இறைபயம் என்பது சமயச் சடங்குகளாலும், பக்தி பெருமையினாலும், குடும்ப பாரம்பரியங்களினாலும் வருவதன்று. மாறாக இறைநெறியோடு கூடிய அமைதி வாழ்வுக்குரிய உண்மை வாழ்வினிலே வெளிப்படுவதாகும். இதையே ஆபிரகாம் லிங்கனின் அறிவு தேடலிலும் (கல்வி) இறைப் பற்றிலும் காண்கிறோம். இதைத்தான் யாக்கோபு அடிகளார் தம் திருமுகத்தில் யாக்கோபு 3 : 13-ல் உங்களிடையே ஞானமும் அறிவும் உடையவர்கள் யாராவது இருந்தால் ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும் என்கிறார்.

இதனை முகவுரையாகக் கொண்டு ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடை எனும் தலைப்பில் இரண்டு கருத்துகளைத் தியானிப்போம்.

### I. **அறிவாற்றலில் வளம் காணுவோம்**

அறிவு சேர்த்தல் கல்வியால் வருவது. கல்வியின் நோக்கமே மனித அறிவை விரிவாக்கம் செய்வதுவாகும். இதனைத் தான் கண்டதையும் கற்றவன் மேதையாவான் என்ற முதுமொழி சொல் உணர்த்துகிறது.

அறிவில் தெளிவு பெற்றவன் பண்பட்டவனாக, பண்பாளனாக இருப்பான் என்பதையே யாக்கோபு அடிகளார் அறிவு தன்னடக்கத்தோடு கூடிய நன்னடத்தையில் தான் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கிறார். பாரதியார், “படித்தவன் பாவமும் பழியும் பண்ணுகிறான் ஐயோ நொந்து போவான் என்று பாடுகிறார்.

கல்வி என்ற அறிவு சேர்க்கையைப் பணம் சம்பாதிக்கும் வழியாகவும், பட்டம் பெற்று பதவியை அடைந்து அதிகாரத்தைக் கைப்பற்றி கொள்வதற்காகவும், மற்றவர்களைக் குறிப்பாக படிக்காதவர்களையும் ஏழைகளையும் அடிமைப்படுத்துவதற்காகவும் பயன்படுத்துவது தீமையானது. அதோடு சமூகக் சீர்கேடுகளுக்கும், ஏற்றத்தாழ்வுகள் அடங்கிய, சமத்துவமற்ற சமூக அமைப்புள்ள தீமையான சமூகத்தைக் கட்டமைப்பதற்குக் கல்வி பயன்படுத்தப்படுவது வேதனையானதாகும்.

பட்டங்கள் பத்து வைத்திருந்தாலும் பண்பும் பணிவும் இல்லையென்றால் அது அறிவு இல்லை என்பதுவே யாக்கோபு அடிகளாரின் நிலைப்பாடு (யாக். 3 : 13-18). இதையே திருவள்ளுவர்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக என்கிறார்.

அதாவது கற்றுக்கொள்பவைகளை வடு இல்லாமல் மாசற கற்றுக்கொள்ள வேண்டும் அது மட்டுமல்ல கற்றதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்பதையே குறளும் நமக்குச் சொல்லுகிறது.

இன்று online-ல் வைரஸ்களைப் பரப்புகிறார்கள், தீவிரவாதத்திற்கான சூழ்ச்சிகளைச் செய்பவர்கள். சமயம், ஜாதி என மக்களைப் பிரித்து அரசியல் சுகம் காண்பவர்கள், சூழ்ச்சிகள் செய்து குடும்பங்களில் உறவு சிதைவுகளைக் கொண்டுவந்து சகோதரர்களை ஏமாற்றுகிறவர்கள், சுயநலனுக்காக பொதுநலனைக் கெடுப்பவர்கள், வஞ்சனைகளைச் செய்து புனைவுகளைப் புனைந்து பிறருக்கு அவபெயர்களை உருவாக்கப் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்பவர்கள், தங்களுடைய அறிவால், படிப்பால், திறமையால் இப்படிபட்ட தீமைகளைச் செய்துவிட்டு தங்களைப் பாராட்டிக்கொள்ளுகிறார்கள் ஆனால் இப்படிப்பட்டோரின் படிப்பு வீணானது இவர்கள் சமூகத்தைச் சிதைக்கும் அறிவிலிகள் என்பதும் திருமறைத் தரும் தெளிவு.

இதற்கென்றே உலகக் கல்வியோடு திருமறைக் கல்வியும், தேவை என்பதை உணர்ந்து திருமறைப்பள்ளிகளில் கல்வி தரப்படுகிறது. பட்டம், பதவி, பணம் என்ற அளவில் படிப்பை எடுத்துக்கொண்டு நெறிகளை விட்டு விடுகிறோம். திருமறைக் கல்வியும் அதுதரும் நெறியுள்ள வாழ்வையும் விட்டுவிடுகிறோம். ஆகவே நம்மை உணர்ந்து சீர்பெறுவோம்.

## II ஞானத்தால் இறைச் செயல்புரிவோம்

யாக்கோபு 3 : 13 ஞானமும், அறிவாற்றலும் உடையவர்கள் ஞானம் தரும் பணிவு, நன்னடத்தை ஆகியவற்றைக் காட்டவேண்டும் என்றும் யாக்கோபு 3 : 15-வது வசனத்தில் இத்தகைய ஞானமே விண்ணிலிருந்து வருகிறது. அதோடு, 17-வது வசனத்தில் விண்ணிலிருந்து வரும் ஞானம் தூய்மையையும் அமைதியையும் நாடும் எனவும், ஒற்றுமை, இரக்கம்,

இணக்கம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டு நற்செயல்களைச் செய்து நடுநிலையோடு செயல்படும் என்கிறார் யாக்கோபு அடிகளார். அப்படியானால் ஞானம் என்பது இறைத் தகவுகளை நிலைநிற்க செய்யும் வாழ்க்கை முறையை வெளிப்படுத்துவதாகும். இதையே திருபாடல் 107 : 43 ஞானமுள்ளவர்கள் இறைவனின் மேன்மை உணர்ந்தவர்கள் என்கிறது.

ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன என்கிறார் பவுலடிகளார் (கொலோசேயர் 2 : 3). அப்படியானால் ஞானத்தின் செயல்கள் நம்மில் கிறிஸ்துவைக் காட்டும் தகவுகளாகி விடுகின்றன. எனவேதான் பிலிப்பியர் 2 : 5-ல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்க கடவது என அழைப்பு விடுக்கிறார்.

நீதிமொழிகள் 2 : 6-ல் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும், விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே என வாசிக்கிறோம். கர்த்தருக்கு அஞ்சி நடப்பதே ஞானத்தின்தொடக்கம் என்கிறது நீதிமொழிகள். கர்த்தருக்கு அஞ்சுதல் என்பது தீமையை விட்டு விலகுதல் என்கிறது நீதிமொழிகள் 2:7.

சபை உரையாளர் 9 : 17-18 வசனங்களில் மூடர்கள் கூட்டத்தில் அதன் தலைவன் முழக்கம் செய்வதைக் கேட்பதை விட ஞானமுள்ளவன் அடக்கமாய் சொல்வதைக் கேட்பதே நன்று என்பதோடு போர் கருவிகளை விட ஞானமே சிறந்தது என்கிறார்.

இன்றும் உலகளவில் அமெரிக்கா போன்ற நாடுகள் போர்க் கருவிகளை வாங்கிக் குவித்து தன் படை பெலத்தினால் தங்களை வல்லவர்களாகவும் பலம் வாய்ந்த நாடுகளாகவும் பெருமைப் பாராட்டுகிறார்கள். இத்தன்மையான அடிமைத்தனங்கள் உலகளாவிய நிலையில் இருந்தாலும் நாட்டில் இருந்தாலும், என்றும் திருச்சபையில் குடும்பங்களிலும் இருந்தாலும் அவை ஞானமற்ற அறிவற்றவைகளே என்கிற புரிதல்கள் கிறிஸ்தவர்களாகிய நமக்கு வேண்டும்.

கடவுளின் ஞானம் அவரது படைப்பில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது (சங். 19 : 1). நீதி. 6 : 1-8 வசனங்கள் நாம் அற்பமாக எண்ணுகிற இறைப் படைப்பாகிய எறும்பினிடத்தில் ஞானத்தைக் கற்றுகொள்ள அழைக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஞானம் தரும் ஞானப்பால் திருவசனமே என பேதுரு அடிகளார் பேதுரு 2 : 3-ல் கூறுகிறார். இந்த வசனம் காட்டும் தாழ்மை, பணிவு, அன்பு, உறவு ஏற்றுக்கொள்ளுதல், மன்னிப்பு இவைகளே ஞானத்தின் வெளிப்பாடுகள். அதோடு, இறை பண்பின் மாட்சிமைகள்.

இதையே யோனத்தான் எட்வர்ட் என்ற இறையியலாளர் "ஞானத்தின் சாந்தம் என்பது கிறிஸ்தவர்களின் இதயங்களின் உண்மையான மற்றும் தனித்துவமான மனநிலை என்கிறார்." இத்தகைய இயேசு கிறிஸ்துவின் சாந்தம் நம் உள்ளத்தையும், உணர்வுகளையும் ஆளட்டும்.

இறை, உலக அறிவுகளில் வளம் காணும் இறை நெறிகளால் ஞானத்தால் இறைமாட்சிகளை வெளிப்படுத்துவோம்.

இறையாசி நம்மோடிருப்பதாக! ஆமென்!

அருள்திரு. A. **ஜெப சுஜி**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 36 | ஞா. | 439 |
| | கீர். | 117 | கீர். | 126 |

**04-06-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & திரித்துவ ஞாயிறு

# நாம் மூவொரு கடவுளின் நம்பிக்கை கொள்கிறோம்

## "We believe in the Triune God"

எசே. 1 : 4 - 28 | 2 கொரி. 13 : 11-13

திபா. 98 | மத். 28 : 16-20



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. (2 கொரி. 13 : 13)

தந்தை மகன் தூய ஆவியாராகிய கடவுளையே நாம் மூவொரு கடவுளாக வழிபடுகிறோம். மூவொரு கடவுள் எனும்போது இஸ்ரயேல் மக்கள் வாழ்வின் வரலாற்றில் செயல்பட்டவராகிய கடவுளையும், அன்பு நீதி இரக்கம் ஆகியவற்றை இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டி அப்பண்புகளோடு முழுமையாய் மக்களோடு வாழ்ந்து நிறைவேற்றியவராகிய கடவுளின் மைந்தர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும், ஒவ்வொரு நாளும் நாம் செய்கின்ற அனைத்துச் செயல்களோடே நம் எண்ணத்தில் உந்தித்தள்ளிக் கொண்டிருப்பவரும், நம்மை நேர் வழியில் நடத்துகிறவராகிய தூய ஆவியையும் குறிக்கிறது. இந்த மூவொருடைய பண்பை வெளிப்படுத்துகின்ற திரியேக கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம்.

"திரித்துவம்" "TRINITY" என்கிற வார்த்தை திருமறையில் எங்கும் காணப்படவில்லை. கடவுளை புரிந்துகொள்ள கிறிஸ்தவ திருச்சபையின் நம்பிக்கையாக உருவானது தான் திரித்துவம். திருமறையின் அடிப்படையில் பார்க்கும்போது கடவுள் ஒருவரே (God is indeed one). கடவுள் தம்மை வெளிப்படுத்தும் பொழுது தந்தை, மைந்தன், தூய ஆவியார் என தொடர் அனுபவமாக வெளிப்படுத்தியுள்ளார்.

**கடவுளின் மூவொரு பண்பு (God is Trinitarian Nature) :**

மத். 3 : 16, 17-ல் இறைவன் வானத்திலிருந்து பேசுகிறார் இயேசு கிறிஸ்து பூமியில் இருக்கிறார், ஆவியானவர் புறாவைப் போல் இறங்குகிறார். இந்த வெளிப்பாட்டின் வழியாக திரித்துவத்தை நாம் கண்டு கொள்ளலாம்.

யோ. 14 : 16-ல் உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் தந்தை அவரை உங்களுக்கு அருளுவார் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு தருகிறவராக இறைவனையும் வேண்டிக்கொள்பவராக இயேசு கிறிஸ்துவையும், தரப்படுபவராக ஆவியானவரையும் என்பதும் தெளிவாக புரிந்துகொள்ளலாம். மூவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். இறைவன் இரட்சிப்பின் திட்டத்தை வகுக்கிறார். குமாரன் இயேசு கிறிஸ்து அதை நிறைவேற்றி முடிக்கிறார். ஆவியானவர் இரட்சிப்பை மனித வாழ்வில் செயல்படுத்துகிறார்.

சாதுசுந்தர் சிங், மூவொரு கடவுளை குறிப்பிட சூரியனை எடுத்துக்காட்டாக பயன்படுத்துகிறார். சூரியனை இறைவனாகவும், அதிலிருந்து வெளிப்படும் ஒளியை இயேசுகிறிஸ்து என்றும், அதிலிருந்து வரும் வெப்பத்தை தூய ஆவியராகவும் கூறுகின்றார். எனவே மூன்றில் ஒன்றானவர் ஒன்றில் மூன்றானவர் என்று நாம் சொல்வது சாலச்சிறந்தது. இந்த புரிதலை திருச்சபை உணரவும் ஏற்கவும் அழைக்கப்படுகிறோம்.

கொரிந்தியர் 13 : 13-ல் திருத்துவராகிய பவுல் திரித்துவ கடவுளின் பெயரில் ஆசி வழங்குகிறார் இதையே மூன்றாக பிரித்து சிந்திக்கலாம்.

I. **கடவுளின் அன்பு** (The Love of God)

இஸ்ரயேல் மக்களை அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று வெளியேறச் செய்தவர் கடவுள். இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் செயல்பட்டு வரலாற்று நாயகராக விளங்கியவர். உபா. 32 : 6-ல் உங்களை படைத்து, உருவாக்கி, நிலைநிறுத்திய உங்கள் கடவுள் ஏசாயா 45 : 5-ல் நானே ஆண்டவர், வேறு எவருமில்லை என்னையன்றி வேறு கடவுள் இல்லை. நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு வலிமையளித்தேன். எசேக்கியேல் 1 : 28-ல் கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினரை அழைத்து கடவுளின் சாயலை பார்க்கவும், அவரது குரலை கேட்கவும், இறைவார்த்தைகளால் பேசவும் எச்சரிக்கவும் செய்தது இஸ்ரயேல் மக்களின் பேரில் உள்ள அன்பாகும்.

கடவுளின் அன்பு நம்மேல் ஊற்றபட்டிருக்கிறபடியால் அந்த அன்பு நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5 :5).

கடவுள் அன்பாயிருக்கிறார் அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் கடவுளோடு இணைந்திருக்கிறார்கள் (1 யோ. 4 : 16). ஆகவே இறையன்பு நம்மை கடவுளில் நம்பிக்கை கொள்வோராக்குகிறது.

**2. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்** (The Grace of Lord Jesus Christ)

தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு மனிதனாகி நம்மிடையே குடிகொண்டார், அருளும் உண்மையும் நிறைந்தவராய் தந்தையின் ஒரே மகன் என்ற மாட்சியை பெற்றிருந்தார் (யோவான் 1 : 14). ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார் (2 கொரி. 8 : 9). நாங்கள் செல்வராக இவ்வாறு செய்தார். அந்த அருள் சாத்தானை காலால் நசுக்கிப் போடும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள் (ரோமா.16 : 20). உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி தூய்மையாக்கும் அருள். (1 தெச. 5 : 23). எல்லோரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர். அனைவரும் இயேசு கிறிஸ்துவில் நிறைவேற்றின மீட்பின் செயலின் மூலம் ஏற்புடையவர்களாக்கப்பட்டதும் அவர் அருளே (ரோமர் 3 : 23, 24). வலுவின்மையில் வலுவை வழங்கும்; அருள் (2 கொரி. 12 : 9). எல்லா மக்களினத்தாருக்கும் மீட்பருளும் இயேசு கிறிஸ்துவின் அருள் (தீத்து 2 : 11). ஆண்டவரும் மீட்பருமான இயேசுகிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சியடையச் செய்யும் அருள். (we grow in Grace) (2 பேதுரு 3 : 18).

**3. தூய ஆவியாரின் நட்புறவு** (Fellowship of the Holy Spirit)

தூய ஆவியானவர் பழைய ஏற்பாட்டில் படைப்பிலும் (ஆதி.1 : 1), தொடர்ந்து குறிப்பிட்ட பணிசெய்ய உற்சாகபடுத்துகிறவராய் பெசாலயேல், நியாதிபதிகள், தீர்க்கதரிசிகள் ஆகியோரை நிறைத்தார். புதிய ஏற்பாட்டில் இயேசு நாதரின் திருமுழுக்கு திருச்சபையின் மறுபிறப்பு, புதுப்பித்தல் என்ற நிலையை ஏற்படுத்த மேல் வீட்டறையிலும் ஊற்றப்பட்டார். தூய ஆவியானவர் எல்லா காலத்திலும் செயல்பட்டார். ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு (2 கொரி 3 : 17). உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் (யோவான் 14 : 16). தந்தை அவரை உங்களுக்கு அருளுவார் தந்தை அனுப்புகிற துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார் (யோ. 14: 26). தூய ஆவியானவருக்கு விரோதமாக பொய் சொன்னதால் அனனியா, சப்பீராள் தம்பதியர் அழிவை சந்தித்தார்கள் (அப்.5 : 3, 4).

தீய உபதேசங்களிலிருந்து விலக்கி காக்கக்கூடியவர் (1 யோ. 2 : 22). ஒருமைபாட்டில் தேற உதவும் தூய ஆவியானவர் (யோ. 17 : 22, 23, 24) என அறிய முடிகிறது.

**நிறைவுரை**

கடவுள் படைப்பின் தொடக்கத்தில் இருந்தார். அவரே மூன்று தன்மைகளாக நம்மோடிருந்து நம்மை நடத்துகிறார். கடவுளின் இந்த மூவொருந்தன்மையைத் (Divine Mystery) தெய்வீக மறைபொருளாக அறிஞர்கள் கூறுகின்றனர். குறிப்பாக Paul Tillich இறையியல் அறிஞர் இந்த உண்மைக்கு அழுத்தம் கொடுக்கிறார். இந்த மூவொரு கடவுளின் நம்பிக்கை கிறிஸ்தவ வழிபாடுகளிலேயும், வாழ்விலேயும் நமது திருப்பணிக்கான அறைகூவல்களிலேயும் செயல்பட இறைவன் அருள்புரிவாராக.

இறைவன் ஒருவரே, அவரது மீட்பின் செயல்கள் அன்பு, அருள், ஐக்கியம் என்பதில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

முத்தொழிலோனே நமஸ்காரம் மூன்றில் ஒன்றோனே நமஸ்காரம்

கர்த்தாதி கர்த்தா கருணை சமுத்திரா

துத்திய திரியேகத்துவா நமஸ்காரம் - என்ற பாடலுனுடாக வலுவான கடவுள் நம்பிக்கையில் வளர்வோம்.

அருள்திரு. அறிவர். J. **றசல் ஐசக்**

| | | | |
|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 41 | ஞா.47 (Tune : ராஜாதி ராஜாவே) |
| | கீர். | 70 | கீர். 66 |

**11-06-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு & சுற்றுச்சூழல் ஞாயிறு

# படைப்பு விடுதலைக்காக வேதனையுற்றுத் தவிக்கிறது

## Creation Groans for Liberation

எசே. 36 : 24-36 உரோ. 8 : 18-25

தி.பா. 29 யோவா. 20 : 19-23



அது (படைப்பு) அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக் கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது. (உரோ. 8 : 21 )

மனித வாழ்வு மகிழ்வுடன் இருக்க உரிமைப்பேற்றுடன் அதாவது முழு விடுதலை பெற்று வாழ்வது அவசியமானது. உரிமையிழந்த அடிமைப்பட்ட வாழ்வை எவரும் விரும்புவதில்லை. மனுக்குலம் மட்டுமல்ல அனைத்துப் படைப்புகளும் அவ்வண்ணமான மன எண்ணங்களைக் கொண்டவையே. கடவுளால் படைக்கப்பட்ட நாம் வாழும் இந்தப் புவி மண்டலம் எந்தக் கிரகங்களுடனும் ஒப்பிட இயலா அளவு சிறப்பு மிக்கது. உயிரினங்கள் வாழும் அளவிற்குப் பிராண வாயு, நைட்ரஜன், கார்பன்டை-ஆக்ஸைடு மேலும் சில அடிப்படை வாயுக்கள் இந்தப் புவி மண்டலத்தில் மட்டுமே உள்ளன. நிலம், நீர், காற்று இவைகளை அற்புதமான அருட்கொடையாய் உயிரின வாழ்வுக்குக் கடவுள் கொடுத்துள்ளார். ஆனால் இன்று இவைகள் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தங்கள், கடுமையான அழுத்தங்கள் சுற்றுச்சூழலில் நவீன பிரச்சனைகளை உருவாக்கியுள்ளன.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் நாள் “பூமி தினம்” (Earth Day) அன்று, 175 நாட்டின் தலைவர்கள் “பாரீஸ்” இல் கூடி சுற்றுச்சூழல் பற்றிய ஆய்வு மாநாட்டில் கலந்துரையாடி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஒப்பந்தமும் செய்து கொண்டனர். பாரீஸ் ஒப்பந்தம் (Paris Agreement) அனைத்து நாடுகளின் ஐக்கிய சூழலமைப்பின் அவசியத்தை உணர்த்தி நின்றதை உலகமே வியந்து பார்த்தது. காரணம் மனுக்குல வாழ்வுக்குச் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுத்தியிருக்கும் அச்சுறுத்தலை உலக நாடுகள் உணர்ந்திருக்கின்றன. மட்டுமல்ல இது அனைவராலும் சீர்செய்யப்பட வேண்டிய அவசரகால தேவை

என்பதையும் உணர்ந்திருக்கின்றது. திருச்சபையாய் ஆசரிக்கும் சுற்றுச்சூழல் ஞாயிறாகிய இந்நாளின் தியான பகுதியான உரோமர் 8 : 18-25 வரை அடங்கியிருக்கின்ற நிரூபப் பகுதியில் பவுலடியார் இறுதியில் (escatology) பற்றிய தெளிவான சிந்தனையை உரோமத் திருச்சபைக்கு எழுதுகிறார். குறிப்பாக கடவுளின் மாட்சிமையில் அனைத்து படைப்புகளும் பங்கேற்கும் என்ற உண்மையை உறுதிப்பட எழுதுகிறார். கடவுளில் நம்பிக்கை கொண்டு அவரால் மீட்படைந்த மனிதன் அவரது மாட்சிமைக்குரியவனாகிறான்.

மனிதனின் மீறுதல்கள் படைப்புகளை முற்றிலும் சிதைத்து விடுகின்றன. ஆதிக்க உணர்வுகளும், தன்னல சிந்தனைகளும் அனைத்துப் படைப்புகளையும் அடிமைகளாக்கி விட்டிருக்கின்றன. செப்டம்பர் 2022 பாகிஸ்தானில் பெய்த அசாதாரண கனமழையால் 3 கோடியே 30 இலட்சம் மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். இதே காலகட்டத்தில் பங்களூருவில் பெய்த கனமழையால் அந்நகரமே தண்ணீரில் மூழ்கி நிலைகுலைந்தது. "மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு" இது என பல சூழலியாளர்கள் தங்கள் ஆய்வில் குற்றம் சாட்டினார்கள். இயற்கையைச் சிதைப்பதும் நீர் வழிப்பாதைகளைக் கட்டடங்களாகவும் தொழிற்சாலைகளாகவும் மாற்றுவதுமே இதற்கான முக்கிய காரணங்களாகின்றன.

கடவுளின் மாட்சிமைக்குரிய படைப்புகள் அனைத்தும் விடுதலைக்காய் ஏங்கித் தவிக்கின்றன (உரோ. 8 : 21) படைப்புகளை விடுவித்துக் காப்பதில் மனிதனின் அர்ப்பணிப்பும் பொறுப்பும் இறைவனால் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்று. இச்சூழலில் இறைமக்களாய் நாம் என்ன செய்ய இயலும் என்பதைத் தொடர்ந்து தியானிப்போம்.

### 1. விடுதலையின் நற்செய்தியாளர்களாகிடுவோம் :

விடுதலைப் பணியில் நாம் முதன்மையாக்க வேண்டியது நற்செய்தியை நன்று உரைப்பது. தான் பரமேறுவதற்கு முன் இயேசு இறுதியாய்த் தன் சீடர்களுக்கு அன்புக் கட்டளையாகக் கொடுத்தது. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற். 16 : 15) என்பதாகும். ஆண்டவர் ஆற்றலையும் அதிகாரத்தையும் சீடர்களுக்கு வழங்கியது நற்செய்தி உரைப்பதின் வழியாய் உலகின் அனைத்துப் படைப்புகளும் விடுதலை பெற்றுக் கொள்வதற்காகும்.

இன்று உலகில் வாழும் மக்களில் 91 சதவீதத்தினர் ஏதோ ஒரு நிலையில் உடல்நலப் பாதிப்புக்குள்ளானவர்களாக இருக்கிறார்கள் என்பது ஆய்வுகள் சொல்லும் உண்மை. காரணம் மாசுபட்ட காற்றைச் சுவாசிப்பது. இதன் பின்னணியத்தில் இருப்பது வாகனங்களின் அதிகப் பயன்பாடு, தொழிற்சாலைகளின் பெருக்கம் காலநிலை மாற்றம், காடுகளை அழித்தல், புவி வெப்பமாதல், இன்னும் பலவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒரு நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது அதற்கான பாதுகாப்பு வழிமுறைகளைத் தவற விடுவதே பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. இங்கே தான் நற்செய்தியின் தேவை உணரப்படுகிறது. அறியாமையும் ஆக்கிரமிப்பு எண்ணங்களும் மனித மனங்களை விட்டு அகன்றிட கிறிஸ்துவின் விடுதலையின் நற்செய்தி அனைவரையும் எட்டவேண்டும்.

படைப்புகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதற்காய் இறைவனால் அற்புதமாய் படைக்கப்பட்டவை. பறவைகள், விலங்குகள், ஊரும் பிராணிகள், நீரில் வாழ்வன, மரங்கள், செடி கொடிகள், புற்கள் என அனைத்தும் ஒன்றையொன்று உணவுச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றை அழிப்பது அனைத்துப் படைப்புகளின் சிதைவுக்குக் காரணமாகிவிடுகின்றது. உன்னைப் போல் பிறனையும் நேசி என்ற இயேசுவின் நற்செய்தியின் கட்டளை நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் இயற்கை மீது நம் அன்பை, கரிசனையை வெளிப்படுத்தக் கற்றுத் தருகிறது.

கிறிஸ்துவின் மரணத்தின் வழியாய்ப் பெற்றுக்கொண்ட மீட்பு மனிதனுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்குமானது என்பதையே திருமறை நமக்கு உணர்த்துகிறது (உரோ. 8 : 18-25). கடவுள் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவா. 3 : 16) என்னும் இறைவாக்கு நமக்குப் புதிய சிந்தனையை வெளிப்படுத்துகிறது. அதாவது மனிதனில் அன்பு கூர்ந்தார் என்ற தெளிந்த நற்செய்தியை நமக்குக் கற்றுத்தருகின்றது. இந்த விடுதலையின் நற்செய்தியை உலகனைத்துக்கும் பறைசாற்றிடவே நாம் கிறிஸ்துவால் விடுதலைக்காற்றைச் சுவாசித்திருக்கிறோம். அருட்பணியாளர்களால் நமக்குக் கிடைக்கப்பெற்ற நற்செய்தி வழியாய் அனைத்துப் படைப்புகளின் விடுதலைக்காய்க் குரலெழுப்பத் தயங்கிடாமல் செயல்படுவோம்.

## 2. விடுதலையின் நற்பணியாளர்களாகிடுவோம்:

அனைத்தையும் படைத்த கடவுள் இயற்கையைப் பேணும் பொறுப்பினை மனிதனின் கரத்தில் கொடுத்துள்ளார். தொடக்கநூல் 1 : 28 மற்றும் 2 : 15 ஆகிய வசனங்கள் இதனை நமக்கு வெளிப்படுத்துகிறது. “ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்குக் கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்” (ஆதி. 2 : 15). இயற்கை, இறைவனின் படைப்புகள் பாதுகாக்கப்படவேண்டுவதின் முக்கியத்துவத்தை இந்த வசனம் நமக்கு உணர்த்துவதோடு திருச்சபை, இறைமக்களின் நற்பணியும் பொறுப்பும் எத்தகையவாய் இருக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

ஏன் இன்று படைப்புகள் விடுதலைக்காய் ஏக்கமுறுகின்றன. காரணம் பாதுகாக்கவேண்டிய மனிதனே அதைச் சிதைத்துக்கொண்டிருக்கிறான். மனிதனின் அக்கிரமம், சீர்கேடுகள், பொல்லாத இருதய சிந்தனைகள் தன்னல சிந்தையோடு அனைத்தையும் அழிக்கும் எண்ணங்கள் வளர்ச்சி, நவீனம் என்ற போர்வையில் அறநெறியற்ற இறையச்சம் இல்லாத வாழ்வு முறைகள். படைப்புகளை ஏக்கமுறச் செய்கின்றன. இயற்கை தீயதை தான் ஏற்று நல்லதை உலகுக்குக் கொடுக்கிறது. அதாவது மரங்கள் கார்பன்டை ஆக்சைடை தான் ஏற்றுக்கொண்டு மனிதன் வாழத் தேவையான ஆக்சிஜனை இலவசமாய்க் கொடுக்கிறது. ஆனால் மனிதனோ நல்லவைகளைப் பெற்றுக்கொண்டு தீமையையே பரிசாகக் கொடுத்து அழித்துவிடுகிறான்.

அழகிய உலகை அற்புதமாய்ப் படைத்த ஆண்டவர் இயற்கையையும் அனைத்து உயிர்களையும் பாதுகாக்கின்ற, அன்பு செய்கின்ற, சமமாய் பாவிக்கின்ற நற்பணியினை நமது பற்றுறுதியின் ஒரு அம்சமாகவே கொடுத்திருக்கிறார். கடவுளின் இவ்வுலகில் மனிதன் இடையூறின்றி வாழ்வதற்கு அனைத்துப் படைப்புகளுக்கும், உயிர்களுக்கும் உரிமை உண்டு. அனைத்து உயிர்களும் ஒன்றித்து மகிழ்வுடன் ஒரே குடும்பமாக வாழும் வீடு இந்த பூமி. நாம் இதனைப் பண்படுத்திப் பாதுகாத்து கடவுளிடம் நாம் வைத்திருக்கும் பற்றுறுதியை வெளிப்படுத்திட அழைக்கப்பட்டவர்கள்.

இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை (ஏசா. 65 : 17) என ஏசாயா தீர்க்கர் வழி

ஆண்டவர் ஒரு புதிய செய்தியை இறைவாக்காகக் கொடுக்கிறார். பாவமும், தீமையும், அடிமைத்தனமான உலகமும் நிச்சயம் மறைந்து, அனைத்துப் படைப்புகளையும் நானே புதியவைகளாக்குவேன் என்கிறார். ஆண்டவரின் நாளில் நடக்கப் போகிறவைகளுக்காகவே நம்மை மீட்டெடுத்து உலகின் நற்பணியாளர்களாக்கியிருக்கிறார். ஆண்டவரின் மீட்பைச் சொந்தமாக்கியவர்கள் அத்தனை பேரும் அவருக்காய் நற்பணியாற்றவேண்டியவர்கள். தொடக்க காலத் திருச்சபை மக்கள் அதில் உறுதியாயிருந்தார்கள்.

சீரான காலநிலையை உலகம் அனுபவிக்க ஆண்டவர் அழகுறப் படைத்த மலைகள், மரங்கள், நீர்நிலைகள் இன்று சிதைக்கப்பட்டு முழு அழிவைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. அதன் விளைவுதான் அதிக மழை, அதிக வெப்பம், நிலச்சரிவுகள், கடும் வறட்சி, சீரற்ற காலநிலை போன்றவை. மனித வாழ்வே இன்று அச்சுறுத்தலுக்குள்ளாக்கப் பட்டிருக்கிறது. இந்த உலகம் உயிரினங்கள் வாழத் தகுதியற்ற உலகமாக இன்னும் சில ஆண்டுகளிலேயே மாறிவிடும் என சூழியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

பொறுப்புள்ள குடிமக்களாய் வாழ இறைவனால் படைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் திரு உதிரத்தால் மீட்கப்பட்டிருக்கிறோம். விடுதலைக்காய் ஏங்கும் மக்களும் இதர படைப்புகளும் உலகில் ஏராளம். விடுதலையின் நற்செய்தியை அனைவருக்கும் அவசரமாய் எடுத்துரைப்போம். படைப்புகளை பண்படுத்தி பாதுகாக்கும் விடுதலையின் நற்பணியாளர்களாய் நம்மை அர்ப்பணிப்போம். அனைத்துப் படைப்புகளும் பங்கேற்கும் இறையாட்சிக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம். இறைவன் நமக்கு வழிகாட்டியாய் நம்மோடிருப்பார்.

அருள்திரு. J. **வின்செண்ட் றாபர்ட்**


| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 169 | ஞா. | 455 |
| | கீர். | 17 | கீர். | 333 |

**18-06-2023** பெந்தக்கோஸ்துக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு

# வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம்

## Worship : Celebration of People's faith

| | |
|---|---|
| எசா. 6 : 1-8 | திவெ. 4 : 1-11 |
| திபா. 148 | யோவா. 4 : 16-26 |



“. . . உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் வழிபடுவர். தம்மை வழிபடுவோர் இத்தகையோராய் இருக்கவே தந்தை விரும்புகிறார்” யோவா. 4 : 23

திருமறையில் வழிபாடு கடவுளின் அருட்செயலுக்கு மானிடரின் மறுமொழியாகவும், இறை மானிடச் சந்திப்பாகவும், மானிடர் இறைவெளிப்பாட்டை பெறும் நிகழ்வாகவும், மக்களின் நம்பிக்கையின் கொண்டாட்டமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமறையின் தொடக்கத்திலிருந்து தொடர்ந்து படிக்கும்போது வழிபாட்டின் தோற்றம் முதல் பின்னர் அது வளர்ச்சியடைந்து மக்களின் வாழ்க்கை சூழலுக்கேற்பவும், விசுவாச அனுபவங்களுக்கேற்பவும் புதிய பொருளையும், புதிய இறையியல் கருத்தாக்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. இவை எல்லாவற்றையும் அடிப்படையாக கொண்டு நோக்கும்போது வழிபாட்டின் மையம் கொண்டாட்டமும் பணிவிடைபுரிதலுமாகும். இன்றைய திருமறைப் பகுதிகளைத் துணையாகக் கொண்டு மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டமே வழிபாடு என்பது குறித்து இரு சிந்தனைகளை பகிர்ந்துக்கொள்ளவோம்.

### 1. நம்பிக்கையிழந்த சூழலில் புதிய நம்பிக்கை

எசாயா 6 : 1-8 வரையுள்ள திருவசனங்களில் இறைவாக்கினர் ஏசாயாவின் அழைப்பும் அர்ப்பணமும் சொல்லப்பட்டுள்ளது. தனிப்பட்ட மனிதரான எசாயாவின் அழைப்பைப் பற்றி இப்பகுதி எடுத்துரைத்தாலும், நம்பிக்கையிழந்த நிலையிலிருந்த இறைமக்களுக்கு கடவுள் அருளும் புதிய நம்பிக்கையை விவரிக்கின்றது. ஏசாயா 6-ஆம் அதிகாரம் முழுவதும் மரணம் மற்றும் அழிவு குறித்த செய்திகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

* முதலாம் வசனத்தில் உசியா அரசரின் "மரணம்" குறித்து சொல்லப்பட்டுள்ளது.

* ஐந்தாம் வசனத்தில் தன் நிலை மற்றும் தன் குறையை குற்றத்தை கடவுளின் இல்லத்தில் உணர்ந்து ஐயோ நான் "அழிந்தேன்" என்றார் ஏசாயா.

* ஆறாம் வசனத்தில் பலிபீடம் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது விலங்குகள் பலியிடப்பட்டு "மரணிப்பதைக்" குறிக்கின்றது.

* பதிமூன்றாம் வசனத்தில் நாட்டில் பத்தில் ஒரு பங்கிருக்கும், அதுவும் திரும்ப "நிர்மூலமாக்கப்படும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணம் மற்றும் வீழ்ச்சியின் சிந்தனைகள் ஏசா. 6-ஆம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக எசா 6: 1-இல் உசியா அரசரின் மரணம் சொல்லப்பட்டுள்ளது. யூதா நாட்டு வரலாற்றில் உசியா அரசர் முக்கிய இடம் பெற்றுள்ளார். இவர் 52 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

ஆண்டவரின் பார்வையில் நேர்மையாய் நடந்தவர் (2 நாளா. 26:4)

அதிகமான வெற்றிகளைக் குவித்தவர் (2 நாளா. 26 : 8).

மந்தை மேய்த்தல், வேளாண்மை செய்தல் ஆகியவற்றில் ஆர்வமுடையவர் (2 நாளா. 26 : 10).

வலுவான போர்ப்படையையும், போர்த்தளவாடங்களையும் வைத்திருந்தவர் (2 நாளா. 26 : 11-15).

தனது வலிமையாலும், வீர தீரத்தாலும் ஆட்சி முறையாலும் உலகப் புகழ் பெற்றவர் (2 நாளா. 26 : 15).

இவ்வாறு அவர் வலிமைமிக்க அரசராகத் திகழ்ந்தவேளையில், அழிவுறும் அளவுக்கு ஆணவம் கொண்டிருந்தார் (2 நாளா. 26 : 16). இதனால் குருக்களுக்கே உரிய பணியான தூபம் காட்டுதலை அரசர் உசியா செய்ய முயன்றபோது குருக்கள் தடுத்தும் கேட்காமல் உசியா குருக்கள் மீது சினமுற்றவராய் ஆண்டவரால் தண்டிக்கப்பட்டு தொழுநோயாளியாகி மரித்துப்போனார். தூபங்காட்டுதலைத் தவிர்த்து உசியாவின் வாழ்வை நாம் உற்று நோக்கினால் இறை பயமிக்க

எதிரிகளால் வீழ்த்த முடியாத, வேளாண்மையை நேசித்த, படைபலமிக்க, வலிமை வாய்ந்த ஓர் அரசர் உசியா என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய சிறப்புமிக்க உசியா அரசரின் மரணம் யூதா நாட்டு மக்களையும் ஏசாயா இறைவாக்கினரையும் வெகுவாகப் பாதித்தது. மக்கள் அரசரின் மரணத்தை கண்டு நம்பிக்கையிழந்துபோயினர். இத்தகைய நம்பிக்கையிழந்துபோன சூழலில், கடவுளின் கோவிலில், ஏசாயா இறைவாக்கினர் ஒரு வழிபாட்டை காண்கிறார் (ஏசா 6 : 1-4). இந்த வழிபாடு உசியாவின் மரணத்தை கண்டு கலங்கிய ஏசாயாவுக்கு, உசியா அல்லர் உசியாவிலும் மேலானவர் அரசர்க்கெல்லாம் அரசர் கடவுள் ஒருவரே, அவரே வாழ்வை அருளுபவர் என்னும் புதிய நம்பிக்கையை கொடுத்தது. அழிவுறும் நிலையிலிருந்தாலும், முடிவுறும் தருணத்திலிருந்தாலும் அஸ்தமனத்திலிருந்து புதிய உதயத்தை தருபவர் கடவுள் என்னும் விசுவாச படிப்பினையை பெற்றுக்கொண்டார். (ஏசாயா 6 : 13). இந்த நம்பிக்கையின் நற்செய்தியை பறைசாற்றுவதற்கு அவ்வழிபாட்டின் வாயிலாக தூய்மையாக்கப்பெற்று ஆண்டவரின் பணிவிடைக்கான அறைகூவலையும் பெற்றுக்கொண்டார் (ஏசா. 6 : 5-8). ஏசாயாவின் வாழ்வில் இந்த வழிபாடு ஒரு நம்பிக்கையின் கொண்டாட்டமாக அமைந்தது.

## 2. புறக்கணிக்கப்பட்ட நிலையில் புதிய வெளிப்பாடு

இறையியலாளர் கு.எரோனிமூசு யோவான் நற்செய்தி நூலில் சொல்லப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் அருஞ்செயல்கள் மற்றும் அரும்போதனைகள் போன்றவற்றை கிறிஸ்துவில் பழையன கழிதல் புதியன புகுதல் என்னும் இறையியல் பார்வையோடு விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக

கானாவூர் திருமண இல்லத்தில் திராட்சை ரசம் (பழைய) தீர்ந்து போனபோது கிறிஸ்து புது ரசம் வழங்கினார் (யோவா. 2 : 1-12).

* பழைய எருசலேம் ஆலயம் அழிந்து புதிய ஆலயம் எழுந்துவிட்ட நிகழ்வை இயேசு எடுத்து கூறினது (யோவா. 2 : 13-22).
* பழைய பிறப்பின் மாட்சி மங்க, புதிய பிறப்பின் முதன்மையை (தண்ணீரினாலும் ஆவியினாலும்) இயேசு வலியுறுத்தியது (3 : 1-21).

* பழைய தண்ணீரின் (யோக்கோபின் கிணற்றுநீர்) போதாமையை எடுத்து கூறி புதிய தண்ணீரின் (ஜீவ தண்ணீர்) ஆற்றலை இயேசு கிறிஸ்து எடுத்துக்காட்டியது. (4 : 13-14).

அதே போன்று இன்றைய நற்செய்தி பகுதியிலும் பழைய வழிபாட்டின் (எருசலேமிலும், கெரிசிமிலும் நடைபெற்ற வழிபாடு) குறைகளை சுட்டிக்காட்டி, வழிபாட்டுக்கு புதிய விளக்கம் தந்து புதியதொரு வழிபாட்டை அறிமுகம் செய்கின்றார். பழைய வழிபாட்டில் வழிபாட்டு மையம் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. ஆனால் புதிய வழிபாட்டில் இடமல்ல, இறை பிரசன்னமும் இறைமக்கள் கூடிவருதலுமே முதன்மையானவை என்பதை, இந்த மலையில் மட்டும் அல்ல தந்தையை எங்கும் தொழுது கொள்ளும் காலம் வரும் என்ற இயேசு கிறிஸ்துவின் கூற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

வழிபாடு சார்ந்து இயேசு கிறிஸ்துவுக்கும் சமாரியா பெணிற்கும் நடந்த உரையாடலில் யூதர் சமாரியர் இடையே இருந்த பகைமையை அறிந்துக்கொள்ள முடிகிறது. இந்த பகைமை கி.மு. 720-ஆம் ஆண்டிலிருந்தே உருவானது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதர்கள் அழிவுற்ற தங்கள் கோவிலைக் கட்ட துவங்கியபோது, சமாரியரின் பங்களிப்பை நிராகரித்து விட்டனர். கோவிலிலும் சமாரியருக்கு இடம் மறுக்கப்பட்டது. இதனால் கோபம் கொண்ட சமாரியர்கள் கெரிசிம் மலையில் தங்களுக்கென்று ஆலயம் கட்டி கொண்டார்கள். இது யூதர்களை கோபம் கொள்ள வைத்தது. எனினும் யூதர்கள் சமாரியர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இடம் தரவில்லை அவர்களை புறக்கணித்தே வந்தனர்.

அதே போன்று இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் சமுக மற்றும் சமயச் சூழலில் பெண்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டனர். இரண்டாம் பட்சமாக நடத்தப்பட்டனர். குறிப்பாக இந்த சமாரியப் பெண் இரண்டு நிலைகளில் புறக்கணிக்கப்பட்டார்.

1. அவர் ஒரு சமாரியர்

2. அவர் ஒரு பெண்

இப்படி புறக்கணிக்கப்பட்ட சமாரியர் பெண்ணிற்கு இயேசு கிறிஸ்து வழிபாட்டை குறித்து புதிய விளக்கத்தை தருக்கிறார். யூதர்கள்

எருசலேமே வழிபாட்டின் மையம் எனவும் கடவுளை வழிபாடுவோரில் தாங்களே முதன்மையானோர் எனவும் தவறாக எண்ணிக் கொண்டனர். ஆனால் இயேசு கிறிஸ்து வழிபாட்டிடமோ வழிபடுவோரின் மேன்மையோ முக்கியமல்ல எவ்வாறு அவரை வழிபடுகிறோம் என்பதே முக்கியமானது என்பதை எடுத்துரைக்கிறார் (யோவா. 4 : 24).இந்த மாபெரும் நற்செய்தியை பறைசாற்றுவதற்கு புறக்கணிக்கப்பட்ட பெண்ணை கருவியாக பயன்படுத்தினார். வழிபாட்டைக் குறித்த புதிய வெளிப்பாட்டை இயேசு கிறிஸ்து சமாரியா பெண்ணிற்கு அருளினார்.

வழிபாடு இறைமக்களின் நம்பிக்கையின் கொண்டாட்டம். அது நம்பிக்கை அற்றுப்போன சூழலில் புதிய நம்பிக்கையை தருகிறது. புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் மெசியாவை குறித்த எதிர்நோக்கோடு வாழ்ந்தோருக்கு புதிய வெளிப்பாட்டை அருளியது. வழிபாடு சமூகத்தை குறித்த அக்கறையையும் சபையை குறித்த கரிசனையையும் நமக்குள் உருவாக்குகிறது. நமது வழிபாடுகள் வெறுமனே கொண்டாட்டங்களாக மட்டும் அமைந்துவிடாமல் அது பணிவிடையிலும் சேவையிலும் முழுமை பெறட்டும். நமது வாழ்வே பிறர் கொண்டாடும் வண்ணம் அமையட்டும். அதுவே கடவுளுக்கு உகந்த வழிபாடாகட்டும்.

அருள்திரு. A. **கால்வின் தேவநேசன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 12 | ஞா. | 320 |
| | கீர். | 16 | கீர். | 282 |

**25-06-2023** பெந்தக்கோஸ்துக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு

# சான்று பகர்தலாகிய சீடத்துவம்

## Discipleship as witness

| | |
|---|---|
| 2 அர. 2 : 1-15 | தீத்து. 2 : 1-15 |
| திபா. 119 : 33-48 | யோ. 3 : 22-30 |



. . . எலிசா அவரை நோக்கி : வாழும் ஆண்டவர்மேல் ஆணை உம் உயிர்மேலும் ஆணை நான் உம்மைவிட்டு பிரியமாட்டேன் என்றார். . . (2 அர. 2 : 2b)

கிறிஸ்தவ வாழ்வு சான்று பகரும் சீடத்துவ வாழ்வாகும். கிறிஸ்துவின் ஆலோசனைகளைப் பின்பற்றி அவர் வாழ்ந்த வழிகளில் வாழ்ந்து அவருக்குச் சான்றாக இருப்பதே கிறிஸ்தவச் சீடத்துவ வாழ்வு. சான்று பகர்தல் என்பது நடந்த ஒரு நிகழ்வைக் கண்டு, கேட்டு, அனுபவித்ததாகச் சான்றளிப்பதாகும். எனவே கிறிஸ்தவச் சீடத்துவம் கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு அனுபவித்ததாகச் சான்று பகர்வதாகும். "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்" என்று தம்மை நம்பிய யூதர்களைப்பார்த்து இயேசு கூறினார் (யோவான் 8 : 31). கிறிஸ்தவச் சீடத்துவ வாழ்வை விரும்புகின்றவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து அதற்குச் சான்றாக வாழ வேண்டும். சீடர்களாக வாழ அழைப்புப்பெற்ற நாம் சீடத்துவத்தில் பங்கேற்க வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும். மேலும் சீடத்துவ வாழ்வு என்பது இயேசுவோடு சேர்ந்த ஒரு பயணமாகும். அது எருசலேம் நோக்கிய பயணமாகும். துன்பங்களை ஏற்றுத் துணிவுடன் சான்றுபகர மேற்கொள்ளும் பயணமாகும். (மாற்கு 8 : 31,9 : 31,10 : 32). துன்பங்களை ஏற்று வாழ அழைக்கப்பட்ட ஒரு வாழ்வாகும் (மத்தேயு 16 : 21-28). இறையவரை முன்னிறுத்தி, இறையாட்சியில் அவரைச்சார்ந்து இறையவரை நோக்கிய பயண வாழ்விற்கான ஓர் அழைப்புதான் சீடத்துவம்.

**1. குருவைப் பின்பற்றுவதில் சான்று** (2 அரச. 2 : 2)

ஆபேல் மேகொலா ஊரானான சாப்பாத்தின் மகன் எலிசா. இவர்

பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தபோது தீர்க்கத்தரிசியான எலியா அவர் இருக்கும் இடம் மட்டும் ஓடி அவர்மேல் தன் சால்வையைப் போட்டார். அச்சமயம் எலிசா எலியாவிற்குப் பின்னாக ஓடி உம்மைப்பின் தொடர்வேன் என உறுதிபூண்டார். எலிசா ஒரு செல்வந்தரான விவசாயி. ஆனாலும் தன் வாழ்வாதாராமாயிருந்த மாடுகளை விட்டுவிட்டு எலியாவைப் பின் தொடர்ந்தார் (1 அர. 19 : 19-21). எலியா சுழற்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட போகிறபோதும் எலிசா அவரை தொடர்ந்து பின்பற்றினார். மூன்று முறை எலியா எலிசா தன்னைப் பின்தொடராமலிருக்க சொன்னபோதும் அதற்கு மறுப்பு தெரிவித்து நான் உம்மை விட்டு விடுகிறதில்லை எனக்கூறி தொடர்ந்து பின் சென்றார். (2 அர. 2 : 1-9). இவர் தன் வாழ்நாள் முழுவதும் இறையவருக்குச் சான்றாகவே வாழ்ந்தார்.

சீடராக மாற விரும்பும் எவரும்தம் வாழ்வை உணர்ச்சிபூர்வமாக அழித்துவிட முடியாது. உணர்ச்சிவயப்பட்டு மறுதலித்துவிடவும் முடியாது. ஆனால் அந்த நபரின் கொள்கையிளைப் பற்றிய அறிவுபூர்வமான தெளிவான நிலையைப் பெறவேண்டும். சீடத்துவம் என்பது எளிதான ஒன்றன்று. ஒரு இலட்சியத்தோடு வாழ விரும்பி அதை நிறைவேற்ற வேண்டும். அந்த இலட்சிய பாதை சுய வெறுப்பின் பாதையாக அமையவேண்டும். குருவைப்பின்பற்றி குரு சென்ற பாதையில் விரும்பி பயணிக்க வேண்டும்.

**2. நற்கனி கொடுப்பதில் சான்று** (தீத்து 2 : 7)

நற்கனி கொடுப்பதென்பது கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வில் வெளிப்படுத்தி சான்றுடன் வாழ்வதாகும். மரம் அதன் கனியினால் அறியப்படுவதுபோல கிறிஸ்தவச் சீடத்துவ வாழ்வு சான்றுள்ள நற்செயல்களால் அறியப்படும். பவுல் தீத்துவுக்கு எழுதின திருமுகத்தில் "நற்செயல்களைச் செய்வதில் எல்லா வகைகளிலும் நீயே முன்மாதிரியாய் இரு . . ." (தீத்து 2 : 7) என ஆலோசனை கூறுகிறார். நற்கனி கொடுப்பதற்கு உலகு சார்ந்த தீய நாட்டங்களை மறுத்துக் கட்டுப்பாட்டுடனும், நேர்மையுடனும் இறைப்பற்றுடனும் வாழவேண்டும். கிறிஸ்துவும் நெறிகேடுகளிலிருந்து நம்மை மீட்டு நற்செயல்களில் ஆர்வமுள்ள நம்மை தூய்மைப்படுத்த தம்மையே ஒப்படைத்தார் (தீத்து 2 : 14). எனவே கிறிஸ்துவைப் பின்பற்றிய அவரது சீடர்களும் உலகின் தீய நாட்டங்களுக்கு அடிமைப்பட்டு கிறிஸ்தவச் சீடத்துவத்தின் சாராம்சத்தை இழந்துவிடாமல் தூய ஆவியின் கனிகளைச்

(கலா. 5 : 22, 23) செயலில் வெளிப்படுத்தி வாழ்வது இறையவர் எதிர்பார்க்கும் சீடத்துவ வாழ்வாகும். இவ்வாழ்விற்கு மனம்மாறுதல் (மனந்திரும்புதல்) அடிப்படையாகும். மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள் எனவும் (லூக்கா 3 : 8) "நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சியளிக்கிறது" எனவும் இயேசு கூறினார். எனவே கிறிஸ்தவச் சீடத்துவ வாழ்வில் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிப்படுத்தி வாழ்வது சிறப்பானது. "நான் கிறிஸ்துவை அன்பு செய்கிறேன்; அவர் படிப்பினைகளை மதிக்கிறேன். ஆனால் நான் கிறிஸ்தவச் சமயத்திற்கு மனம்மாற முடியாது, ஏனெனில் கிறிஸ்துவர்களின் வாழ்க்கை இயேசுவின் படிப்பினைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் கீழ்ப்பட்டு அமையவில்லை" என காந்தியடிகள் கூறினார். சீடத்துவ வாழ்வில் இந்நிலைமாறி கிறிஸ்துவின் படிப்பினைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் உட்பட்டு சான்றாக வாழவேண்டும்.

**3. கிறிஸ்துவை முதன்மைப்படுத்திச் சான்றாதல்** (யோவான் 3 : 30)

இயேசு கிறிஸ்துவின் புத்தாக்கம் செய்யப்பட்ட போதனைகளால் புதிய ஏற்பாடு புதிய சட்டமாக மாறியது. கிறிஸ்துவிலும் அவரது வார்த்தைகளிலும் உறுதியாக இருந்து சான்று பகர்தலே சீடத்துவ வாழ்வு. இத்தகைய வாழ்வு என்பது உலகப் பொருளை மேன்மைப்படுத்தாமல் கிறிஸ்துவை முதன்மைப்படுத்தி வாழும் வாழ்வாகும். திருமுழுக்கு யோவானும் தம் இறுதிச்சான்றில் அவரது செல்வாக்குப் பெருகவேண்டும்; எனது செல்வாக்கு குறைய வேண்டும் (யோவான் 3 : 30) எனக் கூறினார். கிறிஸ்தவச் சீடர்களாய் வாழும் அனைவரும் கிறிஸ்துவை முதன்மையாகக் கொண்டு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவராக இருக்கவேண்டும். (லூக்கா 14 : 26-27). பவுலடிகளார் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள அனைத்தையும் குப்பையாகக் கருதுவதாகக் கூறுகின்றார் (பிலி. 3 : 8) கிரேக்க நாட்டு தத்துவ மேதை ஒருவர், பட்டப்பகலில் கையில் விளக்கேற்றி மனிதனைத் தேடினார். இன்று கிறிஸ்து பட்டப்பகலில் விளக்கை கையில் ஏந்தி அவருடைய சீடர்களைத் தேடுகின்றார். இன்று ஏராளமான கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். ஆனால் சல்லடை போட்டு சலித்து எடுத்தாலும், ஒரு சீடரையும் கண்டுபிடிக்க இயலாது. கிறிஸ்துவை ஒப்பற்ற மாதிரியாகக் கருதி அவரைப் பின்பற்ற வேண்டும். அதற்குத் தடையாக இருக்கின்ற, உடைமையோ, உறவோ, உயிரோ எதுவாயினும்

இழக்கத் துணிய வேண்டும். ஒரு விதை தன்னை அழித்துக் கொண்டு மரமாகிறது. ஒரு துளி தன்னை இழந்தபின்பே கடலாகிறது. அதைப்போல தான் அழிந்து கிறிஸ்துவை முதன்மைப்படுத்தி வாழ்வதே சீடத்துவ வாழ்வு.

இயேசு தேடுவது ரசிகர்களையல்ல! சீடர்களை !
வெறும் பக்தர்களையல்ல! கிறிஸ்துவைப் பிரதிபலிப்பவர்களை!

ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் வாழ்ந்தவர் Dietriah Bonhoeffer (1906-1945). இவர் ஹிட்லரின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்ததால் துன்பங்களைச் சந்தித்தவர். ஹிட்லரின் அநீதமான அடக்குமுறைக்கு உதவியாகச் செயல்பட்ட இராணுவத்தில் கட்டாயமாக சேரவேண்டிய சூழலைத்தவிர்க்க அமெரிக்காவிற்குச் சென்றார். ஆனாலும் தம் மக்கள் மீது கொண்ட அன்பினால் ஜெர்மனிக்குத் திரும்பினார். அவர் ஜெர்மனிக்கு வந்த பின்னர் அவரும் அவரது குடும்பத்தினரும் கைது செய்யப்பட்டனர். Flossen berg என்ற முகாமில் 1945-ஆம் ஆண்டு Bonhoeffer சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இவர் எழுதிய புகழ்பெற்ற நூல் “The cost of Discipleship” (சீடராவதற்குத் தரவேண்டிய விலை). அவரின் எழுத்துக்களைப் போலவே சீடராகவே வாழ்ந்து காட்டினார். இவர் உலகம் சொன்ன வழியை அல்ல கிறிஸ்துவின் வழியைத் தெரிந்தெடுத்தார். கிறிஸ்துவின் சீடராய் வாழ்வதற்கான விலையைக் கொடுத்தார். தூக்கிலிடப்பட்டார். சாவதற்கும் துணிந்த சீடராய் வாழ்ந்தார். சான்றாக மாறினார்.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாமும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலும், நல் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிப்படுத்தி, கிறிஸ்துவை முதன்மைப்படுத்தி கிறிஸ்தவ சான்று பகரும் சிறந்த வாழ்வை இவ்வுலகில் வாழ்ந்து சான்றாவோம்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 7 | ஞா. | 451 |
| | கீர். | 379 | கீர். | 281 |

**02-07-2023** பெந்தக்கோஸ்தேற்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு &


பொறுப்பாண்மை ஞாயிறு

# பொறுப்பாண்மை : பொறுப்புள்ள வளமேலாண்மை

## Stewardship : Responsible Resource Management

விப. 18 : 13-27 | 2 கொரி. 8 : 1-15

தி.பா. 147 : 1-11 | மத். 25 : 14-30



‘‘மோசே தம் மாமனாரின் சொல்லைக் கேட்டு, அவர் சொன்னபடியெல்லாம் செய்தார்’’ (வி.ப. 18 : 24).

“பொறுப்பாண்மை” என்பதற்கு ஆங்கிலத்தில் Stewardship, Accountability, Responsibility, போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொறுப்பாண்மை என்பது ஒருவருக்கு தரப்படும் பொறுப்பை குறிக்கோள் மாறாமல் செயல்படுத்தி முடிப்பதில் கிடைக்கும் வெற்றி என வரையறுக்கப்படுகிறது. பொறுப்பை செயலாக மட்டும் கருதாமல் உணர்வுபூர்வமான ஈடுபாட்டுடன் செயல்படுத்துவதன் வெளிப்பாடுதன் பொறுப்பாண்மை. ஒருவருக்கு கிடைக்கும் பொறுப்பை விருப்பத்தோடு செய்தால் ஆளுமையை வளர்த்திக்கொள்ளலாம். அதை வெறுப்போடு செய்தால் அவப்பெயர் பெற்றுக்கொள்ளலாம். நமக்கு கிடைத்திருக்கும் வளங்களை நாம் சரியாக நிர்வகிக்க வேண்டும் என்பதேயே கடவுள் நம்மில் எதிர்பார்க்கிறார். இங்கு தரப்பட்டத் திருமறைப் பாடங்கள் கூறும் பொறுப்புள்ள வளமேலாண்மை எவை என்பதை தியானிப்போம்.

(1) **பரந்தமனப் பொறுப்பாண்மை** (Broad minded Responsibility)

“மோசே, இஸ்ரவேல் அனைவரிலும் திறமை வாய்ந்தவர்களை குழுக்களின் தலைவர்களாக நியமித்தார்” (விப. 18 : 25). அண்மையில் வெளிவந்த நாள்வழிச் செய்தித்தாளில் DSP சத்தியா தமிழக DGP-க்கு எழுதியக் கடிதத்தில் “சட்ட ஒழுங்குப் பணிகளின் காரணத்தால் எனக்கு ஏற்படும் மன அழுத்தத்தை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை; தற்கொலை செய்யும் எண்ணம் என்னில் எழுகிறது. பணியிடமாற்றம் தந்து என்னைக் காப்பாற்றுங்கள்” என குறிப்பிட்டிருந்தார். ஒருவர் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யத் திணிக்கப்படும்போதும் அவர் தான் அனைத்து வேலையும் செய்ய வேண்டும் எனக் கேட்கும் போதும் மனஅழுத்தமும் உடல்சோர்பும் ஏற்படுவது இயல்பே. இவை

தூக்கமின்மை, முன்கோபம், பயம், பதற்றம், உயர் இரத்த அழுத்தம் போன்ற உடல்நலக்கேடுகளைக் கொண்டு வரும்.

பழைய ஏற்பாட்டுத் திருமறைப் பாடத் தகவலின்படி கடவுளின் மக்கள் எனப்பட்ட இஸ்ரயேல் மக்களினத்தை கடவுள் மோசே வழியாக எகிப்திலிருந்து விடுவித்தார். மோசே அவர்களைக் கானானை நோக்கிப் பாலைநிலம் வழியாக வழிநடத்தினார். அவர்களிடையே எழுந்த குற்றங்களை காலை முதல் மாலை வரை தாம் ஒருவராக நியாய விசாரணை செய்து சோர்வுற்றார் (வி.ப. 18 : 13). இச்செயலைக்கண்ட மோசேயின் மாமனார் கூறிய ஆலோசனைப்படி மோசே இஸ்ரயேலர் அனைவரிலும் திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களில் ஆயிரமவர், நூற்றுவர், ஐம்பதின்மர், பதின்மர் எனும் குழுக்களுக்கு தலைவர்களாக (நீதிபதிகளாக) நியமித்தார். அவர்களும் மக்களுக்கு நீதி வழங்கி வந்தனர் (வி.ப. 18 : 24-26). தாம் ஒருவராக நிர்வகித்த ஆளுமை என்னும் மனித வளத்தை மோசே தம் பரந்த மனதால் பகிர்ந்தளித்தார். ஆளுமை ஒருவருக்கே என்னும் குறுகிய மனதிலிருந்து (from Narrow Mind) பரந்த மனதால் பலருக்கு மாறியது (to Broad Mind). ஒருவரிடமே பொறுப்பைக் குவிக்காமல் பிறருடன் பகிர்ந்து கொள்வதன் மூலமே செம்மையான நிர்வாகம் நடைபெறும் என்பதை மோசே உணர்ந்தார். கடவுளின் கூற்றை மட்டும் கேட்டுப் பழகிப்போன மோசே பிறர் கருத்தையும் கேட்கும் மனப்பக்குவத்தை ஏற்றுக்கொண்டு பொறுப்பைப் பகிர்ந்து கொடுத்த செயல் பரந்தமனப் பொறுப்பாண்மையின் சிறந்தப் படிநிலையாகும்; நாமும் நமது வீட்டில், திருச்சபையில்/ சமூகத்தில் கிடைக்கும் பொறுப்புக்களை உடன்வாழ்வோரிடம் பகிரும் மனதோடு வாழ அழைக்கப்படுகின்றோம். அப்படிப் பகிரும்போது ஒருவரிடம் மட்டும் இருக்கும் ஆளுமை பலரிடம் வெளிப்பட்டு ஒரே நேரத்தில் பல தலைவர்களை உருவாக்க உதவும்.

**(2) பங்கெடுக்கும் பொறுப்பாண்மை** (Participatary Responsibility)

"அவர்கள் வறுமையில் மூழ்கியிருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள்". (2 கொரி. 8 : 2). ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சிலர் அளவுக்கு அதிகமாகச் செல்வச் செழிப்பில் வாழ்வதும் பலர் ஒருவேளை உணவுகூட இல்லாமல் நித்திரைக்குச் செல்வதும் இப்போது வாடிக்கையாக இருக்கிறது. இதனால் பசியால் மடிவதும் பசியைப் போக்க உடல்உறுப்புக்களை விற்பதும் வழக்கமாகிறது. நாள் ஒன்றிற்கு உலகில் சுமார் 69 கோடி பேர் உணவின்றி வறுமையில் வாடி வதங்குகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபைப் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. அடுத்தவர் மேல் உள்ள

அக்கறை இல்லாமல் போவதே வறுமை நாளுக்கு நாள் வளரக் காரணமாகின்றது. 2019-ஆம் ஆண்டில் 250 மில்லியன் Selfi வழியாகப் புகைப்படங்கள் எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கின்றது. தங்கள் படங்களை தாங்களே எடுத்து தாங்களே ரசித்து அவற்றை மற்றவர்கள் பாராட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் பதிவிடும் மோகம் அடுத்தவர்மேல் உள்ள அக்கரை குறைந்து வருகிறது என்பதைக் காட்டுகின்றது. அடுத்தவர்மேல் உள்ள அக்கறை குறைந்ததால்தான் செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்த செல்வந்தர் தன்முன் இருந்த லாசரு என்னும் ஏழைக்கு, தான் உண்ணும் உணவில் சிறிதளவு கூடப்பகிராமல் ஏழை இலாசருவின் வாழ்வின் தேவையில் பங்கெடுக்காமல் இருந்தார்(லூக். 16 : 19-31). ஏழைக்கும் செல்வந்தருக்கும் இடையேயுள்ள வேறுபாடு இயேசு காலத்தில் இருந்திருக்கிறது என்பதை இந்த நிகழ்வு வழியாக நமது ஆண்டவர்இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

திருத்தூதுவர் நூலின் தகவலின்படி கி.பி. 48-ல் யூதேயாவிலும் எருசலேமிலும் மக்கதோனியாவிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருந்தது (தி.ப. 11:28). முந்திய வருடம் ஓய்வு வருடமாகையால் யூதர்கள் நிலங்களில் பயிரிடவில்லை. எனவே பஞ்சம் மக்களை மிகவும் வாட்டியது. இது பவுலாரையும் விட்டு வைக்கவில்லை. இதனால், மக்கதோனியாத் திருச்சபை மிகுந்த வறுமையையும் நிதிபற்றாக்குறையையும் சந்தித்த போது இங்கிருந்து இரண்டு இளைஞர்கள் பவுலாரின் பற்றாக்குறையைப் போக்கும்படி அவரின் துன்பத்தில் பங்கெடுத்தனர் (2 கொரி. 11 : 7-9). நம் அருகே வாழ்வோரின் வறுமையை மாற்றியமைக்க பங்கெடுத்தல் வழியாக நம்மிடம் இருக்கும் வளத்தை பகிர முன் வருவோம். இருப்பதை இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து பங்கெடுக்கும் பொறுப்பாண்மையை வளர்த்துக்கொள்வோம்.

**(3) பணிசெய்யும் பொறுப்பாண்மை** (Responsibility to work)

“ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்தை ஈட்டினார்” (மத். 25 : 16). நாட்டுப்புறத்தில் வாழ்வோர்களில் ஒருவர் கடவுளிடம் அறிவியல் மூளையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். இன்னொருவர் தொழில்நுட்ப மூளையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். மூன்றாவதாக ஒருவர் கேட்பதற்கு முன்னரே கடவுள் அவரிடம் என்ன மூளை வேண்டும் எனக் கேட்க, வந்தர் “நான் சும்மா வந்தேன்” எனக் கூறினார். அப்படியானால் “சும்மாவாகவே போ” என கடவுள் அவனிடம் கூறினார் என ஒரு கதை

கூறுகின்றது. கதையின் மூன்றாம் நபரைப் போல் உழைக்காமல் சும்மா வாழ்ந்து ஊதியம்பெற விரும்பும் பலர் இயேசு வாழ்ந்த காலத்திலும் இருந்திருக்கின்றனர். இப்படி சோம்பேறிகளாகச் சுற்றித்திரிந்தவர்கள் உழைக்கவேண்டும் என்பதற்காகவே இந்த தாலந்து உவமையை இயேசு பயன்படுத்தினார்.

"தாலந்து" (Talent) என்பதற்கு "திறன்" எனப் பொருள் கொள்ளலாம். கடவுள் தரும் திறமைகளை சரியாக பயன்படுத்தத் தவறக் கூடாது என்பதற்காகவே இந்த உவமை இங்கு பயன்படுத்தப்பட்டது. ஐந்து தாலந்தை பெற்றவர் உழைப்பால் மேலும் ஐந்து தாலந்தை சம்பாதித்தார். இரண்டு தாலந்தைப் பெற்றவர் தம் உழைப்பால் மேலும் இரண்டு தாலந்தை ஈட்டினார். ஒரு தாலந்தைப் பெற்றவர் அதற்கு இணையாக இன்னொரு தாலந்தை ஈட்டாமல் தந்தவரிடமே திரும்பக் கொடுக்க அதை பெற்றுக்கொண்டவர் ஏற்கனவே அதிகமாக இலாபத்தை சேர்த்தவரிடம் கொடுத்தார். "உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும், இல்லாதோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும்" (மத். 25 : 29) எனவும் வாழ்க்கையில் முன்னேற ஆர்வத்தோடு வேலை செய்பவர் உள்ளவராகவும் முன்னேற எந்த ஆர்வமுமின்றி சோம்பேறிகளாகச் சுற்றி திரிபவர்கள் இல்லாதவராகவும் இருப்பதாக இந்த உவமை விளக்குகிறது.

அவரவர் தகுதிக்கேற்ப திறன்களை கடவுள் ஈவாக ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார். கடவுள் நமக்குத் தரும் பொறுப்புக்களைப் பேணிவளர்க்க உழைத்தால் இருப்பில் வளர்ச்சியும் கடவுளின் பாராட்டையும் பெறத் தகுதி உடையவர்களாவோம். கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாக வளர்த்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளாமலிருந்தால் அவற்றை நாம் இழக்க நேரிடும். கடவுள் நமக்கு தந்திருக்கும் திறன்களை நமது நலனுக்காகவும் பொதுநலனுக்காகவும் சரியாகப் பயன்படுத்தி பணிசெய்யும் பொறுப்பாண்மையால் பலுகச் செய்யும்போது விண்ணக மகிழ்ச்சியில் நுழையும் வாய்ப்பையும் பெறுவோம்.

இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் வளங்களை பரந்தமனதோடுப் பகிர்ந்து, வறுமையில் இருப்பவரோடு பங்கெடுத்து பணிவிடைசெய்து பலுகச் செய்தால் பொறுப்புள்ள வளமேலாண்மையின் பங்காளிகளாக வாழலாம்.

அருள்திரு. அறிவர் **S. வில்சன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 36 | ஞா. | 350 |
| | கீர். | 19 | கீர். | 378 |

**09-07 -2023** பெந்தக்கோஸ்துவுக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு & இறையியல் கல்வி ஞாயிறு

# இறைமக்களைத் தகுதிப்படுத்துதல்

## Equipping the Poeple of God

இ.ச. 6 : 1-17 எபே. 4 : 7 - 16
தி.பா. 119 : 89-104 மத். 7 : 24 - 29



"ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக்கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்" (மத். 7 : 24)

இறையியல் கல்வி ஞாயிறு கொண்டாடுவதின் நோக்கம் இறைமக்கள் இறையியலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும், திருச்சபை வாழ்வில் இறையியல் கல்லூரிகளின் பங்களிப்பினை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் ஆகும். "இறையியல் கல்வியின் நோக்கம் மனிதனை ஆழமாகவும் விமர்சனப் பார்வையிலும் சிந்திக்க தூண்டுவது" என மார்டின் லூத்தர் கிங் குறிப்பிடுகிறார். அறிவுத்திறனோடு நல்ல பண்புகளைப் புகட்டுவது உண்மையான கல்வியின் இலட்சியம் ஆகும் என்கின்றார் (The function of education is to teach one to think intensively and to think critically. Intelligence plus character - that is the goal of truth education). இந்தக் கூறுகளோடு சேர்த்து, இறைவனையும் இறைவார்த்தைகளையையும் இறைத்திட்டத்தையும் இறைப்பணியைக் குறித்தும் புரிந்து கொள்வதற்கு இறையியல் கல்வி உதவியாக இருக்கின்றது. இறையியல் கல்வி பல கோணங்களில் இறைமக்களைத் தகுதிப்படுத்தினாலும் இந்த நாளுக்குரிய திருமறை பகுதிகள் எவைகளை முன்னிறுத்துகின்றன என்பவற்றை ஆராய்வோம்.

### 1. இறையியல் கல்வி : வரலாற்றைப் புகட்டி இறைமக்களைத் தகுதிபடுத்துகின்றது

பழைய ஏற்பாட்டுப் பகுதி. (இ.ச. 6 : 1-17) "பெற்றோர் பிள்ளைகளுக்கு வரலாற்றில் செயல்பட்ட இறைவனின் மகத்துவங்களை எடுத்துக் கூறி இறைவனின் அன்பிலே பிள்ளைகளை வழிநடத்தவேண்டும்" என வலியுறுத்துகின்றது. இறையியல் கல்வி

இல்லங்களில் ஆரம்பிக்கிறது எனவும் இறையியல் கல்வி ஆசிரியர்களாகப் பெற்றோர் செயல்படுகின்றனர் எனவும் இப்பகுதி விவரிக்கின்றது. இஸ்ரயேலர் கானான் நாட்டிலே எல்லாச் செழிப்போடும் பல்சமயச் சூழலில் வாழ்ந்த போது பிள்ளைகள் வழி தவறிப் போகாதபடி, வரலாற்றிலே தங்களைச் சுமந்து வந்த இறைவனை மறக்க கூடாது என்பதற்காக வரலாற்று இறைவன் மோசேயின் வழியாகக் கொடுக்கப்பட்ட கட்டளைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்க் வேண்டும் (6 : 10-12) என்பதே திருமறை தந்தக் கட்டளை. இந்தப் பகுதியில் முக்கியமாக யூத மக்கள் கடைபிடிக்கும் ஷெமா (Shema) என்று அழைக்கப்படுகின்ற பெரிய கட்டளை இடைபெறுகின்றது (இ.ச 6 : 4, 5). எல்லாச் சூழலிலும் முதன்மை இடத்தை இறைவனுக்குக் கொடுக்க வேண்டும் என்கின்ற இந்த கட்டளையைப் பிற்கால யூத சமுதாயத்தில் ஒவ்வொருவரும் காலையிலும் மாலையிலும் தவறாமல் அடிப்படைக் கடமையாகச் செய்து வந்தனர். பத்துக் கட்டளையின் சுருக்கமாக கருதப்பட்ட இந்தக் கட்டளையை இயேசு கிறிஸ்து முதல் கட்டளையாகவும், பெரிய கட்டளையாகவும் எடுத்து இயம்புகின்றார் (மத்தேயு 22 : 37, 28).

இந்தக் கட்டளைகள் குறித்துப் பிள்ளைகள் வினவுகின்றபோது, “இது பார்வோனின் நுகத்தடியில் இருந்து தப்புவித்து விடுதலை வாழ்வு தந்த இறைவரின் கட்டளைகள் (இ.ச. 6 : 20-23). இந்தக் கட்டளையைக் கைக்கொள்வதின் வாயிலாக நீடிய வாழ்வினைப் பெற்றுக்கொள்ளலாம்.” (இ.ச. 32 : 46, 47) என்பதையும் விளக்குகின்றது. கட்டளைகளின் பின்னணியங்களை மட்டுமல்ல, பண்டிகைகள் (வி.ப. 12 : 25-27) மற்றும் நினைவு சின்னங்களின் வரலாற்றினையும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் (யோசுவா 4 : 6, 7). அது போலவே, வரலாற்றில் ஏற்பட்டப் பிழைகளையும் அதன் மூலமாக இறைவனின் கோபத்திற்கு ஆளான நிகழ்வுகளையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறவேண்டும் (இ.ச. 29 : 22, 31). இந்த வரலாற்று உண்மைகள் பிள்ளைகளுக்கு இறைபயத்தை ஏற்படுத்தும் (இ.ச. 31 : 13) யூத சமயத்தில், வரலாற்றைப் போதிப்பதின் நோக்கம் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பது மட்டுமல்ல, மாறாக நிகழ்காலத்தில் நெறியுடன் வாழ்வதற்கும் நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் உதவும். கடந்த காலத்தை மறந்தவர்கள் செய்த தவறினை மீண்டும் செய்வார்கள் என்பது முதுமொழி. பிள்ளைகள் காணாத, அனுபவிக்காத

வரலாற்றினைப் பெற்றோர் எடுத்து இயம்புகின்ற போது உண்மைத் தலைமுறையாக நிலைத்து நிற்கின்றது. மேலை நாடுகளில் வரலாற்றில் செயல்பட்ட இறைவனையும் இறைக்கட்டளைகளையும் பிள்ளைகளுக்குப் புகட்ட தவறினதினால் தாங்கள் பெற்றிருக்கின்ற உயர்வுகளுக்குக் காரணம் சுயஞானமும், சம்பாத்தியமும், விஞ்ஞான வளர்ச்சியும் என்று கருதி இறை அன்பை உணராமல் ஆலயம் செல்லாதபடி வாழ்ந்து வருகின்றார்கள்.

### 2. இறையியல் கல்வி : விசுவாச வாழ்வில் வழிநடத்தி இறைமக்களைத் தகுதிபடுத்துகின்றது

தூய பவுலார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில், கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை விசுவாசத்தில் உறுதியாக நின்று, பக்தி விருத்தி அடைய இறைவன் அப்போஸ்தலரை, தீர்க்கதரிசிகளை, சுவிசேஷகர்களை, மேய்ப்பர்கள் மற்றும் போதகர்களை நியமிக்கின்றார் எனக் குறிப்பிடுகின்றார். விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக தேறுவதற்குப் போதிக்கின்ற பணி முக்கியமானதாகும். திருச்சபைக்குப் போதகர்கள் இறையியல் கல்வி ஆசிரியர்களாகச் செயல்பட அழைக்கப்படுகின்றனர். இந்த இறையியல் கல்விப் போதனைகளின் நோக்கம், இறைமக்கள் விசுவாச வாழ்வில் குழந்தைகளாயிராமல் பூரண புருஷர்களாக வளரவேண்டும் என்பதாகும் (எபே. 4 : 13-15). விசுவாச வாழ்வை அளவிடுவதற்கு “குழந்தைகள், தேறினவர்கள்” என்கின்ற உருவகம் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. எபேசியர் நிருபத்தைப் பொறுத்தமட்டில் வீணான சிந்தை, இருதயக் கடினம், அறியாமை, உணர்வில்லாமை, காமவிகாரம், கோபம், திருடுவது, கெட்ட வார்த்தைகள் பேசுதல் போன்ற பண்புகள் விசுவாச வாழ்வில் குழந்தைகளாக இருப்பதின் அடையாளங்களாகக் கூறப்பட்டுகின்றன (எபே. 4 : 17-32). பவுல் கொரிந்தியருக்கு எழுதுகின்றபோது, பொறாமை, வாக்குவாதம், பேதங்கள் போன்ற பண்புகள் இத்தன்மையைக் குறிப்பதாக அறிவிக்கின்றார் (1 கொரி. 3 : 1-3). இவைகளைக் களைந்து வளருவதற்கு இறையியல் போதனைகள் தேவைப்படுகின்றன.

இப்போதனைகளின் இன்னொரு நோக்கம் தவறான போதனைகளில் அகப்பட்டு அலைந்தடிக்கப்படாமல் உறுதியுடன் முன்னேறுவதற்கு துணை நிற்கின்றன (எபே. 4 : 14). புதிய ஏற்பாட்டுத் திருச்சபை சந்தித்த சவால்களில் ஒன்று தவறான போதனைகள்.

பவுலடிகளார் மூப்பர்களுக்கு உரையாற்றுகின்ற போது, மந்தையைத் தப்பவிடாத ஓநாய்கள் மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள். ஆகவே விழித்திருங்கள் என்கிறார் (திருத்தூதர் பணிகள் 20 : 29-31). பவுல் தீமோத்தேயுக்கு எழுதுகின்ற கடிதத்தில் "பிற்காலத்தில் சிலர் பொய் உபதேசங்களுக்குச் செவிகொடுப்பதினால் விசுவாசத்தில் இருந்து வழி விலகிப் போவார்கள்" என்கிறார் (1 தீமோ. 4 : 1). ஆதித் திருச்சபை கி.பி. 4 மற்றும் 5-ஆம் நூற்றாண்டுகளில் திரித்துவத்தைக் குறித்தும், இயேசுவின் தன்மை குறித்தும், இயேசுவின் தாயைக் குறித்தும் தவறான போதனைகள் மற்றும் குழப்பங்களினால் இறைமக்கள் குழப்பமடைந்தபோது இறையியல் தெளிவுடன் திருச்சபை தலைவர்கள் விவாதித்துப் பதிலுரைக் கொடுத்தனர். "நிசேயா பற்றுறுதியறிக்கை", "அப்போஸ்தல பற்றுறுதியறிக்கை" போன்றவைகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. திருச்சபை தெளிவுடன் முன்னேறி வருவதற்கு இவைகள் உறுதுணையாக இருந்தன. தற்காலத்தில் தவறான போதனைகள் பல கோணங்களில் திருச்சபையில் நுழையும்போது இறைமக்கள் பற்றுறுதியில் நிலைத்திருப்பதற்கு இறையியல் கல்வி துணை நிற்கின்றது.

### 3. இறையியல் கல்வி : வசனத்தை விளக்கி இறைமக்களைத் தகுதிபடுத்துகின்றது.

இந்நாளுக்குரிய திருப்பாடலும், நற்செய்திப் பகுதியும் இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன. இறைவார்த்தையைப் புரிந்துகொள்ளவும், அதனை வியாக்கியானம் செய்யவும் இறையியல் கல்வி துணை நிற்கின்றது. வேத அறிஞர்கள் மூலமொழியில் திருமறையை ஆராய்ச்சி செய்வதும், தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஏடுகளை ஆராய்ந்து மூலமுதலான பொருளை வெளிக்கொண்டு வருவதும் இறையியல் கல்வியின் சிறப்பு ஆகும். 119 ஆம் திருப்பாடலில் இறைவார்த்தையின் மகிமையை விவரிக்கின்றபோது "வேதம் தனக்கு மனமகிழ்ச்சியாக இல்லாதிருந்தால் துக்கத்திலே அழிந்துபோயிருக்க வேண்டியதாகும்" என்று கூறுகிறார். மாறாக வேதத்தைத் தியானிக்கிறபடியால் தன்னுடைய எதிரியை விட தனக்குப் போதிக்கின்ற ஆசிரியரைவிட, அனுபவம் மிகுந்த முதியவர்களை விட ஞானவனாக செயல்படுவதாக கூறுகின்றார். பொல்லாத வழியை விட்டு விலகவும், நியாயத்தைக் கடைப்பிடித்து நடக்கவும் இறைவார்த்தை உதவுகின்றது என்று சான்றுரைக்கின்றார்

(திருப்பாடல் 119 : 97-104). எல்லா நிலையிலும் குறைவற்ற இறைவார்த்தை ஆத்துமாவை உயிர்ப்பித்துப் பேதையை ஞானியாக்குகின்றது (திருப்பாடல் 19 : 7).

இந்த வார்த்தை வெறும் தியானத்தோடு நின்று விடாதபடி வாழ்விலே செயல்படுத்தப்படுகின்றபோது நம் வாழ்வுக்கு உறுதியான அடித்தளமாக அமைகின்றது என்பதை நற்செய்தி பகுதி வலியுறுத்துகின்றது (மத். 7 : 24-29). வாழ்வில் எழுகின்ற எந்தச் சவால்களையும் சமாளிப்பதற்கு உதவி புரிகின்றது. திருமறை தியானம் வாழ்வின் அனுபவமாக மாறாத நிலையில், வாழ்வில் புயல்காற்று போன்று சவால்கள், போராட்டங்கள், இழப்புகள் வருகின்றபோது துவண்டு போகின்றோம். ஆகவே இறையியல் கல்வி, வார்த்தையின் வரலாற்றுப் பின்னணியத்தோடு இறைமக்களின் சூழலோடு இணைத்து ஆராய்வதின் முக்கியத்துவத்தை இப்பகுதி வலியுறுத்துகின்றது. இறையியல் கல்வி வெறும் அறிவு அல்லது கோட்பாடு சார்ந்ததாக மட்டும் இல்லாமல் செயல்சார்ந்ததாக அல்லது களப்பணியாற்றத் தூண்டுவதாக அமையவேண்டும் என்பதையும் நற்செய்தியாளர் வலியுறுத்துகின்றார்.

அருள்திரு. T. **ஜெபின்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 40 | ஞா. | 466 |
| | கீர். | 6 | கீர். | 405 |

**16-07-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிறு

# இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள்

## People of God : Ambassadors of Christ

யோசு 1 : 1-9 2 கொரி. 5 : 16 - 6:10

திபா. 18 : 1-6; 20-30 மாற். 6 : 7-13



"பல பேய்களை ஓட்டினார்கள்; உடல்நலமற்றோர் பலரை எண்ணெய் பூசி குணப்படுத்தினார்கள்" (மத். 6 : 13)

தூதுவர்கள் அமைதியின் காரணிகள். அவர்கள் ஒரு நாட்டைச் சார்ந்திருந்து, அந்த நாட்டின் பிரதிநிதிகளாக பிற நாடுகளில் அரசு அதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள். Ambassador என்ற சொல்லுக்கு Oxford அகராதி தரும் விளக்கம் என்னவென்றால் "an accredited diplomat sent by a country as its official representative to a foreign country" இதன் கிரேக்கச் சொல் "presbeuo" அதன் பொருள் "to be a senior, an elder who act as a representative, to be an ambassador". இதன் எபிரேயச் சொல் "tsir" அதன் பொருள் "one who goes on an errand" என்பதாகும். பொதுவாக, தூதுவர்கள் என்றால் ஒரு நாட்டில் உள்ள மிகவும் முக்கியமான, மதிப்புமிக்க மற்றும் அதிகாரமுடைய பணிகளை செய்கிறவர்களாகும். அவர்கள் பிற நாட்டில் தூதுவராக அனுப்பப்படும் போது, தன்னுடைய சொந்த நாட்டின் சார்பாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கும். இது மிகவும் கடினமான பணியும் கூட. எப்போது இரு நாடுகளுக்கிடையே போர்பதட்டம் வரும் என்று கூற முடியாது. அப்படி வரும்போது, தூதுவர்களாக பணிசெய்யக் கூடியவர்கள் உடனடியாக தங்கள் சொந்த நாட்டிற்குத் திருப்பி அழைக்கப்படுவார்கள். ஒருவேளை அந்த எதிரி நாட்டு அரசு இவர்களை அனுப்பாமல் சிறையில் கூட அடைக்கலாம் அல்லது கொலை செய்யக்கூடிய சூழ்நிலையும் உருவாகலாம். பெரும்பாலும் ஒரு தூதுவர் ஒரு நாட்டின் அரசுப் பிரதிநிதியாக இருப்பதால் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படுவார். அதுபோல கடவுளின் பிரதிநிதியாக ஒருவர் அனுப்பப்படுபவர்களே கிறிஸ்துவின் தூதுவர்கள் ஆவர். இறைமக்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தியானிப்போம்.

**1. இறைவார்த்தைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்** (யோசுவா 1:1-9)

கடவுள் தன்னுடைய தூயப் பணிக்காய் அவரின் ஊழியர் மோசே இறந்தபின், நூனின் மகனும் மோசேயின் உதவியாளருமாகிய யோசுவாவை அழைத்து "நீ திடமும் உறுதியும் கொண்டு என் ஊழியன் மோசே கட்டளையிட்ட எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடிப்பதில் கவனமாயிரு. நீ அதனின்று வலப்புறமோ இடப்புறமோ திரும்பாதே. அப்பொழுது தான் நீ செல்லும் வழியெல்லாம் வெற்றி பெற முடியும். இந்தத் திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே. இரவும் பகலும் இதனைத் தியானம் செய்து, இதில் எழுதியுள்ள அனைத்தையும் கடைப்பிடிப்பதில் கவனமாய் இரு. அப்பொழுது தான் நீ செல்லும் இடமெல்லாம் நலம் பெற்று வெற்றி காணமுடியும்" கடவுள் கூறுகிறார். தூதுவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தாலும் முழுமையாக அவர்கள் சொந்த நாட்டின் நலனுக்காகவே பாடுபட வேண்டும். மேலும் எப்போதும் அரசியல் சாசன சட்ட திட்டத்தின்படியே தான் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும். இங்கேயும் கடவுளின் தூதுவராகத் தொடரச் சட்ட திட்டமாகிய கடவுளின் திருவார்த்தைகளைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம் என்பது வலியுறுத்தப்படுகின்றது. நாமும் திருவார்த்தைகளைக் கடைப்பிடிப்போம் தூதுவர்களாய் இறைப்பணியைத் தொடர்வோம்.

**2. இறைவார்த்தைகளைப் போதிக்க வேண்டும்** (மாற்கு 6 :7-13)

T.W. மான்சன் என்பவர் "மாற்கு 6:7-13-ல் இடம்பெற்றுள்ள நிகழ்ச்சி நல்ல வரலாற்றுச் சான்று பெற்றது" என்கிறார். குறிப்பாக மாற்கு 6:7-13-ல் காணபடும் பணி முறைகள் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த எஸீன் மக்கள் மத்தியில் காணபட்ட முறைகளாகும். இதுவரை இயேசு மட்டுமே செய்து வந்த அருளுரை ஆற்றுகிறதும் சுகமாக்குதலுமான திருப்பணியை, இப்போது அவரது நெருங்கிய தோழரும், பிரதிநிதிகளுமாகிய பன்னிரு சீடர் மூலமாய் விரிவாக்கப்படுகிறது. தாம் கொண்டுள்ள அதிகாரத்தைப் போலவே சீடர்களுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கிறார். அவர்களை யூதர் பழக்கத்தின்படி இருவர் இருவராக அனுப்புகிறார். யாரிடம் போகின்றனரோ அவர்களது உதவியை நாடி நிற்கச் செய்தார். இது எப்போதும் கடவுளைச் சார்ந்திருப்பதை ஊக்குவிப்பதாகவும் அமைகிறது. தேவைகளுக்கானவைகளை எடுத்துச் செல்லக்கூடாது. செல்லும் இடங்களில் பணியாளர்களைப் பலர் ஏற்றுக்கொள்வது அக்கால பழக்கம் மூன்று நாட்களுக்கு மேல் தங்கினால் ஒருவன் பொய்த் தீர்க்கதரிசி என்பது "போதனை" (Didache)

என்ற 2-ஆம் நூற்றாண்டு நூலில் இடம்பெறுகின்றது. யூத எல்லைக்குள் பிரவேசிக்கும் முன் இதர மக்களின் நாட்டுத் தூசியைக் கவனமாய்த் தட்டி விடுதல் வழக்கம். இதன் பொருள், தங்களை ஏற்காத இடங்களின் மக்களைத் தள்ளி விடுதல் ஆகும். மேலும், தூதுவர் தங்கள் பொறுப்பைச் செய்து முடித்தனர். இனி அந்த இடத்துக்கு மக்கள் தாமே பொறுப்புக்குரியவர்கள் என்பதாகும். கடைசியில் எண்ணெய் பூசி ஜெபித்தனர். பலர் விடுதலையையும் பெற்றுக் கொண்டனர். உலக தூதுவரின் செயல்கள், வார்த்தைகள் சில நேரங்களில் விடுதலையை மக்களுக்குக் கொடுக்க தவறிவிடுகின்றன. ஆனால் கிறிஸ்துவின் தூதுவர்களான இறைமக்கள் திருவார்த்தைகளைப் போதிக்கும்போது அவை மக்களுக்கு விடுதலை கொடுக்கின்றனவாக அமைந்தன. "இறையாட்சி வருவதற்கும் மேசியாவின் சமுதாயம் தோன்றுவதற்கும், இவர்களின் தூது முன்னோடியாக அமைந்தன" என்று டெய்லர் என்னும் இறையியலாளர் கூறுகிறார். நாமும் இறைத் தூதுவர்களாய் அவர் வார்த்தைகளைப் போதித்து, தூதுவராய்ப் பணி செய்து மேசியாவின் சமூகத்தை உருவாக்குவோம்.

**3. இறைமக்களை ஒப்புரவாக்க வேண்டும்** (2 கொரி. 5:16; 6:10)

மனிதன் கடவுளோடும், பிற படைப்புகளோடும் ஒப்புரவோடு வாழ்வது மிகவும் அவசியம். கடவுளோடு உள்ள ஒப்புரவாக்குதலில் உள்ள மிக முக்கிய அம்சம் "கடவுள் நமது பாவங்களை இனி கணக்கிடுவதில்லை" என்பதாகும். ஒப்புரவாக்குதலின் தனிப் பண்பு மன்னிப்பு வழங்குதலாகும். இந்த ஒப்புரவாக்குதல் படைப்புகள் அனைத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பரிபூரணமான அதன் பலனைப் பெறுவதற்குமுன் தனி மனிதன் ஒவ்வொருவனும் ஒப்புரவாகுதலின் செய்தியைக் காதுகளால் கேட்டு அதை மனதால் ஏற்க வேண்டும். எல்லா மக்களும் நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்புப் பெறுவதற்கு, முன்னர் ஏற்கெனவே ஒப்புரவாக்கப்பட்டவர்களும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியானவர்களும் ஒப்புரவாகுதலின் செய்தியை எடுத்துக்கூறும் பொறுப்பைப் பெற்றுள்ளார்கள். இப்பணியைச் செய்ய கடவுள் தம் தூதுவர்களான இறைமக்களை அழைக்கிறார். நாம் அனைவரும் கிறிஸ்துவின் அரசுத் தூதுவர்கள் ஆவர் பவுலடியார் இப்பணிக்கெனத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டவர். இப்போது கிறிஸ்துவின் அதிகாரத் தூதராக நின்று அவருடைய அதிகாரத்தோடு திருவசனத்தைப் பிரசங்கிக்கிறார். அதிகாரத்தோடு கேள்வி கேட்ட மக்களோடும் தன்னுடன் விரோத போக்கைக் கையாண்ட

கொரிந்து திருச்சபை மக்களோடும் அவர் அதிகாரத்தோடு செய்தியை விடுத்தாலும் அவருடைய செய்தி ஒரு வேண்டுகோளாகவே உள்ளது. நற்செய்தி என்பது தன் விருப்பக்கொடையாகக் கடவுளால் ஈயப்படுகிறது. அதை ஒருவர் ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ உரிமையுண்டு. ஆனால் ஒப்புரவாகுதலை நாம் பெற வேண்டுமென்றால் நமது மனதைத் திறந்து கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆக பவுல் கிறிஸ்துவில் ஒப்புரவாகும் ஊழியத்தை நிறைவேற்ற முழு மூச்சுடன் செயல்படுகிறார். அதுபோலவே, கிறிஸ்துவின் தூதுவர்களாக இருக்கின்ற நாம் அனைவரும் ஒப்புரவாக்கும் திருப்பணியை முழு நம்பிக்கையுடன் செய்ய வேண்டும்.

நாம் அனைவரும் கிறிஸ்துவின் தூதுவர்கள் என்று உணர்ந்து இறைவார்த்தைகளைக் கடைப்பிடித்து, போதித்து, ஒப்புரவாக்கும் பணிகளைச் செய்து நாம் வாழும் சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவோம். ஆமென்.

திரு. M. **ஜெபு ஜெய்சிங்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 351 | ஞா. | 468 |
| | கீர். | 418 | கீர். | 408 |

**23-07-2023**


பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
எட்டாம் ஞாயிறு

# அருட்பொழிவுத் திருப்பணி :
# மாற்றுருவாக்கம் பெற்றது மாற்றுருவாக்கவே

## Ordained Ministry : Transformed to Transform

எசே. 33 : 1-9 | 1 திமோ. 3 : 1-13

தி.பா. 99 | யோவா. 21 : 15-19



"…. என் ஆடுகளைப் பேணி வளர்" (யோவா. 21 : 17)

சாதீய, சமய, கலாச்சார ஒடுக்குதல்களில் இருந்த தென்திருவிதாங்கூரில் விடுதலைக்கான வித்தினை முளைக்கச் செய்தவர் மகாராசன் வேதமாணிக்கம் அவர்கள். வல்ல நாட்டிலிருந்து மைலாடி வந்து குடியேறிய இவர் இந்து சமயத்தின் மீது அதிக பற்றுமிக்கவராயிருந்ததால் தஞ்சை சிதம்பர நடராசர் கோவிலுக்குத் தன் அண்ணன் மகனான சிவகுருநாதனையும் அழைத்துக் கொண்டு பண்டாரவேடம் அணிந்து சென்றார். ஆனால் அங்குள்ள முறைமைகள் அவருக்கு விருப்பமாய் அமையவில்லை. தஞ்சையில் மகாராசன் குடும்பத்தைச் சார்ந்த பலர் கிறிஸ்தவராயிருந்தனர். அங்குச் சென்ற மகாராசனும் சிவகுருநாதனும் அவர்களுடன் ஆலயம் சென்றனர். அன்று ஆராதனை நடத்திய அருள்திரு. கோலப் ஐயர் மெய்ஞானம் என்னும் நூலைக் கொடுத்துப் படிக்கக் கூறினார். அதன் பின் மகாராசன் என்ற பெயரை வேதமாணிக்கம் என்றும், தம்முடன் அழைத்துச் சென்ற தன் அண்ணன் மகனான சிவகுருநாதனுக்கு மாசிலாமணி என்றும் புதிய பெயர்களைச் சூட்டி திருமுழுக்கு எடுத்து கிறிஸ்தவராயினர். இவ்விதமாய் மாற்றுருவாக்கம் பெற்ற மகாராசன் வேதமாணிக்கம் தென்திருவிதாங்கூர் மக்களை மாற்றுருவாக்கத்துக்கு நேராக வழிநடத்தினார். அதற்குக் கன்னியாகுமரிப் பேராயமே சான்றாய் அமைகிறது.

ஆண்டவரின் சீடரில் முதன்மையானவராய்க் கருதப்பட்ட பேதுருவை ஆண்டவர் இருநிலைகளில் மாற்றுருவாக்கப்படுத்தித் திருத்தூதுவப் பணிக்காக திருநிலைப்படுத்தினார். முதலாவது; திருமுழுக்குநர் யோவானின் சீடனாயிருந்து பின்னால் இயேசுவின்

சீடரான அந்திரேயா தன் சகோதரனாகிய சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தபோது, இயேசு சீமோனுக்குக் "கேபா" என்ற பெயரைக் கொடுத்து பெயரில் மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தினார் (யோவா. 1 : 40-42). புதிய பெயர், வாழ்வுக்குப் புதிய பொருளைக் கொடுக்கிறது (ஆதி. 17 : 5, எசா. 62 : 2). பேதுரு என்ற இப்புதிய பெயரில் ஆண்டவர் தம் சபையைக் கட்டுவதாக வாக்களிக்கிறார் (மத். 16 : 18). இரண்டாவது, உயிர்த்தெழுந்த ஆண்டவர் பேதுருவிடம் "என் மீது அன்பு செலுத்துகிறாயா?" (யோவா. 21 : 15-17) என்ற வினாவினை மூன்று முறை எழுப்பினார். ஏனெனில் பேதுரு மூன்று முறை தன்னைத் தெரியாது என்று மறுதலித்ததனை நினைவுபடுத்தினார். அதன்பின் பேதுரு மனமாற்றத்துக்கு அடையாளமாகத் துக்கப்பட்டு அதன்பின் மாற்றுருவாக்கம் பெறுகிறார். ஆண்டவர் அருள்பொழிவு திருப்பணிக்காக, பேதுருவை மாற்றுருவாக்கம் செய்து இரண்டு சிறப்புமிக்க பணிகளைக் கொடுக்கிறார். அவற்றை இங்கு தியானிப்போம்.

**1. காவல் பணி** (Watchman) :

ஆண்டவர் பேதுருவிடம் "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்ற கட்டளையைக் கொடுத்தார். பவர் மொழிபெயர்ப்பில் "மேய்ப்பாயாக" (யோவா. 21 : 15) என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்படும் "பொஸ்கோ" (Bosko) என்ற சொல் Tend or feed என்னும் பொருள் தருகிறது. அதாவது பேணி வளர்த்தல் அல்லது போஷித்தல் என்பது பொருள். ஆட்டுக்குட்டிகள் தான் சுயமாக எதுவும் செய்ய முடியாதநிலையிலும், அவைகள் கொடிய விலங்குகளுக்கு இரையாகாமல், அவைகளை மென்மையாக நடத்தி, பாதுகாத்து உணவு கொடுக்கவேண்டும் என்பதனைப் பேதுருவுக்கு ஆண்டவர் கற்றுக்கொடுத்தார். இந்த ஆட்டுக்குட்டிகளுக்குக் காவல் பணிச்செய்ய பேதுருவை மாற்றுருவாக்கப்படுத்தினார். சாதாரண மனிதர் காவல்காரராக மாற்றுருவாக்கம் பெற்றபோது அவர் மக்களுக்குள் பொறுப்புமிக்கவராக மாறுகிறார். இஸ்ரவேல் மக்களுக்குக் காவல்காரராக ஆண்டவர் இறைவாக்குநர் எசேக்கியேலை நியமிக்கிறார் (எசேக். 33 : 7). இஸ்ரவேல் மக்களுக்குத் தீமைகள் வரும்போது, உள்ளுக்குள்ளான தீமைகள் பெருகும்போது விழிப்பாயிருந்து, எக்காளம் ஊதி மக்களை எச்சரிக்க வேண்டும் என்பதனை ஆண்டவர்

கற்றுக்கொடுத்தார் (எசேக். 33 : 1-9). ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்க்கும் காவல்பணிக்காய் மாற்றுருவாக்கம் பெற்ற பேதுரு துணிச்சலாய்த் தீமைகளிலிருந்த மக்களை எச்சரித்தார் (அப். 2 : 14-22). அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் ஆபத்துகள் வரும்போது செயற்கையாய் வடிவமைக்கப்பட்ட கருவிகள் ஒலிகளை எழுப்பி எச்சரிப்பை ஏற்படுத்துகின்றன. ஆண்டவர் இவ்வுலகில் நம்மை காவல்பணியாளர்களாக வைத்திருக்கிறார். முகநூல், வலைப்பின்னல் இவைகளைத் தவறான செயல்களுக்குப் பயன்படுத்துதல், போதை பொருள்களைப் பயன்படுத்துதல், நீதியற்ற செயல்களைச் செய்தல், சுற்றுச்சூழலை மாசுப்படுத்துதல் போன்ற தீமையான செயல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் காவலர்களாயிருக்கிறோம். ஆனால் பல வேளைகளில், “நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ” (ஆதி. 4 : 9) என்ற வினாவினை எழுப்பி பொறுப்புகளை உதாசீனப்படுத்துகிறோம். சாதாரண மனிதராகிய நம்மை ஆண்டவர் மாற்றுருவாக்கம் செய்து காவலராக திருநிலைப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட சிறப்பினைப் பெற்ற நாம் பிறரையும் மாற்றுருவாக்கம் செய்வோம்.

**2. மேய்ப்பு பணி** (Shepherd) :

பேதுருவிடம் “என் மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று ஆண்டவர் இரண்டாவது முறை கேட்டு “என் ஆடுகளை மேய்ப்பாயாக” (யோ. 21 : 16) என்ற கட்டளையைக் கொடுக்கிறார். மேய்ப்பு பணி என்பது மிகவும் கடினமானது. இஸ்ரவேல் மக்கள் வரலாற்றில் நியாயாதிபதிகள் மேய்ப்பராக இருந்து பாதுகாப்பு அளித்தனர்(I நாளா. 16 : 6). தொடர்ந்து அரசர்கள் மேய்ப்பராயிருந்து வழிநடத்தினர் (II சாமு. 5 : 2). அனைத்துக்கும் மேலாகக் கடவுள் மேய்ப்பராக இருக்கிறார் (சங். 23 : 1) என்கிற உண்மையை இஸ்ரவேலர் புரிந்திருந்தனர். இயேசு கிறிஸ்துவும் தன்னை நல்ல மேய்ப்பன் என்பதனைவிட உண்மையான மேய்ப்பராக வெளிப்படுத்தினார் (யோவா. 10 : 11). ஏனெனில் “நல்ல” என்னும் பொருளைக் குறிப்பிட “அகதொஸ்” (agathos) என்னும் கிரேக்க சொல்லைப் பயன்படுத்துவர். ஆனால் யோவான் உண்மை என்ற பொருளை தரும் “ஹாலொஸ்” (kalos) என்னும் சொல்லைப் பயன்படுத்தி இயேசுவை உண்மையான மேய்ப்பராகக் கூறுகிறார். உண்மையான மேய்ப்பருக்கு ஆடுகளின் பெயர் தெரியும்; ஆடுகளும் தாங்கள் இருக்கும் தொழுவத்தில் பலரது ஆடுகள் இருந்தாலும்

அவற்றிற்குத் தங்கள் மேய்ப்பர் வரும்போது அவர் குரல் தெரியும் (யோவா. 10 : 3). ஆண்டவர் இயேசு தன்னை மேய்ப்பராக உருவகப்படுத்தி, அந்த மேய்ப்பன் என்கிற பொறுப்பைத் தன் சீடராகிய பேதுருவிடம் “என் ஆடுகளை மேய்ப்பாயாக” (யோவா. 21 : 16) என்று விட்டுவிடுகிறார். பேதுரு மேய்ப்பராக மாற்றுருவாக்கம் பெறுகிறார். மேய்ப்பன் என்கிற பொறுப்பு தன் விருப்பப்படி வாழ்வதற்கல்ல; பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரின் திருச்சித்தப்படி வாழ்வதற்காகும் (யோவா. 21 : 19). மேய்ப்பன் சமூக, குடும்ப வாழ்வில் நற்பண்புகளுடன் வாழவேண்டும் (I தீமோ. 3 : 1-13). பதற்றப்பட்டு வழிதடுமாறிய பேதுரு ஆண்டவரால் மாற்றுருவாக்கம் பெற்று பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரின் பாதையைத் தெரிவுச் செய்தார். மரணத்திலும் தன்னைச் சிலுவையில் தலைகீழாக அறையும்படி கேட்டு இரத்தசாட்சியானார். இன்று உலகில் சுயம் சார்ந்த தீமைகளினாலும், செழுமைச் சார்ந்த இறையியல் கோட்பாடுகளினாலும் வழிவிலகிச் செல்லும் மக்களைக் கண்டறிந்து உண்மையான மேய்ப்பன் என்னும் நல்ல பணியைச் செய்ய கடவுள் விரும்புகிறார். இப்பணி ஒருவர் மாற்றுருவாக்கம் பெற்று பிறரையும் மாற்றுருவாக்கச் செய்யும் ஒரு சங்கிலித்தொடர் போன்றதாகும். ஆடுகள் அமைதியாய் வாழ மேய்ப்பன் விழித்திருக்க வேண்டும். இவ்வுலக மக்கள் நீதியுடன் கூடிய அமைதியாய் வாழ ஒவ்வொருவரும் உண்மை மேய்ப்பராய் விழித்திருக்க வேண்டும். ஆண்டவர் அதற்கான ஆற்றலைத் தந்து உங்களைக் காப்பாராக.

அருள்திரு. S. **கிரீஷ்குமார்**


| 𝄞 | ஞா. | 433 | ஞா. | 352 |
|---|---|---|---|---|
| | கீர். | 19 | கீர். | 199 |

**30-07 -2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம்

## Marriage : Celebration of Covenent

| | |
|---|---|
| தொநூ. 2 : 18-25 | எபி. 13 : 1-6 |
| திபா. 127 | மத். 19 : 3-6 |



“மேலும் அவர் இதனால் கணவன் தன் தாய்த் தந்தையைவிட்டு விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்து இருப்பான். இருவரும் ஒரே உடலாயிருப்பர்” (மத். 19 : 5)

திருமணம் என்பது ஆன்மிக உடன்படிக்கையாகப் பார்க்கப்படுகிறது. உலகப்பார்வையில் உடன்படிக்கைகள் முறிவுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இருவர் சேர்ந்து எடுக்கும் உடன்படிக்கைகள் அதிக நாட்கள் நீடிப்பதற்கு வாய்ப்பு குறைவு. கருத்து வேறுபாடுகள், சரியான புரிதல் இல்லாநிலைகள் ஏற்படும்போது உடன்படிக்கையில் முறிவுகள் ஏற்படுகின்றன. கடவுள் தம் மக்களினத்தோடு கொண்டிருக்கும் உடன்படிக்கைகள் முறிவில்லாமல் நிரந்தரமாகவும் வாழ்வில் பயனுள்ளதாயும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடவுளின் உடன்படிக்கையை இறைவாக்கினர்கள் திருமண உடன்படிக்கையுடன் ஒப்பிட்டு எழுதினார்கள் (ஒசியா 3 : 1-5). இஸ்ரயேல் மக்கள் திருமண உடன்படிக்கையை உயர்வாக மதித்தனர். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை, திருமணத்தைத் திருவருட் சாதனங்களில் ஒன்றாகக் கடைப்பிடிக்கிறது (one of the sacraments) சீர்திருத்தத் திருச்சபை திருமணத்தைத் திருவருட் சாதனமாகப் பார்க்காவிட்டாலும் திருமண ஆராதனையை திருவருட் சாதனமாகவே கொண்டாடுகிறது (Protestant Churches, not consider marriage as one of the sacraments, but celebrate the wedding service as a sacrament). திருமணத்தை இறையரசின் முன் சுவையாக திருச்சபை கருதினாலும் திருமண முறிவுகள் இன்று அதிகமாகி வருவது வருந்தத்தக்கது. இந்தியச் சட்டம் 377 ரத்துச் செய்யப்பட்டிருப்பது சிறுபான்மை பாலினத்தவரின் உரிமையாக எடுத்துக் கொண்டாலும் கலாச்சாரச் சீரழிவை உருவாக்கி விடுமோ என்ற சந்தேகங்களும், விவாதங்களும் திருச்சபை வட்டாரத்தில் ஏற்பட்டுள்ளன. பேராய அளவில் திருமண

முறிவுகளைத் தவிர்க்கும் விதமாக திருமண முன் ஆலோசனை மையம் அமைக்கப்பட்டுக் குடும்ப வாழ்வில் இணையும் நபர்களுக்குத் தகுந்த ஆலோசனைகள் தரப்பட்டு வருகின்றன. திருமண உடன்படிக்கை கொண்டாடப்பட வேண்டிய தருணத்தில் அது, எத்தகைய தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதைத் தியானிப்போம்.

A) **திருமண உடன்படிக்கை; கடவுள் முன்னிலையில் கையெழுத்திடப்படுகிறது** (Marriage Convenent : Signed before God (Gen. 2 : 18-25)

திருமண உடன்படிக்கை வாழ்வு சார்ந்தது (Life oriented). அது ஒரு புதிய குடும்பத்தின் ஆரம்பம் (new begining of a family). காரணம் கடவுள் குடும்பத்தைக் கட்டுகிறவர் (சங். 27 : 1). குடும்பம் கடவுளின் படைப்பின் வரலாற்றால் சொல்லப்பட்டாலும் (தொடக் 1 : 27); 2: 7, 21-22) ஆண், பெண் ஆகிய இருவரும் கடவுளின் சாயலால் படைக்கப்பட்டு உயிர் பெற்றவர்கள் (Human being as the real reflection of the image of God). பெண் மனிதனின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டதால் ஆணுக்கு நிகரானவர் அல்ல என்ற கருத்து விவாத பொருளாக்கப்பட்டாலும் விலா எலும்பிற்கு "ட்ஸெலா" என்னும் எபிரேய வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் 'One Side' ஒரு பக்கம் என்பதாகும். ஆணின் விலா எலும்பின் ஒரு பகுதியை எடுத்து பெண்ணைப் படைத்தார். எனவே எந்த நிலையிலும் பெண் ஆணுக்கு அடிமை அல்ல மாறாக ஆணுக்கு இணையானவர் என்பதையும் அதில் சமத்துவ பாலினம் மேலோங்கி நிற்பதையும் பார்க்கிறோம். அபர்பானல் (Aber banel) என்ற யூத ரபி என்பவர் "பெண்ணை ஆணுக்கு அடிமையாகப் படைத்திருந்தால் ஆதாமின் காலிலிருந்தோ அல்லது தலையிலிருந்தோ தான் உருவாக்கியிருக்க வேண்டும் மேலும் ஆதாம் ஏவாளைப் பார்த்து பாடும் பாடலில் (தொநூ. 2 : 23) "இவளே என் எலும்பின் எலும்பு, சதையின் சதை" என்று குறிப்பிடுகிறார். எபிரேய பாரம்பரியத்தில் நீ என் இரத்தத்தின் இரத்தம் சதையின் சதை என்பது வாழ்வின் உயரிய சமத்துவ இணைவை வெளிப்படுத்தும் வார்த்தைகளாகப் பயன்பட்டு வந்தன" (நீதி. 9 : 29, 2 சாமு. 19 : 12, தொட. 29 : 13, 14) எனக் கூறுகிறார். இதன் வழி "நீயே நான், நானே நீ" என்றும் ஆழமான உயிருள்ள சிந்தனை திருமண உடன்படிக்கையில் வெளிப்படுகிறது.

விலாவைக் குறிக்கும் "ட்ஸெலா" என்ற வார்த்தையும் கடவுளின் சாயலைக் குறிக்கும் "ட்செலம்" வார்த்தையும் ஒரே வேர் சொல்லிருந்து வந்தவைகள். ஆகவே ஆண், பெண் சாயல் என்பதில் வித்தியாச உணர்வுகளுக்கு இடமில்லை. திருமண உடன்படிக்கையில் ஆண், பெண் என்பது இறைசாயலின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து, உணர்ந்து, மகிழ்ந்து திருமண வாழ்வைக் கொண்டாட வேண்டும். ஒரே உடல், ஒரே உயிர், ஒரே சாயல் என்பவற்றையே வாக்குறுதிகளாகச் சொல்லித் திருமண ஆராதனையில் கடவுள் முன்னிலையில் கையெழுத்துப் போடப்படுகிறது. இணைந்த வாழ்விற்கு நாங்கள் முழு மனதுடன் ஒத்துக்கொண்டு வாழ்வோம் என்றும் இறையரசின் தகவுகளில் ஒன்றான குடும்பம் (Family) என்ற ஆன்மீக இயக்கத்தில் கடவுள் முன்னிலையில் இணைக்கப்பட்டோம் என்பதையும் சரியாக புரிந்துக்கொண்டு திருமணத்தை வாழ்வு தரும் உடன்படிக்கையாக எடுத்துக் கொண்டு மகிழ்வுடன் கொண்டாடுவோம்.

B. **திருமண உடன்படிக்கை; திருத்தி எழுத முடியாது** (Marriage Convenent : cannot be rewritten (Heb. 13 : 1-6))

திருமண உடன்படிக்கை திருத்தி அல்லது திரும்ப எழுத முடியாது. Marriage Convenent can't be rewrittin or can't be written again). காரணம் உள்ளங்கள் உண்மையாக இணைந்தால் மாட்டுத் தொழுவமும் மாளிகையாய்த் தெரியும். உடன்படாத திருமண வாழ்வால் மாளிகைக்கூட மாட்டுத் தொழுவமாக மாறிவிடும். கடவுள் உடன்படிக்கைகளைக் காலத்திற்கும், நேரத்திற்கும் ஏற்றார்போல் மாற்றுகிறவர் அல்ல. திருமணங்கள் பெரும்பாலும் ஆன்மிகக் குணங்களை மையப்படுத்தி நடத்தப்படுவதில்லை. ஆனால் எல்லாவற்றையும் நமது வசதிக்கேற்றபடி அமைத்திவிட்டு "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" என்று அழைப்பிதழ்களில் குறிப்பிடுகிறோம். திருமணத்தைக் கவனக் குறைவாகவும், அலட்சியமாகவும் எடுத்துக் கொள்ளாமல் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் (எபி. 13 : 4) எடுத்து செயல்படுத்தல் முக்கியமானது. சகோதர சகோதரிகளில் அன்பு நிலைத்திருக்க செய்யப்படும் உறவுக்கு முன்னுரிமை தரப்படும் காரியங்களில் ஒன்று திருமணம் என்பதையும் யாவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம் (எபி. 13 : 1). திருமணம் தூய்மையான குடும்ப வாழ்வின் அடித்தளம். அங்கு அன்பைத் தவிர்த்து வேறொன்றுக்கும் இடமில்லை. அன்பைக் (I கொரி. 13 : 1) குறிக்கும் "அகாப்பே" என்ற

வார்த்தையைப் பவுலார் 9 முறை பயன்படுத்துகின்றார். அன்பைக் குறிக்கும் நான்கு சொற்கள் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

a) ஸ்டோர்கே : இரத்த உறவு சார்ந்த அன்பு, அதாவது பிள்ளைகள், குடும்பம், பெற்றோரிடம் காட்டும் அன்பு (family love).

b) ஃபிலோ : நட்பு சார்ந்த அன்பு (friend love)

c) ஏரோஸ் : உடல் (அழகு) சார்ந்த அன்பு (Attractive love)

d) அகாப்பே : தெய்வீக/தன்னலமற்ற அன்பு (Godly love)

இந்த நான்கு வகை அன்பும் திருமண உடன்படிக்கையில் உறுதிப்படுத்தப்படுகின்றன. ஆகவே அன்பைப் பிராதனப்படுத்தி திருமண உடன்படிக்கைக் கொண்டாடப்பட வேண்டும்.

திருமண உடன்படிக்கை நிலையானது, நிரந்தரமானது என்பதாக எடுத்துக்கொண்டு குடும்பங்களைக் கட்ட முன் வருவோம்.

C. **திருமண உடன்படிக்கை; முடிவில்லாதது** (Marriage Covenent : un-ending one (Mathew 19 : 3-6)

இயேசுவின் காலத்தில் யூதர்கள் திருமணத்தை உயர்வாகவும்; தூயதாகவும் எண்ணினார்கள். பழமை வாதிகள் திருமண உறவு முறிதலுக்குரிய உரிமையை ஆண்களே பெற்றிருந்தாலும் கடவுள் திருமண முறிவை ஆதரிக்காதவர் என்ற ஆழமான சிந்தனை யூத இனத்தில் வலிமை பெற்றிருந்தது (மல்கியா 2 : 16). மோசேயின் காலத்தில் பெண்களை அடிமைப்படுத்தி, துன்புறுத்தி மணவிலக்கு கொடுக்காமலிருந்த காலச்சூழலில் பெண்கள் விடுதலைக்காகவே “மணவிலக்குச் சீட்டு” முறை வழக்கத்திற்கு கொண்டு வரப்பட்டது. மணவிலக்குச் சீட்டுப் பெற்றுக்கொண்ட பெண்ணிற்கு மறுமணம் செய்யும் வாய்ப்புகள் மறுக்கப்படவில்லை. பிறருடன் தகாத உறவில் வாழும் கணவனும், மனைவியும் சமூக அந்தஸ்தில் குறைபட்டவர்களாகவே கருதப்பட்டனர் (மாற்கு 10 : 11, 12; லூக். 16 : 18; 19: 9).

இயேசு கிறிஸ்துவிடம் திருமண முறிவு குறித்து பரிசேயர் குற்றம் சுமத்தும் விதமாக கேட்டபோது, திருமண வாழ்வு முடிவில்லாத ஒன்று எனவும் இணைக்கப்பட்டவர்கள் இணைந்து வாழும் காலம் முழுவதும்

கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார் (மத். 19 : 3-6). திருமண ஆராதனை முறைமையின் இறுதியில் போதகரால் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் இந்தத் திருமண உடன்படிக்கை முடிவில்லாதது (It is an on going one) என்பதை எடுத்துச் சொல்கிறது (Pass on to generation to generation). திருமண உறவுக்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் “கிட்டுஷின்”. அதற்குரிய ஆழமான பொருள் அர்ப்பணமாக்குவது (committed, dedicated) அல்லது திருநிலைப்படுத்துவது (consecration). திருமணத்தில் ஒருவரை ஒருவர் அர்ப்பணமாக்கி இந்த வாழ்விற்கு முடிவில்லை என்பதை எடுத்துக் கூறுகிறோம் என்பதை இச்சொல் உறுதிப்படுத்துகின்றது.

திருமண உடன்படிக்கை கடவுள் முன்னிலையில் கையெழுத்திடப்படுகிறது. திருத்தி எழுத முடியாதது. முடிவில்லாதது. ஆகவே இந்த உடன்படிக்கையை அர்த்தம் நிறைந்ததாய் பார்க்க வேண்டியதும் பயன்படுத்திக் கொண்டாட வேண்டியதும் அவசியமாகிறது. நவீன உலகில் ஏற்படும் கலாச்சாரச் சீரழிவிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாய்க் கிறிஸ்தவ திருமணங்களும், குடும்ப வாழ்வும் அமைதல் வேண்டும். மண முறிவுகளைத் தவிர்த்திடும் மண இணைவை வலிமைப்படுத்தும் தம்பதியர்களாய்த் திகழ்ந்து திருமண உடன்படிக்கைக் கொண்டிருக்கும் குணங்களில் பிழைகளை ஏற்படுத்தாமல் விழிப்பாயிருந்து குடும்ப வாழ்வைக் கொண்டாடுவோம்.

அருள்திரு. முனைவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

| | | | |
|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 382 | Tune : நாம் தேவ சந்நிதானத்தில் |
| | கீ. | 9 | |
| | ஞா. | 384 | Tune : எந்தன் ஜீவன் இயேசுவே |
| | கீ. | 309 | |

**06-08 -2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தாம் ஞாயிறு & அருட்பணி ஞாயிறு

# அருட்பணி : அனைவருக்கும் நற்செய்தி

## Mission : Good News to All

எசா 55 : 1-6 திப. 10 : 34-43
தி.பா. 146 மத். 4 : 17-25



“அவரைப் பற்றிய பேச்சு சீரியா நாடு முழுவதும் பரவியது. பல்வேறு பணிகளாலும் . . . ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்கள் பெருந்திரளாய் அவரைப் பின் தொடர்ந்தனர்.” (மத். 4 : 24, 25)

மிஷன் என்ற ஆங்கிலச் சொல் “மிசியோ” (Missio) என்னும் லத்தின் வினைச் சொல்லிலிருந்து கையாளப்பட்டதாகும். இச்சொல்லுக்கு “அனுப்புகிறேன்” என்று பொருள். கிறிஸ்தவ அருட்பணியின் அடிப்படையே கடவுளால் அனுப்பப்படுதல் ஆகும். அருட்பணி ஒரு குறிப்பிட்டப் பணியைச் செய்ய பிரத்யேகப்படுத்துதல், நியமித்தல், அனுப்புதல் ஆகும். கிறிஸ்தவ அருட்பணியின் முதன்மை நோக்கம் கிறிஸ்தவ நம்பிக்கையினைப் பறைசாற்றுதல் ஆகும். சீடர்களை இயேசு தெரிந்தெடுத்ததின் முக்கிய நோக்கம். இவ்வுலகில் (லூக்கா 4 : 18, 19) அருட்பணி தொடர்ந்து செய்திடல் வேண்டும் (மத். 28 : 19-20) என்பதே ஆகும்.

ஒவ்வொரு சமயத்திலும் அதைச் சார்ந்தோருக்கு கட்டாயக் கடமை ஒன்று உண்டு. அதிலும் கிறிஸ்தவர்களுக்குக் கட்டாய கடமை என்பது அருட்பணி செய்வதே (1 கொரி. 9 : 16). கிறிஸ்தவர்களின் ஒன்றிணைந்த அமைப்பு தான் திருச்சபை. திருச்சபையின் உயிர்மூச்சு அருட்பணியாகும். அருட்பணி செய்ய தவறும் நிலையில் உயிரோட்டமற்றத் திருச்சபையாக மாறிவிடுகிறது. மேலை நாட்டின் திருச்சபைகளின் அருட்பணியின் தாக்கம் தான் இந்திய மண்ணின் மாற்றத்திற்கான காரணம். இம்மண்ணின் மாற்றம் குறித்து அருட்பணி சார்ந்து திட்டமிடும் குழுவின் அங்கத்தினரில் ஒருவர் “மண்ணில் மாற்றம் பிறக்க அருட்பணியின் வைராக்கியம் தேவை. இல்லையேல் மாற்றம் நடைபெறாது” எனக் குறிப்பிட்டார். இதன் வழி அருட்பணி அது அனைவருக்கும் நற்செய்தி என்பது புலனாகிறது. அருட்பணி வழி தான் நம் சமுதாயத்தில் சமத்துவம், கல்வி, உடல் நலன், மேம்பட்ட

வாழ்வாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றில் உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. இதனை உணர்ந்து சமுதாய மாற்றம் பிறந்திட உழைத்திட வேண்டும். எப்படியும் செய்வது அருட்பணியாகாது. அருட்பணி வைராக்கியமாக செய்யப்பட வேண்டியதே. கால சூழலுக்கு ஏற்ப அதன் முறமைகளை மாற்றி அமைத்திடல் வேண்டும். எக்காலச் சூழலுக்கும் ஏற்புடைய நிலையில் அருட்பணி செய்ய நாம் திருமறையை ஆழப் புரிந்து அதை வாழ்வியலாக்கவேண்டும். அப்படி வாழ்ந்தால் அருட்பணி அனைவருக்கும் நற்செய்தியாகும் ("Mission is manifesting the mystery of God"). அருட்பணி கடவுளின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதாகும். சபை அருட்பணி செய்திட அழைப்பைப் பெற்றுள்ளது. ("Church is called to engage in the mission of God"). எமில் பூருணர் (Emil Brunner). "தீ எரிந்து கொண்டிருப்பதால் தீ இருப்பது போல, சபை நிலைத்திருப்பது அருட்பணியால்" எனக் குறிப்பிடுகிறார் ("The Church exists by mission just as a fire exists by burning"; "Where there is no Mission there is no Church"). சபை கட்டாயம் அருட்பணி செய்திட வேண்டும் என்பது கடமையே, எனவே அருட்பணி செய்வோம், அவர் வருகைக்கு ஆயத்தமாவோம்.

### 1. அருட்பணி : எல்லைகளைக் கடந்து நற்செய்தியளித்தல்

"ஓ, தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசா. 5 : 16). இதைப் போன்று இயேசு தன் நாசரேத்தூர் அறிக்கையிலும் மிகவும் தெளிவாக தனது பணி குறித்துக் குறிப்பிடுகிறார் (லூக். 4 : 18-20). எசாயா தீர்க்கரின் உரையின்படி ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கென (மத். 4 : 19) சீஷர்களை அழைத்து அனுப்புவதைக் காணலாம். தேவையிலிருப்போர், தகுதியிழந்தோர், இயலாதோர், ஒடுக்கப்பட்டோர், ஒடுங்கிபோனோர் போன்றோர், இனம், மொழி, நிறம், நாடு கடந்து குரல் கொடுக்கும் கடவுளின் அருட்பணியைத் தீவிரமாக திருச்சபைகள் நிறைவேற்ற வேண்டும். ஏதோ ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு அதாவது யூதர்களுக்கு மட்டுமல்ல எல்லா ஜனத்தினருக்கும் அருட்பணி செய்திடல் வேண்டும். லண்டன் மிஷன் அருட்பணியைத் தென் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் Rev. றிங்கல் தௌபே, Rev. சாள்ஸ் மீட், Rev. சிங்கிளேயர் வழியாக நிறைவேற்றியதால் சமுதாய மாற்றம், சமத்துவம், கல்வி, ஆரோக்கியம், கலாச்சார மாற்றம் மலர்ந்தது. நாம்

இன்று காணும் மாற்றங்கள் அனைத்தும் ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட, சமுதாயத்திற்குச் செய்த அருட்பணியால் நிகழ்ந்தது. இன்று DMPB-ன் அருட்பணி தமிழகத்தின் எல்லைத் தாண்டியும் நடைபெறுவதற்குக் காரணம் மலைகளில் மனிதர்களால் கண்டுகொள்ளப்படாத மக்கள் மகா பெரிய வெளிச்சத்தைக் காணவேண்டும் என்று அற்பணிப்புடன் செயல்பட்ட லண்டன் அருட்பணியாளர்கள் ஜெசிமன் பிராண்ட், திருமதி ஈவிலின் பிராண்ட், Dr. பால் பிராண்ட் ஆகியோராலும், கன்னியாகுமரி மறை மாவட்ட DMPB அருட்பணியாளர் Rev. எலியாஸ் ஆகியோரின் அருட்பணி என்றால் மிகையாகாது. Dr. பால் பிராண்ட் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உடல் கூறுகளைச் சரி செய்ய பிளாஸ்டிக் சர்ஜரி வழி வாழ்வு பெற உதவியவரின் அருட்பணியே, மலை மக்களுக்கும், தொழுநோயாளர்களுக்கும் நற்செய்தியாயிற்று. இன்று, அருட்பணியால் மலை மக்களில் அநேகர் மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, காவல்துறை அதிகாரிகளாக, அரசுப் பணியாளர்களாக தாதியர்களாக இங்கும், வெளி நாடுகளிலும் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். எனவே இத்தகைய நன்மைகள் திருச்சபைகளின் அருட்பணியால் எல்லைகளைக் கடந்து அது நற்செய்தியானதால் அமைந்தது.

**2. அருட்பணி : எல்லைகளைக் கடந்த உரையாடல்** தி.ப. 10 : 34-43

"கடவுளுக்கு அஞ்சி நடப்பவரும், நேர்மையாளரும் யூதர்களால் நற்சான்று பெற்றவருமான நூற்றுவர் தலைவன் கொர்னெலியுவின் இல்லத்தில் பேதுரு உரையாற்றினார்." (தி.வ. 10 : 34-43) கடவுள் இயேசுவை தூய ஆவியால் நிரப்பி அலகையின் கொடுமையான பிடியில் இருப்போரை விடுவித்து நன்மை செய்து வந்தார். அவர் செய்த அதிசயங்களுக்கு நாங்களே சான்று எனினும் அவரை மக்கள் சிலுவையில் தொங்கவிட்டு கொலை செய்தனர். கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பினார். உயிருடன் இருப்போருக்கும் மரித்தோருக்கும் நடுவர் என பறைசாற்ற கடவுள் கட்டளையிட்டுள்ளார். "அவர் மீது நம்பிக்கை கொள்வோர் பாவ மன்னிப்பு பெறுவர்" என்று இறைவாக்கினரும் சான்று பகிர்ந்தனர். நற்செய்தி அறிவிக்கவே இயேசு சீடர்களைத் தெரிந்துகொண்டார். யூதர் என்ற எல்லைகளைத் தாண்டி நற்செய்தி அறிவிக்க, ஆண்டவர் பேதுருவை தரிசனத்தின் மூலமாக வழி நடத்தினார். உரையாடல் வழி நற்செய்தி அறிவிக்க இயேசுவே அதற்கு மாதிரியாய் அமைந்துள்ளார், என யோவான் 4-ம் அதிகாரத்தில் சமாரிய பெண்ணுடனான உரையாடல் நமக்கு மிகவும் தெளிவு தருகிறது.

யோவான் 4 : 9-இல் அச்சமாரியப் பெண் அவரிடம், "நீர் யூதர்; நானோ சமாரியப் பெண், நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?" என்று கேட்டாள். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை. இயேசுவின் பதில் குடிக்க தண்ணீர் கேட்பவர் யார் என்பதை நீ அறிந்திருந்தால் அவரிடமே கேட்டிருப்பாய். ஏனெனில் வாழ்வு தரும் தண்ணீர் என்னிடம் உள்ளது. இந்தத் தண்ணீரைக் குடிப்போருக்கு ஒருக்காலும் தாகம் ஏற்படாது. அப்பெண் அவரிடம் ஐயா அந்தத் தண்ணீரை எனக்குக் கொடுங்கள் என வேண்டினாள். தொடர் உரையாடலில் அவள் வாழ்வை வெளிப்படுத்திக் காட்ட மேசியாவைக் கண்டேன் எனக் கூறித் தண்ணீர் குடத்தை விட்டு விட்டு ஊருக்குள் சென்று சமாரியர்களை அழைத்து வந்தாள். வாழ்வு பெற்றவள் மற்றவர்கள் வாழ்வு பெற வழி காட்டியானாள். இயேசு நாதரின் புகழைக்குறித்து மக்கள் கேள்விப்பட்டபோது வியாதிக்காரர்கள், ஊனமுற்றோர், பார்வையிழந்தோர், முடக்குவாதம் கொண்டோர் மற்றும் ஏனைய நோயாளிகளும் இயேசுவிடம் வந்து விடுதலை பெற்றனர். இங்கு இயேசு, யூதர் என்னும் எல்லைகளைத் தாண்டி உரையாடலால் சமாரியருக்கு நற்செய்தியாளரானார். பாவி என முத்திரையிடப் பட்டவளை இயேசுவிடம் கொண்டு வந்து "இவள் நெறி தவறியவள். ஆகவே இவளை மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி கல்லால் அடித்து கொல்ல வேண்டும். நீர் என்ன சொல்லுகிறீர்." என இயேசுவிடம் சொன்னபோது அவர் "உங்களில் பாவமில்லாதவன் முதலில் கல்லெறியட்டும்" என்றார். கற்களை விட்டு எல்லோரும் சென்றனர். பாவியான ஸ்திரீயை இயேசு பார்த்து "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை, நீ போ இனி பாவம் செய்யாதே" எனச் சட்டங்களின் எல்லைகளைத் தாண்டிய தன் வாழ்வு தரும் நற்செய்தியால் மனித நேயம் வெளிப்படுத்தி அவளை விடுவித்தார். எனவே அருட்பணி எல்லாருக்கும் நற்செய்தியாயிற்று என்பதே உண்மை.

### 3. அருட்பணி : கிறிஸ்துவுடன் பங்கு கொள்ளுதல்:

இயேசு மீனவரான சகோதரர் இருவரைப் பார்த்து "என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" (மத். 4 : 17-25) என்றார். இங்கு இயேசு சீடர்களை அழைக்கும் நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. என் பின்னே வாருங்கள் என்றால் என் உடன் பங்காளியாக வாருங்கள் என்பதற்கும் என்னுடன் பாடுகளை ஏற்பதற்கும் வாருங்கள் என்பதாகும். மத். 11 : 29-ல் நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு

என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்பது கட்டாயத்தினால் ஈடுபடுவது அல்ல மாறாகத் தானாகப் பங்கு பெறுவதாகும். சீடர்களை இயேசு அழைத்த போது, அவர்கள் தங்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின் சென்றனர். படிப்பறிவு குன்றியவர் பேசும் தைரியம் கண்டு, இவர்கள் நசரேயனுடன் இருந்தார்கள் என உணர்ந்த தலைவர்கள், மூப்பர்கள், மறைநூல் அறிஞர்கள் அவர்களை எச்சரித்து எதுவும் பேச வேண்டாம் எனக் கண்டித்து அனுப்பினர். ஆனால் அவர்களோ உங்களுக்குச் செவி சாய்ப்பதா? கடவுளுக்கு செவி சாய்ப்பதா? எது நியாயமானது கடவுளுக்குக் கீழ்ப்படிவதே நியாயமானது எனப் பாடுகளைத் துணிகரமாக ஏற்றுக்கொண்டு கடவுளை மகிமைப்படுத்தினார்கள். இதன் வழி சபை விசுவாச வாழ்வில் உறுதிப்பட்டது (மத். 25 : 34-40). நீதியாக வாழ்வோர் இயேசுவோடு உடன் பங்காளிகள் என்பதை இயேசு உறுதிப்படுத்துகிறார். மிகச்சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன், என்பதன் மூலம் அருட்பணி கிறிஸ்துவுடன் பங்கு பெறுவதை உறுதிப்படுத்துகிறது (மத். 25 : 10). லூக். 19 : 1-10-இல் ஆயக்காரர்களுக்குத் தலைவரும் செல்வந்தனுமாகக் காணப்பட்ட சகேயு இயேசுவைக் காண விரும்பி காட்டத்தி மரத்தில் ஏறி அமர்ந்திருந்தான். இயேசு அவனைக் கண்டு, “சகேயுவே விரைவாய் இறங்கி வாரும் உமது வீட்டில் தங்க வேண்டும்” என்ற போது உடமைகளில் பாதியினை ஏழைகளுடனும், அநீதியாக பெறப்பட்டவைகளுக்குப் பதிலாக 4 மடங்கு கொடுத்து உறவைப் புதுப்பித்துக் கொள்ள முற்பட்டான். இதனால் சகேயுவின் இல்லத்தில் மீட்பும் அவர் ஆபிரகாமின் மகனாகும் பேறுப்பெற்றார். அருட்பணி எல்லோருக்கும் நற்செய்தியாய் அமைந்திட எல்லைகள் குறிக்கப்பட்ட உலகில் நாம் நமது ஆண்டவரின் கட்டளைக்கு இணங்க ஒடுக்கப்பட்டோருடன் எல்லை தாண்டி நற்செய்தி அறிவித்தும், எல்லை தாண்டிய உரையாடல் மேற்கொண்டும் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவுடன் ஒன்றுபட்டும் செயல்படவேண்டும். அருட்பணியானது உலகோர் அனைவருக்கும் நற்செய்தியாக மாறிட நாம் ஆண்டவருக்கு உகந்த ஊடகங்களாகப் பயன்படுவோம்.

அருள்திரு. **V. டேவிட் றாபி ஜேக்கப்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 17 | ஞா. | 466 |
| | கீர். | 407 | கீர். | 418 |

**13-08-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினொன்றாம் ஞாயிறு

# திருமுழுக்கு என்னும் திருவருள்சாதனம்

## Sacrament of Baptism

| | |
|---|---|
| வி.ப. 14 : 15-31 | தீத்து 3 : 3-8 |
| திபா. 32 | யோவா. 3 : 1-8 |



இயேசு அவரைப் பார்த்து, ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். (யோவா. 3 : 5)

கடவுள் மனிதரில் தந்திருக்கின்ற உள்ளார்ந்த ஆன்மீக அருளினைக் குறித்த வெளிப்படையான அடையாளமே திருவருட்சாதனங்கள் என பொருள் கொள்ளப்படுகிறது. சாக்கிரமெந்து (Sacrament) என்னும் சொல் திருமறையில் நேரிடையாக குறிப்பிடப்படவில்லை. இது ஒரு இலத்தீன் சொல். தளபதி தன் படைக்குத் தலைமை ஏற்கும் முன்பு எடுத்துக்கொள்ளும் இரகசிய காப்புப் பிரமாணமே, இலத்தீன் மொழியில் சாக்கிரமெந்து எனப் பொருள்படுகிறது. சாக்கிரமெந்துகள் வெளியரங்கமான அடையாளங்களாகக் கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றை நம் வாழ்க்கையில் உண்மையாக்கித் தெளிவான வழியில் நம்மிடையே கொண்டு வருகின்றன எனலாம். காணப்படாத கிருபையின் காணக்கூடிய அடையாளம் திருவருட்சாதனம் எனத் தூய அகஸ்டின் குறிப்பிடுகிறார். இந்த அடிப்படையில் சிந்திக்கையில், கடவுள் நமக்குத் தந்துள்ள உள்ளான கிருபையின் வெளிப்படையான அடையாளமே திருமுழுக்கு எனலாம். அதாவது, காணக்கூடாத கடவுளின் கிருபையைச் சாக்கிரமெந்தில் நாம் காண்கிறோம்.

சாக்கிரமெந்திற்கு ஒத்த நிகழ்வாக பழைய ஏற்பாட்டில் விருத்தசேதனமும், பஸ்காவும் அமைந்துள்ளன. புதிய ஏற்பாட்டிலே திருமுழுக்கு, திருவிருந்து ஆகியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை திருமுழுக்கு, திருவிருந்து, திடப்படுத்துதல், திருமணம், அருள்பொழிவு, பாவ அறிக்கை, எண்ணெய் பூசுதல் என்னும் ஏழு சாக்கிரமெந்துகளைக்

கடைப்பிடிக்கிறது. ஆனால், சீர்திருத்த திருச்சபைகள் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரண்டையும் சாக்கிரமெந்துகளாக அங்கீகரித்துள்ளன.

**திருமுழுக்கு :**

திருமுழுக்கு எனும் தமிழ்ச் சொல்லுக்குரிய கிரேக்கச்சொல் “பாப்றிஸ்மா” (Baptisma) என்பதாகும். இவ்வார்த்தையின் “பாப்றின்” (Baptein) என்னும் வினைச்சொல் “மூழ்கு” அல்லது “கழுவு” என்னும் பொருளுடையது. எனவே “பாப்றிஸ்மா” என்னும் சொல்லின் பொருள் தண்ணீரில் மூழ்குதல் அல்லது தண்ணீரில் கழுவுதல் எனப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் திருமுழுக்கு என்னும் சொல் காணப்படாவிட்டாலும், திருமுழுக்குக்கு ஒத்த கருத்துகள் காணக்கிடைக்கின்றன. ஏசா. 1 : 16 மற்றும் எசேக். 36 : 25, 26 வசனங்களில், ஒழுக்கம் சார்ந்த நிலையில் உடல் தூய்மையாக்கப்படுவதற்குத் தண்ணீரால் கழுவப்படுவது அவசியம் என எடுத்துரைக்கிறது. விப. 14 : 22 மற்றும் I கொரி. 10:1, 2 வசனங்களின்படி இஸ்ரயேலர் செங்கடலைக் கடந்த அனுபவம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஆழமான தண்ணீர் வழியாக கடந்து செல்வது மீட்புக்குரிய ஓர் அடையாளமாகத் திருமறையில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெந்தேகோஸ்தேக்குப் பிறகு திருச்சபையின் தொடக்கம் முதல் திருச்சபையில் சேர்வதற்கான ஒரு நியதியாகவும், பாவங்களிலிருந்து தூய்மையாக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் தகுதி வாய்ந்த உறுப்பினர்களாக இருப்பதற்கு ஓர் அடையாளமாகவும் திருமுழுக்கு திருச்சபையில் கடைபிடிக்கப்படுகிறது (திப. 2 : 38, 41). ஆக, திருமுழுக்கின் வழியாக இன்று பாவமன்னிப்பையும், திருச்சபையின் ஐக்கியத்தில் சேர்க்கப்படுதலையும் நாம் ஏற்றுக்கொள்ளுவதோடு, இந்தத் திருமுழுக்கினால் இயேசுவின் நாமத்தில் கடவுளுக்குச் சொந்தமாகிறோம். அதாவது கிறிஸ்துவோடும் அவரது உடலாகிய திருச்சபையோடும் ஒன்றிணைகிறோம். கொடுக்கப்பட்டுள்ள திருமறைப்பகுதிகளின் துணையோடு திருமுழுக்கு பற்றிய சில ஆன்மீக தகவுகளைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

(i) **திருமுழுக்கு : கடவுளின் கிருபையைப் பெறுதல்** (யாத். 14 : 15-31)

எகிப்து நாட்டிலே 430 ஆண்டுகள் அடிமைகளாய் நடத்தப்பட்ட இஸ்ரயேலர், அங்கிருந்து விடுதலையாக்கப்பட்டு வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டைப் பெற்றுக்கொள்ளும்படி புறப்பட்டனர். அவர்கள் பல இனப் பெருந்திரளாய் இருந்தனர் (விப. 12 : 28). தங்கள் விடுதலைப்பயணத்திலே பல சவால்களையும், கடினப்பாடுகளையும் எதிர்கொள்ள வேண்டிய சூழல்கள் காணப்பட்டன. அவர்கள் சந்தித்த கடினப்பாடுகளில் ஒன்று செங்கடலைக் கடந்துச் சென்ற அனுபவம் (யாத். 14 : 15-31). இந்த நிகழ்வு அவர்களின் திருமுழுக்கின் (கிருபையின்) அடையாளமாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள் (I கொரி. 10 : 2) எனத் தூய பவுலடியார் குறிப்பிடுகிறார். இந்த நிகழ்வின் வழி அவர்கள் தங்களது வேற்றுமைகளைக் களைந்து, கடவுளின் கிருபையாலே புதிய விடுதலை வாழ்வைப் பெற்றனர்.

இஸ்ரயேலர் கடலைக் கடந்தபோது அவர்களின் வலப்பக்கமும், இடப்பக்கமும் கடல் தண்ணீர் அவர்களுக்கு மதிலாக நின்றது (விப. 14:22, 29). இது அவர்களின் திருமுழுக்கின் (கிருபையின்) அடையாளமாய் இருக்கிறது. அதே வேளையில் பார்வோனின் சேனையோ அதே இடத்தில் அழிந்து போயினர். இங்கு இஸ்ரயேல் மக்களுடைய ஜீவன் காக்கப்பட்டது கடவுளின் சுத்த கிருபையால்தான். ஆகையால் திருமுழுக்கு என்பது ஒருவர் தம் வாழ்வில் கடவுளின் கிருபையில் வளர்ந்து முதிர்ச்சி அடைவதற்கு உதவியாய் அமைகிற அடையாளச் செயல் மட்டுமே. பார்வோனிடமிருந்து காக்கப்பட்ட இஸ்ரயேலர் திருமுழுக்குப் பெற்றிருந்தும், தங்களை மீட்டுவந்த மோசேயைக் கேள்வி கேட்டுச் சபித்தனர். அப்படியானால் அவர்கள் பெற்ற திருமுழுக்கின் பலன் என்னவாயிற்று? கடவுளின் மகத்தான கிருபையைப் பெற்று அனுபவிக்கும் ஒருவர் கடவுளின் பாதுகாவலை அசட்டைப்பண்ணினால் அவர் பெற்றிருக்கும் திருமுழுக்கும் பொருளற்றதாய் மாறிப்போகும்.

செங்கடலைக் கடக்கும் போது வந்த அழிவின்று கர்த்தருடைய கிருபையால் காக்கப்பட்ட இஸ்ரயேலரைப் போன்று, திரித்துவ கடவுளின் பெயரில் திருமுழுக்கு பெற்றிருக்கின்ற நாமும் அனுதினமும் அவருடைய கிருபையால் காக்கப்படுகின்றோம் என்பதை உணர வேண்டும். திருமுழுக்கு பாவத்திற்கு செத்து நீதிக்குப் பிழைக்கின்ற

அனுபவத்தை வலியுறுத்துகிறது. இன்று திருமுழுக்கின் உண்மைப் பொருளை விட்டுவிட்ட அநேகர் வெளிப்படையான அடையாளங்களைக் குறித்து அதிகமாகக் கவலைப்படுகிறோம். ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே (எபே. 4 : 5) என்னும் பவுலின் வழியாக பெற்றிருக்கும் இறை வார்த்தையை நம்பும் நாம் அநேக திருமுழுக்கு பெறுதல் திருச்சபையின் ஒற்றுமையைப் பெலவீனப்படுத்தும். அதினால் திருமுழுக்கில் வாக்களிக்கப்பட்ட கிருபையைத் தகுதியாய்ப் பெய இயலாமற் போகிறது.

(ii) **திருமுழுக்கு : மனந்திரும்புதலுக்கும் பாவமன்னிப்புக்கும் உரியதோர் அடையாளம்** (தீத்து 3 : 3-5)

தூய பவுலார் தனது மூன்றாம் திருப்பணி பயணத்தின்போது உடன் அழைத்துச் சென்ற பணியாளரான தீத்துவுக்கு ஆலோசனை கூறும்போது, நாம் பெற்றிருக்கின்ற மீட்பு நம்முடைய அறச்செயல்களின் வழி உண்டானது அல்ல; மாறாக கடவுளின் இரக்கத்தை முன்னிட்டு என்பதாகக் கூறுகிறார் (தீத்து 3 : 5). அதாவது ஒரு காலத்தில் பல்வேறு தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருந்த நம்மை (3 : 3), நிலைவாழ்வை உரிமைப் பேறாகப் பெறும் பொருட்டு, அவர் புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியாலும் தம் இரக்கத்தை முன்னிட்டு நம்மை மீட்டெடுக்கிறார் என்கிறார். இந்த நன்மையானது மனந்திரும்புவோருக்கான கடவுளின் அருளாக இருக்கிறது எனலாம்.

முழுக்கு முனிவர் யோவான் பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றினார் (லூக். 3 : 3). பெந்தேகோஸ்தேயின்போது பேதுரு ஆற்றிய அருளுரையைக் கேட்டு மனந்திரும்பிய மானிடரைப் பார்த்து, நீங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக திருமுழுக்கு பெறுங்கள் என அறிவுறுத்தினார் (திப. 2 : 38). பவுல் தமஸ்குவில் தான் பெற்ற அனுபவத்தைக் குறித்துச் சொல்லும் போது, அனனியா தன்னிடம் பாவங்கள் போகக் கழுவப்படும்படியாய்த் திருமுழுக்குப் பெறும்படி அறிவுறுத்தினதாக குறிப்பிடுகின்றார் (திப. 22 : 16).

திருமுழுக்கு பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான ஓர் அடையாளமாகக் கருதப்பட்டது. தண்ணீர் உடலின் அழுக்கைக் கழுவிக் சுத்தப்படுத்துவது போன்று, திருமுழுக்கு பாவங்களைக் கழுவி மன்னிப்பு வழங்குவதற்கான ஓர் அடையாளமாகக் கூறப்படுகிறது.

(iii) **திருமுழுக்கு : மறுபடியும் பிறக்கின்ற ஓர் அனுபவம்** (யோவா. 3 : 3)

தொடக்கக் கால திருச்சபையில் திருமுழுக்குப் பெறுபவர்கள் புத்தாடைகள் அணிவது வழக்கம். ஏனெனில், திருமுழுக்கு புதுவாழ்வுக்கு அடையாளமாக இருக்கிறது என்பதை இது தெளிவுப்படுத்துகிறது. புது வாழ்வினைப் பெற்றுக்கொள்ள மானிடர் மறுபடியும் பிறக்கின்ற அனுபவத்திற்குள் வரவேண்டும். இதனைத் தான் இன்றைய நற்செய்தி பகுதியில் காண்கின்றோம். யோவான் 3 : 1-8 வரையுள்ள பகுதியில் இடம் பெற்றுள்ள நிகழ்வான ஆண்டவர் இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்குமிடையேயான உரையாடலில் ஆவியாரின் செயல்பாடுகள் திருமுழுக்கின் விளைவுகளாக சொல்லப்பட்டுள்ளன.

யார் இந்த நிக்கொதேமு? இவர் ஒரு பரிசேயர்; சனகரிம் சங்க உறுப்பினர்; யூதத் தலைவர்களில் ஒருவர். இயேசுவுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது, இரவில் இயேசுவை வந்து சந்தித்தவர். (யோவா. 7 : 50). இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள தண்ணீரினாலும் ஆவியினாலும் (3 : 5) என்னும் வார்த்தைகள் ஒரே பொருள் உள்ளவை. கடவுளின் ஆவி காற்று எனக் குறிக்கப்பட்டுள்ளது. காற்று வீசுவதை ஒரு மனிதனால் முழுமையாக அறியமுடியாது. அதுபோலவே, தேவ ஆவியின் அற்புதச் செயலாகிய புதிய பிறப்பை ஒருவராலும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் ஒரு மனிதனுடைய வாழ்வில் அது நிகழ்ந்துவிட்டது என்பதை, அந்த மனிதனுடைய வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களின் வாயிலாக அறியமுடியும். ஏனெனில் கடவுள் எந்தவொரு மனிதரையும் தமக்கு நேராக நடத்தலாம்.

திருமுழுக்கு புது வாழ்வை ஏற்படுத்துகிறது. இறையரசு பயணத்தில் நமக்குப் பலன் தருகிறது. இயேசுவும் தம் வாழ்வில் ஒரு புதிய பார்வையை ஏற்படுத்தினார். அது ஆவிக்குள்ளான வாழ்வு. “வாழ்வு தருவது தூய ஆவியே; .... நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன” (யோவா. 6 : 63) என்றார். எனவே ஆவியினால் பிறத்தல் என்பது இயேசுவின் வார்த்தைகளாய் மறுபிறப்பு அடைதலாகும். எனவே இந்தப் புதிய ஆரம்பமில்லாமல் ஒருவரும் இறையரசில் பங்குபெற இயலாது. திருமுழுக்கு அதனைப் பெற்றவர்களை இயேசுகிறிஸ்துவுடன் கூட்டி இணைக்கிறது. இது ஒரே ஒருமுறை நிகழும் நிகழ்ச்சியாகும். திருமுழுக்கின் வாயிலாக, கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் அங்கம் வகித்துக்

கொண்டிருக்கும் இறைமக்களாகிய நாம், பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் பொருளை எண்ணிப் பார்ப்போம். அனுதினமும் இறைவார்த்தைகளின் வழி நம் வாழ்வைக் கிறிஸ்துவுடன் புதுப்பித்துக்கொள்வோம்.

இன்று நம்மில் பலர் திருமுழுக்கு கொடுக்கப்படுகின்ற முறைகளை (தெளித்தலா?/மூழ்கியா?) பற்றியும், தண்ணீரின் அளவைப் பற்றியும் கவலைப்படுகின்றோம். பயன்படுத்தும் தண்ணீரும், அதின் அளவும் அல்ல; கடவுளின் கிருபையே மிக முக்கியமானது. திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றிருக்கின்ற வாழ்வின் உள்ளான மாற்றங்களை உள்வாங்கி, ஒரே திருமுழுக்கின் நம்பிக்கையில் வளர அர்ப்பணிப்போம். காணக்கூடாத கடவுளின் கிருபையைத் திருமுழுக்கில் பெறுகின்றோம். ஆமென்!

அருள்திரு. E. **ஸ்டான்லி ராஜ்**

| 𝄞 | | | |
|---|---|---|---|
| | ஞா. | 62 | ஞா. 367 (Tune: நாம் தேவ சந்நிதானத்தல்) |
| | கீர். | 25 | கீர். 243 |


**15-08-2023** இந்திய விடுதலைத் திருநாள்

# நீதிக்கான விடுதலை

## Freedom for Justice

வி.ப. 23 : 1-9 கலா. 5 : 1-6

தி.பா. 18 : 16-24 லூக்கா 6 : 20-26



"நாங்களோ நீதி கிடைக்குமென்று........நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்" (கலா. 6 : 5)

போப் பிரான்சிஸ் ஒரு கூட்டத்தில் பேசும் போது ஒரு சிறுவன் பாதுகாவலர்களைக் கடந்து மேடையில் ஏறி அங்கும் இங்கும் நடக்கிறான். மேடையில் இருப்போரை ஒரு பொருட்டாக அவன் கருதவில்லை. தாயின் அழைப்பையும் மீறிச் சுதந்திரமாய்ச் சுற்றினான். பார்வையாளர்கள் அனைவரும் அவனையும், போப்பையும் மாறிமாறி பார்த்தனர். போப் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினார் "அவனால் பேச முடியாது, ஊமையாக இருக்கிறான். அவன் சுதந்திரமாய் இருக்கிறான். கபடமில்லாத சுதந்திரம் அது. அவன் செயல் என்னைச் சிந்திக்க வைக்கிறது. நான் கடவுளுக்கு முன் சுதந்திரமாய் இருக்கிறேனா? ஒரு குழந்தை தன் தந்தைக்கு முன் சுதந்திரமாய் இருப்பதைபோல நாம் இருக்க வேண்டும் என்பதற்காகவே நீங்கள் குழந்தையைப் போலாகுங்கள் என இயேசு போதித்தார்."

ஒரு அமைதியான சமூகத்தை உருவாக்க மனிதருள் இருக்கவேண்டியவை சிறந்த அனுபவம், சுதந்திரம், சமத்துவம், மற்றும் நீதி என்பவையாகும். இஸ்ரவேல் என்னும் மாபெரும் சாம்ராஜ்யம் அடிமைப்பட்டுபோகும் சூழல் நிலவியபோது ஏசாயா இறைவாக்கினர் இதை நினைவுபடுத்தினார் "நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள், நீதியை நாடித் தேடுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள், திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்....." (ஏசாயா 1 : 17).

வரலாற்றிலே இந்தியா ஆங்கிலேயருக்கு மட்டும் அடிமைபட்டதென்று சொல்லுவதற்கில்லை. கிறிஸ்துவுக்கு முன் நடந்த கிரேக்க படையெடுப்பு (328-325 BC), வாஸ்கோடகாமாவினால்

முன்னெடுக்கப்பட்ட போர்ச்சுகீசிய படையெடுப்பு (1505 முதல்), டச்சு காலணித்துவ படையெடுப்பு (1602-1759), பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் படையெடுப்பு (1667 முதல்) மற்றும் பிரிட்டீஷ் கிழக்கிந்திய கம்பெனி (1858-1947) ஆகியன இந்தியா அந்நிய நாட்டவரின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பவற்றிற்கான சான்று. அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு தனி அதிகாரத்தோடு இந்தியா உருவானதைச் சுதந்திர இந்தியா என்று இன்று நாம் அழைக்கிறோம்.

76-வது இந்திய விடுதலை நாளைக் கொண்டாடும் நாம் எத்தகைய விடுதலை பெற்றோம் என்பதை ஆய்வுசெய்ய வேண்டியது அவசியம். சுதந்திர இந்தியாவைக் குறித்த அப்துல் கலாம் அவர்களின் கனவை 76வது இந்திய சுதந்திரத்தைக் கொண்டாடும் நாம் நினைவில் கொள்ளல் அவசியமாகிறது. அப்துல் கலாம் அவர்களின் மூன்று கனவுகள் (1) சுதந்திரத்தைப் பாதுகாத்தல் (Protect and Nurture Freedm), (2) தனித்துவம் மற்றும் தன்னிறைவு வளர்ச்சி (Self-reliant and Self-sufficient Development), (3) ராணுவம் மற்றும் பொருளாதாரப் பேராற்றல் (Military & Economic Powerfulness).

**1. நியாயவிசாரணையில் நீதியே உண்மை விடுதலை :**

சுதந்திர இந்தியாவில் நீதியை நிலைநாட்ட அமைக்கப்பட்ட சுதந்திர அமைப்புகளில் முதன்மையானவை நீதித்துறை, வருமானவரித்துறை மற்றும் சுங்கத்துறை. இந்தியாவில் காணப்படும் பன்மைத்துவத்தை ஒருங்கிணைப்பதில் நீதித்துறைக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பல வேறுபாடுகளோடு மக்கள் இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே இதன் அடிப்படைக் கொள்கை. சமீபத்திய நாட்களில் நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கை குறைந்து வருகிறது. நம்பிக்கை அடிப்படையில் உச்ச நீதிமன்றம் கொடுக்கும் தீர்ப்பு, புராணங்களின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் கொடுக்கும் தீர்ப்பு, ஆளுங்கட்சிக்கும், பணபலம் படைத்தோருக்கும் ஆதரவாக எழுதப்படும் தீர்ப்புகள் சுதந்திர இந்தியாவின் இறையாண்மையையும் நம் சுதந்திரத்தையும் கேலிக்குள்ளாக்குகின்றன. காவல்துறை பயமின்றி பொய்வழக்குகள் இட்டு அப்பாவிகளைக் கொடுமைப்படுத்தும் நிகழ்வுகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. இன்று படித்த வி.ப. 23 : 1-9 வசனங்களில் நியாயவிசாரணை செய்வோர் பின்பற்ற வேண்டிய அறத்தைக் குறித்து ஆண்டவர் போதிக்கிறார்.

இஸ்ரவேல் சமூகம், யூத மதம் ஒற்றைக் கடவுள் நம்பிக்கையை வலியுறுத்தும் மார்க்கம். பிற நம்பிக்கைக்கொண்டவரை ஏற்பது வேதத்திற்கு முரண் என்னும் கொள்கை கொண்டதால் வேற்று கடவுள்களை நிராகரித்து, அவைகளைப் பாகால், விக்கிரகம், பிசாசு எனப் பல பெயரிட்டு அழைத்தனர். பிறதெய்வ வழிபாடுடையோரோடு போரிடுவது, பிறநாட்டவரோடு வன்முறையினைக் கையாள்வது, புற இனத்தவர் என்று அவர்களை அடைமொழியிட்டு அழைப்பது இஸ்ரவேல் நாட்டில் வழக்கமாய்க் காணப்பட்டன. 12 கோத்திரங்களாய்ப் பிரிந்து கிடந்த இஸ்ரவேல் மக்களை ஒன்றுபடுத்தி, நியாயவிசாரணை செய்து தேசத்தைச் செவ்வையாய் நடத்த கடவுள் நியாயப்பிரமாணங்களை உடன்படிக்கையின் அடையாளமாய்க் கொடுத்தார். இச்சட்டங்களை "தூய்மையின் சட்டம்", "ஆசாரியச் சட்டம்" மற்றும் "உடன்படிக்கையின் சட்டம்" என மூன்றாக அறிஞர்கள் பிரித்துள்ளனர். இவைகளில் உடன்படிக்கைச் சட்டத்தில் வரும் பகுதியே இந்த நாளின் பழைய ஏற்பாட்டுப் திருமறைப்பாடம். நியாயப்பிரமாணங்கள் இஸ்ரவேலருக்கென்று கொடுக்கப்பட்டிருந்தாலும் புறவினத்தவர்கள் என்று அழைக்கப்பட்டவர்களை எவ்வாறு அணுக வேண்டும் என்றும் ஆண்டவர் கற்றுக்கொடுத்தார்.

கொடுக்கப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டு பகுதி வி.ப. 23 : 1-9-இல் யூத நியாயபிரமாணத்தில் Mishpatim என்னும் பகுதியை சார்ந்தது. Mishpat என்றால் "நீதி" (justice) என்று பொருள். Mishpatim என்னும் சட்டங்கள் நாம் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது பற்றிய சட்டங்கள் அல்ல, மாறாக அனைத்துச் சமூக மக்களையும் ஒன்றுபடுத்தி ஆளவும் சமத்துவ சமூகத்தைக் கட்டிக்காக்கவும், அறம் இழந்த செயல்கள் நடைபெறும்போது பாதிக்கப்பட்டோரை மீட்டெடுப்பதற்காக நீதி விசாரணை செய்யவும் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் என இப்பகுதி குறிப்பிடுகின்றது. ரோமர் 2 : 12-29-இன்படி புற இனத்தவருக்கு மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை, ஆனால் புறஇனத்தவருக்கு எவ்வாறு நீதி செய்ய வேண்டும் என்று இஸ்ரவேலருக்கு ஆண்டவர் போதித்திருக்கிறார்.

### 2. அநீதிகளைத் துடைத்தெறிவதே நீதியின் விடுதலை (லூக்கா 6.)

லூக்கா நற்செய்தி நூலின் பாக்கிய வசனங்களாய்க் கருதப்படும் (லூக்கா 6 : 20-26) பகுதி, மத்தேயு நற்செய்தியாளரின்

பாக்கியவசனங்களின் (மத்தேயு 5 : 1-11) கருத்திற்கு இன்னும் அதிக அழுத்தம் கொடுக்கிறது. இரண்டு நற்செய்திகளும் சீஷர்களுக்குப் போதிக்கப்பட்டது (மத். 5 : 1, லூக். 6 : 20). அவைகளின் நிறைவு பகுதி தேவனுடைய குமாரனுக்கென்று துன்பப்படுவோரைக் குறிக்கிறது (மத். 5 : 11, லூக். 6 : 23). கடவுளின் மக்கள் ஏழைகளாகவும், பசித்தவர்களாகவும், அழுகிறவர்களாகவும், மனுஷகுமாரன் நிமித்தம் பகைக்கப்பட்டு, புறம்பாக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, தள்ளிவிடப்படுகிறவர்களாயும் இருப்பார்கள் என இயேசு கூறுகிறார். ஆகவே பாக்கியவசனங்களை நியாயப் பிரமாணங்களாய்ப் பார்ப்பதைவிட அநீதியால் துன்பப்படுவோரைத் தேற்றும் அல்லது உற்சாகப்படுத்தும் வாக்குறுதிகளாய்ப் பார்ப்பதும் உகந்தது. ஏழைகள், பசித்தவர்கள், அழுகிறவர்கள் மற்றும் புறம்பாக்கப்பட்டவர்கள் ஆகியோரை மையப்படுத்தியே தேவனுடைய ராஜ்யம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து தாம் வாழ்ந்த பாலஸ்தீனத்தில் காணப்பட்ட சமூக அநீதிகளை அறிமுகப்படுத்துகிறார். ஏழ்மை, உணவுபற்றாக்குறை, அடிமைத்தன அழுகை மற்றும் புறம்பாக்கப்படுதலே அந்த சமூக அநீதிகள். மரியாளின் கீதம் (லூக்கா 1 : 46-56), லாசரு ஐசுவரியவான் உவமை (லூக்கா 16 : 19-31) ஆகியவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். அநீதிகளை எதிர்க்க இயேசு பின்பற்றிய மாதிரிகள் இன்றளவும் நமக்குப் பாடமாகின்றன.

ஏழ்மை என்பது பொருளாதார ஏழ்மையைக் குறிப்பதேயன்றி ஆன்மீக ஏழ்மையைக் குறிக்கவில்லை. இயேசுவின் நாசரேத்தூர் அறிக்கையில் “ஏழைகளுக்கு நற்செய்தி” என்றும் (லூக். 4 : 16), சீஷர்கள் பொருளாதாரச் சுகத்தை விட்டு இயேசுவைப் பின்பற்றினார்கள் என்றும் (லூக். 5 : 11, 28), அருட்பணி பயணத்தில் பிறர் அளிக்கும் உணவை ஏற்க வேண்டும் என்றும் (லூக். 9 : 3-5, 57-58, 10 : 8-11) கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து இயேசு கிறிஸ்து உடலளவில் ஏற்படும் துன்பத்தைக் கூறுகிறார்.

ஏழ்மை சுரண்டப்படுவதினாலும், ஏமாற்றப்படுவதினாலும் ஏற்படுகிறது (லூக். 6 : 30, 38, 14 : 12-14, 16 : 9-13, 19 : 8). ஆயினும் கடவுளின் ராஜ்யத்தின் விருந்தில் அவர்கள் பசி அகன்று ஆனந்தம் அடைவார்கள் (ஏசாயா 25 : 26-27, 49 : 10-13, லூக். 9 : 15-17, தி.ப. 2 : 42-47). திருப்தியாயிருக்கிறவர்கள் எதிர்பாராத நேரத்தில்

அடிமைப்பட்டு போகும் போது உருவாகும் அழுகுரல் (லூக். 6 : 25), சகோதரருக்குள் ஏற்படும் பகை, ஒருவரையொருவர் காட்டிக்கொடுப்பதால் ஏற்படும் அடிமைத்தனம் (யாக்கோபு 4 : 9-11), அந்நிய தேசத்தவரோடு தகாத உறவை ஏற்படுத்தி தேசத்தின் செல்வம் இழந்து போகிறபோது ஏற்படும் அழுகுரல் (தி.வெளி. 18 : 9-19) இவைகளின் மத்தியில் மனந்திரும்பி ஒன்றுபட்டுச் செயல்படுவோரை ஆண்டவர் தேற்றுவார், அவர்களைச் சந்தோஷப்படுத்துவார் (தி.வெளி. 7 : 17, 21 : 4, லூக். 2 : 25, 16 : 25). நற்செய்தி அறிவித்ததினால் ஆலய அதிகாரமிக்கவர்களால் புறம்பாக்கப்பட்டு, பயமுறுத்தப்பட்டு, எச்சரிக்கப்பட்ட சீஷர்களை ஆலயம் சாராதோர் ஏற்றுக்கொண்ட (தி.ப. 4 : 21, 5 : 13) நிகழ்வு ஆண்டவரால் அரவணைக்கப்பட்ட அனுபவமாய்ப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வறுமை ஒழிப்பு, ஏற்றத்தாழ்வை அகற்றுதல், அந்நியராக்கப்பட்டோருக்குப் புகலிடம் கொடுத்தல் 76-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நமது நோக்கமாகட்டும்.

திரு. **I. ஜாண் ரோஜின் ஜேக்கப்**


| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 59 | ஞா. | 233 |
| | கீர். | 26 | கீர். | 287 |

**20-08-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பனிரெண்டாம் ஞா

# தூய நன்றித் திருவிருந்து என்னும் திருவருள் சாதனம்

## Sacrament of Holy Eucharist

| | |
|---|---|
| தொ. நூ.14 : 17-24 | 1 கொரி. 10 : 15-17 |
| திப. 104 : 14-30 | மாற். 14 : 12-26 |



பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். (மாற்கு 14 : 23)

திருவருள் சாதனங்கள் திருச்சபை மற்றும் தனிப்பட்ட ஆன்மிக வாழ்விற்கு முக்கியமானவையாகும். கத்தோலிக்கத் திருச்சபை 7 திருவருள் சாதனங்களைப் பின்பற்றுகிறது. சீர்திருத்தத் திருச்சபை திருமுழுக்கு மற்றும் திருவிருந்து ஆகிய இருவருட் சாதனங்களைப் பின்பற்றி வருகிறது. திருவிருந்து என்னும் திருவருள் சாதனம் ஆண்டவரின் இராப்போஜனம் (Lord's Supper), ஆண்டவரின் பந்தி (Lord's Table), தூய நன்றித் திருவிருந்து (Holy Eucharist), தூய ஐக்கியம் (Holy Communion) என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மிகக் கடமையாகத் திருவருட்சாதனம் காணப்படுகின்றது. புனித அகஸ்டின் திருவிருந்தைக் குறித்து "கடவுள் நிறைவான ஞானமுடையவராயிருந்தும் தம்முடைய அன்பை வெளிப்படுத்த நற்கருணையைக் கொடையாகத் திருச்சபைக்குக் கொடுத்தார்" என்று சொல்லுகிறார். நமக்குத் தரப்பட்டுள்ள திருமறைப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திருவிருந்து குறித்த சில உண்மைகளை அறிந்து கொள்ள முயல்வோம்.

### 1. நினைவு கூர்தலின் திருவிருந்து

மனித வரலாற்றில் சில சிறப்புச் செயல்கள் அடிக்கடி நினைவு கூரப்படுவதுண்டு. இஸ்ரயேலரின் வரலாற்றைப் பார்ப்போமென்றால், நினைவு கூர்தல் என்பது அவர்களது வாழ்வின் முக்கிய அம்சமாக இருந்தது. இஸ்ரயேலர் தங்கள் கடந்த கால வரலாற்றை நினைவுகூர கடவுளால் அறிவுறுத்தப்பட்டனர். எகிப்தியரின் அடக்கு

முறையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் தாங்கள் பெற்ற விடுதலையை பஸ்கா பண்டிகை என்ற பெயரில் ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து வந்தனர். இயேசுவும் சீடர்களும் பஸ்கா பண்டிகை கொண்டாடயிருந்த வேளையில் இயேசு தனது புதிய பஸ்காவை, புதிய விடுதலையைப் புதிய உரிமை வாழ்வை அறிமுகம் செய்கின்றார். பழைய பஸ்காவை நிறைவு செய்து புதிய பஸ்காவைத் தொடங்கி வைக்கிறார். பழைய பஸ்காவில் கொண்டாடப்பட்ட விடுதலை என்பது மனித வாழ்வின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார அம்சங்களை மட்டுமே சார்ந்தது. இயேசு அறிமுகப்படுத்திய புதிய பஸ்கா மனித வாழ்வின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாய்க் காணப்படுகிறது. இந்தப் புதிய திருவிருந்தின் வழியாக இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் அறையுண்டு, தமது இரத்தத்தைச் சிந்தி, பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கிய கிறிஸ்துவாகிய பஸ்காவை நினைவு கூர்வதாய் காணப்படுகின்றது (மாற்கு 14 : 24). ஆகவேதான், லூக்கா 22 : 19-இல் "இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல் இதை என் நினைவாக செய்யுங்கள்" எனச் சீடர்கள் கிறிஸ்துவின் வாழ்வை-மரணத்தை நினைவுகூர அழைக்கப்பட்டனர். பழைய பஸ்காவில் அடிமைத்தனம் நினைவுகூரப்பட்டது. புதிய பஸ்காவில் கிறிஸ்து நினைவுகூரப்படுகிறார் (1 கொரி. 11 : 24).

## 2. நன்றியறிதலின் திருவிருந்து

நற்கருணை அல்லது திருவிருந்துக்குரிய கிரேக்க வார்த்தை 'Eucharista' என்பதாகும். இதன் பொருள் "நன்றி செலுத்துதல்" ஆகும். இயேசு தம்முடைய சீடர்களோடு பஸ்காவை ஆசரித்தபோது அங்கிருந்த அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் எடுத்து நன்றி செலுத்தினார். நாமும் கடவுள் நமக்காக இயேசு கிறிஸ்துவின் வாயிலாக செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்த அழைக்கப்படுகின்றோம். திருவிருந்து அந்த அனுபவத்தை நம் வாழ்வில் தருவதாக அமைந்துள்ளது. தொடக்க நூல் 14 : 17-ஆம் வசனம் முதல் 24-ஆம் வசனம் வரை உள்ள திருமறைப் பகுதியில் ஆபிரகாம் தனது குடும்பத்தினருக்கு எதிராக வந்த சத்துருக்களை முறியடித்து வெற்றி வாகையுடன் திரும்பி வரும்போது சாலேமின் அரசனும் ஆசாரியனுமாயிருந்த மெல்கிசேதேக் அக்கால வழக்கத்தின்படியே நன்றி செலுத்தும் அடையாளமாக ஆபிரகாமுக்கு அப்பமும் திராட் ரசமும் கொண்டு வந்து அவரை ஆசீர்வதித்தார். இந்தச் செயல் நன்றியறிதலின் வெளிப்பாடாகத் திகழ்ந்தது. நாமும் நமது

மீட்புக்காக தம்மைத்தாமே சிலுவையிலே தியாகப் பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்துவின் அன்புச் செயலை நினைத்து நன்றியறிதலோடு நாம் திருவிருந்தில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றோம்.

### 3. நல்லுறவின் திருவிருந்து

திருவிருந்து ஐக்கியத்திற்கும் நல்லுறவிற்கும் ஆதாரமாய் இருப்பது இதனுடைய கூடுதல் சிறப்பாகும். போன்காஃபர் என்ற இறையியலாளர் “மனுக்குலம் இறைவனோடு ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் அன்பின்செயல் அடையாளம், திருவிருந்து” என்கிறார். ஆதாமும், ஏவாளும் நடுமரத்தின் கனியைப் புசித்ததினால் கடவுளோடும் மனிதரோடும் படைப்புகளோடும் இருந்த நல்லுறவு துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்ட உறவை இணைக்க இந்த உலகிற்குத் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவைப் பலியாகத் தந்து அதை மீட்டெடுத்தார். அதன் வெளிப்பாடாகவே இயேசு கிறிஸ்து தமது உடலையும் இரத்தத்தையும் விருந்தில் பகிர்ந்தளிக்கும் அடையாளமாக அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் தந்து நம்மோடு ஐக்கியப்படுபவராகக் காணப்படுகின்றார். திருவிருந்தில் பங்கு கொள்கின்றபோது கடவுள் நம்மை அவரோடு நல்லுறவு கொண்டு வாழவும் பிறரோடு நல்லுறவு கொண்டு வாழவும் அழைக்கின்றார். ஆகவேதான் பவுலடிகளார், “அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். எனவே நாமனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கின்றோம்” என்கிறார் (1 கொரி. 10 : 17). கொரிந்து திருச்சபை மக்கள் தங்களைப் புத்திமான்கள் என்று எண்ணி விக்கிரகங்களுக்குப் படைத்த உணவை உண்ண முற்பட்டார்கள் (1 கொரி. 8:1-13). இதைப் பவுலடிகளார் கண்டித்து சிலை வழிபாட்டில் ஈடுவடுவதும், அவைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பவதும் கிறிஸ்தவர்களுக்கு அழகாகாது எனக் கூறி கிறிஸ்து ஏற்படுத்திய திருவிருந்தில் பங்கேற்பதின் வழியாக கிறிஸ்துவுடன் நல்லுறவு கொண்டு வாழ அழைப்பு விடுக்கின்றார். “உருகும் மெழுகானது எவ்வாறு மற்ற மெழுகோடு எளிதில் சேர்ந்து விடுகிறதோ அதுபோல கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் அருந்துகின்றவர் அவரோடு ஒன்றிக்கிறார். கிறிஸ்து அவரிலும் அவர் கிறிஸ்துவிலும் நிலைத்திருக்கிறார்” என்கிறார் புனிதர் சிரில். இவ்வாறு திருவிருந்தின் வழியாக இறைமக்கள் கடவுளிடமும் மற்ற சகோதர, சகோதரிகளிடமும்

நல்லுறவு கொண்டு வாழ இது வழி செய்கிறது. திருவிருந்து நம்மில் காணப்படும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து இறைக்குடும்பமாக நல்லுறவுடன் வாழ நம்மை அழைக்கிறது.

திருவிருந்து நினைவுகூர்தலின் அடையாளமாகவும், நன்றியறிதலின் அடையாளமாகவும், நல்லுறவின் அடையாளமாகவும் இருக்கின்றது. இதை உணர்ந்து நற்கருணையில் பங்குகொண்டு இறைச்சித்தம் நிறைவேற்றுவோம்.

அருள்திரு. J. **தேவ ராஜ ஜெபஸ்டின்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஞா. | 75 | ஞா. | 376 |
| கீர். | 17 | கீர். | 437 |

**27-08-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதின்மூன்றாம் ஞாயிறு

# பல்நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்பு நிலை

## Christian Presence in Multi Faith Society

| | |
|---|---|
| தானி. 1 : 1-21 | தி.ப. 10 : 9-16 |
| தி.பா. 67 | மத். 13 : 31-33 |



பிற இனத்தார் அனைவரும் நீர் அருளும் மீட்பை உணர்ந்து கொள்வர். (திபா. 67 : 2)

நாம் வாழும் இந்திய சமூகம் உலக நாடுகளால் வியந்து போற்றப்படும் பன்மைச் சமூகமாக (Pluralistic Society) திகழ்கிறது. பல சமய நம்பிக்கைகளின் பிறப்பிடமாகவும், கலாச்சார மற்றும் தத்துவங்களின் ஊற்றாகவும் இந்தியா இருப்பதை வரலாறு பதிவு செய்கிறது. எவ்வித முரண்பட்ட கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் உள்வாங்கிக் கொண்டு இன்றளவும் சகிப்புத்தன்மைக்குச் சான்றாய் இருக்கிறது. இதற்கு சவால் விடுகின்ற சமய பழமைவாதமும் (Religious Fundamentalism) சமய துருவமுனைப்பும் (Religious Polarization) வரலாற்றிலும் இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

எல்லையற்ற கடவுள் எல்லா பழமைவாதத்திற்கும் வெறுப்புக்கும் அப்பாற்பட்டவர் (தி.ப. 10 : 34, 35). ஆலயம் என்னும் எல்லைக்குள் அவரை அடக்க முடியாது (தி.ப. 7 : 47-48) பிறர் என்ற எல்லை கடந்து தம்மை பெர்சிய அரசன் கோரேசுக்கு வெளிப்படுத்துகிறார். (2 குறி. 36 : 22, ஏசா. 44 : 28, 45 : 1) பாவிகள் என்று ஒதுக்கப்பட்டோரோடும், சமாரியர் என்று புறக்கணிக்கப் பட்டோரோடும் இயேசு தன்னை ஒன்றுபடுத்துகிறார். தன் சமயமாகிய யூத சமயத்திலிருக்கும் பிற்போக்கு சிந்தனைகளையும் பழமைவாதங்களையும் சீர்படுத்த விரும்புகிறார். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய அருட்தொண்டர் இந்திய சமூகத்திற்கு ஆற்றிய கல்வி, மருத்துவ பணிகளும், சமூக வளர்ச்சி பணிகளும் கிறிஸ்தவத்தின் இருப்புநிலையை அழகுப்படுத்தியிருக்கிறது. தொடர்ந்து எல்லையற்ற கடவுளின் அன்பை

“வெறுப்பிலிருந்து விருந்தோம்பல்” (Hostility to Hospitality) என்ற உணர்வோடு தொடர இத்தலைப்பு நம்மை தூண்டுகிறது.

## 1. அசைவற்ற நம்பிக்கையும் அமைதியான அணுகுமுறையும்

தானியேல் புத்தகம் யூதர்கள் வேற்று அரசர்களால் ஒடுக்கப்பட்ட சூழலில் எழுதப்பெற்றது. பல்சமய சூழலில் தானியேலின் இறை நம்பிக்கையின் தனித்துவமும், அச்சூழலை அறவழியில் கையாண்ட அணுகுமுறையும் நமக்கு மாதிரியாக உள்ளது. நாம் கொண்ட நம்பிக்கையை பல்சமய சூழலில் ஒத்திசைவு (syncritize) செய்வதோ, மாற்று சமய நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்தோடு சமரசம் (ompromise) செய்வதோ சரியான அணுகுமுறையல்ல.

தானியேல் அங்கு இருந்த சிறப்புணவினாலும், திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என உணர்ந்து, அறவழியில் தலைவனிடம் அனுமதி கேட்டு வேண்டுகிறான். அவர்களும் இவர்களது நம்பிக்கையை மதித்து அனுமதி கொடுத்தார். பிறரைக் குற்றப்படுத்தவில்லை, அல்லது அவர்கள்; உணவு முறையைத் தவறு என கூறவில்லை. மற்ற கலாச்சாரத்தை குற்றப்படுத்தாமல் வாழ்வதும், நம் நம்பிக்கையில் தளராதிருப்பதும் சமூக வாழ்விற்கு இன்றியமையாதது. இயேசு தான் சார்ந்த யூத சமயத்தைத் திருத்த முயன்றதே தவிர, பிற சமயங்களைப் பற்றி ஒன்றும் குற்றம் கூறவில்லை. நம் வாழ்வே கிறிஸ்து விரும்பும் உப்பாக, ஒளியாக மாறும்போது அது சமூகத்திற்கு பயனளிக்கிறது. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் மத சுதந்தரத்தை அடிப்படை உரிமையாக்கியுள்ளது (Article 25 - 28). இதில் பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் ஆரோக்கியம் கடைபிடிக்கவேண்டியது ஒவ்வொருவரின் கடமை. கிறிஸ்துவின் சிந்தனைகளையும், இறையரசின் விழுமியங்களையும் பல்சமய சூழலில் சமூகத்திற்கு பயனுள்ள, அற வழிகளில் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம்.

## 2. அனைவரையும் ஏற்கும் எல்லையற்ற ஆன்மீகம் (திப. 10 : 34, 35)

கொர்னேலியு ரோம படையில் ஓர் நூற்றுவர் தலைவர். இன்றைய வழக்கப்படி இவர் ஒரு கிறிஸ்தவர் அல்ல. ஆனால் அவர் இறைப்பற்றாளர், கடவுளுக்கு அஞ்சி இரக்க செயல் பல புரிந்துவந்தார். பேதுரு தன் இனமாகிய யூதருக்கு நற்செய்தி பணி செய்ய வேண்டும் என்ற எல்லைக்குள் தான் வாழ்ந்து வந்தார். கலாச்சாரம் இவரிடம் இருப்பதை உணர்ந்த கடவுள், யூத சமய சிந்தனை நிறைந்த

இச்சம்பவத்தின் மூலம் எல்லை தாண்டிய ஆன்மீகத்திற்கும் அருட்பணிக்கும் அவரை ஆற்றல்படுத்துகிறார்.

யூத சட்டப்படி தீட்டுள்ள மிருகங்களை சாப்பிடக்கூடாது (லேவி. 11 : 2-27). ஓர் உண்மையான யூதன் தன்னை தீட்டுப்படுத்தி கொள்வதில்லை (தானி. 1 : 8, 2 மக். 6 : 18) ஆனால் ஆண்டவர், வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும் என்றார் (மார். 7 : 15). இயேசுவைத் தொட்ட உதிரப்போக்குள்ள பெண் நலம் பெற்றதும் (லூக். 8 : 44), பாவிகளோடு உணவருந்துவதும் (மாற். 2 : 15) தொழுநோயாளியைத் தொட்டு சுகமாக்குவதும் (மத். 8: 3), பாவியாகிய பெண்ணின் செயலை அங்கீகரிப்பதும் (லூக். 7 : 36 -50) இயேசுவின் தீட்டு என்ற எல்லைகளை தாண்டிய ஆன்மீகத்தையும், அருட்பணி அணுகுமுறைகளையும் நமக்கு கற்றுத்தருகிறது. திருச்சபைகள் இத்தகைய அணுகுமுறைகளை கைக்கொண்டு அருட்பணியாற்ற கடவுள் அழைக்கிறார்.

அருள்திரு. முனைவர். O. **டென்சிங்**

| | | | |
|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 16 | ஞா.354 (Tune: ஆத்மமே உன் ஆண்டவரின்) |
| | கீர். | 123 | கீர். 323 |

**03-09-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினான்காம் ஞாயிறு & கல்வி ஞாயிறு

# ஆசிரியர்கள் : விடுதலையின் பிரதிநிதிகள் (முகவர்கள்)

## Teachers : Agents of Liberation

| | |
|---|---|
| நீமொ. 8: 1-12 | திப 8 : 26-38 |
| திப. 119 : 97-104 | மாற். 6:34-44 |



“அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால், அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.” (மாற்கு 6 : 34)

ஒரு குழுவினருக்குச் சம உரிமையையும் உயர்மதிப்பையும் தேடித் தருவதே விடுதலை என வெப்ச்டர் அகராதி விளக்குகின்றது. உலகில் வாழும் மக்கள் விடுதலையுடன் வாழ வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு பணியாற்றியவர் நமது ஆண்டவர் இயேசு (லூக்கா 4 : 18-20). மக்கள் திரளைத் தவிர்த்துத் தமக்குப் பின்பு விடுதலைப் பணியைச் செய்யும்படிச் சீடர்களைத் தயார்படுத்த விரும்பிய இயேசு அவர்களோடு தனித்திருக்க விரும்பி பெத்சாயிதா ஊருக்கு ஏரிக்கரை வழியாகச் சென்று கொண்டிருந்தார் (மாற்கு 8:22). இயேசு வருவதைக் கண்டு எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் கூட்டங் கூட்டமாக அவர்களைக் காண வந்து கொண்டேயிருந்தனர். உணவு உண்ணக்கூட நேரமில்லாமல் அவர்கள் விடுதலைப் பணி செய்து கொண்டே வந்தனர். வழியில் படகேறி ஒரு கரையை அடைந்ததும் பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்பதை விரும்பிய ஆண்டவர் அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார் (மாற்கு 6:34). நேரம் அதிகமாகிக் கொண்டே சென்றதாலும், மக்கள் பசியுடனிருந்ததாலும் அவர்களுக்கு உணவளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இச்சூழலில் விடுதலைப்பணி செய்யும்படி தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட சீடர்களுக்கு நல் ஆசிரியராக சில பயிற்சிகளை அளிக்கின்றார். அவற்றை இன்று தியானிக்கிறோம்.

**1. சீடர்களை ஊக்கப்படுத்துகிறார்** (Encouraging the Disciples)

இயேசு மக்களுக்குப் போதித்ததை வெகுநேரமாக மக்கள் கேட்டுக் கொண்டேயிருந்தனர். நெடுநேரமாகியதால், சீடர்கள்

இயேசுவிடம் வந்து மக்கள் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று ஏதாவது வாங்கி உண்ணும்படி அவர்களை அனுப்பிவிட கேட்டுக் கொண்டனர். ஆனால், இயேசு, உணவு என்பது மனிதரின் அடிப்படைத் தேவை. உணவில்லாமல் வாடும் மனிதரும் உள்ளனர். அத்தகையோருக்கு விடுதலைப்பணி செய்ய சீடர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" (மாற்கு 6:37) என்கிறார். இயேசுவால் மக்களுக்கு உணவு கொடுக்க இயலும். எனினும் நல் ஆசிரியராக சீடர்களைப் பயிற்றுவிக்கிறார். திருத்தூதுவர் பணிகள் 8 : 26-38 வரையுள்ள திருமறைப் பகுதியில் ஏசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக் கொண்டிருந்த எத்தியோப்பிய அரசியான கந்தகியின் நிதியமைச்சரை ஊக்கப்படுத்தும் ஆசிரியராகப் பிலிப்புவைத் தூய ஆவியார் அனுப்புகிறார். ஹெலன் கெல்லர் பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்தபோது நோயினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக பார்வையையும், பேச்சுத் திறனையும் இழந்தார். பல ஆசிரியர்களிடம் பயின்றார்; எனினும் அவருக்குக் கிடைத்த ஆசிரியரான ஆனி சுலீவன் (Anne Sullivan) என்பவரே அவரை ஊக்கப்படுத்தினார். இதனால் கெல்லர் சிறந்த சிந்தனையாளராகவும், எழுத்தாளராகவும் பிறருக்கு உதவுபவராகவும் விளங்கினார்.

**2. சீடர்களின் திறமைகளை வெளிக்கொணர்கிறார்** (Digging out the Talents of the Disciples)

'Educate' என்னும் ஆங்கிலச்சொல் 'educare' எனும் லத்தீன் சொல்லிலிருந்து தோன்றியது. Educate அல்லது educare என்பதின் பொருள் ('to draw out') மறைந்திருப்பதை வெளிக்கொண்டு வருதல். ஆசிரியர் என்பவர் ஒரு கல்வியாளர் (educationist) மறைந்திருப்பதை வெளிக்கொணர்பவர். மக்களுக்கு உணவு வழங்கும் தேவை ஏற்பட்டபொழுது நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என இயேசு சீடரிடம் கூறியதும் (6:37), சீடர்கள் நாங்கள் போய் இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் இவர்களுக்குப் போதாதே என்று தங்கள் இயலாமையைத் தெரிவித்தனர். அப்போது இயேசு, அவர்களிடம் இருப்பதை வெளிக்கொணரும் ஆசிரியராக "உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன" என்பதைப் போய்ப் பாருங்கள் (6:38) என்று அனுப்புகிறார். ஆசிரியரை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். முதல் வகை ஆசிரியர் கிராம போனை முடுக்கி விடுபவர்.

கிராம போன் பாட வேண்டுமானால் ஒருவர் அதனை தமது கையால் முடுக்கி விட வேண்டும். அதுபோல இவ்வகை ஆசிரியர் மாணவரை இயங்க விடாமல் தாமே இயக்கிக் கொண்டிருப்பார். ஆசிரியரின் துணை இல்லாமல் மாணவரால் எதனையும் செய்ய இயலாது. இரண்டாம் வகை ஆசிரியர் வாயில் திணிப்பவர். பறவைகள் தனது குஞ்சுகளுக்கு வாயில் இரையைக் கொடுப்பது போல இவ்வகை ஆசிரியர் தாம் அறிந்தவற்றை மாணவருக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். ஆசிரியர் கற்றுக் கொடுத்ததின்படி மாணவர் செயலாற்ற முற்படுகின்றனர். மூன்றாம் வகை ஆசிரியர் தரையைப் பிராண்டும் வகையினர். கோழி தன் குஞ்சுகளுக்குத் தரையைப் பிராண்டி இரை வழங்குவது போல மாணவர்களின் திறமையை இவ்வகை ஆசிரியர் வளர்க்கின்றனர். கோழிக்குத் தனது குஞ்சுகளுக்கு இரை வழங்க முடியும். எனினும் இரையுள்ள இடத்தைப் பிராண்டி, குஞ்சுகளே இரையைத் தேடி உண்ணும்படி பயிற்றுவிக்கின்றன. இயேசு இம்முறைப்படி சீடர்களின் திறமைகளை வெளிக்கொணர்கிறார்.

### 3. சீடர்களுக்கு வழிகாட்டுகிறார் (Guiding the Disciples)

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசுவிடம் கொண்டு வந்தபோது, மக்கள் அனைவரையும் பசும்புல் தரையில் அமரச் செய்யும்படிச் சீடர்களைப் பணித்தார். மக்கள் வரிசை வரிசையாக அமரும்படி சீடர் உதவினர். பின்னர் அப்பங்களையும், மீன்களையும் ஆசீர்வதித்து அனைவரும் உண்ணும்படி ஆண்டவர் வகைச் செய்தார் (மாற்கு 6:38-42). இவ்வற்புத செயல் மூலம் உணவில்லாதோருக்கு உணவு அளிக்கும் பயிற்சியையும் தலைமைத்துவப் பயிற்சியையும் நல்லாசிரியரான இயேசு தமது சீடர்களுக்கு வழங்குகிறார். ஆசிரியர் தம் மாணாக்கருக்கு வழி காட்டுவோர் என்பதற்கு சான்றாக இயேசு விளங்குகிறார். நீதி. 8:1-12 வரையுள்ள பழைய ஏற்பாட்டு பகுதியில் சாலமோன் மானிடர் நடக்க வேண்டிய ஞானமுள்ள வழியைக் குறிப்பிடுகின்றார். சங். 119 : 97-104 வரையுள்ள பகுதியில் ஆண்டவரின் நியமங்களின்படி நடப்பதே இவ்வுலகில் வாழ்வதற்கான சிறந்த வழி என சங்கீதக்காரர் அறிவுறுத்துகின்றார். நல்ல ஆசிரியர் அல்லது மேய்ப்பரின் அடையாளமாக கோலையும், தடியையும் சங்கீதக்காரர் குறிப்பிடுகின்றார் (சங். 23 : 4). இவ்வடையாளம் ஆண்டவர் நம்மை வழிநடத்துகிறார், உணவு ஊட்டுகின்றார், பாதுகாக்கின்றார் என்பனவற்றை நமக்குச் சொல்லுகின்றன.

மக்கள் விடுதலைப் பெற்றோராக வாழ வேண்டும் என விரும்பிய ஆண்டவர், இத்திருமறைப் பகுதியில் தமது சீடர்கள் விடுதலைப்பணி செய்ய வேண்டும் என அவர்களை ஊக்கப்படுத்துகின்றார். சீடர்களின் திறமைகளை வெளிக்கொணர்கிறார். சீடர்களுக்கு வழிகாட்டுகிறார். ஆசிரியர்கள் விடுதலையின் முகவர்கள் என்பதற்கு மாதிரியாக நலலாசிரியராகிய இயேசு இப்பகுதியில் தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசுவைப் போன்று விடுதலையின் முகவர்களாக நாமும் செயல்பட்டு பிறரையும் செயல்பட வைக்க ஆண்டவர் அருள்புரிவராக.

அருள்திரு. அறிவர். A. **இராயப்பன் ஐசக்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 78 | ஞா. | 481 |
| | கீர். | 8 | கீர். | 333 |

**10-09-2023** பெந்தக்கோஸ்துக்கு பின்வரும் பதினைந்தாம் ஞாயிறு & மகளிர் ஞாயிறு

# மகளிர் : மாற்றத்தை உருவாக்குவோர்

(Women as change makers)

எண். 27 : 1-11 திப. 16 : 11-15

தி.பா. 119 : 57 - 64 யோவா. 4 : 27-30, 39-42/ லூக். 1 : 46-55



"செலபுகாதின் புதல்வியர் கேட்பது சரியே ; அவர்கள் தந்தையின் உரிமைசொத்து அவர்களுக்கு கிடைக்கச் செய்" (எண். 27 : 7)

நல்ல மாற்றங்களே முன்னேற்றங்களுக்குக் காரணமாகின்றன. இத்தகைய முன்னேற்றங்களுக்குக் காரணமான மாற்றங்களை உருவாக்குவதில் கடவுள் பெண்களையும் காலாகாலங்களில் உபயோகப்படுத்துகிறார் என்பதைத் திருமறையில் நாம் கற்றுக்கொள்ளுகிறோம். திருமறைப்பாடங்களாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் மூன்று விதமான வாழ்வின் சூழ்நிலைகளில் பெண்கள் நடைமுறை வாழ்விலும் ஆன்மீகம் சார்ந்த வாழ்விலும் பயனுள்ள மாற்றங்களை உருவாக்கியுள்ளதை அறிய முடிகிறது.

## 1. நிதானத்துடன் மாற்றத்தை உருவாக்கியவர்கள்

எண். 27 : 1-11 வசனங்களில் யோசேப்பின் மகனாகிய மனாசேயின் குடும்பங்களில் செலோப்பியாத் என்பவர் ஆண்மக்கள் இல்லாது இறந்து போனார். எனவே அவருடைய மகள்களான மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்ற ஐவரும் ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக வந்து, "மோசே, ஆசாரியனான எலெயாசார் மற்றும் பிரபுக்கள் ஆகியோரிடம் தங்கள் தகப்பனாருக்கு மகன்கள் இல்லதாதினால் தகப்பனாருடைய பெயர் அவருடைய மகள்களுக்குள்ளே விளங்கும்படியாக தங்களுக்கு தங்கள் தந்தையின் சொத்தில் உரிமை வேண்டும்" என முறையிட்டார்கள்.

யூதரின் சட்ட மரபான மித்ராசின்படி ஆண்மக்கள் இல்லாதோரின் சொத்து அவர்தம் சகோதரருக்கே உரியதாயிருந்தது. மோசே, அவ் ஐவரின் நியாயத்தை ஆண்டவரின் சமூகத்தில் கொண்டுச் சென்றார்.

ஆண்டவர் மோசேயிடம் “அம்மகள்களின் தகப்பன் வைத்துச் சென்ற சொத்து அவர்களுக்குக் கிடைக்கும்படியாக செய்வாயாக” என்று கட்டளையிட்டார். மேலும், ஆண்டவர் மோசேயிடம் இஸ்ரயேலில் மகன் இல்லாமல் ஒருவர் இறந்துவிட்டால் அவன் உரிமைச் சொத்து அவன் மகளுக்குச் சேரவேண்டும். அவனுக்கு மகளும் இல்லையெனில் அது அவன் சகோதரருக்குக் கொடுக்கப்படும். அவனுக்கும் சகோதரர் இல்லையெனில் அவன் தந்தையின் சகோதரருக்குக் கொடுக்கவேண்டும். அவன் தந்தைக்கும் சகோதரன் இல்லையெனில் அவன் குடும்பத்தில் நெருங்கிய உறவினனுக்குக் கொடுக்கவேண்டும். இது இஸ்ரயேல் மக்களுக்கு நியாயமாகவும் விதிமுறையாகவும் விளங்கும் என்று கூறினார்.

சகோதரர் இன்மையால் தங்கள் தகப்பன் சொத்தில் உரிமை வேண்டும் எனக் குரல் எழுப்பியப் பெண்களால் பழைய சட்டம் மாற்றப்பட்டு புதிய சட்டம் கடவுளால் கொடுக்கப்பட்டது. இதற்கு இப்பெண்கள் ஐவரும் விவேகமாய் நிதானத்தோடு செயல்பட்ட விதம் சிறப்பானது. சொத்திற்காக மட்டுமல்லாது தங்கள் தகப்பனின் பெயர் நிலைநிறுத்தும்படியாகச் சொத்தில் உரிமை கோரினார்கள். தங்களுக்கு உரிமை மறுக்கப்பட்டபோது வீணாகச் சண்டையிடாது ஆண்டவரின் சமூகத்தில் வந்து முறையிட்டார்கள்.

இன்றையச் சூழலில் நம் தாய்த்திருநாட்டில் பெண் மக்களுக்கும் ஆண்மக்களைப் போன்றே தகப்பன் சொத்தில் சமஉரிமை உண்டு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. எனினும் வரதட்சணை என்ற பெயரில் சொத்தில் சரிபங்கு பெண்களுக்குக் கிடைப்பதில்லை; அல்லது வரதட்சணையையும் பெற்றுக்கொண்டு சொத்திலும் சரிசமபங்கு சகோதரரிடம் கேட்பதுவும் நியாயமானதன்று. ஆகவே திருமணத்தின் போது பெண்கள் சொத்தில் சரிசமபங்கு என்பதற்கு உடன்பட்ட வரதட்சணை முறையைத் தவிர்க்கலாம். அதனால் வரதட்சணை கொடுமைகள் ஒழிய வாய்ப்புகளை ஏற்படுத்த இயலும்.

பெண்களுக்கும் சொத்தில் உரிமை உண்டு என்ற சட்டத்தின் மாற்றத்தினால் கிறிஸ்தவக் குடும்பங்களிலும் திருமணமாகிப் பாட்டிகளான பின்பும் தங்கள் சகோதரர்களிடம் சொத்துக்காக சண்டையிடுவதும், சொத்துக்களைப் பிரித்துக்கொள்வதில் ஏற்படும் இழுபறியினால் வழக்கு வாது என்று நீதிமன்றங்களுக்கு அலைந்து யாரும் அனுபவிக்க இயலாத அவலங்களும் பரவலாகக்

காணப்படுகிறது. பெண்கள் தங்கள் முக்கியத்துவங்களை ஆஸ்திக்கு கொடுக்காமல் ஆண்டவரின் ஆசீர்வாதங்களுக்கு முதன்மை கொடுக்க முன்வரும்போது சமாதானம் பெருகி குடும்பங்களில் ஆண்டவரின் திருப்பெயருக்கு மாட்சிமை உண்டாகும்.

## 2. அர்ப்பணிப்புடன் மாற்றத்தை உருவாக்கியவள்

லூக். 1 : 46-55 வரையிலான வசனங்களில் இயேசுநாதரைத் திருமைந்தனாக கருவேற்றிருந்த மரியாளின் பாடல் வரிகள் சொல்லப்பட்டுள்ளது. கடவுளின் திருத் திட்டத்தின்படி பாவ மனுக்குலம் பாவத்திலிருந்து விடுபட மண்ணுலகில் கன்னிப் பெண்ணான மரியாளைப் பாத்திரமாகக் கொண்டு அவர்வழிப் பிறந்தார். சாதாரணமான ஒரு குடும்பத்திலிருந்து இளம் பெண்ணான மரியாள் கடவுளின் திட்டத்தில் அசாதாரணமான பாத்திரமாக மாற்றம் பெற அவளிடம் காணப்பட்ட தாழ்மையும் விசுவாசத்தோடு கூடிய அர்ப்பணிப்புமே காரணமாய் அமைந்தது.

மரியாளின் மகனான இயேசு கிறிஸ்து இன்னொரு முறை மானிட வடிவில் இப்புவிக்கு இறங்கப் போவதில்லை. ஆனால் அவருடைய புனிதமான பண்புகளான உண்மை, தாழ்மை, பொறுமை, பரிசுத்தம் முதலிய குணநலன்கள் பரிசுத்தாவியின் உதவியோடு நம்மில் வெளிப்பட முடியும். அதற்கு ஏற்புடையோராக அர்ப்பண சிந்தையில் வாழ்ந்தால் இது சாத்தியமாகும்.

ஆகவே, பெண்கள் தங்கள் குடும்பங்களில் பிள்ளைகளை ஆரம்பத்திலிருந்தே இயேசுவின் புனிதமான தன்மைகள் அவர்களில் உருவாகப் போதித்து வளர்த்திட வேண்டும். அப்போது பாவம் நிறைந்த பொல்லாத உலக வாழ்க்கையில், இயேசு நாதரைப் பிரதிபலிப்பவர்களாக பிள்ளைகள் வளர்ந்து அவருடைய திருப்பெயர் மகிமைப்படும் வகையில் வாழ்வார்கள்.

## 3. சாட்சியுடன் மாற்றத்தை உருவாக்கியவள்

யோவான் 4 : 27-30, 39-42 ஆகிய வசனங்களில் இயேசுவும் சமாரியப் பெண்ணும் யாக்கோபின் கிணற்றண்டையில் உரையாடியதும் அவளால் சமாரியர் இயேசுவை உலக மீட்பராக அறிந்துகொண்டதும் சொல்லப்பட்டுள்ளது. தன் ஒழுக்கக்கேடான வாழ்க்கையினால் ஊராருக்குப் பயந்து ஒளிந்து நண்பகல் வேளையில் தண்ணீர் எடுக்க

வந்திருந்தாள். கிணற்றின் அருகே இயேசுநாதர் அமர்ந்து கொண்டு அவளிடம் அருந்தத் தண்ணீர் கேட்டார்.

இனவேறுபாட்டினால் உயர்ந்த யூதக்குலத்தவரான இயேசு தாழ்ந்த சமாரியக் குலத்தவளான தன்னிடம் தண்ணீர் கேட்பது தவறு என்று பேச ஆரம்பித்து, இறைவழிபாட்டில் உள்ள வேறுபாடுகளையும் மேசியாவையும் குறித்து பேசினாள். இயேசு, அவளுடைய வாழ்வின் தவறுகளை அவள் உணர்ந்து கொள்ளும்படி செய்தபோது அவரை மேசியா என்று அறிந்துகொண்டதோடு தன் பாவங்களிலிருந்து மாற்றம் பெற்றாள்.

தண்ணீர் எடுக்க எந்த ஊராருக்குப் பயந்து ஒளித்து வந்தவளோ, இப்போது குடத்தைக் கிணற்றண்டையில் வைத்துவிட்டு அவ்வூராரை நோக்கி ஓடிச்சென்றாள். மேசியாவைக் கண்டேன்; வந்து பாருங்கள் என்று உரக்கக் கூறினாள். அப்பெண் இயேசுநாதரை இவ்வுலகின் இனவேறுபாடுகளைத் தாண்டி இரட்சகராக அறிந்துக்கொண்டு அறிவித்தாள். உலக இரட்சகர் என்று அவ்வூரார் அறிக்கை செய்தார்கள். நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அப்பெண்ணின் வார்த்தைகளினால் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களானது மட்டுமல்லாது இயேசுவைத் தங்களிடத்தில் தங்க வேண்டுமென்றும் வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். இயேசுவும் அவர்களுடன் இரண்டு நாட்கள் தங்கினார். சமாரியாப் பெண்மணியின் சாட்சியே இந்த மாற்றத்திற்குக் காரணமாயிற்று.

வார்த்தைகளால் மட்டுமல்லாது நம் வாழ்க்கையில் மாற்றம் பெற்று வாழும்போது அவர்களால் நிதானத்துடனும் அர்ப்பணிப்புடனும் இயலும் என்பதற்கு மேற்படிக் குறிப்பிட்ட பெண்களே அடித்தளமாயினர்.

பேராசிரியை முனைவர் J. **பெலிசியா செல்லையா**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 58 | ஞா. | 459 |
| | கீர். | 27 | கீர். | 418 |

| 17-09-2023 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினாறாம் ஞாயிறு |
|---|---|

# அமைதியும் முரண்பாட்டிற்கான தீர்வும்

## Peace and conflict Resolution

| | |
|---|---|
| தொ.நூ. 13 : 2 - 12 | தி.ப. 6 : 1 - 6 |
| திபா. 16 | மத். 20 : 1 - 16 |



"அவர்களைத் திருத்தூதுவர் முன்னால் நிறுத்தினார்கள். திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள் மீது வைத்து இறைவனிடம் வேண்டினர்." (திப. 6 : 6)

இவ்வுலகம் மனிதன் வாழ்வதற்கான சிறந்த இடம். நாம் காணும் இவ்வுலகம் அதிசயங்களினாலும் அற்புதங்களினாலும் நிறைந்துள்ளது. இயற்கையான அருவிகள், ஆழ்கடல்கள், அற்புதமான உயிரினங்கள், வானளாவிய கட்டடங்கள் என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதே வேளை ஏராளமான முரண்பாடுகளும் புரிந்துகொள்ள முடியாத மர்மங்களும் நிறைந்து உள்ளன. பால் (ஆண் - பெண்), இனம் (யூதர், கிரேக்கர், ஆசியர், ஐரோப்பியர், அரபியர்), மொழி (ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், இந்தி, தமிழ்), சமயம் (கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், புத்தம்), அரசியல் (நாடு, சமயம், இனம், திருச்சபை, அனைத்து துறைகளிலும்), பொருளாதாரம் (வளர்ந்த நாடுகள் - வளரும் நாடுகள், வறுமை நாடுகள்), கலாச்சாரம் (சமய, சமூக, இன, மொழி, சாதி உள்ளது) என திருச்சபைகளுக்குள்ளும் (பாரம்பரிய சபை, சீர்திருத்த சபை, சுயாதீன திருச்சபை, பெந்தேகோஸ்தே சபைகள்) முரண்பாடுகள் உள்ளன.

இந்த முரண்பாடுகள் நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம், மதத்திற்கு (Religion) மதம் வேறுபடும். முரண்பாடுகள் தீர்க்கப்படாவிட்டால் கலவரம், போர், சண்டைகள், வறுமை, பொருளாதாரச் சீரழிவு, மனித குல அழிப்பு போன்றவை ஏற்படும். இறை வார்த்தைகள் முரண்பாடுகளில் தீர்வும் அமைதியும் (Peace) காண போதுமான ஆலோசனைகளையும், செய்திகளையும் நமக்குத் தருகின்றன. சிலவற்றை இணைந்து சிந்திப்போம்.

### 1. தெரிந்துகொள்வதில் வரும் முரண்பாடும் – தீர்வும்

அமைதியின்மையும் முரண்பாடும் ஏற்பட காரணம்.

ஆதி. 13 : 1-12 பகுதியில் வரும் நிகழ்வு கீழ்வரும் முரணையும் தீர்வையும் தருகின்றது.

**முரண்பாடுகள் ஏற்படக்காரணங்கள்**

1. திரளான ஆடு மாடுகள் செல்வம் (13 : 2-12)
2. குடியிருக்க இட நெருக்கடி (13 : 6)
3. மிகுதியான உடைமைகள் (13 : 6)
4. வேலையாட்களுக்குள்ளே வாக்குவாதம் (13 : 7)
5. ஒன்றித்து வாழ முடியாத மனநிலை (13 : 6)

**தீர்வும் அமைதியும் :**

1. உரையாடல் முயற்சி : (ஆபிரகாமும், லோத்தும்) உரையாட முன் வந்தனர். (13 : 8) உரையாடல் உரையாடலுக்கு வழி நடத்தும்.
2. நமக்குள் சண்டை, வாக்குவாதம் வேண்டாம் என்ற தீர்வு. சண்டையால் தீர்வு காணமுடியாது (13 : 8).
3. நாம் சகோதரர் என சகோதர உறவை முன்னிறுத்துதல் (13 : 8).
4. தெரிந்துகொள்வதில் மற்றவர்க்கு முன்னுரிமை (விட்டுக்கொடுத்தல்) நீ இடப்புறம் போனால் நான் வலப்புறம் போகிறேன். எந்தப் பக்கம் போக வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதில் மற்றவருக்கு முன்னுரிமை. (விட்டுக் கொடுத்தார் ஆபிரகாம்) விட்டுக்கொடுத்தவர் கெட்டுப் போனதில்லை.

**இதன் பலன்கள்**

ஆபிரகாமுக்குக் கானான் தேசம் உரிமையாகியது. கடவுளின் வாக்குத்தத்தம் நிறைவேறியது (13 : 15). நீ பார்க்கிற இந்த பூமி (கானான்) முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

முரண்பாடுகளில் அமைதித் தீர்வு பெற விட்டுக்கொடுத்தல், ஒப்புரவாதல், மனந்திரும்புதல், மன்னிப்பு, அன்பு செலுத்துதல், நட்பு பாராட்டுதல் அனுதின வாழ்வாக அமைய வேண்டும்.

## 2. வளர்ச்சிகளில் வரும் முரண்பாடும் – தீர்வும்

சாதாரண மனிதரோ, அமைப்போ, இயக்கமோ வளரும் போது கூடவே பிரச்சனையும், முரண்பாடுகளும் வரும். முதல் நூற்றாண்டு திருச்சபைக்கு அதே பிரச்சனை வந்தது (அப். 6 : 1-6)

**முரண்பாடு ஏற்பட்டதின் காரணங்கள் :**

1. சீர்கள் பெருக்கம் (அப். 6 : 1).
2. கிரேக்க விதவைகள் சரியாய் கவனிக்கப்படவில்லை என்ற குற்றசாட்டு (அப். 6 : 1).
3. இனவேறுபாட்டு உணர்வு (கிரேக்கர் - எபிரேயர்)
4. ஓயாத முறுமுறுப்பு (அப். 6 : 1).

வளர்ச்சி உள்ள இடத்தில் சிறிய தவறுகளும் பெரிதாக்கப்படும். குறை சொல்லும் கூட்டம் எழும்பும். இப்பிரச்சனை உடனடி தீர்க்கப்பட்டது.

**தீர்வும் – அமைதியும்**

1. 12 பேரும் சீடர்கள் கூட்டத்தைக் கூட்டினர் (அப். 6 : 2.).
2. திருத்தூதுவர்கள் அனைத்துச் சீடர்களோடும் மனந்திறந்து உரையாடினர். மேலானவர்கள் கீழானவர்களோடு உரையாட முன்வந்தனர் (அப். 6 : 2).
3. இறை வசனத்தைப் போதிக்கும் கடமை மற்றும் நோக்கத்தை நிறைவேற்ற உணர்ந்து முன் வந்தனர் (6 : 2).
4. நிர்வாகம் செய்வது சரியல்ல, தகுதியல்ல என்பதை உணர்ந்தனர் இன்று நிர்வகிப்பதே இறைப்பணி என்ற தவறான எண்ணம் திருச்சபைக்குள் வளர்ந்து நிற்கிறது. எனவே, பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.
5. நிர்வாகம் செய்ய ஏழு பேரை நியமித்தனர் (6 : 3).
6. தீர்வும் சமாதான முயற்சியும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது (6 : 5).

**இதன் பலன்**

1. புதியவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டனர். நீண்ட காலமாக (30 ஆண்டுகள், 25 ஆண்டுகள்) பொறுப்பில் இருப்பவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும் (6 : 5).
2. புதியவர்களின் சிறப்பு குணம், பண்பு மற்றும் தலைமைத்துவம் வெளிப்பட்டன. (விசுவாசம், பரிசுத்த ஆவி, ஞானம், நற்சாட்சி) (6 : 3).

3. இறை வசனம் அறிவித்தல் வளர்ச்சி கண்டது (6 : 7).

4. சீஷர்கள் எண்ணிக்கை மிகவும் பெருகியது (6 : 7 ).

5. ஆசாரியர்கள் (யூத சமயப் பணியாட்கள்) பலர் விசுவாசத்திற்குக் (கிறிஸ்துவுக்கு) கீழ்ப்படிந்தனர் (6 : 7).

6. மக்கள் அற்புத அடையாளங்களைக் கண்டனர். ஸ்தேவான் பல அற்புதங்களை, அடையாளங்களைச் செய்தார் (6 : 8 ).

தேவனுடைய வார்த்தைகள் முன்னிறுத்தபடும்போது மட்டுமே சமூக வளர்ச்சி, சபை வளர்ச்சி, இயக்க வளர்ச்சி சாத்தியமாகும். முரண்பாடுகள் ஏற்பட்டாலும் விரைவில் தீர்வு காணப்பட இயலும். அதற்கேற்ற பலனையும் காண முடியும்.

### 3. பொறுப்புகளில் வரும் முரண்பாடுகளும் தீர்வும்

**முரண்பாடுகள் ஏற்பட்டதின் காரணங்கள்**

1. விடியற்காலையில் வேலைக்கு அமர்த்தபட்டவர்களுக்கு அதற்குரிய கூலி கொடுக்கப்படவில்லை (மத். 20 : 2).

2. மூன்றாம் மணி வேளையிலும் வேலைக்குச் சிலர் அமர்த்தப்பட்டனர் (20 : 3).

3. பிந்தி, சும்மா நின்ற சிலரும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர் (20 : 4)

4. 6-ம் மணி, 9-ம் மணி, 11-ம் மணி, வேளையிலும் சிலர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர் (மத். 2 : 5, 6).

5. முந்தி (அதிகாலை) வந்தவர்களுக்கும் பிந்தி (11-ம் மணி) வந்தவர்களுக்கும் ஒரே கூலி (20 : 2).

6. ஒரு மணி நேரம் வேலை செய்தோருக்கும் எட்டு மணி நேரம் வேலை செய்தோருக்கும் ஒரே கூலி.

7. பகலின் கஷ்டம், வெயிலின் உஷ்ணம் சகித்து உழைத்தவருக்கும் ஒரு மணி நேரம் வேலை செய்தோருக்கும் ஒரே கூலி (20 : 12)

**தீர்வும் – அமைதியும் :**

1. மனிதர்களில், உழைப்போர் யாவரும் கடவுளின் முன்பு சமமானவர்கள்.

2. யாருக்கு எவ்வளவு கூலி கொடுப்பது என்பது நிலக்கிழாரின் விருப்பம் என்பதைப் புரிய வேண்டும்.

3. வேலையை வைத்தோ, கூலியை வைத்தோ எவர் ஒருவரையும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று கடவுள் தரம் பிரிப்பதில்லை.

4. முந்தினோர் (இனத்தால், பொறுப்பால், திறமையால்) எவரும் முதலிடம், முதற்பலன் கோர உரிமை கிடையாது (20 : 16).

5. இறையரசின் பணிகளில் எல்லோரும் சமமானவர்கள் (20 : 16).

இன்று அதிகமான திருச்சபைகளிலும், பேராயங்களிலும், நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட முரண்பாடுகள் அதிகம் காணப்படுகின்றன.

மானிடத்தை அச்சுறுத்தும் முரண்பாடுகள் ஏராளமாக நமக்குள்ளும் நாட்டிலும் சமூகத்திலும் திருச்சபைக்குள்ளும் கிறிஸ்தவர்களுக்குள்ளும் இருக்கத்தான் செய்கின்றன. அதிகார மீறுதல்கள், வன்முறை, திட்டமிடப்பட்ட மதத் தீவிரவாதம், பாலின வேறுபாடுகள் மற்றும் பொருளாதார வேறுபாடுகள் நிறைந்த உலகில் முரண்பாடுகளோடு வாழ வேண்டியுள்ளது.

இமயமாய்ப் பிரிவினை எழுந்திடும் வேளை என்னும் பாடலின் வரிகளினை உணர்ந்து முரண்பாடுகளை உயர்த்திப் பிடிக்காமல் அமைதி சமாதானத்தை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**


| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 13 | ஞா. | 179 |
| | கீர். | 30 | கீர். | 344 |

**24-09-2023** பெந்தக்கோஸ்திற்குப் பின் வரும் பதினேழாம் ஞாயிறு & மூத்த குடிமக்கள் ஞாயிறு

# முதியோரின் நற்பலன்

## Fruitfulness of the Elderly

| | |
|---|---|
| தொ.நூ. 17 : 1-8 | பில. 8 - 22 |
| தி.பா. 92 | மத். 7 : 13-20 |



இவ்வாறு போலி இறைவாக்கினர் யாரென அவர்கள் செயலைக் கொண்டே இனம்கண்டு கொள்வீர்கள். மத். 1 : 20

வாழ்க்கை என்பதன் பொருள் என்ன? என்ற கேள்விக்கு அநேகர் ருசிகரமான விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் மனிதர்களோ பிறந்ததினால் மட்டும் வாழ்கின்றார்கள். இவ்வித மனோபாவம் பலருடைய வாழ்க்கையில் பிரச்சனைகளை உண்டு பண்ணுகிறது.

நமக்கு கடவுள் தானமாய் தந்த வாழ்க்கையின் நீளத்தைக் கூட்ட நம்மால் இயலாது. ஆனால், அதன் மேன்மையை நம்மால் அதிகரிக்கச் செய்ய இயலும். அதைத்தான் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். பலன் தரும் முதுமை என்ற பொருளின் சிறப்பு இதிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத். 7 : 20).

ஒருவர் முதிய வயதை அடைவது ஒரு மகத்துவ காலகட்டமாகும். “இதோ நான் இருக்கிறேன், என்னைப் பயன்படுத்துங்கள்” என்பதை ஒவ்வொரு வயோதிபர்களும் உறுதிப்படுத்தவேண்டும். அங்குதான் ஒரு புது வயோதிபம் பிறக்கின்றது. முதியவர்கள் குடும்பத்தில் ஆற்றல் உள்ளவர்கள். இவர்களின் அறிவும், அனுபவமும், இறைவேண்டலும் ஒவ்வொரு குடும்பத்தின் சொத்துக்களாகும். தங்கள் குடும்பங்களுக்காக அனுதினமும் வேண்டுதல் செய்ய ஒவ்வொரு முதியவர்களாலும் இயலும். குடும்பங்களுக்காக ஏறெடுக்கும் விண்ணப்பத்தின் வழியாக பாதுகாப்பு அரண்களை உருவாக்குபவர்கள் அவர்கள்.

குற்றச்சாட்டுகளும் குறைகளும் நிறைந்த உலகத்தில்தான் முதியவர்களும் வாழ்கிறார்கள். மகனைக் குறித்தும் மருமகளைக் குறித்தும், மருமகனைக் குறித்தும் குறை சொல்லி அவர்களோடுள்ள பகையை வளர்ப்பதற்குப் பதிலாக, நன்மையை மட்டும் சிந்தித்தும் பிறருக்கு நம்பிக்கையை மலரச் செய்யும் காலகட்டம்தான் முதுமை. எவராலும் தவிர்க்க இயலாத பருவம்தான் முதுமை. சுயநலம், பண ஆசை, சுயபரிதாபம், வாசி, வைராக்யம் இவைகள் ஒரு முதியவரின் ஆன்மீகத்தால் காணாமற் போகும் குணங்களாகும். பதிலாக மகிழ்ச்சி, சமாதானம், நம்பிக்கை போன்றவை உறுதிப்படும்.

## I முதுமை : இறைப்பணியில் மாதிரியுடன் திகழும் காலம்

தூய பவுல் பிலேமோனுக்கு எழுதின கடிதத்தில் “தன் முதிய வயதில் சிறையில் இருப்பதையும் அங்கே ஒனேசிமஸ் என்ற சிறைக் கைதியை ஆதாயப்படுத்திய அனுபவத்தையும் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடிதம் நமக்கு உணர்த்தும் செய்தி என்னவெனில் முதுமை ஓய்வெடுப்பதற்கானதல்ல மாறாக ஆற்றலுடன் திகழ்ந்து கடின உழைப்பைத் தருவதற்கான காலம்” என்பதாகும்.

முதியவர்களுக்கு மறைந்த போப்பாண்டவர் ஜான் பால் என்பவர் கூறுவது என்னவென்றால் “நீங்கள் வாழ்க்கையின் கடைசி ரேகையில் வாழ்வதாகக் கருதக்கூடாது. மனிதத் தன்மை மற்றும் ஆன்மீக நிலையில் மனித வாழ்வின் மிகவும் மேன்மையான காலக்கட்டத்தை நீங்கள் கடந்து செல்கிறீர்கள்” என்பதாகும். ஆம், முதியவர்கள் அறிய, அனுபவிக்க பகிர, ஊக்கப்படுத்த, அன்பு கூற ஏராளமான காரியங்கள் அவர்களைச் சுற்றிலும் காணப்படுகின்றன. அவைகள்தான் அவர்களுடைய தருணங்கள்.

முதியவர்கள் அவர்களுடைய திறமைகளை முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும். கிரேன்மா மோசஸ் என்ற ஓவியர் ஓவியம் வரையத் தொடங்கியது அவருடைய 70-ஆம் வயதில் ஆகும். 2004-ஆம் ஆண்டு அவர் ஓவியத்தின் விலை அறுபதினாயிரம் டாலராயிருந்தது. தன்னுடைய 101-ஆம் வயது வரையிலும் 1600 ஓவியங்களை அவர் வரைந்தார்.

இஸ்ரயேல் மக்களை வழிநடத்த ஆண்டவர் மோசேயைத் தெரிந்து கொண்டபோது அவருக்கு வயது எண்பது ஆகும். ஆகவே, முதுமை காலம் ஏராளமான வாய்ப்புகளை உள்ளடக்கிய காலமாகும். ஆகவே

முதியவர்கள் அவற்றை இழக்கக்கூடாது. கிறிஸ்துவின் சிந்தையை முதியப் பருவத்திலும் கொண்டிருப்பதால் புனித பவுலாரை போல அநேகரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்த இயலும்.

## II முதுமை : இறைத்திட்டங்களை நிறைவேற்றும் காலம்

இறைத்திட்ட நிறைவேறுதலில் வயது ஒரு பிரச்சனையல்ல என்பதை ஆபிரகாமின் வாழ்க்கை நமக்குக் கற்பிக்கின்றது. 99-ஆம் வயதிலும் ஆபிரகாம் தன்னுடைய முதுமையை இறைத்திட்டத்தின் நிறைவேறுதலின் காலமாகக் காண்கிறார். அன்று முதல் அனைத்துலகோரின் விசுவாசத்தின் தந்தையாக மாறினார் (ஆதி. 17 : 1-8).

முதியவர்களின் சமூகம் பலருக்கும் கடமையாய் மாறும். இந்தக் காலக் கட்டத்தில் முதியவர்களோடுள்ள நம்முடைய அணுகுமுறை மாறியாக வேண்டும். முதுமை அடைந்தவர்களின் உளவியலை நாம் உட்கொள்ள வேண்டும். முதியவர்களுக்கான வாய்ப்புகள் அவர்களின் பெலவீனங்களை விட ஆற்றல் வாய்ந்தவையாகும். “இருபதாம் நூற்றாண்டின் நோயாக இருந்த முதுமை இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் தொற்றுநோய்” என்று பிரபல பொருளாதார விஞ்ஞானி ராபர்ட் பட்லர் என்பவர் கூறினார். நம்பிக்கை, அன்பு மற்றும் இறை சார்புக்கான நல்ல காலமாக முதுமை அமைதல் வேண்டும்.

முதுமை வாழ்க்கையின் பகுதியே. முதுமைக்கான குணங்கள் ஒருவரில் எப்போது தொடங்கும் என்று முதுமையைக் குறித்துப் படிக்கின்ற மருத்துவரிடம் ஒருவர் கேட்டார். “ஒரு அம்மா குழந்தையை கருக்கொள்ளும் நிமிடம் துவங்கி அந்த குழந்தை முதுமைக்கு நேராகக் கடந்து செல்லும்” என்று அவர் பதிலாகக் குறிப்பிட்டார். முதுமையைக் குறித்துப் பயப்பட வேண்டாம். அதனோடு போரிட வேண்டாம். அதை வரவேற்றுக்கொள்ளுங்கள், அதைப் பயன்படுத்துங்கள். முதுமைக்கான மிகவும் நல்ல உளவியல் அணுகுமுறையிது.

முதுமையோடுள்ள நம்முடைய நல்ல அணுகுமுறைதான் அதன் அர்த்தம், முதுமையைக் குறித்து நமக்கு நல்ல தரிசனங்களும் கனவுகளும் வேண்டும். அடுத்த தலைமுறைக்காக நாம் என்ன செய்யலாம் என்று செயலாற்றும் நோக்கோடு பிறரை ஊக்கப்படுத்துகின்ற ஒருவர் தான் முதுமையை வளமாக்குகிறார்.

விசுவாச வீரராகிய ஜார்ஜ் முல்லர் தன்னுடைய 90-ஆம் வயதிலும் செயல்வீரராகக் காணப்பட்டார். பலரை விண்ணப்பத்தின் வழியாக மீட்புக்கு நேராக கொண்டு வந்தார். முதுமையின் துன்பங்களைத் தாண்டி முன்னேறியவர்கள் வரலாற்றில் ஏராளமானவர்கள் உண்டு. எண்பதாம் வயதில்தான் மகா கவிஞராகிய கேய்தே தன்னுடைய புகழ்பெற்ற "போஸ்ட்" என்ற நூலை எழுதினார். St. Peters தேவாலய கோபுரத்தை மைக்கேல் ஏஞ்சலோ உருவாக்கிய போது அவருக்கு வயது எழுபது. முதுமை ஒன்றிற்கும் சங்கிலியல்ல என்பதை வரலாற்றில் வாழும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் நமக்குக் கற்பிக்கிறார்கள். அதனால் முதுமையின் சிறந்த தருணங்களைப் பயன்படுத்துங்கள். இல்லையென்றால் முதுமை உங்களை மேற்கொள்ளும்.

### III முதுமை : இறையாசியில் மகிழும் காலம்

நான் வயோதிபனாகிவிட்டேன் நான் இனி எதற்கும் பயன்படபோவதில்லை என்ற எண்ணம் ஒருவரைத் துக்கப்படுத்தும். உளவியலின் அடிப்படையில் இது ஒரு தாழ்வு மனப்பான்மையாகும். வருடங்கள் முகத்திற்குச் சுளுக்கை ஏற்படுத்தும். ஆனால் உற்சாகத்தை விட்டுவிடுவது உடலுக்கும் மனதுக்கும் சுளுக்கை ஏற்படுத்தும். அதனால் முதுமையிலும் கனி தருவது என்பது நல்ல மனோபாவமும் ஆசீர்வாதமுமாகும்.

முன்னாள் அமெரிக்க அதிபர் லிண்டன் ஜாண்சன் என்பவர், "முதியோர்கள் இந்தத் தேசத்திற்குத் தேவையானவர்கள். அவர்களுடைய அனுபவத்தையும் திறமைகளையும் பயன்படுத்தினால் நமக்கு அது மிகப்பெரிய ஆசீர்வாதமாயிருக்கும்" எனக் குறிப்பிட்டார். முதியவர்கள் பிறருக்காக நிரந்தரமாக விண்ணப்பிக்க இயலும். முதியோர் இதைவிட பெரிய காரியத்தைச் செய்வதற்கில்லை. இப்படிப்பட்டவர்கள் எந்தக் குடும்பத்திற்கும் சுமையல்ல. அவர்கள் இறை நம்பிக்கையின் சூழலை வீட்டில் உருவாக்குவார்கள்.

முதியோர்களின் சமூகம் பலருக்கும் ஒரு பொறுப்பாகும். இந்தக் காலக்கட்டத்தில் முதியவர்களோடுள்ள அணுகுமுறையில் மாற்றம் தேவை. முதிர்ந்தவர்களின் மனதை நாம் புரிந்துகொண்டால் அவர்களோடுள்ள நம்முடைய நடத்தையில் நல்ல மாற்றங்களை நாம் ஏற்படுத்த இயலும். ஒரு மனிதனின் ஒவ்வொரு காலக்கட்ட வாழ்க்கையிலும் அதற்குரிய தேவைகளுண்டு, வாய்ப்புகளுண்டு,

சவால்களுண்டு. எண்பது வயதுள்ள ஒருவரைக் கவனிப்பதற்கும் எட்டுமாதமுள்ள ஒரு குழந்தையைப் பராமரிப்பதற்கும் உரிய பாடுகள் கிட்டத்தட்ட ஒன்றுபோல்தான் தோன்றும். முதியவர்களைப் பராமரிப்பதிலே காணப்படும் எதிர் மனநிலைக்குக் காரணம் சுயநல எண்ணம்தான். ஒரு குழந்தையை வளர்க்கின்றபொழுது அதன் வளர்ச்சி ஒரு பலனாகவே அல்லது லாபமாகவே பார்க்கப்படுகின்றது. வயோதிபர்களைப் பராமரித்தல் லாபமல்ல, மாறாக நஷ்டமே, அதாவது மரணமே என்ற எண்ணம் இன்னமும் இருக்கின்றது. லாபங்களுக்கு அப்பால் முதியவர்களை நாம் பராமரித்தால் உளம் சார்ந்தும் ஆன்மீகம் சார்ந்தும் நமக்கு ஆசீர்வாதம் உண்டாகிறது.

குழந்தைப் பருவமும் இளமையும் மறையக்கூடியவையே (ச.உரை 11 : 10) என்று திருவசனம் நமக்கு நினைப்பூட்டுவது முதுமை மட்டும் தான் யதார்த்தமானது என்பதாகும். அனைவரும் இந்த யதார்த்தத்திற்குள் பிரவேசிப்பர். அதனால் என்னோடு பிறர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்தபடியே நாம் முதியவர்களிடமும் நடந்துகொள்வோம். முதியவர்களுக்கு வேண்டியவை அன்பு, ஆதரவு, புன்னகை, நல்ல அணுகுமுறை இவைகளே. உணவை விட பெரியதும் இவைகளே. இளம்தலைமுறையினர் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். முதியவர்களை முதியோர் இல்லத்தில் அனுப்புகின்ற பண்பாட்டினின்று நாம் விலகி கரிசனையின் உலகில் வாழவேண்டும். முதியோர் அதிகமாகப் பேசுவர். சொன்னதையே திரும்பச் சொல்வர். அதைக் கேட்கவும் உடன் உட்காரவும் நேரம் கண்டுபிடிப்போம். பலன் தரும் முதுமை இன்றைய காலக்கட்டத்தின் தேவையாகும். முதுமை பொறுப்பல்ல மாறாக ஆசீர்வாதம். எனவே, வாழ்க்கை பாதையில் பதறாமல் முன்னேறுவோம். பலன் தரும் முதுமையை வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. R. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 60 | ஞா. | 488 |
| | கீர். | 21 | கீர். | 300 |

**27-09-2023** தென்னிந்தியத் திருச்சபை நாள்

# சான்று பகர்வதில் ஒன்றிப்பு

## Únity in Witnessing

எசே. 37 : 15 - 22 எபே. 4 : 1 - 6

திபா. 122 யோவா. 17 : 20 - 26



"நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்." (யோவான் 17 : 22)

திருச்சபை வரலாற்றில் மாபெரும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தித் தென்னிந்தியத் திருச்சபை உருவானது 1947, செப்டம்பர் 27-ஆம் நாள் ஆகும். இது ஆங்கிலிக்கன், காங்கிரிகேசன், பிறிஸ்பிட்டேரியன், மெதடிஸ்ட் போன்ற திருச்சபைகளை பல எதிரும், புதிருமான தன்மைகளையும், கொள்கைகளையும் ஒன்றிணைத்து உருவான ஐக்கிய திருச்சபையாகும். வரலாற்று ஆசிரியர்கள் இம்மாபெரும் இணைப்பை இரண்டாவது பெந்தேகோஸ்தே நிகழ்வு என ஒப்பிட்டுக் கூறுவர். மேலும், இது கடவுளின் அருட்கொடைகளுக்கு உண்டான ஓர் அடையாளம் என்று கூறுவர். பேராயர் Newbigin இந்நிகழ்வை 'South India Diary -ல் எழுதும்போது The 27th September dawned bright and Sunny after a night of Continuous rain" என்று தென்னிந்தியத் திருச்சபையின் இணைப்பில் அமைந்துள்ள முரண்பாடுகளை இறைவனின் ஆற்றலாய்ச் சமாதானமாய் நிறைவு செய்தார்கள் என்று கூறுகிறார்.

தென்னிந்தியத் திருச்சபை உருவாக்கத்திற்கு மிக முக்கியமான நிகழ்வு Tranquebar கூடுகை (1919). இக்கூடுகையில் பல மிஷனரி இயக்கங்கள் தங்கள் நற்செய்திப் பணியின் நோக்கங்களையும் தரிசனங்களையும் வலியுறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் ஆத்துமாக்கள் அறுவடை செய்யும் பணி (Winning Souls) மேலும் வலுப்பெறும் என்று கூறினார்கள். மேலும் அதற்காகத் திருப்பணிகளை ஒன்றிணைப்பதற்கான தனிபெரும் ஆளுமை முறைமை கேட்கப்பட்டது (Home rule in Church). தொடர்ச்சியாக பல அமர்வுகள் மூலமாய்க் கருத்துக்கள் பகிரப்பட்டு தென்னிந்தியத் திருச்சபை உருவானது. இந்த ஒருங்கிணைப்பின் உண்மையைச் சொல்லும்போது

"will become a More effective instrument of God's work and that there will be greater peace, closer fellowship and fuller life within the church" என்று அருட்செய்தி வழங்கப்பட்டது. ஆகவே தான் தென்னிந்தியத் திருச்சபையின் திருப்பணியை "to save with peace, compassion and love" என்று கூறுவார்கள்.

திருச்சபையாக இந்நாளைக் கொண்டாடும்போது நாம் பெற்றுள்ள ஆன்மிக விடுதலையையும் சமுக விடுதலையும் உணர்ந்து கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். மேலும் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள ஆசீர்வாதம், கல்வி, உயர்வு, போன்றவைகளை எப்போதும் மனதில் நிலைநிறுத்திக் கொள்வோம். மேலும் தூய பவுலார் கொரிந்து திருச்சபைக்குக் கடிதம் எழுதும் போது, "திருச்சபை கிறிஸ்துவின் சரீரம், விசுவாசிகள் அவயவங்கள்" என்பதையும் நினைப்பூட்டுவார். ஆகவே, திருச்சபையின் விசுவாச குடும்பங்கள், தலைவர்கள் அவரவர் கடமைகளையும் பொறுப்புகளையும் உண்மையாக நிறைவேற்ற வேண்டும். மேலும் இன்றையக் காலகட்டத்தில் காணப்படும் வேற்றுமைகள் மற்றும் பதவி மோகங்களைக் களைந்து, கிறிஸ்துவின் போதனை நம்மில் வெளிப்பட்டு நம்மைக் காண்கின்ற பிற சமுகம் ஒவ்வொரு திருச்சபை விசுவாசிகளின் சாட்சி (Witness) வாழ்வின் மூலம் கடவுளின் நாமம் மகிமைப்படவும் வாழ அழைக்கப்படுகிறோம்.

இந்நாளில் நமக்கு அருளப்பட்டிருக்கின்ற திருமறை வாக்கியங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து சாட்சியாக வாழ ஆண்டவர் விரும்புகிறார் என்பதைத் தியானம் செய்வோம்.

**1. உறவுகளை ஒன்றுபடுத்தகின்ற திருச்சபை** (எசேக்கியேல் 39 : 15-22)

எசேக்கியல் இறைவாக்கினர் கடவுள் தம் மக்களோடு செய்யப் போகும் உடன்படிக்கையையும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விடுதலையையும் நினைவுபடுத்துகிறார் (எசே. 39 : 15-22). சாலமோன் அரசன் காலத்திற்குப் பின் அரசியல் ரீதியாக பிளவுபட்ட இஸ்ரயேல் மீண்டும் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் என்று கூறுகிறார். இஸ்ரயேல் கோத்திரங்கள் யூதா என்றும் இஸ்ரயேல் என்றும் பிளவுபட்டது. ஆனால் கடவுள் அவர்கள் பிரிவினைகளோடு வாழ்வது சிறப்பானதல்ல, ஒன்றிணைய வேண்டும் என்கிறார். இறைவன் தன் மக்களோடு செய்யும் உடன்படிக்கையை "அவர்கள் என் மக்கள்; நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்" (எசே. 37 : 23) என்று இறைவாக்கு உரைக்கிறார். மேலும், அவர்களின் பாவத்திலிருந்து மீட்பு வழங்கி தூய்மைப்படுத்தி வழிநடத்துவேன் என்றார். திருச்சட்டங்களை அவமதித்து,

ஒருவருக்கொருவர் தவறு செய்து பிரிந்து நிற்கும் மக்களையும் கோத்திரங்களையும் ஒன்றாக்குவேன் என்று ஒன்றாகும் கோல் (37 : 19) என்கிற உருவகத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார். கடவுள் இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்கி எல்லாக் காலங்களிலும் தாவீதின் வம்சம் வாயிலாக ஆளுகை செய்வார் என்பதையும் ஜனங்கள் மத்தியில் தூயவராய் வாசம் பண்ணுவார் என்பதையும் குறிப்பிடுகிறார்.

ஆகவே தென்னிந்தியத் திருச்சபை என்னும் அமைப்பு மக்களை இணைத்து உறவுகளை உருவாக்கி, ஒன்றுபடுத்துமிடமாக அமைய வேண்டும். இதற்கு, நம் ஒவ்வொருவரின் சிந்தனைகள், செயல்பாடுகள், வெளிப்பாடுகள் அனைத்தும் கடவுளின் நாமம் மகிமைப்பட சாட்சியாய் அமைய வேண்டும். தியாக உணர்வோடு திருச்சபைகளில் உறவுகளைக் காக்க அழைக்கப்படுகிறோம்.

## 2. அன்பில் இணையும் திருச்சபை

தூய பவுலார் எபேசு திருச்சபை மக்களுக்குக் கிறிஸ்துவில் அழைக்கப்பட்ட ஒன்றிப்பை வலியுறுத்துகிறார் (எபே. 4 : 1-6). கடவுளின் ஆச்சரியமான (mrstery) செயல்களினால் ஏற்பட்ட வாழ்வுகளையும், நன்மைகளையும் நினைவூட்டுகிறார். மேலும், அழைக்கப்பட்ட அழைப்பின் நோக்கங்களை நினைவுபடுத்துகிறார். கிறிஸ்துவின் திருப்பெயர் எல்லா இடங்களிலும் பரவ வேண்டுமென்றால் நீங்கள் பெற்றுகொண்ட வாழ்வு உங்களிடமிருந்து வெளிப்படும் தாழ்மை, பொறுமை, இரக்க குணம் போன்ற நற்குணங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் உங்கள் சாட்சியின் வாழ்வில் வெளிப்பட வேண்டும் (எபே. 4 : 2, 3). மேலும், உங்களிடமிருந்து வெளிப்படும் அன்பு கிறிஸ்து உங்கள் மீது கொண்ட அன்பாயிருக்கவேண்டும் (Unconditional Love) என்றும் குறிப்பிடுகிறார்.

எபேசு திருச்சபையில் காணப்படும் கோட்பாடுகள் ஒரே நம்பிக்கையை உருவாக்கின்ற போதனையாக, அமைய வேண்டும். அவ் ஐக்கியத்தை எபேசியர் 4-ஆம் ஆதிகாரத்தின் 4, 5, 6 ஆகிய வசனங்களில் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அவைகள் ஒரே சரீரம் - கிறிஸ்துவின் சரீரமாகவும் (There is one body - Christ's body), ஒரே ஆவி - தூய ஆவி எனவும் (There is one Spirt - The Holy Spirit), ஒரே நம்பிக்கை - நிலைவாழ்வு எனவும் (There is one hope - Eternal life), ஒரே ஆண்டவர் - கிறிஸ்து எனவும் (There is one Lord - The Lord Jesus), ஒரே விசுவாசம் - கிறிஸ்தவ விசுவாசம் எனவும் (There is one faith - The Christian faith), , ஒரே திருமுழுக்கு - கிறிஸ்துவோடு இணைத்து கொள்ளுதல் எனவும் (There is one baptism -

the baptism of the spirit into Christ's body) தெளிவாகக் குறிப்பிடுகிறார். தென்னிந்தியத் திருச்சபை உருவானதற்கான நோக்கத்தை எப்போதும் மனதில் நிலைநிறுத்தி செயல்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக (கொலோ. 3 : 12-14) அன்பினால் ஒருவருக்கொருவர் இணைகின்ற சமூகமாக திருச்சபை காணப்பட வேண்டும் (Perfect Harmony). தென்னிந்தியத் திருச்சபையில் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட அறிவுக்கெட்டாத அந்த அன்பு எல்லா இருதயங்களிலும் நிலைத்திருக்க வேண்டும்.

## 3. ஐக்கியத்தின் உண்மையை வலியுறுத்தும் திருச்சபை

யோவான் நூல் ஆசிரியர் இயேசுவின் இறைவேண்டலைக் குறிப்பிடுகிறார் (யோவா. 17 : 20-26). காரணம் சீடர்கள் தனக்குத் தந்தையோடு அமைந்திருக்கும் உறவினைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இவ்வேண்டலைத் தலைமை குரு இறைவேண்டல் என குறிப்பிடுகின்றார் (High priestly prayer). இயேசு தமது பாடுமரணங்கள் குறித்து சொன்னபோது சீடர்கள் உதவியற்றவர்களைப் போல கலங்கியிருந்தார்கள். எனவே சீடர்களை ஆற்றல்படுத்தவும், பெலவீனத்தைப் போக்கவும், தொடர் பணியில் அவர்களை ஈடுபடுத்தவும் தந்தையோடு உள்ள உறவை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். தந்தை தன் மீது ஏற்படுத்தின பணியைத் துணிச்சலோடு நிறைவு செய்ய ஆயத்தமாய் இருக்கின்ற ஒப்படைப்பையும் அதற்குத் துணையாக ஒன்றிணைக்கின்ற ஆவியரின் வழிகாட்டுதலையும் வெளிப்படுத்துகிறார். ஆகவே, என்னோடு துணை நின்ற தந்தை உங்களோடும் உங்கள் மீது சுமத்தபடப் போகும் தொடர்ப் பணியை செய்ய ஆற்றல் வழங்குவார். எனவே நீங்கள் தொடர்ந்து அதற்காக ஆயத்தப்படுங்கள் என இயேசு கூறினார் (யோ. 17 : 21, 22).

இம்மன்றாட்டின் அடிப்படையில் தென்னிந்தியத் திருச்சபை ஒருமைப்பட வேண்டும். இரண்டு மூன்று பேர் ஒருமனமுள்ளவர்களாக ஒன்றியிணையும்போது அவர்கள் நடுவில் இறைமகன் வாசம் பண்ணுகிறார். எதிர்கால தலைமுறை கடவுளோடு நல் உறவில் சீர்பொருந்த வேண்டும். நம்முன் காணப்படும் பிளவுகளைக் களைந்து அன்பு, மனதுருக்கம் மற்றும் சமாதானத்தின் நற்செய்திப் பணியினைச் செய்து திருச்சபையை கிறிஸ்துவில் இணைத்து செயல்படுவோம்.

| 𝄞 | ஞா. 433 | ஞா. 347 |
|---|---|---|
| | கீர். 19 | கீர். 408 |

அருள்திரு. R. **இராஜ பக்த சிங்**

**01-10-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினெட்டாம் ஞாயிறு & இறைமக்கள் ஞாயிறு

# இறைமக்களின் சான்று

## Witness of the People of God

| | |
|---|---|
| தானி. 3 : 12-30 | திப. 18 : 24-28 |
| திபா. 15 | லூக். 10 : 1-20 |



ஏனெனில், அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, 'இயேசுவே மெசியா' என மறைநூல்களின் மூலம் எடுத்துக்காட்டினார் (திப. 18 : 28).

இறைமக்கள் என்பது இஸ்ரயேலர்கள் மட்டுமல்லாமல் கடவுளால் படைக்கப்பட்ட அனைத்து மக்களையும் உள்ளடக்கிய வார்த்தையாகும். எபிரேயத் திருமறையில் இஸ்ரயேலரைக் குறிக்கவும், கிறிஸ்தவத்தில் கிறிஸ்தவர்களைக் குறிப்பிடவும் இறைமக்கள் என்ற சொல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடவுள் இஸ்ரயேலர்களை "என் மக்கள்" (வி.ப. 3 : 7, 10; 6 : 7, எரே. 11 : 4) என்று பழைய ஏற்பாட்டிலும், "கடவுளின் மக்கள்" (எபி. 4 : 9; 11 : 25) என்றும் பல இடங்களில் குறிப்பிட்டு அழைக்கிறதைக் காணலாம். இதற்குக் காரணம் இஸ்ரயேலர், "மக்கள்" என்ற நிலைகூட கிடைக்காமல் "அடிமைகள்" என்ற நிலையில் ஒடுக்கப்பட்டபோது அவர்களுக்கும் "என் மக்கள்" என்ற அடையாளம் கொடுக்கப்பட்டது. "என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்" (வி.ப. 3 : 7, 10) என்று கடவுள் மோசேயிடம் கூறி விடுதலைக்கான அறைகூவலைக் கொடுக்கிறார்.

இஸ்ரயேலர் மட்டும்தான் இறைமக்கள் என்று கூறிவிட முடியாது. காரணம், கடவுள் அடிமைப்பட்டுக்கிடந்த இஸ்ரயேலரை மாத்திரமல்லாமல் பெலிஸ்தியரையும், அசீரியரையும் அடிமைத்தனத்திலிருந்து அழைத்து வந்திருக்கிறார் (ஆமோஸ் 9 : 7). அது மட்டுமல்லாமல் எகிப்தியரையும், அசீரியரையும் "என் மக்கள்" என்று அறிக்கையிட கடவுள் சித்தமாய் இருக்கிறார் (எசாயா 19 : 25). "இறைமக்கள்" என்ற அடையாளம் பெற்றவர்கள் இறைவனுக்குச் சான்றாக வாழ அழைக்கப்பட்டவர்கள். இறைமக்களின் சான்றுள்ள

வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று திருப்பாடல் 15-இல் பார்க்கும் போது மாசற்றவராய் நடப்பவரும், உளமார உண்மை பேசுபவரும், நாவினால் புறங்கூறாதவரும் தோழருக்குத் தீங்கிழைக்காதவரும், அடுத்தவரைப் பழித்துரையாதவரும், துன்பம் வந்தாலும் வாக்குறுதியைக் காப்பவரும் பணத்தை வட்டிக்குக் கொடாதவரும், கையூட்டு வாங்காமலும் இருப்பவரே என்று சொல்லப்பட்டுள்ளது (தி.பா. 15 : 2-5).

கடவுள் இறைமக்களைக் குறிப்பிட்டு சான்று பகர்ந்த பல உதாரணங்கள் திருமறையில் சொல்லப்பட்டுள்ளன. உதாரணமாக,

“தன் காலத்தவருள் நோவா நேர்மையாளராகவும், குற்றமற்றவராகவும் இருந்தார்” (தொநூ. 6 : 9) எனவும்,

“பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்தமிகு மானிடராய்த் திகழ்ந்தார்” (எண். 12 : 3) எனவும்,

“யோபு.... மாசற்றவரும், நேர்மையானவருமாய் இருந்தார்” (யோபு 1 : 1) எனவும்,

நாத்தான்வேலைக் குறித்து, “இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” (யோவான் 1 : 47) எனவும்,

சகேயுவைப் பார்த்து “இவரும் ஆபிரகாமின் மகனே” (லூக். 19 : 9) எனவும் கடவுளால் சான்று பகரப்பட்டதை அறிய முடிகிறது.

நாம் வாழும் உலகில் இறைமக்கள் என்று அழைக்கப்படும் நம்முடைய சான்று எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதற்கு கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகள் வழியாக மூன்று சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

### 1. விதியென்று வீழ்வதல்ல; விசுவாச வாழ்வில் சான்று பகர

(தானி. 3 : 12-30)

விதி என்றால் முன்னரே நியமிக்கப்பட்ட நியதி. அதாவது எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறதோ அவையெல்லாம் முன்னரே குறிக்கப்பட்டபடிதான் நடக்கும். அதனை மாற்ற யாராலும் முடியாது. உதாரணமாக கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டும் என்பது பழங்காலத்தில் இருந்த மூடநம்பிக்கை. இன்றும் இறைமக்கள்

தாம் வேண்டிக்கொள்வது நடந்தால் அதனைக் கடவுளின் அருள் என்கிறார்கள். ஆனால், நினைப்பது நடக்காமல் போனால் “தலைவிதி” என்று புலம்புகிறதையும் காணலாம். இறைமக்கள் என்பவர்கள் விதி என்று நினைத்து விழுந்து போகிறவர்களாய் அல்ல, மாறாகக் கடவுள் காட்டும் பாதையில் பயணிக்க விசுவாச வாழ்வில் சான்றுகளாய் இருக்க அழைக்கப்பட்டவர்கள்.

பாபிலோனுக்கு அடிமைப்பட்டுப் போன தானியேல், அனனியா மீஷாவேல், அசரியா என்பவர்கள் துன்பத்தைச் சந்தித்த தருணங்களில் விதியின் வலையில் விழுந்து போகாமல் விசுவாச வாழ்வில் சான்றாக இருந்தவர்கள். நேபுகாத்நேச்சரால் பெயர்கள்தான் மாற்ற முடிந்ததே தவிர அவர்களின் கடவுள் நம்பிக்கையையும், விசுவாச வாழ்வையும் மாற்ற முடியவில்லை. பாபிலோன் தேவர்களுக்கு ஆராதனை செய்யவும், அரசரின் பொற்சிலையை வணங்கவும் மறுத்தனர். “நீங்கள் தாழ விழுந்து நான் செய்து வைத்துள்ள சிலையைப் பணிந்து தொழத் தயாராயிருக்கிறீர்களா? தொழாவிட்டால் அந்த நொடியிலேயே எரிகிற தீச்சூளையில் தூக்கிப் போடப்படுவீர்கள்” (தானி. 3 : 15) என்று எச்சரித்த போது இது நம் விதி என நினைத்து விசுவாச வாழ்வை விட்டுவிடவில்லை. “எங்கள் கடவுள்... எங்களை மீட்க வல்லவர்... அப்படியே அவருக்கு மனமில்லாமல் போனாலும்... உம்முடைய தெய்வங்களை வழிபட மாட்டோம்” (தானி. 3 : 16-18) என்றனர். இந்த விசுவாச வாழ்க்கைதான் எரிகிற தீச்சூளையில் இருந்து அவர்களை தப்புவித்ததுமல்லாமல், “மீட்கின்ற ஆற்றல் படைத்த கடவுள் வேறொருவர் இல்லை” (தானி. 3 : 29) என்று நேபுகாத்நேச்சாரை சான்று பகரச் செய்தது.

ஆபிரகாம் விதி என்று நினையாமல் விசுவாசத்தோடு ஈசாக்கைப் பலியிட கொண்டு சென்றார் (தொநூ. 22 : 1-19). யோசேப்பு விதியென்று நினையாமல் விசுவாசத்தோடு சிறையிலும் உண்மையாய் இருந்தார். யூத மக்கள் அழிவது விதியென்று எஸ்தர் நினையாமல் விசுவாசத்தோடு உபவாசம் செய்து துணிவோடு அரசரை சந்தித்தார் (எஸ்தர் 8 : 3). வறுமையில் பிறந்தது தன் விதி என்று வீழ்ந்து போகாமல் தன் விசுவாச முயற்சியில் அமெரிக்காவின் அதிபராக உயர்த்தப்பட்டவர் ஆபிரகாம் லிங்கன். இன்று நாமும் நமக்கு வரும் தடைகளை விதியென்று நினைத்து விழுந்து போகாமல் விசுவாசத்தோடு முயற்சி செய்தால் மேன்மையைக் காணமுடியும். நீதிமான் ஏழு தரம் விழுந்தாலும் எழுந்திருப்பான் (நீமொ. 24 : 1).

**2. மனமேட்டிமையில் மாழ்வதல்ல, மனத்தாழ்மையில் சான்று பகர** (லூக்கா 10 : 1-20)

இறைமக்கள் மனமேட்டிமையோடு வாழ்ந்து அழிந்து போகிறவர்களாய் அல்லாமல் மனத்தாழ்மையோடு வாழ்ந்து சான்று பகர வேண்டியவர்கள். Arthur Wellesley (First Duke of Wellington) என்பவர் 19-ம் நூற்றாண்டின் மிக பிரபலமான ஒரு மனிதர். 1815-ஆம் ஆண்டு Waterloo போரில் நெப்போலியன் மற்றும் பிரெஞ்சு இராணுவத்தைத் தோற்கடித்த போது British படையின் தளபதியாக இருந்தவர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர் வழக்கமாகத் தனது உள்ளூர் தேவாலயத்தில் திருவிருந்தில் பங்கு பெறுவார். அப்போது யாரும் அவர் அருகில் செல்வதில்லை. ஒருநாள் அவர் திருவிருந்தில் பங்குபெறச் சென்றபோது ஒரு சாதாரண வயதான மனிதர் அவருக்கு முந்தி அவரருகில் சென்று மண்டியிட்டார். இந்தச் செயல் தேவாலயத்தில் பதற்றத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியது. உடனே ஆலயப் பணியாள் ஒருவர் வேகமாக வந்து அந்த முதியவரின் தோளில் தட்டி விலகிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினார். உடனே அவர் எழும்பிப் போக முயன்றபோது, இராணுவத் தளபதி அந்த முதியவரின் கரத்தைப் பிடித்துக்கொண்டு "Do not move ... we are all equal here" என்று மனத்தாழ்மையோடு செயல்பட்ட செயல் ஆலயத்தில் இருந்த அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

"அழிவுக்கு முந்தையது அகந்தை; வீழ்ச்சிக்கு முந்தையது வீண் பெருமை" (நீதி. 16 : 18) என்னும் இறைவாக்கு அகந்தையும், வீண் பெருமையும் இல்லாமல் மனத்தாழ்மையோடு வாழ வலியுறுத்துகிறது. இயேசுகிறிஸ்து அருட்பணிக்காக 72 பேரை அனுப்பும்போது "ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்" (லூக். 10 : 3) என்றார். இரண்டு விதமான குணாதிசயங்களை "ஆடு, ஓநாய்" என்னும் மிருகங்களோடு ஒப்பிடுகிறார். இறைமக்கள் ஆட்டைப் போல சாந்தமாகவும், மனத்தாழ்மையாகவும் இருக்க வேண்டியவர்கள் என்பதை உணர்த்துகிறார். சீடர்கள் இல்லங்களில் மக்களுக்கு சமாதான வாழ்த்து சொல்ல வேண்டியவர்கள். மக்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் குணம் மாறக் கூடாது. பிசாசுகளைத் துரத்தும்போது "தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பதைப் பற்றி மகிழ வேண்டாம்" (லூக். 10 : 20) என்றார். மனமேட்டிமையை அல்ல இயேசு மனத்தாழ்மையைத்தான் விரும்புகிறார். மனமேட்டிமையோடு

வேண்டிக்கொண்ட பரிசேயரின் ஜெபத்தை விட மனத்தாழ்மையோடு வேண்டிக்கொண்ட ஆயக்காரரின் ஜெபம்தான் கேட்கப்பட்டது. பணிவிடையில் மனமேட்டிமையில்லாமல் மனத்தாழ்மையுடன் சேவைபுரிந்த அன்னை தெரசாதான் சான்றானார். இறைமக்களிடம் இறைவன் விரும்புவது: "நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாக மழ்ச்சியோடு நடந்துகொள்வதையும் தவிர வேறே எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்" (மீக்கா 6 : 8).

**3. உபத்திரவத்தில் ஒதுங்குவதல்ல உதவி செய்வதில் சான்று பகர** (திப. 18 : 24-28).

"நல்ல நண்பனை ஆபத்தில் அறிந்து கொள்" என்று ஒரு பழமொழி உண்டு. ஆபத்துக் காலத்தில் யார் உடன் இருக்கிறார்களோ அவர்கள்தான் நல்ல நண்பர்கள். "இறைமக்கள்" என்பவர்கள் உபத்திரவத்தில் ஒதுங்கிப் போகிறவர்கள் அல்லர்; மாறாக உதவி செய்து சான்றாய் நிற்பவர்கள். "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்பது குறள் சொல்லும் உண்மை. ஏற்றகாலத்தில் செய்த உதவி சிறிதானாலும், அதன் நன்மையை அறிந்தால் அது உலகை விடப் பெரிது என்று ஆதித் திருச்சபை உபத்திரவப்பட்ட காலத்தில் விசுவாசிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தவர் தான் அப்பொல்லோ என்பவர்.

அப்பொல்லோ என்ற பெயரின் பொருள் "அழிக்கிறவர்" or உபத்திரப்படுத்துகிறவர். மனிதர்களின் குணாதிசயங்கள் பல நேரங்களில் அவர்களின் பெயரை வைத்தே அடையாளப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக "மூடர்" என்னும் பொருளையுடைய பெயரைக் கொண்ட நாபால் அவர் பெயருக்கேற்றபடியே இருந்தார் (1 சாமு. 25 : 25). "இளைப்பாறுதல்" என்னும் பொருளையுடைய பெயரைக் கொண்ட நோவா பெருவெள்ளத்திலும் பேழைக்குள் இளைப்பாறுதல் பெற்றார் (தொநூ. 7 : 6). ஆனால் "அழிக்கிறவர்" என்னும் பெயரைக் கொண்ட அப்பொல்லோ உதவி செய்கிறவராக இருக்கிறார். அலெக்சாந்திரியா பட்டணத்தில் பிறந்து யூத முறைப்படி சிறந்த கல்வி அறிவிலேயும், சமய நம்பிக்கையிலும் வளர்க்கப்பட்டவர் (திப. 18 : 24). யோவான் கொடுத்த திருமுழுக்கை அறிந்தவர். ஆனால் இயேசுவைப் பற்றிய செய்தியைத் தெளிவாகப் போதித்தவர் (வ. 25). இயேசுவை மேசியாவாக

ஏற்றுக்கொள்ளாத யூதர்களிடம் "இயேசுவே மெசியா" என்று வாதாடியவர். ஒடுக்கப்பட்ட ஆரம்ப கால விசுவாசிகளுக்கு உதவியாக இருந்தவர் (வ. 28). திருத்தூதரான பவுலால் ஆரம்பிக்கப்பட்ட சபைகள் அப்பொல்லோ என்பவரால் வளர்க்கப்பட்டது என்பதற்குப் பவுலே சான்று கொடுக்கிறார். "நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார்" (1 கொரி. 3 : 6).

அமைதியை ஏற்படுத்துபவர் கடவுளின் மக்கள் என்று இயேசு மலைப்பொழிவில் போதித்தார் (மத். 5 : 9). அமைதியற்ற உலகில் அமைதியை ஏற்படுத்தும் கடவுளின் மக்கள் விசுவாச வாழ்விலும், மனத்தாழ்மையிலும், உதவி செய்வதிலும் சான்றாய் வெளிப்பட வேண்டும். ஒருமுறை E. ஸ்டேன்லி ஜோண்ஸ் என்ற மிஷனரி காந்தியடிகளைச் சந்தித்து நீங்கள் ஏன் கிறிஸ்தவராய் மாறக்கூடாது என்று கேட்ட போது, காந்தி சொன்ன பதில், " I love Chist. It's just that so many of you Christians are so unlike Christ.... If Christians would really live according to the teachings of Christ, as found in the Bible, all of India would be Christian today" (Catholic Weekly, 2012). இன்று வாழ்வில் ஆவியில் நிறைந்திருக்கிறேன் என்பதை விட ஆவியின் கனியால் நிறைந்திருக்கிறேன் என ஆவியாரை வெளிப்படுத்தும் சான்றுகளாய் மாறுவோம்.

அருள்திரு. C. **ஜெபக்குமார்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 16 | ஞா. | 449 |
| | கீர். | 10 | கீர். | 388 |

**08-10 -2023**

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தொன்பதாம் ஞாயிறு & மாற்றுத்திறனுடையோர் ஞாயிறு

# மாற்றுத்திறனுடையோர் : வாழ்வின் புனிதம்

## Persons with Disability : Sanctity of Life

விப. 4 : 10-17 | 2 கொரி. 12 : 1-10
திபா. 37 | யோவா. 5 : 1-9



இயேசு அவரிடம், எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும் என்றார் (யோவா. 5 : 8)

உடல் குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் உறுதியுடன் இருக்கும் மக்களை மாற்றுத்திறனாளிகள் என நாம் அழைக்கிறோம். ஊனம் என்பது ஒருவரை மற்றவர்களுடன் ஒப்பிடும்போது இயலாத்தன்மை இருப்பதைக் குறிக்கும். இது உடல் குறைபாடு அறிதிறன் அல்லது அறிவுத் திறன் குறைபாடு, உளவியல் குறைபாடு என்கின்றனர். பிற நோய்கள் தொடர்பான குறைபாடு என்பவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றன. மாற்றுத்திறனாளிகளிலே பல வகைகள் உண்டு. மரபணுவினால் பிறப்பிலேயே ஏற்படும் மாற்றங்கள், தாயின் கருவில் இருக்கும் பொழுதோ அல்லது பிறந்த உடனேயே ஏற்படும் நோய்கள் மூலம் ஏற்படும் மாற்றங்கள், நோயினாலோ அல்லது விபத்திலோ ஏற்பட்டது என பலவகை. மனவளர்ச்சி குறைபாடு குறித்து 1838-ஆம் ஆண்டு எங்கிரால் என்பவர், மனவளர்ச்சிக் குறை என்பது ஒரு நோயல்ல; மாறாக வளர்ச்சி நின்று விடும் நிலை என்று குறிப்பிட்டார். டிரட்கோல்ட் என்பவர் "முழுமையான அல்லது சாதாரண வளர்ச்சி அடையத் தவறிய மனதின் நிலையே மனவளர்ச்சிக்குறை" என்று கூறினார். மாற்றுத் திறனாளிகளின் நிலை இவ்வாறிருக்க விவிலியப் பாடங்கள் மாற்றுத் திறனாளிகளைக் குறித்துக் கற்றுத்தரும் உண்மைகளை நாம் தியானிப்போம்.

**1. மாற்றுத்திறனுடையோரைத் தலைமைத்துவப் பணிக்குப் பயன்படுத்தும் கடவுள்** (விப. 4 : 10-17)

கடவுள் இஸ்ரயேல் மக்களை வழி நடத்துவதற்காக மோசேயைத் தலைவராகத் தெரிந்தெடுக்கிறார். ஆனால் மோசே தலைமைத்துவப் பணியை ஏற்க மறுக்கிறார். மோசே கடவுளிடம் பார்வோனிடம்

செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்? என்றார். இது முதலாம் மறுப்பு (விப. 3 : 11). இரண்டாவது மறுப்பு, இதோ இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, அவர் பெயர் என்ன? என்று அவர்கள் என்னை வினவினால் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன் என்று கேட்டார் (3:13,14). மூன்றாவது மறுப்பு, அவர்கள் என்னை நம்பமாட்டார்கள் (4:1-5). நான்காவது மறுப்பு, மோசே ஆண்டவரிடம் : ஐயோ ஆண்டவரே நீர் உமது அடியானிடம் பேசுவதற்கு முன்போ, பேசிய பின்போ, நாவன்மை அற்றவன் நான். ஏனெனில் வாய் திக்கும்; நாவு குழறும் என்றார் (4 : 10).

ஆனால், கடவுள் இவ்வளவு மறுப்பிற்கும் பின் மோசேயைத் தலைமைப் பணிக்குத் தெரிந்தெடுத்தார். ஆண்டவர் மோசேயிடம், இப்போதே போ, நானே உன் நாவில் இருப்பேன்; நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன் என்றார். நான் உன்வாயிலும் ஆரோனின் வாயிலும் இருந்து கொண்டு நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு அறிவுறுத்துவேன் என்று கூறினார் (4 : 12, 15).

மோசே தன் இயலாமையைச் சொன்னபோதும் கடவுள் மோசேயைத் தலைமைத்துவப் பணிக்குத் தேர்ந்தெடுக்காமல் விடவில்லை. கடவுள் நமக்குத் தருகின்ற வாய்ப்பைப் பயன்படுத்திப் பயனுள்ள பாத்திரமாக நம்மை வனைய கடவுளிடம் நம்மை ஒப்படைப்போம்.

**2. மாற்றுத்திறனுடையோரை நற்செய்திப் பணிக்குப் பயன்படுத்தும் கடவுள்**
(2 கொரி. 12 : 1-10)

இன்றைய இரண்டாவது திருமறைப்பாடத்தில் பவுல் அடியார், தன்னில் பல பெருமைகளைக் கொண்டிருந்தும் தன்னைப் பெருமையாக பேசாமல் கடவுளிடம் தன்னைத் தாழ்த்திப் பேசுகிறார். அதே வேளையில் ஆண்டவர் பவுல் அடியாரைத் தம் நற்செய்திப் பணிக்கு அழைக்கிறார் (திப. 9 : 1-19). ஆனால் பவுலின் உடலில் பெருங்குறை ஒன்று தைத்த முள் போல் அவரை வருத்திக் கொண்டே இருந்தது. இந்த முள்ளின் அனுபவம் அவர் ஆண்டவரால் சந்திக்கப்படுவதற்கு முன்னரோ பின்னரோ இருந்திருக்க வேண்டும். அதை என்னிடமிருந்து நீக்கி விடுமாறு மூன்று முறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன். ஆனால் அவர் என்னிடம் என் அருள் உனக்குப்

போதும், வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றார். முள் என்பது 1. கிட்டப்பார்வைக் குறைபாடு, 2. மலேரியா காய்ச்சல், 3. வலிப்பு நோய் இவைகளில் ஏதாகிலுமொன்றாக இருக்கக்கூடும் (கலா. 4 : 13-15). மேலும் முள் என்பது ஒரு கடுமைமிக்க அல்லது ஆவிக்குரிய சோதனையைக் குறிக்கும் (எண். 33 : 55).

திருத்தூதுவர் பவுல் தனக்கு முள் இருந்த போதிலும் சிறப்பாக நற்செய்திப் பணியை நிறைவேற்றினார். அவரது பணியால் திருத்தூதுப் பணியில் திறமை வாய்ந்தவராக விளங்கி பல திருமுகங்களைத் திருச்சபைக்கு எழுதி நற்செய்திப்பணி எங்கும் பரம்பி கிறிஸ்து மகிமைப்பட கருவியாகச் செயல்பட்டார். 2 கொரி. 11 : 16-28-இல் நற்செய்திப் பணியில் தான் சந்தித்த துன்பங்களைப் பட்டியலிட்டு, 28-ஆம் வசனத்தில் இவை தவிர எல்லாத் திருச்சபைகளையும் பற்றிய கவலை எனக்கு அன்றாடச் சுமையாயிருந்தது என்று கூறினார். தனக்கு முள் என்ற குறை இருந்தாலும், என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை (அருள்) பெற்றவனாக இருக்கிறேன் என்றார் (2 கொரி. 12 : 10). திருத்தூதுவர் பவுல் அடியார் தான் ஒரு பெலவீனமான மனிதன் என தன்னில் உணர்ந்தாலும் கடவுள் அவரது குறைகளை எண்ணிப்பாராது தம் நற்செய்திப் பணிக்காக அவரைப் பயன்படுத்தினார். நாமும் திருத்தூதுவர் பவுலடியாரைப்போல கடவுளுடைய கரங்களில் நம்மை ஒப்படைப்போம்! கடவுள் நம்மையும் பயனுள்ள கருவியாகப் பயன்படுத்துவார்.

### 3. மாற்றுத்திறனுடையோரைச் சமூகப்பணிக்குப் பயன்படுத்தும் கடவுள்
(யோவா. 5 : 1-9)

யோவா. 5 : 1-9 வரையுள்ள பகுதியில், யூதர்களின் திருவிழா ஒன்றைக் குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றதைக் காணலாம். இது அனேகமாக யூதர்களின் பாஸ்காத் திருவிழாவாக இருக்கக்கூடும். (2 : 13; 6:4; 11 :55). எருசலேமில் ஆட்டு வாயிலுக்கு அருகில் ஐந்து மண்டபங்கள் கொண்ட குளம் ஒன்று உண்டு. எபிரேய மொழியில் பெத்சதா என்பது அதன் பெயர். இதன் பொருள் கருணையின் வீடு என்பதாகும். இம்மண்டபங்களில் உடல்நலமற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், முடக்குவாதமுற்றோர் ஆகியோர் திரளாய்ப் படுத்துக் கிடப்பர். முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்த

ஓர் ஏழை அங்கு இருந்தார். ஆண்டவரின் தூதர் தண்ணீரைக் கலக்கும்போது இவரைக் கொண்டு விட யாருமில்லாத அளவிற்கு அவர் கைவிடப்பட்ட நிலையிலுள்ளவராயிருந்தார். படுக்கை என்னும் வார்த்தைக்குக் கிரபட்டாஸ் என்பது கிரேக்க மூலம். இது ஏழைகளின் படுக்கையைக் குறிக்கும். அம்மனிதன் இயேசு கிறிஸ்துவின் சொற்படி செய்தார். குணம் பெற்றார். நலமாக்கப்பட்ட பின் பிறரின் நலன்களை முன்னிட்டு சமூகப் பணியாகத் தனக்கு நடந்ததை யூதர்களுக்கு அறிவித்தார் (5:15).

தாமஸ் ஆல்வா எடிசன் சிறு பருவத்தில் மிகவும் குறும்புத்தனமாக இருப்பார். இவருக்குக் காது கேட்கும் திறன் குறைபாடு இருந்தது. ஒருமுறை பள்ளி ஆசிரியர் உன்னுடைய அம்மாவை நாளைக்குப் பள்ளிக்கு அழைத்து வா என்று கூறினார். மறுநாள் தாய் வந்த நேரத்தில் ஆசிரியர் ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தார். அக்கடிதத்தில், இவன் மனவளர்ச்சி குன்றியவன் என்று எழுதப்பட்டிருந்தது. தாமஸ் அதைக்குறித்து தன் அம்மாவிடம் கேட்டபோது நீ இந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய தகுதி இல்லையாம் வேறு பள்ளியில் படிக்க தகுதியுடைவனாய் இருக்கிறாய் என்று கூறி அக்கடிதத்தைத் தாமஸிடம் காட்டவில்லை. ஆனால் தன்னுடைய அம்மாவின் மறைவிற்குப் பின் அக்கடிதம் அவரிடம் கிடைத்தது. அதை வாசித்த அவர் தன் அம்மாவின் நல்ல உள்ளத்தைப் போற்றினார். அன்று தாயார் அவரை ஊக்கப்படுத்தினதால் இன்று உலகம் போற்றும் தாமஸாக அறியப்படுகிறார். தனது பெயரில் சாதனை அளவான 1093 கண்டுபிடிப்புகளின் காப்புரிமைகளைப் பதிவு செய்த தாமஸ், பெருமளவு கண்டுபிடிப்புகளைச் செய்தவர்களுள் ஒருவராக கருதப்படுகிறார்.

நாமும் நம் பெலவீனங்கள், இயலாமை இவைகளை நினைத்து நான் ஒரு மாற்றுத்திறனாளி எனச் சோர்ந்து போகாமல் கடவுள் என்னையும் தலைமைத்துவப் பணிக்கும், நற்செய்திப் பணிக்கும், சமூகப் பணிக்கும் பயன்படுத்துவார் என்னும் இறைநம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லுவோம்!


அருள்திரு. T. **ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 70 | ஞா. | 282 |
| | கீர். | 17 | கீர். | 319 |

**08-10-2023** ஆண்கள் ஞாயிறு

# ஆண்களும் பொறுப்பும்

| | |
|---|---|
| எஸ்றா 3 : 1-17 | திப. 9 : 16-30 |
| திபா. 147 : 1-11 | மாற். 2 : 1-12 |



"இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு....."
(மாற்கு 2 : 5)

இத்திருமறைப் பகுதியில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று குணப்படுத்துதல்; இரண்டு, மன்னிப்பு வழங்குதல். இவ்விரண்டும் மானிட வாழ்வுக்குத் தேவையானவை. இத்திருமறைப்பகுதியில் முடக்குவாதமுற்ற மனிதரைக் குணப்படுத்துகிறார் ஆண்டவர். இங்கு நான்கு பேருடைய நம்பிக்கை செயல்வடிவம் பெறுகிறது. திருவிவிலியத்தில் யாக்கோபு 2 : 17-இல் "நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னில் உயிரற்றதாயிருக்கும்". எபிரேயர் 11 : 6-இல் "நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது" என்கிறார். எனவே இந்த நான்கு பேரின் நம்பிக்கை எப்படி செயல்வடிவம் ஆனது? என்பதனைக் காண்போம்.

### 1. இரக்கம் காட்டுவதில் வெளிப்படும் நம்பிக்கை

இந்த நான்கு நண்பர்களும் ஒருவருக்கொருவர் பேசி எப்படியும் இந்த மனிதனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று இரக்கம் கொள்கின்றனர்; அனுதாபம் கொள்கின்றனர். கொலோசேயர் 3 : 12-இல் "நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்புக்குரிய இறைமக்கள், எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்" என்கிறார். எனவே இறைஇயேசுவில் கண்ட இரக்கக்குணம் இவர்களில் வெளிப்பட்டது.

### 2. நம்பிக்கையில் தொடர்தல் :

நான்கு பேரும் முடக்குவாதமுற்றவரை இயேசுவின் முன்

கொண்டுவர வகை தேடினர் (லூக்கா. 5 : 18). மக்கள் திரள் காரணமாக உள்ளே கொண்டு போகமுடியவில்லை. அவர்கள் மேற்கூரையைப் பிரித்து அவரைக் கட்டிலோடு கொண்டு செல்வதென்றால் கடினம். ஆனாலும் அவர்கள் நம்பிக்கை கடினங்களைத் தாண்டி தொடரும் நம்பிக்கையாய் இருந்தது. நம்பிக்கையில் கடினங்கள் வந்தாலும் தொடரும் நம்பிக்கையாய் இருத்தல் வேண்டும்.

### 3. படைப்பூக்கத்தோடு கூடிய நம்பிக்கை :

மாற்கு 2 : 4-ஆம் வசனத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததினால் இயேசுநாதரிடம் கொண்டு வரமுடியவில்லை. எனவே மேற்கூரையைப் பிரித்து, திறப்பாக்கி முடக்குவாதமுற்றோரைக் கட்டிலோடு கீழே இறக்கினர். ஒரு வழி அடையும் போது மறுவழியைத் தேடினர். படைப்பூக்கம் (Creative) சார்ந்து சிந்தித்தனர். நம்பிக்கை செயல்வடிவமாக வெளிப்பட வேண்டும். இறைப்பணியில் இறைமக்களைச் சந்தித்து, வழியைச் சீர்படுத்தி இறைஇயேசுவுக்கு நேராய் வழிநடத்தப்பட வேண்டும். முடங்கிக்கிடக்கும் இறைப்பணியாய் இல்லாமல், சாக்குபோக்கு சொல்லும் இறைப்பணியாய் அல்லாமல், செயல்வடிவம் பெற்ற இறைப்பணியாய் இருத்தல் வேண்டும்.

### 4. தைரியமான நம்பிக்கை :

வ. 4-இல் "..... மேல் வீட்டின் கூரையைப் பிரித்து, திறப்பாக்கி..." வீட்டின் உரிமையாளரிடம் அனுமதி பெற்றதாக குறிப்பிடவில்லை. ஆனால் தைரியத்தோடு கூரையை உடைக்கின்றனர். இவர்கள் நினைத்திருக்கலாம் முடக்குவாதமுற்றோரை இயேசு கிறிஸ்துதான் குணமாக்கமுடியும். மேற்கூரையை மனிதன் சரி செய்யலாம். வாய்ப்பு எப்பொழுதும் வராது. வாய்ப்பு வரும்போது தைரியமாகச் செயல்பட்டனர். சுமந்து, உடைத்து, கடினங்களை ஏற்றுக்கொண்டு தைரியமாகச் செயல்பட்டனர். இறைப்பணியில் தைரியம் மிகுந்த வாழ்வு தேவை.

### 5. தியாகம் சார்ந்த நம்பிக்கை :

நான்கு பேரும் முடக்குவாதமுற்றோரைக் குணப்படுத்த தங்கள் நேரத்தை செலவழித்தனர். சுமந்து தங்கள் பலனை கொடுத்தனர். கூரையை மீண்டும் சரிசெய்ய தங்கள் பணத்தை, உழைப்பைக் கொடுத்திருக்கலாம். இவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு குணப்படுத்துகின்றார். நான்கு பேரின் தியாகம் முடக்குவாதமுற்றோரை

குணப்படுத்தியது. இறைப்பணி செய்ய உழைப்பு, பணம், நேரத்தைக் கொடுக்கவேண்டும். இன்று கடினங்களை ஏற்றுக்கொள்ளாத இறைப்பணியைத் தேடுகின்றனர். இறைப்பணி என்பது "மலர்களால் ஆன பஞ்சு மெத்தையல்ல, மாறாக முட்களால் ஆன படுக்கை." எனவே தியாகம் சார்ந்த திருப்பணி செய்ய வேண்டும்.

**6. ஒன்றுபட்ட நம்பிக்கை :**

நான்கு பேரின் ஒன்றுபட்ட நம்பிக்கை முடக்குவாதமுற்றோரைக் குணப்படுத்த முடிந்தது. இறைப்பணி என்பது ஒருவரால் மட்டுமல்ல, ஒன்றுபட்டு செய்கின்ற போது பெரும் நன்மைகளை நாம் காணமுடியும். வ. 5 "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். மகனே என்று அழைப்பதற்கு காரணம் ஒன்றுபட்ட நம்பிக்கை. முடக்குவாத முற்றோரையும் இறைநம்பிக்கையில் சேரத் தூண்டியது. வ. 12-இல் "கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்." எதிர்மறையாய் இருந்த மக்களும் இறைஇயேசுவின் வல்ல செயலைப் பார்த்து புகழ்கின்றனர். காரணம், நான்கு பேரின் ஒன்றுபட்ட நம்பிக்கை. ஒன்றுபட்ட நம்பிக்கை நிலைவாழ்வுக்கு நேராய் வழி நடத்துகிறது. திருச்சபை, குடும்பம், சமுதாயத்தில் ஒன்றுபட்ட நம்பிக்கை தேவை.

இறையன்பர்களே, இரக்கம் காட்டும் நம்பிக்கை, கடினங்களைத் தாண்டி தொடரும் நம்பிக்கை. ஒரு வழி அடையும் போது மறுவழியைத் தேடிய படைப்பூக்கம் சார்ந்த நம்பிக்கை, பணம், பொருள், நேரத்தை சாராமல் தைரியமான நம்பிக்கை, தியாகமான நம்பிக்கை, ஒன்றுபட்ட நம்பிக்கை என நம்பிக்கையால் முடக்குவாதமுற்றவர் குணம்பெற முடிந்தது. எனவே இவ்வுண்மைகளை நம்முடைய வாழ்வில் ஏற்று இறைநம்பிக்கையில் வளர இறைவன் துணைபுரிவாராக. ஆமென்.

திரு. S. **ஜாண் வினோ ராஜ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 1 | ஞா. | 349 |
| | கீர். | 32 | கீர். | 405 |

**15-10-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபதாம் ஞாயிறு & இளையோர் ஞாயிறு

# தற்கால உலகில் இளையோரின் ஆன்மீகம்

## Spirituality of the Youth in the Contemporary World

தொநூ. 41 : 37 - 43 பிலி. 3 : 1 - 16

தி.பா. 111 மத். 19 : 16 - 22



உம்மைவிட மதி நுட்பமும் ஞானமும் சொறிந்தவர் யாருமிலர் (தொநூ. 41 : 39)

இளையோரின் ஆன்மீகம் இன்று பல்வேறு நிலைகளில் சவால்களாக இருக்கிறது. சவால்கள் நிறைந்த உலகில் பெரும்பாலான இளைஞர்கள் சவால்களை எதிர்கொள்ள இயலாத நிலைக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிறு சதவீதம் இளைஞர்கள் மட்டும் சவால்களைத் துணிச்சலோடு எதிர்கொள்கிறார்கள். அவர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்கள்.

**அறநெறி வாழ்விற்கு சவால்** (Moral Challenge)

மாறும் உலகில் ஒழுக்கம் ஒரு சவாலாகத் தான் இருக்கிறது. நடைமுறை வாழ்க்கையில் நாகரீக, கலாச்சார மாற்றத்தால் இளையோர் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டு இளைஞர்களின் ஒழுக்க நெறிமுறைகள் கேள்விக் குறியாக மாறிக் கொண்டிருக்கிறது. திருச்சபைத் தலைவர் போப் பிரான்சில் அவர்கள் 06.01.2014-ல் The Hindu நாளிதழ் செய்தியில் If someone whois gay and is sincerely seeking God who am I to Judge? ஓரின சேர்க்கையில் ஈடுபடுவோர் உண்மையாக கடவுளை தேடினால் அவர்களை நியாயம் தீர்ப்பது எப்படி என கேள்வி எழுப்புகிறார். இன்று மேலைநாட்டில் அரசு ஓரின சேர்க்கைத் திருமணத்தை அங்கீகரிக்கிறது.

Living together (திருமணத்திற்கு முன் சேர்ந்து வாழ்வது). வன்முறை சிந்தனைகள், அநீதியற்ற செயல்கள், போதை பொருட்களுக்கு அடிமை, வேலைவாய்பின்மை போன்ற பல சவால்கள் இளம் சமூகத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது.

**உடல் வலிமைக்கு சவால்** (Muscle Power Challenge)

உடல் வலிமைக்கு சவால் என்பதை உடல் ரீதியான வலிமை என புரிந்து கொள்வதைவிட இன்று ஆட்சி சார்ந்த வலிமை என்று குறிப்பிடலாம்.

கார்பரேட் கம்பெனிகளிடம் அரசு மண்டியிட்டு அரசு நிறுவனங்களை விற்பது இளைஞர்களுக்கு பெரிய சவாலாக இருக்கிறது. ஏழ்மை, கல்விக்கு ஏற்ற வேலையில்லை, பொருளாதார ரீதியாக பல நிலைகளில் நசுக்கப்பட்டு கொண்டிருக்கும் சூழல், G.S.T. போன்ற வரி விதிப்புகள் மூலம் ஏழைகளும் பாதிக்கப்படும் சூழல், கல்வி என்பது மாநில பட்டியலில் இருந்து மத்திய அரசு பட்டியலில் சேர்க்கப்பட்டதால் ஏழை இளைஞர்களின் எதிர்காலம் சவாலாக இருக்கிறது.

குறிப்பிட்ட தனி நபர்களிடம் அரசின் வளமை குவிந்து அவர்கள் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் நிலை (அம்பானி, அதானி, டாடா முதலியவைகள்)

**அறிவுசார் நிலைக்கு சவால்** (Intellectual Challenge)

அறிவு படைத்தவர் பெரியவர் என்ற நிலைக்கு மாறிவிட்டது இந்த சமூகம். அறிவு சார்ந்து திறனை மதிப்பிட்டு வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கமாகி விட்டது. ஆனால் ஏழைகளுக்கு அறிவை கொடுக்கும் கல்வியை கொடுக்க அரசு தவறி விடுகிறது.

NEET,IIT போன்ற நுழைவு தேர்வுகளும் TNPSC, UPSC போன்ற வேலைக்கான தேர்வுகளிலும் ஆயத்தம் செய்ய ஏழைகளின் பின்னணியம் அதற்கு இயலாத சூழ்நிலை, கல்வி அறிவு தான் நாட்டின் அரசின் வேலைவாய்ப்பு ஆளுமைக்கு வர முடியும் என்ற நிலை கல்வியில் இடஒதுக்கிட்டில் சமூக நீதி மறுக்கப்படும் சூழல். இச்சூழலில் இளைஞர்களின் தற்கால சூழலை கருத்தில் கொண்டு இத்திருமறை பகுதியை சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

கடவுள் விவேகமும் ஞானமும் உள்ள இளைஞர்களை எதிர்நோக்குகிறார். இன்றைய இளைஞர்கள் அறிவுபடைத்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆங்கிலத்தில் அறிவிற்கு இரண்டு சொற்கள் பயன்படுத்தப்படுகிறது.

1. Knowledge,    2. Wisdom

இன்று இளைஞர்கள் அறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள். அறிவு என்பது

1. Knowledge is knowing / knowledge about something

அறிவின் அடிப்படையில் ஒரு காரியத்தை தெரிந்து கொள்ளுதல் அல்லது புரிந்து கொள்ளுதல்.

2. Wisdom is knowing how to apply the knowledge or how to use it in context

அந்த அறிவை எப்படி எங்கே பயன்படுத்துவது என பொருள் கொள்ளப்படுகிறது. பார்வோன் யோசேப்பை பார்த்து விவேகம் (discerning) என்ற சொல்லை பயன்படுத்துகிறார். விவேகம் என்றால் நன்மை தீமை பகுத்தறியும் தன்மை. இந்த அறிவு எங்கிருந்து வருகிறது? என்பதற்கு கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 9:10) எனத் திருமறை கூறுகிறது.

யோசேப்பு கடவுளுக்கு பயப்பட அவரது வாழ்விலிருந்த மூன்று தன்மைகளை சிந்திப்போம்.

**1. உலகு சார்ந்த சிந்தனைகளை வெறுத்தார்.** (He denied the worldly Thinking)

தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என யோசேப்பு முடிவெடுக்கிறார் (ஆதி 39:9). யோசேப்பின் சூழ்நிலை உலகு மீது நம்பிக்கை வைக்க அழைத்தது. யோசேப்பு பார்வோனின் மனைவியிடம் தொடர்பு வைத்திருந்ததால் அரசவையில் எல்லா உரிமைகளும் தற்காலிகமாக கிடைக்க வாய்ப்பு இருந்தது. யோசேப்பு தற்கால இளைஞர்கள் சிந்திப்பது போல குறுகிய வட்டத்திற்கு சிந்திக்கவில்லை. எனவே பார்வோன் யோசேப்பை பார்த்து கூறும் வார்த்தை உன்னை போல விவேகமும் ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை (ஆதி 41:39) என்பதாகும்.

இன்று அலைபேசி மற்றும் கலாச்சாரச் சீரழிவு சூழல் நம் இளைஞர்களை ஆட்கொண்டு இருக்கிறது. ஆனால் கட்டுப்பாடு அவசியம். தூய பவுலடியார் கூறும் போது எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாய் இராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன். (1கொரி 6:12)

சாதனை வீரர் என இளையோரால் போற்றப்படும் கிரிக்கெட் வீரர் மகேந்திரசிங் டோனி மது பழக்கம் உள்ள நண்பர்களோடு ஒரே அறையில் தங்கி இருந்தார். டோனிக்கு எந்த கெட்டப்பழக்கமும் கிடையாது. உலக கேளிக்கைளுக்கு இடம் கொடுக்காமல் கட்டுப்பாடோடு வாழ்ந்தார். உலக சாதனை புரிந்தார் (ஆதாரம் 15.02.2015 தினந்தந்தி).

இரயில் செல்ல தண்டவாளம், பேருந்து செல்ல ரோடு எப்பொழுது இவைகளை அனுமதிக்கும் வழியை விட்டு விலகுகிறதோ தடம் புரண்டு விபத்துக்குள்ளாகி விடுகிறது. அதுபோல் இளையோர் வாழ்வும் அமைந்திருக்கிறது. ஆனால் யோசேப்பு தடம் புரளாமல் கட்டுப்பாடோடு தன்னைக் காத்துக் கொண்டார்.

**2. சுயநலனை வெறுத்தார்**(He denied the selfshness Life without goal is bird without wings நோக்கமற்ற மனிதர் சிறகில்லாத பறவை போன்றவன். இளைஞர் யோசேப்பு சிறைச் சாலையில் இருக்கும் போது பானபாத்திரகாரனுக்கு உதவி செய்கிறார். சொப்பனத்தை விளக்கும் அறிவு இருந்தபோது என்ன கிடைக்கும் என எதிர்பார்பில்லாமல் செய்கிறார். தற்போது உள்ள பானபாத்திரகாரன் கொலை செய்யப்படுவான் என்று சொன்னால் ஆபத்து வருமே என பயப்படவில்லை (ஆதி 40:1-23)

தனக்கு ஆதாயம் கிடைக்கும் என்பதற்காக எதையும் சொல்லும் எதிர்மறையான அனுபவம் யோசேப்புக்கு இல்லை. தனது சகோதரர்கள் எகிப்திற்கு வந்தபோது அவர்களுக்கு உதவி செய்கிறான். (ஆதி 45:1-5) பழி வாங்கும் எண்ணத்தை விட்டு அவர்களுக்கு உதவி செய்யும் எண்ணத்தோடு காணப்பட்டான். இன்று இளம் சமூகம் பல சமூக காரணங்களால் பாதிக்கப்படும் போது சமூகத்திற்கு தீங்கு விளைக்கும் நிலைக்கு மாறுகிறார்கள். இதனால் பாலியல் பலாத்காரங்கள், கொலைகள் பொது சொத்துக்களைச் சேதப்படுத்துவது போன்ற செயல்களைச் செய்ய வழி நடத்தப்படுகிறார்கள். அதோடு கல்வியினால் பெற்ற அறவாழ்வை விட்டு எப்படியும் வாழலாம் என்ற நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது இளம் சமூகம். சிம்சோனை கடவுள் அழைத்த நோக்கத்தை விட்டு வழி விலகி சென்றதால் அவன் வாழ்வில் சாதனை சாதிக்காமல் மடிந்துவிட்டான். (நியாய. 14-16)

இயேசுவிடம் வந்த வாலிபன் சமூகத்தில் தன்னலத்தோடு வாழ்ந்த வாலிபனிடம் நீ பகிர்ந்து வாழ கற்றுக்கொள் என்ற உண்மையை

வெளிப்படுத்துகிறார். இந்த வாலிபன் துக்கமடைந்தவனாக போய்விட்டான் (மத் 19:22).

பகிர்ந்து வாழும் தன்மை மறைந்து தன்னலத்தோடு வாழும் நிலை ஏற்பட்டதால் சமூகத்தில் கூட்டு குடும்ப வாழ்வு சிதைந்து வருகிறது. தற்கால இளையோர் யோசேப்பின் தன்னலமற்ற பகிர்ந்து வாழும் நிலையைக் கடைபிடிக்க கடவுள் நம்மில் எதிர்நோக்குகிறார்.

**3. எப்பொழுதும் கடவுளோடு இருந்தார்** (He was always with God)

யோசேப்பின் வெற்றிக்கு அடிப்படை கடவுள் மேல் வைத்த நம்பிக்கை. பானபாத்திரக்காரன் சொப்பனம் கண்டோம் என சொன்னபோது யோசேப்பு சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? (ஆதி 40:8) என்றதோடு பார்வோன் சொப்பனம் கண்டேன் எனச் சொன்னபோது யோசேப்பு பார்வோனுக்கு பிரதியுத்திரமாக நான் அல்ல தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளி செய்வார் என்றான் (ஆதி 41:15).

தானியேல் என்ற இளைஞர் தினம் மூன்று வேளை கடவுளிடம் ஜெபித்தார். அவரது காரியம் வெற்றியாக இருந்தது. இன்றைய இளையோர் உலகம் சார்ந்து வாழாமல், தன்னலனோடு வாழாமல், பகிர்ந்து வாழ்ந்து ஆண்டவரைச் சார்ந்து வாழும்போது வெற்றி வாழ்வு வாழமுடியும்.

அருள்திரு. R. **பிரேம் செல்வசிங்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 66 | ஞா. | 444 |
| | கீர். | 385 | கீர். | 118 |

**22-10-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தொன்றாம் ஞாயிறு

# இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றல்

## Taking Risk for the Reign of God

எஸ். 8:1-17 பிலி. 2 : 25-30

திபா. 12 மத். 10:37-42



தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர் (மத்தேயு 10 : 38)

கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாடி மலை என்ற இடம், கண்டவர் வியக்கும், அண்டியவர் அதிசயிக்கும் சிறப்பைக் கொண்டது. சாஸ்திரங்களின் முறைப்படி வளர்க்கப்பட்ட, 28 வயதில் திருவிதாங்கூர் மன்னரால் அரசு அதிகாரியாக நியமிக்கப்பட்ட தேவசகாயம் பிள்ளை தலைமைத் தளபதி டிலனாய் மூலம் கிறிஸ்துவின் அன்பை அறிந்து மன உறுதியுடன் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டார். கிறிஸ்துவை மறுதலிக்கும்படி மூன்று ஆண்டுகள் கடுமையான சித்ரவதைக்கு நேராகத் தள்ளப்பட்டார். இறையரசின் அன்பினைச் சுவைத்ததால் வந்த இடர்களை ஏற்றுக்கொண்டு 1752-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ஆம் நாள் வீரர்களின் குண்டுகளுக்குப் பலியானார். சாகும் தருவாயில், “இயேசுவின் மேல் கொண்ட உன்னதமான நம்பிக்கையின் வீரனாக அவருக்காக மடிய நான் தயார்” என்று சொல்லி ஜீவனை விட்டார். இறையாளுகைக்காக வந்த இடர்களையெல்லாம் அற்பமாக எண்ணித் தன்னைத் தியாகம் செய்ததால் 15.05.2022 அன்று வாடிகனில் போப் பிரான்சிஸ் அவர்களால் தேவகாயம் பிள்ளை அவர்கள் புனிதராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

இறையாளுகையை நோக்கியப் பயணத்தில் இடர்கள் உண்டு அதனை மன நிறைவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். உலகப் புகழ்பெற்ற ஸ்காட்பெக் (Scott Peck) என்ற Psychologist “இடர்கள் நமக்குள் இருக்கும் ஆற்றலையும் ஞானத்தையும் வெளிப்படுத்த உதவுகிறது. நாம் மனதளவிலும் ஆன்மிக அளவிலும் வளர்வதற்குத் துணை செய்கிறது” என்கிறார். இயேசுநாதருடைய ஊழியத்தின்

தொடக்கமே இறையரசு. இறையரசைக் கட்டும் பணியில் ஏற்பட்ட இடர்களைக் கண்டு அஞ்சாமல் அவற்றை எதிர்கொண்டு முன்னேறிச் சென்றார். மனிதரின் வீழ்ச்சியால் இறைவனுடைய ஆளுகையின் காலம் முடிந்து இவ்வுலக ஆளுகை ஏற்பட்டது. இறையாளுகை மீண்டும் உருவாக்கவேண்டுமென தம் ஒரே குமாரனை இப்பூமிக்கு அனுப்பினார். குமாரனும் இந்தப் பூமியில் இறையாளுகையை நிறுவவேண்டுமெனத் தம்வாழ்வை நோக்கி வந்த இடர்களை எல்லாம் சிலுவையின் வழியாக ஏற்றுக்கொண்டார். நம்மையும் அந்தப் பாதையில் பயணம் செய்ய அழைக்கிறார்.

**1. இறையாளுகை வெளிப்பட நம் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டும்** (மத். 10:39b)

"என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரே அதைக்காத்துக் கொள்வர்."

இறையரசு இப்பூமியில், நம்மில் தோன்ற கிறிஸ்துவின் பொருட்டு நம் வாழ்வை தியாகம் செய்ய வேண்டும். ஆனால் உலக வாழ்வை விரும்புவோர் இறைமேன்மையை இழந்து போவர். வாழ்வில் வரும் இடர்களைத் துச்சமென எண்ணும்போது தியாக வாழ்வு தோன்றும் (எஸ். 8:3). அரசி எஸ்தர் மன்னரின் காலடிகளில் வீழ்ந்து, அழுது மன்றாடி, அவரது தயவினை நாடினார். அரசரின் செங்கோல் நீட்டப்படாத வரையிலும் அவர் அருகில் செல்ல அனுமதியில்லை. ஆனாலும் என் மக்களுக்காகச் செத்தாலும் சாகிறேன் என்ற தியாக உணர்வுடன் அரசரிடம் சென்று ஆமான் வஞ்சனையாய் யூத மக்களை அழிக்கும்படி போட்ட உத்தரவை ரத்துச்செய்ய மன்றாடினார். எஸ்தரின் இத்தியாகத்தால் யூத இனம் வாழ்வு பெற்றது.

இயேசுநாதர் தம் உயிரைத் தியாகம் செய்து வாழ்வில் வந்த இடர்களை எல்லாம் நேரடியாகச் சந்தித்து உலகம் முழுவதையும் மீட்டு இறையாளுகைக்கு உட்படுத்தினார். அன்னை தெரசா அவர்கள் நம் தேசத்திலுள்ள ஊனமுற்றோர், அனாதைகள், பலவீனர்கள் இவர்களெல்லாரும் புறம்பாக்கப்பட்டோரல்லர்; இறையரசிற்குரியோர் என்று குரல் கொடுத்தவர். அதனால் தன்வாழ்வில் வந்த இடர்களை எல்லாம் மனதார ஏற்றுக்கொண்டு தன்னைத் தியாகமாக்கி இவர்களின் வாழ்விற்காய்க் கடுமையாய் உழைத்ததால் எல்லையைக் கடந்து இறையாளுகையின் அன்பின் ரூபியாய் எல்லார் உள்ளத்திலும் குடிகொண்ட ஓர் அன்னையானார்.

உரோ 5 : 8-இல் திருத்தூதுவரான பவுல் “நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம் மீது கொண்டுள்ள தம் அன்பை வெளிப்படுத்திச் சிலுவையை ஏற்றுக்கொண்டதால் இறையாளுகை வெளிப்பட்டதென்று தியாகத்தின் உன்னத நிலையைச் சுட்டிக்காட்டுகிறார்.” மட்டுமல்ல தம் வாழ்வில் வந்த இடர்களை அற்பமாய் எண்ணிய இயேசு கிறிஸ்துவினுடைய தியாகம் இறையாளுகையை மலரச் செய்தது.

**2. இறையாளுகை வெளிப்பட கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்** (மத். 10 : 38b)

“தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.”

பின்பற்றுதல் என்பது மிக முக்கியமான ஒன்று. ஆனால் யாரைப் பின்பற்றுகிறோம் என்பது தான் முக்கியம். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. தூய பவுல் உலகத்தாரைப் பின்பற்றியபோது அழிவின் பாதையைத் தேர்ந்து கொடுமையான செயல்களை நிறைவேற்றினார். ஆனால் இறையாளுகைக்காகத் தம்மை அர்ப்பணித்து இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட போது வாழ்வு என்பது அன்பின் ரூபியாக நற்செய்தியின் பாத்திரமாக மாற்றமடைந்தது. இயேசுநாதரைப் பின்பற்றியபோது வாழ்வு முழுவதும் இடர்கள், பலமுறை சிறை வாசம் பலமுறை வாரினால் அடி, கல்லெறி, பசி, தாகம் இவற்றை மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டார் (2 கொரி. 11 : 2 - 28).

கிறிஸ்தவர்கள் தாமாகத் தோன்றுபவர்களல்லர்; கிறிஸ்துவைத் தரித்து அவரைப் போல் சிலுவையைச் சுமந்து அவரைப் பின்பற்றிக் கிறிஸ்துவின் நல்ல பண்புகளை நமதாக்கிக் கொள்ளும்போது நம்மில் விளைதாகும். ரெய்மண்ட் பணிக்கர் கூறும்போது “கிறிஸ்துவைப் பின்பற்றாதவர் எவரும் இறையாளுகைக்கு உட்படமாட்டார்” என்கிறார். கிறிஸ்துவைப் பின்பற்ற அவருக்குள் வேர்கொள்ள வேண்டும். கொலோ. 2 : 6 - 7-இல் “கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள், அவரோடு இணைந்து வாழுங்கள். அவரில் வேரூன்றியவர்களாகவும், அவர்மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள்” என்கிறார். மனிதர் சுயம் என்ற வட்டத்தைத் தாண்டி சிலுவையோடு கிறிஸ்தேசுவிற்குள் அடித்தளம் அமைத்தால் அவரைப் பின்பற்ற முடியும்.

இவ்வுலகில் இறையாளுகை வெளிப்பட சிலுவையைச் சுமந்து அவரைப் பின்பற்ற வேண்டும். துன்பத் தீயில் தான் இதயங்கள் புடமிடப்பட முடியும் மூங்கில் துளையிடப்படாத வரையிலும் புல்லாங்குழலாகாது. சிலுவை என்பது நம்மைக் காயப்படுத்துபவைகளைப் பாடமாகக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். நம்மில் இறையாளுகை வெளிப்பட கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும் ஆகவே தான் பக்தர் தன் பாடலில்,

கீர். 281-இல் "பின் செல்வேன் என் மீட்பரே நானும்மைப்
பின் செல்வேன் என் மீட்பரே."

எனக் குறிப்பிடுகின்றார். இறையாளுகைக்காகச் செயல்படும் போது இடர்வரவுகள் நம்மைச் சந்திக்கும் அவற்றை திறந்தமனதுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போது இறையரசின் மகிமை நம்மில் துளிர்விடும். இடர்வரவுகள் இன்றி இயேசுவை நாம் பின்பற்றவும் முடியாது, இறையரசைச் சுதந்தரிக்கவும் இயலாது. ஸ்பர்ஜன் அவர்களுடைய கூற்றுப்படி "மண்ணுலகில் சிலுவையைச் சுமக்காதவர்கள் விண்ணுலகில் கிரீடம் சூடாதவர்கள்." ஆகவே, கிறிஸ்துவின் பொருட்டு இடர்வரவை ஏற்றுக்கொள்வோம். இறையாளுகைக்கு உரிமையுடையவர்களாக மாறுவோம்.

அருள்திரு. D. **சதிலால் விஜின்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 61 | ஞா. | 451 |
| | கீர். | 7 | கீர். | 281 |

**29-10-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி இரண்டாம் ஞாயிறு & சீர்திருத்த ஞாயிறு (Reformation Sunday)

# பற்றுறுதியைத் திரும்பக் கண்டுபிடித்தலும் மீள்வாழ்வும்

## (Rediscovering and Reliving the Faith)

| | |
|---|---|
| 2 குறி. 34 : 8-21 | தி.வெ. 2 : 1-7 |
| தி.பா. 46 | யோவா. 2 : 12-22 |



"கண்டெடுக்கப்பட்ட இந்நூலில் எழுதியுள்ளவாறு, நீங்கள் சென்று எனக்காகவும் இஸ்ரயேல் யூதாவில் எஞ்சியுள்ளோருக்காகவும் ஆண்டவரை மன்றாடுங்கள்." 2 குறி. 34 : 21

ஒவ்வொர் ஆண்டும் அக்டோபர் 31-ஆம் நாளுக்கு முன்னர் வரும் ஞாயிறைச் சீர்திருத்த ஞாயிறு (Reformation Sunday) வழிபாடாக நினைவுகூர்ந்து, இறைவனுக்கு நன்றி செலுத்தி, திருச்சபைகளில் ஆசரிப்பது வழக்கமான ஒன்றாகும்.

1517-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் நாள் ஜெர்மனி நாட்டின் விட்டன்பர்க் ஆலயக் கதவில் மார்ட்டின் லூதர் அவர்கள் எழுதிய 95 கோட்பாடுகள் தொங்கவிடப்பட்டன. இவை திருச்சபையில், திருப்பணிகளில் சீர்திருத்தம் ஏற்பட வலியுறுத்தியது. குறிப்பாக திருச்சபையில் தலைமைப் பணியில் இருப்போரிடம் பெரும் கேள்வியை எழுப்பி, தவறான வழிகாட்டுதலின்றி நேர்மையாகத் திருப்பணி நிறைவேறக் காரணமாயிற்று. மார்டின் லூதரும் அவரைத் தொடர்ந்து வந்தவர்களும் சீர்திருத்த தொடர் திருப்பயணத்திற்கு ஐந்து மிக முக்கிய கருத்தியல்களை முன் வைக்கிறார்கள். அவையாவன,

1. Sola gratia - Grace alone - அருள் மட்டும்

2. Solafide - Faith alone - பற்றுறுதி மட்டும்

3. Sola Scripture - Scripture alone - திருமறை மட்டும்

4. Sola Christus - Christ alone - கிறிஸ்து மட்டும்

5. Soli Deo - Gloria - Glory to God alone - இறைவனுக்கு மட்டும் மாட்சி.

இந்த ஐந்தின் கருத்தியல்கள் திருச்சபை, திருப்பணிகளில் ஒரு புதிய தூரக்காட்சியை அளித்து இறைமக்கள் பற்றுறுதியிலும், கிறிஸ்துவைப்

பின்பற்றி வாழ்வில் காண்பிப்பதற்கும், திருமறை வழியாக இறையியல் தகவுகளில் வளரவும் துணை நிற்கிறது. சீர்திருத்த ஞாயிறு அருளுரையின் செம்பொருளான பற்றுறுதியைத் திரும்ப கண்டுபிடித்தலும் மீள் வாழ்வும் (Rediscovering and Reliving the Faith) என்பதை தியானிக்கும்படி தரப்பட்டுள்ள திருமறை பகுதிகள் வழியாக தியானித்துச் சீர்திருத்த தொடர் பயணத்தில் நம்மை இணைத்து திருச்சபை, திருப்பணிகள் இறைப்பற்றுறுதியுடன் இறையாட்சியின் தூரக்காட்சியுடன் வளர இறைவார்த்தைகளுக்கு நம்மை அர்ப்பணிப்போம்.

சீர்திருத்தத்தின் விடிவெள்ளி ஜாண் விக்ளிப், ஜாண்ஹஸ், மார்டின் லூதர், உல்ரிச் சுவிங்லி, ஜாண் கால்வின் போன்ற சீர்திருத்த செம்மல்களை நினைவு கூர்ந்து திருப்பணிகளையும் தனிநபர் வாழ்வையும் மறு சீரமைப்பு செய்ய முற்படுவோம். இறைவாக்கினர் சாமுவேல் மற்றும் அரசர்கள், அவர்கள் ஆட்சிமுறை திருப்பணி, மக்கள் வாழ்வியல் முறைகளை முதல் மற்றும் இரண்டாம் குறிப்பேடுகளில் அறிந்துகொள்ளலாம். இரண்டாம் குறிப்பேடு 34-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட மூன்று இறைத்தகவுகளைச் சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் சிந்திப்போம்.

**1. மறுசீரமைப்பின் வாயிலாக மீள்வாழ்வு** (Reliving through Restoration)

2 குறிப்பேடு 34 : 3 “தூய்மையாக்கத் தொடங்கினார். வசனம் 5-இல் தூய்மைப்படுத்தினார்.

2 குறிப்பேடு 34 : 8, “இவ்வாறு நாட்டைத் தூய்மையாக்கிய அவர்தம் ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டில் அவர்தம் கடவுளாம் ஆண்டவரின் இல்லத்தைச் செப்பனிட அட்லியா மகன் சாப்பான், நகரின் ஆளுநர் மாசேயா, பதிவாளர் யோவாகு ஆகியோரை அனுப்பினார்.”

யோசியா ஆட்சிப் பொறுப்பேற்கும் போது எட்டு வயது, எருசலேமில் 31 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவருடைய பணிக் காலத்தில் மக்களின் மீள்வாழ்வுக்கும் இறை பயத்துடன் தூய்மையான வாழ்வு வாழ்வதற்கும் திருமறை, இறையில்லம் இவற்றை ஊடகமாகப் பயன்படுத்தினார். இறை மக்களைச் செப்பனிடுவதற்கு இறைவன் விரும்புகிறார். ஆகவே மீள்வாழ்விற்கு மறுசீரமைப்பு இன்றியமையாத ஒன்றாகும். எரேமியா இறைவாக்கினரின் திருப்பணிக் காலத்தில் மக்கள்

மறுசீரமைப்புக்குத் தம் வாழ்வைக் கொடுத்த போது எரேமியா30 : 17-இல் நான் உனக்கு நலம் அளிப்பேன்; உன்னுடைய காயங்களை ஆற்றுவேன் என்கிறார் ஆண்டவர் (I will restore you to health and heal your wounds). மீள் வாழ்வுக்கு மறுசீரமைப்புத் தகவுகளான மனமாற்றம், தூய வாழ்வு போன்றவை இன்றியமையாதவையாகும்.

ஓசே. 6 : 1-இல் "வாருங்கள் ஆண்டவரிடம் நாம் திரும்புவோம், நம்மைக் காயப்படுத்தியவர் அவரே, அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே, அவரே நம் காயங்களைக் கட்டுவார்." ஆகவே மறுசீரமைப்புக்கு இறைவன் நம்மை அழைக்கிறார். நாம் அவர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் போது அவர் நம்மைக் குணமாக்குவதையும், உடைந்த உள்ளத்தின் காயங்கள் கட்டப்படுவதையும் நம்மால் உணர முடியும். 2 கொரிந்தியர் 5 : 17-இல் "ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன." ஆகவே மீள் வாழ்வுக்குச் சீர்திருத்த வாழ்வியலோடு கிறிஸ்துவுடன் இணைந்து புதிய படைப்பாக்கப்படும் மறுசீரமைப்பின் வாழ்வை வாழ்வதற்கு பவுலார் கொரிந்துத் திருச்சபையின் திருப்பணி வழியாக அறிவுறுத்துகிறார். புதிய ஏற்பாட்டின் இறுதி நூலாகிய திருவெளிப்பாட்டில் யோவானுக்குக் காண்பிக்கப்பட்ட வெளிப்பாட்டில் ஏழு சபைகள், அதன் வாழ்வு, பணி, மறுசீரமைக்கப்பட வேண்டியவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளலாம். திருவெளிப்பாடு 2-ஆம் அதிகாரம் 1 முதல் 7 வரையுள்ள வசனங்களில் எபேசு திருச்சபையின் மீள்வாழ்வு மற்றும் மறுசீரமைப்புக் குறித்து "உன் செயல்களையும் கடின உழைப்பையும் மன உறுதியையும் நான் அறிவேன். நீ மனவுறுதி கொண்டுள்ளாய்; என் பெயரின் பொருட்டு எத்தனையோ துன்பங்களை நீ தாங்கிக் கொண்டுள்ளாய்; ஆயினும் சோர்வு அடையவில்லை" என்று காண்பிக்கிறார். முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை. ஆகவே சீர்திருத்தப் பணியில் இடம்பெற்று மறுசீரமைப்பு அடைந்து இறைவனையும், இறை படைப்புகளையும், இறைமக்கள் அனைவரையும் அன்பு செலுத்தி வாழும் மீள்வாழ்வுக்கு இறைவன் அழைப்புத் தருகிறார்.

**2. உடன்படிக்கையின் பற்றுறுதியைத் திரும்ப கண்டுபிடித்தல்** (Rediscovering the Faith of the Covenant)

2 குறிப்பேடு 34 : 14. மோசே வழியாக அளிக்கப்பட்ட ஆண்டவரின்

திருச்சட்ட நூலைக் கண்டுபிடித்தவர் குரு இல்க்கியா. வசனம் 15-இல் "அப்பொழுது இல்க்கியா எழுத்தராகிய சாப்பானைப் பார்த்து, இதோ நான் ஆண்டவரின் இல்லத்தில் திருச்சட்ட நூலைக் கண்டெடுத்தேன்" என்று கூறி அவர் அந்த நூலைச் சாப்பானிடம் ஒப்படைத்தார்.

திருச்சபையின் திருப்பணிகள் பல்வேறு சவால்களைக் கொண்டுள்ளன. திருமறையின் ஒளியில் வாழும் இறைமக்கள் இறைப்பற்றுறுதியின் தெளிவைப் பெற்றுக்கொண்டு அதன்படி வாழ சீர்திருத்தம் துணை நிற்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உடன்படிக்கையின் பற்றுறுதியை விட்டு விலகின சூழலில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து மறுபடியும் தங்களை இறை சமூகத்தில் தாழ்த்தி, இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது இறை நன்மையைப் பெற்றார்கள். எபிரேயர் 11 : 1-இல் நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவைப் பற்றிய ஐயமற்ற நிலை. வசனம் 2 முதல் 40 வரையிலான வசனங்களில் இறை நம்பிக்கையினால் இறைப்பற்றாளர்கள் வாழ்வு பெற்றார்கள். அத்தகைய இறைப்பற்று நம்முன் இருந்தால் இழப்புகள், வறுமை, நோய், தனிமை, கைவிடப்பட்ட சூழல், பஞ்சம், தண்ணீர்ப் பற்றாக்குறை, பொருளாதாரத் தேக்கநிலை, எதிர்நோக்கற்ற தன்மை இத்தகைய சூழல்களில் இறையருளைக் கண்டு நிறைவாக வாழ முடியும்.

லூக். 8 : 5 - 15 வரையில் இயேசுகிறிஸ்து இறைப் பற்றுறுதியின் ஆழத்தை வலியுறுத்தி விதைப்பவர் உவமையில் விளக்குகின்றார். வசனம் 15-இல் நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சீரிய நல்லுள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்களைக் குறிக்கும். மனஉறுதியுடன் திருவசனங்களை வாழ்வில் விதைகளாக வளரச் செய்யும் போது மிகுந்த பலன் ஏற்படுகிறது. 2 கொரிந்தியர் 5 : 7-இல் நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல, நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம். ஆழமான இறைநம்பிக்கையில் வாழ்வதற்குத் திருமறை துணை நிற்கிறது. உலகின் முதல் தமிழ் திருமறை சீகன்பால்க் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதால் இன்று வரையிலும் திருமறையை நாம் சொந்தமாகப் பயன்படுத்தி வருகிறோம். அந்த முதல் திருமறை தஞ்சாவூர், சரஸ்வதி மஹால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. 2005-ஆம் ஆண்டு அந்தத் திருமறை

காணாமல் போனது. காவல்துறை தொல்பொருள் அறிஞர்கள் பல்வேறு முயற்சியில் ஈடுபட்டு லண்டன் ஜார்ஜ் அரசர் II-நூலகக் கண்காட்சி கூடத்தில் ஜூலை 8, 2022-ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர். 17 ஆண்டுகளாகக் கண்டுபிடிக்கமுடியாமல் இருந்த அரிய உயரிய பொக்கிஷமான திருமறை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. லூக்கா 15-ஆம் அதிகாரம் வசனம் 1-லிருந்து 32 வரையிலும் காணாமல் போன ஆடு, காணாமல் போன காசு, காணாமற் போன இளையகுமாரன் உவமைகளில் காணாமற் போன ஆடு, காசு, இளையகுமாரன் திரும்ப கண்டுப்பிடிக்கப்பட்டபோது வசனம் 5-இல் கண்டுபிடித்ததும், அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக்கொள்வார். வசனம் 6, 7-இல் "வீட்டுக்கு வந்து நண்பர்களையும், அண்டை வீட்டாரையும் அழைத்து, என்னோடு மகிழுங்கள், ஏனெனில் காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்கிறார். அது போலவே மனம்மாற தேவையில்லாதவர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட மனம் மாறும் ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும். உயிரற்ற உலகப் பற்றுறுதியிலிருந்து நம்மை விடுவித்து இறைப்பற்றுறுதியில் உடன்படிக்கையின் வார்த்தைகளைத் திரும்ப கண்டுபிடித்து வாழ்வதற்குச் சீர்திருத்தம் நம்மில் ஏற்பட வேண்டும்.

### 3. இறைமீட்பின் அடையாளமாதல் (Sign of God's Reclamation)

2 குறிப்பேடு 34 : 30 அரசர் ஆண்டவரின் இல்லத்திற்குச் சென்றார். அவருடன் எல்லா மக்களும் சென்றனர். எல்லாரும் கேட்கும்படி வாசித்தார். வசனம் 31-இல் ஆண்டவரின் கட்டளையையும், சான்றுகளையும் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும் கடைப்பிடிப்பதாகவும்....... நிறைவேற்றுவதாகவும் ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்துகொண்டார். வசனம் 32-இல் அவ்வாறே கடவுளின் உடன்படிக்கையின்படியே வாழ்ந்தனர்.

உலகில் வாழும் மக்கள் உலகப் பற்றினால் ஈர்க்கப்பட்டு இறைவனை மறந்து எப்படியும் வாழலாம் என்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டு தம் வாழ்வில் இறைவன் வைத்துள்ள உன்னத நோக்கத்தை மறந்து வாழும் சூழல் அதிகரித்து வருகிறது. இறைக் கட்டளையையும் அவர் நமக்கு முன் வைத்துள்ள சான்றுகளையும் முழு இருதயத்தோடும் முழு உள்ளத்தோடும் கடைபிடிக்கும்போது இறை மீட்பின் அடையாளமாகும் அனுபவம் ஏற்படும். யோவான் 2 : 12-22-இல்

இறை இல்லம், பஸ்கா விழா ஆசரிப்பு ஆயத்த சூழலில் இயேசு எருசலேமுக்குச் சென்றார். இறைஇல்லத்தில் ஆடு, மாடு, புறா விற்போர், நாணயம் மாற்றுவோர் நிரம்பி இருந்தனர். அதைக் கண்ணுற்ற இயேசு கிறிஸ்து, கயிறுகளால் ஒரு சாட்டைப் பின்னி, எல்லாரையும் இறை இல்லத்திலிருந்து துரத்தினார். இறை இல்லம், இறை மன்றாட்டின் இடம் என்பதை வலியுறுத்தினார். இறைஇல்லம், திருப்பணி, இறைமக்கள் இறைமீட்பின் அனுபவத்தைத் தனி வாழ்வு, கூட்டு வாழ்வில், சமூக வாழ்வில் வெளிப்படுத்தும் ஊடகம் என்பதைத் திருமறை வலியுறுத்துகிறது.

பொஹிமியா நாட்டின் அரசர் புனித வென்ஸ்லாஸ் (911 - 935) சிறந்த ஆட்சியை இறைநம்பிக்கையுடன் தன் நாட்டு மக்களிடம் அன்பு பாராட்டிக் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் தன் பல்வேறு அலுவல்கள் மத்தியில் மாலைவேளையில் தன் அரண்மனை அருகிலுள்ள இறை இல்லம் சென்று வழிபடுவது, தியானத்தில் ஒன்றித்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் வெறுங்காலில் நடந்தே தன் அரண்மனையிலிருந்து சென்று திரும்புவார். அவருடைய பணியாளர் ஒருவரும் அவருடன் செல்வது வழக்கம். ஒருநாள் அதிகமான பனிப்பொழிவு, நடப்பதற்கு வழி எதுவும் இல்லாத சூழல். ஆனாலும் அரசர் தன் வழக்கப்படி வெறுங்காலுடன் அரண்மனையிலிருந்து நடந்து சென்று கொண்டிருந்தார். அன்று அவருடன் வரும் பணியாளர் வெறுங்காலுடன் நடப்பதற்குச் சிரமப்பட்டுக் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார். அரசர் பணியாளரின் நிலையை உணர்ந்து என் காலடிகளைப் பார்த்து உன் காலடிகளை எடுத்து வைத்து வா. அப்போது நடப்பதற்கு உனக்குச் சிரமம் இருக்காது என்றார். அதன்படி அந்தப் பணியாளர் சிரமமின்றி நடந்தார்.

கிறிஸ்துவின் மீட்பின் தடத்தில் பயணித்தால் நம் வாழ்வு சிரமம் இன்றிப் பயணிக்கும். கிறிஸ்துவுடன் பயணித்தால் மீட்பு, விண்ணகப் பேரின்ப வாழ்வு, அவருடன் வாழும் அனுபவம் நாம் சீர் பெறுவதால் சாத்தியமாகும். லூக்கா 19 : 1-9 வரையுள்ள பகுதியில் சகேயுவின் மீட்பின் அனுபவம் இடம் பெற்றுள்ளது. வசனம் 9-இல் "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. இவரும் ஆபிரகாமின் மகனே". வசனம் 10-இல் இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார். மீட்பின் திருத்திட்டத்தில் நம்மை இணைக்க இறைவன் விரும்புகிறார் மத்தேயு 25 : 35 முதல் 46 வரையில் மீட்பின் சீர்திருத்தத் திருப்பணி

மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. பசியாய் இருந்தேன் உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன் தாகத்தைத் தணிக்கவில்லை; நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன் கவனித்துக் கொள்ளவில்லை. வசனம் 45-இல் மிகவும் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை. மீட்பின் அனுபவம் சீர்படுவதற்கு வெறும் பேச்சு அல்ல செயல் தேவை. திருப்பணியின் தூரக்காட்சியுடன் இறையரசுக்கு நேராக பயணிக்க அழைக்கப்படுகிறோம். சீர்பெறுவோம், சீரடைவோம், சீர்திருத்தத் திருப்பணியில் இணைவோம். இறைப் பற்றுறுதியின் ஆழத்தில் வேர் கொண்டு இறையரசுக்குரியவர்களாக மாறுவோம்.

அருள்திரு. முனைவர். S. **டேவிட் ஜோசப் ராஜ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 66 | ஞா. | 300 |
| | கீர். | 385 | கீர். | 372 |

**05-11-2023**


பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி மூன்றாம் ஞாயிறு & உலக ஞாயிறு பள்ளி நாள்

# பற்றுறுதியில் பேணி வளர்த்தல்

## Nurturing in Faith

நீமொ. 23 : 15-26 எபே. 6 : 10-18

தி.பா. : 127 மத். 18 : 1-6



நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது.

(நீதி. 23 : 18)

....உன் வருங்காலம் வளமானதாயிருக்கும்; உன் நம்பிக்கையும் வீண் போகாது.

கலங்குவதும் தடுமாறுவதும் எல்லோருக்குமான இயல்பு. அந்த இயல்பைக் கட்டுப்படுத்தி நம்மை நேர் நிறுத்தி தலை நிமிரச் செய்வது நம்பிக்கை. பிள்ளைகள் சிறுவயதிலே வளர்க்கப்படுகிறார்கள்; பதின்மப் பருவத்திலே பிள்ளைகள் கற்றும், கண்டும் தானே வளர்கிறார்கள்; வாலிபத்திற்கும் இடைப்பட்ட காலத்திலே அனுபவத்தினால் வளர்க்கப்படுகிறார்கள். பிள்ளைகள் நன்றாக வளர வேண்டுமே! என்னும் போராட்டம் பெற்றோருக்கும் பெரியோருக்கும் நிச்சயமாக உண்டு.

ஏதோ பிறந்து விட்டோம் என்று நினைத்து வாழும் பிள்ளைகள் மிகுந்து விட்ட காலத்திலே பிறப்பு என்பது ஒரே முறை தான்; இனிப் பிறக்கப் போவதில்லை என்பதைப் பிள்ளைகள் கவனித்து வாழ வேண்டுமே! என நினைக்கிற பெற்றோருக்கும்; என் கால்கள் எதிர்காலத்தை நோக்கி நடந்துக் கொண்டே இருக்கிறதே! எப்போது என் எதிர்காலத்தை அடைவேன் என ஏங்கும் பிள்ளைகளுக்கும் ஊக்கமூட்டும் இறைவார்த்தையே - நீமொ. 23 : 18

மனிதரை நம்புவது நம்பிக்கை என்றும், ஆண்டவரை நம்புவது விசுவாசம் (பற்றுறுதி) என்றும் அறியப்படுகிறது. நாம் இறுதி வரை யாரை நம்பி வளர வேண்டும்? யாரை உறுதியுடன் பற்றிப் பிடிக்க வேண்டும்? பிள்ளைகளுக்கு இதைக் குறித்து தெளிவுப்படுத்தி வளர்ப்பதைத் தான் பற்றுறுதியில் பேணி வளர்த்தல் என்னும் தலைப்பு சுட்டிக்காட்டுகிறது.

பலருக்கு வெகு தூரம் வந்த பிறகே தெரிகிறது வாழ்வில் இவ்வளவு நேரம் வந்த வழி தவறு என்று, மனிதரை நம்பி வாழ்க்கைப் பயணம் இருப்பதினால் முடிவிலே நம் நம்பிக்கை வீணாகப் போய் விடுகிறது. நம் நம்பிக்கை வீண் போகாமல் நல்ல முடிவு ஏற்பட ஆண்டவரை நம்ப வேண்டும். ஒரு சமயம் ஒரு பேருந்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. நடத்துநரின் காலில் ஏதோ இடறியது. குனிந்து அதை எடுத்தார். அது ஒரு பழைய நைந்து போன பணப்பை. அந்தப் பணப்பையைத் திறந்தார். சில கசங்கிய ரூபாய் தாள்களும், சில்லறைகளும் இருந்தன. அத்தோடு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஓவியம் ஒன்றும் இருந்தது. அந்தப் பணப்பையைத் தலைக்கு மேலே தூக்கி எல்லோரின் கண் பார்வைக்கும் காட்டி இது யாருடையது? என்று நடத்துநர் கேட்டார். ஒரு முதியவர் - அது என்னுடையது என்றார். பணப்பையின் நிலையையும் முதியவரின் வயதையும் கண்டு அது அவருக்குச் சொந்தமானது தான் என்று அவரிடமே அதைக் கொடுத்திருக்கலாம். ஆனாலும் நடத்துநர் இது உங்களுடையது தான் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்டார். அதற்கு முதியவர் அதனுள்ளே இயேசு கிறிஸ்துவின் படம் இருக்கும் என்றார்.

இதெல்லாம் ஒரு ஆதாரமா? என்ற நடத்துநரிடம் முதியவர், “ஐயா நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில் என் அப்பா எனக்கு இந்தப் பணப்பையைக் கொடுத்தார். வீட்டில் தேடிப் பிடித்து என் அப்பா, அம்மா இருக்கும் புகைப்படத்தை இதனுள் வைத்தேன். நான் வாலிபனானேன். பள்ளித் தகவல்களுக்காக என்னைப் புகைப்படம் எடுத்தார்கள். ஆஹா அரும்பு மீசையும், குறும்புச் சிரிப்புமாக இருந்த என்னை எனக்கே மிகவும் பிடித்தது. அப்பா, அம்மா படத்தை எடுத்து விட்டு என் படத்தை வைத்தேன். திருமணமான பின் மனைவியின் முகத்தை அடிக்கடி பார்க்க விரும்பினேன். என் படமிருந்த இடத்தில் மனைவியின் படத்தை வைத்தேன். எங்களுக்கு ஒரு மகன் பிறந்தான். மனைவியின் படத்தை அகற்றி விட்டு மகன் படத்தை வைத்தேன். என் மகன் என்று மற்றவர்களுக்குக் காட்டினேன். வருடங்கள் ஓடின. மனைவி காலமானாள். என் மகனுக்குத் தன் குடும்பத்தைக் கவனிக்கவே நேரம் போதவில்லை. என்னை எப்படிக் கவனிப்பது? என்னைத் தனிமை வாட்டியது. கூட்டத்தில் தொலைந்து விட்ட குழந்தையாய்த் தவித்தேன். அப்போது தான் கடையில் இயேசு கிறிஸ்துவின் படத்தை பார்த்தேன். எனக்கு நம்பிக்கை பிறந்தது. அதை வாங்கி பணப்பையில் வைத்துக் கொண்டேன். என்றென்றும் எவருக்கும் நிரந்தரமான துணை அவர் மட்டுமே” முதியவர் நிறுத்தினார். பஸ்சில் இருந்த அனைவரும் கடவுள்

மீது வைக்கும் நம்பிக்கை வீண் போகாது. அவர் நல்லதையே நமக்குத் தருவார் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

ஆண்டவர் மீதுள்ள பற்றுறுதியில் வளர உலகத்தின் மீதுள்ள பற்றுகளிலுள்ள உறுதித் தளர வேண்டும். அதற்குச் சொல்லப்படுகிற நீதியான ஆலோசனைகளைத் தியானிப்போம்.

**1. இருதயம் ஞானத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும்** (நீமொ. 23 : 15)

“பிள்ளாய், நீ ஞானமுள்ளவனாயிருந்தால், நான் மன மகிழ்ச்சி அடைவேன்” வாழ்க்கையை வாழ்வதற்கான ஞானம் பெற்றோரிடமிருந்தும் பெரியோரிடமிருந்தும் பிள்ளைகளுக்குக் கிடைக்கிறது. இக்கட்டான நேரங்களிலும், பாவத்திலே தவறிப் போகிற நேரத்திலும் “என் பெற்றோர் எப்படி வாழ்ந்தார்கள்” என்பதை நினைத்துப் பார்ப்பது ஞானம். சமூகம் கொடுக்கிற அழுத்தங்களால் பிள்ளைகள் ஞானமற்றுச் செயல்படுவதைப் பார்க்க முடிகிறது. பணமில்லை, வேலையில்லை, நிம்மதியில்லை என்று தவறான பாதையைத் தெரிந்தெடுக்க துணியும் மடத்தனம், மூடத்தனம் பிள்ளைகளில் பெருகி வருகிறது. ஏமாற்றம், பயம், வஞ்சகம் காரணமாகத் தங்களைத் தாங்களே போதை பொருட்களாலும், தவறான கலாச்சாரத்தினாலும் பிள்ளைகள் அழிக்கத் துணிந்து விட்டார்கள். இவையெல்லாம் இருதயத்தில் ஞானமில்லாததால் நடக்கிற தீயச் செயல்களாகும். இருதயத்திலே ஞானத்தோடிருந்தால் இவற்றைத் தவிர்க்கலாம்.

இணையதளம் நாம் தேடுவது அவசியமா எனக் கேட்காமலேயே கொடுத்து விடுகிறது. வலைத்தளத்திற்குத் தெரிவதில்லை நாம் எதற்குத் தேடுகிறோம் என்று. ஆகவே இருதயம் ஞானத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். முன்பு பொம்மைகளால் நிரம்பிக் கிடந்த குழந்தைகளின் உலகம், இன்று பொய்மைகளால் நிரம்பிக் கிடக்கிறது. மேலைநாடுகளில் சகஜம் என்னும் பெயரில் தங்களைத் தைரியப்படுத்தி பாவத்தில் பிள்ளைகள் வீழ்ந்து போகிறார்கள். ஏமாற்றங்கள் சில நேரம் மனிதர் மீது வைக்கிற நம்பிக்கையாலும் நிகழ்ந்து விடுகிறது. ஆனால் ஆண்டவர் மீது வைக்கிற நம்பிக்கையால் ஏமாற்றம் நிகழாது. ஆகவே இருதயத்தில் ஞானத்தோடு அனைத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருதயம் ஞானத்தைப் பற்றிக்கொண்டிருந்தால் தவறு செய்யும்போது ஆண்டவர் நினைவுக்கு வருவார்; சட்டமல்ல, காவல் துறை அல்ல. இருதயம் ஞானத்தைப் பற்றிக் கொண்டிருந்தால் பாவம் செய்யும் போது பெற்றோர் நினைவுக்கு வருவார்கள்; என் அப்பா, அம்மா இப்படி

வளர்க்கவில்லையே என்னும் உணர்வு ஏற்படும். ஆகவே பற்றுறுதியில் வளர இருதயம் ஞானத்தை பற்றிக்கொள்ள வேண்டும்.

**2. உதடுகள் செம்மையானவற்றைப் பற்றிக்கொள்ள வேண்டும் (**நீமொ. 23 : 16)

உதடுகளால் செம்மையானவற்றைப் பேசினால் சமூகத்திலே நல்லிணக்கமும் அமைதியும் ஏற்படும். ஆனால், நல்லவற்றைப் பேசுவதற்கு வெட்கப்படுகிற சமுதாயத்தில் வாழ்கிறோம். செம்மையானவற்றைப் பேசினால் வெறுக்கப்படுகிறோம், ஒதுக்கப்படுகிறோம். மனிதர்களால் ஒதுக்கப்பட்டாலும் ஆண்டவர் சேர்த்துக்கொள்ளுவார் என்கிற பற்றுறுதியோடு செம்மையானவற்றை உதடுகள் பேச வேண்டும். செம்மையற்ற தீயப் பேச்சுக்களை நாம் வதந்தி எனச் சொல்லுகிறோம். அது தீயைப் போல மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். ஒரு முதியவர், பணி ஓய்வு பெற்றவர், படித்தவர். ஒரு காலத்தில் பெரிய பதவியிலிருந்தவர். அவர் மற்றவர்களைக் குறித்து குறையைப் பரப்பி விட்டு விடுவார். அவருடைய பக்கத்து வீட்டிற்கு ஒருவன் குடிவந்தான். அவனுக்கு Acting Driver வேலை. யாராவது தங்கள் காரை ஓட்ட டிரைவர் வேண்டும் என்று அழைக்கும் போது போவான். மற்ற நேரங்களில் வீட்டிலிருப்பான். இவருக்கு அவன் மேல் சந்தேகம். திடீரென்று நள்ளிரவில் கிளம்பிப் போகிறான். காலை 8 மணிக்கு வீடு திரும்புகிறான். சில நாட்கள் மாலையில் போகிறான். இரவில் வீடு திரும்புகிறான். நேரம் கெட்ட நேரத்துக்குப் போகிறான், இவரிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசுவதில்லை. இது ஒன்றே அவருக்குப் போதுமானதாக இருந்தது. ஒருவேளை அவன் திருடனாக இருப்பானோ? காலை, மாலை வேளைகளில் பூங்காவிற்கு நடை பயிற்சிக்குப் போன போது தன் நண்பர்களிடம் அவனைப் பற்றிச் சொன்னார். காய்கறி பழம் விற்க வருவோரிடம் பக்கத்து வீட்டுக்காரன் திருடன் என்று சொன்னார். செம்மையற்ற அந்தச் சொல் வேகமாக பரவி, ஒரு கட்டத்தில் காவலர்களே சந்தேகத்தில் அவனைக் கைது செய்தார்கள். ஆனால் விசாரணையில் அவன் டிரைவர் தான் எனத் தெரிந்து அவனை விடுவித்துவிட்டார்கள். ஆனால் அவனுக்குக் கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டது. பக்கத்து வீட்டுப் பெரியவர் மீது கோபமும் ஆற்றாமையும் எழுந்தது. மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தான்.

நீதிமன்றத்திலே முதியவர், நான் வாய் வார்த்தையாக எதையோ சொன்னேன். அதை இப்படித் தண்டனை கொடுக்கும் வழக்காக

மாற்றிவிட்டீர்களே என்றார். நீதிபதி முதியவரிடம், நீங்கள் இவனைக் குறித்து சொன்னவற்றை ஒரு தாளில் எழுதி கிழித்து வழியெல்லாம் போட்டு விட்டு வாருங்கள் என்றார். பெரியவர் அப்படியே செய்தார். நீதிபதி அவரிடம் மறுபடியும் போய் அவைகளைச் சேகரித்து வாருங்கள் என்றார். முதியவர், அதெப்படி முடியும். காற்று எல்லாவற்றயைும் கொண்டு போயிருக்குமே! என்றார். செம்மையற்ற உதடு பெரும் பாதிப்பை எல்லாருக்கும் ஏற்படுத்திவிடும். ஆண்டவர் மீது பற்றுறுதியில் வளர, செம்மையற்றவைகள் மீதுள்ள பற்றை விட்டு விட வேண்டும்.

**3. மனம் பொறாமையைப் பற்றிக் கொள்ளாமலிருக்க வேண்டும் (**நீமொ. 23 : 17 a)

ஒரு மனிதனைக் குறித்து ஒரு தடவை யோசித்தால் அது எண்ணம். அதே மனிதனைப் பல தடவை யோசித்துக் கொண்டேயிருந்தால் அது பொறாமை. ஆண்டவர் மீது பற்றுறுதியில் வளர பெரும் தடையாக இருப்பது பொறாமை. இது கவலைகளையும், கோபத்தையும் மனிதனுக்குள் கொண்டு வந்து விடுகிறது. பொறாமையினால் மனிதர்களின் மனம் மாறுபட்டுக் கொண்டேயிருக்கிறது. நம்மோடிருப்பவர்களின் உறவும், நட்பும் அறுபட்டுப் போய்க் கொண்டேயிருக்கின்றன. பொறாமை மனதைக் குருடாக்கிவிடும். பொறாமை கொண்டவர்களிடம் தன்னைவிட மற்றவர்கள் முன்னேறிவிடுவார்களோ என்னும் பரபரப்பு இருந்துகொண்டே இருக்கும். அதனால் நிம்மதி போய்விடும்.

பொறாமையுள்ளவர்கள் தன் வளர்ச்சியைப் பற்றி அதிகம் சிந்திக்க மாட்டார்கள். தன்னைச் சுற்றியுள்ளோரின் வளர்ச்சியைக் குறித்து பொறாமைப்பட்டுக்கொண்டு அவர்களுக்கு வீழ்ச்சி வராதா? என யோசித்துக் கொண்டிருப்பார்கள். எவ்வளவு வேண்டப் பட்டவர்களாக இருந்தாலும் நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் அண்ணன் தம்பியாக இருந்தாலும், பொறாமை வந்துவிட்டால் அவர்கள் நம்மைவிட ஒரு படி மேலே போய்விடக்கூடாது என்பதிலே கவனமாக இருப்பார்கள். பாராட்டு தனக்கு மட்டுமே கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை மற்றவர்களுக்குக் கிடைத்துவிடக்கூடாது என்பதில் ஜாக்கிரதையாக இருப்பார்கள். நம் மனதினுள்ளே இருக்கும் பொறாமை வெளிப்படும்போது நாம் மற்றவர்களின் பார்வைக்கு அருவருப்பாகத் தெரிவோம். பொறாமையை உள்ளுக்குள் அமுக்கி வைக்க நம்மால் ஒரு போதும் முடியாது. மன இறுக்கத்தில் இருத்தி வைக்கும் பொறாமை நமக்கு வேண்டாம்.

**4. ஆண்டவரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்** (நீமொ. 23 : 17 b)

நாமெல்லாரும் பயத்தினால் அதிகம் பாதிக்கப்படுகிறோம். நல்ல முடிவு வரும் என்கிற நம்பிக்கை இல்லாததால் ஏற்படுவது பயம். பயத்தை மூன்றாகப் பெருவகைப்படுத்துகிறார்கள் அச்சம் (Fear), பதற்றம் (anxiety), பீதி (Phobia). நமக்கு ஆபத்து வரும் எனத் தெரியும் போது நாம் முதலில் அடைவது அச்சம். அந்த ஆபத்து எந்த வடிவில் எப்படி வருமென்று தெரியாத நிலையில் உண்டாவது பதற்றம். வந்த ஆபத்தை நம்மால் எதிர்கொள்ள முடியாதபடி நாம் உறைந்து கிடக்கும் போது நமக்கு உண்டாவது பீதி. அச்சம், பீதி, பதற்றம் மூன்றும் இணைந்துவிட்டால் ஆண்டவர் மீது நம்பிக்கையில்லாத நிலையை ஏற்படுத்திவிடும். நாம் ஆண்டவரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும். பிற பயங்கள் நம்மைப் பற்றிப் பிடித்துவிடாதபடி நம்பிக்கையினால் அவைகளை மேற்கொள்ளவேண்டும். நல்லதே நடக்கும் என நம்பிக்கையோடிருந்தால் நம் நம்பிக்கை வீண் போகாது.

ஆண்டவர் மீது நம்பிக்கையோடிருக்கும் போது நமது கனவு, ஆசை இவற்றைத் தீயோனால் தட்டிப் பறிக்க முடியாது. நம்மை சுற்றியுள்ள உலகம் நம்மை ஏளனம் செய்யலாம், உதாசீனப்படுத்தலாம், நம் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைப் போடலாம், நம்மைப் பலவீனப்படுத்தலாம், நமக்கு உதவிகரம் நீட்டத் தயங்கலாம், நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பாராட்டு, அங்கீகாரத்தைக் கொடுக்க மறுக்கலாம். ஆனால் அவற்றிற்குப் பயப்படாமல், ஆண்டவருக்கு மட்டும் பயந்து அவரைப் பற்றிக்கொள்ளும்போது உங்கள் நம்பிக்கை வீண் போகாது. நம்பிக்கைக்குப் பிற பெயர்கள், விடாமுயற்சி கடின முயற்சி. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, கடின முயற்சி ஆகியவை ஆண்டவருக்குப் பயப்படும் பயத்தோடு இருக்கட்டும்.

நிச்சயமாகவே முடிவு உண்டு
உன் நம்பிக்கை வீண் போகாது.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**


| 𝄞 | ஞா. | 403 | ஞா. | 399 |
|---|---|---|---|---|
| | கீர். | 508 | கீர். | 117 |

**12-11 -2023** பெந்தக்கோஸ்துக்குப் பின் வரும் இருபத்தி நான்காம் ஞாயிறு & ஒன்றிப்பு ஞாயிறு

# மண்பாண்டங்களில் செல்வம்

## Treasures in Clay Jars

மீக்கா. 6 : 1-8 | 2 கொரி. 4:7-15
தி.பா. 106 : 1-12 | மாற். 4 : 26-29



“இந்தச் செல்வத்தை மண் பாண்டங்கள் போன்றே நாங்கள் கொண்டிருக்கிறோம்”. (2 கொரி. 4 : 7)

மரணப் படுக்கையில் கிடந்த அந்தத் தாய் தன்னுடைய 5 பிள்ளைகளையும் தன்னுடைய அருகில் அழைத்து, என் அன்பு பிள்ளைகளே, நான் உங்களுக்குப் பெரிய செல்வத்தைச் சேர்த்து வைத்துள்ளேன். அந்தச் செல்வம் இதோ இந்த திருமறையில் உள்ளது. நீங்கள் அதைத் தேடி எடுத்து உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். என்று கூறி தனது திருமறையைப் பிள்ளைகளின் கையில் கொடுத்தார். இதன் ஒவ்வொரு பக்கங்களும் என்னுடைய கண்ணீரால் நனைந்திருக்கும் என்று கூறிக்கொண்டே இறந்துவிட்டார். அத்தாயின் கடைசி வார்த்தைகள் இளைய மகனுடைய மனதில் ஆழமாகப் பதிந்தது. தன் தாய் கண்ணீரால் நனைத்து வைத்திருந்த திருமறையில் புதைந்து கிடந்த செல்வங்களைத் தேட ஆரம்பித்தான். அந்தச் செல்வத்தை கண்டுபிடித்து தனக்குச் சொந்தமாக்கினான். தன்னுடைய 24 வயதில் அந்த செல்வத்தோடு சீர்திருத்தத் திருச்சபையின் முதல் அருள்தொண்டராகத் தமிழகத்தில் தரங்கம்பாடியில் வந்து ஏற்றுக்கொள்வார் ஒருவரும் இல்லாதிருந்தும் தமிழ் மொழியைக் கற்று 13 ஆண்டுகள் இறைப்பணியாற்றி, தமிழ்த் திருமறை என்னும் செல்வத்தை நமக்குத் தந்தார் பர்தலோமேயு சீகன்பால்க் அவர்கள்.

இந்நாள் C.S.I., C.N.I. மார்த்தோமா திருச்சபைகளின் ஒன்றிப்பை நினைவுகூரும் நாள். இந்த நாளுக்கான நமது சிந்தனைப் பொருள் “மண்பாண்டங்களில் செல்வம்” என்பதாகும். தூய பவுல் 2 கொரி. 4 : 5, 6, 7 வசனங்களில் சொல்லியிருப்பது போல இந்தச் செல்வத்தை அதாவது இறைவனுடைய வார்த்தையையும் அவருடைய மகிமையையும் மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம் என்கிறார். மண்பாண்டம் என்பது மண்ணினால் செய்யப்படும்

பாத்திரங்களைக் குறிக்கிறது. மிக பழங்காலத்திலேயே நம் முன்னோர் மண்பாண்டங்களைச் செய்யும் நுட்பங்களைக் கண்டறிந்துள்ளனர். மண்பாண்டங்கள் செய்வது உலகின் பல நாடுகளிலும் மிகவும் பழமை வாய்ந்த தொழிலாக இருந்துள்ளது. நீர்தூர்வையாக்கப்பட்ட மண்ணையும், களி மண்ணையும் சேர்த்து குழைத்து தேவையான வடிவத்தில் பாத்திரங்களைச் செய்து உயர்ந்த வெப்பநிலையில் சூடேற்றி மண்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. மண்பாண்டம் மிகவும் மதிப்பு குறைந்த ஒன்று. ஆனால் பயன்களோ மிக அதிகம்.

எரேமியா தீர்க்கர் இஸ்ரயேலரை மண்பாண்டத்திற்கு ஒப்புமைப்படுத்தியிருக்கிறார் (எரே. 16 : 6).

செல்வம் என்பது, சொத்து, பணம், பொன், வெள்ளி, விலையுயர்ந்த முத்துகள் போன்றவை ஆகும். இச்செல்வங்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ளன என நாம் அறிவோம். தூய பவுல் இந்த இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றை விலக்கிப் பிரித்து காணாமல், மதிப்பு குறைந்த மண்பாண்டத்திற்குள் மதிப்பு மிகுந்த செல்வம் என்ற பணிவிடையைக் குறிப்பிடுகிறார்.

இறைவன் மனிதனைப் படைத்த போது நிலத்தின் மண்ணினால் மனிதனை உருவாக்கி, அவனுடைய நாசியில் தமது உயிர் மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவனானான். ஸ்தோயிக்கர் என்று அழைக்கப்படும் கிரேக்க மெய்யியலாளர், விலையுயர்ந்த ஆன்மாவையும், அந்த ஆத்மாவைத் தன்னுள் கொண்ட உடலையும் குறிப்பிடும்போது மண்பாண்டத்தில் செல்வம் என்று உருவகப்படுத்தினார். கிரேக்கப் பண்பாட்டிலும் கிரேக்க இலக்கியத்திலும் ஊன்றியிருந்த பவுல் இந்த உருவகத்தைச் சற்று மாற்றி “மண்பாண்டத்தில் செல்வம்” என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். இங்கே தூய பவுல், செல்வம் என்று எதைக் குறிப்பிடுகிறார்? என்பதைச் சுருக்கமாக சிந்திப்போம்.

**1. இறைவார்த்தை என்னும் செல்வம்** (2 கொரி. 4 : 4)

யோவா. 1 : 1 - தொடக்கத்தில் வாக்கு இருந்தது.

யோவா. 1 : 14 - வாக்கு மனிதரானார். நம்மிடையே குடிகொண்டார்.

மண்பாண்டங்களாகிய நமக்குள் வைக்கப்பட்ட செல்வம், நம்மிடையே நமக்குள் குடிகொண்ட இறைவார்த்தை என்னும் செல்வம் ஆகும். இந்த இறைவார்த்தை சாதாரண மனிதனையும் அசாதாரண செயல்களைச் செய்யக்கூடியவராக மாற்றுகிறது. இறைவார்த்தையின் தன்மையை ஏசாயா தீர்க்கர் கூறும்போது, எசாயா 55 : 10, 11 வசனங்களில் அது கடவுளின் விருப்பத்தைச் செயல்படுத்தி, .... வெறுமையாய் கடவுளிடம் திரும்புவதில்லை என்கிறார். இவ்வளவு வல்லமை மிகுந்த

மேன்மையான இறை வார்த்தையைக் கடவுள் மண்பாண்டங்களாகிய நமக்குள் வைத்திருக்கிறார். இந்த இறைவாக்காகிய செல்வத்தைப் பெற்ற நாம் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். இப்படிக் கீழ்ப்படிந்தவர்கள், பெரிய பெரிய சாதனைகளைப் படைத்துள்ளார்கள். ஆசிகளையும் பெற்றிருக்கிறார்கள் (ஆபிரகாம், கிதியோன் ).

இன்றைய கிறிஸ்தவர்களின் மிகப் பெரிய தோல்வி, இறைமக்கள் இறைவார்த்தையின்படி வாழாததே ஆகும். இறைவார்த்தை நம் உள்ளங்களில் இல்லாததால் இறைவனிடமும் மனிதரிடமும் நமக்கு ஒன்றிப்பு இல்லை. மாறாக, நாம் தனித்துவிடப்பட்ட நிலையில் செயல்படுகிறோம். மீக்கா. 6 : 8 - ஓ மானிடா நல்லது எது என அவர் உனக்கு காட்டியிருக்கிறாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார். நமது உடலாகிய மண்பாண்டங்களில் செல்வமாகிய இறைவார்த்தையைப் பெற்ற நாம் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்வோம். அப்படி வாழ்வதினாலே நாம் நேர்மையாளராய், இரக்கமுள்ளவராய் மனத்தாழ்ச்சி கொண்டவராய் பிறரிடம் நாம் ஐக்கியம் கொண்டவர்களாய் வாழ இயலும்.

**2. இறைமாட்சிமை என்னும் செல்வம்** (2 கொரி. 4 : 6)

கடவுள் மாட்சி நிறைந்தவர். மாட்சிமை என்பதற்கு "ஷெகினா" என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "வாசம் பண்ணுதல்" என்பதாகும். கடவுள் அங்கே வாசம் பண்ணினார். கடவுளின் சமுகம் அங்கு இருந்தது. கடவுளின் மகிமை அங்கே இருந்தது என்று கூறுவது பழைய ஏற்பாட்டு நடைமுறை ஒழுங்கு. தேவனுடைய பெட்டி பிடிபட்டுப் போனபடியினால் ஆண்டவரின் மகிமை இஸ்ரவேலை விட்டு எடுபட்டுப் போயிற்று என்று (1 சாமுவேல் 4 : 22) பினேகாசின் மனைவி கூறுகிறார். உடன்படிக்கைப் பெட்டியில் இறைமாட்சி இருக்கிறது என்ற நம்பிக்கையினால் உடன்படிக்கைப் பெட்டி தங்களை விட்டுப் போனபோது கடவுளின் மாட்சிமையும் தங்களை விட்டுப் போயிற்று என்று நம்பினர். அந்த மாட்சி படைப்பின் போது மண்பாண்டமாகிய மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த மாட்சிமையை மனிதன் கீழ்ப்படியாமையால் இழந்துவிட்டான். இயேசு கிறிஸ்து வழியாக மீண்டும் இந்த இறைமாட்சி இவ்வுலகில் வெளிப்பட்டது. ஒரு நிலை கண்ணாடியின் முன் இருப்பவைகளை அந்தக் கண்ணாடி அப்படியே பிரதிபலிப்பது போல, கடவுளின் மாட்சிமை கிறிஸ்து வழி நம்மிலும் பிரதிபலிக்கிறது. இயேசு கிறிஸ்து செய்த

அற்புதங்கள் ஒவ்வொன்றும் அவருடைய மாட்சிமையை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கின்றன.

1. யோவா. 2:11 - கானாவூர் திருமணத்தில்

2. யோவா. 11:40 - இலாசருவை உயிருடன் எழுப்பியதில்

இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட இந்த மாட்சிமையை இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் கண்ட சீடர்கள் மறுரூபமலைக் காட்சியில் தெளிவாகப் புரிந்துகொண்டனர். அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் கண்டார்கள் (லூக். 9:32).

இரும்பு போன்ற சில உலோகச் சத்துக்கள் மனித உடலுக்கு மிக அவசியமானவை. அதற்காக நாம் உலோகங்களை எடுத்து அப்படியே சாப்பிடுவதில்லை. அந்தச் சத்துக்கள் கொண்ட உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதன் மூலம் அந்த உலோகச் சத்துக்கள் நமது உடலில் சேருகின்றன. அதைப் போலவே, கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைமாட்சியும் மண்பாண்டமாகிய நம்மை வந்தடைகிறது. இந்த இறைமாட்சி நமக்குள் வைக்கப்பட்டதன் நோக்கம், நாமெல்லாரும் இறைவனிடமும் மனிதரிடத்திலும் ஒன்றித்து வாழவும், ஒன்றித்துப் பணி செய்யவுமே, அன்றி புகழ்மிக்க அதிகாரப் பீடங்களையும், சடங்குகளையும், பிடிவாதக் கொள்கைகளையும், கட்டிக்காக்க அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். திருச்சபை பிரிவினைச் சக்தியாகச் செயல்படத் தொடங்குமாயின் இறைமாட்சி நம்மை விட்டுஅகன்று சென்றுவிடும். இருளில் நாம் பிரகாசிக்க இயலாது.

நம் முன்னோர் உழைத்துச் சிறுக சிறுக சேமித்த செல்வங்களை மண்பாண்டங்களில் வைத்துப் பாதுகாப்பதுண்டு. சில நேரங்களில் இத்தகு செல்வங்கள் மற்றொருவருக்கும் தெரியாமலும், யாருக்கும் பயன்படாமலும் புதைந்து போனதும் உண்டு.

மண்பாண்டங்களாகிய நமக்குள் வைக்கப்பட்ட செல்வம் புதைந்து போகாமல் நமக்கும் பிறருக்கும் பயன்பட வேண்டும். பவுலடிகள் கூறும் போது, இறைவார்த்தை, இறைமாட்சி என்னும் செல்வம் மண்பாண்டமாகிய நமக்குள் இருந்தால், நாம் எச்சூழலிலும் மனம் உடைந்து போடுவதில்லை; நம்பிக்கை இழப்பதில்லை; கைவிடப்படுவதில்லை; அழிந்து போவதில்லை (2 கொரி. 4:8, 9, 10). மாறாக, ஆண்டவராகிய இயேசுவின் ஜீவன் நம்மில் தொடர்ந்து கிரியை செய்து கொண்டேயிருக்கும்.

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 3 | ஞா. | 456 |
| | கீர். | 123 | கீர். | 379 |

அருள்திரு. T. **ஜெஸ்டின் ராஜ்**

**19-11-2023** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி ஐந்தாம் ஞாயிறு - பெண் குழந்தை ஞாயிறு

# பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதிசெய்தல்

## Assuring Future for the Girl Child

2 அர. 5 : 1-5 திப. 12 ; 11-17
திபா. 8 மாற் 5 : 21-24; 35-43



"சிறுமியின் கையைப்பிடித்து அவளிடம், "தலித்தா கூம்" என்றார். அதற்கு, சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திரு என்பது பொருள்" (மாற். 5 : 41)

பெண்கள் நாட்டின் கண்கள். வீட்டின் விளக்கு என்றெல்லாம் பாராட்டப்பட்டாலும், பெண் கல்வி உயர, நாடு உயரும் என்பதெல்லாம் வெறும் விளம்பரம் மட்டுமே.

2002-இல் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நிகழ்வு அது. பிறந்து 10 நாட்களான பெண் குழந்தை ஒன்று பேருந்தில் கேட்பாரற்றுக் கிடந்தது. மிகவும் ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனைக்கு அக்குழந்தை எடுத்துச் செல்லப்பட்டது. அக்குழந்தை தஞ்சாவூரிலிருந்து மதுரைக்கு வந்த அரசுப் பேருந்தில் கிடந்தது.

இத்தகைய நிகழ்வுகள் இன்றும் ஏராளம் நாள்தோறும் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்திய இலக்கியங்கள் சிலவற்றில் பெண்கள் மதிப்புடன் விவரிக்கப்பட்டாலும் அவை வெறும் எழுத்துகளில் மட்டுமே. செயல்பாட்டிலோ அன்றாட வாழ்வில் பெரும்பாலும் மாறான நிலைமையே இன்றும் காணப்படுகிறது. ஆண் பெண் இனவேறுபாடு, ஆண் குழந்தை பிறந்தால் முழுக் குடும்பமும் மகிழ்ச்சியடைவது, பெண் குழந்தை பிறந்தால் மகிழ்ச்சியற்ற நிலை இன்றும் நம் சமூகத்தில் காணப்படுகின்றது.

பெண் குழந்தைகள் வியாதிப்பட்டால் வியாதி தானாக குறையும் என்று விட்டு விடுகிறார்கள். Bring up a girl child is like watering the neighbours plant. பெண் குழந்தையை முன்னேற்றுவது அயலான் தோட்டத்துச் செடிக்கு தண்ணீர் இறைப்பது போன்றதாகும் என்ற நிலை உள்ளது.

பெண் குழந்தைகளைப் பொருளாகப் பார்க்கின்ற ஒரு பார்வை

இன்று மிக அதிகம். பெண் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது மிகப் பெரிய கேள்வியாகக் காணப்படுகின்றது. பெண்கள், பெண் குழந்தைகள் வாழ, வளர தகுதியற்ற ஒரு நாடு நம் நாடு என்று கருதும் அளவிற்கு அநீதிகள், கொடூரங்கள் நடந்து வருகின்றன. பெண் குழந்தைகளின் வாழ்வு மிகவும் ஆபத்தான இந்த நிலையில் திருச்சபை சிப்போராக்களாக, மிரியாம்களாக அர்ப்பணிப்புடன் செயல்படும் என்றால் கடவுளின் படைப்பாகிய பெண் சமூகம் காப்பாற்றப்படும்.

### 1. தனி நபர்கள் மாற்றுருவாக்கம் பெற வேண்டும்
### Assuring a future for the Girl child requires individual transformation

2 அர. 5 : 1-5 இத்திருமறைப் பகுதியைப் படிக்கும்போது ஒரு சிறு பெண்ணின் மதிப்பைக் கடவுள் உலகறியச் செய்வதையும் அவள் மீது கடவுள் கொண்டுள்ள கரிசனையையும் நாம் புரிந்து கொள்ளலாம். சீரிய ராஜாவின் படைத்தலைவர் நாமான். நாமான் என்ற பெயருக்கு இரக்கம் கொண்டவன் (“gracious”) என்ற அர்த்தமுண்டு. அவன் கடவுளிடமும் மனிதரிடமும் தயை பெற்றிருந்தார். (He found favour in the eyes of God, as well as king) இவரால் சீரியாவுக்குப் பல வெற்றிகள் கிடைத்தன. ஆனால் அவரோ ஒரு தொழுநோயாளி (Leprosy). இந்த அடிமைப்பெண் தன் எஜமானின் சுகவீனத்தை அறிந்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும் என்று. ஓர் ஆலோசனையை அளிப்பதை நாம் பார்க்கலாம்.

**அங்கே நாமானில் மனதில் ஏற்பட்ட மாற்றத்தைக் காணலாம்:**

(i) அடிமைச் சிறுமியின் வார்த்தைகளை முக்கியமானதாக எடுத்துக் கொண்டார்.

(ii) சீரிய ராஜாவின் வார்த்தையை இஸ்ரவேலின் ராஜாவிடம் எடுத்துச் சென்றார்.

(iii) யோர்தானில் மூழ்கும்படி சொன்னபோது கீழ்ப்படிந்தார்.

இவற்றுக்கெல்லாம் இந்த அடிமைப்பெண் என்று கருதப்பட்ட சிறு பெண்ணின் வார்த்தைகள் ஆதாரமாய் இருந்தன. இதன் வழியாய் சிறுகுழந்தைகளிடமும் பெரிய மனிதர்களின் வாழ்வுக்கான வார்த்தைகளுமுண்டு, செயல்களுமுண்டு (மாற். 10 : 13-16). எனவே பெண் குழந்தைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களை அங்கீகரிக்க

வேண்டும். அவர்களும் இறைச்சாயலில் படைக்கப்பட்டவர்களே. பெண் குழந்தைகளோடுள்ள நம்முடைய அன்பு மாயமற்றதாயிருக்கவேண்டும். (உரோ. 12 : 9) அவர்களையும் நாம் மதிக்கவேண்டும் (உரோ. 12 : 10சி) இச்சிறுபெண் நாகமானின் விடுதலை வாழ்வுக்குக் காரணமாய் அமைந்தாள் என்பது எவ்வளவு பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

இச்சிறுபெண் மனித மாண்போடு நாமான் வாழ்வதற்கு கருவியானார். குடும்பத்தை விட்டு, சொந்த நாட்டை விட்டு அடிமையாக வந்த சிறு பெண்ணைப் போன்று இன்றும் துரத்தப்படுகின்ற, துன்புறுத்தப்படுகின்ற பெண் குழந்தைகளின் அவல நிலையை நாம் பார்க்க முடியும். இந்தச் சமூகம் பெண் குழந்தைகளிடம் ஆற்றலைப் பார்க்கத் தவறி விடுவது தான் இந்நிலைக்குக் காரணம்.

## 2. சமூக மாற்றுருவாக்கம் அவசியம்

## Assuring a Future for the girl child requires social transformation

நம்முடைய சமூகம் ஆண் குழந்தையைப் பெருமைக்குரிய அடையாளமாகவும் பெண் குழந்தையைத் தாழ்வாக இரண்டாம் நிலையாய்ப் பார்க்கும் பார்வை இன்றும் இருக்கின்றது. ஒட்டு மொத்த சமூகமும் பெண் குழந்தைகளின் நலனில், உயர்வில் அக்கறை செலுத்துவது குறித்த ஒரு விழிப்புணர்வு அவசியம். நீதி என்பது சாதியின் அடிப்படையில் கல்வியின் அடிப்படையில் சமூக அந்தஸ்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

டெல்லியில் ஆஷிபா என்ற சிறுமிக்கு இழைக்கப்பட்ட கொடுமை, அநீதியின் உச்சம்.

சமூகத்தில் பெண்களின் உயர்வுக்கு அடிப்படையாக இன்னும் அழுத்தம் பெற வேண்டியது : பெண் கல்வி, பெண்களின் பொருளாதாரம், பெண்களின் உள, உடல் நலம்.

ஆப்ரிக்கா தேசம் David Livingston மிஷனரியாரை இழந்து தவித்தநேரம். ஆப்ரிக்கா செல்ல ஆட்கள் இல்லை. பரிதாபம், மனிதர்கள் மனிதர்களாக வாழவில்லை. மூடப் பழக்க வழக்கங்கள் மலிந்து கிடந்தன.

ஒரு மாலைநேரம் இரட்டைக் குழந்தைகளைப் பெற்ற ஒரு தாயின் அழுகுரல். குழந்தையின் உடலில் ஈரம் காய்வதற்கு முன்னே கொடூரன் ஒருவனின் கை மூர்க்கமாய் பாய்ந்தது. மெல்லிய வாய் திறந்து அழுமுன்னே அவைகளின் தலைகளைத் துண்டித்தான். சோகத்திலும்

சோகம்; அழுவதற்குக் கூட கண்ணீரற்ற அந்தத் தாய் காட்டுக்குள் துரத்தப்பட்டாள். தனிமை, பயம் இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அவை தீயச் சக்திகள் மூலம் பிறந்தவை என்பது அவர்கள் நம்பிக்கை. வெகுண்டெழுந்தார் மேரி ஸ்லைசர். கிறிஸ்துவின் அன்பினால் முன்னேறினார். வீடு வீடாகச் சென்று உண்மை செய்தியைச் சொன்னார். மக்களின் அறிவு கண்கள் திறக்கப்பட்டு பல இரட்டைக் குழந்தைகள் காக்கப்பட்டன. ஆப்ரிக்காவின் “வெள்ளை ராணி” என்று கொண்டாடப்பட்டார்கள். எனவே சமூக மாற்றம் என்பது இன்றும் மிக மிக அவசியம்.

ஜெப ஆலயத் தலைவர் யவீரு தன் மகளுக்கு வாழ்வு தரும்படி தொடர்ந்து இயேசுவிடம் வேண்டுவதைப் பார்க்கின்றோம். ஆனால், சிலர் அவள் மரித்துவிட்டாள் ஏன் போதகரைத் தொந்தரவு செய்கிறீர்கள் என்றனர்.

ஆனால் இயேசு கிறிஸ்து “தலித்தாகூமி”, சிறு பெண்ணே எழுந்திரு என்றார்.

இயேசுவின் அன்புப் பார்வை, கரிசனையுள்ள பார்வை இந்தச் சமூகத்தில் மலர வேண்டும். அப்படியானால் பெண் குழந்தைகளின் எதிர்காலம் என்பது நம்பிக்கை மிகுந்ததாய் இருக்கும்

அருள்திருமதி. **ஸ்டாறி பிரின்சிலாள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 8 | ஞா. | 455 |
| | கீர். | 18 | கீர். | 289 |


**26-11-2023** பெந்தக்கோஸ்துக்குப்பின்வரும் இருபத்தி ஆறாம் ஞாயிறு

# ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தமாதல்

## Preparing for the coming of the Lord

ஒசே. 10 : 12 - 15 கொலோ. 4 : 1 - 6

திபா. 37 : 1 - 24 லூக். 12 : 35 - 40



தலைவர் இரவின் இரண்டாம் காவல்வேளையில் வந்தாலும் மூன்றாம் காவல்வேளையில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருப்பதைக் காண்பாரானால் அவர்கள் பேறுபெற்றவர்கள் (லூக். 12 : 38)

திருவருகைக் காலத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தபடும் நாம் விசுவாச வாழ்வில் நம்மை ஆயத்தப்படுத்துவது அவசியமாகும். கிறிஸ்தவ வாழ்வில் வருகையின் காலங்கள் நாம் விழிப்போடு இருந்து வரும் ஆண்டவரை வரவேற்க நம்மை ஆயத்தப்படுத்துவது மட்டுமல்லாமல் நித்திய வாழ்வுக்காக நம்மை தகுதிப்படுத்துவதாய் இருக்கின்றது. நமது இல்லத்தை ஒருவரின் வருகைக்காக ஆயத்தம் செய்யும்போது மிகுந்த கவனமாக நமது இல்லத்தை தயார்படுத்துகிறோம். உதாரணமாக, ஒரு இல்லத்தில் திருமணம் நடக்கின்றபோது மணமகன் வருகைக்காக மணமகள் வீட்டார் பல ஆயத்தங்களை செய்வர். அதைப் போன்று நமது ஆண்டவராகிய இயேசுவும் இந்த உலகிற்கு பாலனாய் வந்தார். இனிமேல் நியாயதிபதியார் வரப்போகின்றார். அவரின் வருகையை நாம் சந்திக்க எப்படி ஆயத்தப்படவேண்டும் என்பதை நமக்கு கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகள் அடிப்படையில் சிந்திப்போம்.

### 1. நீதி செய்து ஆயத்தமாவோம்

ஓசியா அன்பின் இறைவாக்கினர் என்று அழைக்கப்படுகின்றார். ஓசியா நூல் முழுவதும் கடவுளின் அன்பைக் குறித்த செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. இஸ்ரவேல் மக்கள் கடவுளை மறந்தாலும் அல்லது கடவுளின் நெறிகளை விட்டு விலகி நடந்தாலும், அநீதியான வாழ்வுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தாலும், கடவுள் அவர்களை மீண்டும் மீண்டும் மனமாற்றம் பெறவும் அவர்கள் நீதியுள்ள வாழ்வு வாழவும்

எதிர்பார்க்கின்றார். ஓசியா இறைவாக்கு நூலை கடவுளுக்கும் இறைமக்களுக்குமான அன்பின் உறவை மூவகை உருவகங்கள் வழியாக இறைவாக்கினர் விளக்குகின்றார். கணவன் - மனைவி உறவு, தந்தை - மகன் உறவு, விவசாயி - நிலம் உறவு என்று குறிப்பிடுகின்றார். ஓசியா 10 : 12 -15 வரை உள்ள பகுதியில் விவசாயி - நிலம் உருவகம் சித்தரிக்கப்படுகின்றது. ஒரு விவசாயி எவ்வாறு நிலத்தைப் பண்படுத்தி பராமரிக்கின்றாரோ, அதுபோல ஆண்டவரும் இருக்கின்றார். விவசாயி தன் உழைப்பிற்கான பலனை நிலத்திலிருந்து எதிர்பார்க்கின்றது போல, கடவுளும் நம்மிடமிருந்து பலனை எதிர்பார்க்கின்றார். ஆனால் இங்கு இஸ்ரயேல் ஜனங்கள் ஒசியா 1 : 13-ன்படி கொடுமையை உழுதும், தீவினையை அறுவடை செய்து பொய்மையின் கனிகளை கொடுத்து உலகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்தனர். இதை கடவுள் ஓசியா இறைவாக்கினர் வழியாக கண்டித்து ஒசியா 10 : 12-ன் படி நீதியின் விதையை விதைத்து அன்பின் கனியை அறுவடை செய்ய அழைப்பு விடுக்கின்றார். இங்கு நீதி என்பது ஆண்டவருக்கு பிரியமான வாழ்வை பிரதிபலிக்கின்றதாய் இருக்கின்றது. இயேசு கிறிஸ்து எவ்வாறு உண்மை, தூய்மை, அன்புக்கு சான்றாக வாழ்ந்து உலகத்தில் நீதியை நடப்பித்தாரோ அதுபோல நாமும் நீதி செய்து வாழ்ந்து, அவர் வருகையை எதிர்கொள்ள அழைக்கப்படுகின்றோம். இதை மல்கியா இறைவாக்கினர் கூறும்போது இறைமக்கள் அனைவரும் நீதியின் சூரியனாம் ஆண்டவரை எதிர்ப்பார்த்து அவர் முன் அஞ்சி நடக்கிற மக்களாக வாழ எதிர்பார்க்கின்றார் (மல்கியா 4 : 1 - 16).

"நெருப்பைக் கரையான் அழிக்க முடியாது. நீதிமானை பழியும் பாவமும் நெருக்கமுடியாது" என்பார் ஓமந்தூர் இராமசாமி என்பவர். நாமும் நீதியுள்ள அரசரின் மக்களாக வாழ நீதியை, இரக்கத்தை நமது வாழ்வில் கடைபிடித்து கடவுளின் வருகைக்காக ஆயத்தப்படுவோம்.

## 2. விழித்திருந்து ஆயத்தப்படுவோம்

விழித்திருத்தல் என்பது எப்போதும் தயாராக இருத்தலைக் குறிக்கின்ற சொல்.

"குளத்தில் நீர் இருக்கும் வரையில் தான்
கொக்குக்கும் குளத்துக்கும் உறவு

கொடியில், மலர் இருக்கும் வரை தான்
மலருக்கும் வண்டுக்கும் உறவு - நீ
விழிப்பக இருக்கும் வரைதான் உனக்கும்
இறைவனுக்கும் உறவு"

நாம் வாழும் காலத்தில் விழிப்பாயிருத்தல் என்பது காலத்தின் கட்டாயம். திருமறையில் ஆண்டவர் இதை மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகின்றார். எவ்வாறு கொக்கு மீனுக்காக ஒற்றைக்காலில் விழிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றாதோ அதுபோல திருமறையும் நம்மை ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக விழித்திருந்து ஆயத்தப்பட அழைக்கின்றது. ஏனென்றால் விழிப்பாயிருத்தல் கிறிஸ்தவத்தின் உட்கூறாக இருக்கின்றது. எந்த நாளில் எந்த பொழுதில் ஆண்டவர் வருவார் என்பது யாருக்கும் தெரியாது (மத். 24 : 12, மத். 25 : 14). விழித்திருத்தல் என்பது தொடக்க திருச்சபையின் ஆணித்தரமான நம்பிக்கையாய் இருந்தது. "இறுதிகாலம் இதுவே என அறிந்து கொள்ளுங்கள். உறக்கத்தினின்று விழுத்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது" (ரோமர் 15 : 11) என்றும், "விழிப்பாயிருங்கள், நம்பிக்கையில் நிலைத்திருங்கள், துணிவுடன் நடந்து கொள்ளுங்கள், வலிமையுடன் செயல்படுங்கள்" (கொரி. 16 : 13, 1தெச. 5 : 6) என்று பவுலடியார் அறிவுறுத்துகிறார். கெத்சமெனேயில் உறங்கிய பேதுருவும் தன் திருமுகத்தில் "அறிவுத் தெளிவோடு விழிப்பாருங்கள்" (1 பேது 5 : 8) என்கிறார். யோவான் ஒருபடி மேலே சென்று "விழிப்பாயிருப்போர் பேறு பெற்றோர்" (தி.வெளி. 16 : 15) என்கிறார். எனவே எந்நேரமும் தயாராக விழிப்பாக இருக்க அழைக்கப்படுகின்றோம்.

லூக்கா 12-ம் அதிகாரத்திலும் இது தெளிவாக அறிவுறுத்தப்படுகின்றது. அறிவற்ற செல்வன் உவமையில் அவன் உயிர் எப்போது எடுக்கப்படும் எனறு முன்னறிவிக்கப்படாது என்கிறார். இதுமூலம் விழிப்பாக இருந்து ஆயத்தமாக இருக்க நம்மை ஆண்டவர் அழைக்கிறார். மேலும் தலைவர் வரும்போது விழிப்பாயிருந்து தொண்டாற்றும் பணியாளரை தம் உவமையில் மனதாரப் பாராட்டுகின்றார் (லூக்கா 12 : 38). பத்து தோழியர் உவமையில் முன் மதியற்ற தோழியரை நோக்கிருக்கும், தயாராக இருக்கும் ஐவரைக் குறிப்பிட்டு விழிப்பாயிருக்க பணிக்கின்றார். இறுதியாக தம் மரணத்திற்கு

முன்பு தாம் அன்பு செய்த சீடர்களுக்கு கொடுத்த கட்டளையில் சோதனைக்குட்படாதிருக்க விழித்திருந்து இறைவனை வேண்டுங்கள் என்று (மத்தேயு 26 : 38) குறிப்பிடுகின்றார். மேலும், திருமறையில் ஆண்டவரின் வருகை ஒரு திருடன் நினையாத நேரத்தில் வருவதை போல இருக்கும் என்று கூறுகின்றார் (லூக்கா 12 : 39, 40). ஆகவே நிலையான விண்ணக வாழ்வை நிரந்தரமாக்கிக் கொள்ள இம்மண்ணுலக வாழ்வில் விழிப்போடு செயல்பட்டு ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தப்பட நம்மை அழைக்கின்றார்.

### 3. காலத்தை பயன்படுத்தி ஆயத்தமாவோம்

உலகில் மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ள அத்தனை விஷயங்களிலும் விலை மதிக்க முடியாத ஒன்று நேரமாகும். ஒரு மனிதனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பொருள் இருக்கிறதென்றால் அதை அவன் பயனுள்ளதாக பயன்படுத்த நினைப்பான். அந்த பொருள் அவனிடம் இருக்கும் ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சியான தருணமாகவே அவன் எண்ணிக் கொள்வான். அதைப்போல நேரமும் விலைமதிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. திருமறையில் நாம் பார்ப்போமென்றால் நமது ஆண்டவர் காலங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் (சங். 31 : 15). ஆகவே காலம் நமது கட்டுப்பாட்டில் இல்லை ஆனால் காலத்தை நாம் கட்டுப்படுத்தமுடியாவிட்டாலும் பயன்படுத்திக் கொள்ளமுடியும். நமது காலங்களை சிறப்பாக பயன்படுத்தி வரும் ஆண்டவர் இயேசுவை எதிர்கொள்ள திருமறை நம்மை அழைக்கிறது.

இன்றைய உலகில் காலத்தை வீணாக விரயம் செய்வோர் அதிகம் பேர் உண்டு. மணிக்கணக்கில் அலைபேசியிலும், சமூக வலைதளங்களிலும் நம்முடைய நேரங்களை செலவிடுகின்றோம். ஆனால் அவ்வாறு நமது நேரத்தை வீணாக்காமல் காலத்தை பிரயோஜனமாய் பயன்படுத்த அழைக்கப்படுகின்றோம். ஏனென்றால் போனகாலம் போனதுதான். இழந்த பணத்தை நாம் மீட்டுவிடலாம். ஆனால் இழந்த நேரத்தை மீட்க முடியாது. திருமறையில் காலத்தை பயன்படுத்தி வாழ தம்மையே ஆண்டவர் மாதிரியாக வைக்கிறார். கடவுள் ஒவ்வொன்றையும்; அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார். காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்கு தந்திருக்கின்றார் (பிரசங்கி 3 : 11). அதனதன் காலத்தில் அதனதன்

பணிகளை செய்து விடுவதுதான் ஆண்டவர் நமக்கு காட்டுகின்ற முன்மாதிரியாகும். கடவுள் காலத்தை கடந்து நிற்பவர். காலத்தை தமது கட்டுப்பாட்டில் வைததிருப்பவர். அவரே காலத்தை பயன்படுத்திக் கொள்ள தம்மையே மாதிரியாக வைத்திருக்கிறார். கொலோ. 4 : 1 - 6 வரையுள்ள வசனங்களில் அப்போஸ்தலாகிய பவுல் கொலேசேய திருச்சபைக்கு சொல்லுகின்றபோது விண்ணகத்திலிருந்து நம்மை பார்க்கிற ஆண்டவர் ஒருவர் உண்டு என்பதை நினைவில் வைத்து வாழ ஆண்டவர் அழைப்பு விடுக்கின்றார். இந்த கடைசி காலத்தில் கடவுளின் நற்செய்தியை அறிவிக்க காலத்தை பிரயோஜனப்படுத்தி வாழ அழைப்பு விடுக்கின்றார். நாமும் நீதி செய்து, விழித்திருந்து காலத்தை பயன்படுத்தி நம்மை ஆயத்தமாய் வைத்து ஆண்டவர் வருகையை எதிர்கொள்ள அழைக்கப்படுகின்றோம்

அருள்திரு. J. **தேவ ராஜ ஜெபஸ்டின்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 76 | ஞா. | 159 |
| | கீர். | 198 | கீர். | 190 |

**03-12-2023**

திருவருகைக்காலம் &
திருவருகையின் முதலாம் ஞாயிறு

# கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல்

## Joyful Expectation of Christ's Coming

(எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு)

**(Meeting of Mary with Elizabeth)**

| | |
|---|---|
| எரே. 33:10-16 | 1 தெச. 3:6-13 |
| திபா. 68:11-20 | லூக். 1: 39-45 |



"மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்ட பொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று" (லூக்கா 1:41).

மகிழ்ச்சி மனித வாழ்வின் மிக முக்கியத் தேவை. மனித வாழ்வில் மன அமைதி, திருப்தி ஆகியவை மகிழ்ச்சியாய் வெளிப்படுகின்றன. தேசத்தந்தை காந்தியடிகள் மகிழ்ச்சி மட்டும் எனக்கு இல்லாதிருந்தால் நான் என்றைக்கோ மரித்துப் போயிருப்பேன் என்று கூறினார். மகிழ்ச்சியை பலரும் பலவிதங்களில் பெற்றுக் கொள்கிறார்கள். பண்டிகைகள் என்றாலே மகிழ்ச்சியைத் தருபவைகளே. மனித வாழ்வின் மகிழ்ச்சிக்கு பண்டிகைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அதிலும் கிறிஸ்துப் பிறப்புப் பண்டிகை மகிழ்ச்சியின் மொத்த வடிவம் என்றால் அது மிகையாகாது. கிறிஸ்துப் பிறப்பு பண்டிகையில் Joy to the World என்று பாடுவது கிறிஸ்துப் பிறப்பு தனி மனிதனுக்கு மட்டுமல்ல, முழு உலகத்திற்கும் மகிழ்ச்சியைத் தருகிறது என்பதனை உணர்த்துகிறது.

கிறிஸ்துவின் பிறப்பை, அதாவது அவரது முதல் வருகையை நாம் கொண்டாடும்போது அவர் நமது உள்ளத்தில் பிறப்பதை உறுதி செய்வதும், அவரது இரண்டாம் வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டியதும் அவசியம். கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் வாழ்ந்து வந்த கன்னிப் பெண்ணாகிய மரியாவிடம் வானதூதர் வந்து கிறிஸ்துவின் பிறப்பு கன்னியாகிய உன்னிடத்தில் நிகழப்போகிறது என்னும் செய்தியைக் கூற, அது எப்படி நடக்கும்? என்று மலைத்து நின்ற அவரிடம் கடவுளால் கூடாத காரியம் எதுவுமில்லை, மலடியெனப்பட்ட உமது உறவினரான எலிசபெத்து தாய்மையுற்றிருக்கிறார் என்னும் செய்தியைக் கூற எப்ரோனில் தங்கியிருந்த எலிசபெத்தை மரியா சென்று சந்தித்தார். அவர்களது உரையாடலின் வழியாக கிறிஸ்துவின்

வருகையில் மகிழ்ச்சிக்கான காரணிகள் என்ன என்பதை நற்செய்திப் பகுதியை சார்ந்து சிந்திப்போம்.

1. **வாழ்த்துகள் பரிமாறப்படுவதில் மகிழ்ச்சி** (லூக்கா 1:41)

“மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்ட பொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று”, “உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று”. (லூக்கா 1:41, 44).

கிறிஸ்துப் பிறப்பு பண்டிகைக் காலம் வாழ்த்துகள் பரிமாறப்படுவதின் காலம். லூக்கா 1:28-இல் தூதன் மரியாவை வாழ்த்துவதையும், லூக்கா 1:40-இல் மரியா எலிசபெத்துவை வாழ்த்துவதையும், லூக்கா 1:42-இல் எலிசபெத்து மரியாவை வாழ்த்துவதையும் நாம் காண முடிகிறது. வாழ்த்துகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கான ஓர் அடையாளம். திருமண நிகழ்வுகளில் “பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுங்கள்” “வாழையடி வாழையாக வாழுங்கள்” என வாழ்த்துகிறோம். அனுதினமும் நம் நண்பர்களுக்கு good morning, good afternoon என்கிற வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்ளுகிறோம். பல வேளைகளில் இந்த வாழ்த்துகள் சந்தோஷமாக இருக்கும் போது நாம் அதனை வெளிப்படுத்துகிறோம். ஆனால், நாம் சந்தோசமாக இருக்கும் போது வாழ்த்துவது மட்டுமல்ல வாழ்த்து. நாம் நம்முடைய கஷ்ட வேளைகளிலும், நாம் நிந்தைகளை அனுபவிக்கும் தருணங்களிலும் பிறரை வாழ்த்த வேண்டிய அவசியம் இருப்பதை இங்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. நற்செய்திப் பகுதியில் மரியா எலிசபெத்தை வாழ்த்துகின்றார். திருமணமாகாமலேயே குழந்தை பெறப் போகும் இந்தக் கன்னிப்பெண் தன்னுடைய வாழ்வில் அவமானம், நிந்தை இவைகளைத் தாண்டி, மலடி என்று எண்ணப்பட்டு இப்போது கருவுற்றிருக்கின்ற எலிசபெத்தை வாழ்த்துகின்றார். இங்கு வாழ்த்து பிறருடைய மகிழ்ச்சியை முக்கியத்துவப்படுத்துகின்றதே தவிர தன்னுடைய மகிழ்ச்சியை அல்ல என்பதனை நாம் உணரமுடிகிறது. நம்முடைய வாழ்வில் கஷ்டம், அவமானங்கள், நிந்தைகள், வெட்கம் இவைகள் பிறரை வாழ்த்த தடையல்ல என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மரியா தான் வாழ்ந்த நாசரேத் ஊரிலிருந்து மலை நாடான எப்ரோனுக்கு சுமார் 160 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து எலிசபெத்துவை வாழ்த்துகின்றார்.

இதைத் தொடர்ந்து லூக்கா 1:42-வது வசனத்தில் நாம் வாசிக்கின்ற பொழுது எலிசபெத்து மரியாவை வாழ்த்துவதை நாம் காண முடிகிறது. திருமறை சொல்லுகிறது, எலிசபெத்து தூய ஆவியால் நிரப்பப்பட்டவராய் மரியாவைப் பார்த்து "பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று சொல்லி அவரை வாழ்த்துகிறார். இந்த ஆசீர்வாதத்தைக் குறித்து வேத வல்லுநர்கள் சொல்லும்போது "paradox of blessedness". ("முரண்பட்ட ஆசீர்வாதம்") என்று சொல்லுகிறார்கள். திருமணமாகாத பெண் ஒருத்தி தாய்மையுற்றிருப்பது என்பது ஆசீர்வாதமாகக் கருதப்படவே இயலாத சூழ்நிலையில், மேசியாவை சுமக்க அநேகர் ஆயத்தமாய் இருந்த போதும், அந்த மேலான வாய்ப்பு மரியாவுக்குத் தரப்பட்டபடியினாலே அவர் பாக்கியவதியாய் இங்கு சித்திரிக்கப்படுகிறார். மரியாவும் எலிசபெத்தும் வாழ்த்துகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள்.

கிறிஸ்து பிறப்புக் காலங்களில் வாழ்த்துப் பாடல் பவனி (Carol Rounds) அநேக இடங்களில் பாடப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். Sir. Henry Cole 1843-இல் பிரிட்டனில் இதை ஆரம்பித்தார். மக்களை வாழ்த்தும்படியாய், மக்களை வாழ்த்தி மகிழச்செய்யும்படியாய் தங்களுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும்படியாய் இந்தக் கேரல் ரவுண்ட்ஸ் இன்றும் நடைபெற்று வருவதை நாம் காணுகிறோம். இந்தியாவைப் பொறுத்தமட்டில் காலரா என்னும் கொடிய தொற்றுநோயால் மக்கள் கூட்டம் கூட்டமாக மடிந்து, அழிந்து கொண்டிருந்த வேளையில், மக்களுடைய பயத்தைப் போக்கும்படியாய், மக்களிடைய நிலவி வந்த பீதியை அகற்றும்படியாய், இந்தப் பாடல் பவனியை ஒத்த தெருபஜனைகள் அருட்பணியாளர்களால் நடத்தப்பட்டதை நாம் அறிந்திருக்கிறோம். இன்று நம்மால் பாடப்படும் வாழ்த்துப் பாடல் பவனிகளிலே, வாழ்த்துகளிலே மகிழ்ச்சி உண்டா? என்பதை நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். பண்டிகைகளும், வாழ்த்துகளும் வணிக மயமாகிவிட்ட காலகட்டத்திலே நம்முடைய கேரல் ரவுண்ட்ஸ் ஏதோ சம்பிரதாயமாகவே காணப்படுகிறது என்றால் அது மிகையல்ல. கேரல் ரவுண்ட்ஸைக் குறித்து ஒருவர் இவ்விதமாக சொன்னார்: "The sleepy Christians disturbing the sleeping Christians in carol rounds." அதாவது தூங்கிவழியும் கிறிஸ்தவர்கள் தூங்ககிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களைத் தொந்தரவுப்படுத்துவது தான் கேரல் ரவுண்ட்ஸ். வாழ்த்துகள் பரிமாறப்படுவதால் மகிழ்ச்சி பெருகவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, உன்னதத் திட்டத்தோடு உருவாக்கப்பட்ட கேரல் ரவுண்ட்ஸ் இந்நாட்களில் எப்படி

சித்திரிக்கப்படுகிறது என்பதை நாம் காண முடிகிறது. கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளக் காத்திருக்கும் நாம் நம்முடைய வாழ்த்துகளைப் பரிமாறுவதன் மூலமாய் மகிழ்ச்சியை அனுபவிக்க அழைக்கப்படுகிறோம்.

## 2. வாஞ்சைகள் பூர்த்தியாவதில் மகிழ்ச்சி (லூக்கா 1: 43)

"என் ஆண்டவரின் தாயார் என்னிடம் வர நான் யார்?" என்று எலிசபெத் மரியாவைப் பார்த்துக் கேட்பதை நாம் இங்கு காண முடிகிறது. வாஞ்சைகள், விருப்பங்கள் நிறைவேறுவதினாலே மகிழ்ச்சி ஏற்படுகிறது. நீமொ. 13:12-இல் "நெடுங்காலமாய்க் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப் பண்ணும். விரும்பியது வரும்போது ஜீவ விருட்சம் போலிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேசியாவின் வருகைக்காக மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். தங்கள் வாழ்வின் அடிமைத்தனத்திலிருந்து மேன்மையான வாழ்வுக்குத் தங்களை அழைத்துச் செல்லும்படியாய் மேசியா வருவார் என்கிற எண்ணம், எதிர்பார்ப்பு, வாஞ்சை அந்தக் காலத்திலே யூத மக்களிடம் நிறைந்திருந்ததை நாம் அறிந்திருக்கிறோம். எலிசபெத்தும் மேசியா வரப்போகிறார் என்பதனை உணருகிறார். ஆனால் மேசியாவைப் பற்றி எதுவும் தெரியாத சூழலில் தூய ஆவியினாலே நிரப்பப்பட்டவராய் மரியாவைப் பார்த்து சொல்லுகிறார்: என் ஆண்டவருடைய தாயாரை காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. மேசியாவின் தாயாரைக் காணும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன் என்று அவர் சொல்லுகிறதை நாம் காண்கிறோம். தாங்கள் விரும்பியிருந்த, வாஞ்சித்திருந்த எதிர்பார்ப்பு நிறைவேறப்போகிறது என்பதனை அறிந்து மகிழ்ச்சி கொள்ளுகிற எலிசபெத்தின் வார்த்தைகளை நாம் இங்கே காண முடிகிறது.

இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காலம் அது. பார்த்தலமேயு டயஸ் என்கின்ற மாலுமி இந்தியாவிற்கான கடல் வழியைக் கண்டுபிடிக்கும் தன்னுடைய முயற்சியில் ஆப்பிரிக்காவின் தென்முனையை நெருங்கினார். அந்த இடம் புயல் முனை (Cape of Storms) என்று அறியப்படுகின்ற இடம். அந்த முனையை அவர் நெருங்கும் போது கடும் புயல். அவரால் அவரது இலட்சியத்தை, வாஞ்சையை நிறைவேற்ற முடியவில்லை. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வாஸ்கோடகாமா என்ற மாலுமி இந்தியாவிற்கு கடல் வழியைக் கண்டுபிடிக்க முயலும் போது அதே இடத்தில் புயலால் பாதிக்கப்பட்டு கப்பல் பழுதடைந்து, சேதமடைந்து, மனச்சோர்வோடு

இருந்த போது அவர் அந்த இடத்திலே ஜெபிக்கிறார். புயல் அமைகிறது. அவரது பயணம் தொடர்கிறது. புயல் முனை (Cape of Storms) என்று அழைக்கப்பட்ட இடம் நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) என்று இப்போதும் அந்த இடம் அழைக்கப்படுகிறது. அந்தப் பயணத்தில்தான் அவர் இந்தியாவிற்கு கடல் வழியைக் கண்டுபிடித்தார். வாஞ்சைகள், நாம் விரும்பியிருக்கின்ற எதிர்பார்ப்புகள் நம் வாழ்விலே நிறைவேறுகிறபோது, அது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிற அனுபவமாக இருக்கிறது என்பதில் எந்த விதமான சந்தேகமுமில்லை. நம்முடைய வாஞ்சை என்ன? நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே நம்முடைய வாஞ்சை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாமும் சேர்க்கப்பட்டு நிலையான வாழ்வைச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையோடு நாம் இயேசு கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியோடு எதிர் நோக்கிக் காத்திருக்கிறோம். பக்தர் ஒருவர் அழகாகப் பாடுகிறார்:

“வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே”

கிறிஸ்துவின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கிற நம்முடைய வாஞ்சைகள் நிறைவேறுவதாலே மகிழ்ச்சி கொள்ளுகிறோம்.

**3. வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதில் மகிழ்ச்சி** (லூக்கா 1: 45)

“விசுவாசித்தவளே பாக்கியவதி! கர்த்தராலே அவளுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்” என்று எலிசபெத்து மரியாவைப் பார்த்துச் சொல்லுகிறார். கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருக்கிற நாம் அவர் அளித்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்பதனாலே மகிழ்ச்சியடைய அழைக்கப்படுகிறோம். திருமறை இறைமக்களுக்குப் பல்வேறு வாக்குத்தத்தங்களைத் தந்து அவர்களை ஆன்மிக வாழ்வில் உறுதிபடச் செய்கிறது. “தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது” என்று 2 கொரி. 1:20-இல் நாம் வாசிக்கிறோம். எபி. 10: 23-ஆம் வசனத்தில் “நம்பிக்கையில் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்” என்று எழுதப்பட்டிருக்கிறது. திப. 2:29-இல் “வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது” என்று சொல்லப்பட்டிருக்கிறது.

1 யோவா. 2:25-இல் “நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்” என்றும், 2 பேது 3:13-இல் “வாக்குத்தத்தத்தின்படி புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும் என்று நாம் காத்திருக்கிறோம்” என்றும் எபி 10: 36 -இல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நாம் பெற்றுக் கொள்ள நமக்குப் பொறுமை வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கடவுளின் வாக்குத்தத்தம் நிறைவேற பொறுமையோடு காத்திருக்கும் போது அவை நிறைவேறும் என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிற அனுபவம். கடவுள் வாக்கு மாறுகிறவர் அல்ல என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிச்சயம் நிறைவேறும். ஆனால் அந்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய விருப்பத்தின்படியல்ல, அவருடைய விருப்பத்தின்படி அது நிறைவேறும் என்பதனை அறிந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளும்படியாய் ஒருவர் வேகமாய் ஆலயத்திற்கு புறப்பட்டுக்கொண்டிருந்தார். ஆலயத்திற்குச் செல்ல அவர் சற்று தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. ஆலயத்திற்கு அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை நின்று விடவேண்டும். மழை நின்றதும் நான் ஆலயத்திற்குப் போக வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, ஓரிடத்திலேயே ஒதுங்கி நின்று மழை நிற்கட்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தார். அந்த வேளையில் ஆலயத்திற்குச் சென்ற ஒருவர் தன்னுடைய கையில் குடையோடு அவரைக் கடந்து சென்றார். ஆலயத்திற்கு வரும்படியாய் அவர் காத்து நிற்பதைக் கண்டார். அவரிடத்திலே கேட்டார்: வாருங்கள் நாம் இருவரும் சேர்ந்து இந்தக் குடையில் ஆலயத்திற்குச் சென்றுவிடலாம் என்று சொன்னார். இவரோ இல்லை இல்லை மழை நிற்கட்டும் நான் வருகிறேன் என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். சற்று நேரம் கழித்து வேறொருவர் ஒரு நான்கு சக்கர வாகனத்தில் அந்த வழியாக வந்தார். இவர் மழைக்காக ஒதுங்கி நிற்பதைக் கண்டு காரில் வாருங்கள் நாம் ஆலயத்திற்குச் செல்லலாம் என்று அழைத்தார். அவர் அதையும் மறுத்து விட்டார். இல்லை இல்லை பரவாயில்லை நீங்கள் செல்லுங்கள், மழை நின்றதும் வந்து விடுகிறேன் என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். சற்று நேரம் பெய்த மழை பின்பு ஓய்ந்தது. ஓட்டமும் நடையுமாக ஆலயத்திற்குள்ளாக வந்து சேர்ந்தார். ஆலயத்திற்குள்ளாக வந்த பிறகு அவருடைய மனதில் ஒரே கோபம். அந்த ஆலய ஆராதனையில் நான் முழுமையாகப் பங்கு பெறாதபடிக்கு ஆண்டவர் என்னைத் தடை செய்துவிட்டார்.

ஆராதனையின் பெரும்பகுதி நிறைவடைந்து விட்டது. தன்னால் வர முடியவில்லை. ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளுவதற்கு ஆண்டவர் தனக்கு உதவி செய்யவில்லை. அவர் தன்னுடைய வார்த்தையை நிறைவேற்றவில்லை என்று விசனப்பட்டார். ஆண்டவர் அவரைப் பார்த்துச் சொன்னார்: மகனே! நீ ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும் கூட. மழை வந்தது. அந்த மழையையும் மீறி, குடையின் மூலமாக நீ அந்த ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளுவதற்கு நான் ஒருவரை குடையோடு அனுப்பினேன். நீ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உன்னை காரில் அழைத்து வரும்படியாக ஒருவரை அனுப்பினேன். அதையும் நீ ஏற்றுக்கொள்ளவில்லை. மழை நின்றுதான் ஆலய ஆராதனைக்கு வர வேண்டும் என்ற உன்னுடைய விருப்பம் நிறைவேற நீ காத்திருந்தாய் என்று சொன்னார். அவர் அப்போது தன்னுடைய தவறை உணர்ந்து கொண்டார். பல வேளைகளில் நாம் ஆண்டவர் நமக்குத் தந்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய விருப்பத்தின்படி நாம் விரும்புகிற நேரத்தில், விரும்புகிற விதத்தில் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டவர் அவருடைய வாக்குத்தத்தங்களை அவருடைய தீர்மானத்தின்படி, அவருடைய விருப்பத்தின்படி நிறைவேற்றுவார் என்பதனை உணர்ந்துகொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் நமக்குத் தந்த வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் நிறைவேறாமல் போவதில்லை. அந்த வாக்குத்தத்தங்கள் நிச்சயமாய் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறும். எனவே, கிறிஸ்து பிறப்புப் பண்டிகையில் நாம் மகிழ்ச்சியடைய அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவின் வருகை நாள்களை ஆசரித்து கிறிஸ்துப் பிறப்பு பண்டிகையைக் கொண்டாடுவதற்கு ஆயத்தப்படுகின்ற ,கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நம்மையும் இணைத்துக் கொள்ளுவதற்கு ஆயத்தப்படுகின்ற நாம், பண்டிகைக் காலங்களில், வாழ்த்துகள் பரிமாறப்படுவதினால் மகிழ்ச்சி பெறவும், வாஞ்சைகள் பூர்த்தியாவதினால் மகிழ்ச்சி பெறவும், வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதினால் மகிழ்ச்சி பெறவும் ஆண்டவர் நமக்கு அருள் செய்கின்றார் என்ற நம்பிக்கையோடு பண்டிகைக் காலங்களுக்காக ஆயத்தப்படுவோம்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன் பெல்**

| 𝄞 | ஞா. | 82 | கீர். | 87 |
|---|---|---|---|---|
| | ஞா. | 84 | கீர். | 85 |

**10-12-2023**


திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு &
விவிலிய ஞாயிறு

# இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம்

## Word of God : Light to our Path

எசா 55 : 6 - 13 | கலா. 1 : 11-17

திபா. 119 : 105 - 112 | லூக். 1 : 67-80



என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ . . . வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை (எசா. 55 : 11)

"என்னை வடிவமைத்த வடுக்கள்" (The scars that have shaped me) என்னும் நூலில் வனிதா ரிஸ்னெர், "மானுட வாழ்வு வடுக்களால் நிரம்பியது" (Human life is full of scars) என்று எழுதுகிறார். வடுக்களுக்கு அசாத்தியமான ஆற்றல்உண்டு (Scars have extra ordinary power). வடுக்கள் நம் பார்வையை மாற்றுகிறது. நம் நம்பிக்கையை ஆழப்படுத்துகிறது. கடவுளுடனான நமது நடையை மாற்றுகிறது. கிறிஸ்தவ வரலாறு வடுக்களின் வரலாறு. வடுக்களைச் சுவடுகளாக மாற்றும் ஆற்றல் பெற்றது நமது கடவுளின் வார்த்தை. மார்ட்டின் லுத்தர், "திருமறை கிறிஸ்து வைக்கப்பட்டுள்ள தொட்டில்" (Bible is the cradle wherein Christ is laid) என்கிறார். அருளுரையாளர் ஜான் ஸ்டாட், "கடவுளைக் கண்டுபிடிக்க முயல்வது பற்றியது அல்ல திருமறை. ஆனால் கடவுள் நம்மைக் கண்டுபிடிக்க முயல்வது பற்றியது திருமறை" என்கிறார். C.H. ஸ்பர்ஜன், "திருமறையில் வாழுங்கள்" (Live in the Bible) "இறைவார்த்தை எப்போது புறக்கணிக்கப்பட்டாலும் நிச்சயமாக அழிவு ஏற்படும்" (Whenever the Word of God is ignored, there will be certain destruction) என்கிறார் பில்லி கிரகாம்.

திருமறையை நாம் படிக்காவிட்டாலும் திருமறை நம்மைப் படிக்கிறது. மேலோட்டமாகத் திருமறை வாசித்தலை விட்டுவிட்டு இரு நிலைகளில் திருமறையைப் படிக்க நாம் கற்றுக் கொள்ளவேண்டும். ஒன்று, திருமறையை ஈடுபாட்டோடு மூழ்கிப் படித்தல் (immersion involvement reading) இரண்டாவது, இறைவார்த்தையை உழுது படித்தல் (plough through reading) அப்போது தேனிலும் இனிமையான இறைவார்த்தை, பாதங்களுக்குத் தீபமான இறைவார்த்தை, இருபுறமும் கருக்குள்ள

இறைவார்த்தை நம்முடன் பேசும், நம்மை மாற்றுருவாக்கம் செய்யும். சாதுசுந்தர்சிங் போன்றவர்களை மாற்றிய இறைவார்த்தை வேதக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்ற நம்மை எவ்வாறு மாற்றுகிறது என்பதைக் கொடுக்கப்பெற்ற மூன்று திருமறைப்பகுதிகளின் வழியாகச் சிந்திப்பது நன்று.

**1. இறைவார்த்தை ஆற்றல்படுத்துகிறது** (Empowering Word of God)

ஏசாயா தனது நூலில் இறைவாக்கின் வழி கடவுளின் பேரிரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வாருங்கள் என்றும், அந்த இறைவாக்கு உங்களை ஆற்றல்படுத்தும் என்றும் நிறைவு செய்கிறார். இறைவாக்கு: கொடியவர்களின் வழிமுறைகளை மாற்றும்; தீயவர்களின் எண்ணங்களை மாற்றும்; இறைவாக்கு மன்னிக்கும் ஆற்றல் பெற்றது; விதைப்பவருக்கு விதையையும், உண்பவருக்கு உணவையும் வழங்கும் ஆற்றலுடையது; வெறுமையாய்த் திரும்பாமல் வெற்றிகரமாகப் பணி செய்யும் ஆற்றலுடையது; அழிவற்றது என்று இறைவாக்கின் ஆற்றலை விளக்குகின்றார். செழுமை, ஆசீர்வாதம் என்ற சிந்தனைகளுக்கு மாற்றாக இறைவாக்கு மக்களை ஆற்றல்படுத்துகிறது. மக்களைத் தைரியப்படுத்தி வாழ்வை மாற்றுகிறது.

எலியா ஒரு துணிச்சலான தீர்க்கமான, தீவிர பக்தியுள்ள வெற்றிவாழ்வுடன் பணி செய்த இறைவாக்கினர். பாகாலைப் பின்பற்றுகின்ற 450 பேர் முன்னின்று அவர்களைக் கடவுளே உண்மையானவர் என்று அறிக்கையிட செய்த தீர்க்கர். இஸ்ரயேலைக் கலக்குகிறவர் நீயும் உன் வீட்டாரும் என்று ஆகாபை எச்சரித்த ஒரு இறை மனிதர் யேசபேலுக்குப் பயந்து பெயர்செபா பாலைநிலத்தில் “போதும் ஆண்டவரே, என் உயிரை எடுத்துக்கொள்ளும்” என்று புலம்புகிறார். இஸ்ரயேலின் கடவுளுக்காகப் பக்தி வைராக்கியமாய் இருந்தேன். கடவுள் என்னைத் தனிமையாக அழ வைத்துவிட்டாரே! என வருந்துகின்றார். எலியாவே திரும்பிப் போ என மெல்லிய சத்தத்தில் இறைவாக்கு வருகிறது. ஆசகேலையும் யெகுவையும் நீ அரசர்களாக திருநிலைப்படுத்து, எலிசாவை இறைவாக்கினராகத் திருநிலைப்படுத்து என இறைவாக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஆற்றல்படுத்துவது உயர் பதவிகளுக்காக மட்டும் அல்ல. பணி செய்வதற்கான ஆற்றல். தகுதிப் பெற்றவர்களை திருநிலைப்படுத்தும் துணிச்சலான பணிக்கு இறைவாக்கு எலியாவை ஆற்றல்படுத்துகிறது (1 அர. 19 : 1-21) இறைவாக்கு இறைமக்களை ஆற்றல்படுத்துகிறது.

**2. இறைவாக்கு அறிவு புகட்டுகிறது** (Enlightning Word of God)

கலாத்தியத் திருச்சபைக்குப் பவுலடியார் எழுதும்போது (1 : 11-17) தான் சொல்லும் நற்செய்தி கிறிஸ்து தந்த அறிவு என்கிறார். இறைவாக்கின் அறிவு வருமுன் மக்களைத் துன்புறுத்தினேன். யூதர் யூதரல்லாதோர் என்ற வேறுபாட்டை வைத்திருந்தேன். பழமைவாதச் சிந்தனைகளைப் பின்பற்றினேன். இறைவாக்கு அறிவு வெளிச்சத்தை என்னிடம் ஏற்படுத்தியது.

நான் பிரித்தெடுக்கப்பட்டவன், தெரிந்து கொள்ளப்பட்டவன் என்ற அறிவு.

மக்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்ற நற்செய்திப் பணி அறிவு.

இறைவாக்கு தன்னைப் பற்றிய அறிவையும் தன் பணியைப் பற்றிய அறிவையும்உருவாக்கியதாக பவுலடியார் எழுதுகின்றார்.

இறைவாக்கை வாழ்வின் அனுபவமாக்குதல் அவசியம் (experiencing the Word of God). இறைவாக்கு நம் வாழ்வைப் பாதிக்கவேண்டும்; கலக்கமடையச் செய்ய வேண்டும் (Word of God must disturb us).

கிறிஸ்தவ உலகில் அதிகமாகப் பாடப்படுகிற ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதியவர் Fanny Grasby என்ற கண்பார்வை இழந்த பெண்மணி. தன் வாழ்வின் கடினமான சூழலில் இறைவாக்கின் வெளிச்சத்தை ஆழமாக அனுபவித்து பாடல்கள் வழியாக அந்த வெளிச்சத்தை மக்களுக்கு ஆறுதலாக வழங்கினார். "நாம் வாழும் ஒரு வாழ்வை அழகாக்குவோம். அப்போது அது நம் நினைவில் நிற்கும்." நம் வாழ்வில் உடைந்துபோன கம்பிகளை அதிரச் செய்வோம் (Let us vibrate the broken chords once more). இறைவாக்கு உடைந்து போன கம்பிகளை ஒருமுறை கூட அதிரச் செய்யும் என்கிறார்.

பத்மு தீவில் சிறைபடுத்தப்பட்ட யோவானுக்கு இறைவாக்கு வருகிறது (திவெ. 10). இறைத்தூதர் சுருள் ஒன்றைக் கொண்டு வந்து அதனை யோவானிடம் உண்ணச் சொல்கிறார். அது தேனைப்போல இனிமையாக இருந்தது. ஆனால் வாய் கசந்தது. நம் வாழ்வைப் பாதிக்காத இறைவாக்கு அறிவு புகட்டாது. நம் வாழ்வை, வசதிகளை இறைவாக்கு பாதிக்க வேண்டும். அப்போது இறைவாக்கு அறிவு புகட்டும். நாம் இறைவாக்கால் அறிவு பெறுகிறோமா?

**3. இறைவாக்கு எதிர்நோக்கு தருகிறது** (Envisioning Word of God)

செக்கரியாவின் பாடல் (லூக். 1:67-80) எதிர்நோக்கை முன்னறிவிக்கும் பாடல். ஆசாரியனாகிய சகரியா திருப்பாடல்கள் மற்றும்

இறைவாக்கு நூற்களை மையமாகக் கொண்டு இயேசுவின் பிறப்பின் சாரம், இறைவாக்கான இயேசுவின் வருகை புதிய எதிர்நோக்குகளை உருவாக்கும் என்கிறார்.

வச. 77 பாவமன்னிப்பால் வரும் மீட்பு

வச. 78 இருளில் இருப்போருக்கு ஒளி

வச. 79 விண்ணின் விடியலின் சந்திப்பு

என எதிர்நோக்கின் உயர்நிலைகளை விளக்குகின்றன. இங்குச் சந்திப்பு என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் மத்தேயு 25 : 36-இல் காவலில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையிலிருக்கும் அல்லது பிரச்சனையிலிருக்கும் ஒருவரைப் பார்க்க வருவதை விண்ணின் விடியல் நம்மைத் தேடி வருகிறது என்கிறார். கடவுளின் இரக்கம் (79) என்பது இறைநீதி. இறைநீதி வெளிப்படும் என்ற எதிர்நோக்கைச் செக்கரியாவின் பாடல் வெளிப்படுத்துகிறது. எத்தகைய எதிர்நோக்கு என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

a. Emotional - உணர்வு - எதிரிகளிடமிருந்து மீட்பு

b. Ethical - அறம் - தூய்மை, நீதி, வாழ்வு

c. Spiritual - ஆன்மிகம் - இறைப்பணி செய்யும் உந்துதல்

ஒரு இயேசு சமூகம் உருவாகுவதற்கான எதிர்நோக்கை இறைவாக்கு தருகிறது. இயேசு சமூகத்தில் அனைவரும் சமநிலையாளர்கள். திருச்சபை இறைவாக்கை நம்பும் சமூகம் அல்ல. இறைவாக்கின் மேல் கட்டப்பட்ட இறைவாக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் சமூகம். தரிசனம் காணும் சமூகம் இறைவாக்கு சமூகம். இறைவாக்கு மார்டின் லுத்தர் கிங் அவர்களை ஆற்றல் படுத்தியது, அறிவு வெளிச்சத்தை ஏற்படுத்தியது, எதிர்நோக்கை உருவாக்கிறது.

எனக்கு ஒரு கனவு இருக்கிறது (I have a dream). எனது நான்கு கறுப்புக் குழந்தைகள் தங்கள் நிறத்தினால் அல்ல, அவர்களது குணநலன்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற கனவு. இறைவாக்கின் வெளிச்சத்தில் ஆற்றல் பெறுவோம், அறிவு வெளிச்சத்தைப் பெறுவோம், எதிர்நோக்குக் கனவு காண்போம்.

அருள்திரு. முனைவர் M. **பீட்டர் சிங்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 185 | ஞா. | 216 |
| | கீர். | 439 | கீர். | 214 |

**17.12.2023** திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

# மீட்பின் நல்லெதிர்நோக்கு

## (Hope of Salvation)

செப். 3 : 14-20 2 பேது. 3:8-13

தி.பா. 43 மத். 1:18-25



“உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்; அவர் மாவீரர்; மீட்பு அளிப்பவர்; உன் பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்” (செப். 3 : 17).

உலக வாழ்வில் நல்லெதிர்நோக்கு நன்மையைத் தரும். இதற்கு எதிர்மறையான தீய எதிர்நோக்கு தீமையைத் தரும். இறைமக்கள் மீட்பின் நல்லெதிர்நோக்கு உடையவர்களாக வாழ்ந்து, மீட்பின் அனுபவத்தை சொந்தமாக்கிக் கொள்ள திருமறை போதிக்கிறது. இன்றைய திருமறை பகுதிகள் மீட்பின் நல்லெதிர்நோக்கைப் பிரதிபலிக்கின்றன. செப்பனியா கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர். இவர் காலம் யோசியா அரசர் கி.மு. 621-இல் செயல்படுத்திய சமய சீர்திருத்தத்திற்கு முன்னைய பத்தாண்டு காலம் எனக் கணக்கிடப்படுகிறது. செப்பனியா நூலின் செய்தி என்னவெனில் அழிவின் நாள் நெருங்கிவிட்டது. அப்பொழுது யூதா வேற்றுத் தெய்வங்களை வழிபட்டதற்காகத் தண்டிக்கப்படும். எருசலேம் அழிவுற்றாலும் மீண்டும் ஒருநாள் முன்னைய நன்னிலைக்கு உயர்த்தப்படும். நேர்மையும், பணிவும் உள்ள மக்கள் அங்கு மீண்டும் வாழ்வார்கள் என்ற மீட்பின் நல்லெதிர்நோக்கின் செய்தி தரப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுப் பகுதியில், மத்தேயு நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பில், யூத மக்களின் மீட்பின் நல்லெதிர்நோக்கு நிறைவேற்றப்படுவதைக் குறிப்பிடுகிறார். நிருபப் பகுதியில் பேதுரு அடிகளார் இயேசுகிறிஸ்துவின் 2-ஆம் வருகையின் தாமதத்தின் நல்லெதிர் நோக்கு அனைவரும் மனம்மாறி மீட்பின் அனுபவத்தைச் சொந்தமாக்கவேண்டும் என்பதே என்கிறார் (2 பேது.3:9). மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைவது குறித்து இன்றைய திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் சிந்திப்போம்.

## 1. உடன் இருப்பவரை உணர்ந்து மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைவோம்: (செப். 3:17 a, மத். 1:23)

"உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்."

எருசலேமின் அழிவும், மீட்பும் இவ்வதிகாரத்தில் சொல்லப்படுகிறது. எருசலேம் மக்கள் பிறசமய மக்களைப் போல பாவிகளாகிவிட்டதால் தண்டிக்கப்படுவர். அவர்கள் ஆண்டவரை வழிபட்டுப் பணி செய்வது போல நடிக்கின்றனர். ஆனால் அவர்கள் இருதயங்களில் அவரைப் புறக்கணித்து விட்டனர். எருசலேம் மக்கள் பாவம் செய்தாலும் ஆண்டவர் அவர்களைக் கைவிடவில்லை. அவர்கள் அந்நகரில் வாழ்கிறார்கள். ஆண்டவரும் அவர்களோடு வாழ்கிறார். எருசலேமின் தலைவர்கள், ஆட்சியாளர், நீதிபதிகள், இறைவாக்கினர், குருக்கள் என அனைவரையும் சாடுகிறார். மக்களை நல்வழி படுத்த வேண்டிய இவர்களே கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் பொறுப்பின்றிப் பாவத்தில் வாழ்கின்றனர் (செப். 3:3,4). ஆனாலும் அதனுள் இருக்கும் ஆண்டவரோ நீதி உள்ளவர் (செப். 3:5). தண்டனைக்குப் பிறகு புது உலகம் உருவாவதால் இஸ்ரயேலில் எஞ்சி இருப்போர் இறைவன் தங்களோடு வாழ்கிறார் என்பதை உணரும் இஸ்ரவேலரிடம் மகிழ்ந்து பாட அழைப்பு விடுக்கிறார்.

செப். 3:17-இல் "உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார். அவர் மாவீரர். மீட்பு அளிப்பவர் என்கிறார். அழிவின் செய்தியோடு இறைவாக்குரைத்த செப்பனியா நம்பிக்கையின் செய்தியோடு நிறைவு செய்கிறார். ஆம்! நம் வாழ்வின் எல்லாச் சூழலிலும் நம்முடன் இருக்கும் ஆண்டவரை நாம் உணரும் போது, நாம் மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைவோம். மத். 1:22,23-இல் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து மத்தேயு ஆக்கியோன் கூறும்போது" அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்.... இம்மானுவேல் என்றால் "கடவுள் நம்முடன் இருக்கிறார்" என்பது பொருள். நம்முடன் இருக்கும் கடவுளை நாம் உணர்ந்து வாழ்வில் முன்னேறிச் செல்வோம். நம் கடவுள் எல்லாச் சூழலிலும், எல்லா இடங்களிலும் நம்மோடிருப்பவர். சங்கீதக்காரர் கூறும்போது நான் வானத்திற்கு ஏறினால் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டால் நீர் அங்கேயும் இருக்கிறீர் என்கிறார். அவர் அண்மைக்கு மாத்திரமல்ல, தூரத்திற்கும் ஆண்டவர். "அவர் ஆக்கினைகளை அகற்றி, சத்துருக்களை விலக்குவார், நம் நடுவில் இருப்பார்" (செப். 3:15). நம்முடன்

உடனிருப்பவரை எப்போதும் உணர்ந்து மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைவோம்.

**2. இடர்களை அகற்றுபவரை அறிந்து மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைவோம்:** (செப். 3:15) திபா. 43:5; II பேது. 3:9)

“ஆண்டவர் உன் தண்டனை தீர்ப்பைத் தள்ளிவிட்டார். உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார். நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்” (செப். 3:15).

மீட்பின் நல்லெதிர் நோக்கை நமக்குத் தரும் கடவுள் நம்முடைய நிலைமைகளை அறிந்து, நம்முடைய இடர்பாடுகளை அகற்றுபவர். செப். 3 : 13-இல் இஸ்ரயேலில் எஞ்சியிருப்போர் கொடுமை செய்ய மாட்டார்கள், வஞ்சகப் பேச்சு இல்லை, அச்சுறுத்துவார் யாரும் இன்றி புசித்துப் படுத்துக் கொள்வார்கள். சீயோன் குமாரத்தியே, மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி உன் சத்துருக்களை விலக்கினார். இனி நீ தீங்குக்கு அஞ்ச மாட்டாய் என்றார். அத்துடன் உலகின் எல்லா மக்களிடையேயும் நீங்கள் பெயரும் புகழும் அடையும்படி செய்வேன் என்கிறார்.

உலக வாழ்வில் பல இடையூறுகளை, இன்னல்களை நாம் அடைகிறோம். அவை அகலும் போது மகிழ்ச்சி அடைவோம். அத்தகைய அனுபவத்தை ஆண்டவர் வழங்குவதாக இறைவாக்குநர் கூறுகிறார். நாம் வாழும் காலம் பல இன்னல், இடர்பாடுகள் மிகுந்த காலம். பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, வேலையின்மை, அடக்குமுறைகள், சமயச் சார்பின்மைக்கு அச்சுறுத்தல்கள், வன்முறைகள், அநீதிகள் நீதியாக சித்தரிக்கப்படல் எனப் பல இன்னல்கள். இவைகளிலிருந்து எப்போது விடிவு வரும் என்ற ஏக்கம் உள்ளது. அத்துடன் இரண்டு ஆண்டுகளாகக் கொரோனா வைரஸ் பரவும் அச்சுறுத்தல்கள், பொது முடக்கம், ஆலயத் தொழுகைகள் நிறுத்தம் என பல இடர்பாடுகளைச் சந்தித்தோம். இவ்வனுபவங்களில் இந்தத் திருமறை வசனங்களை எப்படிப் புரிந்துகொள்வது? எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. செப். 3:18-இல் “....பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவனை நான் ஏகமாய்க் கூட்டிக்கொள்வேன். உலகெங்கும் பெயரும், புகழும் பெறுமாறு செய்வேன்” என்கிறார். நாம் ஆராதிக்கும் ஆண்டவர் இடையூறுகளை அகற்றி, தடைகளை நீக்கி, கோணலானவைகளைச் செவ்வையாக்குபவர். எசா. 54:7,8

“நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன். ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன். பொங்கியெழும் சீற்றத்தால் இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன். ஆயினும் என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன்” என்கிறார் ஆண்டவர். மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன் மேல் மனதுருகிற ஆண்டவர் சொல்லுகிறார் (எசா. 54 : 10) எசா. 49:16-இல் “இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். உன் சுவர்கள் எப்பொழுதும் என் கண் முன் நிற்கின்றன.” இந்த நல்லெதிர்நோக்கு நமக்கு நல்வாழ்வைத் தரும்.

2 பேது. 3:9-இல் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் 2-ஆம் வருகை குறித்து பேதுரு அடிகளார் குறிப்பிடும்போது, அவர் வருகை தாமதமாவதன் காரணம் கூறுகிறார். ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்ற காலம் தாழ்த்துவது மனுமக்களுக்காக பொறுமையோடிருப்பதற்காக என்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம் மாறவேண்டும் என்று விரும்புகிறார் என்கிறார். நாம் அவர் வருகையின் போது அவராலே ஏற்றுக்கொள்ளப்பட தடையாக இருக்கும் இடர்பாடுகளைக் களைந்து அவரிடம் சேர அவர் காத்திருக்கிறார் என்ற செய்தி நமக்கு மீட்பின் நல்லெதிர் நோக்கைத் தருகிறது. தி.பா. 43:5 “என் நெஞ்சே! நீ நம்பிக்கை இழப்பது ஏன்? நீ கலக்கமுறுவது ஏன்? கடவுளையே நம்பியிரு; என் கடவுளின் மீட்பு செயல்களை முன்னிட்டு இன்னும் நான் அவருக்கு நன்றி செலுத்துவேன்” என்கிறார். யோபு பக்தர் தன் வாழ்வில் இடர்பாடுகளின் நடுவிலும் நல்லெதிர்நோக்குடன் இருந்தார். கர்த்தர் அவர் இடர்களை அகற்றி நல்லாசீர்வாதங்களைத் தந்தார்.

**3. மீட்பு தருபவரை ஏற்று மீட்பின் நல்லெதிர் நோக்கை அடைவோம் :** (செக். 3:17 b, மத். 1:21).

“உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்.... அவர் மீட்பு அளிப்பார்.”

“அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர் ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்.”

அகில உலகிற்கும் மீட்பு இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் இலவசமாய்த் தரப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் கடவுள் அகில உலகத்தை நேசித்த அவரது அன்பின் உச்சக்கட்டம். யோவா. 3:16-இல் தன் ஒரே மகன் மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். இப்படி நமக்கு மீட்பு தருபவரை நம் வாழ்வில் ஏற்கும் போது மீட்பின் நல்லெதிர் நோக்கை அடைவோம். அவர் இம்மானுவேல். நம்முடன் இருப்பவர்.

செப்பனியா தீர்க்கர் மூலம் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்குச் சொல்கின்ற போது : மக்கள் மீட்பு தருபவரை ஏற்கத் தடையாக இருக்கும் காரணிகள் மாற்றப்படும் என்கிறார். செப்.3:11-இல் நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ள மாட்டாய். இஸ்ரயேலின் மீதியானவர்கள் அநியாயஞ் செய்வதில்லை, அவர்கள் பொய் பேசுவதுமில்லை, வஞ்சக நாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை. அவர்கள் ஆண்டவருடைய நாமத்தின் மேல் நம்பிக்கையாய் இருப்பார்கள். அத்துடன் வாழ்வு தரும் மீட்பின் செய்தி வாக்களிக்கப்படுகிறது. செப். 3 : 7-9 "இதோ உன்னை ஒடுக்கியவர்களை அந்நாளில் நான் தண்டிப்பேன். கால் ஊனமுற்றவர்களைக் காப்பாற்றுவேன். ஒதுக்கப்பட்டவர்களை ஒன்று சேர்ப்பேன். அவமானமுற்ற அவர்களை உலகெங்கும் பெயரும், புகழும் பெறச் செய்வேன்" என்றார். ஆம்! மீட்பு தருபவரை ஏற்கும்போது, நம் வாழ்வில் நாம் மீட்பின் நல்லெதிர் நோக்கை அடைவோம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூத மக்களிடம் மீட்பைக் குறித்த ஒரு எதிர்நோக்கு இருந்தது. "ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்." அந்த எதிர்பார்ப்பு இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் நிறைவேறியது. வானதூதர் யோசேப்பிடம் இறைத் திட்டத்தைக் கூறும்போது "அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார், அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத். 1:21) என்றார். இயேசு கிறிஸ்து வழியாக நாம் பெற்ற மீட்புப்பணி தொடர்கிறது. நாம் அனைவரும் அவருக்குள் மீட்கப்படவேண்டும் என்பது அவர் விருப்பம். பேதுரு அடிகளார் அவர் வருகையைக் குறிப்பிடும் போது "ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும்

மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்” (2 பேது. 3:9) என்கிறார்.

மீட்புத் திட்டத்தில் கடவுளின் நல்லெதிர்நோக்கு வெளிப்படுகிறது. இதைத் திருமறையின் மூலம் கற்றுக்கொள்ளும் நாம் நம்முடன் இருந்து, இடர்களை அகற்றி, மீட்பை அருளும் ஆண்டவரை ஏற்று, மீட்பின் நல்லெதிர்நோக்கை அடைந்து கடவுளின் மீட்புத் திட்டத்திற்குப் பங்காளிகளாக மாறுவோம். நல்லெதிர்நோக்கு நன்மையானதைத் தரும். தீய எதிர்நோக்கு தீமையைத் தரும். இதை ஏதேன் தோட்ட ஆதிப் பெற்றோரின் அனுபவங்களும் நமக்குக் கற்றுத் தருகின்றன.

தீய எதிர்நோக்கு தீமையை, அழிவைத் தரும் என்பதற்குத் தினத்தந்தி நாளிதழில் (7.6.2022) வெளி வந்த ஒரு செய்தி உதாரணம். “20 பவுன் நகைகளை விற்று ஆன் லைனில் சூதாடிய இளம்பெண் தற்கொலை; பல இலட்சம் ரூபாய் இழந்ததால் சோகம்.” சென்னை திருவெற்றியூர் அருகில் மணலி புதுநகரில் வசித்த பவானி (வயது 29) B.Sc. பட்டதாரி. ஒரு வருடமாக ஆன்லைன் சூதாட்டத்தில் தீவிரமாய் ஈடுபட்டு, பணம் கட்டி விளையாடி, இழப்பு ஏற்பட்டு, கணவன் கண்டித்தும் அதிலிருந்து மீள முடியாமல், பலரிடம் கடன் வாங்கி வங்கிக் கணக்கில் போட்டு சூதாடி இறுதியில் எல்லாம் இழந்து, தன்வீட்டுக் குளியல் அறையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். ஆம்! தீய எதிர் நோக்கு அழிவைத் தரும். ஒருவரும் அழிந்து போகாமல் அனைவரையும் மீட்க கிறிஸ்து உலகில் வந்தார். அவரில் நாம் பெற்றிருக்கும் மீட்பின் நல்லெதிர் நோக்கில் உறுதியாய் இருந்து வாழ்வடைவோம்.

அருள்திரு. **T. டேவிட் கிளாட்சன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 79 | ஞா. | 428 |
| | கீர். | 80 | கீர். | 78 |

**24-12-2023** திருவருகைக் கால நான்காம் ஞாயிறு

# பேருவகை கொள்ளுங்கள் ஆண்டவர் அண்மையில் உள்ளார்

## Rejoice the Lord is Near

செக். 2:6-13 | 1 தெச. 5:12-24
திபா. 50:1-15 | யோவா. 16:16-24



"... உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கி விடமுடியாது."
(யோவான் 16 : 22)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட எதிர்நோக்கும் உலகம் தங்கள் தினக் கவலைகளுக்கு அப்பால் மனமகிழ்ச்சியோடு இயேசுவின் பிறப்பைக் கொண்டாட ஆயத்தப்படுவதைக் காணலாம். மின்னும் நட்சத்திரங்களாலும் அழகு பொருள்களாலும் வீட்டையும் ஆலயத்தையும் அலங்கரித்தும் ஆலயம் செல்வதும் விருந்தினர்களை உபசரிப்பதும் போன்ற நிகழ்வுகளால் நம்மைப் பேருவகைப்படுத்தும் நிகழ்வுகளாக இக்காலம் அமைந்திருக்கிறது. இவைகளோடு ஏழைகளை உபசரித்தும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தும் இயேசு காட்டும் இரக்கச் செயலான, தான தர்மங்களையும் செய்து ஆண்டவர் நம் அருகில் உள்ளார் என நம் மகிழ்ச்சியைப் பிறரிடம் வெளிப்படுத்துகிறதையும் நாம் காணலாம்.

பிற சமய மக்களோடு கிறிஸ்தவ உறவை ஏற்படுத்தும் காலமாகவும் இக்காலம் திகழ்கிறது. நமது தேசத் தந்தை காந்தியடிகள், இரண்டாவது வட்ட மேசை மாநாடு இங்கிலாந்தில் லண்டன் மாநகரில் டிசம்பர் 25 1931-இல் முடித்து தாய்நாடு திரும்புகிறார். அப்போது சில கிறிஸ்தவர்கள் அவரிடம் கிறிஸ்மஸ் செய்தி ஒன்று சொல்லுமாறு கேட்டார்கள். அதற்குத் தேசத்தந்தை வேதத்தின் உண்மைகளை மலைப் பிரசங்கத்தின் (மத். 5, 6, 7) வாயிலாக கிறிஸ்மஸ் செய்தியைப் பகிர்ந்து ஆன்மிக வாழ்வின் பசி இன்னும் ஓயவில்லை என்றும், நாம் வாழும் சமூகத்தில் இன்னும் கிறிஸ்து பிறக்கவில்லை. அவர் நமக்குத் தந்து சென்ற போதனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் கூறி ஒரு மகிழ்வான கிறிஸ்துப் பிறப்பு என்பது வாழும் கிறிஸ்துவை அவர் போதனைகள் வழியாக வாழ வைக்க வேண்டும் என்றும் கூறி சிறந்த

கிறிஸ்துப் பிறப்புச் செய்தியைப் பகிர்ந்து கொண்டாராம். நமது அண்மையில் உள்ள கிறிஸ்துவில் நாம் எவ்வகையில் பேருவகை கொள்ள வேண்டுமென்பதைத் திருவிவிலியத்தின் அடிப்படையில் சிந்திப்போம்.

**1. அகமகிழ்** (1 தெச. 6 : 16)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அகமகிழ்வின் நிகழ்வாகக் கருதப்படுகிறது (லூக். 2 : 10). விவிலிய வரலாற்றில் இறைவாக்கினர் செக்கரியா பாபிலோனியச் சிறையிருப்பில் வாழும் இஸ்ரயேலருக்கு நம்பிக்கையின் அழைப்பைக் கொடுக்கிறார். "மகளே சீயோன்! அகமகிழ்ந்து ஆர்ப்பரி. இதோ நான் வருகிறேன் வந்து உன் நடுவில் குடிகொள்வேன்" (செக். 2 : 10). இந்த அழைப்பு வேற்றினத்தார் பலருக்கும் உரிய அழைப்பும் கூட என்கிறார் (செக். 2 : 11). ஆக மகிழ்வின் காலம் இஸ்ரயேலர் மட்டும் அனுபவிக்கும் நிகழ்வாக செக்கரியா இறைவாக்கினர் காணவில்லை. வேற்றினத்தாரும் பிற சமய மக்கள் அனைவரும் பேருவகை கொள்ளும் காலமாகவும் அந்த அழைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இறைவாக்கினர் செக்கரியா, படைகளின் ஆண்டவர் வேற்றினத்தார் மத்தியில் குடிக்கொள்வேன் என்கிறார். உலகப் படைபலம் நாம் வாழும் சமூகத்தில் நவீன ஆயுதங்களோடு காட்சி அளிக்கிறது. ஆனால் அவை மக்களுக்குப் பாதுகாவலைத் தருவதில்லை. உலக நாடுகளின் நவீன படைகள் அழிவை நோக்கி மக்களை நடத்திச் செல்கின்றன. பாபிலோனியப் படைகளும் அழிவையே அன்று மக்களுக்குக் கொடுத்தது. ஆனால் இறைவாக்கினர், படைகளின் ஆண்டவர் நம்மோடு இம்மானுவேலராய், வாழ்வு தரும் ஆண்டவராய் நமக்குத் துணை நிற்கிறார் என்ற உண்மையை வலுப்படுத்துகிறார்.

"அவர் உன் நடுவில் தங்கி இருப்பார்" (செக். 2 : 11). ஏனெனில் அவர் படைகளின் ஆண்டவர். ஆகவே, எந்த யுத்தங்களையும் கண்டு அஞ்ச வேண்டாம், அகமகிழ்! என்ற அழைப்பு "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்" (1 தெச 5:6) என்பதாகும். பகையும், யுத்தங்களும் உலக மக்களைப் பயப்படுத்தும்போது படைகளின் ஆண்டவர் நம்மோடு வாழுகின்றார் என்ற நம்பிக்கையோடு இக்கிறிஸ்து பிறப்புக் காலம் அனைத்து மக்களும் பேருவகை கொள்ளும் காலமாக அமைவதாக.

**2. நீதியரசரின் வருகைக்காய்ப் பேருவகைகொள்** (திபா. 50 : 6)

அநீதி நிறைந்த உலகில் மக்கள் எப்படிப் பேருவகை கொள்ள முடியும். தீமைக்குமேல் தீமை பெருகி மனிதநேயம் குன்றிப்போய் அநீதியின் விளைவால் மக்கள் அமைதி இழந்து வாழ்கின்றனர். அகமகிழும் காலம் இல்லாத காலக்கட்டத்தில் நீதி அரசரின் பிறப்பு சமூக மாற்றத்தைத் தருகிறது.

"தீமைக்குப் பதில் தீமை செய்யாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்." (1 தெச. 5:13) என்ற பவுலாரின் வார்த்தைகளில் அநீதி செய்து வாழும் மக்கள் எச்சரிக்கப்படுவதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவின் போதனைகளில் வாழும் மக்கள் அநீதியான வாழ்வுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்காதபடி வாழ அறிவுரை வழங்கப்படுகிறது. படைகளின் ஆண்டவர் அதைப்பார்த்துக் கொள்வார். உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான் (செக் 2:8) என்ற திருவாக்கில் நீதி வழங்கும் அரசர் தமது படைபலத்தால் நமக்கு விடுதலை தருகிறார். எனவே தீமையோடு நாம் எதிர்த்து நிற்காமல் அதை இறைவனின் ஆளுமைக்குள் ஒப்படைக்க இறைவாக்கினர் செக்கரியா பரிந்துரைக்கிறார்.

திருப்பாடல்களில் வான்வெளி கடவுளின் நீதியை எடுத்துச் சொல்கிறது எனவும், இயற்கையின் வெளிப்பாடு இறைவனின் நீதியைக் காட்டுகிறது எனவும் பார்க்கிறோம். "வான்வெளி அவரது நீதியை எடுத்தியம்பும்; ஏனெனில் கடவுள் தாமே நீதிபதியாய் வருகின்றார்" (திபா. 50:6). இவ்வாறு கிறிஸ்துவின் பிறப்பு நீதியை நிலைநாட்டும் அரசரின் வருகை. இந்த மகிமையின் காலம் நீதியின் காலமாக இயேசுவின் பிறப்பு அமைய மக்கள் அவர் பிறப்பின் வருகையை எதிர்நோக்கினர். இவரே தீர்ப்பு வழங்கும் இறைவனாக மக்களை அநீதியிலிருந்து மீட்டு நீதியின் பாதையில் நடத்துகிறார்.

**3. துயரம் நீக்கும் பெருமகிழ்வு** (யோவா. 16:21)

உலகில் ஒரு மனித உயிர் தோன்ற ஒரு தாய் பல வேதனைகளைச் சகிக்கிறார். இந்த வேதனையின் அனுபவம் தனது பேறுகாலம் முடிந்து குழந்தையைப் பெற்றெடுத்தபின் அதை நினைப்பது இல்லை (யோவான் 16:21). துயரம் மகிழ்வாக மாறும் காலம் தான் கிறிஸ்மஸ். துயரத்தை நீக்குவதே கிறிஸ்துப்பிறப்பின் அடையாளமாக உள்ளது.

இத்துயரம் நீக்கும் பணியில் கிறிஸ்தவர்கள் தங்களை ஈடுபடுத்தி உள்ளனர். அநேக ஆதரவற்றோர் காப்பகங்கள் ஸ்தாபிக்கப்பட்டு தாய், தகப்பன் ஆதரவு இன்றி வாழும் குழந்தைகளைக் காப்பாற்றி வருகின்றார்கள். 2021-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் மட்டும் 31 கோடி குழந்தைகள் ஆதரவற்றோராக விடப்பட்டுள்ளனர். திருச்சபைகள் குழந்தைகளைக் காப்பாற்றும் வகையில் பல முயற்சிகளை எடுத்து இளம் உள்ளங்களுக்கு நல்ல எதிர்காலத்தைத் தந்துள்ளது. இந்தப் பெரும் செயலை தூய பவுலார் என்றைக்கும் எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள் (1 தெச. 5:15) எனத் தெளிவாகச் சொல்கிறார். இப்பெரும் பணி துயரம் நீக்கும் ஒப்பற்ற பணியாகும்.

பிறர் துயரம் நீக்கும் பணியினை நற்செயலாலும், போதனைகளாலும் நிறைவேற்ற கிறிஸ்துவின் பிறப்பு அடித்தளமாக அமைந்துள்ளது. மத்தேயு 19 : 14-இல் "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்ற அழைப்பு இளம் உள்ளங்கள் மகிழ்வின் காலத்தைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதாகும். உலகத்தில் வாழும் குழந்தைகளில் 152 கோடி குழந்தைகள் அடிமைப்பணியாளர்களாக பணி செய்கின்றனர். இக்குழந்தைகள் துயரம் நீங்கி மகிழ்வின் காலம் ஒன்று வரும் என்ற எதிர்பார்ப்பில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து பிறப்பைச் சந்திக்கின்றனர்.. பிள்ளைகளின் துயரங்களை ஆண்டவர் நீக்கும்படி அவர்களைத் தடைபண்ணும் தீயசக்திகளை மேற்கொண்டு விடுதலைப் பணியின் முன்னோடிகளாக நம்மை மாற்ற மகிழ்வோடு கிறிஸ்து பிறப்பை எதிர்நோக்குவோம்.

அருள்திரு. **பெனோ A. ஈனோஸ்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 112 | ஞா. | 87 |
| | கீர். | 77 | கீர். | 78 |


**24-12-2023** Christmas Eve

# கடவுள் நம்மிடம் வருகிறார்

## God Coming to Us

மீக். 5 : 1-9 தி.வெ. 21 : 1-5

திபா. 89 : 1-4, 19-29 யோவா. 1 : 1-14



வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார்
அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் (யோ. 1 : 14)

வருகையின் காலம் நம் அன்றாட வாழ்வில் விழிப்போடிருந்து, ஆண்டவரைச் சந்திக்க நம்மை ஆயத்தம் செய்யும் காலம். கடவுள் எப்போதும் கூடவே இருக்கவேண்டும் என்பது மனிதனின் எதிர்பார்ப்பு. கடவுளின் திருப்பிரசன்னம் மனிதருக்கு பெலத்தையும், நம்பிக்கையையும் தருகிறது.

கிறிஸ்துவின் முதல் வருகை கடவுளின் உடனிருப்பை (இம்மானுவேல்) உணரச் செய்கிறது. இரண்டாம் வருகை (வெளியரங்கமான வருகை) ஆண்டவரை எதிர்கொள்ள நம்மை அழைக்கிறது. முதல் வருகையால் மீட்பும், இரண்டாம் வருகையால் மகிமையும் மனிதரை வந்து சேருகிறது. தீர்க்கன் மீக்கா கிறிஸ்துவின் வருகையால் ஏற்படும் மாற்றங்களையும், திருவெளிப்பாடு நூலில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஏற்படும் மாற்றங்களையும் தெளிவாகக் கூறியுள்ளனர். கடவுள் நம்மிடம் வருவதின் நோக்கம் என்ன என்பதைச் சிந்திப்போம்.

### 1. நம்மை ஆளுகை செய்ய வருகிறார்

.... இஸ்ரவேலை என் சார்பாக ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்தே தோன்றுவார் (மீக். 5 : 2)

மீக்காவின் காலத்தில் யூதா, இஸ்ரவேல் ஆகிய இரு நாடுகளிலும் சமூக, சமய, அரசியல் நிலையில் குழப்பங்களும், கொந்தளிப்பும் மிகுந்து இருந்தது. இப்படிப்பட்ட சூழலில் ஒவ்வொரு நிலையில்

வாழ்பவரையும் அரவணைத்துச் செல்லும் இறைவனது அரசு நிறுவப்படும். இதனால் எதிர்காலத்தைக் குறித்த அச்ச உணர்வு அகன்று போகும்; நீதி, அமைதி உருவாகும் (மீக். 5 : 4, 5) என்று மீக்கா உறுதிப்பட கூறுகிறார்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து "இறையாட்சியை" மையமாகக் கொண்டே வாழ்ந்தார். பணிசெய்தார். அதிகாரிகளின் கொடிய ஆளுகையினைக் கண்டித்தார். தாழ்நிலையில் இருப்போரும் ஆளுகின்றவர்களாக வரவேண்டுமென்று கற்பித்தார். அவரின் ஆளுகை அன்பினை அடிமைத்தனமாகக் கொண்ட ஆளுகை. நாமும் அன்பின் அடிப்படையில் பணி செய்ய அழைக்கிறார்.

**2. நம்மை கடவுளின் பிள்ளைகளாக்க வருகிறார்**

"அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" (யோவான் 1 : 12)

வரலாற்றில் பலர் தங்களை வழிகாட்டிகளாகவும், விடுதலைத் தலைவர்களாகவும் அறிமுகப்படுத்தியது உண்டு. ஆனால் திருமுழுக்குநர் யோவான் யாரைக் குறித்து சாட்சி கொடுத்தாரோ, அவரே உண்மையான ஒளி. உலகிற்கு வந்து அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி. இந்த உண்மையான ஒளி உலகிற்கு வந்ததாலேயே அனைத்து மானிடருக்கும் ஒளி கிடைத்தது. எந்த நாட்டினர் என்றோ, எந்த இனத்தவர் என்றோ, எந்த நிறத்தினர் என்றோ எவ்வித பாகுபாடுமின்றி அந்த ஒளியானது எல்லா மனிதர் மீதும் பிரகாசிக்கிறது.

ஒளியாகிய அவரை ஏற்றுக்கொள்பவர்கள் மீட்பைப் பெறுகின்றனர். மீட்பே அடிப்படை நோக்கம். அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். (யோவா. 1 : 9). நாம் கடவுளின் பிள்ளைகள் என்பது நமக்குக் கிடைத்த பெரும்பேறு அல்லவா?

**3. நம்மை புதிய படைப்பாக மாற்ற வருகிறார்**

பின்பு நான் புதியதொரு விண்ணகத்தையும், புதியதொரு மண்ணகத்தையும் கண்டேன் (தி.வெ. 21 : 1)

விண்ணகமும் மண்ணகமும் முற்றிலும் மாறுபட்ட திருப்பத்தைப் பெறும் என்கிறார் யோவான். கடவுளின் வருகை மக்களுக்குப் புதிய வாய்ப்புகளைத் தந்து மகிமைப்படுத்தும். அது அச்சுறுத்தல் நிறைந்தது அல்ல; படைப்பின் நோக்கத்தைச் சரிவரப் புரிந்து வாழ்வை நடத்தும் மக்களுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உண்டு. கடவுள் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார் (தி.வெ. 21 : 3, 4). நம் துயரில் பங்குகொள்கிறார். ஆற்றல் அளிக்கிறார்.

ரிச்சர்டு உம்பிராண்டு என்ற பக்தன் கடவுள் மேல் வைத்த விசுவாசத்திற்காக 14 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்தார். அவர் தம் சிறை அனுபவத்தைக் கூறும்போது, நான் பல வேளைகளில் சிறை அதிகாரிகளால் இரத்தம் பீறிட அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு சிறைச்சாலைக்குள் வேதனை அனுபவித்த போதெல்லாம் கிறிஸ்து நினையாத வேளையில் வந்து தம் அன்பின் கரத்தினால் அரவணைத்து என்னைத் தேற்றுகிறதை உணர்ந்திருக்கிறேன். அவருடைய பலத்த கரத்துக்குள் ஒரு குழந்தையைப் போல நான் அடைக்கலம் புகுந்திருக்கிறேன். என் வாழ்வின் கலங்கிய வேளைகளில் கடவுள் துணை நிற்பதை அனுபவித்திருக்கிறேன் என்கிறார்.

துன்பமும் துயரமும் பல வகைகளில் நம் வாழ்வைச் சந்திக்கின்றன. அத்தகு நேரங்களில் கடவுள் நம் அருகில் வந்து கண்ணீரைத் துடைக்கிறார். கவலையை மாற்றுகிறார்.

அன்பினை அடிப்படையாகக்கொண்டு, கடவுளின் பிள்ளைகளாக புதிய படைப்பின் பங்காளர்களாக ஆண்டவரைச் சந்திக்க ஆயத்தமாவோமாக.

அருள்திரு. **V. ஜாண்சன் கில்பர்ட்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 92 | ஞா. | 104 |
| | கீர். | 95 | கீர். | 96 |

**25-12-2023** கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா

# கிறிஸ்துப் பிறப்பு : அமைதியின் அரசருக்கு இடத்தைக் கண்டறிதல்

## Finding space for the Prince of Peace

எசா 9 : 2 - 7 எபே. 1 : 3 - 14

திபா. 85 : 8 - 13 லூக். 2 : 1 - 14



விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை

(லூக். 2 : 7()

அமைதியின் அரசர் இயேசு குழந்தையின் பெயரில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

அன்று அவருக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனால் இன்று இடம் கிடைத்திருக்கிறது. எங்கே நீதியும் அமைதியும் உண்டோ அங்கே இடம் உண்டு (திபா. 85 : 10).

கீழ்க்காணும் நான்கு இடங்களில் அவருக்கு இடம் உண்டு.

**1. நமது தனிவாழ்வில் இடம் இருக்கிறது** (Let us find place in our Personal Lives)

நீதியுள்ள தனி வாழ்வு, சமாதானத்தை நாடும் தனிவாழ்வு அமைதியின் அரசருக்கு இடம் வழங்குகிறது. இதையே சிமியோன் சொன்னார் (லூக். 2 : 29). இதையே சக்கேயு அனுபவித்தார் (லூக். 19 : 1-10) நாமும் நீதி அமைதிக்கான செயல்பாடுகளில் தனி மனிதர்களாக ஈடுபடுவோம்; அதற்காகப் பாடுபடுவோம். நீதி, அமைதி என்பது முதலாவது நமது தனி வாழ்வில் தொடங்கட்டும்.

**2. நமது திருச்சபையில் இடம் இருக்கிறது** (Let us find place in our Church Life)

திருச்சபை நீதியின் அடையாளம், சமாதானத்தின் அடையாளம் (உரோ. 14 : 17). அதுவே இறையரசின் அடையாளம். சாதியாலும், இனத்தாலும், மொழியாலும் பிரிந்து நிற்கும் திருச்சபையில் அமைதியின் அரசர்க்கு இடம் இல்லை. ஆனால் அவரது சிலுவையே திருச்சபையில்

அமைதியைக் கொண்டு வருகிறது (எபே. 2 : 16), நம்மை இணைத்து வைக்கிறது. தென்னிந்தியத் திருச்சபை ஒருமைப்பாட்டின் திருச்சபை. ஏழு சபைப் பிரிவுகள் ஒன்றிணைந்து ஒரே சயையானது அற்புதம். கிறிஸ்துப் பிறப்பு காலத்தில் பிரிந்த சபைகள் ஒன்றிணையவேண்டும். ஏனெனில் கிறிஸ்துப் பிறப்பு ஒன்றிப்பின் அடையாளமாகும்.

**3. நமது சமூகத்தில் இடம் இருக்கிறது** (Let us find place in our Social Life)

அது சமூக நீதியால் (Social Justice) வருகிற சமாதானம். ஏழைகள், மேய்ப்பர்கள், மரியா போன்ற ஒதுக்கப்பட்டோர், சிமியோன் அன்னா போன்ற முதியவர்கள் முதலியோருக்கு கிடைக்கும் சமூக நீதியால் கிடைக்கப்பெறும் இடம். அதுவே மண்ணுலகில் சமாதானம் என்று இறைவனின் தூதரால் அறிவிக்கப்பட்டது (லூக். 2 : 14). அதையே எசா. 9 : 2 -7-ல் படிக்கிறோம். (பார்க்க எசாயா. 11 : 4). எங்கே சமூக நீதி இல்லையோ அங்கு சமாதானம் இராது. இது நம்முடைய அரசியல்வாதிகளுக்குப் புரிந்தால் நல்லது. அவர்கள் சமாதானம், ஒற்றுமை என்று பேசுவார்கள். ஆனால் சமூக நீதி என்று வரும்போது பேசமாட்டார்கள். கிறிஸ்துப் பிறப்பில் சமாதானமும், சமூக நீதியும் இணைந்து நிற்கின்றன.

**4. நமது இயற்கைச் சூழலில் இடம் இருக்கிறது** (Let us find place in our Eco. Context)

கிறிஸ்துப் பிறப்புச் செய்தியில் இயற்கையின் அடையாளங்கள் எவை? மாட்டுத்தொழுவம், நட்சத்திரம், ஆட்டு மந்தை, வயல்வெளி மற்றும் பிற. கிறிஸ்துப் பிறப்பு எப்போதுமே மண் மணக்கும் கிறிஸ்துப் பிறப்பு தான். Justice to the nature is finding place for christ the child. அதுவே சுற்றுப்புறச் சூழல் அறம் ஆகும் (Ecojustice) . அதையே நாம் எசா 11 : 6-இல் புதிய படைப்பின் அமைதியாகப் பார்க்கிறோம். மனுக்குலமும் இயற்கையும் ஒன்றாய் சேரணும். இந்த மாநிலமே சமாதானமா வாழனும். இயற்கையில் இடம் இருக்கிறது.

அருள்திரு. அறிவர் **ஞானவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 107 | ஞா. | 106 |
| | கீர். | 97 | கீர். | 105 |

**31-12-2023** கிறிஸ்து பிறப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு

# குடும்பம் : கடவுளின் அருட்கொடை

## Family as Gift of God

யோசு. 24 : 14-22 எபேசி. 3 : 14-21

தி.பா. : 128 மாற். 3 : 31-35



"....நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு. 24 : 15c).

இறையாசி பெற்ற குடும்பங்கள் மகிழ்ச்சியும், நிறைவும், சமாதானமும் உடையவர்களாகச் சான்று பகர முடியும். குடும்ப வாழ்வின் பொக்கிஷம் கிறிஸ்து. படைப்பில் முதல் குடும்பமாகிய ஆதாம், ஏவாள் ஆகிய இருவரையும் இணைத்து அழகு பார்த்தவர் கடவுள். மனித முயற்சியினால் வடிவமைக்கப்பட்டதன்று குடும்பம். குடும்பம் என்பது கணவன், மனைவி, தாய், தந்தை, பாட்டி, தாத்தா, சகோதரர், சகோதரிகள் போன்றோரை உள்ளடக்கியது. குடும்பத்துடன் இருக்கும் போது நல்லெண்ணம் இருக்கும், பாதுகாப்பு இருக்கும், நல்ல நேரத்தைப் பெற்றுக்கொண்டதாக இருக்கும். குடும்பம் கடவுளின் கொடை. ஆகவே குடும்பத்தில் நல்லுறவும், உண்மையும், மாண்பும் காக்கப்பட வேண்டும்.

### 1. உறவில் குடும்பம்

இவ்வுலகில் எல்லோரும் செய்ய வேண்டிய கடமை, அவரவர் குடும்ப உறவுகளை உயரச் செய்ய வேண்டும். இறைப் பண்புகள் குடும்ப உறவினர்கள் மத்தியிலும், மற்றவர்களோடும் நல்லுறவை வளர்க்கப் பயன்படும். இக்காலத்தில் உறவு முறைகளில் ஏற்படும் பிளவு, ஒருவர் மற்றவருக்கு அந்நியராக இருக்கும் நிலையைத் தோற்றுவித்து உறவுகளில் தவறுகின்றவர்களாக மாற்றுகின்றது. குழந்தைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும். ஒருவரை ஒருவர் மதித்து வாழ்வதால் என்றென்றும் உறவு நிலைத்து இருக்கும். சுயநலமற்ற குடும்பங்களாக வாழ்வது உறவை வலுப்படுத்தும்.

குடும்பங்கள் ஒற்றுமையாக வாழ்வது சவால் நிறைந்த ஒன்று. குடும்பம் கண்ணாடியைப் போன்றது. அந்தக் கண்ணாடியில் நமமை நாமே காண முயற்சிக்க வேண்டும். குடும்ப உறவே சமூக உறவுக்கு அடித்தளம். இன்றைய குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளைப் புரிந்துகொள்ள மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பிள்ளைகள் பெற்றோரின் அதிகாரத்தையும், முதியோரின் அறிவுரைகளையும் ஏற்க விரும்புவதில்லை. ஆகவே, குடும்ப உறவுகள் சுமூகமாக இருப்பது குறைந்துகொண்டு வருகின்றது. முதியோர் இல்லத்தில் ஒருதாய் தன் உணவுத் தட்டில் வாங்கிய உணவை இரு பாகங்களாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை உண்ட பின் மறுபாகத்தை அப்படியே வைத்துவிட்டு ஏக்கத்தோடு அமர்ந்து இருக்கும்போது கேட்டால் என் மகன் வருவான். நான் தான் சிறுவயதில் இருந்தே உணவு ஊட்டிவிடுவேன் நான் உணவு ஊட்டினால்தான் சாப்பிடுவான், அவனுக்காகக் காத்திருக்கிறேன் என ஒவ்வொரு முறையும் பதில் சொன்னார். இறைக் குடும்பங்கள் என்றென்றும் உறவில் வாழ்ந்து மகிழ்ந்து சான்றாகும்.

**2. உண்மையில் குடும்பம்** (யோசு. 24 : 14-31)

இறை வார்த்தையினால் கட்டி எழுப்பப்படும் குடும்பம் உண்மையில் நிலைத்திருக்கும். வறுமையில் வாடுகின்ற குடும்பங்களும் உண்டு. சந்தேகத்தில் அலைக்கழிக்கப்படும் குடும்பங்களும் உண்டு. குடும்பத்தில் உண்மையாகக் காலாகாலங்களில் உழைக்கவேண்டும். இந்தக் காலம் பெற்றோர் பிள்ளைகள் உறவுகூட போலியாகக் காணப்படுகிறது. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் ஒத்துப்போக நேர்ந்தால் மட்டுமே குடும்பத்தில் உண்மை நிலவ முடியும். கணவன் மனைவி இடையே இருக்க வேண்டிய நம்பிக்கை இன்று அவநம்பிக்கையாக மாறி வருகின்றது. அண்ணன் தம்பியிடையே உண்மையற்ற பாசம்தான் நிலவி வருகின்றது. குடும்பங்கள் தியாக உள்ளத்தோடு உழைத்து முன்னேற வேண்டும். கடவுள் குடும்பத்தை உண்டாக்கியது இறைக் குடும்பத்தில் பங்குபெறவே ஆகும். ஒருவருக்கொருவர் குடும்பத்தில் உண்மை இல்லையேல் நித்திய வாழ்வைச் சுதந்தரிக்க முடியாது. அன்பு நிறைந்த கணவன், பாசம் நிறைந்த மனைவி, கீழ்ப்படிதல், அறிவில், ஞானத்தில் நிறைந்து வளரும் பிள்ளைகள் காலச் சூழலுக்கு ஏற்ப குடும்பத்தில் சான்றாகும் போது குடும்பம் இறைத்திட்டத்தில் இணையும்.

**3. உன்னத குடும்பம்** (மாற். 3 : 31-35)

கடவுளையும் மனிதரையும் ஒரே இடத்தில் உறைய வைக்கும் சிறு ஆலயம் குடும்பம். இங்கே அங்கத்தினர் ஒருவருக்கொருவர் வைக்கும் நம்பிக்கை சுமைகள் இல்லாக் குடும்பமாக வாழமுடியும். குடும்பத்தில் ஒவ்வொருவரும் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்ச்சி, கனிவு, பொறுமை போன்ற பண்புகளை அணிகலன்களாகக் கொள்ளவேண்டும். நாம் எதைச் சொன்னாலும், செய்தாலும் கடவுளையே மகிமைப்படுத்தவேண்டும். இறைத்திருவுளத்துக்கு தன்னை அர்ப்பணித்த மரியாள் கணவர் யோசேப்போடு அனுசரித்து வாழ்ந்தார். யோசேப்பு தரிசனங்கள் வழியாக இறைத்திருவுளத்தை உணர்ந்து குடும்ப வாழ்வை முன்னெடுத்தார். அன்பு குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் பண்பு ஆகும். அன்பே குடும்பத்தின் அச்சாணி. அன்புள்ள குடும்பங்களில் வாழ்க்கை இன்பமாய் மாறும். குடும்பங்களில் அன்பைக் காட்டவும், அன்பைப் பெற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்கிறோம். உலகத்தில் எப்பேர்பட்ட உயர்வாக இருந்தாலும் இல்லத்தில் வரும் போது நிம்மதி இல்லை என்றால் எப்பயனும் இருக்க முடியாது. இயேசுகிறிஸ்து தனது 12-ஆம் வயதில் எருசலேம் சென்றார். இயேசுவைக் காணவில்லை என்று அறிந்தவுடன் யோசேப்பு, மரியாள் ஆகியோரின் உள்ளம் துடித்தது. இருவரும் மாறி மாறி மற்றவரிடம் இயேசு குழந்தை எங்கு இருப்பார் என எண்ணி இருக்கலாம். இருவரும் கலக்கத்தோடு தேடுகின்றனர். இங்கு ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு இருக்கவில்லை. மாறாக, இருவரும் இணைந்து தேடிக் கண்டு கொண்டனர்.

கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்டவர்கள் யாவரும் ஒரு கிறிஸ்தவக் குடும்பம். இங்கே யார் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்களோ, மீட்பைச் சொந்தமாக்கி, மறுபடி பிறந்த அனுபவத்தோடு அன்றாடம் வாழ்கிறார்களோ அவர்கள் எல்லாரும் இயேசுவின் குடும்பமாக காணப்படுகிறார்கள். இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் ஒப்புரவாகாமை, விட்டுக்கொடுக்காமை, ஒருவருக்கொருவர் இறை நாமத்தை தூஷித்து வாழ்கிறபடியினால் தலையாக இருக்கும் இயேசுவை இன்று மற்றவர்கள் மத்தியில் அறிவிக்க முடியவில்லை. மனிதர்கள் நம் உடன்பிறப்புகள் என்ற சிந்தனையில் வாழும்போது குடும்பம் இறைத் திட்டத்தின் அருட்கொடையாகக் காணப்படும்.

இறையாசியைச் சுதந்தரித்துக் கொண்ட குடும்பம் கடவுளின் உண்மையான பரிசு. அந்தக் குடும்பத்தில் குடும்ப ஜெபம் நடைபெறும். சுயநலம் சற்றும் இருக்காது. உறவுகளில் நிலைத்திருப்பார்கள். எல்லாவற்றிலும் உண்மையாக வாழ்வார்கள். இயேசு மீட்பர் ஒரு குடும்பத்தில் பிறந்து உன்னத குடும்பமாகிய நித்திய ராஜ்யத்தைத் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அருளிச் செய்தார்.

அருள்திரு. T. **ஜாண் பீட்டர்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. 1 | கீர். 9 |
| | ஞா.385 (Tune: போற்றிடு ஆன்மமே) | கீர். 309 |

**31-12-2023** ஆண்டு நிறைவு நன்றித்தொழுகை

# நன்றியறிதலுடன் ஆண்டவரிடம் வாருங்கள்

## Come to the Lord with Thanksgiving

2 சாமு. 6 : 1-15 கொலோ. 3 : 12-17

திபா. 91 லூக். 17 : 11-19



. . . நன்றியுள்ளவர்களாயிருங்கள். (கொலோ. 3 : 15)

ஒருவர் நமக்குச் செய்த உதவியை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதின் வெளிப்பாடாகக் கூறுவதுதான் நன்றி. நன்றி மறப்பது நன்றன்று என்பார்கள் ஆன்றோர். மனித உறவுகளைப் பேணவும், மேம்படுத்தவும் இப்பண்பு பெரும் பங்கு வகிக்கின்றது. இந்நாளளவும் நம் அனைவரையும் கண்ணின் மணிபோல் காத்து, மறவாமல் நினைத்து தீமைகளுக்கெல்லாம் விலக்கி, தமது பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டி, வாழ்நாளை நலன்களால் நிறைவு செய்கின்ற நம் ஆண்டவரைப் போற்றுவதும், புகழ்வதும் நம் கடன் என்றுணர்ந்து நாமும் நன்றியறிதலுடன் நன்மை செய்த ஆண்டவருடன் நல்லுறவை ஏற்படுத்தி முழுமையான ஈடுபாட்டுடன் ஆராதிப்பது சிறப்பு. எதற்காக நாம் ஆண்டவருக்கு நன்றி சொல்லவேண்டும் எனத் தியானிப்போம்.

### எதற்கெல்லாம் நன்றி நவில்வது

**1. ஆண்டவரின் உடனிருப்புக்காக :** 2 சாமு. 6 : 1-15

எங்கும் நிறைந்த ஆண்டவர் இங்கும் இருக்கிறார் என்னும் உண்மையை எபிரேயர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் உருவாக்கம் பெற்றதே உடன்படிக்கையின் பேழை (Ark of the Covenant). இது சாட்சியின் பேழை என்றும் அறியப்படுகிறது. இது தூக்கிச் செல்லக்கூடிய அளவிலான சிறிய பெட்டி ஆகும் (யாத். 25 : 10). இதனுள் இரண்டு கற்பலகைகளும், பின்பு மன்னாவில் ஒரு ஓமர் மற்றும் ஆரோனின் துளிர்த்த கோலும் வைக்கப்பட்டிருந்தன (எபி. 9 : 4). இஸ்ரயேலர் வனாந்தர நாட்களில் இதனைச் சுமந்து சென்றனர்.

யாவேயின் அரச மாண்பையும் அவரது தலைமைப் பண்பையும் குறிக்கும் வகையில் போர்களில் படைகளின் முன் கொண்டு செல்லப்பட்டது. ஆண்டவர் இஸ்ரயேலுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாகவும் இப்பேழை விளங்கியது. ஏனெனில் அவர்களைத் தமது மக்களாக அவரே தேர்ந்து கொண்டார். தமது கட்டளைகளைத் தந்ததுடன் தமது செயலாலும் சொல்லாலும் தமது மக்களிடையே பிரசன்னமாய் இருக்கிறார், செயலாற்றுகிறார், பரிபாலிக்கிறார் என்பதற்கும் அது அடையாளமாக விளங்கியது. இத்தனை சிறப்புகளையும் உள்ளடக்கிய பேழையை தாவீது மீட்டு எருசலேம் கொண்டு வந்து, ஆடல், பாடல், நடனத்துடன் ஆண்டவருக்கு நன்றி கூறின நிகழ்வு இன்று நமக்கு முதல் பாடமாகத் தரப்பட்டுள்ளது. இந்நிகழ்வைப் பின்புலமாகக் கொண்டு (தி.பா. 68 : 24-26) மாபெரும் சபை நடுவில் கடவுளைப் போற்றுங்கள்; இஸ்ரயேலர் கூட்டத்தில் ஆண்டவரை வாழ்த்துங்கள் என தாவீது அழைப்பு விடுத்துள்ளார். நாமும் நம் ஆண்டவரின் உடனிருப்புக்காகவும், அவரது வசனத்துக்காகவும், பிரசன்னத்துக்காகவும், வாக்கு மனிதரானார், நம்மிடையே குடி கொண்டார் என்பதற்காகவும் அவருக்கு நன்றி சொல்வோம்.

**2. அவரது தெரிந்து கொள்ளுதலுக்காக :** கொலோ. 3 : 12-17

பவுலடியார் கொலோசெத் திருச்சபையாருக்குக் கிறிஸ்தவ வாழ்வு குறித்து விளக்கமாகப் போதிக்கிறார். நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்ளுங்கள், மன்னியுங்கள், அன்பு காட்டுங்கள், நன்றியுள்ளவர்களாயிருங்கள். எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடி கொள்வதாக. கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக! இவ்அமைதிக்கென்றே நீங்கள் ஒரே உடலின் உறுப்புகளாக இருக்க அழைக்கப்பட்டீர்கள், நன்றியுள்ளவர்களாயிருங்கள் என்கிறார். நாமும் நம்மை

அழைத்தவருக்கு நன்றியுடையவர்களாய் வாழ்வோம். உண்மையாய் அவர் அருளும் அமைதியை உரிமை கொள்வோம்.

**3. அவர் அருளின நன்மைகளுக்காக :** லூக்கா 17 : 11-19

அருள்நாதர் இயேசு சமாரியப் பகுதி வழியாக எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்தபோது பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து, தூரத்தில் நின்று கொண்டே, "ஐயா! இயேசுவே, எங்களுக்கு இரங்கும்" என்று உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள். இயேசு அவர்களைக் குணமாக்கினார். அவர்களுள் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். இயேசு அவரைப் பார்த்து பத்து பேர்களின் நோயும் நீங்கவில்லையா? என்றார். ஆண்டு முழுவதும் அவர் நமக்கருளின நன்மைகளுக்காக நம்மிடமும் அதே கேள்வியை முன்வைத்துள்ளார் என்பதனைப் புரிந்துணர்வோம்.

ஆண்டவர் நம்மிடம் நன்றியை எதிர்பார்க்கிறார். நன்றியுடன் அவர் திருமுன் செல்வோம்; புகழ்ப்பாக்களால் அவரைப் போற்றி ஆர்ப்பரிப்போம் (தி.பா. 95 : 2). இன்றளவும் அவரது உடனிருப்புக்காக அவரது தெரிந்து கொள்ளுதலுக்காக அவர் நமக்கு அருளின நன்மைகளுக்காக நாள்தோறும் நாமும் நன்றி சொல்வோம். நன்றி பலி செலுத்துவோர் என்னை மேன்மைப்படுத்துவர் என்கிறார் ஆண்டவர் (தி.பா. 50 : 23). அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்துவோம் (எபி. 13 : 15). எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுவோம். நமக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே (1 தெச. 5 : 18).

அருள்திரு. D. **ஜாண் ஜெபதாஸ்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. 320 | ஞா. 460 |

# புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்

**01-02-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# குணமாக்குவார்

2 அரசர் 20 : 1-11



. . . உன் மன்றாட்டைக் கேட்டேன் உன் கண்ணீரையும் கண்டேன் இதோ உன்னைக் குணப்படுத்துவேன்
(2 அரசர் 20 : 5)

அம்மா, நான் மீண்டும் நடக்க முடியுமா? ஆண்டவர், என் தேவையை சந்திப்பாரா? நான் கேட்கும் உதவியை அவர் செய்வாரா? என்று டென்மார்க் நாட்டைச் சார்ந்த “லூட்விக் நோம்”மென்பென்” என்பவர் தனது தாயுடன் உரையாடிய நேரம். தாயார் மிகுந்த நம்பிக்கையுடையவர், தனது மகனுக்கு இறை நம்பிக்கையை அதிகம் ஊட்டினார்.

20 வயதான லூட்விக், மூன்று வருடங்களுக்குப் பின் ஒருநாள் திடீரென்று தன் படுக்கையை விட்டு குதித்து எழுந்து நடந்தார், ஓடினார், தனது பலவீனத்தில் இறைவனின் ஆச்சரியமான செயல்களைக் கண்டு தன்னை இறைப்பணிக்கே அர்ப்பணித்தார். கால் உடைந்த நிலையில் படுக்கையில் வாழ்ந்தவர் ஆண்டவர் கொடுத்த சுகத்தால் வாழ்வின் இறுதி மூச்சுவரை குணமாக்கிய இறைவனுக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார்.

திருமறையில் லூக்கா 7 : 21-ல் இயேசு நோய்களையும் கொடிய வியாதியுள்ளவர்களையும், பொல்லாத ஆவியுடையவர்களையும் குணமாக்கி, பார்வையற்றோர்க்கு பார்வை கொடுத்தார் எனக் காண்கிறோம்.

தியானம் பகுதியில் அரசன் எசேக்கியா வியாதிபட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்த நாட்களில் ஆண்டவர் அரசன் எசேக்கியாவைக் குணமாக்கினார். வியாதியை நீக்கினார். குணமாக்கும் வைத்தியராக செயல்பட்டார். அதற்கானக் காரணம் என்ன என்பதையும் அதற்கான வெளிப்பாடு என்ன என்பதையும் இரண்டு கருத்துக்களாக தியானிப்போம்.

**1. எசேக்கியாவின் அறநெறி வாழ்வு கண்டு குணமாக்கினார்** : வசனம் - 3

அரசன் எசேக்கியா தனது நேர்மையான ஆன்மீக அறநெறி நிறைந்த வாழ்க்கையை இறைவனுக்கு முன் எடுத்துரைக்கின்றார். கடவுளே, நான் உண்மை, உத்தமம், உமது பார்வைக்கு நலமானதை செய்தேன் என்கிறார். பலவீனத்தின் காரணமாக மரண படுக்கையோடு போராடும் அரசன் எசேக்கியா விண்ணப்பம் செய்கிறார், கண்ணீர் வடிக்கின்றார்.

I சாமுவேல் 16 : 7-ல் வாசிக்கும் போது இறைவன் முகத்தைப் பாராமல், இதயத்தைக் காண்கிறார், அரசன் எசேக்கியாவின் அறம் நெறியான வாழ்வைக் காண்கிறார். II நாளாகமம் 29-ம் அதிகாரம் தொடர்ந்து படித்தால், அரசன் எசேக்கியாவின் அரசாட்சி காலத்தில் கர்த்தருடைய எருசலேம் ஆலயம் பழுது பார்த்தல், தொழுகை முறைகளையும் ஆசாரிய பணிவிடைகளை ஒழுங்குபடுத்துதல், பணிவிடைகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற இறை உறவில் உதவி பெறுதல், அந்நிய நாடான அசீரிய படை பலத்தைக் காட்டிலும் தன்னோடும் படைகளோடும் இறைவனைச் சார்ந்து பெரிய வெற்றிக்கண்டவர்.

தனது நன்நடத்தையான வாழ்க்கை முறை அறநெறி நிறைந்துள்ளன என்பதைத் திரும்பிப் பார்க்கிறார். கடவுள் சமூகம் நோக்குகிறார் நினைவுகூர்ந்து கண்ணீர் வடிக்கிறார். கடவுள் எசேக்கியா அரசனின் வியாதியைக் குணமாக்குகிறார்.

தீர்க்கன் ஏசாயாவின் வழியாக சொல்லப்பட்ட அதிர்;ச்சி செய்தி ஆசியாக அமைகின்றது.

குணமாக்கும் கடவுள் மனிதனின் அறநெறி வாழ்க்கையினை எதிர்பார்க்கிறார்.

**2. அழகிய அடையாளம் தந்து குணமாக்குவார் :** வசனம் 8-10

அரசன் எசேக்கியாவுக்கு கடவுள் வழங்கும் நலன் நிறைந்த வாழ்வுக்கு அடையாளத்தால் நிறைவேற்றுகின்றார். திருமறையில் கடவுள் தமது செயல்பாடுகளை பல்வேறு அடையாளங்களால் வெளிப்படுத்துகின்றார்.

உதாரணமாக, ஆதி..........-ல் தண்ணீரால் பூவுலகு சேதமாகாது என்று வானத்தில் அடையாளம். இஸ்ரவேல் மக்களை எகிப்தின் வாதைகளுக்கு நீங்கலாக்கி, தமது ஜனத்தின் மேல் கொண்ட அன்பை விளங்கச் செய்யும் 10-வித அடையாளங்கள்.

இங்கு, அரசன் எசேக்கியாவுக்கு வழங்கும் விடுதலையினைத் தெளிவாக்குகிறார். அடையாளம், அகாசுடைய சூரியக் கடிகாரத்தில் சாயை 10 பாகை பின்னிட்டு திரும்பச் செய்தல் மற்றும் மூன்றாம் நாளில் சுகமும், கர்த்தருடைய ஆலயம் செல்வாய் எனவும் தமது செயலைக் கண்டுணர செய்கிறார்.

காயங்களில் அத்திப்பழ அடை (அத்திப்பழ ரசத்தில் மிதக்கும் அடை) பலவீனப்பட்ட இடத்தில் கட்டி வைக்கவும், கடவுள் தமது தீர்க்கன் வழி சொல்லப்பட்ட செய்தியும், தாம் தம்முடைய நாமத்தினிமித்தமும், தாசனாகிய தாவீதினிமித்தமும் அரசன் எசேக்கியாவுக்கு அழகிய அடையாளம் கொடுத்து தமது வாக்கினை நிறைவேற்றுகிறார்.

அன்பரே, இறைவன் குணமாக்குபவர் அவர் அனைத்து மருத்துத்திற்கும் மேலானவர். உலக வாழ்வில் ஆன்மீக வாழ்வில் இறைவன் எதிர்பார்க்கும் அறநெறி வாழ்வை தொடரும்போது எதிர்வரும் மரண வியாதி நோய்களை நீக்கி, சுகம் தநற்து கிருபையினால் வழிநடத்தப்பட இப் புதிய மாத சிந்தனை ஊக்கம் தருவதாக அமைந்திட அருள்புரிவாராக, ஆமென்.


அருள்திரு. A. **அருள் ஏசு ராஜன்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 20 |
| | கீர். | 134 |

**01-03-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# விரும்புவது நிகழும்

மத். 15 : 21-28



"அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" மத். 15 : 28

"ஆபிரஹாம் மாஹ்லோ" என்ற எழுத்தாளர் தம் ஊக்கமும் ஆளுமையும் என்ற நூலில் மனிதனின் அடிப்படை விருப்பங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

(i) உடல்ரீதியான விருப்பம் : சுவாசம், தண்ணீர், உணவு, உடை, உறைவிடம் இவை அடிப்படையானவை. இவை நிறைவேறும்போது அவன் எண்ணம் விரிவடைந்து அடுத்தநிலையை மனிதன் யோசிக்கிறான்.

(ii) உள்ளத்தாலான விருப்பம் : கல்வி, காதல், பணி உயர்வு, மனஅமைதி இப்படி உடல் விருப்பம் நிறைவேறும்போது உள்ள விருப்பங்கள் தொடங்குகின்றன. உள்ளத்தேவையும் (விருப்பமும்) நிறைவேறும் பட்சத்தில்

(iii) ஆடம்பர விருப்பம் : தனிவீடு, மனைவிபிள்ளைகள், முதலாளித்துவம், சுயமரியாதை, உயர்தர வாகனம், மற்றோர் தன்னை மதிக்க வேண்டுமென்ற எண்ணம்.

இப்படி மனிதன் தன் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளவே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ ஆரம்பித்தான். எனவே தான் அரிஸ்டாடில் "மனிதனை சமூக விலங்கு என அழைத்தார். இப்படி மாறுகின்ற மனித மனவிருப்பங்களில் இறைவனின் பங்கு எங்குமே இல்லை என்பது "Abraham maslo"வின் கூற்று.

இந்தப் புதிய மாதத்தில் பல்வேறு விருப்பங்களை எதிர்பார்த்து ஆண்டவரைத் தேட வந்திருக்கும் நாம் திருமறை வழியாக ஆண்டவரைப் பின் தொடர்ந்த பெண் தன் விருப்பத்தை எப்படி வாய்க்க பெற்றாள்? என சிந்திப்பது நம் உடல் ரீதியான, உள்ள ரீதியான விருப்பங்களையும் பெற்றுக்கொள்ள உதவும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் என விருப்பத்தை நிறைவேற்றிகொண்ட பெண்ணிடம் நாம் கண்டுகொள்ள வேண்டிய இரண்டு பண்புகளைச் சுருக்கமாய்த் தியானிப்போம்.

**1. பின் தொடர்ந்து கூப்பிட்டாள் (**மத். 15 : 23)

.... இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

இவளின் கூப்பிடுதல் சீடர்களைத் திரும்பிப் பார்க்க வைத்தது ஆனால் ஏன் ஆண்டவர் திரும்பவில்லை? இவள் ஒரு கானானிய பெண். தன் சமயப் பின்னணியத்தை விட்டு ஆண்டவரைத் தேடி வந்தாள். ஒரு புற இனத்தவள் இயேசுவிடம் வந்து கூப்பிடுவது அரிய காரியம் எனவே சீடர்களும் இயேசு கிறிஸ்துவிடம் பரிந்துரைக்கின்றனர்.

மத். 15 : 22 .... தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்.... என அவள் கூப்பிடும் சத்தத்திற்கு ஏன் ஆண்டவர் நிற்கவில்லை.

பெரும்பாடுள்ள ஸ்திரீயின் தொடுதலை உணர்ந்த ஆண்டவர்.

மரமேறி ஒழிந்த சகேயுவை உடன் அழைத்தவர்க்கு இந்த பெண்ணின் குரல் கேட்காமலா இருந்திருக்கும்? நன்றாகக் கேட்டிருக்கும். புற இனத்துப் பெண்ணின் விசுவாசம் உண்மைதானா? என சோதிப்பதற்காக அவர் திரும்பாமல் நடந்து கொண்டே இருந்தார்.

பிரியமானவர்களே! புதிய மாதத்தில் புதிய விருப்பங்களோடு கட்டாயம் ஆலயத்தில் வந்திருக்கின்ற நாம், அதற்கு நிகரான உண்மை விசுவாசத்தோடு வருவோமானால் ஆண்டவர் நம் விருப்பங்களை நிறைவேற்றுவார்.

**2. விருப்பம் நிறைவேற பணிந்துகொண்டார்** (மத். 15 : 25)

..... ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள்.

அவள் கூப்பிடுதலுக்கு நிற்காத ஆண்டவர்.

சீடர்களின் பரிந்துரைக்குக் காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேலரிடத்தில் அனுப்பப்பட்டேன் என கூறி அவளை நிறுத்திய ஆண்டவர். அவர் பாதத்தில் அவள் பணிந்த பின் ஆண்டவர் கூறும் பதில் இன்னும் விந்தையானது.

மத். 15 : 26 பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய் குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

நாய் என அப்பெண்ணைக் குறிப்பிடுவது போல் பேசிவிட்டார். இயல்பாக நம் வாழ்வில் நாம் நம்பி ஒருவரிடம் உதவி கேட்க போய் அவர் நம்மை அவமானப்படுத்தினால், மீண்டும் அவரிடம் பேசக்கூட நாம் யோசிப்போம். ஆனால் பிசாசினால் கடும் வேதனைப்படும் மகளின் பாடுகளுக்கு முன்னால் தாய்க்கு மான, அவமானம் ஒன்றும் பெரிதில்லை. எனவே தன்னை ஒரு "ஐந்தறிவு உயிரினம் நாய்" என தாழ்த்தவும் அவள் தயங்கவில்லை (27-ம் வசனம்).

பலவேளை விருப்பங்கள் நிறைவேற நாம் நம்மைத் தாழ்த்தவும், பணியவும், கூப்பிடவும் தயங்குகின்றோம். அப்படிப்பட்ட நமக்கு இந்தக் கானானிய பெண்ணின் செய்கை ஒரு சிறந்த பாடம். திருமறையில் தாவீது தன் ஜெபங்களில் பலமுறை தன்னைத் தாழ்த்தித் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டான்.

நானோ ஒரு புழு, ஊற்றப்பட்ட தண்ணீர் போலானேன், காய்ந்த ஓட்டைப் போலானேன், இவை உதாரணங்களே! நாம் ஜெபித்த விருப்பங்களின்; பலனை உடனடியாக எதிர்பார்கிறோம். ஆனால் விரும்பியது நிகழ்வதற்கான பெருமை, தாழ்மை, பணிதல், நம்மிடத்தில் இல்லை. ஆண்டவர் அருளின இந்தப் புதிய மாதத்தில் இந்த கானானிய ஸ்திரீ மத். 15 : 28 நீர் விரும்பியவாறே உமக்கு நிகழும் என விருப்பம் நிறைவேறினது போல நம் எல்லாரின் விருப்பங்களையும் ஆண்டவர் நிறைவேற்றுவாராக.

திபா. 62 : 5 தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; நான் நம்புவது அவராலே வரும்.

இந்தப் புதிய மாதத்தின் புதிய ஆசீர்வாதங்கள், புதிய வாய்ப்புக்கள், புதிய முயற்சிகளுக்காய் பொறுமையாய், பணிவோடு, ஆண்டவரைக் கூப்பிட்டு காத்திருப்போம். நாம் விரும்பியது அவராலே நிகழும்.


திரு. Y. **அஜித் ஞானசிங்**

| | | |
|---|---|---|
| 𝄞 | கீர். | 36 |
| | ஞா. | 229 |

**01-04-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# அஞ்சாதிருங்கள்

லூக்கா 12 : 22-34



"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம்; உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தத் திருவுளம் கொண்டுள்ளார்." (லூக்கா 12 : 32)

அரசர் ஒருவர் மரண பயத்தோடு தன் அரண்மனைக்குள்ளே தனித்து இருக்கின்றார். மரண பயத்தோடு தனித்திருக்கும் போது இந்த மரண பயம் தன்னை நெருக்கினபடியால் யாரிடத்தில் ஆலோசனைக் கேட்பது என்று சற்று வியாகுலப்பட்ட அரசர் அமைச்சர்களை அழைத்தார் நான் அடிக்கடி மரண பயத்தில் இருக்கிறேன் ஏன் என்று தெரியவில்லை நீங்கள் மூன்று வார்த்தையை கண்டுபிடியுங்கள் நான் அந்த மூன்று வார்த்தைகளை பார்க்கின்ற போது என் மரண பயம் போக வேண்டும் எனவே யோசித்துச் சொல்லுங்கள் என்று சொல்லி அமைச்சர்களிடம் கேட்கிறார் அமைச்சர் ஒன்று கூடி யோசித்தார்கள். ராஜாவுக்கு மரண பயத்தைப் போக்குகிற வார்த்தையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று வார்த்தையைக் கண்டுபிடித்தார்கள். ராஜாவிடம் வந்துக் கொடுத்ததும் அந்த வார்த்தையை வாங்கித் தன் மோதிரத்தின் உள்ளே வைத்துக்கொள்கிறார். நாட்கள் ஓடுகிறது. ஒருநாள் எதிரிகள் அரண்மனையை சூழ்ந்த கொள்கிறார்கள். இந்த தருணத்தில் தான் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்கு அரசர் ஓடிக் கொண்டிருக்கிறார் மலையின் அடிவாரத்திற்கு வந்து நிற்கிறார். அங்கு முன்னும் செல்ல முடியாமல் பக்கவாட்டிலும் செல்ல முடியாமல் திக்குமுக்காடுகிறார் வந்த திசையை நோக்கிச் சென்றால் எதிரியின் படை விரட்டுகிறது என்ன செய்வது என்று தெரியாமல் மரண பயத்தில் இருந்த போது தான் ஞாபகம் வந்தது ஒரு வார்த்தையைத் தன் மோதிரத்தில் இருக்கிறதே என்றுச் சொல்லி அதைத் திறந்துப் பார்க்கிறார். அங்கே ஒரு வார்த்தை இருந்தது இதுவும் கடந்து போகும் அந்த வார்த்தையைப் பார்த்த மாத்திரத்தில் அரசருக்கு ஒரு நம்பிக்கை வருகிறது அந்த நம்பிக்கையின்

பலத்தோடு எதிர்த்து வந்த எதிரியை துணிந்து எதிர்க்க ஆரம்பிக்கிறார் வெற்றியைப் பெறுகிறார். அரசனுடைய பயத்தைப் போக்கி மறுவாழ்வு கொடுக்கின்றது. மனிதர்களுடைய வார்த்தையே இப்படி இருக்கின்ற போது கடவுள் சொல்கிறார் சிறுமந்தையாகி நீங்கள் அஞ்ச வேண்டாம் என்கின்றார். கடந்து வந்த மூன்று மாதங்களில் அச்சத்தினால் அநேகக் காரியங்களை இழந்திருப்போம். மகிழ்ச்சி சமாதானம் வளர்ச்சி போன்றவைகளுக்கு இந்த அச்சம் தடையாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று ஆண்டவர் நம்மைப் பார்த்து அஞ்சாதீர்கள் என்று சொல்லுகிறார். நம்முடைய வாழ்வில் ஏன் அச்சம் வருகிறது அதை எப்படி ஆண்டவர் மாற்றுகிறார் என்று சுருக்கமாக சிந்திப்போம்.

**1. கவலையினால் வரும் அச்சம்** (லூக். 12 : 25)

கவலை என்பது எலலோருக்கும் பொதுவானது கவலை இல்லாதவர்களை நாம் பார்க்கவே முடியாது அரசன் முதல் கடையானவன் வரை அனைவருக்கும் கவலை உண்டு கவலை பலவிதமானது தங்கள் வாழ்வைக் குறித்த கவலை எதிர்காலத்தை குறித்தக் கவலை பிள்ளைகளைக் குறித்த கவலை இவைகளினால் நம் வாழ்வு அச்சம் நிறைந்ததாக இருக்கின்றது அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்ற பயம் இன்று மனிதனை அழித்து வருகிறது இன்று பலருடைய வாழ்க்கையில் கவலை என்கிற பயம் இருளாக இருக்கின்றது. பில்லி கிரஹாம் ஒரு முறை விமானத்தில் பயணம் செய்கின்ற போது காலசூழ்நிலை மோசமானதாக மாறிவிடுகிறது விமானத்தை சுற்றிலும் மேகம் இருக்கின்றது இந்த விமானம் இருளுக்குள் சென்றது போல் இருக்கின்றது எல்லோரும் அச்சத்தோடு இருக்கின்றார்கள். இந்த விமானம் மேகத்திற்கு மேலே சென்றதும் சூரியனின் வெளிச்சம் தெரிந்து எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். கவலையினால் வருகின்ற பயத்தினால் வாழ்க்கை தொழில் அழிந்து விடும் என்று கலங்கி நிற்கின்ற சூரியன் ஆகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கின்றபோது நம்முடைய வாழ்க்கையின் அச்சத்தை போக்கி புது வாழ்வு தருவார்.

**2. நம்பிக்கை இல்லாததினால் வரும் பயம்** (லூக். 12 : 28)

நம்பிக்கை இல்லாததினால் அநேக நேரங்களில் பயம் நமக்குள் இருக்கிறது. இந்த உலகம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை நெருக்கினாலும் ஆண்டவர் மீது நம்பிக்கையுடன் இருக்கும் போது

அச்சங்கள் நம்மை ஒன்றும் செய்யாது 1 சாமுவேல் 17-ம் அதிகாரத்தில் சவுல் அரசரும் இஸ்ரயேல் படைகளும் பெலிஸ்தியனாகிய கோலியாத்தைக் கண்டு அவர்கள் அச்சத்தோடு நம்பிக்கை இழந்து நிற்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் வாலிபன் ஆகிய தாவீது அச்சமின்றிக் கடவுள் மீது நம்பிக்கையுடன் செல்கிறார் அங்கே கோலியாத்தை வீழ்த்தி வெற்றிப் பெறுகிறார். மாற்கு 4-ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவும் சீடர்களும் அக்கரைக்கு செல்கின்றனர். படகின் பின் பகுதியில் இயேசு கிறிஸ்து தூங்கிக் கொண்டிருக்கும் வேளையில் பெரும் புயலினால் அலைகள் அந்தப் படகை தாக்குகின்றது. சீடர்கள் நம்பிக்கை இழந்து பயந்து நாங்கள் சாகப் போகிறோம் என்று அவரை எழுப்பினார்கள். அவர் காற்றையும் கடலையும் அமர்த்துகின்றார். பின்பு சீடர்களிடம் ஏன் அஞ்சுகிறீர்கள் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா என்று கேட்கிறார் படகில் முதலில் சேதமடைய கூடியப் பகுதியில் இயேசு கிறிஸ்து இருந்த பிற்பாடும் இவர்களுக்குள் அச்சம் இருக்கின்றது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கேட்கின்றார் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா ஏன் அச்சப்படுகிறீர்கள் என்று கேட்கிறார் இன்று நம்முடைய வாழ்க்கையிலும் ஆபத்துக்கள் இழப்புகள் வருகின்ற போது இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணிப் பயந்து நம்பிக்கையிழந்து நிற்கின்ற நம்மைப் பார்த்து இயேசு கிறிஸ்து என்னைத் தாண்டி ஆபத்து எப்படி வரும் நான் உங்களுடன் இருக்கிறேன் அஞ்சாதிருங்கள் என்று சொல்கிறார்.

இத்தனை நாள்கள் நம்மை காத்து வழிநடத்தின கடவுள் நம்மோடு இருந்து நம்முடைய வாழ்க்கையில் கவலையினால் வரும் அச்சங்களையும் நம்பிக்கை இல்லாததினால் வரும் அச்சங்களையும் மாற்றி நம் வாழ்வில் நம்மை வழிநடத்துவாராக.


திரு. J. **ராஜு**

| | |
|---|---|
| 𝄞 | கீர். 39 |
| | ஞா. 243 |

**01-05-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# இனித் தீங்கில்லை

திபா 18 : 1-11



"ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன். எவரும் உனக்குத் தீங்கு இழைக்கப் போவதில்லை எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர் என்று சொன்னார்" திப. 18 : 10.

திருத்தூதர் பணிகள் 18 : 1-11 வரையிலான திருமறைப் பகுதி அகாயாவின் தலைநகரமான கொரிந்து நகரில் தூய பவுலார் சந்தித்த சவால்களையும், அதை எதிர்கொள்ள கடவுள் கொடுத்த துணிவையும் விளக்குகிறது. கொரிந்து, ரோமர்களின் ஆட்சியின் கீழ் இரு துறைமுகங்களுக்கு இடையே அமைய பெற்றிருந்த ஒரு பட்டணம். இந்நகரம் புகழ்பெற்ற சிற்றின்ப கேளிக்கை நிறைந்த நகரமென பெயர் பெற்றது. பொழுதுபோக்கிற்கும், ஆடம்பர வாழ்விற்கும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வந்தது. அங்கே கிழக்கத்திய மேற்கத்திய தீயொழுக்கங்கள் ஒன்றாக கலந்திருந்தன. ரோம சாம்ராஜ்யத்தின் முன்னேற்ற பாதையில் வெற்றிநடை போட்ட இந்நகரம், ஒழுக்க பிரகாரமாய்ச் சீர்குலைந்து இருந்தது. ரோம ஆட்சி காலத்தில் கொரிந்து பட்டணம் வியாபாரத்தில் மிக முக்கிய இடம் பெற்று இருந்தது. இந்த மாநகரத்திற்கு கி.பி. 50-இல் பவுல் தனது இரண்டாம் திருத்தூதர் பயணத்தின் போது சென்றார். அவர் அங்கே தங்கி இருந்த 18 மாத காலத்தில் திருச்சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

கொரிந்து ஒரு யூத குடியேற்ற நகரம், பவுல் செல்வதற்கு முன்பே அங்கு யூதர்களின் ஜெபக்கூடம் ஒன்று இருந்தது. இந்தப் பட்டணத்திற்கு வந்த பவுல் தனது வழக்கப்படி யூதர்களை நாடினார். ஆனால் மற்ற இடங்களை போலவே இங்கும் அவரை ஏளனம் செய்தனர். யூதர்கள் பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. சுவிசேஷத்தை ஏற்க மறுத்துக் கடினமாய் எதிர்த்தனர். எனவே புறஜாதியினரை நாடிச் சென்றார்

பவுலார், அவர்கள் ஆவலோடு அவரையும், கிறிஸ்துவின் நற்செய்தியையும் ஏற்றுக்கொண்டனர். பலதரப்பட்ட கொரிந்தியர்கிறிஸ்தவை ஏற்றுக் கொண்டாலும், மறுபுறம் யூதர்களின் எதிர் பிரச்சாரமும், அவநம்பிக்கையும் தூண்டி விடப்பட்டது. சமூக ஏற்றத்தாழ்வு வழிபாட்டிலும் காணப்பட்டது. சிற்றின்ப வாழ்விலும், ஒழுக்க கேட்டிலும் மூழ்கியிருந்த கொரிந்து நகரில் பவுலின் திருப்பணி பயணமும் கடினமான சவாலாகவே இருந்தது. இத்தகைய சாதாரண சூழலில், இரவிலே கர்த்தர் பவுலோடு பேசி அவரைத் தைரியப்படுத்தி, அவரது நற்செய்திப் பயணத்தில் துணிவை ஏற்படுத்துகிறார். கடவுளின் சந்திப்பால் பவுலின் திருப்பணியில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும், அந்த உரையாடலின் வெளிப்பாட்டால் ஏற்பட்ட மாற்றத்தையும் திருமறை வெளிச்சத்தில் சிந்திப்போம்.

### 1. அச்சம் வேண்டாம்

தி.ப 18 : 9-இல் "அஞ்சாதே; பேசிக் கொண்டேயிரு, நிறுத்தாதே". இந்தத் திருவசனம் பவுலின் இயல்பு நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படுத்துவதாய் அமையப் பெற்றிருந்தது. கடவுள் மனிதர்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் அறிந்து ஆராய்பவர் எனவேதான் பவுலுடனான இந்தத் தரிசனத்தின் ஆரம்பத்திலேயே கடவுள் பவுலின் பலவீனத்தை மாற்றி அவரது தொடர்பயணத்திற்குத் தடையாக இருக்கும் பயத்தை மாற்றுகிறார். ஆங்கிலத்தில் பயத்தை எதிர்கொள்ள இருசொற்றொடர்களைப் பயன்படுத்துவார்கள். FEAR-Face Everything And Rise - Forget Everything And Run. பவுலின் இயல்பு நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை அவர் புரிந்தகொள்ள கடவுள் இங்கு உதவுகிறார். பயம் பவுலின் இயல்பை மாற்றிவிட்டது. பொதுவாகவே எதையும் எவருக்கு முன்பும் தைரியத்தோடு பேசுகின்றவரின் இயல்பு நிலை மாற்றத்தைக் காண்கிறது. பேசிக்கொண்டேயிரு என்ற வார்த்தை மேலும் பவுலின் இயல்பு நிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. Meredih Grey குறிப்பிடும்போது Don't let fear keep you quiet. You have a voice, so use it. Speak up. Raise your hands. Shout your answers. Make yourself heard. Whatever it takes, just fnd your voice and when you do, fill the damn silence என்கிறார். எஸ்தர் 4 : 14-இல் மொர்தெகாய், எஸ்தருக்குக் கொடுத்த ஆலோசனை கூட

மவுனமாயிராதபடி பேச வேண்டும் என்பதே. நம்முடைய வாழ்வின் கடின சூழல்கள் நம் இயல்புகளை முடக்கச் செய்வது கடவுளுக்குச் சித்தமல்ல. நம்முடைய வாழ்வின் கடினங்களைக் கண்டு மௌனமாய் இருந்து விடாதபடி அதனை எதிர்கொள்ளும் துணிவைத் தரும் கடவுளோடு நல்லுறவை தொடர்வோம்.

## 2. நான் உன்னோடு இருக்கிறேன்

தி.பணிகள் 18 : 10 "நான் உன்னோடு இருக்கிறேன்..." இங்கு பவுலோடு கடவுளின் உடனிருத்தலைக் காண முடிகிறது. யூதர்களின் கடின எதிர்ப்பு தனிமை உணர்வினைப் பவுலுக்கு நிச்சயமாய் ஏற்படுத்தி இருக்கும். தான் ஒருவர் மட்டுமே போராடிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு கூட ஏற்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. இந்தத் தனிமை உணர்வின் மத்தியில்தான் கடவுள் நான் உன்னோடு இருக்கிறேன் என்று தரிசனத்தில் உறுதிப்படுத்துகிறார். இஸ்ரவேலரின் வரலாற்றைப் பார்க்கும்போது எங்கு எல்லாம் அவர்கள் தனிமையை உணர்ந்தார்களோ அங்கு எல்லாம் கடவுளின் திருவசனம் அவர்களுக்கு துணையாகக் கொடுக்கப்பட்டது. அதே வரலாற்றின் கடவுள் இங்கு இராத்திரியிலே பவுலுக்குத் தரசசனமாகித் தன் உடனிருத்தலைக் குறிப்பிடும் போது இவ்வாறு சொல்கிறார் "Those who walk with God, always reach their destination."

## 3. இனித் தீங்கில்லை

தி.ப 18 : 10 "...எவரும் உனக்குத் தீங்கிழைக்கப் போவதில்லை..." இத்திருவசனம் யூதர்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாய் அமைகிறது. பவுலின் நற்செய்தி பயணத்திற்குத் தடையும், அவரது பயத்திற்கு காரணமும் யூதர்களின் தீய எண்ணங்களே. அவர்களைக் குறித்த பயம் பவுலுக்கு இருந்ததின் விளைவாகவே கர்த்தர் இனித் தீங்கில்லை என பவுலுக்கு உறுதியாகச் சொல்லக் காரணமாகிறது. யூதர்களின் தீய சிந்தையின் வெளிப்பாடாக தான் தி.பணிகள் 18 : 12-13- வசனங்களில் "...யூதர்கள் ஒருமித்துப் பவுலைத் தாக்கி, அவரை நடுவர் மன்றத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்து, இவன் திருச்சட்டத்திற்கு எதிரான முறையில் கடவுளை வழிபடுமாறு மக்களைத் தூண்டிவிடுகிறான் என்றார்கள்." இங்குப் பவுலுக்கு எதிராக தீமை செய்ய ஒரு மனதோடு

வருகிறார்கள் யூதர்கள். ஆனால் இந்த நிகழ்வு நடைபெறுவதற்கு முன்பாகவே கடவுள் பவுலை ஆற்றல்படுத்துகிறார். "Avoiding danger is no safer in the long run than outright exposure. The fearful are caught as often as the bold." என்கிறார் Helen Keller. கடவுளின் நம்பிக்கையின் வார்த்தைகள் மனவலிமை இழந்துபோன நிலையில் இருந்த பவுலுக்கு மன தைரியத்தையும், பெலத்தையும் கொடுத்தது.

புதிய மாதத்திலும் ஆண்டவர் தம் ஆற்றலை தந்து உங்களை வழிநடத்துவாராக. ஆமென்.


திரு. A. **ஜெனில் தாஸ்**

| | | |
|---|---|---|
| 𝄞 | கீர். | 40 |
| | ஞா. | 485 |

**01-06-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# பெருகச் செய்வார்

எசே 36 : 8-15



உங்கள் மக்களை பெருகச் செய்வேன். இஸ்ரவேல் வீட்டார் அனைவரையும் பெருகச் செய்வேன். (எசே. 36 : 10).

பெருகச் செய்வது ஆண்டவர் நமக்கு அருளும் ஆசீர்வாதமே. தொநூ. 5 : 2 படி சகல பூண்டுகளும் இன்னும் முளைக்காமல் இருந்தது. தேவன் மழையாகிய ஆசீர்வாதத்தைக் கொடுத்தால் தான் அதற்கு ஆசீர்வாதம். அது பெருகும். நாமும் அவ்வாறு தான் ஆண்டவர் ஆசீர்வதிக்காவிட்டால் நம்மால் தாயின் கருவில் உருவாக முடியாது (திபா. 127 : 4), (தொநூ. 1 : 27, 28). ஆதாம் ஏவாளை ஆசீர்வதித்துப் பெருகுங்கள் என்றார். (தொநூ. 9 : 1) : நோவாவின் குடும்பத்தை ஆசீர்வதித்துப் பலுகிப் பெருகுங்கள் என்றார். (தொநூ. 22 : 7) : ஆபிரகாமை ஆசீர்வதித்துப் பெருகவே பெருக செய்வேன் என்றார். (தொநூ. 26 : 24) ஈசாக்கை ஆசீர்வதித்துப் பெருகச் செய்வேன் என்றார்.

ஆதாம் முதலாம் மனித படைப்பு, நோவா நீதிமான், ஆபிரகாம் விசுவாசி, ஈசாக்கு சாந்தகுணம் உள்ளவன். இவர்களிடம் இருந்த நற்பண்புகளாலே இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். நாமும் ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் என்றால் ஆண்டவருக்குப் பிரியமுள்ளவர்களாய் வாழவேண்டும்.

எசேக்கியேல் 36-ஆம் அதிகாரத்தின்படி ஆசீர்வாதத்தைப் பெற தகுதி இல்லாதவர்களையும் ஆசீர்வதித்தார். அவர்கள் செய்த பாவத்தினாலே பாபிலோனில் அடிமைகளாக இருந்தனர். அவர்கள் பாபிலோனுக்குச் சென்ற பிறகும் ஆண்டவருடைய தூய நாமத்தைக் கெடுத்தார்கள். இதனால் மற்றும் 7 தேசங்களும் அவர்களை இகழ்ந்தனர். தம்முடைய பிள்ளைகளான இவர்களை இழந்ததினால் ஆண்டவர் கோபம் கொண்டு தம்முடையவர்களை மீட்க தீர்மானித்தார். இப்பொழுது மக்களை மீட்க வேண்டும் ஆனாலும் அவர்கள் பாவிகள், ஆசீர்வதிக்க

முடியாத ஒரு நிலைமை அதினால் தேவன் எசே. 36 முதல் பகுதியில் இஸ்ரயேல் மலைகளையும் குன்றுகளையும் ஆசீர்வதிக்கிறார். 8-ஆம் வசனத்தில் இஸ்ரயேல் மலைகளே நீங்கள் உங்கள் கிளைகளை பரப்பி, என் மக்களுக்காய்க் கனிகளைச் சுமப்பீர் ஏனெனில் அவர்கள் விரைவில் வந்து விடுவர் என்று ஆசீர்வதித்தார்.

**1. இறையவரை அறிந்துகொள்ள வேண்டும் :**

எசே. 33 : 29. "அவர்கள் செய்த எல்லா அருவருப்புகளின் பொருட்டும் நான் நாட்டைப் பாழாக்குகையில் நானே ஆண்டவர் என்பதை அறிந்து கொள்வர்."

நம்முடைய அருவருப்புகளினாலே தான் நம் நாடு பாழாக்கப்படுகிறது, நாம் ஆசீர்வாதத்தை இழந்திருக்கிறோம் என்று உணர்வடைய வேண்டும். நாம் செய்கின்ற பாவத்தை ஆண்டவர் வெளிப்படுத்தி நாட்டை உரிமையாக்கிக் கொள்வீர்களோ? என்று தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார் (எசே. 33 : 225, 26). தம்முடைய பாவத்தை விட வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். நாம் பெருக வேண்டுமென்றால் பாவ வாழ்வை விட்டு ஆண்டவரை அறிந்து கொள்வது அவசியம்.

**2. இறைவாக்கினர் சொல்வதை உணர வேண்டும் :**

எசே. 33 : 33. "உண்மையில் இவை வரப்போகின்றன. அப்பொழுது தங்கள் நடுவே ஓர் இறைவாக்கினர் இருந்தார் என உணர்ந்து கொள்வர்."

பாவத்தினால் நிச்சயமாக அழிவு வரும் அதன் முன் இறைவாக்கினருக்குச் செவி கொடுக்கவேண்டும். ஆண்டவரின் வசனத்திற்குச் செவி கொடுத்தால் எப்போதும் எல்லோருக்கும் ஆசீர்வாதமே. எசே. 33 : 33. மக்களுக்கு நீ இசைக்கருவியுடன் இயைந்து இனிய குரலில் காதல் பாடல் பாடும் பாடகன் போல் உள்ளாய். அவர்கள் உன் சொற்களைக் கேட்கின்றனர். ஆனால் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை என எசேக்கியேலிடம் தேவன் கூறுகிறார்.

தற்போதைய வாழ்விலும் ஆலயங்களில் இறைப்பணியர் சொல்லும் ஒவ்வொன்றையும் நாம் இனிமையாகக் கேட்கின்றோம். ஆனால் அவற்றைப் பின்பற்றாமல் பாவ வாழ்வில் அமிழ்ந்து கிடக்கின்றோம். இறைவாக்கினர் அல்லது இறைப்பணியர் தரும்

நற்செய்திகளைக் கேட்டுப் பின்பற்றுகிறவர்களாய் இருந்தால் ஆண்டவர் உங்களைப் பெருகச் செய்வார். இயேசு கிறிஸ்து கிருபையால் நம்மை ஆசீர்வதிக்கிறார். எந்தத் தவறுகள் செய்திருந்தாலும் அவற்றை அறிக்கை செய்த போது, நமக்குப் பாவமன்னிப்பு ஈந்து நம்மைச் சேர்த்து கொள்கிறார். நமக்காக ரத்தம் சிந்தி மீட்டார். தியாகத்தை நினைத்து பாவத்தை விடுவோம். உலகத்திற்குரிய ஆசீர்வாதங்களில் இயேசுகிறிஸ்துவின் உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்களிலும் பெருகுவதற்குரிய இறையவர் அருள்புரிவாராக ஆமென்.


திரு. T. **நல்லதம்பி றிங்கல்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 19 |
| | கீர். | 284 |

**01-07-2023** புதிய மாத நன்றித்தொழுகை

# வெற்றி நமதே

எரேமியா 1 : 9 - 19



அவர்கள் உனக்கு எதிராக போராடுவார்கள் எனினும், உன்மேல் வெற்றிகொள்ள அவர்களால் இயலாது. ஏனெனில், உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர். (எரேமியா 1 : 19).

1924-ல் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாயின. அந்தப் போட்டியில் பங்கேற்க வேண்டுமென்று எரிக்லிட்டல் (Eric Liddell) ஆசைப்பட்டார். ஆனால் அவருக்கு ஏமாற்றமே கிடைத்தது. 100 மீட்டர் ஓட்டபந்தய போட்டி ஞாயிற்றுகிழமைகளில் மாத்திரமே குறிக்கப்பட்டிருந்தது. இதனை அறிந்த அவருக்கு ஒரே போராட்டம் மனதில் தேவனுக்கு கீழ்படிவதா, உலக புகழா, காட்சி பொருளாய் மாற வேண்டுமா அல்லது சாட்சியாய் இருக்கவேண்டுமா! ஆண்டவரின் நாளில் ஆகாத காரியங்களில் ஈடுபட விரும்பாத லிட்டல் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் விளையாடவில்லை மாறாக மற்றொரு நாளில் நடைபெற்ற 400 மீட்டர் ஓட்டபந்தயத்தில் பங்குபெற்று அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் முதலாவது வெற்றிப்பெற்று தங்கபதக்கமும் பெற்றார். ஆண்டவருக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது வெற்றி நிச்சயம்.

வாழ்க்கை என்றாலே துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், விரோதங்கள் நிறைந்தது. இவை அனைத்தையும் மேற்கொண்டு வெற்றிப் பெற்றால் மட்டுமே வாழ்வானது மகிழ்வானதாகவும் நிறைவானதாகவும் அமையும். வெற்றி என்பது இலகுவாய் பெறும் பொருள் அல்ல. அதற்காக பிரயாசம் உடனிருப்பவர்களின் ஆதரவு, எல்லாவற்றிற்கும் மேலாய் உடனிருக்கும் ஆண்டவரின் தயை நமக்கு வேண்டும். புதிய மாதத்தில் ஆண்டவரின் வாக்குறுதியும் எரேமியா 1:19 வழியாக அதனையே நமக்கு காட்டுகிறது.

I **ஆண்டவரின் வார்த்தை தரும் வெற்றி :** மத். 8 : 8

திமிர்வாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் கொடிய வேதனையால் அவதிப்பட்டுக்

கொண்டிருந்தான். இயேசு கப்பர் நகூமில் பிரவேசித்த போது நூற்றுக்கதிபதி அவரிடம் வந்து தன் வேலைக்காரன் அனுதினமும் படும் வேதனையின்று சுகம் பெற வேண்டிக்கொண்டான். இயேசு நான் வந்து அவனை சுகமாக்குவேன் என்றார். ஆனால் அவனோ ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான். நூற்றுக்கதிபதி ஆண்டவரின் வார்த்தை மீது கொண்டிருந்த விசுவாசம் அளவுக்கதிகமாய் இருந்தது, எனவே நீ போகலாம் நீ விசுவாசித்தப்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்தபொழுதே வேலைக்காரன் சுகம் பெற்றான். திருப்பாடல் 107: 20 கூறுகிறது, “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி. . . தப்புவிக்கிறார்.”

ஆண்டவர் தம் வார்த்தையின் வல்லமையினால் நோயின் கொடுமையிலிருந்து வெற்றி அருளினார் இன்றும் வார்த்தை வல்லமையுள்ளதாகையினால் அதை நம்புகிறவர்களுக்கு வார்த்தை வழி வெற்றி அருளுகிறார்.

II **ஆண்டவர் நம்முடன் இருந்தால் வெற்றி :** ஆதி. 26:28

ஆண்டவர் எப்பொழுதும் தம் பிள்ளைகளுடன் இருந்து அவர்களை வெற்றியுள்ள வாழ்வுக்கு வழிநடத்துகிறவர். அந்த அனுபவம் திருமறை வழி பல சூழ்நிலைகளில் அடியவர்களின் வாழ்வில் அமைந்ததை காணலாம். ஈசாக்கின் வாழ்வு ஆண்டவரை சார்ந்தே இருந்தது. ஈசாக்கும் அவனோடிருந்தவர்களும் பஞ்சத்தில் தப்பித்துக்கொள்ளும்படி கேராருக்கு போனார்கள். ஆண்டவரின் வாக்குப்படியே கேராரில் அவனுக்கு பலவிதமான பாடுகள், துன்பங்கள், இழப்புகள் வந்தது. தேசத்தின் குடிகள் எதிரானார்கள். ஒன்றிலும் சிறப்பாக செயல்படமுடியாமல் தடுத்தனர். ஆண்டவரின் வாக்குபடியே பொறுமையை காத்துக்கொண்டார். அபிமெலேக்கும் நண்பரும் ஈசாக்கினிடம் ஒப்புரவாகினர். வச. 28-ல் நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே இருக்கிறார் என்று கூறி பகைமையை மறந்து உடன்படிக்கை பண்ணினர். ஈசாக்குடன் கடவுள் இருந்தார். அதனால் எதிரிகள் அவனை மேற்கொள்ள முடியில்லை. இதற்கு பகைவர்களே சாட்சிகளாயினர்.

அன்பர்களே! இந்த புதிய மாதத்தை தொடர போகிற நாம் சந்தித்த தோல்விகளை நினைத்து மனம்வருந்தி கொண்டு இருப்பதை விட்டு, நமக்கு வெற்றி தரும் ஆண்டவரின் வார்த்தைகளை நம்புவோம். அவருடன் இணைந்து வெற்றி வாழ்வை சுதந்தரிப்போம்.


அருள்திரு. A. **கிறிஸ்துதாஸ் ஆக்னஸ் பிரின்ஸ்**

| 𝄞 | | |
|---|---|---|
| | கீர். | 35 |
| | ஞா. | 462 |

**01-08-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# நாட்டிற்கு அமைதி

லேவியர் 26 : 1 - 13



“நாட்டிற்கு அமைதி அருள்வேன். அச்சுறுத்துவாரின்றிப் படுத்துக்கொள்வீர்கள்” (லேவியர் 26 : 6)

நாட்டிற்கு அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பவன் மனிதன். தன்னுடைய பேராசையினால் ஏழைகளைச் சுரண்டுகிறான், படிப்பறிவில்லாதவர்களை அடிமையாக்குகிறான். சுற்றுப்புறச் சூழலை நிலைகுலைய வைக்கிறான். மோசமான சுற்றுப்புறச் சூழலால் இயற்கைப் பேரிடர்கள், பெருந்தொற்றுகள் தோன்றி நாட்டில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகின்றது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப்பற்றி இன்று பெரிதும் பேசப்படுகிறது. ஆனால் பண்டைய இஸ்ரவேல் மக்கள் உயர்ந்த சிந்தனை கொண்டு, வாரத்தில் ஒருநாள் நிலத்திற்கும், பணியாளருக்கும், கால்நடைகளுக்கும் ஓய்வு கொடுத்தார்கள். ஏழாம் ஆண்டினை ஓய்வு ஆண்டாகக் கடைப்பிடித்தார்கள். 50 ஆம் ஆண்டு ஜூபிலி ஆண்டு என அறிவித்து, அனைவருக்கும் ஓய்வு அளித்து, ஓய்வின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி வந்தார்கள்.

ஜூபிலி ஆண்டு நிலத்துக்கு மட்டுமன்று, உழைப்பவர்களுக்கும், கால்நடைகளுக்கும் ஓய்வுதரும் ஆண்டு; அடிமைப்பட்டோர் விடுதலை பெற்றுச் சுதந்தரமாகச் செல்லும் ஆண்டு, கடன்பட்டோர் கடனிலிருந்து விடுதலை பெறும் ஆண்டு; வீடு, நிலம் இழந்தோர் திரும்பவும் தம் உரிமைச் சொத்துக்குத் திரும்பிச் செல்லும் ஆண்டு; இவ்வாறு பல வரைமுறைகளை வைத்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர் பண்டைய இஸ்ரயேல் மக்கள்.

ஆனாலும் பல வேளைகளில் வழி விலகி பல்வேறு இன்னல்களை அனுபவித்தார்கள். இந்நிலையில் ஆண்டவர் கொடுத்த ஓர் நம்பிக்கையின் வார்த்தை தான் “நாட்டிற்கு அமைதி அருள்வேன். அச்சுறுத்துவாரின்றிப் படுத்துக்கொள்வீர்கள்” என்பதாகும்.

இந்த மாதத்தின் முதல் நாளிலும் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த அதே நம்பிக்கையை நமக்குத் தருகிறார். இயற்கைப் பேரிடர்களால், பெருந்தொற்றுகளால், உயர் அதிகாரிகளால் அமைதியை இழந்து இருக்கின்ற இந்த நாட்டிற்கும் (நமக்கும்) அமைதியை அருளுவேன் என்கிறார்.

நாட்டிற்கு அமைதியை அருளுவேன் என்கிற ஆண்டவர் நம்மிடம் இரண்டு காரியங்களை எதிர்பார்க்கின்றார்.

**1. ஆலயத்திற்கு அஞ்சி நடவுங்கள்** (லேவியர் 26 : 2)

"....என் தூயகத்திற்கு அஞ்சி வாழ்வீர்களாக"

தானியேல் 5-ஆம் அதிகாரத்தை நாம் படிக்கின்றபோது பெல்சாட்சார் என்னும் அரசன் உயர்குடிமக்கள் ஆயிரம் பேருக்கு பெரியதொரு விருந்து வைத்து அவர்களோடு தானும் திராட்சை மது அருந்தினான். அப்பொழுது மதிகெட்டு, தானும் தன் மனைவியரும் வைப்பாட்டிகளும் குடிப்பதற்கென்று தன் தந்தையாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் திருக்கோவிலிருந்து கொண்டு வந்திருந்த பொன், வெள்ளிக் கிண்ணங்களைக் கொண்டுவரச் சொன்னான். அதன்படி கொண்டு வந்தார்கள். அந்த கிண்ணங்களிலே திராட்சை மது குடித்து, பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், கல் ஆகியவற்றாலான தங்கள் தெய்வங்களைப் புகழ்ந்தார்கள்.

திடீரென்று ஒரு மனிதனுடைய கைவிரல் தோன்றி அரண்மனை உட்சுவரில் விளக்குத் தூணுக்கு எதிரே எழுதத் தொடங்கியது. அதைக் கண்ட அரசன் முகம் கறுத்து, நெஞ்சம் கலங்கி, குலை நடுங்கினான். உடனே அரசன் மாயவித்தைக்காரரையும், ஜோதிடரையும், பாபிலோன் ஞானிகளையும் அழைத்தான். ஆனால் அவர்களால் அந்தச் சொற்களைப் படிக்கவோ அவற்றின் உட்பொருளை அரசனுக்கு விளக்கவோ முடியவில்லை. அரசனுக்கும் அங்கிருந்த உயர்குடி மக்களுக்கும் இருதயத்தில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகியது.

பின் தானியேல் அரண்மனைக்கு அழைத்துவரப்படுகிறார். அதன் விளக்கத்தைக் கொடுக்கிறார். "கடவுள் உமது அரசில் நாள்களை எண்ணி வரையறுத்து அதனை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார்; நீர் தராசில் நிறுக்கப்பட்டீர்; எடையில் மிகவும் குறைந்துள்ளீர்; உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

அன்றிரவே கல்தேய அரசனாகிய பெல்சாட்சார் கொலை செய்யப்பட்டார். நாட்டில் அமைதியற்ற சூழ்நிலை உருவானது. காரணம் ஆலயத்தின் பொருட்களை அசட்டை செய்தது.

இன்று நம்முடைய உள்ளத்திலும், நாட்டிலும் அமைதியற்ற நிலைக்கு நாம் ஆலயத்தை, ஆலயத்தின் பொருட்களை, ஆலயத்தில் நடைபெறும் தொழுகைகளை அசட்டை செய்வதும் ஒரு காரணமாக அமைகிறது.

**2. கட்டளைக்குக் கீழ்ப்படி** (லேவியர் 26 : 3)

நீங்கள் என் நியமங்களைக் கவனமாய்க் கைக்கொண்டு, கட்டளைகளை நிறைவேற்றி, அவற்றிற்கேற்ப நடந்தால்....

கட்டளைகளுக்கு கீழ்படிந்தால் உள்ளத்திலும் நாட்டிலும் அமைதி நிலவும்.

விடுதலை பயணம் வழியாய்க் கானானுக்குள் வந்த இஸ்ரவேல் மக்கள், மோசே வழியாக இஸ்ரயேலரின் மூதாதையருக்கு ஆண்டவர் இட்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்களா என்று சோதித்து அறியும் பொருட்டு, கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் ஆகிய பிற இன மக்கள் இஸ்ரயேல் மக்கள் நடுவில் வாழ்ந்தனர்.

நாட்கள் செல்ல செல்ல இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் கட்டளையை மறந்து, அவர்கள் புதல்வியரைத் தங்கள் மனைவியராகக் கொண்டனர்; தங்கள் புதல்வியரை அவர்கள் புதல்வருக்குக் கொடுத்தனர்; அவர்களுடைய தெய்வங்களுக்கு ஊழியம் செய்தனர்.

இவ்வாறு கட்டளைகளை மீறி இஸ்ரயேல் மக்கள் வாழ்ந்ததால் பல இன்னல்கள் அடைந்தனர். அடிமைகளாக்கப்பட்டனர், துன்புறுத்தப்பட்டனர். இவற்றை நீதித்தலைவர்கள் புத்தகத்தில் நாம் தெளிவாய்க் காணலாம். கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனதால் நாட்டில் அமைதியை இழந்தனர்.

நாம் அப்படி வாழாதபடி நாட்டிற்கு அமைதி அருளுவேன் என்கிற ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள் ஆலயத்திற்கு அஞ்சி, கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ்வோம். வாழ்வை வளமாக்குவோம்.

| 𝄞 | |
|---|---|
| | கீர். 38 |
| | ஞா. 449 |

திரு. S. **வெஸ்லின்**

**01-09-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# வெட்கமடைவதில்லை

எசாயா 49 : 16-23



"... நானே ஆண்டவர் என்பதையும், எனக்காக காத்திருப்போர் வெட்கமடையார் என்பதையும் அப்பொழுது நீ அறிந்து கொள்வாய்" (எசா 49 : 23).

ஒரு ராஜாவுக்கு பல யானைகள் இருந்தன. ஆனால் அதில் ஒரு யானை சக்திவாய்ந்த, விவேகமான, சண்டை திறனுடைய, திறமையான யானையாக வலம் வந்தது. பல போருக்கு சென்று வெற்றியை பெற்று திரும்ப வந்தது. ராஜாவின் விருப்பப்பட்ட யானையாகியது. நாட்கள் சென்றது யானை வயதாகிவிட்டது. முன்புபோல் களத்தில் போர் செய்ய முடியவில்லை எனவே அரண்மனையில் அமைதியாக இருந்தது.

ஒரு நாள் யானை தண்ணீர் குடிக்க ஏரிக்கு சென்றபோது அதின் கால்கள் சேற்றில் சிக்கிகொண்டது அதனால் காலை அகற்ற முடியவில்லை. ராஜா மக்களை அழைத்தார் உதவி பெற்றார் மீண்டுவரமுடியவில்லை. ராஜா ஒரு யோசனை சொன்னார் ஏரியை சுற்றிலும் போர் முரசு ஒலிக்க சொன்னார். யானையின் உடல் மொழியில் மாற்றம் ஏற்பட்டது. யானை முதலில் மெதுவாக எழுந்து சேற்றிலிருந்து தானாக வெளி வந்தது. அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நிகழ்வை போன்றுதான் இஸ்ரவேல் மக்களின் நிலையும் காணப்பட்டது. சேற்றிலிருந்து வெளிவரமுடியாததை போன்று அடிமைதன நுகத்தடியில் சிக்கி வெளிவரமுடியாத மக்களாக காட்சியளித்தனர். ஆனால் உற்சாகமூட்டும் சத்தம் ஏசாயா தீர்க்கர் வழியாக மக்களுக்கு கொடுக்கப்பட்டது. கர்த்தருக்கு காத்திருப்போர் வெட்கமடையார் இஸ்ரவேல் மக்களின் காத்திருப்பு நெடுகாலமான தவிப்பு எனலாம். Afghanistan-யை தாலிபான்கள் கைபற்றியபோது மக்கள் தங்கள் சுதந்திரத்தை இழந்து தப்பிபிழைத்து ஓடிவிடவேண்டும் என்ற எண்ணம் இருந்தது போலவே இஸ்ரவேல் மக்களின் எதிர்பார்ப்பும் அமைந்தது. ஆனால் ஏசாயா தீர்க்கரின் வழியாக வந்த வார்த்தை

இஸ்ரவேல் மக்களுக்கு வாழ்வு கொடுத்தது. இஸ்ரவேல் மக்களின் காத்திருப்பு வெட்கமடையவில்லை மாறாக வெற்றியடைந்தது. சங்கீதகாரன் சங். 40 : 1 கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் எண்ணிடமாய் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். இஸ்ரவேல் மக்கள் காத்திருந்ததன் மூலம் கர்த்தர் கொடுத்ததை புதிய மாதத்திலும் அவர் உங்களுக்கு தருவார்.

**1. விடுதலை வாழ்வு :**

ஏசாயா 49:17 b உன்னை நிர்மூலமாக்கினவர்களும், உன்னை பாழாக்கினவர்களும் உன்னை விட்டுப் புறப்பட்டுப் போவார்கள். ஆண்டாண்டுகளாய் இருந்த அடிமை வாழ்க்கை முற்றுபெறும் தருணம் இது. ஏளனமாய் நடத்தபட்ட மக்கள் எழுந்து நிற்கும் காலம் இது. அற்பமாய் என்னப்பட்ட மக்கள் ஆற்றலுடையவர்களாய் மாறிய நேரம் இது. கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு விடுதலையென்னும் வாழ்வை கொடுத்து மகிழ்ச்சிப்படுத்தினார். ஏசா. 40:31 கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். கழுகு தன் ஆற்றலை இழக்கும்போது மலையுச்சிக்கு சென்று தன் இறகை, நகங்களை, எறிந்துவிட்டு புதிய தோற்றத்துக்காக காத்திருக்கும். அவைகளை பெற்று பின்பு புது பொலிவுடன், பலத்துடன், பறந்து தன் வாழ்க்கையை செலவுசெய்யும். இஸ்ரவேல் மக்களும் புது ஆற்றலோடு முன்னேறினர். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் உழைப்பை கொடுத்தனர். ஆனால் கூலிபெற முடியவில்லை. தங்கள் நிலத்தை கொடுத்தனர். நிம்மதியாக வாழ முடியவில்லை. நெருக்கங்கள் மத்தியில் வாழ்ந்த ஜனம்; அழுகையினால் நடுவில் தவித்த ஜனம் இப்பொழுது விடுதலை வாழ்வை பெற ஆயத்தமானார்கள். 17 & 18-ம் நூற்றாண்டில் America-வில் நீக்ரோ இனமக்கள் அடிமைதனத்தை ஆதரித்தது, பெண்களை ஒழுக்ககேடான வாழ்க்கைக்கு பயன்படுத்தினர். ஆண்டாண்டு காலமாய் மிருகங்களை விட தாழ்வாக நடத்தப்பட்ட மக்களின் வாழ்வை ஒளியேற்றியவர் Abraham Lincon 1863 ஆண்டு ஜனவரி 1-ம் தேதி தங்க பேனா ஒன்றில் உறுதியுடன் போட்ட கையெழுத்து 30 லட்சத்திற்கு அதிகமான நீக்ரோ மக்களுக்கு விடுதலையை தந்தது. புதிய மாதத்திலும் ஆவலோடு கடந்து வந்திருக்கிற நம்முடைய வாழ்விலும் விடுதலை வாழ்வை தர ஆவலோடு ஆற்றலுள்ளவர் கடவுள் என்கிற நம்பிக்கை உள்ளங்களில் உறுதியுடன் நிற்கவேண்டும்.

## 2. விரும்பிய வாழ்வு :

ஏசாயா 49 : 19 "உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்" இஸ்ரவேல் மக்களின் எதிர்பார்ப்பு விடுதலை மட்டுமல்ல, அவர்கள் விரும்பிய மகிழ்ச்சியின் வாழ்க்கை வாழ்வதும் குடும்பமாக இணைந்து ஆராதிக்கவேண்டும். குடும்பங்களோடு மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கின்ற ஏக்கம் இருந்தது. பெண்கள், பிள்ளைகள் தூரமாக்கபட்டார்கள். அடிமையாக கொண்டு சென்று அடக்கம் செய்யபட்டனர். அச்ச உணர்வுடன் வாழ்ந்த மக்கள் ஏசாயா தீர்க்கர் வழியாய் கடவுள் கொடுத்த மகிழ்ச்சியின் வாழ்வை பெற்றனர். யோவான் 5 : 38 ஆண்டுகளாக ஒரு மனிதன் யாராலும் கண்டுகொள்ளாத நிலையில் சுகத்துக்காக தண்ணீரின் அருகில் படுத்திருந்தான். மனிதர்களுக்கு முன்பாக அவன் விருப்பம் நிறைவேறாமல் போனது. இயேசு கிறிஸ்து அவன் 38 ஆண்டுகளாக காத்திருப்பை அறிந்து அற்புதம் செய்து அவன் விருப்பத்தை நிறைவேற்றினார். நீதி. 13 : 12 நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும். கர்த்தரிடத்தில் காத்திருக்கும் போது குறைவுகள் நிறைவாகிறது. சங். 34 : 5. அவர்கள் அவரை நோக்கிபார்த்துப் பிரகாசமடைந்தார்கள்: அவர்கள் முகங்கள் வெட்கபடவில்லை. கர்த்தரை உறுதியாய் பற்றிகொள்வோம். அவர் தரும் வார்த்தை வழியாய் விடுதலை வாழ்வைப் பெற்று, விரும்பிய வாழ்வை சுதந்தரித்து அவர் பாதத்தில் காத்திருக்போம். "கர்த்தருக்கு காத்திருப்போர் வெட்கமடையார்".

திரு. A. **றிங்கிள்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 21 |
| | கீர். | 296 |

**01-10-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# இளைப்பாறுதல் தருவார்

விப. 33 : 7-17



எனது பிரசன்னம் உனனோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன். (விப. 33 : 14)

மனித வாழ்வின் இளைப்பாறுதல் மிக மிக முக்கியமானதாகும். இளைப்பாறுதலின் வாழ்வு என்பது ஒரு ஆசீர்வாதமான வாழ்வு என கூறலாம். ஓய்வு, அமைதி என்கிற வார்த்தைகள் இளைப்பாறுதல் என்ற வார்த்தையின் பொருளை சார்ந்து உள்ளன. பணம், அழகு, ஆஸ்தி, உடல் பலம், ஆள்பலம், அறிவு, அந்தஸ்து என பல வளமையான வாழ்வு மக்களிடம் இருந்தாலும் இளைப்பாறுதல் என்கிற வாழ்வு இல்லை எனில் அது ஒரு விரக்தியான வாழ்வு எனச் சொல்லலாம். இன்றைய காலங்களில் பெரும்பாலான மனிதர்கள் இளைப்பாறுதலின் வாழ்வுக்காகப் பல நிலைகளில் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் உழைக்கிறோம், எங்களுக்கு இளைப்பாறுதல் இல்லை என எரேமியா கூறுகிறார் (புல. 5 : 3). எனக்குச் சுகமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது என யோபு பக்தன் கூறுகிறார் (யோபு 3 : 26). இஸ்ரவேல் மக்கள் துக்கித்து கொண்டிருந்தார்கள் என யாத். 33 : 4-இல் படிக்கிறோம்.

உடலும், உள்ளமும் அமைதியுடன் இருப்பதுவே இளைப்பாறுதலின் வாழ்வு ஆகும்.அமைதியற்ற வாழ்வு மனவலி, உடல்வலியை விட மோசமானது என Syrus என்பவர் கூறுகிறார். உடல் வலியை போக்க மருந்து, உறக்கம், மரத்தின் நிழலில் அமர்தல் போன்றவை உதவலாம். ஆனால் மனவலியை மாற்றுவது என்பது எளிதான காரியமல்ல. கர்த்தர் ஒருவரே உண்மையான மனவலியைப் போக்க முடியும். இஸ்ரவேலர் கடவுளின் கோபத்தாலும், கர்த்தர் தங்களோடு வர மறுக்கிறார் என்ற வார்த்தையைக் கேட்டதாலும் இளைப்பாறுதலின் வாழ்வை இழந்து துக்கமாக இருந்தனர் (விப. 32 : 10; 33 : 3). நான் உங்களோடு வரமாட்டேன், உங்கள் நடுவே

இருக்கமாட்டேன் என்ற கர்த்தர், விப. 33 : 14-ன் படி கர்த்தர் தமது தெய்வீக இரக்கத்தை வெளிப்படுத்தி, வாக்குத்தத்தம் கொடுத்து, வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். கர்த்தர் ஒவ்வொருவருக்கும் இளைப்பாறுதல் கொடுக்க வல்லவர் என்ற நம்பிக்கையில் வாழ கர்த்தர் நமக்கு இன்று வாக்குறுதி கொடுக்கிறார். இந்நாள் திருமறைப்பாடத்தின் வழியாக இளைப்பாறுதல் வாழ்வு பெற இஸ்ரவேலர் மற்றும் மோசேயினுடைய வாழ்வு நமக்குக் கற்று தரும் சிந்தனையைத் தியானிப்போம்.

## 1. ஆண்டவரிடம் நெருங்கி வாழ்தல் :

ஆண்டவரிடம் நெருங்கி வாழ்தல் என்பது இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதாகும். சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடு உரையாடிக் கொண்டு இருந்தார். மோசே மலையில் இருந்து இறங்கிவர தாமதம் ஆன நிலையில், இஸ்ரவேலர் ஆரோனிடம் எங்களை வழிநடத்திய மோசேயைக் காணவில்லை. தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டுபண்ணக் கூறினார்கள். ஆரோன் கர்த்தருக்கு விரோதமாக, கர்த்தரின் வார்த்தைக்கு எதிராக, படைத்தவரை, விடுதலையாளரை மறந்து, கர்த்தருக்குப் பதிலாக பொன்னால் ஒரு கன்றுக்குட்டியை உருவாக்கி, இவைதான் உங்கள் தெய்வம் என்றான். (விப. 31 : 18, விப. 32 : 1, 4). ஆகவே கர்த்தர் இஸ்ரவேலரைப் பார்த்து, நீங்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள் என்றும், இஸ்ரவேலர் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் என்றும், நான் கொடுத்த வழியை இஸ்ரவேலர் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள் என்றும் கூறினார் (விப. 33 : 3, 32 : 7, 8). இஸ்ரவேலர், மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள் என மோசே கூறுகிறார் (விப. 32 : 31). உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது என ஏசாயா இறைவாக்குநர் கூறுவது போல பாவத்தின் நிமித்தமாக, கர்த்தரை விட்டுத் தூரம் போன வாழ்வு வாழ்ந்ததின் நிமித்தமாக, இஸ்ரவேலர் கடவுளின் உடனிருப்பை இழந்து இளைப்பாறுதலின்றி வாழ்ந்தனர். அதோடு நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன் ஆனால் ஒரு தூதனை உங்களுக்கு முன் அனுப்புவேன் என்றார். தூதர்கள் கர்த்தரால் உருவாக்கப்பட்டவர்கள். தூதர்களை விட கர்த்தருடைய உடனிருப்பு தான் உயர்ந்த ஆசீர்வாதம் இல்லையேல் கானானுக்குப் போகவும், வாழவும் இயலாது என இஸ்ரவேலர் எண்ணினர். ஆகவே இஸ்ரவேலர் கர்த்தரிடம் நெருங்கி

வாழ தங்களை மறுச் சீரமைப்பு செய்ய தொடங்கினார்கள். ஆபரணங்கள் தான் தீமை செய்ய துணை நின்றன எனவே ஆபரணங்களைக் கழற்றிப் போட சொன்னபோது இஸ்ரவேலர்கள் கீழ்படிந்தார்கள். (விப. 33 : 5, 6). அதோடு மோசே ஆசரிப்பு கூடாரத்துக்குள் பிரவேசிக்கும்போது மேகஸ்தம்பம் கூடார வாசலில் நின்றது. இஸ்ரவேலர் கூடார வாசலில் கர்த்தரைப் பணிந்து கொண்டனர் (விப. 33 : 9-10). வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (எரே. 6 : 16) என்று எரேமியா தீர்க்கர் சொன்னது போல இஸ்ரவேலர் கர்த்தரை மறந்த நிலையில், தூரம் போன நிலையில் கர்த்தரோடு நெருங்கி வாழத் தொடங்கினதால், அவர்கள் கடவுளின் உடனிருப்பையும் பெற்றனர்.

## 2. ஆண்டவரிடம் வேண்டுதல் செய்தல் :

இறைவேண்டல் கிறிஸ்தவ வாழ்வின் உயிர் மூச்சு எனலாம். இவ்வுலகம் கனவு காண்பதற்கு மேல் பிரார்த்தனையினால் பல காரியங்களைச் செய்யமுடியும் என Tennyson என்பவர் கூறுகிறார். இஸ்ரவேலர் கர்த்தரின் கோபத்தைச் சந்தித்து, இளைப்பாறுதல் இல்லாமல் கலங்கி இருந்தபோது, மக்களை வழிநடத்திய மோசே இஸ்ரவேல் மக்களுக்காக, கர்த்தரிடம் வேண்டுதல் செய்தார். கடவுளின் மன்னிப்பு, இரக்கம் கிருபைக்காக மோசே வேண்டுதல் செய்தார். தனக்காக மட்டும் வேண்டுதல் செய்யாமல் பிறருக்காக வேண்டுதல் செய்து சிறந்த தலைமைத்துவப்பணியைத் தியாகமாய் செய்தார். மோசேயின் வேண்டுதல் வீணாகவில்லை. கர்த்தர் மனம் இரங்கினார், பதில் கொடுத்தார். (விப. 33 : 14). இறைவேண்டல் குறித்து ஜாய்ஸ்மேயர் அவர்கள் கூறும்போது, எல்லாச் சூழ்நிலைக்கும் இறைவேண்டலே எப்போதும் நம் முதல் மறுமொழியாக இருக்கவேண்டும். கர்த்தரைக் கண்டடைய தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (எச. 55 : 6) என ஏசாயா தீர்க்கர் கூறுகிறார். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்று இயேசு கிறிஸ்து தனது உவமையில் கூறினார். (லூக். 18 : 1). உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமல் இருந்து தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் (திபா. 22 : 24). கர்த்தர் ஜெபத்தை எப்போதும்

கேட்கிறவராகவும், ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறவராகவும் இருக்கிறார். ஜெபம் மனிதனின் பிரச்சனைகளை மாற்றக் கூடிய ஆயுதமாக இருக்கிறது. யூதா அரசர் ஆசாவினுடைய காலத்தில், இளைப்பாறுதலற்ற நேரத்தில், நெருக்கத்தின் நேரத்தில் இஸ்ரவேலர் கர்த்தரைத் தேடினபோது அவர்களுக்கு இளைப்பாறுதல் கொடுத்தார். (II நாளா. 15 : 1-15). மோசேயின் ஜெபம் இஸ்ரவேலர்க்குக் கடவுளின் உடனிருப்பைப் பெறவும் இளைப்பாறுதலைப் பெறவும் துணையாக இருந்தது. ஜெபம் என்பது நமது சுமைகளைச் சுகமாக மாற்ற வல்லதாக இருக்கிறபடியால், ஒவ்வொரு நாளும் இறைவேண்டல் செய்து இளைப்பாறுதலின் வாழ்வையும், கர்த்தரின் உடனிருப்பையும் பெறுவோம்.

1809 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் பிறந்தவர் சாது சுந்தர்சிங். இவர் சீக்கிய சமயத்தைச் சார்ந்தவர். இவர் தனது 7-ஆவது வயதில் பகவத் கீதையை மனப்பாடம் செய்தார். இவர் தனது பள்ளிப்படிப்பைக் கிறிஸ்தவப் பள்ளியில் படித்தார். வாழ்வில் கிறிஸ்தவ சமயத்தின் மீது ஈடுபாடு இல்லாமல் கிறிஸ்தவத்திற்கு எதிராகவே வாழ்ந்து வந்தார். இவர் இந்து, வேதங்களையும், திருக்குரானையும் நன்றாகக் கற்றவர். இவரது 14-ஆவது வயதில் இவரது தாயார் திடீரென்று மரித்தார். இந்த இழப்பை ஈடுசெய்ய முடியாமல் சமாதானம் இழந்து, உலகத்தில் எது உண்மை எனத் தெரியாமல் குழம்பி, உலக வாழ்வை முடித்துகொள்ள எண்ணினார். கிறிஸ்தவ உபதேசங்களையோ, இயேசுவையோ தனது இதயத்தில் ஏற்றுக்கொள்ளாமல் பரிசுத்த வேதத்தைக் கிழித்து, இயேசுவைப் பிரசங்கிப்பவரை கல்லால் எறிந்து, கோபங்களை வெளிப்படுத்தி விரக்தியான வாழ்வு வாழ்ந்து கொண்டு இருந்தார். மெய்யான சமாதானம் காணமுடியாமல் தவித்த அவர் 1903 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரவு வீட்டின் அருகில் இருக்கிற ரயில் தண்டவாளத்தில் படுத்து, ரயில் வண்டியில் தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார். ஆனால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. அங்கும் இங்கும் நடந்தார். இல்லம் சென்றார். கடவுளே, கடவுள் ஒருவர் இருப்பாரானால் எனக்கு உம்மை வெளிக்காட்டும் என்று கண்ணீரோடு மன்றாடினார். அவரது அறை முழுவதும் வெளிச்சம் பிரகாசித்தது. அதிகாலை நேரம் என எண்ணிக் கதவைத் திறந்து பார்த்தார். சூரியன் இன்னும் உதிக்கவில்லை. எங்கும் இருள் இருந்தது. கதவை மூடினார். வீட்டின் அறையில் வெளிச்சம் மறுபடியும் வந்தது.

அப்போது ஒரு தேவ சத்தம் கேட்டது. எத்தனை நாட்கள் என்னை மறுதலிப்பாய். உனக்காக நான் மரித்தேனே. என் ஜீவனை உனக்காக நான் தந்தேனே என்ற சத்தத்தைக் கேட்டார். அப்போது அங்கே ஒருவரது சாயல் தெரிந்தது. அவரது கரங்களில் ஆணி கடாவப்பட்டிருந்தது. இது இயேசு தான் வேறு யாரும் இல்லை என்பதைக் கண்டு கொண்டார். உடனடியாக உள்ளத்தில் சந்தோசம், சமாதானம், அமைதி வந்தது. அவர் வாழ்வில் இயேசுவை இரட்சகராக ஏற்றுத் தேவ பணி செய்தார்.

இறைவனிடம் திரும்புதலே இளைப்பாறுதலுக்கான வழி. இரவு நேரங்களில் கலங்கரை விளக்கை நோக்கிப் பயணிக்காமல் திசை மாறிப் பயணம் செல்லும் படகு எப்படித் தத்தளிக்குமோ அது போல தான் மனித வாழ்வும் இருக்கிறது. திசை மாறாமல் இறைவன் விரும்புகிற பயணம் மேற்கொண்டால் இளைப்பாறுதலின் வாழ்வு உறுதியே.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத். 11 : 28) இயேசு கூறியது போல கர்த்தரிடம் நெருங்கி வாழவும், கர்த்தரைக் கூப்பிடவும் நாம் முயல்வோம். இறைவன் அனைவருக்கும் இளைப்பாறுதல் தருவாராக ஆமென்.

திரு. D. **விக்டர் பெலிக்ஸ்**

| 𝄞 | | |
|---|---|---|
| | ஞா. | 22 |
| | கீர். | 300 |

**01-11-2023** புதிய மாத நன்றித் தொழுகை

# பிள்ளைகள் சிறப்புறுவர்

எசாயா 54 : 10 - 14



உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர் தாமே கற்றுத்தருவார்; உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்றுச் சிறப்புறுவர். ஏசாயா 54 : 13

இன்றைய வாழ்வின் சூழ்நிலையில் அனேக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை குறித்த கவலையோடு இருக்கிறார்கள்.

* பிள்ளைகள் சரியாக படிப்பதில்

* பெற்றோர் வார்த்தைக்கு கீழ்படியாமை

* தவறான போதை பழக்கம்

* Mobile

*ஆகவே பெற்றோர் கவலையோடு இருக்கிறார்கள்.

*ஆனால் ஏசாயா தீர்க்கதரிசி சொல்லும்போது

*உன் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளின் சமாதானம் பெரியதாயிருக்கும் என்கிறார்.

இறைவன் பிள்ளைகளை அவவழவாய் நேசிக்கிறார்.

மத்தேயு 19:14 வசனத்தில் இயேசு சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களை தடைபண்ணாதிருங்கள் பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று செல்லபிள்ளைகளை ஆசீர்வதித்தார்.

சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இறைமகன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று இயேசுவிடம் கொண்டு வந்தார்கள்.

சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு ஆசீர்வதித்தார்.

ஆகவே பெற்றோரே நீங்கள் உங்கள் பிள்ளைகளை குறித்து கவலைப்படவேண்டும்.

அவர் உங்கள் பிள்ளைகளை சிறப்புற செய்வர்.

உங்கள் பிள்ளைகள் சிறப்புற பெற்றோராகிய நீங்கள்

**1. பிள்ளைகளை இறைசமூகத்தில் கொண்டு வர வேண்டும்** (சாமு. 1 : 24)

அவள் அவனைப் பால் மறக்கப்பண்ணின பின்பு மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்து கொண்டு, அவனையும் கூட்டிக்கொண்டு சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்கு போனாள். பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்தது.

பெற்றோர் பிள்ளைகளை இறை சமூகத்தில் கொண்டு வரவேண்டும்.

இன்று பெரும்பான்மையான பெற்றோர் பிள்ளைகளை ஆலயத்துக்கு கூட்டி வருவதில்லை.

பிள்ளைகள் அழுதால் No Problem ஏசாயா 54:12

*உன் இல்லம் பளிங்கு

*உன் இல்லம் மாணிக்க கற்கள்

*உன் இல்லம் உச்சிதமான கற்களுமாய் இருக்கும்

இயேசுவின் தாயாகிய மரியாளும் இயேசுவை ஆலயத்துக்கு கொண்டு வந்தாள்.

**2. இறை சமூகத்தில் வாழ விட வேண்டும்** (1சாமு. 1:25)

- அன்னாள் இறை சமூகத்தில் பிள்ளையை கொண்டு வந்து விட்டாள்.

- சாமுவேல் இறை சமூகத்தின் வேலைகளை எல்லாம் செய்தான்.

- பெற்றோர் பிள்ளைகளை ஆலய காரியங்களை செய்ய உற்சாகப்படுத்த வேண்டும். (I சாமு. 3:1) சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்தாள்.

நாமும் - ஆலயம் சுத்தம் செய்வது

- ஆலய ஆராதனைகளில் பங்குகொள்ள செய்வது

- ஆலய கடமைகளை நிறைவேற்றுவது

- ஆலயத்தில் நடைபெறும் ஊழியங்களுக்கு ஒத்தாசையாய் இருப்பது.

- இப்படி இறைசமூகத்தில் உற்சாகம் கொள்ளும் போது இறைவன் பிள்ளைகளை சிறப்புற செய்வார்.

- நீங்கள் இறை சமூகத்தில் இடைவடாமல் செயல்படும்போது அவர் கிருபை உங்களை விட்டு விலகாது எசாயா 54:10.

(III) **இறை சமூக வார்த்தைக்கு செவி சாயுங்கள் :** I சாமு. 3:10

சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான்...

- பெற்றோர் பிள்ளைகள் இறை வார்த்தைக்கு கீழ்ப்படிய கற்றுக் கொடுக்கவேண்டும்.

- சாமுவேல் இறை சத்தத்தைக் கேட்டபோது ஏலிக் கீழ்படிய கற்றுக் கொடுத்தார்.

- ஆலயத்தில் சொல்லப்படும் வார்த்தையை தெளிவாய் கவனிக்கும் போது

- இறை வார்த்தைக்கு செவி கொடுக்க முடியும் அவரை செவி கொடுக்கும் போது

ஏசாயா 54 : 14 சொல்லுவது போல்

*நீதியில் ஸ்திரப்படுவோம்.

*கொடுமைக்கு தூரமாவோம்

*சமாதானமாய் இருப்போம்

திரு. N. **லீபன்**


| 𝄞 | கீர். | 35 |
|---|---|---|
| | ஞா. | 290 |

**01-12-2023**

புதிய மாத நன்றித் தொழுகை

# தேடிவரும் விடியல்

லூக்கா 1 : 67 - 80



. . . விண்ணிலிருந்து விடியல் நம்மை தேடி வருகிறது.
(லூக். 1 : 79)

ஆசாரியனாகிய சகரியா கடவுளின் கற்பனைகளையும் நியமங்களையும் கடைபிடித்து குற்றமற்றவராகவும் கடவுளுக்கு முன்பாக நீதிமானாய் வாழ்ந்தார். ஆசாரியப் பணிவிடையினை ஆண்டவருக்கு பயந்து நிறைவேற்றியவரது வாழ்வில் கடவுளின் அருட்கொடையான குழந்தை செல்வமில்லாதவராய் முதிர்வயதிலிருந்தார். இச்சூழலில் ஆலயத்தில் தூபம் காட்டுகிறபோது கடவுளின் தூதன் தூபப் பீடத்தின் வலது பக்கத்தில் அவருக்கு தரிசனமானார். சகரியா கண்ட அசாதாரணமான காட்சி பயத்தை ஏற்படுத்தியது. கடவுளின் தூதர் அவரை சகரியாவே எனப் பெயர் சொல்லி அழைத்து “பயப்பாடாதே உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பெயரிடுவாயாக, இதனால் உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்” எனக் கூறினார் (லூக். 1 : 13, 14). கடவுளின் இவ்வாக்குறுதி நிறைவேறும் நாள் வரையிலும் சகரியா பேசமுடியாதவராயிருந்தார். குழந்தை பிறந்து அதற்கு யோவான் எனப் பெயரிட்டபின்பு சகரியாவின் வாய் திறக்கப்பட்டது (லூக். 1 : 64), பரிசுத்த ஆவியினால் நிறைந்து விடுதலையின் பாடலைப் பாடினார். அப்பாடலில் இயேசுவாகிய குழந்தையினை விண்ணிலிருந்து நம்மை தேடிவரும் விடியல் (லூக். 1 : 79) எனக் குறிப்பிடுகிறார்.

விடியல் என்பது இருளகன்று ஒளிதோன்றும் நிலை, துன்பம் நீங்கி களிப்படையும் வாழ்வு, வேதனை நீங்கி, அமைதி ஏற்படும் தருணம்.

கடவுளின் இத்தகைய செயல்பாட்டினை “அவருடைய புறப்பாடு புலரும் பொழுதுபோல் திண்ணமாயியருக்கிறது” எனத் திருமறைக் கூறுகிறது. அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தமது சொந்த மக்களை மீட்பதற்காக ஓர் புதிய விடியலாக, கடவுளின் வருகை அமைந்துள்ளது. ஆண்டவரின் திருவருகைக் காலமாகிய இக்காலத்தில் துன்பங்களிலும், வேதனைகளிலும் அடிமைத்தனங்களிலும் வாழ்விற்காக போராடும் மக்களது வாழ்வில் விண்ணிலிருந்து தேடிவரும் விடியலின் சந்திப்பு வாழ்வில் சந்தோசமும் மகிழ்ச்சியும் ஏற்படுத்தும். இவ்விடியல் . . .

**1. இருளகற்றும் விடியல்** (லூக். 1 : 78)

கிறிஸ்துவின் பிறப்பு காரிருளையும் சாவின் நிழலையும் அகற்றும் புதுவிடியல் என்பதை லூக்கா நற்செய்தியாளர் தெளிவுபடுத்துகிறார். ஏசாயா இறைவாக்கினர் செபுலோன் நப்தலி என்ற இரண்டு நாடுகளையும் இருண்ட பகுதியாக குறிப்பிடுகிறார் (ஏசா 9 : 1). அதோடு, மேசியாவின் வருகையினால் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவில் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது எனவும் கூறுகிறார் (ஏசா. 9 : 2) இந்த செபுலோன் நப்தலி பகுதிதான் பின்நாட்களில் கலிலேயா என அறியப்பட்டது. கலிலேய மக்களின் வாழ்வு இருளடைந்த அடிமைத்தன வாழ்வாக அமைந்திருந்தது. அதோடு காரிருளிலும் மரண இருளின் பிடியிலும் மக்கள் தடுமாறித் தவித்தனர். இச்சூழலில் மக்களது வாழ்வு வெளிச்சம் நிறைந்ததாய் மாறிட புதுவிடியல் மக்களை சந்திக்கிறது என சகரியா தனது பாடல் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

திருவருகைக் காலததின் புதுமாதத் தொடக்கத்தில் இறையாசிக்காகவும், இறைவழி நடத்ததலுக்காகவும் காத்திருக்கும் நம் அனைவரது வாழ்விலும் விண்ணிலிருந்து தேடிவரும் விடியல் நம்மை சந்திக்க இடமளிக்கும்போது துன்பங்களினாலும் வேதனையினாலும் இருண்ட நிலையிலிருக்கும் நமது வாழ்வின் இருள் அகன்று வாழ்வு பிரகாசிக்கும். அதோடு புதிய விடியலினால் வெளிச்சம் பெற்ற நமது வாழ்வில் சான்றுள்ள வாழ்வு வாழவும், இருளகற்றும் ஒளியாம் கிறிஸ்துவை வாழ்வின் மூலமாக பிரதிபலிக்க நற்கிரியைகளை வாழ்வில் வெளிப்படுத்தி, நமது வெளிச்சம் மற்றவர்கள் முன்பாக பிரகாசிக்க கூடிய

நிலையில் வாழ்வினில் செயல்பட நம்மை ஒப்படைக்க வேண்டும் (மத். 5 : 16).

**2. அமைதியருளும் விடியல்** (லூக். 1 : 79)

உரோம அடக்குமுறை ஆளுகையினால் மக்கள் மிகவும் வேதனையுடன் சொந்த நாட்டிலே அடிமைகளாக அமைதியின்றி வாழ்ந்தனர். இச்சூழலில் சகரியாவின் பாடல் மக்களுக்கு அமைதியினையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்தது. இறைவாக்கினர் ஏசாயா மேசியாவின் பிறப்பினைக் குறித்து குறிப்பிடும்போது நமக்காக பிறந்துள்ள குழந்தை . . . அமைதியின் அரசர் (ஏசா 9 : 6) எனக் குறிப்பிடுகிறார். யூதா நாட்டு மக்கள் சிரியா, எப்ராயீம், இஸ்ரவேல் நாடுகளின் கூட்டான அச்சுறுத்துதலினால் அமைதியியிழந்து தடுமாறினர் (ஏசா 9 : 1). போர் சூழலில் போர்வீரன் அணிந்திருந்த காலணிகள் இரத்தக்கறைபடிந்த ஆடைகள் மக்களது அமைதியிழந்த வாழ்வினைத் தெளிவுபடுத்துகிறது (ஏசா 9 : 5). ஆனால் வரவிருக்கின்ற அரசராகிய மேசியாவின் திருப்பெயர் வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், அமைதியின் அரசர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைதியின் அரசரால் அமைதியின் ஆளுகையினை மட்டுமே தரமுடியும். அவரது ஆளுகை யுத்தமில்லாத, அமைதியின் ஆளுகையாகவும் நீதி வெளிப்படும் ஆளுகையாகவும் அமையும்.

சகரியாவின் பாடலில் வெளிப்பட்ட அமைதியின் செய்தியினை இயேசுவின் பிறப்பின்போது, விண்ணகத் தூதர் பேரணி பிறப்பினை அறிவித்த தூதருடன் இணைந்து பாடின "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 2 : 13,14) எனும் பாடலின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. விண்ணிலிருந்து நம்மை தேடிவரும் வரும் விடியலாகிய கிறிஸ்துவின் பிறப்பு அனைத்துலக மக்களுக்கும் அமைதியருளும் நற்செய்தி. வன்முறைகள் தீவிரவாத செயல்பாடுகள், உடைந்து போன மனித உறவுகள், நோய்களினாலும் பெலவீனங்களினாலும் ஏற்படும் அமைதியிழந்த வாழ்வு இவைகளின் நடுவில் மேசியாவின் ஆளுகையில் அனைவரும் அமைதியுடன் வாழமுடியும். திருவருகைக் காலத்தில் கிறிஸ்துவில் வெளிப்பட்ட அமைதி நம்மில் நிலைத்திட நம்மை ஒப்படைப்போம்.

### **3. இறை இரக்கத்தின் விடியல்** (லூக். 1 : 79)

விண்ணிலிருந்து வரும் விடியல் கடவுளின் இரக்கத்தின் வெளிப்பாடகும். கடவுள் இரக்கம் நிறைந்தவர். மரியாளின் பாடலில் அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார (லூக். 1 : 50) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது இரக்கங்களுக்கு முடிவில்லை என்பது உண்மை. உரோம காலனி ஆதிக்கத்தினால் ஆளுகின்றவர்களின் இரக்கத்தைப் பெறமுடியாமல் மக்கள் வேதனைப்பட்டனர். இச்சூழலில் கடவுளின் இரக்கம் மட்டுமே மக்களுக்கு பாதுகாப்பையும் புது விடியலையும் தரமுடியும் என உறுதியாய் நம்பினர். ஆகவே மேசியாவின் வருகையினை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த மக்களுக்கு, சகரியாவின் பாடல் புது நம்பிக்கையினைத் தருகிறது.

திருவருகைக் காலத்தில் மகிழ்ச்சியும் சந்தோசமும் மானிட வாழ்வில் தழைத்திட கடவுள் தனது இரக்கத்தின் நிறைவாக கிறிஸ்துவை உலகிற்கு தந்துள்ளார் எனப் புரிந்துகொள்ளவேண்டும். கடவுளின் இரக்கத்தை பெற்று நிறைவுடன் வாழ அவருக்கு அஞ்சி வாழவேண்டும். "அஞ்சுதல்" என்பது பயப்படுதல்ல, கடவுளுக்கு உரிய மேன்மையினை, மரியாதையினை, முதலிடத்தை கொடுப்பதாகும். ஆண்டவரை வாழ்வில் முதன்மையாக கொண்டு வாழும்போது அவர் தமது இரக்கத்தை தந்து நம்மை வழிநடத்துகிறார். புதிய மாதத்தின் விடியலில் கடவுளின் இரக்கத்தைப் பெற்று நிறைவுடன் வாழ அவருக்கு அஞ்சி, அவரது வழியில் நடக்க நம்மை ஒப்படைப்போம். பண்டிகை காலம் இறைவெளிச்சமும் இறை அமைதியும், இறை இரக்கமும் வாழ்வில் நிலைத்திருக்கவும், கிறிஸ்துவின் பிறப்பு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் வாழ்வில் அருளி நிறைவாழ்விற்கு நேராய் வழிநடத்திட ஆண்டவர் அருள்தருவாராக. ஆமென்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 40 |
| | கீர். | 84 |

# சிலுவைத் திருமொழிகள்

முதலாம் திருமொழி

# பாவங்களை மூடும் அன்பு

லூக். 23:32-34



"... தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை ..." (லூக். 23: 34)

மன்னிப்பு மனித வாழ்வுக்கு மிகத் தேவையானது. மன்னிப்பின் தன்மையை உணராதவர்கள் மனம் திரும்புதலை மனித வாழ்வில் அனுபவிக்க இயலாது. இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து சொன்ன முதலாவது வார்த்தை மனித வாழ்வுக்கு மனம் திரும்புதலைக் கொண்டு வருகின்ற அருமருந்தாய்ச் செயல்படுகிறது எனக் கூறலாம். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சூழல் கொடூரமானது. பரியாசக் கூட்டம், சுற்றிலும் நின்று பரிகசிக்க, அதிகாரவர்க்கதினரும், ஆத்மீக தலைவர்களும், இயேசு கிறிஸ்துவின் இறுதி வேளையை எதிர்நோக்கி இருக்கும் போது, இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த மன்னிப்பின் வார்த்தை புதிய நியாயப்பிரமாணமாய்க் கருதப்படுகிறது. கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்ற விதிமுறையைத் தாண்டி துயர்விளைவித்தோருக்கு மன்னிப்புக்காக வேண்டுதல் செய்யும் இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பின் வார்த்தை சுவிசேஷத்திற்கு மகுடமாய் அமைந்துள்ளது. இவ்வார்த்தை உணர்த்தும் சில உண்மைகளைக் குறித்து சிந்திப்போம்.

**1. இழந்து போனதையும், இழக்க கொடுக்காமலிருக்கும் இயேசு கிறிஸ்து** (லூக்கா 19 : 10)

மனிதகுலம் தவறு செய்து அழிவுக்குள் போய்க் கொண்டிருக்கிறார்கள். சிலுவையில் அமைதியாய் இருந்தால் மீட்பு கிடைக்காது. ஆகவே தந்தையே என்று அழைத்து மனிதகுலத்தை மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிறார். இக்கருத்தை வலுப்படுத்தும் படியாக 'George Macdonald' என்பவர் 'Forgiveness is the giving and so the receiving of life' என்கிறார்.

இந்த வார்த்தையைக் கேட்ட வலது புறக்கள்வன் மனம் திரும்புகிறான். உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனையும்

நினைத்தருளும் என்கிறான். யாரை மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிறார் எனப் பார்த்தால் அதிகார ஆதிக்கத்தால் அழிந்து போகின்ற கூட்டம், ரோம படை வீரர்கள், நூற்றுக்கதிபதிகள், அதிகாரத்தில் தலைமையிடம் படைத்தவர்கள், சிலுவையின் அடிவாரத்தில் வெறி பிடிததவர்களாய் நின்று கொண்டிருந்தவர்கள் ஆகியோர் தங்களுடைய அதிகாரத்தால் எதையும் செய்துவிடலாம் என எண்ணி இயேசுவைக் கொலை செய்கின்றனர். பதவி ஆணவத்தால் மனிதர் தம் மீட்பை இழந்து போகக் கூடாதே என எண்ணி பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்.

சமயத்தின் உயர் இடத்தில் தாங்கள் பெரியவர்கள் என எண்ணியவர்கள், இயேசுநாதர் உலகத்தில் வாழ்ந்தால் தாங்கள் பெரியவர்களாக இயலாது என எண்ணி இயேசுநாதரைக் கொலை செய்கின்றனர். ஆற்றலின்றி அழிந்து போகின்றவர்கள், அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டவர்கள், தீமையை எதிர்க்க ஆற்றலும் இல்லாமல் அழுகின்றனர். இனி எதுவும் கிடைக்காது என்ற எண்ணமும் உண்டு. ஆகவே ஒதுங்குகின்றனர். இவர்களைப் பார்த்துப் பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். இந்த உண்மையைத் தெரிந்த தற்கால இறைப்பணியாளர்களும் மானிடம் இழந்து போகக் கூடாது என்பதற்காய் மன்னிப்பின் பணிவிடைகளை நிறைவேற்றுகிறார்கள். உதாரணமாய்க் கிரகாம் ஸ்டெயின்ஸையும், 2 மகன்களையும் உயிரோடு தீயிலிட்டு கொளுத்தியவர்களை மன்னிக்கும்படியாக ஸ்டெயின்ஸின் மனைவி சுறினார். இதைப் போன்று நாமும் எதற்காக இயேசு தன்னைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை உணர்ந்து வாழ அழைக்கப்படுகிறோம்.

**2. இறுதிவரையிலும் போதனையைச் சாதனையாக்கும் கிறிஸ்து** (மத். 6 : 14, 15)

இயேசுநாதர் எதைப் போதித்தாரோ அதனைச் செயல் மூலம் வெளிப்படுத்துகிறார். இயேசு நாதர் போதித்த போதனைகள் அர்த்தம் நிறைந்ததாய்க் காணப்பட்டது. வேதாகமத்தில் அவரது போதனைகள் பல இடங்களில் மக்களை ஆச்சரியம் அடைய செய்தன. வார்த்தையால் மட்டும் போதிக்கவில்லை, வாழ்க்கையாலும் போதித்தார். வார்த்தையிலும், வாழ்க்கையிலும் இடைவெளி இல்லை. அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தது. “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்” என்று மன்னிப்பைப் போதித்தவர், தன்னையே முன் மாதிரியாக்குகிறார்.

பெரியவர் ஒருவர் கூறுகிறார்

“மன்னிப்பு என்பது பூக்களைப் பிழியும் போது வரும் சத்து நீரைப் போன்றது” என்பது ஒரு கூற்று.

இயேசு நாதர் பிழியப்படும் போது வெளிப்படும் சத்துநீர் தான் மன்னிப்பு.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் அர்மேனிய மக்களைத் துருக்கியர்கள் ஆண்டு வந்தனர். அப்போது துருக்கிய வீரன் ஒரு பெண்ணையும் அவள் சகோதரனையும் கொல்வதற்காக விரட்டினான். துருக்கிய வீரன் சகோதரனைப் பார்த்து கிறிஸ்துவை மறுதலிக்கும் படிக் கூறினான். மறுதலிக்காதபோது அந்தச் சகோதரனைக் கொன்று போட்டான். இந்தச் சகோதரனின் சகோதரி இதனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். மதில் சுவர் தாண்டி அவன் தப்பித்துக் கொண்டான். சில ஆண்டுகள் கழித்து இந்த பெண் தாதியராக பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தத் துருக்கிய வீரனை காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள். துருக்கிய வீரனோ உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். தாதியராகிய அப்பெண்மணியோ துருக்கிய வீரனைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டாள். ஒரு பக்கம் இது தான் சரியான நேரம், கொஞ்சம் தாமதித்துக் கொள்; மரித்துப் போவான் என்ற எண்ணம் மனதில் இன்னொரு பக்கம் சிலுவையில் அன்பு காட்டினேனே, அன்பு செய் என்ற ஆலோசனையும் உள்ளத்தில் சொல்லப்படுகிறது. உடனடியாக ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உதவி செய்தாள். வீரன் அந்தப் பெண்மணியை அடையாளம் கண்டு பார்த்தபோது, உன் சகோதரனைக் கொலை செய்தது நான் தான் என்பதை அறிந்தும், எப்படி எனக்கு உதவி செய்ய முடிந்தது என கேட்டான். ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உதவி செய்தேன் என்கிறார். தாதியரின் பதிலைக் கேட்ட துருக்கிய வீரன் அந்த இயேசு எனக்கு வேண்டும் என்கிறான்.


இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்தருளிய மன்னிப்பின் உறுதிப்பாடு, இழந்துபோகும் நிலையில் இருப்போருக்குப் புது வாழ்வும், புது நம்பிக்கையும் உருவாக்கியது. இதைப் போல நாமும் மன்னிக்கும் குணநலன் வழியாக மூலம் மனுகுலத்திற்குப் புது வாழ்வை உருவாக்குவோம்.

**திருமதி பெபின்**

இரண்டாம் திருமொழி

# அங்கீகரிக்கும் அன்பு

லூக். 23 : 39 - 43



"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்."

லூக்கா 23 : 43

லூக்கா 23 : 33-இல் இயேசுவின் சிலுவையருகே இரண்டு குற்றவாளிகள் சிலுவைகளில் அறையப்பட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பெயர் கெஸ்ற்றாஸ் என்றும் இன்னொருவர் பெயர் திஸ்மாஸ் என்றும் பாரம்பரியம் ஒன்று கூறுகின்றது. இவர்கள் இருவரும் பரபாசைப் போன்று அரசியல் குற்றவாளிகளாயிருக்கலாம் என வரலாற்றறிஞர் கருதுகின்றனர். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவர் இயேசுவைப் பார்த்து, இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் என்றார். இவர் எந்தப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்தவர் எனத் திருமறை குறிப்பிடவில்லை. ஆனால் இவர் இயேசுவுடன் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார். இவரால் எப்படி பேரின்ப பெருவாழ்வைப் பெற முடிந்தது என்பதைத் தியானிப்போம்.

### 1. இயேசுவைப் பார்த்தார்

இயேசுவின் சிலுவையின் மீது "நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்" என்று எழுதியிருந்தது (யோவான் 19 : 19). அது எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தமையால் யூதருள் பலரும் இந்த அறிக்கையைப் படித்தனர் (யோவான் 19 : 20). அவர்கள் இவ்வறிக்கையைப் படித்து கேலி செய்ய நினைத்தனரே (யோவான் 19 : 21-22) தவிர இயேசுவைப் பார்க்க முன்வரவில்லை. இயேசுவுடன் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவனும் அவ்வாசகத்தைப் பார்த்து அவரைப் பழித்துரைத்தான் (லூக்கா 23 : 39). ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டதோடு இயேசுவையும் நோக்கிப் பார்த்தான் (லூக். 23 : 40). இரண்டு பேருக்கும் ஒரே, வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஒருவர் பயன்படுத்துகின்றார். மற்றவர் பயன்படுத்தத் தவறுகிறார். எனவே பேரின்பப் பெருவாழ்வுக்குள் அவரால் செல்ல முடியவில்லை.

இயேசு இறந்தவரை உயிரோடு எழுப்பியதைக் கண்ணால் கண்ட யூதர்கள் அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஆனால் சிலுவையில் தங்களோடு அறையப்பட்டு உயிர்விட்டுக் கொண்டிருக்கும் இயேசுவைக் கண்ட குற்றவாளி அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளுகிறான் எனத் தூய அகஸ்டின் கூறுகின்றார். ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் அருகிலிருந்த வகுப்புச் சுவரைப் பார்க்கக் கூறினார். அனைத்து மாணவர்களும் பார்த்தனர். பின்னர் ஒவ்வொருவராக அவர்கள் பார்த்தது என்ன என்று வினவினார். ஒரு மாணவரைத் தவிர அனைவரும் தாங்கள் சுவரிலிருந்து கரும்புள்ளியைப் பார்த்ததாகக் கூறினார். இன்று இந்த மாணவர்களைப் போலவே நாமும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பார்க்காமல் வேறு எவைகளையோ, எவர்களையோ பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, பேரின்பப் பெருவாழ்வு வாழ முடியாமல் உலக வாழ்வில் மயங்கிக் கிடக்கிறோம்.

**2. தன்னை உணர்ந்தார்**

லூக்கா 23 : 39-இல் ஒரு குற்றவாளி இயேசுவிடம் தன்னைக் காப்பாற்ற வேண்டுகிறார். ஆனால் லூக்கா 23 : 41-இல் மற்ற குற்றவாளி நாம் தண்டிக்கப்படுவது முறையே என்று கூறுகின்றார். எனவே விடுவிக்கும்படி கேட்டவர் தனது குற்றத்தை உணரவில்லை என்று இரண்டாமவர் குற்றமற்றவர் தண்டிக்கப்படுகையில் தனது குற்றத்தை உணருகிறார் என்றும் நாம் அறியலாம். உரோமை அரசு குற்றவாளி என்று கூறியபோது அதனை அவர் ஏற்கவில்லை. ஆனால் இயேசுவைப் பார்த்தபோது நாம் தண்டிக்கப்படுவது முறையே என்கிறார். தன்னை உணர்ந்தவர் வ. 42-இல் நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைத்தருளும் என வேண்டுகிறார். எசாயா ஆலயம் வந்தபோது ஆண்டவரைப் பார்த்தார் (எசா. 6 : 1). ஆண்டவரைப் பார்த்தவர் தன்னை உணர்ந்தார் (எசா. 6 : 5).

நாம் செய்யும் தவறு நம்மைப் பார்த்து உணராததே. இயேசுவைப் பார்க்கிறோம். அழுகிறோம், கவலை கொள்கிறோம். ஆனால் இயேசுவின் காயங்கள் நம்மைத் தாக்கம் செய்ய அனுமதியாமலிருக்கிறோம. திருச்சபை ஒன்றில் சில ஆண்டுகளுக்கு முன்பு பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனைக்குப் பின்பு கஞ்சி கொடுப்பதா, மோர் கொடுப்பதா என்பதில் இரு குழுவினருக்கு இடைய பெருங் குழப்பம் ஏற்பட்டது. இந்நிகழ்வு இயேசுவின் சிலுவை மரணம் விசுவாசியின் வாழ்வில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையே காட்டுகின்றது. அருட்பணியர் ஒருவரிடம் ஆதிவாசி மனிதன் வந்து,

“ஐயா நான் ஐம்பது ஆண்டுகளாகக் கொடிய பாவங்கள் செய்து வருகின்றேன். நீங்கள் கூறுகிறபடி இயேசுவின் இரத்தம் எனது ஐம்பது ஆண்டுகாலப் பாவங்களுக்கும் மீட்பு தர முடியுமா?” என்று கேட்டான். அதற்கு அருட்பணியர், “நீ பாவங்களை உணர்ந்து அறிக்கை செய்தால் உனது எத்தகைய பாவங்களையும் மன்னிக்க ஆண்டவர் ஆற்றல் பெற்றவராயிருக்கிறார்” என்று பதிலளித்தார்.

### 3. இறையாளுகைக்குள் பங்கேற்றார்

லூக்கா 23 : 43-இல் மனந்திருந்திய குற்றவாளியிடம் “இன்று நீ என்னுடன் பரதீசில் அல்லது பேரின்ப வீட்டில் இருப்பீர்” என்று இயேசு கூறினார். நல்லவர்கள் பரதீசுக்கும் கெட்டவர்கள் பாதாளத்துக்கும் செல்வர் எனும் நம்பிக்கை யூதர்களிடம் இருந்தது. “பரதீசு” என்பது பாரசீக வார்த்தை. பெர்சிய மன்னன் யாரேனும் ஒருவரை மதிப்பளிக்க விரும்பினால் அரசத் தோட்டத்தில் அவருடன் உலா வர (Companion of the Garden) அனுமதிப்பாராம். இதற்கு சுவர் எழுப்பப்பட்ட தோட்டம் (Walled Garden) என்றும் பெயர் உண்டு. இயேசு அழியாத நித்திய தோட்டமாகிய விண்ணில் (பரதீசில்) தம்முடன் வாழும் பாக்கியத்தை குற்றத்தை உணர்நது அறிக்கை செய்த குற்றவாளிக்கு வழங்குகின்றார். வெளி 2 : 7-இல் வெற்றி பெறுவோருக்கு கடவுளின் தோட்டத்தில் உள்ள (பரதீசில்) வாழ்வு தரும் மரத்தினுடைய கனியை உண்ணக் கொடுப்பேன் என்று ஆவியார் எபேசு சபைக்குக் கூறுகின்றார் “ஆண்டவருடைய தெரிதலின் அருள்பாலிப்பு” (The condescension of our Lord’s choice) எனும் நூலில் மனந்திருந்திய குற்றவாளி பரதீசுக்குள் செல்லும் நிகழ்வு விளக்கப்பட்டுள்ளது. பரதீசினுள் செல்லுகையில் யார் இவர்? என்று விண்ணிலுள்ளோர் ஆண்டவரிடம் கேட்டனராம். அப்போது ஆண்டவர் எனது பாடுகளின்போது ஆறுதலாயிருந்தவர் என்று பதிலளித்தாராம்.

முடிவுரை

சிலுவைநாகர் இயேசுவின்
பேரொளி வீசிடும் தூய கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன தம்
காயங்களையும் பார்க்கின்றன

குற்றவாளி ஒருவர் இயேசுவின் பார்வையால், காயங்களால் கவரப்பட்டு தன்னை அர்ப்பணித்து பரதீசுக்குள் சென்றார். நம் நிலை என்ன?

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**

மூன்றாம் திருமொழி

# பராமரிக்கும் அன்பு

யோவான் 19 : 25 - 27



இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்பு சீடரையும் கண்டு தம் தாயிடம், 'அம்மா இவரே உம்மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம், இவரே உம் தாய்' என்றார். யோ. 19 : 26-27

அருட்பணியர் ஒருவர் தனது அருட்பணிகளத்தின் இல்லங்களைச் சந்தித்து இறைவேண்டல் செய்யும் பணியில் ஈடுபடலானார். தான் சென்ற ஒரு வீட்டில் இளைஞர் ஒருவர் மிகுந்த பலவீனத்துடன் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டி பண வசதி இன்றி இருப்பதை அறிந்த இறைப்பணியர் அவரைத் தகுந்த மருத்துவமனையில் சேர்த்து பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். இரண்டு (Kidney) சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட இளைஞர் உயிர்பெற வேண்டி எதைச் செய்யவும் துணிவுக்கொண்ட ஆலயக் குரு அறுவைச்சிகிச்சைக்கு நாள் குறிப்பிடக்கூறி இளைஞருக்கு த் தெரியாமல் தனது சிறுநீரகத்தையே தானமாக தந்து பெரும் உதவிச் செய்தார். பல நாட்களுக்குப் பிறகு குணம் பெற்ற இளைஞர் வீடு திரும்பும் வேளையில் தனக்கு உறுப்பு தானம் மூலம் உதவிய நபரைக் காண வேண்டும் என்று மருத்துவரிடம் கேட்கவே, அழைக்கப்பட்ட தனது திருச்சபை குருவே அந்த நபர் என்பதைக் கண்டு மனம் மகிழ்ந்து நன்றிக் கூறினார். தனது திருச்சபை நபர் மீது பேரன்பு கொண்டதுடன் பராமரிக்கும் அன்பின் பணியை நிறைவேற்றியயவர் தான் கேரளா மாநிலம் கோட்டயம் அருகில் ஆலுவா பகுதியில் உள்ள கத்தோலிக்க திருச்சபையில் அருட்பணி செய்யும் ஜேக்கப் முரிக்கன் என்பவர்.

ஆம் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுவும் தனது இறப்பின் வேளையில் கூட பராமரிக்கும் அன்புக்கு முன்மாதிரியாய் நின்று கூறிய வார்த்தையே சிலுவையின் மூன்றாம் திருக்கூற்று....

மானிட வரலாற்றில் எவராலும் மறக்க முடியாத பெரும் பண்பிற்குரிய வார்த்தையே இவ்வார்த்தை. அன்புறவால் கட்டுமானம்

செய்யப்படும் குடும்ப உறவில் பராமரிப்பு என்பது ஒவ்வொருவரிலும் வெளிப்படும் பெரும்பண்பு எனலாம். இன்றைய உலகம் பெருந்தொற்று சூழலில் பராமரிப்பிற்காய் ஏங்கிக்கொண்டு தான் உள்ளது. குழந்தைகள் பெற்றோரின் ஆதரவிற்காகவும், பெற்றோர் பிள்ளைகளின் அரவணைப்பிற்காகவும், திருச்சபை ஆன்மீக ஒப்படைப்பிற்காகவும் ஏங்கிக்கொண்டே உள்ளன.

Susan Sontag சூசன் ஸ்சான்டாக் என்பவர் கூறுகையில், "My library is an archive of longings" என்கிறார். "என் நூலகம் எனது ஏக்கங்களின் ஆவணக் காப்பகம்" என்கிறார்.

இயேசு கிறிஸ்து தான் சிலுவையில் தொங்கிக்கொண்டு இருக்கும் நேரத்தில் தன் அருகே சோர்ந்து போனவராய்ப் பராமரிப்பிற்காய் மிகுந்த ஏக்கத்தோடு நிற்கும் தனது அன்னையைக் கவனித்தார். தனது துன்பத்தின் மிகுந்த உச்சகட்ட வேளையிலும் அம்மாவின் மீது தான் வைத்திருந்த பாசம், பற்று, பராமரிக்க வேண்டிய பணியினைப் பண்போடு நினைக்கின்றார். தனது மிகவும் வேதனையான நிலையை நேராக காண்கின்ற தனது தாயின் மனம் சோர்ந்து விடக்கூடாது என்பதை அறிந்து தான் இவ்வார்த்தையைக் கரிசனை உணர்வுடன் கூறுகின்றார். ஆர்தர் J. பிரோ (Arther J. Brow) என்பவர் யோ. 19 : 25-ஆம் திருமொழிக்கு விளக்கம் தர முயலுவது என்னவெனில், தனது வாழ்வின் கடைசி வேளையில் தனது அம்மாவுக்கு ஆதரவாய் எவரும் இருக்கமாட்டார்கள் என்பதை அறிந்து, தனது பார்வையில் பொறுப்புடன் பராமரிக்கும் பணியை நிறைவேற்றும் சீடரில் தகுதியான ஒருவரான யோவான் என்பவரிடம் ஒப்படைத்தார் என்று கூறுகின்றார். மேலும் அம்மாவின் இருதயம் "Mothers Heart" என்பது, எல்லாத் துன்பச் சூழல்களையும் ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, வாழ்வில் ஏற்படும் வெற்றிடத்தையும் தாங்கிக்கொள்ள தயார் ஆவது என்று சொல்கிறார். இந்த மூன்றாம் திருமொழியில் வெளிப்படும் பராமரிக்கும் அன்பு எப்படிப்பட்டது என்பது குறித்து சிந்திப்போம்.

**1. அர்ப்பணிப்புள்ள மகன் :** யோவான் 19 : 26

"அம்மா இவரே உம் மகன்"

சிலுவையில் துன்புறுத்தப்பட்டு மிகவும் வேதனையான சூழலில் நிற்கும் மகனின் நிலையை நேரடியாகப் பார்த்து மிகவும் உடைந்து போய் நின்ற தனது அம்மாவைத் தனக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய நெருங்கிய

சீடரான யோவானைக் காட்டி, அம்மா அவரே உம் மகன் என்று கூறி தனது அர்ப்பணிப்புடன் கூடிய பராமரிக்கும் பணியை அழகாய் நிறைவேற்றினார். குடும்ப உறவு என்பது குறுகிய எல்லைக்குள் குறுகி நிற்பது அல்ல, பரந்து விரிந்து செல்லுவது, எல்லாரையும் ஒன்றிணைக்க உதவுவது. பராமரிக்கும் பணி என்பது இவ்வுலகில் இறைச்சாயலைப் பெற்றுள்ள அனைவரையும் சார்ந்த ஒன்று. ஒருவர் தன்னைப் போல பிறரிடமும் அன்புகாட்ட முயல்வது என்பது அர்ப்பணிப்பின் அடையாளம் எனலாம். இந்த உலகில் உள்ள அனைவரும் உம் குழந்தைகள் என்று பார்க்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட வேண்டியே தம் சீடரை இவரே உம் மகன் என்று இயேசு குறிப்பிடுகிறார். மகன் என்கிற பாச உணர்வு உலகின் அனைத்து மானிடரிடமும் ஏற்பட வேண்டும். பெற்றோரைப் பொறுப்புணர்வுடன் பேணும் குழந்தைகளுக்கு முன் மாதிரியாய் தன்னை காட்டுவதுடன் எல்லாக் குழந்தைகளையும் தங்கள் குழந்தைகளைப் போல ஏறறுக்கொள்ளும் நல் உணர்வின் பிரதிபலிப்பாய்க் கூட நாம் கருதலாம். இன்று பல குழந்தைகளும், மூத்த பெற்றோரும், அன்பு இல்லங்களில் நல் உறவிற்காய் ஏங்கித் தவிக்கும் நிலையில் இயேசுவின் அர்பணிப்பு மிகுந்த இந்தச் செயல் என்றும் நினைவில் நிற்கின்ற ஒன்றே.

**2. அரவணைப்பு பெற்ற தாய்** யோவான் 19 : 26

பெற்றோரின் வாழ்வு என்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் தாய் ஒருவர் கருவுறும் போது தனது குழந்தை அந்த அம்மாவின் சுவாசத்திலேயே தான் உயிர் வாழ்கின்றது. உலகில் பிறக்கும் போது தானாகவே வாழ முயலுகின்றது. ஏனெனில் குழந்தை, தாய் உறவு என்பது எவராலும் பிரிக்க இயலாத ஒன்று. எந்த நிலையிலும் தான் பெற்ற குழந்தைக்கு ஏற்படும் துன்பத்தை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இயேசு அம்மா என்று அழைத்த அழைப்பு தொப்பிள் கொடி உறவின் உச்சகட்ட உறவு பிணைப்பு தான். இவரே உம் தாய் என்று கூறித் தமது அன்னையை யோவானின் தாய் என்று குறிப்பிட்டு இவரே உம்மைப் பாதுகாப்பார் என்கிற நம்பிக்கை தன்மையை ஏற்படுத்துகிறார். யூத சமூகம் பெண்களுக்கு மதிப்பு கொடுக்க தவறிய சூழலில் இயேசு கூறிய இந்தச் செய்தி பெண்களை முதன்மைப் படுத்தியதுடன் பெண்கள் மீது ஒரு புதிய பார்வை ஏற்படுத்த தூண்டியது. அதையே Catholics என்பவர் குறிப்பிடும் போது மரியாளை திருச்சபையுடன் ஒப்பிடுகின்றார். திருச்சபை என்பது தாய் என்று கூறும் அவர், மரியாவைத்

திருச்சபையாய் ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள். தந்தையாம் கடவுளை இறைவராய் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்கிறார். திருச்சபை என்பது ஆதரவற்றவர்களுக்குத் தாய், வேதனையுடன் இருப்பவருக்கு அரவணைப்பு தருவது. இங்கு மரியாள் நல் அரவணைப்பை இயேசு வழியாய் யோவான் மூலம் பெறுகிறார். ஏனெனில் யோவான் எந்தச் சூழலிலும் மாறதவர் என்பதனை இயேசு சிலுவையில் நின்றுகொண்டு உறுதிப்பட புரிந்துகொண்டார். Gina Gloriar என்பவர் தான் எழுதிய The Church is Our Mother என்னும் நுலில் "அம்மா" பற்றிக்கூறும்போது mother creates, cares, teaches, accepts, sacrifices, heals and celebrates with us என்கிறார். திருச்சபை நமக்குத் தாயாக இருந்து நம்மை அரவணைத்துப் பாதுகாப்பது போல, நாமும் பெண்களைத் தாயாகவும், படைப்பாளரின் சார்பில் நின்று அவரது படைப்புப் பணியை நிறைவேற்றும் உடன்படைப்பாளராகவும் காண்போம். அரவணைக்கும் அன்பால் அகிலத்தை அழகுபடுத்துவோம்.

**3. அங்கீகாரம் பெற்ற சீடன் :** (யோவான் 19 : 27)

"இவரே உம் தாய்"

Disciple என்ற ஆங்கிலச் சொல் கிரேக்க சொல்லான ΜαΟηΤηs-'Mathetes' என்ற வார்த்தையில் அழைப்பு பெறுகிறது. அதன் பொருள் கற்றுக்கொள்பவர், பின்பற்றுபவர், விரும்பிப் படிப்பவர் எனலாம். இயேசுவின் சீடர் குழுவில் இருந்த சீடர்களில் கடைசி வரையில் உடன்நின்றவர் "அன்பு செய்த சீடர்" என்ற அங்கீகாரம் பெறுகிறார். இயேசு தான் பெரும் துன்பம் ஏற்கும் வேளையில் கூட ஆதரவற்ற தன் தாயைத் தாம் அன்பு செய்த சீடரிடம் ஒப்படைத்தது என்பது அனைவரது உள்ளத்தையே உருக்கும் செயலாய் உள்ளன. "சீடரே இவரே உம் தாய்" என்று சிலுவை அருகே சென்று நின்ற சீடன் யோவானிடம் ஒப்படைத்தது என்பது. அன்பு செய்த சீடருக்கு மட்டும் தாய் அல்ல, யார் யார் உண்மையாய் இயேசுவின் மீது பற்றுதல் வைக்கின்றனரோ அவர்கள் அனைவருக்கும் தாய் என்பவர் ஏற்புடையவர் என்பதைத் தெளிவுற குறிப்பிடவே கூறுகிறார். இயேசுவின் அம்மா சீடருக்கு அம்மா என்னும் பெரும் உறவினைப் பெறுகிறார். ஒருமுறை இயேசு தனது பணிவிடையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் போது, "உமது தாயும், சகோதரர்களும், சகோதரிகளும் உம்மைப் பார்க்க வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்" என்று கூறிய போது, இயேசு கூறியது என்னவெனில், "என் தாயும் என் சகோதரர்களும் யார்? என்று வினவி

தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து இதோ என் தாயும் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரியும், என் தாயும் ஆவார்" என்று கூறினார். மாற்கு 3 : 31-35.

இயேசு கூறிய உடனே அந்தச் சீடர் இயேசுவின் தாயை தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். இந்த சீடர் சீடத்துவ குழுவில் முதன்மை இடம் பெற்றார்.

இயேசுவின் பராமரிக்கும் அன்பினை நமது வாழ்வாக்குவோம். நிலைவாழ்வின் கருவிகளாவோம்.

ஆமென் !

திரு. S.S. **ஆல்பின் டேவிட் ராஜ்**

நான்காவது வார்த்தை

# துன்பங்களை ஏற்கும் அன்பு

மத். 27 : 45-50



“. . . என் இறைவா என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? . . .” மத். 27 : 46

கடவுள் புகழ்ச்சியின் நடுவில் மட்டுமல்ல துன்பங்களின் நடுவிலும் வாழ்கிறார் என்பது தான் விவிலியம் தரும் உறுதியான நம்பிக்கை ப.ஏ.-ல் இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணம் வறண்ட நிலத்தில் 40-வது ஆண்டுகள் தொடர்ந்தது. அந்தப் பயணம் எளிதாக அமையவில்லை. கடினங்கள் நிறைந்த பாதை. இயற்கைச் சூழலால், எதிரிகளால், நச்சுத் தன்மை கொண்ட உயிரினங்களால் வந்த பாதிப்புகள், இழப்புகள் ஏராளம். அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறைகள் ஏற்பட்டதும் உண்டு. இதனால் பல நிலைகளில் அவநம்பிக்கைக் கொண்டனர். ஆனால் இந்த துன்பங்கள் நிறைந்த சூழலில் அவர்கள் பெற்ற இறை அனுபவம், கடவுள் தம் மக்கள் மீது துன்பங்களைச் சுமத்துகிறவர் அல்ல மாறாக மக்களது துன்பங்களைச் சுமக்கிறவர், மக்களது துன்பங்களை ஏற்பவர், தம் மக்களது துன்பங்களில் பங்கு கொள்கிறவர். மக்களது துன்பங்களைச் சுமப்பவர் (உபா. 1 : 31). இந்த அனுபவம் தான் இஸ்ரவேல் மக்கள் இறைப் பற்றுறுதியில் உறுதியுடனிருக்க உந்துதலைத் தந்தது. யோபுவின் புலம்பலிலும் திருபாடல்களில் வரும் சில இறை பற்றுறுதியாளர்களின் புலம்பலிலும் வெளிப்பட்டது இறை நம்பிக்கை மட்டுமே. கடவுள் அடியவர்களிடம் காட்டிய அன்பும் அடியவர்கள் கடவுளிடம் காட்டிய அன்பும் மட்டுமே வெளிப்பட்டிருக்கிறது.

ஆண்டவர் இயேசு சிலுவையில் மொழிந்த நான்காம் வார்த்தை, துன்பம் நிறைந்த சூழலில் வழக்கமாக யூதர்கள் செய்கின்ற மன்றாட்டு.

என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? (தி.பா. 22:1). இந்த மன்றாட்டைச் சிலுவை வேதனையின் நடுவில் இயேசு செய்கிறார். இந்த மன்றாட்டு நமக்கு கற்றுத்தரும் படிப்பினை என்ன?

**1. துன்பச் சூழலில் கடவுளோடுள்ள அன்பை உறுதிப்படுத்துதல் :** மத். 27:46

"என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?"

ஆண்டவர் இயேசு கடவுளிடம் கொண்டிருந்த அன்பு கலப்பில்லாதது, வலுவானது. ஒருவருக்குள் ஒருவர் வாழும் அன்பு (யோ. 17 : 21). அந்த அன்பின் பொருட்டு தந்தையின் அரசை நிறுவுவதில் ஒப்படைப்புடன் உழைத்தார். அன்பை, நீதியை, உண்மையை, சமத்துவத்தைத் தனது வாழ்வின் மூலம் வாழ்ந்து காட்டினார். கடவுளின் அரசு அன்பின் அரசு, அது எங்கும் எல்லாருக்குள்ளும் அமைய வேண்டும் என்ற ஆண்டவர் இயேசுவின் இந்தப் புதிய நெறி அன்றிருந்த அரசையும், யூத சமயத் தலைவர்களையும் பாதித்தது. இயேசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். பொய்க் குற்றம் சுமத்தித் துன்புறுத்திச் சிலுவை மரண தண்டனை வழங்கினார்கள். உடனிருந்த எல்லாரும் அவரை விட்டு விலகினார்கள். தனிமையில் விடப்பட்டார். பலர் சுற்றிநின்று ஏளனம் செய்தனர். சிலர் அவமானப்படுத்தினார்கள். உடலில் ஏற்பட்ட காயங்களால் வலி ஒரு பக்கம் மறுபக்கம் மன உளைச்சல். இந்தத் துன்ப இருள் மூடிய வேளையிலும் என் இறைவா, என்று அழைப்பது கடவுளிடம் அவர் கொண்டிருந்த உறுதியான அன்பு, நீரே என் கடவுள், உயிர்போகும் நிலையிலும், எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையிலும் நீரே என் கடவுள் (Still you are my Lord) துன்பம் எந்நிலையில் வந்தாலும் நீர்தான் என் கடவுள். கடவுளோடு உள்ள உறுதியான அன்பின் வெளிப்பாடு மன்றாட்டாக வெளிப்பட்டது.

**2. துன்பச் சூழலில் கடவுளோடுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் :** மத். 27 : 46

என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?

ஆண்டவர் இயேசு கடவுளிடம் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையின் வெளிப்பாடுதான் இந்த அழைப்பு. கடவுள் வாழுகிறார் என்பதை வெளிப்படுத்தும் உன்னத மன்றாட்டு. தி.பா. 22-ஐ படிக்கும்போது தொடக்கத்தில் வேதனையைப் புலம்பலாக வெளிப்படுத்திய பற்றுறுதியாளர் இறுதிப் பகுதியில் மகிழ்ச்சிப் பாடலைப் பாடுகிறார். அதில் அவர் கடவுளிடம் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை வெளிப்படுகிறது. விடுதலை உண்டு என்ற நம்பிக்கை. ஆண்டவர் இயேசு துன்பங்களைத் தவிர்த்திருக்கலாம். (லூக். 22 : 42) மாறாகத் துன்பங்களின் வழி அமையும் மீட்பு வலுவானது, உறுதியானது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது

அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் (யோவா. 12 : 24). மிகுந்த பலனை எதிர்பார்த்தே துன்பங்களை ஏற்கத் துணிந்தார். இந்தத் துன்பச் சூழலில் என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்பது இது கடவுள் கைவிடுகிறவர் அல்ல என்ற உறுதியான நம்பிக்கையின் வெளிப்பாடு. துன்பச் சூழலில் கடவுள் தன்னுடன் இருப்பதை வெளிப்படுத்தும் வாழ்வியல் அனுபவம். அதோடு கடவுள் உயிர்த்தெழச் செய்கிறவர் என்ற உறுதியான நம்பிக்கை. இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையிலேயே இயேசு துன்பங்களை எதிர்கொண்டார். அவரது சிலுவை மரணம் உயிர்ப்பு மிகுந்த விளைச்சலைத் தந்தது, தருகிறது. இன்று இந்த உலகம் விடுதலையையும், மீட்பையும் சுவைக்கிறது. ஆண்டவர் இயேசுவின் இந்த மன்றாட்டு (என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?) துன்பங்களை ஏற்கும் அன்பாக, நம்பிக்கையாக வெளிப்பட்டது மட்டுமல்ல நாம் கடவுளிடம் வைத்திருக்கும் அன்பு, நம்பிக்கை எப்படி அமைய வேண்டும் என்பதையும் கற்றுத்தருகிறது.


கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பின் பொருட்டுத் துன்பங்களை ஏற்ற தூய பவுல் சொல்லும் போது ....நம் ஆண்டவர் கிறித்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது என்கிறார். (உரோ. 8 : 35-39) பிரியவும் கூடாது என்பதுதான் ஆண்டவர் இயேசுவின் மன்றாட்டுக் கற்றுத்தரும் பாடம். இன்று தவளை மனம் படைத்த (தண்ணீரிலும், தரையிலும் வாழ்வது) மக்கள் அதிகம் வாழும் காலம் இது. தேவைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக, சுகத்திற்காகக் கடவுளைத் தேடுவதும், எல்லாம் பெற்ற பின் மனம் போல் வாழ்வதும் பெருகி வருகிறது. இந்நிலை மாறவேண்டும். கொரோனா பெருந்தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகள், கைவிடப்பட்ட முதிர்ந்த பெற்றோர், நாடற்றவர்களாக வாழும் மக்கள், சமூகத்தில் பாதிக்கப்பட்டோர் இவர்களோடு தோழமையை ஏற்படுத்த வேண்டும். கடவுளுக்காக கடவுளோடு என்ற மனநிலைவேண்டும். கடவுளிடம் நாம் கொண்டிருக்கும் அன்பும் நம்பிக்கையும் எச்சூழலிலும் உறுதியாக இருக்கவேண்டும். இந்த இலட்சியப் பாதையில் துன்பங்களும், தனிமை உணர்வும், இழப்புகளும், சவால்களும் ஏராளம் உண்டு. ஆனால் என் இறைவா, என் இறைவா, கடவுள் என் கடவுள் என்ற மன்றாட்டு நாம் ஆண்டவரிடம் இந்த என்ற உறுதியையும் தருகிறது. உறுதியான அன்பும் நம்பிக்கையும் நமக்குத் தருவது அவர் நம்மை கைவிடுவதில்லை.

அருள்திரு. A. **ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

ஐந்தாம் திருமொழி

# தம்மையே ஊற்றிவிடும் அன்பு

யோவா 19 : 28, 29



“தாகமாய் இருக்கிறது.” (யோ. 19 : 28)

இறைத்தன்மை கொண்ட மனுமைந்தர் மொழிந்திட்ட 5-ம் சிலுவை திருமொழி “தாகமாய் இருக்ககிறது”. வாழ்வு தரும் நீரூற்றான கிறிஸ்துவுக்குத் தாகமெடுப்பது விந்தையிலும் விந்தையே. இறையன்பின் அலைகள் பெருக்கெடுத்த பேரன்பர் இயேசு தம்மையே இழந்து தாகமாய்த் தவிக்கிறார். தம்மையே முழுமையாக மனுக்குலத்திற்காக கையளித்த அன்பின் கொடையாளி இப்போது தாகமாயிருக்கிறார். சிலுவையில் தாகத்தோடு தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுநாதரில் வெளிப்பட்ட அன்பின் ஆழங்களைப் புரிந்துகொள்வோம்.

## 1. கனிந்த அன்பு :

ஒருவர் மற்றவருக்காக உயிரைக்கொடுக்கும் அன்பிலும் மேலானது வேறொன்றுமில்லை. உலகம் இருளில் வாடிக்கொண்டிருந்த வேளையில் - விடிவெள்ளியாக, நீதியின் சூரியனாக வந்து பிறந்த மீட்பர் இயேசுவை இரட்சகரை நினைத்து உளம் களைப்படைந்திருந்தாள் தாய் மரியாள். ஆனால், இப்போது தனது இதயத்தை ஊடுருவிச் சென்றது கூரிய வாளின் காயம் - சிலுவையில் அறையப்பட்டு உயிர்விடும் தம் மகனின் நிலை கண்டு, தாங்கொணா துயரோடு நிற்கிறாள். தன் அன்னையின் நிலையைக் கண்ணுற்ற சிலுவைநாதர் - தன் அன்பு சீடரிடம் அவரை ஒப்படைத்துவிட்டு, அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்து உளமுடைந்து, தனது தவிப்பில் கனிந்த வார்த்தை தான் “தாகமாய் இருக்கிறது.”

## 2. களைந்த அன்பு :

விட்டு விட முடியாத ஒன்றை அல்லது ஒருவரை இழக்க முற்படும் அன்பு ஈடுஇணையற்றது.

உலகம் உருவாகுமுன்பே தந்தையாம் கடவுளோடு, கடவுள் வடிவில் விளங்கிய இயேசுநாதர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை களைந்து, தம்மையே வெறுமையாக்கினார். மனிதருக்கு ஒப்பாக அடிமையின் வடிவை ஏற்றுக்கொண்டார். மனுமக்கள் வாழ்வு பெறுவதற்காக இறை உரிமைகளையும் தனிச் சலுகைகளையும் துறந்துவிட்டார். இறை மக்களோடு தன்னை இணைத்துக்கொண்டு மனித துயரங்கள், துன்பங்கள், சோதனைகள், வேதனைகளோடு தம்மை அடையாளப்படுத்திகொண்டார்.

எதையும் விட்டுக்கொடுக்க இயலாத மனநிலையோடு மனித வாழ்வு இன்று குன்றிபோயிள்ளது. கிறிஸ்து நமக்காக எல்லாவற்றையும் களைந்தார். இதையே தமிழ் அறிஞர் ஒருவர்,

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே,
அன்பில் விளைந்த ஆரமுதே" என்று பாடுகிறார். நமக்கு பாதிப்பை தருகிற மற்றும் தராத ஒரு சிலவற்றையாவது விட்டுக்கொடுக்கும் அன்பு நம்மில் பிறக்கட்டும்.

**3. கண்டறிந்த அன்பு :**

நல்லவர் ஒருவருக்காக யாரேனும் துன்பம் ஏற்பது அரிது ஆனால் தீயோருக்காக துன்பம் ஏற்பது அசாதாரணமான அன்பு.

மனிதர்கள் இறைநம்பிக்கை அற்றவர்களாய் வலுவற்றிருந்த நிலையில், கடவுளுக்கு ஏற்புடையவராயிராமல் நல்லுறவின்றி பாவிகளாய்த் தூரம்போயிருந்த சூழலில் இழந்துபோன இறை உரிமை பேற்றினை மீட்டுத்தர மாபெரும் அன்பர் இயேசு நம்மை கண்டறிந்தார். நாம் அருள்நிலைபெற அவர் தம் உயிரைக் கொடுக்க முன்வந்தார். கடவுளுக்குப் பகைஞராயிருந்த நம்மை மறுபடியும் கடவுளோடு சிலுவையினாலே ஒப்புரவாக்கினார். பெருமகிழ்ச்சி நிறைந்த வாழ்வைப் பெற தகுதியற்ற நம்மைக் கண்டறிந்தார்.

தன்னலம் என்பது புற்றுநோய் போன்றது. அது உடலையே அரித்து அழித்திடும் தன்மை கொண்டது. அதை ஆரம்பத்திலேயே அகற்றிவிட வேண்டும். இன்று அன்பிற்காக உலகமே தவமிருக்கிறது.

அன்பிற்காய் ஏங்குவோரைக் கண்டறிந்து அன்பு பாராட்டும் உள்ளம் நமக்கு உருவாகட்டும்.

இறையன்பர்களே, முடிவில்லா அன்பை இயேசுநாதர் நம்மிடம் காண்பித்தார். அவரிடம் உண்மையாய் அன்பு பாராட்டுவோர் எத்தனை பேர்! சிலுவை நாதர் அன்பிற்காய்த் தாகமாய்த் தவிக்கிறார். இறையன்பும், பிறரன்பும் நம்மிலே கனிந்து ஓடட்டும். மேன்மைகளைத் துறந்து, பெருமைகளைக் களைந்து இயேசு போல் இழக்கவும் தயாராவோம். அன்புக்காய் ஏங்குவோரைக் கண்டறிந்து இறையன்பைக் காண்பிப்போம்.

மிகவும் சிறியோராகிய என் சகோதர, சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று சான்று பெற இறைவன் அனைவருக்கும் அருள்புரிவாராக.

அருள்திரு. **J. யாபேஸ்**

ஆறாம் திருமொழி

# மீட்கும் அன்பு

யோவான் 19 : 29, 30



"... அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார்."
யோவான் 19 : 30

இயேசு சிலுவையில் ஏழு திருமொழிகளை மொழிந்ததாக திருமறை கூறுகின்றது. திருமறையில் நான்கு நற்செய்தி நூல்களிலுமாக அவை காணக்கிடக்கின்றன. எல்லா திருமொழிகளும் ஒரே நற்செய்தி நூலில் சொல்லப்படவில்லை. யோவான் நற்செய்தி நூலைப் பொறுத்தமட்டில் இது மூன்றாவது சிலுவைத்திருமொழி. எல்லா திருமொழிகளையும் இயேசுவின் அன்பின் அடிப்படையில் பார்ப்பது சிறப்பு. தனது அன்பை இவ்வுலகில் ஊற்றிய கடவுள் எதையும் தன்னகத்தே நிறுத்திக் கொள்ளாமல், கடைசியாக தமது அன்பை வெளிப்படுத்துகிறார். கடவுளின் அன்பு மீட்கும் அன்பு. அதேவேளையில் அனைத்தையும் நிறைவேற்றும் அன்பும் கூட என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். கடவுளுடைய மீட்கும் அன்பின் முகவராகவும் முகவரியாகவும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தார்; பணியாற்றினார். அவர்கள் வாழ்வு பெறவும், அவ்வாழ்வு நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்துள்ளேன் (யோவா. 10 : 10) என இயேசு நாதர் தமது மீட்கும் பணியினைப் பற்றிக் கூறினார். தமது மீட்கும் அன்பினால் எவைகளை நிறைவேற்றி முடித்தார் என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

## 1. பரிகாரமான மீட்கும் அன்பு :

ஆஸ்வல்டு சேம்பர்ஸ் என்ற அறிஞர் கூறும்போது, சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தமானது, ஒரு இரத்த சாட்சியின் இரத்தமல்ல; மற்றொருவருக்காக மரிக்க முன்வரும் ஒரு மனிதனின் இரத்தமல்ல; உலகை மீட்பதற்காக ஊற்றப்பட்ட கடவுளின் வாழ்வு என்கிறார்.

சிலுவையில் நிகழ்ந்த கிறிஸ்துவின் மரணம் நிறைவும், பூரணமும் போந்ததுமான பலி, காணிக்கை, பரிகாரம் என நமது தென்னிந்திய திருச்சபையின் திருவிருந்து வழிபாட்டில் வரும் இறையியல் சொற்கள். இதனை பேதுரு அடிகளார் விளக்கும் போது, கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறநதார். அவர் உங்களைக் கடவுளிடம் சேர்க்கவே இறந்தார்; அவர் உங்களைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார் (Iபேதுரு 3 : 18) என்பதை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்தவ இறையியலாளர் அன்செலிம் கூறும்போது மானிடர் இழைத்துள்ள பாவம் வலிமையுள்ளது. அது மரணத்தை விளைவிக்கும். பாவம் மனிதனைக் கடவுளிடமிருந்து பிரிக்கிறது. கடவுளின் மகிமையை அவனிடமிருந்து எடுத்துவிடுகிறது. மனிதனாக வந்த கிறிஸ்து தவிர வேறு யாராலும் மனிதனை மீட்க முடியாது. கிறிஸ்து தானாகவே தன்னைப் பாவப் பரிகாரமாகக் கொடுத்து அந்த கடனை அதாவது பாவத்தினால் ஏற்பட்ட கடனை முழுவதுமாக திருப்பிக் கொடுத்தார். இதனை திருப்திக் கோட்பாடு (Satisfaction Theory) எனவும் கூறலாம். இவ்வாறாக, கிறிஸ்து தமது மீட்கும் அன்பினால் தன்னையே பாவத்திற்குப் பரிகாரமாக்கினார். ஆக பாவத்திற்கான பரிகாரத்தை இயேசு நிறைவேற்றினார்.

## 2. பணிக்கப்பட்டதை நிறைவேற்றும் மீட்கும் அன்பு :

விண்ணகத் தந்தையின் பணியை நிறைவேற்றிட தன்னை எப்போதுமே துரிதப்படுத்திக் கொண்டார் இயேசு கிறிஸ்து. என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு (யோவான் 4 : 38). பகலாய் இருக்கும் வரை என்னை அனுப்பியவரின் செயலை நான் செய்ய வேண்டியிருக்கிறது (யோவான் 9 : 4) என்றார். இவ்வாறாக விண்ணகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே இலக்காகக் கொண்டு துரிதத்துடன் பணியாற்றிய இயேசுநாதர் தமது வாழ்வு முடிவுக்கு வருகிறது என்பதனை அறிந்து தனது நிறைவு இறைவேண்டலை ஏறெடுகிறார் (யோவா. 17) தந்தையே, நேரம் வந்துவிட்டது என தன் மன்றாட்டைத் தொடங்கும் ஆண்டவர், தம் தந்தை தம்மிடம் ஒப்புவித்த பணியினை நிறைவேற்றும் பெருமிதத்துடன் தொடர்கின்றார். நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை மாட்சிப் படுத்தினேன் என்பதாகக் கூறுகின்றார்.

மேலும் எந்த ஒரு மூத்த ஆண் யூத மகனும் தனது பெற்றோரைப்

பராமரிக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளான். அவ்வகையில் இயேசுநாதரும் ஒரு மூத்த ஆண் மகனாகத் தனது தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பைச் செய்ய இயலாத நிலையில் தனக்கு அன்பாயிருந்த சீடனிடம் ஒப்படைத்து அதன் வழியாக தனக்குப் பணிக்கப்பட்டதை நிறைவேற்றி முடித்தார்.


ஆண்டவர் இயேசு கிறிஸ்து, தமது மீட்கும் அன்பினால் பாவ பரிகாரத்தையும், பணிக்கப்பட்டதைப் பணிவுடன் நிறைவேற்றி முடிக்கும் செயலினையும் நாம் காணமுடிகிறது. கடவுள் மனிதருக்கு அதிலும் சிறப்பாக கடவுளின் பிள்ளைகளுக்குச் சிறப்பான நோக்கத்தை கொடுத்துள்ளார். ஒவவொரு மனிதரும் அந்த நோக்கத்தினை அறிந்து மிகப் பணிவோடு தனக்குப் பணிக்கப்பட்டதை நிறைவேற்றி முடிக்க அழைக்கப்படுகிறார். கிறிஸ்துவே அதற்கு சிறந்த முன் மாதிரி.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்ட் நெல்சன்**

ஏழாம் திருமொழி

# ஒப்படைப்பின் அன்பு

லூக்கா 23 : 44-48



“தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்” லூக்கா 23 : 46

இயேசு கிறிஸ்து தனது போதனையை வாழ்வில் தெளிவாக வாழ்ந்து காட்டியவர். போதனையை சாதனையாக்கியவர். நம் வாழ்வில் வெளிப்பட வேண்டிய பண்புகளை இயேசு கிறிஸ்து சிலுவையின் நிறைவு நொடிப் பொழுதும் மிக நேர்த்தியாக நிறைவேற்றியுள்ளார்.

பாலஸ்தீனாவில் வாழும் யூத பெண்கள் தங்கள் பிள்ளைகள் இரவில் தூங்க செல்கையில் “உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்றும் இறைவேண்டலைக் கற்றுக்கொடுப்பார்கள். இதன் பொருள் முழு நம்பிக்கையில் கடவுளிடம் தன்னை ஒப்படைத்தல் ஆகும்.

திருச்சபையின் முதல் இரத்த சாட்சி “ஸ்தேவான்” கல்லெறியப்படுகையில் கர்த்தராகிய ஆண்டவரே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என வேண்டுதல் செய்து நித்திரையடைந்தான்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் உரைத்த ஏழாம் திருமொழி உறவையும், உயிரையும் உலக வாழ்வில் உதாசீனப்படுத்தகூடாது என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

ஏழாம் திருமொழி வாயிலாக ஆண்டவர் நமக்குக் கற்றுதரும் உண்மையினைச் சிலுவை நிழலில் நின்று தியானிப்போம்.

**1. பற்றுறுதியைக் கற்றுத் தருகிறது :**

என் தேவனே! என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என சிலுவையில் கதறிய இயேசு கிறிஸ்து மீண்டும், பிதாவே என்று மிகுந்த பாசத்தோடு தன் தந்தையை அழைக்கும் காட்சி. மரணத்தின் விழிம்பிலும்

இயேசு கிறிஸ்துக்கும் பிதாவுக்கும் இடையே உள்ள உறவு.... நமக்கு பெரும் நம்பிக்கையை இறை பற்றுறுதியைத் தருவதாக அமைகிறது.

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். அவர் என்னைத் தனியாக இருக்கவிடவில்லை. அவர் என்னோடு கூட இருக்கிறார். என்றெல்லாம் பலமுறை கூறி இயேசுகிறிஸ்து, கைவிடப்பட்டவராக கலங்கின சில துளி வினாடிகள், அந்தகாரம் மேற்கொண்டுவிட்டதோ என்று அஞ்சிய நமக்கு இந்த வார்த்தை நம்பிக்கையைத் தருவதாக அறியமுடிகிறது.

நம்பிக்கை இழந்து இயேசு கிறிஸ்துவை மறுதலித்த அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுருவும் இந்த வார்த்தையினால் நம்பிக்கை பெற்றவனாக தன்னுடைய நிருபத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அறிவித்தபடி என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரம் நேரிடும் என்று அறிகிறார். II பேதுரு 1 : 13 வசனத்தில் படிக்கிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெளிந்த நம்பிக்கையுடன் தெளிவாக தன் கடைசி கடிதத்தில் எழுதுகிறார். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது"

தொடக்க கால திருச்சபையில் இரத்த சாட்சியாக மரித்த பேராயர் போலிகார்ப் நாவில் தொனித்த இறுதி வார்த்தைகள் இவைகளே.

விசுவாசிகளான நமது நித்திய நம்பிக்கையினை உறுதியாக பற்றிக்கொண்டால் பாக்கியவான்களாய் நித்திய ராஜியத்துக்குள் நிலை வாழ்வுக்குள் பிரவேசிப்போம்.

நம்முடைய வாழ்வைப் பற்றுறுதி வாழ்வில் நிச்சயத்தோடு ஓடி தொடர்ந்து இயேசு கிறிஸ்துவின் கரத்தில் ஒப்படைக்கும்போது வாழ்வு வெற்றியாய் மாறும். காரணம் அவரோடு உள்ள உறவு. உறவு பிரிவது வலியை அதிகமாக்கும். ஆனால், நாம் ஆண்டவரைப் பிரியாது அவரில் பற்றுறுதியுடன் ஒப்படைப்புடன் பயணிக்கவேண்டும். தந்தையின் கரமே தரமானதாகவும், தீங்கின்மையானதாக இருக்கிறது. இந்த நம்பிக்கை நம்மில் வெளிப்பட வேண்டும்.

**2. பராமரிப்பைக் கற்றுத் தருகிறது**

"உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்றார் இயேசு கிறிஸ்து.

பிதாவின் கரங்களே வல்லமை உள்ளவைகள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தங்களை விடுதலையாக்கின கடவுளுடைய ஓங்கிய புயத்தையும், பலத்த கரத்தையும் மீண்டும் நினைவுபடுத்திக்கொண்டார்.

யோவான் 10 : 29

அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.

என்பதை இயேசு கிறிஸ்து மிகவும் தெளிவாக, மிகத் துல்லியமாகவும், நுணுக்கமாகவும் அறிந்தபடியால், தனக்குக் கடவுள் அருளிய ஆவியைத் தந்தையின் கரங்களில் ஒப்புவிக்கிறார்.

- விசுவாச வீட்டாராகிய நாமும் நம்முடைய ஆவியை மிகுந்த தைரியத்தோடு தந்தையின் கரங்களில், ஒப்புவித்து ஒப்படைப்புடன் ஓட்டத்தை முடிக்கவேண்டும்.

- அதாவது வாழ்க்கையின் பெருமை என்பது வாழுகின்ற நாட்களில் இல்லை செய்துமுடிக்கும் செயலில் இருக்கிறது.

- முழுமையாய் ஆண்டவரிடத்தில் ஒப்படைக்கும் போது ஆண்டவர் நல்ல பராமரிப்பைத் தந்து பாதுகாக்கிறவராக இருக்கிறார்.

அருள்திரு. S. **ஞானபிரைட்**

# சிறப்பு நாள்களுக்கான அருளுரைகள்

புதுக்கல்வியாண்டு தொடக்க நாள்

# கல்வி : கற்றுக்கொள்ளுதலின் நுகம்

மத் 11 : 25-30 திபா 49 : 1-4



"நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்." மத்தேயு 11 : 29

கல்விக் கற்போரின் அறிவு கண்களைத் திறக்கும் திறவுகோல். வாழ்வை நிலைநிறுத்தும் அடித்தளம். கல்வி கற்பது முதலில் நுகம்போல் தோன்றும். கற்றபின் தேனிலும் இனிமையாய் அமையும். பெரியோர் "கல்வி கற்கும்போது கசக்கும்; கற்றப்பின் இனிக்கும்" என்பார்கள். இயேசு கற்பிக்கும் கற்பிப்பாளராக தன்னை முதன்மைப்படுத்துகிறார் (மத்தேயு 11 : 1). கற்பிக்கும் குரு கற்றுக்கொள்பவரை வடிவமைக்கும் சிற்பி ஆவார். வடிவமைக்கப்படும் சிற்பம் உளியால் ஏற்படும் நுகத்தை தன்னகத்தே ஏற்றுக்கொள்ளும்போது, அதன் மதிப்பு பிறரால் புகழபடுகிறது. நுகம் சுமக்கும் மாடுகள் சுமைகளைச் சுமந்தபின் சத்தான உணவு ஊட்டப்படும். கல்வி சிலருக்கு "நுகம்" போல் இருந்தாலும், கற்றபின் உயர்வான வாழ்வு தருகிறது. எளிய முறையில் கற்றுக்கொள்வது கடினம். கடின முயற்சியின் உழைப்பால் கற்றுக்கொள்ள முடியும். கற்றுக்கொள்வதின் நுகத்தை உணர்ந்த கடவுள் ".... என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் என்றார்" மத். 11 : 29. முயற்சியில்லாதவனுக்கு மூச்சு விடுவது கூட சிரமம்தான் என்பார்கள். சோர்வின்றி விடா முயற்சியோடு முயலுபவர்களால் விதியையும் வெல்ல முடியும் என்ற கருத்தை உணர்த்தும் வள்ளுவரின் குறட்பாவை உள்வாங்கிய, ஜி.யு. போப் "வெற்றி என்பது எளிதல்ல; தோல்வி என்பது முடிவல்ல" என்பதே சாதிக்க துடிக்கும் அனைவருக்கும் கூறும் அறிவுரை.

மத்தேயு 11 : 25-30 வரை உள்ள திருமொழிகள் சாதிக்க துடிப்போருக்கு இயேசு தரும் அறிவுரை ஆகும். பள்ளி செல்லும் மாணவ

மாணவிகள் கல்வி நுகத்தை இலட்சியத்தின் ஏணியாக அமைத்துக்கொள்ள சில வழிமுறைகளைத் தியானிப்போம்.

**1. கற்றுக்கொள்ள வாருங்கள்**

"…. எல்லாரும் என்னிடம் வாருங்கள்…." இது ஒரு அழைப்புச் சொல். ஏன் ஆண்டவர் அழைக்கவேண்டும்? மத். 11 : 20-ன் படி இயேசுவின் வல்ல செயல்களைக் கண்டும், போதனைகளைக் கேட்டும் மானிடர்கள் மனம்மாறவில்லை. இவர்கள் இறைவாக்கினரின் மறையுரைகளை அறிந்தும், படித்தும் அதை ஏற்றுக்கொள்ளும் மனமற்றவர்களாய் வாழ்ந்தபடியால், முழுக்குமுனிவர் யோவானையும், இயேசுவையும் ஏற்றுக்கொள்ளவில்லை (மத். 11 : 18-19). இறைமகனைக் குறித்த அறிவில், மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டனர். இறைமகனை அறிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இயேசு "…என்னிடம் வாருங்கள்…" என்று அழைத்தார். வந்து பார்த்து, உண்மையை அறிந்துகொள்ளும்போது இதயத்திலிருக்கும் அறியாமை இருள் அகன்றுபோகும். உலகின் முதல் குழந்தைப் பூங்காப் பள்ளியைத் தோற்றுவித்த ஃப்ரோபல் "வாருங்கள் நாம் குழந்தைகளுக்காக வாழ்வோம்" என்றார்.

இயேசுவின் பள்ளிக்குச் சென்றவர்கள் நுகத்துடன் சென்று, நுகம் களைந்து இலகுவான வாழ்வைப் பெற்றனர். கல்வி கற்கும் பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பள்ளிச் செல்லும்போது, வாழ்வின் சுமைகள் மாற, இலகுவாக, நல்லவர்களாக, அமைதியாக வாழலாம். ஆசிரியர்கள் பள்ளிக்குப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டே இருக்கின்றனர். எல்லாரும் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக "அனைவருக்கும் கல்வி" திட்டம், கிராமம் தோறும் பள்ளிக்கூடம், திண்ணைப் பள்ளிக்கூடம் இவ்வாறு பள்ளி வாசல் திறந்தே இருக்கிறது. கேரளா மாநிலத்தில் ஈரூர் பகுதியை சேர்ந்தவர் ப்ரீத்து என்ற பெண் மகள். பிறவியிலேயே முதுகு தண்டுவடத்தில் அரியவகை மரபணு நோய் பாதிப்பு (ஸ்பைனல் மஸ்குலர் அட்ராபி) ஏற்பட்டது. அடுத்தவர் உதவி இல்லாமல், அவரால் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் திரும்பக் கூட முடியாது. அந்தப் பெண் சக்கர நாற்காலியில் அமர்ந்து தனது வாழ்வின் நுகத்தைக் கடந்து, மகிழ்ச்சியுடன் பள்ளிச் சென்று, படித்து பி.காம் பட்டப்படிப்பிற்கு பின், சி.ஏ. முடித்து "டெலாய்ட்டே" என்ற அமெரிக்க நிறுவனத்தில் இணை ஆலோசகராகப் பணியாற்றியவர்

(இந்து தமிழ் 08.06.2022). இன்றைய பிள்ளைகளும் அதிக ஆர்வமுடன் கல்வியை கற்றுக்கொள்ள முற்படுவது சிறப்பு.

## 2. கற்றுக்கொள்ளுங்கள்

"…. என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" (மத். 11 : 29) என அழைக்கும் ஆண்டவர் கற்றுக்கொள்ள கற்பிக்கிறார். கற்றுக்கொள்ளுதல் வாழ்வைக் கூர்மையாக்கும். கற்றுக்கொள்ளுதல் இனிமையானது. கற்க கற்க வாழ்வில் உயர்வடையலாம். உயர்ந்து நிற்கும் தலைவர்கள் தங்கள் வாழ்வில் கற்றுக்கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள். "எண்ணையும் எழுத்தையும் இகழக் கூடாது. இளம் பருவத்திலேயே அவற்றைக் கற்க வேண்டும். கைத்தொழில்களையும் கற்றுக்கொள்ள வேண்டும் (ஆத்திசூடி 7,29,40). ஆண்டவர் இயேசு கிறிஸ்து. "கனிவையும், மனத்தாழ்மையும்" கற்றுக்கொள்ளுங்கள் என்கின்றார் (மத். 11 : 29). கற்றுக்கொள்கின்றக் கல்வி மனிதனை நல்வழிப்படுத்த வேண்டும். நல்வழிப்படுத்தாக் கல்வி கல்வியல்ல. திருப்பாடல் 49 : 1-4 வரை உள்ள திருமொழிகள் "கேளுங்கள்" "செவிகொடுங்கள்" "செவிசாய்ப்பதில் கருத்தாய் இருங்கள்" என்றெல்லாம் அறைகூவல் விடுகின்றது. வள்ளுவர் "கற்க கசடறக் கற்பவை" என்கிறார். அதாவது, கற்கவேண்டிய நூல்களைப் பழுதறக் கற்றல் வேண்டும். கொராசின், பெத்சாய்தா மக்கள் கற்றும் கல்லாதவர்களாய் (மத். 11 : 21) வாழ்ந்தபடியால் "ஐயோ" என்று கூறுகிறார்.

அமெரிக்காவில் தொலைக்காட்சிப் பெட்டியை முட்டாள்களின் பெட்டி (Idiot box) என்பார்கள். நம்மை முட்டாளாக்கி, நம் நேரத்தைக் களவாடும் பெட்டி உண்மையில் முட்டாள் பெட்டி தான். "உனக்குக் கிடைத்த ஒவ்வொரு மணித்துளியும் உனது சொத்தாகும்" என்பதை உணர்ந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் கற்றுக்கொள்ளுங்கள்.

## 3. கவலையில்லாமல் வாழுங்கள்

"…உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11 : 29). இளைப்பாறுதல் என்றால் அமைதியான வாழ்வு என்று புரிந்துக்கொள்ளலாம். கற்றுக்கொள்ளும் கல்விச்சாலைக்கு மனமுவந்து, வந்து கற்றுக்கொள்வோர், மனஅமைதியான வாழ்வை இவ்வையகத்தில் பெற்றிடுவர். கல்வியைச் சிலர் "நுகமாக" "சுமையாக" எண்ணலாம். ஆனால், கற்றபின் "இளைப்பாறுதலாகவும்"

“எளியதாகவும்” இருக்கும். “...என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது” (மத். 11 : 30). இயேசுவின் போதனைகள், கற்பிக்கும் முறை சிலநேரங்களில் கடினமாய் இருந்தாலும், அதன்படி வாழ்வோர் அமைதியுடன் வாழ்வர். கற்றுக்கொள்வோர் கவலையின்றி மகிழ்ச்சியுடன் வாழுவர். எ.கா. நமது முன்னோர்கள் கல்வி கற்காதக் காலத்தில் மூடநம்பிக்கையினால் அச்சத்துடன் வாழ்ந்த காலம் மாறி, இன்று கல்விக் கற்று மனஉறுதியுடன் மகிழ்ச்சியாய் வாழ்கின்றனர்.

உடலாற்றல் கொண்ட மரவெட்டி ஒருவர் முதலில் 18 மரங்களை வெட்டினார். அவருடைய முதலாளி அவரைப் பாராட்டினார். மரவெட்டி தனது மனதுக்குள் நாளை இதைவிட அதிக மரங்களை வெட்டி பாராட்டு பெற விரும்பினார். ஆனால், 2-வது நாள் அவரால் 15 மரங்களே வெட்ட முடிந்தது. 3-வது நாள் 10 மரங்களே வெட்ட முடிந்தது. தனது ஆற்றல் குறைந்து விட்டதோ என்று கவலைப்பட்டார். இதை அறிந்த முதலாளி மரவெட்டியிடம் “நீ கடைசியாக எப்போது உனது கோடாரியைத் தீட்டினாய்?” என்று கேட்டார். கோடாரியைத் தீட்டும்போது அதே வேகத்தில் மரம் வெட்டலாம் என்பதை அறிந்தமாத்திரத்தில், தனது கவலையைவிட்டுக் கோடாரியைத் தீட்டவும், மரம் வெட்டவும் தொடங்கினார். இயேசு ஆண்டவர் மனுமக்களிடம் தன்னிடம் வந்து, கற்றுக்கொண்டு அமைதியுடன் வாழ அழைப்பு விடுக்கின்றார். பள்ளிச் செல்ல ஆயத்தப்படுகின்ற மழலைச் செல்வங்களுக்குக் கல்வி நுகமாக தோன்றினாலும், கற்றபின் உயர்வு என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பள்ளிச் சென்று கற்றுக்கொள்வோம். கவலையின்றி வாழ்வோம்.


திரு. M. **ஜெஸ்லின் ஸ்டீபன்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 482 |
| | கீர். | 117 |

தேர்வு நாள்

# தேர்வு பெற தேர்வெழுது

யாக்கோபு 1 : 1-3



“என் சகோதர சகோதரிகளே, பல வகையான சோதனைகளுக்கு உள்ளாகும் போது நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டிருங்கள்”
யாக். 1 : 2

புதுதில்லியில் தல்கோத்ரா மைதானத்தில் தேர்வு குறித்த கலந்துரையாடல் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், தேர்வு என்பது, வாழ்வுக்கான தேர்வா? அல்லது 10 ஆம் 12 ஆம் வகுப்புகளுக்கான தேர்வா? என்ற வினாக்களை எழுப்பி இதனைப் புரிந்து கொண்டால் குழந்தைகளின் மன அழுத்தம் குறையும் என்று பிரதமர் குறிப்பிட்டார். தேர்வு என்பது கற்றவைகளின் மதிப்பீடு என்று உணராமல், பலரது மன அழுத்தத்தை உச்சத்துக்குக் கொண்டு செல்லும் அளவு கோலாக அமைகிறது. மனஅழுத்தம் இல்லாமல் கொண்டாட்டமானதாகத் தேர்வுகள் அமைதல் வேண்டும். தேர்வு எழுதுவோர் அச்ச உணர்வுடன் இருப்பாராயின் அவரது நினைவாற்றல் மழுங்கிவிடும். தேர்வு எழுதுவோர் பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகளை விவிலியம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

(i) **திடனாயிரு** (Be Solid) யாக். 1 : 2

பாலஸ்தீனா நாட்டுக்கு வெளியிலிருந்து மக்களைத் திடனாயிருக்கும்படி திருத்தொண்டர் யாக்கோபு அழைப்பு கொடுக்கிறார். சோதனைகளைக் கண்டு அஞ்சாமல் மகிழ்வைப் பெறும்படிக்குத் திடனாயிருக்க ஆலோசனை கூறப்படுகிறது. அதனைப் போன்றே தேர்வு எழுதுவோரும் திடனாயிருந்து தேர்வை எதிர்கொள்ளவேண்டும். எத்தனை வினாக்களுக்கான பதிலை எழுத வேண்டும்? கொடுக்கப்பட்ட கால அளவு என்ன? மதிப்பெண்கள் அடிப்படையில் எவ்வளவு எழுத

வேண்டும்? இவைகளில் திடனாயிருக்க வேண்டும். மாறாக வீணான பய உணர்ச்சி; கவனக்குறைவு, சொற்ப மதியீனம் இவைகள் நம் மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். வீணான குழப்பங்களை மனதில் கொள்ளாமல், தேர்வுக்குப் பின்னால் வெற்றி என்ற மகழ்ச்சி இருக்கிறது என்பதனைப் புரிந்து திடனாயிருந்து தேர்வெழுதி தேர்வு பெறுவோம். (1கொரி. 15 : 28)

(ii) **தெளிவாயிரு** (Be Clear) யாக். 1 : 2

துன்புற்ற நிலையில் தெளிவற்றிருந்த மக்கள் சோதனையிலும் தெளிவாயிருந்து மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள திருத்தொண்டர் யாக்கோபு வலியுறுத்துகிறார். தேர்வு எழுதுவோர் தான் கற்றுக் கொண்டவைகளில் தெளிவாயிருக்கவேண்டும். தண்ணீர் கலந்த பால் தன்முன் வைக்கப்பட்டிருந்தாலும் அன்னப்பறவையானது பாலை தனியாக பிரித்தெடுப்பதனைப் போன்று தேர்வு எழுதும் மாணாக்கரும் கேட்கப்பட்ட வினாக்களுக்கானப் பதிலைத் தெளிவாய் எழுதவேண்டும். பிறரிடம் கேட்டு எழுதுதல், பிறரது விடைத்தாளைப் பார்த்து எழுதுதல், தேர்வு அறையில் பேசிக்கொண்டிருத்தல் போன்ற தீச்செயல்களுக்கு இடம் அளித்தலாகாது. அவ்வாறு இருப்போமானால் நம் சிந்தனை சிதறடிக்கப்படும். சிந்தனைச் சிதறாமல் தெளிந்த மனநிலையுடன் (நீதி. 16 : 32) தேர்வு எழுதித் தேர்வு பெறுவோம்.

**(iii) திருப்தியாயிரு** (Be satisfied) யாக். 1 : 3

தேர்வு மகிழ்ச்சியைக்கொண்டு வருகிறது. இம்மகிழ்வைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள திருப்தி தேவை. மனநிறைவுள்ளவருக்கு இறைப்பற்று பெரும் ஆதாயம் (1 தீமோ. 6 : 6) திருப்தியற்ற நிலையில் மனிதர் வாழ்கின்றனர். பிறரைப் பார்த்து தன்னை மதிப்பீடு செய்கின்ற போங்கு வளர்ந்து வருகிறது. பிறர் படிப்பதனைப் போல் தான் படிக்க வேண்டும். பிறரைப் போல் தான் இருக்க வேண்டும்; என்கிற நிலைப்பாட்டினைப் பெற்றோரும் தம் குழந்தைகளின் மனதுக்குள்ளாக திணிக்கின்றனர். ஆனால் ஒவ்வொருவருக்கும் சில சிறப்புத் திறன்கள் உள்ளன. சிலர் சூழல் சார்ந்து திறனாய்வு நோக்குடன் பதில்களை எழுதுவர். ஒருவரின் உள்ளான புரிதலை உணர்ந்துகொள்ள தேர்வு முறை வழிசெய்கிறது. தேர்வு எழுதியோர் தான் எழுதிய தேர்வில்

திருப்தியாயிருக்க வேண்டும். எழுதிய தேர்வில் திருப்தி அடையாமல் பதற்றம் கொண்டால் எழுதப்போகும் தேர்வு அச்ச உணர்வை அதிகரிக்கச் செய்யும். மதிப்பெண் என்பது, கற்றவைகளின் அளவீடுகளேயன்றி எதிர்கால நம் வாழ்வுமுறையின் அளவீடு அல்ல என்பதனைப் புரிந்து திடனாயிருந்து, தெளிவாயிருந்து, திருப்தியாயிருந்து தேர்வு எழுதித் தேர்வு பெறுவோம். ஆண்டவர் அதற்கான ஆற்றலைத் தந்தருள்வாராக ஆமென்.


அருள்திரு. S. **கிரீஷ்குமார்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 8 |
| | கீர். | 462 |

சங்க விழா

# காணிக்கை : நன்றியறிதலின் வெளிப்பாடு

வி.ப. : 30 : 11-15 தி.ப. : 5 : 1-12
திபா. : 122 மத். 6 : 1-4



"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கியுள்ளதற்கு ஏற்ப, ஒவ்வொருவனும் தன்னால் ஆனதை கொண்டு வருவானாக." (இச. 16 : 17)

அது ஒரு ஏழைத் திருச்சபை, சிறிய திருச்சபை அந்த சபையில் அறுவடைப் பண்டிகை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மக்கள் அனைவரும் தங்கள் நிலைக்கு தக்க ஏல பொருட்களை படைத்துள்ளார்கள். ஏலம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரண்டு கால்களும், இரண்டு கைகளும் முடமான ஓர் வயது முதிர்ந்த தாய் ஆலயத்தின் முன் பக்கம் நோக்கி தவழ்ந்து வந்து கொண்டிருந்தார்கள். ஒரு நிமிடம் ஆலயம் முழுவதும் அமைதியானது. தவழ்ந்து வந்த தாய் ஆலயத்தின் முன் பகுதியில் ஏலம் இட்டு கொண்டிருந்த மனிதனிடம் தான் எடுத்து வந்த சில காணிக்கை பொருட்களை கொடுத்தார். இதை கவனித்துக் கொண்டிருந்த போதகர் அம்மா இவ்வளவு Risk எடுக்குறீர்களே என கேட்டதற்கு அந்த தாய் தன் மெல்லிய குரலில் சொன்ன வார்த்தை

தெய்வம் ஜீவனை பிடித்து போட்டிருக்கார் இல்லையா ஐயா. அவருக்கு நன்றியோடு ஏதாவது காணிக்கை கொடுக்க வேண்டாமா?

அன்பர்களே! காணிக்கை என்பது இறைவன் நமக்கு செய்த நன்மைகளுக்காக நன்றியுள்ள இதயத்தோடு நம்மையே நாம் படைப்பதன் அடையாளமாய் இறைவனுக்கு நாம் படைக்கும் படையல்.

யூதர்கள் காணக்கைக்கு

Qorbanot (கொர்பானட்) என்ற கிரேக்க வார்த்தையை பயன்படுத்தினார்கள்.

இதற்கு Girins - கொடுத்தல்
Substilution - பதிலாள்
Coming - நெருங்கி சேர்தல்

போன்ற பல பொருட்கள் உண்டு.

ஒரு துறவியிடம் சீடர்கள் மிகப் பெரிய பாவம் எது என்று கேட்டார்கள். துறவி சிரித்துக் கொண்டே திருடுவது, பொய் சொல்வது ஏமாற்றுவதல்ல மாறாக கிறிஸ்தவனாக வாழ்ந்துக் கொண்டே இறைவனுக்கு நன்றி இல்லாமல் இருப்பது என்றார்.

இன்றைய தியான பகுதிகளை மையமாக கொண்டு காணிக்கை எத்தகைய நன்றியறிதலின் வெளிப்பாடு என்பதை 3 சிந்தனைகள் வழியாக சிந்திப்போம்.

**1. காணிக்கை : ஓர் கடனுக்கான படையல்** விப. 30 : 12

....தன் உயிருக்கு ஈடாக ஆண்டவருக்கு மீட்பு பணம் கட்ட வேண்டும்.

எகிப்து நாட்டில் ஒடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் ஆண்டவராகிய கடவுளால் விடுதலை பெற்று தாம் நல்க இருக்கும் வளநாட்டை நோக்கி பயணமாகி கொண்டிருக்கும் வேளையில் ஆண்டவர் மோசேயிடம், "இஸ்ரவேல் மக்கள் காணிக்கை கொண்டு வருமாறு நீ அவர்களோடே பேசு, தன்னார்வம் கொண்ட ஒவ்வொருவரிடமிருந்தும் நீங்கள் எனக்காக காணிக்கை பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார் விப. 25 : 2.

ஏன் காணிக்கை செலுத்த வேண்டும்

விப. : 30 : 12-இல் ஒவ்வொருவரும் தம் உயிருக்கு ஈடாக காணிக்கை செலுத்த வேண்டும்.

உயிர் ஆண்டவர் இலவசமாக தந்திருக்கும் உன்னத பரிசு.

உயிர் வாழ்வதால் தான் நாம் உழைக்கின்றோம். அதன் பயனை அடைகின்றோம்.

சிந்தனைக்காக : ஒரு பக்தன், தான் எந்த பணியை தொடங்கினாலும், எந்த இடத்திற்கு செல்லும் முன்பும் "ஒரு நிமிடம் செய்வது சரி தானா, போவது சரிதானா? என ஆய்வு செய்து என் பணியை தொடங்குவேன்" என்றான்.

இன்னொரு பக்தன் : ஒவ்வொரு நாளும் எனக்கு உயிர் தந்த இறைவனுக்காக உப்பாக, ஒளியாக மடியும் கோதுமை மணியாக இருந்தேனா? என்று ஆய்வு செய்து நான் என் நாளை முடிப்பேன் என்றார்.

நாம் இறைவனுக்கென்று படைக்கும் காணிக்கை ஓர் கடனுக்கான காணிக்கை.

**2. காணிக்கை : ஓர் கடவுளுக்கான படையல்** திப. 5 : 4

....நீ மனிதரிடமல்ல கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்.

அதிர்ச்சியூட்டும் நிகழ்வு என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அனனியாவும், சப்பிராவும் தாங்கள் விற்ற தங்கள் நிலத்தின் விலையில் ஒரு பகுதியை மறைத்து வைத்ததற்கு சாவு தான் தண்டனையா? என கேட்கலாம். கடவுள் அவ்வளவு கடினமானவரா? என கேட்கலாம்.

சப்பீராவின் பாவம் நிலத்தை விற்றதில் ஒரு பகுதியை தங்களுக்கென வைத்துக்கொண்டது அல்ல; மாறாக சமூகத்தை ஏமாற்றியதும் தூய ஆவிக்கு எதிராக பொய் சொன்னதினால் ஏற்பட்டதாக சித்தரிக்கபட்டுள்ளது.

தொடக்க திருச்சபை தூய ஆவியரின் வழி காட்டுதலில் பீடு நடைபோட்ட போது சிறு தடங்கல்கள் கூட அதை அழித்துவிடலாம் என்பதால் அத்தடங்கள் வேரோடு பிடுங்கப்படுகிறது.

நம்மை கவனிக்கும் கடவுளுக்கு முன்பாக களங்கமற்றவர்களாக இருக்கவேண்டும். கடவுளுக்கு கொடுக்கப்படும் காணிக்கையில் களவு இருக்ககூடாது என இப்பகுதி நம்மை எச்சரிக்கின்றது.

**3. காணிக்கை : ஓர் கணக்குக்கான படையல்** மத். 6 : 4

....மறைவாய் உள்ளத்தை காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைம்மாறு செய்வார்.

யூதர்கள் மூவகை அறச்செயல்களைக் கடைபிடித்தனர். தர்மம் செய்தல், இறைவேண்டல், நோன்பு இருத்தல் இவற்றை செயல்படுத்துவதில் மிகவும் ஆர்வம் காட்டினர். ஆனால் காலப்போக்கில் இவை வெறுமனே மக்களின் நன்மதிப்பை பெறுவதற்காக செய்யப்பட்டு தம் உள்ளார்ந்த தன்மையை இழந்துவிட்டன. ஆகவே இயேசு இவற்றை விமர்சனம் செய்து மக்கள் வெளி வேடத்தை அகற்றவும், வெளி ஆடம்பரமின்றி செய்யும் அறச்செயல்களுக்கு கடவுள் கணக்கு பார்த்து பலன் கொடுப்பார் என்றும் அருளுரை தருகிறார். நாம் எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல. மாறாக என்ன மன நிலைபோடு கொடுக்கிறோம் என்பதும் அந்த கொடையை ஆண்டவர் எப்படி அளவிட்டு ஏற்றுக்கொள்கிறார் அல்லது நிராகரிக்கிறார் என்பதும் முக்கியம் பெறுகிறது.

- ஏழை விதவையின் காணிக்கை

- அங்கீகரிக்கப்பட்ட ஆபேலின் காணிக்கை

- நிராகரிக்கப்பட்ட காயினின் காணிக்கை

நிறைவாக

ஒரு தாய்க்கு 3 பிள்ளைகள் இருந்தார்கள். இளம் வயதில் கணவனை இழந்த பெண் அவர். தனது பிறந்த நாள் அன்று 3 பிள்ளைகளையும் அழைத்து ஏதாவது பரிசு தாருங்கள் என்றார்.

மூத்த மகன் வேலைக்கு சென்று கொண்டிருந்தான். அவன் தாய்க்கு ஒரு புடவை வாங்கி கொடுத்தான்.

இரண்டாம் மகன் பள்ளிக்கு சென்றுக்கொண்டிருந்தான். அவன் தனது பேனா ஒன்றை தாய்க்கு பரிசாக அளித்தான்.

மூன்றாவது மகன் மிக சிறுவன். அவனிடம் தாய்க்கு கொடுக்க எந்த பரிசும் இல்லை.

அவன் கண்களில் கண்ணீர் பெருகியது. தாயை பார்த்தான். ஓடிப்போய் அம்மா மடியில் அமர்ந்து கொண்டான். தன்னையே பரிசாக கொடுத்தான். கண்ணீர் மல்க தாய் அவனை முத்தமிட்டு அரவணைத்தாள்.

அன்பர்களே,

நமது ஆண்டவர் நமது நன்றி படையலாக நம்மையும் நம் வாழ்வையும் ஏற்று படையலாக காண்கிறார்.

கிறிஸ்து தம்மையே பிரதானமான படையலாக படைத்தார். நாமும் நம்மை கிறிஸ்துவுக்காக படைப்போம்.

அருள்திரு. C. **ஜோன்ஸ் ராஜன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 326 | ஞா. | 323 |
| | கீர். | 398 | கீர். | 402 |

சபைநாள் விழா

# அனைவருக்குமான இறைவேண்டலின் வீடு

I அர. 8 : 22-30 I கொரி. 3 : 1-17
திபா. 84 மத். 21 : 12-16



“என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்குகிறீர்கள்” என்று அவர்களிடம் சொன்னார். (மத். 21 : 13)

இறை இல்லமாகிய ஜெபவீடு கற்களாலும் கைவினைகளினாலும் உருவான வெறுமையான கட்டடம் அன்று. மாறாக மக்கள் சமூகம் சார்ந்ததே இறைஇல்லம். தேவாலயமும், ஜெப ஆலயமும் இஸ்ரவேலரின் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையவை. தேவாலயத்திற்கும், ஜெப ஆலயத்திற்கும் இயேசு சென்றார். அதனை இயேசு இறைவனின் வீடு என அழைத்தார். நாம் வழிபடும் இல்லம் கடவுள் விரும்பும் இறைவேண்டலின் வீடாக இருக்கிறதா எனச் சிந்திப்போம்.

**1. இறைவேண்டல்** (I அர. 8 : 22, 53)

தாவீதின் இதய வாஞ்சையின் விளைவாக சாலோமோன் எருசலேம் தேவாலயத்தைக் கட்டி முடித்தார். அதன் அர்ச்சிப்பு விழா பதினான்கு நாட்கள் நடந்தேறின. உள் நாட்டிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அரசர் புதிய ஆலயத்திற்குள் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியைக் கொண்டு வந்து வைத்தார். இஸ்ரவேல் மக்கள் அதன் மூலம் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்தார்கள். ஆலயத்தில் சாலோமோன் ஆண்டவரின் பலிபீடத்தை நோக்கி நின்று கொண்டு சபையார் முன்னிலையில் வானத்துக்கு நேராக தன் கைகளை உயர்த்தி மன்றாடினார். அவ்வேண்டுதல் இஸ்ரவேலருக்கும் இறைவனுக்குமுள்ள உறவைப் புதுப்பிப்பதாகவும், அவரது பேரிரக்கம், ஆற்றல், கொடை ஆகியவற்றிக்காகக் கெஞ்சுவதாகவும் அமைந்தது.

எல்லா ஜனங்களும் தேவாலயத்திற்குள் வந்து ஜெபம் ஏறெடுக்க வேண்டுமென்பதே சாலோமோனின் விருப்பமாக இருந்தது.

வழிபடுதல், பலியிடுதல், ஜெபம் ஏறெடுத்தல், ஒய்வுநாளைக் கடைப்பிடித்தல், விழாக்கள் கொண்டாடுதல் ஆகியன முக்கிய இடம் பெற்றிருந்தன. கடவுளுக்கும், மனிதருக்கும் தொடர்பை உருவாக்கும் இடமாகவும் மீட்பை வெளிப்படுத்தும் அடையாளமாகவும் எருசலேம் ஆலயம் விளங்கியது. ஆலயம் கட்டப்பட்ட பிற்பாடு இஸ்ரவேலர் அனைவரும் எருசலேமில் ஒன்று கூடிப் பஸ்காவை ஆசரித்தனர். நாமும் இறை இல்லமாகிய ஜெபவீட்டில் கூடி இறைவேண்டல் ஏறெடுப்போம்.

**2. சுத்திகரித்தல்** (மத்தேயு 21 : 13)

இறைஇல்லம் இறைவனுடையது .அது அனைவருக்கும் உரியது. இறைஇல்லத்திலிருந்து மக்களின் வேண்டுதல்களைக் கேட்டு இறவைன் பதில் செய்கிறார். எருசலேம் தேவாலயத்தில் தாவீதின் அரியணையில் அமர அரசர் ஒருவர் இல்லாததால் நீதி பரிபாலனம் குருக்களிடம் சென்றது. இவ்வெற்றிடத்தால் யூதர்களின் உள்நிர்வாகமும் குருக்களிடம் வந்தது. குருத்துவத்தின் பணி நீட்டிக்கப்பட்டதால் மக்கள் மெசியாவாக வந்த இயேசு அரசு பணியையும் நிறைவேற்ற எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு தம் குருத்துவப்பணியை எருசலேம் தேவாலயத்தில் தொடங்கினார். அத்தேவாயலத்தில் புற இனத்தவர்களுக்கு ஆலயத்தின் உள்ளே அனுமதி இல்லை. இவர்களுக்கென ஆலயத்தின் வெளியே ஒதுக்கப்பட்டிருந்த இடத்தையும் காசுகாரர்களும், புறாவிற்கிறவர் வாணிபம் செய்ய அமர்ந்து அவ்விடத்தை ஆக்கிரமித்தனர். காசுகாரர்கள் இறைஇல்லத்திற்குக் காணிக்கை போட வரும் மக்களிடமிருந்து ரோம நாணயத்தை வாங்கிவிட்டு யூத நாணயத்தைக் கொடுத்து மக்களைச் சுரண்டினார்கள். தலைமைக் குருவும், குருக்களும் அவர்கள் நியமித்த யூத அதிகாரிகளும் ஆலயத்துள் வாங்கும் புறாக்களே பலியிட சுத்தமானது என ஏழை மக்களை அதிக விலை கொடுத்து வாங்க வைத்தனர். இதனால் அதிகச் செல்வம் சேர்த்தனர். மக்களை மையப்படுத்தாமல் பணத்தை மையப்படுத்திச் செயல்பட்டவரை இயேசு சவுக்கினால் அடித்துத் துரத்தி என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறை மன்றாட்டின் வீடு எனக் கூறி ஆலயத்தைச் சுத்திகரித்தார் (ஏசா 56 : 7) தங்கள் வழிபாட்டை இழந்த மக்கள் அதைச் சொந்தமாக்கி வழிபட உரிமை வழங்கினார் இயேசு. இதனால் முதன்மைக் குருக்களும், குருக்களும் யூத அதிகாரிகளும் இயேசுவை அச்சுறுத்தினார்கள். இறை இல்லத்தை நாமும் சுத்திகரித்து ஜெபவீடாக்கி அனைவரையும் தூய்மையாக்குவோம்.

**3. அரவணைத்தல்** (மத். 21 : 14)

ஆலயத்தைச் சுத்திகரித்த இயேசு சமூகத்தாலும், சமயத்தாலும் புறம்பாக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மாற்றுதிறனாளிகளை இறை இல்லத்தில் நுழையச் செய்தார். இஸ்ரவேலர் தங்களைக் கடவுளுக்குச் சொந்தப்படுத்தியும், மற்றவர்களை அன்னியப்படுத்தியும் செயல்பட்டனர். இவர்களது பாவத்தால் அல்லது இவர்களது பெற்றோர் பாவத்தால் இவர்கள் மாற்றுத்திறனாளிச் சாபத்தைப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டினர்.

இயேசு மாற்றுத்திறனாளிகளை அணைத்துக்கொண்டு குணப்படுத்தினார். தாவீது அரசனால் ஒதுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இயேசுவால் வாழ்வு பெற்றனர். இயேசுவின் வாழ்வு, பணி, சாவு, உயிர்ப்பு அனைவருக்கும் வாழ்வு கொடுத்தது. இயேசுவின் சரீரத்தை ஆன்மீக உணவு என்றும் அவரின் இரத்தம் ஆன்மீகப் பானம் எனவும் பவுல் கூறுகிறார். எனவே பானம் ஒரு கிண்ணத்தில் இருப்பது போல உண்ணும் அப்பம் ஒன்றாக இருப்பது போல வழிபடுவோர் பலராயினும் ஒரே இயேசுவின் மக்களாய் இருக்கிறோம். கடவுளின் கட்டளைக்குக் கீழ்படிந்து அவைகளைக் கடைப்பிடித்து நடக்கிற அனைவரையும் அவருடைய இறைவேண்டலின் வீட்டிலே கூட்டிச்சேர்த்து மகிழப் பண்ணுவார். தடை செய்ய வேண்டாம். இறைவேண்டலின் வீடு யூதரான தங்களைப் பிரித்து பேசுபவர்களுக்கு மட்டுமல்ல அது சகல ஜனங்களுக்கும் உரியது.

இன்று இறை இல்லமாகிய இறைவேண்டலின் வீடு கொள்கை பேதங்களால் சுயவிருப்பு, வெறுப்புகளால் ஏழை-பணக்காரன், படித்தவன்-படிக்கதாவன் கனம் பெற்றவன்- கனவீனமுள்ளவன் என்ற வேற்றுமைகளால் துண்டாடப்பட்டுள்ளது. பிளவுகளை நீக்கி எல்லோரையும் சேர்த்துக் கட்டுவோம். இறைவேண்டலின் வீடு அனைவரும் வழிபடும் இல்லமாகட்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வார்த்தைகளின் வழியாக இந்தச் சபைநாளில் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து நடத்துவராக. ஆமேன்.

சுவி.. T.S.. **ஏசையன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 2 | ஞா. | 347 |
| | கீர். | 19 | கீர். | 404 |

சேர்ப்பின் பண்டிகை

# அறுவடை : உழைப்பின் கொண்டாட்டம்

இ.ச. 26 : 1-11 2 கொரி. 9 : 6-15
தி.பா. 65 யோவா. 6 : 26-35



"... நீயும் லேவியரும் உன்னோடு உள்ள அந்நியரும், கடவுளாகிய ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளை முன்னிட்டு அக்களியுங்கள்". இ.ச. 26 : 11

கடவுள் மோசேயின் வழியாக இஸ்ரயேல் மக்களுக்குத் தாங்கள் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தை நினைவு கூர்ந்து ஏழு வகையான பண்டிகைகளை ஆசாரிக்க அறிவுறுத்தி இருந்தார் (லேவியர் 23). அவைகளில் ஒன்று அறுவடைப் பெருவிழா. இந்தப் பண்டிகைகள் எல்லாம் வர இருந்தவற்றின் நிழலே அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது என்று அப்போஸ்தலனாகிய பவுலார் (கொலோ. 2 : 16, 17) கூறுகின்றார். ஆக நம்முடைய பண்டிகைகள் எல்லாம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆசரிக்க அழைக்கப்படுகிறோம். அறுவடை திருவிழா அல்லது சேர்ப்பின் பண்டிகை என்பது கடவுள் நமக்குத் தந்த அருட்கொடைகளில் அல்லது அறுவடைகளில் ஒரு பகுதியை நன்றி நிறைந்த உள்ளத்தோடு கடவுளின் ஆலயத்தில் கொண்டு வந்து படைத்து மகிழ்வோடு ஆசாரிக்க வேண்டும். அறுவடை அல்லது அருட்கொடைகள் எல்லாம் கடவுள் நம்முடைய உழைப்பை அங்கீகரித்து அருள்பவை ஆகவே இப்பண்டிகை நம் உழைப்பின் கொண்டாட்டமாகவும் திகழ்கிறது. இந்த ஆண்டு நமது உழைப்பின் கொண்டாட்டத்தை எவைகளை நினைந்து கொண்டாட வேண்டும் என்பதனைத் திருமறை கண்ணோட்டத்தோடும் இறைவேண்டலோடும் தொடர்ந்து தியானிப்போம். மூன்று காரியங்களை நினைத்து நாம் கொண்டாட வேண்டும்.

கடவுளை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம் (லேவி 23 : 10)

ஏழைகளை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம் (லேவி 23 : 22)

மீட்கப்படாதோரை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம்

**1. கடவுளை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம் :** லேவி 23 : 10

கடவுள் இஸ்ரயேலரிடம் நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீங்கள் அறுவடை செய்யும்போது அறுவடையின் விளைச்சலான ஒரு கதிர் கட்டினை குருவிடம் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார். ஏன் இவ்விதமாக சொன்னார்? காரணம் நாம் விதைத்தாலும், நீர் பாய்ச்சினாலும் அதனை விளைய செய்கிறவர் கடவுளே! இன்றைய நாட்களில் நம் நாட்டின் விவசாயிகள் பலர் இயற்கைப் பேரிடர்களினாலே அறுவடைகளை இழந்து கடனை திரும்ப அடைக்க இயலாமல் உழைப்பெல்லாம் வீணாய்ப் போனது என்று தற்கொலை செய்வதையெல்லாம் பார்க்கிறோம். இத்தகைய சூழல்களில் நம்முடைய அறுவடைகளை அல்லது உழைப்பைக் கடவுள் அங்கீகரித்து அதற்குரிய பலனைத் தருகிறார். ஆகவே ஒரு போதும் இந்த அருட்கொடைகள் எல்லாம் என்னால், என் பெலத்தால் கிடைத்தவை என்கிற எண்ணம் நமக்கு வந்துவிடக் கூடாது. எல்லாமே அவருடையது. இந்த பூமி தண்ணீர், உழைக்க தந்த சரீர பெலன் எல்லாம் அவருடையது. ஆகவே நாம் கடவுளை நினைத்து நம்முடைய உழைப்பைக் கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

ஒரு காலத்திலே இந்த இஸ்ரயேலர் எகிப்திலே அடிமைகளாய் நிலமின்றி, உரிமையின்றி வாழ்ந்து வந்தனர். ஆனால் இப்பொழுதோ அவர்கள் கடவுள் கொடுத்த நாட்டில் நில உரிமை பெற்று அறுவடை செய்கிறார்கள் இவை எல்லாம் கடவுள் அருளியவை என நினைத்து முதற்பலனைக் கடவுளுக்கு நன்றி நிறை உள்ளத்தோடு படைத்து அறுவடைத் திருவிழாவைக் கொண்டாடினர். அறிஞர் அண்ணா எழுதிய செவ்வாழை என்கிற சிறுகதை நம்முடைய அடிமைத்தன வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மலையன் என்கிற கீழ்ஜாதி மனிதன் தன் வீட்டின் அருகில் செவ்வாழை ஒன்றை நட்டு மனைவி பிள்ளைகள் என எல்லாரும் சேர்ந்து கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தனர். நாட்கள் கடந்தன செவ்வாழை குலை தள்ளியது எப்போது அதைச் சுவைப்போம் என ஆவலாய்க் காத்திருந்தனர் மனைவி பிள்ளைகள். ஆனால் ஒருநாள் ஒரு உயர் ஜாதி பண்ணையார் அந்தச் செவ்வாழைக் குலையை வெட்டி தன் வீட்டில் கொண்டு வைக்கச் சொன்னார். மறுப்பு ஏதும் சொல்ல முடியாத மலையன் அப்படியே செய்தான். முழு குடும்பம் அதனை நினைத்து உடைந்து போனது. பிள்ளைகள் கேட்டனர்; நாம் அல்லவா வளர்த்தோம். நாம் அல்லவா நீர் பாய்ச்சினோம். பிறகு ஏன் அதை நாம்

உண்ண முடியவில்லை. மலையன் சொன்னான் நாம் எதனையும் பேசவோ, கேட்கவோ தகுதி இல்லாதவர்கள். நம்முடைய முன்னோர்களும் இப்படித் தான் இருந்தார்கள்.

இன்று கடவுள் தம் அருட்பணியாளர்கள் வழி நற்செய்தியாம் இயேசுவைத் தந்து அதன் வழியாக எல்லா உரிமைகளையும் பெற்று இன்று நிலம், படிப்பு வேலை என எல்லா நிலைகளிலும் உயர்ந்து நிற்கிறோம். ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இந்த அறுவடை அல்லது சேர்ப்பின் பண்டிகையின் நாளிலே கடவுளை நினைத்து நம் உழைப்பைக் கொண்டாடுவோம்.

அதே வேளையில் கடவுளை நினைத்துப் பாராமல், கனம் பண்ணாமல் நாம் ஆசரிக்கும் பண்டிகைகளாக இருக்கட்டும் அல்லது காணிக்கைகளாக இருக்கட்டும். அதில் கடவுள் பிரியப்படுவதில்லை அவைகள் அனைத்தும் வீண் காணிக்கைகள் என்பதை ஏசாயா 1 : 11-13 சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே கடவுளை நினைத்து நம் உழைப்பை கொண்டாடுவோம் கடவுள் நம்மை அங்கீகரிப்பார். மிகுதியாய் ஆசீர்வதிப்பார்.

**2. ஏழைகளை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம்** (லேவி. 23:22)

இஸ்ரவேலர்கள் அறுவடை செய்யும்போது முதலாவது கடவுளை நினைத்து தங்கள் உழைப்பைக் கொண்டாடச் சொன்னார். இரண்டாவதாக அறுவடை செய்யும்போது ஏழைகளை நினைத்து வயலோரத்தில் இருப்பவைகள், சிந்திகிடப்பவைகள் இவைகளை எளியோருக்கும் அந்நியருக்கும் விட்டுவிடு என்கிறார். ரூத் சரித்திரத்தில் போவாஸ் அதைத்தான் செய்தார். அந்தக் குடும்ப வரிசையில் தான் இயேசு கிறிஸ்து பிறந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் போவாஸை போல நம்முடைய உழைப்பின் ஒரு பகுதியை இல்லாத ஏழை எளிய மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய திருச்சபைகள் இந்த அறுவடை அல்லது சேர்ப்பின் பண்டிகையை எப்படி ஆசரிக்கிறோம்? நம் தலைமுறைகளிடம் அறுவடைப் பண்டிகை பற்றி எதை கற்றுக் கொடுக்கிறோம்? சிந்தனை செய்ய வேண்டும். அறுவடைப் பண்டிகை என்றால் என்னவென்று இன்றைய தலைமுறை பிள்ளை ஒருவனிடம் கேட்டேன் திருச்சபையின் கிளை சங்கங்கள் கடை வைப்பார்கள் காலை முதல் மாலை வரை அநேக தின்பண்டங்கள், உணவுகள், விளையாட்டுகள் என ரொம்ப ஜாலியாக இருக்கும் என்று அவன் சொன்னான். அன்பர்களே அவனுக்குத்

தெரியவில்லை நாமும் சொல்லிக் கொடுக்கவில்லை அறுவடைப் பண்டிகை கடவுளை நினைத்துக் கொண்டாட வேண்டியது. நம்மைப் போல் பணம் கொடுத்து வாங்கி சாப்பிட முடியாத ஏழைப் பிள்ளைகளை நம்மோடு சேர்த்துக் கொண்டு இவைகளை ஆசரிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுப்போம். அறுவடைப் பண்டிகை கடவுளை மட்டுமல்ல ஏழைகளையும் நினைத்துக் கொண்டாட திருமறை வழி கடவுள் நமக்கு அழைப்பு தருகிறார். திருச்சபைகளில் இன்று இப்படிப்பட்ட பண்டிகை பணம் ஈட்டும் ஒன்றாக தான் பார்க்கப்படுகிறதே தவிர அவைகளில் ஒரு பகுதி கூட ஏழைகளுக்கு என ஒதுக்கப்படுவதில்லை. பண்டிகைகளின் பொருள் கிறிஸ்து. அதை நாம் மறந்துவிட கூடாது. மிகவும் சிறியரில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்கிறார் (மத். 10 : 42).

ஆகவே இந்த அறுப்பின் பண்டிகையிலே நாம் நமது உழைப்பைக் கொண்டாடும்போது நம்மோடு கூட உழைக்க முடியாமல் வியாதிபட்டிருப்போர் வறுமைகளோடு, ஏழ்மையோடு போராடிக் கொண்டிருப்போர் கைவிடப்பட்டோர் என பல தேவைகளில் இருப்போரோடு நமக்குரியவைகளில் ஒரு பகுதியைப் பகிர்ந்து கடவுள் சமூகத்தில் நம் உழைப்பைக் கொண்டாடுவோம். கடவுள் நம்மையும் நம் உழைப்பையும் அங்கீகரித்து மிகுதியான ஆசீர்வாதங்களைத் தருவார்.

**3. மீட்கப்படாதோரை நினைத்து உழைப்பைக் கொண்டாடுவோம் :** யோவ. 6:27

அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம் நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். அப்படியானால் இந்த அறுவடைப் பண்டிகையின் போது நாம் நிலை வாழ்வைக் குறித்து அறியாத மக்களும் அறிந்து கொள்வதற்காக நம்முடைய உழைப்பின் ஒரு பகுதியை ஆத்தும அறுவடைக்காக கொடுத்து இந்நன்னாளில் நம் உழைப்பைக் கொண்டாட அழைக்கப்படுகிறோம். லூக். 10:2-இல் இயேசு சொல்கிறார் அறுவடை மிகுதி வேலையாட்களோ குறைவு அறுவடைக்குத் தேவையான ஆட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் என்கிறார். ஆத்ம அறுவடை குறித்த பாரம் நம் ஒவ்வொருவருக்குமான கடமை.

இன்று நம்மால் இந்த ஆத்ம அறுவடை செய்ய நேரடியாக செல்ல இயலாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய உழைப்பின் ஒரு

பகுதியைக் கொண்டு இப்படிப்பட்ட கனமான திருப்பணிகளை மேற்கொள்ளுவோரை நாம் தாங்க வேண்டும். வளர்ந்த திருச்சபை அல்லது பெரிய திருச்சபை என்பது பொருளாதாரத்தை மையமாக கொண்டு இயங்கும் திருச்சபை அல்ல மாறாக அது எத்தனை ஆத்துமாக்களை அறுவடை செய்துள்ளது என்பதைப் பொறுத்து தான் வரையறை செய்யப்படுகிறது. அறுவடைப் பண்டிகையை அன்றைக்கு இஸ்ரயேலருக்கு ஆண்டவர் கொடுத்தார். ஆனால் ஆத்ம அறுவடையை ஆண்டவர் இன்று முழு உலகின் திருச்சபைளுக்கும் கொடுத்திருக்கிறார்.

ஆதித் திருச்சபை ஆத்ம அறுவடைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்தது. உலகெங்கும் நற்செய்தி பரவியது. புதிய புதிய ஆத்துமாக்களைச் சபையில் சேர்த்தார்கள். தங்களையும் தங்கள் உடைமைகளையும் இந்த ஆத்ம அறுவடைக்கு முழுமையாக ஒப்புகொடுத்தனர். இன்று நாம் பெற்று அனுபவிக்கும் இந்த மேன்மையான வாழ்வு அன்று மேலைநாடுகளிலிருந்து ஆத்ம அறுவடைக்கு நம் மத்தியில் அனுப்பப்பட்ட அருட்பணியாளர்களால் தான். அப்படி வாழ்வைப் பெற்றுக் கொண்ட நாமும் இந்த ஆத்ம அறுவடையை மேற்கொள்ள சபையாக அழைக்கபடுகிறோம். இந்த அறுவடை பண்டிகையில் எவ்வளவு மீதம் எடுப்போம் என்பதை கணக்கிடாமல் எவ்வளவு ஆத்துமாக்களை அறுவடை செய்ய வேண்டும் என்பதையும் மனதில் கொண்டு நம் உழைப்பைக் கொண்டாடுவோம்.

அறுவடையின் உரிமையாளர் சீக்கிரம் வரப் போகிறார், அவர் வரும்போது பதர்களை அக்கினியால் சுட்டெரிப்பார் என திருமறை நமக்குச் செய்தி சொல்கிறது. நம்முடைய திருச்சபை பதர்களைப் போல இல்லாதவாறு நிரம்ப அறுவடை செய்த திருச்சபையாய்க் காணப்பட கிடைக்கப்பெற்ற இந்த அருள் காலத்தில் ஆத்ம அறுவடைக்கு முக்கியத்துவம் கொடுப்போம். உழைப்பிற்கு உறுதுணையாய் நிற்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தி ஏழை எளிய மக்களும், ஆண்டவரை அறியா மக்களும் ஆண்டவரை அறிய நம் உழைப்பின் ஒரு பகுதியை மனநிறைவோடு கொடுத்து உழைப்பைக் கொண்டாடுவோம்! இறையாசி நம்முடனிருப்பதாக! ஆமென்!

திரு S. **ஸ்மைலின் நிம்மி ஆனந்த்**

| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 325 | ஞா. | 467 |
| | கீர். | 399 | கீர். | 416 |

பேராய நன்றியறிதல் பெருவிழா

# கடவுளின் சொல்லொண்ணாக் கொடைகளை நினைத்துப்பார்

எசாயா 12 : 1-6 2 கொரி. 9 : 1-15
தி.பா. 103 லூக். 17 : 11-19



என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே! (தி.பா. 103 : 2).

**முன்னுரை :**

ஒருமுறை லூயி டால்பர்ட் என்னும் இறை பண்டிதர் தமது குடும்பத்தாருடன் நயாகரா நீர்வீழ்ச்சியினைக் காணச் சென்றிருந்தார். மிக உயரத்திலிருந்து வேகமாய்ப் பாயும் தண்ணீர் திரளின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் அமைந்திருந்தது. தண்ணீர் கீழே விழுமிடத்தில் கீழிருந்து ஒரு பனிப்படலம் எழும்பி வானளாவ உயர்ந்து ஆகாயத்துடன் இணைந்து நிற்கும் காட்சியினை அவர் கண்டார். கீழே விழும் தண்ணீர் பிரவாகமும் கீழிருந்து மேலெழும் பனிப்படலமும் தூய வெண்மையாய்ப் பரலோகத்தையே கண்முன் கொண்டுவந்ததைப் போலிருந்தது. அவருடைய உள்ளத்திலும் ஒரு கேள்வி எழும்பியது. கடவுளின் சொல்லொண்ணாக் கொடைகளை அனுபவித்திருக்கும் நான் உகந்த அளவில் நன்றி செலுத்துகிறேனா? இக்கேள்வி அவரை அதிகமாய்ப் பாதித்து இறை பணிக்காய் இன்னமும் ஊக்கமாய்ச் செயல்பட அவரைத் தூண்டியது. திருப்பாடகராகிய தாவீதும் இதை உணர்ந்தவராகத் தமது நன்றியின் பிரதிபலிப்பை 103-ஆம் திருப்பாடலில் "என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!" என்று பாடுகிறார். இன்றைய திருமறைப் பாடங்களின் வழியாய் நாம் வெளிப்படுத்தவேண்டிய நன்றியறிதலின் தளங்களைத் தூய ஆவியாரின் துணையுடன் சிந்தனை செய்வோம்.

**1. இறை சினம் மாற்றப்பட்டதற்காய் நன்றி செலுத்துவோம் :** (ஏசாயா 12:1-6)

"அந்நாளில் நீ இவ்வாறு சொல்வாய் : ஆண்டவரே நான் உமக்கு

நன்றி சொல்வேன்; நீர் என் மேல் சினமடைந்திருந்தீர்; இப்பொழுதோ உம் சினம் தணிந்து விட்டது. நீர் எனக்கு ஆறுதலும் அளித்துள்ளீர்" (ஏசா. 12 : 1).

அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; (தி.பா. 103 : 3, 4)

மனிதரின் தவறுகளுக்காக வெளிப்படும் இறைக் கோபம் மனிதரைத் தண்டிப்பதற்குப் பதிலாக அது மன்னிப்பாக, இரக்கமாக வெளிப்படுத்தப்படுவது எத்தனை விந்தை, எத்தனை சிலாக்கியம். ஏசாயா தீர்க்கரின் காலத்தில் தீர்க்கரின் அறிவுறுத்தல்களுக்குப் பின்னரும் இஸ்ரவேலர் தங்களைச் சீருடன் வழிநடத்திய தங்கள் ஆற்றலும் அன்பும் மிகுந்த கடவுளைப் புறந்தள்ளி இதர சாதியினரின் செழுமையின் தெய்வங்களைத் தொழுது, அவர்களது அசுத்த செயல்களைப் பின்பற்றி இறைத் தூய்மையை இழந்தனர். தங்களின் விடுதலை வாழ்வுக்காகக் கடவுளிடம் நெருங்குவதற்குப் பதிலாக தவறான தங்கள் தலைவர்கள் தந்த தலைமைத்துவத்தால் அசீரியா நாட்டிடம் சரணடைந்தனர். அவர்கள் இவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்கிக் கப்பம் கட்டச்செய்து அவர்களை ஒடுக்கினர். இந்நிலையில் தான் ஏசாயா தீர்க்கர் கடவுள் தண்டிக்கிறவரல்லர், அவர் மன்னிக்கிறவர்; ஆறுதல் அருளுகிறவர் என்ற தமது தரிசன உரையினை அருளுகின்றார். கடவுள் அக்கிரமங்களையும், தவறுகளையும் ஏற்கிறவரல்லர்; அது அவரது நீதிக்கு முரணானது. அவைகள் மீது சினங்கொள்ளுகிற கடவுள். ஆயினும் அவர் தமது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதரிடம் அன்பு கூருகிறவர். எப்படிக் கடவுளின் சினம் இரக்கமாக மாறியது என்ற மாபெரும் உண்மையினைத் தீர்க்கர் அடுத்த வசனத்தில் "இறைவன் எனது மீட்பர்" என்ற சொற்களால் பதிவு செய்கிறார். இங்கே மீட்பர் என்பதற்கு அவர் பயன்படுத்தியுள்ள எபிரேயச் சொல் யேஷுவா (YESHUAH) என்பதாகும். இச்சொல் புதிய ஏற்பாட்டில் நமது ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கும் சொல்லாகும். இயேசு என்ற சொல்லின் பொருள் மீட்பர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (மத். 1 : 20, 21). ஆக இறைவன் எனது மீட்பர் என்ற சொல் "இறைவனே எனது இயேசு" என்ற அறிக்கையாக வருகிறது. தந்தையாகிய கடவுள் தமது திருமைந்தனாகிய இயேசுவின் மீது நமது பாவங்கள் அனைத்தையும் சுமத்தி நமக்காக அவரைப் பலியாக்கியதால் நாம் நமது பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டு தூயவர்களாக்கப் பட்டுள்ளோம். நம்மிலிருந்த பாவம் விலகியதால் இறை கோபம்

நம்மிலிருந்து அகற்றப்பட்டு இறையிரக்கம் நம்மீது பொழிந்தருளப்பட்டுள்ளது. இதனையே பவுல் அடிகளார் நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5 : 21) என்று உரைக்கிறார்.

இறைச் சாயலாகப் படைக்கப்பட்டிருக்கும் நாம் நமது சுயநலம் சார்ந்த சிந்தனைகள், சொற்கள் செயல்களால் அனுதினமும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், சமய வாழ்விலும் சாட்சியிழந்து இறை நாமத்தை காயப்படுத்தி வருகிறோம். நமது மீட்பராகிய கிறிஸ்துவின் இடையறாத மன்றாடுதலால் இவைகள் நமக்கு மன்னிக்கப்படுகின்றன. ஆயினும் அந்த நன்றியுணர்வு சற்றேனும் இல்லாதபடி தவறுகளிலேயே நாம் தொடருகின்றோமே. மன்னிக்கப்பட்டிருக்கின்ற நமது நன்றியுணர்வு எத்தகையதாயிருக்கவேண்டும்? முன்னுரையிலே சொல்லப்பட்ட நிகழ்விலே நீர்வீழ்ச்சியின் தண்ணீர் பிரளயமாய்ப் பெருக்கெடுத்து பாய்ந்து வரும்போது அதனை ஏற்கின்ற நிலப்பரப்பு அதன் பிரதிபலிப்பாக பனிப்படலத்தை ஆகாயத்தைத் தொடுமளவுக்குத் தாராளமாய்த் தருவது போல நமது நன்றியுணர்வுகளும் இறைப் பிரியத்தைத் தரும் செயல்களாய் அமைந்திருக்க வேண்டியது எத்தனை அவசியம்?

### 2. இறை அருள் (கிருபை) ஊற்றப்பட்டதற்காய் நன்றிகளைச் செலுத்துவோம் (2 கொரி. 9 : 1-15)

“கடவுளின் சொல்லொண்ணா கொடைகளுக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக” (2 கொரி. 9 : 15)

அவர் தமக்கு அஞ்சுவோர்க்குக் காட்டும் பேரன்பு (கிருபை) மண்ணினின்று விண்ணளவு போன்று உயர்ந்தது (தி.பா. 103 : 11).

கிருபை அல்லது அருள் என்ற சொல்லுக்குத் தகுதியற்றோர் மீது அருளப்படும் மிகுதியான கொடை என்பது பொருளாகும். அல்லது தகுதியற்றோரைத் தகுதிப்படுத்தும் இறைக்கொடையே கிருபை. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் வெற்றி பெற 40 மதிப்பெண்கள் தேவையெனில் 40 மதிப்பெண்ணும் அதற்கு மேலும் பெற்றவர்களே வெற்றி பெற தகுதியானவர்கள். ஆனால் ஒரு மாணவன் 30 மதிப்பெண்களே பெற்றிருக்கிறானெனில் அவன் வெற்றிக்குத் தகுதியற்றவன். ஆயினும் அவன் மீது பரிவு கொண்ட ஆசிரியர் 10 மதிப்பெண்களைக் கூடுதலாகத் தந்து அவனை வெற்றி பெற்றவனாக

அறிவித்தால் இதுவே கிருபை அல்லது அருள் என்னும் சொல்லின் பொருளாகும். அவ்வாறே நாம் பிறப்பில் பாவிகள்: “பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தரித்தாள்” என்பது திருப்பாடகரின் புலம்பல் (தி.பா. 51 : 5). நமது செயல்களும் நம்மைப் பாவிகள் என்றே அடையாளப்படுத்துகின்றன. பவுலடிகளார் பின்வருமாறு “நான் நன்மை செய்ய விரும்பினாலும் என்னால் தீமையைத்தான் செய்ய முடிகிறது. ....அந்தோ! இரங்கத்தக்க மனிதன் நான்! சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?” என்று புலம்புகிறார். இப்படியாகப் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியாத நம்மைத் தூயவர்கள் என்று தகுதிப்படுத்தி அறிவித்திருப்பது கடவுளின் அருள் மிகுந்த செயல். இதனைப் பவுலடியார் “நீங்கள் அந்த இறை அருளாலேயே (கிருபை) நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை” (எபே. 2 : 8) என அறுதியிட்டுரைக்கிறார். நமது கீர்த்தனைப் பாடலில் அமைந்துள்ள “நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார். மாசில்லாத பரன் சுதன் தன் முழு மனதால் நேசிக்கிறார்” என்னும் பிரிக்கன்ரிட்ஜ் அவர்களின் பாடல் வரிகள் இதனை விளக்குகின்றதல்லவா? (கீர். 308). கடவுளின் இந்த அளப்பரிய நன்றிக்கு நமது பதிலுரை என்ன?

இத்தாலியா நாட்டிலே 78 வயது முதியவர் ஒருவர் தமது கடுமையான வியாதியினிமித்தம், சிறந்த ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவ மனையில் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் ஒருநாள் முழுவதும் அவர் சுவாசிக்க செயற்கை சுவாசக் கருவி (Ventilator) பொருத்தி சிகில்சையளிக்கபட்டது. படிப்படியாகக் குணமடைந்த அவர் மருத்துவமனையிலிருந்து இல்லம் செல்ல ஆயத்தமானார். மருத்துவச் செலவுகளுக்கான கட்டணச் சீட்டு அவரிடம் தரப்பட்டது. அதனைப் பார்த்த முதியவர் மிகவும் அதிர்ச்சியடைந்தார். காரணம் ஒருநாள் சுவாசக் கருவிக்கான கட்டணமாக 5000 euro (சுமார் 4 இலட்சம் ரூபாய்) போடப்பட்டிருந்தது. அதனைப் பார்த்துக்கொண்டிருந்த அவரது கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளிப்பட்டன. அதனைக் கண்ணுற்ற மருத்துவ நிர்வாகம் அவரிடம் இத்தொகை அவரால் செலுத்த இயலாததால் கண்ணீர் சிந்துகிறாரோ என்று அவரிடம் பரிவுடன் கேட்டனர். முதியவர் பதிலாக : இல்லை, இல்லை அதற்காக நான் அழவில்லை; மருத்துவ கட்டணம் முழுமையும் நான் செலுத்தி விடுகிறேன். ஆனால் நான்

ஒன்றை நினைவு கூர்ந்தேன்; எனக்கு இப்போது வயது 78 இத்தனை வருடகாலம் கடவுள் படைத்த காற்றை நான் இலவசமாகவே சுவாசித்து வந்திருக்கிறேன். இது இத்தனை விலையுயர்ந்தது என்பதை நான் அறியாமலேயே இருந்து விட்டேன். இப்பொழுது தான் நான் இதன் மகத்துவத்தை உணர்ந்து கொண்டேன். ஒருநாளாகிலும் கடவுளுக்கு நான் நன்றி செலுத்தினேனிலையே என மனதுடைந்து அழுதாராம். ஆம், நாம் பெற்றிருக்கின்ற குடும்பம், பிள்ளைகள், உறவுகள், கல்வி, வேலைவாய்ப்பு, சுகம், பெலன், ஆயுட்காலம் உழைப்பதற்கென்று கடவுள் தந்த உடல் ஆரோக்கியம், நிலம், மழை, வெயில், காற்று ஆகிய அனைத்தும் கடவுளின் அருட்கொடைகள் அல்லவா. நன்றியின் உணர்வே இல்லாமல் இவைகளை நாம் அனுதினம் அனுபவித்து வருகிறோமே, இதற்கான நமது பதிலுரை என்ன?

இன்றைய நிருபப் பாட பகுதியில் பவுலடிகளார் கொரிந்து திருச்சபைக்குச் சில ஆலோசனைகளைக் கொடுக்கிறார். நன்றிப் பதிலுரைக்கான நமது சிந்தனைக்கு இது நல்லதொரு மாதிரியாக அமைந்துள்ளது. அவையாவன: (1) வாக்களிக்கப்பட்டதான உங்கள் தான தருமங்கள் உங்கள் பெருந்தன்மையினைக் காட்டுவதாக அமைந்திருக்க வேண்டுமேயன்றி அது அற்பத்தனத்துடன் செய்யப்பட்டதாக அமைந்து விடக்கூடாது (2 கொரி. 9 : 5). (2) மனஉளைச்சலுடனோ அல்லது கொடுக்க வேண்டுமே என்ற கட்டாயத்துடனோ கொடுக்காதபடி மிகுந்த உற்சாகத்தோடே கொடுங்கள் (வச. 7), (3) பெருந்தன்மையுடையவர்களாய் நற்கிரியைகளில் பெருகுங்கள் (வச. 8). ஏழைகளிடம் உங்கள் பெருந்தன்மையான கரிசனைப் பணிவிடையால் இறைநீதியை வெளிப்படுத்துங்கள். நாம்பெற்றுள்ள இறையாசிகளுக்கு ஏற்ற பதிலுரையாக நமது நன்றிப்பலிகள் அமையட்டும்.

**3. நிந்தைகள் அகற்றப்பட்டதற்காய் நன்றிகளைச் செலுத்துவோம்** : (லூக். 17 : 11-19)

“பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து தூரத்தில் நின்று கொண்டே ஐயா! இயேசுவே, எங்களுக்கு இரங்கும் என்று உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள்”. (லூக். 17 : 12, 13).

“உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்; அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகிறார்” (தி.பா. 103 : 3).

நற்செய்திப் பாடப் பகுதியில் தொழுநோய் பிடித்திருந்த 10 பேர் தங்கள் நோய் நீங்கும்படி இயேசுவிடம் வந்தனர். அக்காலத்தில் தொழுநோய் என்பது தீட்டு என அடையாளப்படுத்தப்பட்ட நோய். இந்நோய் பிடித்தவர்கள் இதர மனிதர்களைப் போல சமூக வாழ்விலும், சமய வாழ்விலும் உரிமை மறுக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான தீட்டு நியதிகள் அக்காலத்தில் பின்வருமாறு வகுக்கப்பட்டிருந்தன. “தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கிழிந்த உடை அணிந்து தலை வாராமல் மேலுதட்டை மறைத்துக்கொண்டு, “தீட்டு, தீட்டு” என குரலெழுப்ப வேண்டும். நோயுள்ள நாளெல்லாம் அவர் தீட்டுள்ளவர். எனவே, தீட்டுள்ள அவர் பாளயத்துக்கு வெளியே தனியாகக் குடியிருப்பார்” (லேவி. 13 : 45, 46). எனவே தான் இயேசுவைச் சந்திக்க விரும்பிய இவர்கள் இயேசுவின் அருகில் வரத்துணியாது “தூரத்தில்” நின்றனர் என நற்செய்தி நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை நோக்கலாம். சமூகத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் உயிரற்றவர்களே. பார்க்லே என்னும் இறை பண்டிதர் இப்படிப்பட்ட தொழுநோயாளர்களுக்கு அவர்கள் உயிருடன் இருக்கும்போதே ஈமக் கிரியைகளைச் செய்து இல்லத்திலிருந்து வெளியாக்கிவிடுவர் என்று கூறியிருக்கிறார். ஏனெனில் அக்காலத்தில் இது மருந்துகளாலும், மருத்துவர்களாலும் சுகப்படுத்த முடியாத நோயாகவே கருதப்பட்டிருந்தது. தொழுநோய் பிடித்திருந்த மனிதர்களுக்கு நோயின் வலியினை விட சமூக, சமய வட்டங்களின் புறக்கணிப்பே தாங்கமுடியாத வலியாக இருந்தது.

வரலாற்றிலும் நமது முன்னோர் புறக்கணிப்பு என்னும் பெருந்தீமையால் மிகவும் அவலமடைந்திருந்தனர். சாதி எனும் கட்டமைப்புக்குள் கட்டப்பட்டு, பாரம்பரியம் எனும் சமூக தீமைகளுக்குள் அடைக்கப்பட்டு, அறியாமை என்னும் இருளுக்குள் தள்ளப்பட்டு விடுதலை பெற முடியாதபடி ஒடுக்கப்பட்டிருந்தனர். ஊர்க்கிணறுகளில் உயர் சாதியினரைப் போல தண்ணீர் இறைத்துவர அனுமதி மறுக்கப்பட்ட புறக்கணிப்பு, கால்களில் செருப்பு அணிய முடியாத புறக்கணிப்பு, இல்ல வாயில்களை நிமிர்ந்து செல்லுமளவில் உயரமாக அமைக்க இயலாத புறக்கணிப்பு, ஆண்களுக்குத் தலையில் துண்டு கட்டவும், பெண்களுக்கு இடுப்புக்கு மேல் ஆடையணியவும் அனுமதி மறுக்கப்பட்ட புறக்கணிப்பு, கல்வி மறுக்கப்பட்ட புறக்கணிப்பு என்பதான எண்ணற்ற நிந்தைகளால் நடைப்பிணமாகவே வாழ்ந்து

வந்தனர். அடிமைகளிலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். கிறிஸ்துவின் இரக்கத்தால் நமது மண்ணிற்கு அனுப்பப்பட்ட அருட்பணியாளர்கள், நிந்தைகளைச் சுமந்துகொண்டிருந்த மக்களின் நிலை கண்டு, உள்ளமுருகி இவர்களும் மனிதர்களே, வாழுவதற்கு உரிமை பெற்றவர்கள் என உரிய அதிகார வட்டங்களில் நமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, எதிராய் நின்ற உயர்வட்டத்தார் தந்த இன்னல்கள் அனைத்தையும் தாங்கி, இன்று நாம் பெற்றிருக்கும் விடுதலையின் வாழ்வுக்குக் காரணிகளாயமைந்தனர். கிறிஸ்துவின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட அனைத்து விடுதலையின் அனுபவங்களுக்காக நாம் நன்றி செலுத்த மறவாதிருப்போம். கீர்த்தனைக் கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார், நமது நிந்தைகளில் நாம் பெற்ற விடுதலையினை தமது பாடல் வரிகளில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

பாடித்துதி மனமே பரனைக் கொண்டாடித் துதி தினமே

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்து

சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலைவில் கிடந்த புறஜாதியாம் எமை
மந்தையில் சேர்த்து பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்திற்காக -பாடி

இயேசுவின் வார்த்தையினை நம்பி ஆலயக் குருக்களிடம் தங்களைக் காண்பிக்கச் சென்ற பத்து தொழுநோயாளர்களும் செல்லும் வழியிலேயே நலமடைந்தனர். தங்கள் உரிமை வாழ்வுக்குள் சென்றனர். ஆனால் தங்களுக்கு விடுதலைச் சுகம் தந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்த மறந்து போயினர். ஒரே ஒருவன் மட்டிலுமே திரும்பி அவரிடம் வந்தான். நாம் எப்படி?

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

| 𝄞 | | | | |
|---|---|---|---|---|
| | ஞா. | 1 | ஞா. | 319 |
| | கீர். | 21 | கீர். | 513 |

H.M.S. ஞாயிறு

# சிதறுண்டவைகளைக் கண்டுபிடித்தல்

எசா 9:1-5 | எபே 4:17-32

திபா.136 | மத் 10:5-16



"வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள்."
(மத்தேயு 10 : 6, 7 )

**சுதேச மிஷனெறிச் சங்கத்தின் தோற்ற வரலாறு:**

முதல் நூற்றாண்டிலேயே நற்செய்தி அறிவிக்க வந்தவர்கள் முதல் முதல் திருவிதாங்கூர் பகுதியை மையப்படுத்தி இருக்கிறார்கள். 1795-இல் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட லண்டன் மிஷன் சங்கத்தின் மூலமாக இந்தியாவுக்கு முதல் மிஷனெறியாக அனுப்பபட்ட அருள்திரு. உல்லியம் தொபியாஸ் றிங்கல்தௌபே ஐயர் 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் தென் திருவிதாங்கூர் பகுதியான மைலாடிக்கு வந்து ஒரு சபையை நிறுவினார். அதன் பின்பு பல மிஷனெறிகள் வந்து கல்விப் பணி, மருத்துவப் பணி, அச்சுக்கூடம், தொழிற்கூடங்கள் அமைத்து நற்செய்திப் பணியினை விரிவாக்கம் செய்தனர். திருவிதாங்கூரில் திருப்பணித் தொடங்கிக் கன்னியாகுமரி முதல் கொல்லம் வரை நிறுவப்பட்ட திருச்சபைகள் அறிவிலும் பக்தியிலும் ஒழுங்கிலும் நாகரீகத்திலும் நன்முயற்சியிலும் ஒன்றுபட்டு வளர்ச்சியடைவதற்குத் தேவையான தீர்மானங்களை நிறைவேற்றி செயல்படுவதற்கென்று சுதேச போதகர்களும் ஊழியர்களும் அடங்கிய தென்திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் உருவாக்கப்பட்டது. ஆண்டிற்கு இரு முறை கூடின இச்சங்கம் சபையார் சாட்சியுள்ள வாழ்கை நடத்தவும் ஆண்டவரை அறியாத மக்களுக்கு நற்செய்தி கூறி அறிவிக்கவும் முக்கிய தீர்மானமாக ஏற்று செயல்பட்டதே சுதேச மிஷனெறிச் சங்கம் உருவாக காரணமாக அமைந்தது. 1899-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22, 23 நாட்களில் திட்டுவிளையில் கூடிய சபாலோசனைச் சங்க கூட்டத்தில் சுதேச மிஷனெறிச் சங்கம் தோற்றுவிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1900-ஆம் ஆண்டு மார்ச் 15-ஆம் நாள் சுதேச மிஷனெறிச் சங்கத்

திருப்பணி ஆரம்பமானது. முதல் திருச்சபை கொல்லம் அருகிலுள்ள முகத்தலை திருச்சபை. பின்னர் தென்திருவிதாங்கூர் இரு பேராயமாக உருவானபோது சுதேச மிஷனெறிச் சங்கம் இரண்டாக பிரிக்கப்ட்டது. கன்னியாகுமரிப் பேராய சுதேச மிஷனெறிச் சங்கம் மார்த்தாண்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சுதேச மிஷனெறிச் சங்கத்தின் நோக்கம் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஆண்டவரை அறியாதோருக்கு நற்செய்தி அறிவிப்பதும் தேவையிலிருப்போருக்கு ஆலோசனை கூறி நல்வழிப்படுத்தி திருச்சபையில் சேர்ப்பதும் தேவைபட்ட இடங்களில் ஆலயங்கள் அமைத்து ஆண்டவரின் அன்பில் தழைக்க செய்வதும் சுதேச மிஷனெறிச் சங்கத்தின் சிறப்பு. இதன் வழியாய்த் திருச்சபைகள் நிறுவப்பட்டு வளர்ச்சியடைந்த பிற்பாடு பேராயத்துடன் இணைக்கப்படுகிறது. இதுவரையில் 102 திருச்சபைகள் பேராயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை சேகர, ஆயர் மண்டல மற்றும் கிளைச் சபைகளாகச் செயல்பட்டுவருகிறது. சுதேச மிஷனெறிச் சங்கம் நம்மவர்களுக்கு நம்மவர்களாலேயே நற்செய்தி அறிவித்து நம் பேராயத்தை வலிமையாக்குகிறது என்பது வரலாறு.

சுதேச மிஷனெறிச் சங்க ஞாயிறாம் இந்நன்னாளில் சிதறுண்டவர்களைக் கண்டுபிடித்தல் என்னும் தலைப்பில் சிந்திப்போம்.

திருமறையில் இயேசு நாதர் நற்செய்தி பணிக்கென்று திருத்தூதுவர்களைத் தெரிந்து கொண்டு அனுப்புகின்றார். அவர்களிடம் வழிதவறிப்போன ஆடுகளான இஸ்ரேல் மக்களிடம் செல்லுங்கள் என்று ஆலோசனை கூறுகின்றார். அதுமட்டுமல்லாது கிராமத்தில் செல்லும் போது அறியாதோரைக் கண்டுபிடியுங்கள், மறுத்தோரைக் கண்டுபிடித்து எச்சரிக்கைச் செய்தி சொல்லுங்கள், வாழ்விழந்தோரை கண்டுபிடித்து அவர்கள் தேவைகளை நிறைவேற்றி நற்செய்தி வழியாய் இறையரசில் பங்கடைய செய்வதே நமது பணியென்று ஆலோசனை கொடுத்து அனுப்புகிறார். இன்று நாம் வாழும் நவீன கால வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய பணி என்ன என்பதை திருமறை வழி நின்று தியானிப்போம்.

I. **இறையன்பை அறியாதோரைக் கண்டுபிடித்தல்:** (மத்தேயு 10:11)

*"பாத்திரமானவன் யாரென்று விசாரித்து, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்."*

*"find out whoinit is worthy, andstay there untilyou leave."*

பிச்சைக்காரர் ஒருவர் பக்கவாதத்தால் தனது கால் மற்றும் கை செயலிழந்த நிலையில் தன் மகனுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். வாழ வீடு இல்லை பயணிகள் நிழற்கூடம் அவருக்குத் தஞ்சமாக இருந்ததது. அந்த பகுதியில் மிஷனெறி ஒருவர் ஊழியம் செய்ய சென்றார். அவர் பயணிகள் நிழல் கூடத்தில் இருந்த பிச்சைக்காரரை நீண்ட நாட்களாக கவனித்து வந்தார். ஒரு நாள் அவரோடு பேசத் தொடங்கி, அவருடைய பெயர் மற்றும் முகவரியை விசாரித்தார், மகனைப் படிக்க வைக்கவில்லையா என்றும் கேட்டார். பிச்சைக்காரர் கண்ணீர் மல்க எனது ஊர் இது தான், என் பெயர் அழகுபிள்ளை நான் பலவீனமான போது எல்லாரும் என்னை விட்டும் என் இரண்டு சின்ன பிள்ளைகளை விட்டும் ஓடிவிட்டார்கள். என் மகளை வளர்க்க முடியாததால் விற்று விட்டேன். மகன் வினோத்தை என்னோடு வைத்திருக்கிறேன். பிச்சை எடுத்து பிழைக்கிறோம் என்று கூறினார். மிஷனெறி அவருக்கு ஆதரவாக நீங்கள் கலங்க வேண்டாம், மகன் வினோத்தை நான் படிக்க வைக்கிறேன் என்று கூறி விடுதியில் சேர்த்து படிக்க வைத்தார். மேலும் அழகுபிள்ளைக்கு நிலம் வாங்கி நாற்பதாயிரம் ருபாய் மதிப்பில் ஒரு வீடும் கட்டி கொடுத்தார் மிஷனெறி. தினம் தோறும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் போதித்து விசுவாசத்தில் வளரச் செய்தார். அழகுபிள்ளையும் மகன் வினோத்தும் ஞானஸ்நானத்தின் மூலம் புது வாழ்வைப் பெற்றார்கள். அந்தப் பகுதியில் ஆலயம் கட்ட எதிர்ப்பு கிளம்பியது. காவல்துறை அதிகாரிகள் இரு தரப்பு மக்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தைக்கு முன் அழகுபிள்ளை காவல்துறை அதிகாரியிடம் தனியாக சென்று தனது வாழ்க்கைக் குறித்து சொன்னார். ஆலயம் வந்தால் என்னைப் போன்று நலிவடைந்தவர்கள் அநேகர் வாழ்வு பெறுவார்கள் என்று கூறி ஆலயம் வேண்டும் என்று எடுத்து கூறினார். காவல்துறை அதிகாரி எதிர் தரப்பினரை அழைத்து அவர்கள் நன்மை தானே செய்கிறர்கள் ஆலயம் கட்டட்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். அன்பர்களே, இறையன்பை அறியாதோரைக் கண்டுபிடித்து நற்செய்தி சொல்வது தான் சிறப்பானது. அவ்வாறே திருத்தூதுவர்களை தம் பணிக்கென அனுப்பும் இயேசு பாத்திரமானவன் யாரென்று விசாரித்து நற்செய்தி பறைசாற்ற வேண்டும் என்று கட்டளை கொடுத்தனுப்புகிறார். ஆண்டவரின் அன்பை அறியாது வாழ்வோருக்கு நற்செய்தி பறைசாற்ற வேண்டும என்பது அவர் திவ்விய அழைப்பு. "நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை பிணியுற்றவற்றிற்குக் குணமளிக்கவில்லை. காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போடவில்லை வழிதப்பியவற்றைத்

திரும்பக் கூட்டி வரவில்லை. காணாமல் போனவற்றைத் தேடவில்லை. ஆனால், அவற்றைக் கொடுமையுடனும் வன்முறையுடனும் நடத்தினீர்கள்.'' (எசேக்கியல் 34:4) ''எனவே, தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்; நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக் காப்பேன். ஓர் ஆயன் தன் மந்தையினின்று சிதறுண்ட ஆடுகளைத் தேடித் செல்வதுபோல, நானும் என் மந்தையைத் தேடிப் போவேன். மப்பும் மந்தாரமுமான நாளில் அவற்றை எல்லா இடங்களினின்றும் மீட்டு வருவேன்.'' (எசேக்கியல் 34:11,12) எசேக்கியேல் தீர்க்கர் மூலமாக ஆண்டவர் என் மந்தையை மீட்பேன் என்று தெளிவுபடுத்துகிறார். ''இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்லவேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாய்க்கும்.'' (யோவான் 10:16) இக்கொட்டிலில் இல்லா ஆடுகளாகிய இறையன்பை அறியாதோரைக் கண்டுபிடித்து கிறிஸ்துவின் அன்பை அறியச்செய்து கிறிஸ்துவுக்குரியவர்களாக வாழ்வித்து அழிவில்லாத இராஜியத்திற்கு சொந்தமாக்கிடுவோம். பக்தரின் பாடல் வரிகளும் அவ்விதமாக சொல்லுகிறது

> சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
> எனை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
> அழைப்பு பெற்றோர் யாரும் புறப்படுவீர்
> இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்

அன்பர்களே, நமது வாழ்வின் வழியாய் நற்செய்தியைப் பகிர்ந்திடுவோம் இறையன்பை அறியாதோரையும் இயேசு கிறிஸ்துவின் அன்பர்களாய் இணைத்திடுவோம்.

II. **இறையன்பை மறுத்தோரைக் கண்டுபிடித்தல்:** (மத்தேயு 10:6,7)

''வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது ''விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' எனப் பறைசாற்றுங்கள்.''

இஸ்ரவேல் இறைவனின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறவர்கள். இப்போது இறைவனை விட்டு வழுவிப் போனார்கள். தங்கள் சுய எண்ணத்தினால், சுய விருப்பத்தினால் கீழ்ப்படியாத நிலையிலும இறைவனை மறுத்தும் மறந்தும் போனவர்கள்; இவர்களைக் குறித்து இயேசு கிறிஸ்து கரிசனை படுகிறார். திருத்தூதுவர்களுக்குச் சொல்லும் போது வழி தவறிப்போன இஸ்ரவேலரிடத்தில் செல்லுங்கள் அவர்களைக்

கண்டுபிடித்து எச்சரிப்பின் செய்தியாகவும் மனமாற்றத்திற்கான செய்தியாகவும் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என்று அறைகூவல் விடுகிறார். லூக்கா 15ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து காணாமற்போன ஆட்டைக் குறித்த உவமையைச் சொல்லுகிறபோது "என்னோடு மகிழுங்கள்; ஏனெனில் காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்" என்பார். அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்." (லூக்கா 15:7) என்று கூறுகிறார். மேலும் இளைய மைந்தன் உவமையில் "ஏனெனில் என் மகன் இவன் இறந்துபோயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்." (லூக்கா 15:24) எனக் கூறுகிறார். நம்மோடு வாழ்பவர்கள், இறையன்பை அறிந்தவர்கள் தங்கள் சுயஇன்பத்திற்காக போதைக்கு அடிமைப்பட்டிருப்போர், பாலியல் இன்பத்திற்கு அடிமைப்பட்டிருப்போர், அலைபேசி மற்றும் இணையதளத்திற்கு அடிமையாகியிருப்போர், எதிர்பார்த்தவை நிறைவேறாதபோது மனஉழைச்சலுக்குள்ளாகியிருப்போராகவும் மற்றும் பலநிலைகளில் இறைவனைவிட்டுப் பின்வாங்கிபோனவர்களாக வாழ்கிறவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அத்திருப்பணியின் மூலம் உணர்வடையச் செய்து உள்ளார்ந்த மாற்றத்துடன் இறையன்பினில் நிலைபெற்று சான்றாகிடுவோம்.

III. **இறையரசின் பங்காளிகளாக்குதல்:** (மத்தேயு 10:7)

"அப்படிச் செல்லும்போது "விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" எனப் பறைசாற்றுங்கள்."

விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள் என இயேசு நாதர் குறிப்பிடுகிறார். இறையரசுக்குரியோராய் வாழ தங்களைத் தகுதிப்படுத்தி முழு நிலையோடு பங்காளிகளாக்கிட வேண்டும். "உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய, இயல்பைக் களைந்துவிடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்படவேண்டும்." (எபேசியர் 4:22,23) புதிய மனிதனுக்குரிய இயல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படுகிறது என பவுல் குறிப்பிடுகிறார்.

அன்பர்களே, இறைவனின் திருவுளப்படி செயல்படுவோரே இறையாட்சியில் பங்குபெறுவர் எனத் திட்டவட்டமாக அறைகூவல் விடுகிறார். இறையாட்சி நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாக கொண்டதல்ல மாறாக தூயஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி, போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. நாமும் இத்தகைய இறையாட்சி மனப்பான்மையோடு கிறிஸ்துவுக்குப் பணிபுரிவோராய் இறையன்பை அறியாதோரையும் இறையன்பை மறுத்தோரையும் இறையரசில் பங்கடைய இறைவனின் கரத்தில் நம்மை ஒப்புவிப்போம்.

சுவி. J. **பிரபின் செல்வமணி**


| | | | | |
|---|---|---|---|---|
| 𝄞 | ஞா. | 13 | ஞா. | 349 |
| | கீர். | 3 | கீர். | 407 |

# விழாக்கால அருளுரைகள்

திருமறைப்பள்ளி ஆண்டுவிழா

# சிறுவர் : வளரும் விருட்சக் கன்றுகள்

லூக். 2 : 42-52



"இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்." (லூக். 2 : 52)

ஞாயிறு பள்ளி சிறுவர்களுக்கான "நாற்றங்கால்" என்பது ஜான் வெஸ்லியின் கூற்று. திருமறையைக் கற்றறிவது ஞாயிறுப்பள்ளியின் முதன்மைக் குறிக்கோள் ஆகும். குழந்தைகள் கேட்க, "கற்றுக்கொள்ள", "கவனிக்க" வேண்டி அவர்களை வழிநடத்துவது ஞாயிறுப்பள்ளியின் முப்பெரும் நோக்கங்களாக கருதப்படுகிறது. சங். 127 : 3-இன்படி இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் என்பதை அறிந்து கொள்கிறோம். ஆகவே பிள்ளைகள் கடவுளுக்குரியவர்கள், நமது கரங்களில் தரப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. கர்த்தருக்குப் பயப்படும் குடும்பங்களுக்கு அருளப்படும் அளப்பரிய ஆசீர்வாதங்களில் ஒன்று. சிறுவர் / பிள்ளைகள் "வளரும் விருட்சக கன்றுகளைப் போல் இருப்பார்கள்" என்பது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் சங். 128 : 3-இல் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள் என்றும் சங். 144 : 12 அப்பொழுது எங்கள் குமாரர் ................................ வளருகிற விருட்சக் கன்றுகளைப் போலவும் எங்கள் குமாரத்திகள் சித்திரந் தீர்த்த அரமனை மூலை கற்களைப்போலவும் இருப்பார்கள் என்று வாசிக்கின்றோம்.

ஓய்வுநாள் பாடசாலை ஆண்டுவிழாவைக் கொண்டாடும் இந்நன்நாளில் நாம் தியான வசனத்தில் வாசிக்க கேட்டபடி அருள்நாதர் இயேசு கிறிஸ்து சிறுவர் பருவத்தில் ஞானம், வளர்த்தி, தேவ கிருபை மனுஷர் தயவு இவைகளில் விருத்தியடைவதற்கு உறுதுணையாயிருந்து பொறுப்பு சார் கடமைகளை திருமறை ஆதாரத்துடன் பக்தியாகச் சிந்திப்போம்.

## 1. பெற்றோரின் கடமை

யோசேப்பு - மரியாள் இயேசுவின் பெற்றோர் ஆவர். யூத பெற்றோராகிய இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறவர்களாகக் காணப்பட்டனர். லூக். 2 : 2-இன்படி மோசேயின் திருச்சட்டம் கட்டளையிடுகிறபடி இயேசு பிள்ளைக்குப் பெற்றோர் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணினர். மேலும் தூதனால் சொல்லப்பட்டபடி அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படியே மரியாளின் சுத்திகரிப்பின் நாட்கள் முடிந்த பின்பு லூக். 2 : 23, 24-இன்படி முதற்பேறான எந்த ஆண் பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று அறிந்து அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்க எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி எருசலேம் தேவாலயத்தில் அர்ப்பணிக்கும் நாளன்று பலியையும் செலுத்தினார்கள். லூக். 2 : 27-இல் இயேசு என்றும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறையின்படி செய்வதற்குத் தாய், தகப்பனமார் அவரை எருசலேம் தேவாலயத்தில் உள்ளே கொண்டு வந்தார்கள் என்று வாசிக்கிறோம். நியாயப்பிரமாணக் கடமைகளைப் பூரணமாய்ப் பெற்றோர் நிறைவேற்றினதன் மூலம் பிள்ளைக்குப் பூரண வயதுடைய பெரியவர்கள் சிமியோன் மற்றும் அன்னாள் (லூக். 2 : 34, 38) ஆலயத்தில் காத்திருந்த குழந்தை இயேசுவுக்கு இறை ஆசீர் வழங்கப்பட்டதோடும் பிள்ளையைக் குறித்த இறைவாக்கும் இறைசமூகத்தில் அருளப்பட்டது.

லூக். 2 : 39-இல் சொல்லப்பட்ட படி இயேசுவின் பெற்றோர் கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின்படி சகலத்தையும் செய்து முடித்த பின்பு தங்கள் ஊராகிய நாசரேத் திரும்பிப் போனார்கள் என்று வாசிக்கிறோம்.

இந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது, தேவனுடைய கிருபையும் அவர் மேல் இருந்தது (லூக். 2 : 40).

குடும்பமாய் ஆலயம் செல்லும் வழக்கம் யோசேப்பு மரியாள் குடும்பத்தில் இருந்தது (லூக். 2 : 41).

ராமதாயீம் ஊரானாகிய எல்க்காளா குடும்பமும் வழக்கமாய்

சிலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவதையும், பலி செலுத்துவதையும் தவறாமல் கடைப்பிடித்து வந்தார்கள். (1 சாமு. 1 : 3).

யாத். 23 : 17-இல் வருஷத்தில் மூன்று தரம்................. மக்கள் எல்லாரும் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதியில் வரக்கடவர்கள் என வாசிக்கிறோம்.

கர்த்தருடைய சந்நிதியில் வருதல் என்பது கடவுளின் கட்டளை. குடும்பமாய் அதைப் பின்பற்றும் போது பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டுதல் கிடைக்கிறது.

ஆலயம் வருகிற வழக்கத்தைப் பெற்றோர் கொண்டிருக்கும்போது பிள்ளைகளுக்குக் கடவுளிடம் பயணிக்கும் "சரியான வழிகாட்டுதல்" கிடைக்கிறது.

பிள்ளை காணாமல் போனபோது பெற்றோர் அதிக விசாரத்தோடே ஒரு நாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள் (லூக். 2 : 44). பிள்ளை எங்கிருக்கிறது என்பதனை அறிந்து வைத்திருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பெற்றோருக்கு உண்டு.

கடமை தவறாத பெற்றோரால் பிள்ளைகளின் வளர்ச்சி சாத்தியமே.

## 2. பிள்ளைகளின் கடமை

பிள்ளைகளின் முக்கியக் கடமைகளில் ஒன்று கற்றுக்கொள்வது. அதற்கான வாய்ப்பை வழங்குவது பெற்றோரின் கடமையாக இருந்தாலும் அதனைச் சாத்தியப்படுத்துவது பிள்ளைகளின் கடமையே.

லூக். 2 : 46-இல் இயேசுவானவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள்.

போதகர்கள் என்பவர்கள் மோசேயின் திருச்சட்ட நூலையும் யூதத் திருமறையையும் (பழைய ஏற்பாடு) கற்றுக் கொடுக்கும் ஆசான்கள் (ரபிமார்) ஆவர். இயேசுவானவர் சிறுவயதில் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்.

அன்னாளின் மகன் சாமுவேல் பிள்ளையாண்டான் தேவாலயத்தில் இருந்தான். இந்த சாமுவேல் ஆசாரியன் ஏலியிடமிருந்தும், இறை பிரசன்னம் நிறைந்த ஆலயத்தில் ஆண்டவரிடமிருந்தும் இறைவாக்கைக் கற்றுக் கொண்டார் (1 சாமு. 3 : 4-13).

கற்றுக்கொள்ளுதல் ஒருமனிதன் தன் ஆள் தத்துவத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கு உதவுகிறது.

லூக். 2 : 51-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி இயேசுவானவர் பெற்றோரோடே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்.

எபேசி. 6 : 1-இல் பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்திருங்கள். இது நியாயம் என வாசிக்கிறோம்.

கல்வியின் மூலம் உயர் படியை எட்டுவதற்கு பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்னும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஆக்ஸ்ஃபோர்டு பட்டம் பெற்ற ஜாண் வெஸ்லி, வட அமெரிக்க ஜார்ஜியா பகுதியின் புதிய ஆங்கிலேயக் குடியேற்றத்தில் ஒன்றான சவன்னாவில் (Savanna) உள்ள ஆங்கிலிகன் கிறிஸ்து ஆலயத்தின் மிஷனெறிப் போதகராகப் பணியாற்ற அனுப்பப்பட்டார். சவன்னா குழந்தைகளுக்கு 1736-ஆம் ஆண்டு ஞாயிறு தோறும் கற்பிக்கத் தொடங்கினார். காலணிகள் இல்லாததால் வரக்கூச்சப்பட்ட ஏழைக் குழந்தைகளை ஊக்குவிப்பதற்காக ஜாண் வெஸ்லி வெறுங்காலுடன் வகுப்புக்கு வந்து பாடம் கற்பித்தார்! குழந்தைகள் பால் அவருக்கு இருந்த நம்பிக்கை இது.

கற்றுக்கொள்ளும் கடமையை நிறைவேற்றும் பிள்ளைகளிடம் கற்றுக் கொடுப்போர் நடந்து கொள்ளவேண்டிய சாட்சியக் கடமையை இது வெளிக்கொணர்கிறது.

திருமறைப்பள்ளி - பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி, கற்றலின் சுவை குறையாமல், சாட்சியத்தோடு தலையாய கடமையாகக் கற்பித்தலைக் கருதி தலைசிறந்த சிற்பிகளை உருவாக்க வேண்டும். கற்றுக்கொள்ளுகிற பிள்ளை, பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் கீழ்ப்படிகிறதன் மூலம் கற்றலின் பயனை அப்பியாசப் படுத்திக் கொள்ளுகிறது. இதன் பயனாக செய்யப்படும் அறிக்கை தான் லூக். 2 : 46-இல் இயேசு பெற்றோருக்குச் சொல்லும் பதிலுரையாக உள்ளது என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? என்பது.

தான் எங்கே இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுதல் என்பது “வாழ்வின் இலட்சியத்தை அடைதல்” எனலாம்.

**3. சமூகத்தின் கடமை**

மனுக்குலம் வளருவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமூக அமைப்புகள் மக்களின் நன்மதிப்பையும், நம்பகத் தன்மையைப் பெற்றதாகவும் அமைய வேண்டும். ஆலயம் என்பது சமூக மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் உதவுவதாய் அமைகிறது. லூக். 2 : 46 இயேசுவனாவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்தல், பேசுதல், வினவுதல் என்னும் செயல்கள் சமூகத்தில் ஆன்மிக அமைப்புகள் எவ்விதம் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது என்பதையும் பிள்ளைகள் நம்பிக்கையோடு அணுகுவதற்கும் பெற்றோர் பிள்ளைகளை அனுப்புவதற்கான நன்மதிப்பையும் பெற்றுள்ளது.

ஆலயத்தில் ஆன்மிகப் பணி செய்வோர் எப்பொழுதும் அணுகத்தக்கவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும், நன்மதிப்பை பெற்றவர்களாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது. அத்துடன் மாற். 10 : 13-16-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி இயேசுவானவர் சிறுபிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவர்களை ஆசீர்வதித்தது போன்ற அணுகுமுறை நிச்சயம் வேண்டும்.

லூக். 2 : 47-இல் அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்துப் பிரமித்தார்கள்.

சமூகத்தில் ஆன்மிக அமைப்புகள், அதாவது ஆலயத்தில் உருவாக்கப்படும் பிள்ளைகளின் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டு பிரமிப்பதும் அவர்களை மென்மேலும் உற்சாகப்படுத்துவதுமான உந்து சக்தியாக ஆன்மிக அமைப்புக்கள் இருக்கவேண்டும்.

ஆக பொது வாழ்வில் சமூக அமைப்புகளில் ஆன்மிக அமைப்புகளில் சேவை புரிவோர் தன்னார்வலர்களாகவும், தன்னலமற்றவர்களாகவும் பிறர் நலனில் அக்கறையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கான சமயக் கல்வியை முறைப்படுத்திய

பெருமை, நற்செய்திப் பணியில் தீவிர ஆர்வம் கொண்ட ஆங்கிலிகன் சபையைச் சேர்ந்த ராபர்ட் ரெய்க்ஸ் (Robert Raikes) அவர்களைச் சாரும். இங்கிலாந்தின் குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மற்றும் அநாதைக் குழந்தைகள் குற்றங்கள் புரிய நிர்ப்பந்திக்கப்படும் அவலநிலையைக் கண்ட ரெய்க்ஸ், திருமறைக் கல்வியானது இத்தீமையினின்று அவர்களைக் காக்கும் என்று எண்ணினார். குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கான அவசியத்தை கிளாசெஸ்டர் journel-யில் உணர்ச்சி பொங்க எழுதினார்.

ஞாயிறுப்பள்ளி இயக்கத்தை 1780-இல் க்ளோசெஸ்டரில் நிறுவினார். இப்பள்ளி உலகளாவிய ஞாயிறுப் பள்ளி இயக்கம் உருவாக உந்துகோலாக அமைந்தது.

ஆம் பிரியமானவர்களே, “சிறுவர் : வளரும் விருட்சக் கன்றுகள்” என்று சிந்திக்கும்போது அவர்களில் பூரண வளர்ச்சியில் பெற்றோரின் கடமை, பிள்ளைகளின் கடமை, சமூகத்தின் கடமை என்பதனை நாம் அறிந்து கொள்ளுகிறது. நம்முடைய சேவை சிறுவர் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக ஆமென்.


அருள்திரு. M. **ஜோஸ் குமார்**

| 𝄞 | | |
|---|---|---|
| | ஞா. | 399 |
| | கீர். | 117 |

கிறிஸ்தவப் பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழா

# இளையோர் : கிறிஸ்துவின் படைவீரர்

2 திமொ. 2 : 1 - 13



“கிறிஸ்து இயேசுவின் நல்ல படைவீரனைப்போன்று துன்பங்களில் பங்குகொள்.” (2 தீமொ. 2 : 3)

இளமை வாலிபம் அறிவும் நிறைந்த ஆற்றலும் உடைய பருவம். எதையும் சரியாக நிர்ணயிக்கும் அனுபவ முதிர்ச்சியின்மையுடையவர்கள். புதியனவைகளை அறிந்துகொள்ளும் ஆர்வம் உடையவர்களாயிருப்பர். பாபிலோனிய மன்னர் நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபோது அறிவு சார்ந்த, திறமைமிக்க யூத வாலிபர்களைச் சிறைபிடித்துத் தன் நாட்டுக்குக் கொண்டு வந்து அந்நாட்டின் கலைகளையும், மொழிகளையும் கற்றுக்கொடுத்து, வாலிபரின் திறமைகளைப் பயன்படுத்தி நாட்டுக்கு நஷ்டம் வராதபடி நல்ல நிர்வாகம் நடத்த தீர்மானித்தது சிறந்த சான்றாகும். (தானியேல் 1 : 1-4) லூக்கா 2 : 52-இல் இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார் என கூறப்பட்டுள்ளது. இயேசுவின் ஒருங்கிணைந்த வளர்ச்சியால் இன்றைய இளையோருக்கு மாதிரியாகிறார். காவல்துறை, முப்படை முதலிய படைப் பிரிவில் திறமையான இளைஞர்களைத் தேர்ந்தெடுப்பதின் காரணம் அவர்களின் இளம் ஆற்றல் நாட்டின் பாதுகாப்புக்குப் பலம் சேர்ப்பதற்கே ஆகும். இயேசு தனக்குச் சீஷராயிருக்க திறமையான இளம் வாலிபர்களையே தெரிந்தெடுத்துப் பயிற்சியளித்ததன் விளைவால், தூய ஆவியாரின் ஆற்றல் பெற்று அஞ்சா நெஞ்சர்களாய் போரிட்டு மடிந்து இறையரசை விரிவுபடுத்த பாடுபட்டனர். இறையியலாளர் அறிவர். ஸ்டான்லி ஜோண்ஸ் ஒருமுறை கூறினார்; 100 இளைஞர்களைத் தாருங்கள் உலகத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று இளைஞர்கள் கிறிஸ்துவின் படை வீரர்களாய் மாறவேண்டுமெனில் அவர்களில் இருக்கவேண்டிய தன்மைகள் என்ன என்பதை ஆய்ந்தறிவோம்.

**1. கட்டுப்பாடு மிக்கவர்களாய் இருக்கவேண்டும் :** 2 தீமொ. 2 : 5

சட்டத்தின்படி மல்யுத்தம் பண்ணுகிறவன் முடிசூட்டப்படுவான். பாபிலோனிய நாட்டின் நிர்வாகப்பணிக்குத் தேர்வு செய்யப்பட்ட தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோர் அரச உணவால் தங்களை தீட்டுப்படுத்தக்கூடாது எனக் கட்டுப்பாடுடன் இருந்து, அரச உணவுக்குப் பதில் பருப்பு, மரக்கறி, தண்ணீர் மட்டும் புசிக்க உறுதியாயிருந்து சவாலில் வெற்றி பெற்றார்கள் (தானியேல் 1 : 8). கடவுள் அவர்களின் செயலை நன்மையாய் முடியப்பண்ணினார். போத்திப்பார் மனைவியின் இச்சைக்குப் பணியாமல் கடவுளுக்கும், எஜமானுக்கும் உண்மையாய்க் கட்டுப்பாடுடன் நடந்துகொண்ட யோசேப்பு. அதனால் துன்புற்றும் கடவுளால் எகிப்தின் அரியணையில் இரட்சகனாய் உயர்த்தப்பட்டான் (ஆதியாகமம் 39 : 7-12). இராணுவ வீரரின் கட்டுப்பாடுதான் இராணுவத்தின் வலிமையாகப் பேசப்படுகிறது. பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்வது கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி (2 தீமோத்தேயு 2 : 3) என்று கூறுவது எல்லா விஷயங்களிலும் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

**2. தெளிந்த புத்தி உடையவர்களாய் இருத்தல் வேண்டும்** (2 தீமொ. 2:7)

". . . கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார். 1 பேதுரு 5 : 5-8-ல் பேதுரு அப்போஸ்தலர் இளையோருக்குப் புத்தி சொல்லி எழுதுகிறபோது தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என கூறுகிறார். இளமையில் மதிமயங்கிய இளையகுமாரன் தெளிவற்றவனாய்த் தகப்பனிடம் ஆஸ்தியில் பங்கை வாங்கி அதை அழித்துவிட்டு, பசியால் பன்றி தின்னும் தவிடுக்கு ஆசைப்பட்டும், கிடைக்காது பசியால் வாடுகையில் புத்தி தெளிவு பெற்று தந்தை வீட்டில் வேலைக்காரர் திருப்தியடையச் சாப்பிட்டு வாழ்வதை உணர்ந்து தகப்பன் வீட்டுக்குப் போக தீர்மானித்துப் புறப்பட்டான். (லூக்கா 15 : 17). கிறிஸ்துவின் படைவீரர்களாகிய இளையோர் உலகின் கவர்ச்சிகளுக்கு உட்படாமல் தெளிந்தபுத்தியுடன் முன்னேறினால் வெற்றிபெற முடியும். 2 தீமோத்தேயு 4 : 5-இல் பவுலடியார் தீமோத்தேயுவிடம் "நீ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு" என எழுதுகிறார்.

**3. நல்நோக்குடையோராய் இருத்தல் வேண்டும் :** 2 தீமொ. 4 : 7, 8

நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது . . . எதிலும் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதியுடன் இருக்கவேண்டும். போர்முனையில் போராடும் படைவீரனின் இலக்கு வெற்றி பெறவேண்டும் என்பதால் தன் உயிரையும் மதிக்காது போர் புரிவர். இளையோராகிய கிறிஸ்துவின் படைவீரர்களின் தணியாத் தாகம் இறைவனால் முடிசூட்டப்படவேண்டும் என்பதாகும். சங்கீதம் 127 : 4-இல் வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். குறி தவறாத அம்புகளாக இளையோர் விளங்குவதற்கு அம்பு கோணலற்றதாய், முனை தீட்டப்பட்டதாய், வலுப்படுத்தப்பட்டதாய் அமைய வேண்டியது அவசியம் என்பது போல பயனுள்ள இளையோர் கிறிஸ்துவின் படையில் கசாணலற்ற, கூர்மையான, வலுபெற்ற அம்பாக விளங்கினால் இலக்கை அடைய முடியும்.

இறைவன் இளையோரை இறையரசுக்குரிய படைவீரராய்ப் பயன்பட அழைக்கிறார். அதற்குக் கட்டுப்பாடு, தெளிந்த புத்தி, நல்நோக்குடையோராய்ச் செயல்படுவோம். கிறிஸ்து அருளும் பரிசினைப் பெற்று வாழ்வோம். இறையரசுக்குரியோராவோம்.

அருள்திரு. C. **ஜார்ஜ்**

| 𝄞 | |
|---|---|
| ஞா. | 296 |
| கீர். | 118 |

பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா

# ஞானத்தை உரைக்கும் மகளிர்

நீமொ. 31 : 10-31



அவள் பேசும்போது ஞானத்தோடு பேசுவாள்; அன்போடு அறிவுரை கூறுவாள் (நீமொ. 31 : 26).

ஆண்டவர் மனுக்குலத்திற்கு அருளிய சிறப்பான அருட்கொடை ஞானம். பிற உயிர்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதே மனிதருக்கு ஆண்டவர் அருளிய பொக்கிஷமாம் ஞானம். மனிதன் சிந்தனைகளைச் செயல்வடிவமாக்கி நற்காரியங்கள் செய்ய தூண்டுவதே இஞ்ஞானம்.

ஞானம் என்ற சொல்லின் எபிரேய பதம் “ஹாக்மா” (Hakma) இச்சொல் திருமறையில் பல பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது.

அப்சலோமை எருசலேமுக்கு மீண்டும் வரவழைக்கச் செய்ய தெக்கோவாவூர்ப் பெண்ணின் நடிப்பு ஞானத்தின் செயல்முறைக்கு ஒரு சிறந்த உதாரணம் (II சாமு. 14 : 1-23). கூர்மதியுடைய பெண்கள் ஞானிகளாகக் கருதப்பட்டனர். ஒருவரின் வாழ்வை ஒழுங்குபடுத்தும் திறனே ஞானம் எனலாம். ஆண்களைப் போன்று மகளிரும் ஞானத்தில் பல கோணங்களில் சிறப்புற்று வாழ்ந்தனர், வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எந்தெந்த கோணத்தில் மகளிர் ஞானத்தை உரைத்தனர் என்று திருமறை சார்ந்து சிந்திப்போம்.

**1. தந்தையின் உரிமைச் சொத்தினைப் பெற ஞானத்தோடு செயல்பட்ட மகளிர் சமூகச் சமத்துவத்திற்கு வித்திட்டனர்** (எண். 27 : 1-11).

ஆண்டவர் தம் சாயலில் ஆணையும், பெண்ணையும் சமமாக படைத்தார். ஆனால் மகளிர் சமூகத்தில் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தபட்டனர். அன்றும், இன்றும் மகளிருக்குச் சொத்தில்

பங்குகொடுக்க தயக்கம் காட்டுகின்றனர். ஆண் பிள்ளைகளுக்குத் தங்கள் சொத்துக்களைக் கொடுக்க வேண்டுமென விரும்புகின்றனர். யோசேப்பின் வம்சத்தில் மனாசே கோத்திரத்தில் பிறந்தவர் செலோப்பியாத். இவருக்கு ஐந்து குமாரத்திகள் இருந்தனர். இந்த செலோப்பியாத் வனாந்தரத்தில் இறந்து விடுகிறார். சுதந்தர பாகம் ஆண்களுக்கு மட்டுமே உரியது என்ற சூழலில் அவரது ஐந்து குமாரத்திகளும் தங்களின் சுதந்தர பாகத்தைப் பெற்றுக்கொள்ள மிக ஞானத்தோடு செயல்பட்டனர். நீதி. 14 : 1 ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர். தங்களின் பிரச்சினையை மோசேயிடத்தில் எடுத்துச் சென்றனர். மோசே ஆண்டவரின் துணையோடு நல்ல தீர்ப்பைக் கூறுகின்றார். (எண். 27 : 7, 8) செலோபுகாதின் புதல்வியர் கேட்பது சரியே. அவர்கள் தந்தையின் சகோதரடையே அவர்களுக்கும், உரிமைச் சொத்தில் பங்கு கொடுத்து அவர்கள் தந்தையின் உரிமைச் சொத்து அவர்களுக்கு கிடைக்கச்செய்தார்.

இம்மகளிரின் ஞானத்தால் இஸ்ரவேலில் புதிய சட்டம் உருவானது. இவர்கள் அறிவுபூர்வமாகச் செயல்பட்டதினால் பெண்களுக்கும் சொத்தில் உரிமை கிடைத்தது. பெற்றோர் ஆண் பிள்ளைகளுக்குச் சொத்தில் பங்கு கொடுப்பது போல பெண் பிள்ளைகளுக்கும் கொடுக்கவேண்டும். ஏனெனில் இன்றைய குடும்பங்களில் பெண்கள் கணவனால் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். கணவனால் கைவிடப்பட்டு, பிரிந்து வாழும் பெண்கள், மதுவிற்கும், போதைக்கும் அடிமையான கணவனோடு வாழும் பெண்களுக்கும் சொத்தில் பங்கு கிடைத்தால் மிக பிரயோஜனமாக இருக்கும்.

**2. இறைஞானத்தால் இஸ்ரயேலில் போரை முடிவிற்குக் கொண்டு வந்து அரசியல் புரட்சி செய்த இராணுவத் தளபதி தெபோரா :** (நீத. 4 : 44)

இஸ்ரயேல் மக்கள் கானானிய மன்னன் யாபினால் மிகவும் கொடுமைப்படுத்தபட்டனர். அவனுடைய படைத்தலைவன் சீசரா. அக்காலத்தில் இஸ்ரவேலருக்கு இறைவாக்கினரும், நீதித்தலைவியுமா யிருந்தவர் தான் இலப்பிதோத்தின் மனைவி “தெபோராள்” இஸ்ரவேல் மக்களின் வாழ்வில், இராஜாக்கள், இறைவாக்கினர்கள் இல்லாத காலத்தில் இஸ்ரவேல் மக்கள் பொல்லாப்பானவற்றைச் செய்து கடவுளுக்குக் கோபமூட்டினர். ஆகவே கானானிய அரசன் யாபினால்

கடினமாக நடத்தப்பட்டனர். இவர்களுடைய கூக்குரல் கடவுள் சமூகத்தில் எட்டியது. ஆண்டவர் தெபோராளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். தெபோராள் பாராக்கை அழைத்து இஸ்ரவேலின் கடவுள் கட்டளையிடுகிறார். நீ போய் நப்தலி, செபுலோன் மக்களைத் தாபோர் மலையில் ஒன்று கூட்டி அவர்களில் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக்கொள்ளும், யாபினின் படைத்தலைவன் சிசராவையும், அவன் தேர்களையும், படையையும் கீசோன் ஆற்றின் அருகே இழுத்து வந்து உன் கையில் கொடுப்பேன் என்று ஞான இறைவாக்குரைத்தார். பாராக் அதற்குப் பதிலாக நீர் என்னுடன் வந்தால் மட்டுமே செல்வேன் வராவிட்டால் நான் செல்ல மாட்டேன் என்றார். அதற்குத் தெபோரா நான் உறுதியாக வருவேன். நீர் செல்லும் வழி உமக்குப் பெருமை தராது என்று திட்டமும் தெளிவுமாக கூறினாள். தெபோராளின் ஞான இறைவாக்குபடி ஆண்டவர் சீசராவை “யாகேல்” என்ற பெண்ணிடம் ஒப்புகொடுத்தார். தெபோராள் ஞானத்தோடு செயல்பட்டதால் வாழ்விழந்து கிடந்த இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்வு பெற்றன. யுத்தச் சத்தம் வாசல் வரைக்கும் வந்த சூழலில் தெபோராள் மக்கள் அமைதியாக வாழும் நல்ல சூழலை உருவாக்கினாள். அமைதியின் ஊடகமாய், ஆற்றல் மிகு தாயாய், பாழாய்ப் போன நகரங்களைக் கட்டி எழுப்பினாள். இருளில் மூழ்கி கிடந்த இஸ்ரவேலரை ஒளிமயமான வாழ்வு வாழ வித்திட்டாள்.

### 3. ஞானத்தை உரைக்கும் மகளிர் மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குகின்றனர் (நீமொ. 31 : 26-29)

குடும்பம் கடவுள் மனிதருக்கு அருளிய அருட்கொடை குடும்பத்தை வடிவமைக்கும் வடிவமைப்பாளர்கள் மகளிர். மகளிர் திட்டமிட்டுக் குடும்பத்தை வடிவமைக்கும் போது குடும்பம் மகிழ்ச்சியான குடும்பமாக குட்டிப் பரலோகமாகக் காணப்படும். (சீராக். 26 : 1-3) சொல்லும்போது துணிவுள்ள மனைவியை அடைந்த கணவன் பேறுபெற்றவன். அவனுடைய வாழ்நாளின் எண்ணிக்கை இருமடங்காகும். பற்றுள்ள மனைவி தன் கணவனை மகிழ்விக்கிறாள். நல்ல மனைவியோ ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து (சீராக். 26 : 1 - 3) என்று கூறுகிறது.

நீதி. 31 : 10-இல் நல்ல மனையாள் பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் பல வேளைகளில் தாங்கள் மதிப்புமிக்கவர்கள், அவர் தம் கணவனின்

தலையில் கீரிடமாயிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் தங்களை குறைவாக மதிப்பிடுகின்றனர். மகளிர் அதிகாலை இருட்டோடே எழுந்து இல்லத்தின் பணிவிடைகளை சிறப்பாகச் செய்தனர். நவீன கால மகளிர் அதிகாலை துயில் எழுவதில் சோம்பல். இன்று பல குடும்பங்கள் சுக்கு நூறாக உடைவதற்குக் கணவன், மனைவி இருவரிடமும் நல்ல பழக்கங்கள், நற்குணங்கள் இல்லாததே காரணம். மகளிர் சுறுசுறுப்பாக வியாபாரக் கப்பலை போல் இருந்தனர் என்று நீதிமொழிகள் கூறுகின்றது. தன் உழைப்பால் குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருகிறாள்.

நீதி. 31 : 27. தன் இல்லத்தின் அலுவல்களில் கண்ணும், கருத்துமாய் இருப்பாள். கணவனும், பிள்ளைகளும் அவளை வாழ்த்தும் மனைவியாக இருக்கவேண்டும்.

நீதி. 18 : 22. மனைவியை அடைகிறவன் நலமடைவான். அவன் ஆண்டவரது நல்லாசியையும் பெறுவான்.

திருப்பாடல் 68 : 13 நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களா யிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச் சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள். மகளிர் எப்போதும் சிறப்புக்குரியவர்கள்.

**4. ஞானத்தை இறைப்பணிக்கு அர்ப்பணித்த மகளிர்** (விப. 35 : 22, 25)

மோசே இஸ்ரவேல் புத்திரரிடம் காணிக்கைக் கொண்டு வரும்படியாய்க் கூறுகின்றார். ஞான இருதயம் உள்ளவர்களிடத்தில் பொன், வெள்ளி, வெண்கலம், இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், மெல்லிய பஞ்சு நூல், வெள்ளாட்டு மயிர், சிவப்புத் தீர்ந்த வெள்ளாட்டுத்தோல், சீத்தீம் மரம், விளக்கு எண்ணெய் போன்றவற்றையெல்லாம் கொண்டுவரக் கூறுகின்றனர். மனப்பூர்வமுள்ள ஸ்திரீ, புருஷர் யாவரும் அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கொண்டு வந்தார்கள்.

யாத். 35 : 25, 26 - ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளால் நூற்று, தாங்கள் நூற்ற இள நூலையும், இரத்தாம்பர நூலையும், சிவப்பு நூலையும், மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டு கொடுத்தார்கள். ஞான எழுப்புதல் அடைந்த பெண்கள் வெள்ளாட்டு

மயிரைத் திரித்தார்கள். பெண்கள் தங்களுக்கு ஆண்டவர் அருளிய ஞானத்தை இறைப்பணிக்கான வேலைகளைச் செய்ய பயன்படுத்தினர்.

ஞானமுடைய மகளிர் சமூகத்திலும், அரசியலிலும், குடும்பத்திலும், திருச்சபைகளிலும் நல்ல பங்களிப்பைக் கொடுக்கிறவர்கள். கல்கத்தாவின் சேரி பகுதிகளில் ஆதரவற்றவர்களாய் கிடந்த தொழுநோயாளிகள் பெண்கள், மாற்றுத்திறன்படைத்த குழந்தைகளுக்குச் சமூக பாதுகாப்பு, அங்கீகாரம், பராமரிப்பு செய்து கொடுத்து உலக அரங்கில் இறந்தும் பேசும் அன்னையாய்த் திகழ்கின்றார் அன்னை தெரசா. ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்க்களம் சென்றார் ஜான்சிராணி இலக்குமிபாய். சேராபட்டு மலைவாழ் மக்கள் ஆண்டவரின் அன்பை அறிந்ததோடு, கல்விச்சாலைகள் அமைத்துக் கல்வியாம் கண்ணைக் கல்வராயன், சேர்வராயன் மலைகளில் தன் கணவர் அருட்திரு. எலியாஸ் ஐயருக்குத் தோளோடு தோள் கொடுத்தவர் திருமதி அன்னபாய் எலியாஸ். ஆக மகளிர் தங்களுக்குக் கடவுள் அருளிய ஞானத்தால் குடும்பம், சமூகம், திருச்சபை, அரசியலில் நல்ல தடயங்களைப் பதித்து அழியாப் புகழை பெற்றிருக்கிறார்கள். இறையாசி என்றும் ஞானத்தை உரைக்கும் மகளிரோடு இருப்பதாக. ஆமென்.

அருள்திருமதி. **சாற்லெட் சௌந்தரராஜன்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 288 |
| | கீர். | 27 |

ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா

# சீரமைக்கும் சிற்பிகள்

தானியேல் 6 : 1-22



"அவரிடத்தில் குற்றம்சாட்டுவதற்குரிய எந்தத் தவற்றையும் ஊழலையும் அவர்களால் கண்டுப்பிடிக்க முடியவில்லை ; ஏனெனில் அவர் நேர்மையாய் நடந்துக் கொண்டார் . . ."
(தானி. 6 : 4)

ஆண்டவரும் உலக மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் ஆண்கள் சங்க ஆண்டுவிழா கூடுகைக்கு வந்திருக்கும் அனைவரையும் வாழ்த்துகிறேன். சிறைப்பட்டுச் சென்ற தேசத்தில் சான்றாய் வாழ்ந்து கர்த்தரது திருப்பெயரை மகிமைப்படுத்திய தானியேலின் வாழ்வு முறைமை நமக்குக் கற்றுத்தரும் உண்மைகளைச் சிந்திப்போம்.

பாபிலோனிய பேரரசால் யூதா சிறைப்பட்டபோது தானியேலும் அவரது 16-ஆம் வயதில் பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டு வரப்பட்டவர். மிகச் சிறந்த ஞானியாகவும் வலிமை மிக்க ஆன்மிக முன் மாதிரியுமாக விளங்கினார். தானியேல் என்பதற்குத் தேவன் என் நீதிபதி என்று பொருள்.

பாபிலோன் அரசின் ஆட்சிப் பணியில் அமர்த்தப்பட்ட இவர் தொடர்ந்து மேதிய-பெர்சிய ஆட்சியிலும் அரசியல் ஆலோசகராக பணிச் செய்தார்.

தானியேலின் தனித்தன்மையையும், இறைப்பற்றையும் அவரது பெயர் மாற்றமோ (பெல்தெஷாத்சார் - பேல் தேவனின் பிரபு) பதவியோ, அரியணை சூழலோ, அரண்மனை வாசமோ மாற்றிட முடியவில்லை அடிமையாய் இருந்த தேசத்திலும் ஆண்டவருக்கே தான் எப்போதும் அடிமை என்பதை மறந்திடவில்லை. இன்றைய உலகில் நாமும் சான்றுடன் வாழ இவரது வாழ்வு நமக்குப் பாடமாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து சிந்திப்போம்.

**1 குற்றமற்ற வாழ்வு**

பெரும்பாலும் மனிதர்கள் தங்கள் பணிகளில் எளிமையான

பணிச் செய்யும்போது உண்மையுடன் இருப்பார்கள். ஆனால் பதவி உயர்வு அதிகாரம் வந்துவிட்டால் அதனைப் பயன்படுத்திக் குற்றம் செய்வதும், சிலர் அதன் வழியாய்த் தப்பிக்கொள்ளவும் முயலுவர். ஆனால் தானியேல் எந்த ஒரு நிலையிலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாதபடிக்குக் குற்றமற்ற வாழ்வு வாழ்ந்தார் என திருமறை சுட்டிக்காட்டுகிறது (தானி. 6:4)

அவர்மீது எப்படியாவது குற்றம் சுமத்திட ஏதாவது ஒரு ஆதாரம் கிடைக்காதா? என ஆய்ந்து தேடியும் உடன் பிரதானிகள், தேசாதிபதிகள் எவராலும் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இன்றைய சமுதாயத்தில் ஒவ்வொரு துறையிலும் கடைநிலைப் பணியாளர்கள் தொடங்கி உயர்ந்த பொறுப்பு வகிப்பவர்கள் வரை பல்வேறு குற்றச் செயல்களைச் செய்து தங்கள் பணிக்கும், பதவிக்கும் களங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதில் சமுதாயப் பணி செய்கிறவர்கள் மட்டுமல்ல சமயப் பணி செய்கிறவர்களும் பல்வேறு வகை குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உள்ளாகி கிறிஸ்துவின் திருப்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றனர்.

யோவான் 8:7-இல் இயேசு கிறிஸ்து கொடுக்கும் தீர்ப்பு பிறரைக் குற்றவாளியாக்கி தங்களை நல்லவர்களாக கருதுபவர்களுக்குக் கொடுத்த சாட்டைஅடி ஆகும். “உங்களில் (பாவமில்லாதவன்) குற்றமில்லாதவன் முதல் கல் எறிக.” அந்த இடத்தில் நின்ற அனைவரும் கலைந்து சென்றிட்டனர்.

லூக். 1:6-இல் சகரியா, எலிசபெத் தம்பதியினரைக் குறித்த சான்று சிறப்பானது. “கர்த்தரின் கட்டளைப்படி குற்றமற்ற வாழ்வு வாழ்ந்தனர்.”

ஆண்கள் சங்க உறுப்பினராகப் பொறுப்பாளராக நாம் வாழும் குடும்பத்தில், சமுதாயத்தில், திருச்சபையில் குற்றமற்றவர்களாக வாழ்கிறோமா என்று சிந்திப்போம்.

## 2. ஆண்டவரைப் பற்றி வாழும் வாழ்க்கை

சூழ்நிலை நல்லபடியாக இருக்கும்போது கர்த்தரைப் பற்றி வாழ்வதும் பாதகமாகும்போது கடவுளை மறந்து வாழ்பவரும் உண்டு. இதற்கு நேர் எதிராக வாழ்பவர்களும் உண்டு. இவர்களைச் சந்தர்ப்பவாதிகள் என்று சமுதாயம் அழைக்கிறது. தானியேலைப் பொறுத்தவரை எவரும் அவரைப் பற்றி இப்படிக் கூறிவிட முடியாது. அவர் சொந்த நாட்டிலும் சரி அடிமைப்பட்ட தேசத்திலும் கர்த்தருக்கு முன்

உண்மையுள்ள இறைப்பற்றாளராகவே வாழ்ந்துள்ளார் என்பதை அறிகிறோம். அதுவும் பாதகமான சூழ்நிலை உருவானபோதும் கூட அவரது பற்றுறுதி வாழ்வு தளரவில்லை. மட்டுமல்ல அதில் வேறு எந்த சமரசத்திற்கும் அவர் இடமளிக்கவில்லை. சரி போகட்டும் முப்பது நாள் வரை மட்டுமே மூன்று வேளை ஜெபத்தை மூட்டை கட்டி வைப்போம் என்று எண்ணாமல் அரசனின் ஆணையைவிட ஆண்டவர் மீது கொண்ட அன்பே அளவிடமுடியாததாகக் கண்டார். ஒருவேளை சட்டத்தின் முன் தான் ஒரு தண்டனைக் குற்றவாளியானாலும் பரவாயில்லை கர்த்தரைத் தேடத் தவறிய குற்றவாளியாகிடக் கூடாது என்பது அவரது உள்ளத்தில் வேரூன்றி இருந்தது. கர்த்தரைப் பற்றிக் கொண்டவர் எவருமே வெட்கமடைந்ததில்லை என்பதற்கு மாபெரும் சான்றாகவும் மாறிவிட்டார்.

மோசே, யோபு முதலான பக்தர்கள் கர்த்தரை உண்மையுடன் தேடினதால், உறுதியாய்ப் பற்றிக்கொண்டதால் அவர்கள் சரித்திர நாயகர்கள் ஆயினர்.

தானியேலும் கர்த்தரைத் தேடுவதில் சான்றாகக் காணப்பட்டதால் அந்நாட்டு அரசனும் மக்களும் கூட கடவுளையே தேட ஆணையும் உருவாகியது.

ஒரு தந்தையாக, சகோதரனாக நாம் எந்தச் சூழலிலும் கர்த்தரைத் தேடுவதில் உறுதியாக இருக்கமுடியுமா? அல்லது சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் கர்த்தரைப் பற்றிக்கொண்டு கர்த்தரை மனநோவடையச் செய்கிறவர்களாகக்கிறறோமா? சிந்திப்போம்.

ருமேனியா சிறையில் கைதியாக வந்த அந்த நபரை உடன் கைதி ஒருவர் அடையாளம் கண்டுவிட்டார். அவர் யாரெனில் அந்நாட்டு கமியுனிச அரசில் இராணுவ கேப்படனாகப் பணிசெய்த பாப்ஸ்யு என்பவராவார்.

ஏன் எதற்காக நீர் சிறைக்கு வந்துள்ளீர் என்ற கேள்வியை அவரிடம் உடன் கைதி ஒருவர் கேட்டார். அதற்கு அவர் பின்வருமாறு கூறினார். கமியுனிச அரசின் இராணுவ அதிகாரியாகப் பல கிறிஸ்தவர்களைக் கொன்றுள்ளேன். ஆனால் ஒருநாள் ஒரு சிறுவன் கரங்களில் மலர்கொத்துடன் என் அறைக்கு வந்து என் கரங்களில் தந்துவிட்டு இப்படிச் சொன்னான். இன்று என் அப்பாவின் பிறந்தநாள், வருடம் தோறும் அவரது பிறந்தநாள் பரிசாக இப்படிப் பூ கொத்து கொடுப்பேன். இந்த ஆண்டு நான் என் தந்தைக்குக்

கொடுக்கமுடியாதபடி கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு நீங்கள் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டீர்கள். ஆதலால் உங்களுக்கு இந்த மலர்கொத்து தருகிறேன் என்று கூறினதுமல்லாமல் பகைவரையும், தீங்கு செய்தவரையும் நேசித்து அன்பு செய்ய ஆண்டவர் கற்பித்துள்ளார். என் தந்தையும் அதையே எனக்குக் கற்றுத்தந்தார் என்றான். என் கல் மனம் முதல் முறையாக உடைந்தது. என் கண்கள் குளமாயின. நான் செய்த எல்லாக் குற்றங்களையும் உணர்ந்து அறிக்கையிட்டு இயேசுவை என் மீட்பராக ஏற்றதால் நானும் இந்தச் சிறையிலிருக்கிறேன் எனக்கு மரணமே ஏற்பட்டாலும் என் ஜீவனைக் கொடுக்கவும் அவருக்காய் வாழவும் என்னை ஒப்படைத்துவிட்டேன் என்றார்.

### 3. உண்மையுள்ள வாழ்வு

உண்மைக்கும் பொய்மைக்கும் வித்தியாசமில்லாத உலகில் நாம் வாழுகிறோம். பொய்மையின் பக்கம் பலமும் பணமும் இருந்தால் அதுவே உண்மையுமாகி விடுகிறது. நிலவை மறைக்கும் மேகம் போல உண்மையைப் பொய் மறைத்துவிடுகிறது. ஆனால் உண்மையை ஒருபோதும் எதனாலும் அழித்துவிட முடியாது என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும் இதற்குத் தானியேல் மிகச் சிறந்த சான்றாவார்.

அவர் உண்மையுள்ளவராக இருந்தபடியால் அவர்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. (தானி. 6:4) இன்றைய சமூகத்திலும் திருச்சபைகளிலும் உண்மையுள்ளவர்களை நாம் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை நமது செய்கைகள் எல்லாம் உண்மைக்கு மாறாக இருக்கின்றன. பொய் சொல்லுவதற்கு வெட்கப்பட்டு, பயந்த காலம் மாறி துணிகரத்துடன் பொய் பேசும் நாட்களில் நாம் வாழ்கிறபடியால் நாம் உண்மையுள்ளவர்களாக வாழ்வது கடினமே எனினும் உண்மையுள்ளவர்களாக நாம் காணப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

சும்மா விளையாட்டாகக்கூட நாம் பொய் பேசல் கூடாது ஏனெனில் ஆண்டவர் உண்மையையே விரும்புகிறார். “உண்மையுள்ள மனிதன் முழுமையான ஆசி பெறுவார்” என்று திருமறை கூறுகிறது.

“மரணமும் வாழ்வும் நாவில் இருக்கிறது” எனும் திருவசனம் உண்மை பேசுவதாலும், உண்மை வாழ்வின் மூலமாக ஏற்படும் நன்மையையும் குறிப்பிடுகிறது.

குற்றம் சாட்டப்பட்டவராய் மன்னர் தரியுவின் முன் நிறுத்தப்பட்டபோது தானியேல் அதை மறுப்பதற்கான வாய்ப்பு அவருக்கு

இருந்தது. இப்போது இருப்பது போல புகைப்பட ஆதாரங்கள் ஏதும் இல்லாத காலத்தில் தானியேல் தன்மீது சுமத்தப்படும் குற்றம் பொய்யானது என்று பொய் கூறினாலும் அரசன் ஏற்றுக்கொண்டிருப்பார் தானியேல் மீது அவ்வளவு நம்பிக்கையும் மரியாதையும் அவருக்கு இருந்தது. வசனம் 14 ராஜா தானியேலை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று சூரியன் மறையும் வரைக்கும் முயன்றார் என்கிறது.

தானியேல் தன்னைக் காக்க பொய் சொல்லாமல் கர்த்தரை மகிமைப்படுத்த உண்மையுடன் இருந்ததால் சிங்கக்கெபியில் போடப்பட்டாலும் மேதியனாகிய தரியு மன்னர் உண்மைக் கடவுளை உணர்ந்திடச் செய்தார். அது மட்டுமல்ல தரியுவின் ஆளுகைக்குட்பட்ட மக்கள் அனைவருமே அந்த உண்மையுள்ள ஆண்டவரைப் பணிந்திட கட்டளையும் பிறப்பிக்கப் பண்ணினார்.

இன்றைய நாட்களில் நமது உண்மையுள்ள வாழ்வு நமது குடும்பத்தில் சான்று பகர்கிறது. நாம் பணியாற்றும் இடங்களில் பிறர் முன்பு நாம் உண்மையுள்ளவர்கள் என்று அறியப்பட்டிருக்கிறோமா? திருச்சபையில் உண்மை உண்டா நம்மையே கேட்போம்.

அன்பர்களே, தானியேலின் குற்றமற்ற, கர்த்தரைப் பற்றிய, உண்மையுள்ள வாழ்வு அவரிலும் அவர் வாழ்ந்த பகுதியிலும் அவரோடு இருந்தவர்களிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரது வாழ்வு முறையைக் கண்ட அரசர் தரியு சிங்கக்கெபியின் அருகில் வந்து தானியேலை அழைக்கும் விதமே இதற்கான சான்றாகும் (வசனம் 20).

" . . . . தானியேலே வாழும் கடவுளின் மகனே . . ."

(தானியேலே ஜீவனுள்ள தேவனுடைய தாசனே)

நம்மை நாம் ஆராய்ந்து ஆண்கள் சங்க உறுப்பினர்களாக, இறைமக்களாக கிறிஸ்துவுக்காக சான்றுள்ள வாழ்க்கை வாழ்வோம். சரித்திரம் படைப்போம்.

ஆண்டவர் தாமே நாம் கேட்ட சத்தியத்தையும், நம் சிந்தித்தவைகளையும் நமக்குப் பயனுள்ளதாக்கி நம்மை ஆசீர்வதித்து அவருக்கு ஏற்புடையவராக வழி நடத்துவாராக. ஆமென்.


அருள்திரு. **P. ஜேக்கப் பீற்றர்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 350 |
| | கீர். | 26 |

பாடகர்க்குழு ஆண்டுவிழா

# மகிழ்ச்சி நிறை பாடலுடன் வாருங்கள்

திபா. 100



...மகிழ்ச்சி நிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள்!

திபா. 100 : 2

"Music can change the world
because it can change the people"

இசை, பாடல் தனிநபர் வாழ்வில் மாபெரும் தாக்கத்தைத் தரவல்ல ஒன்றாகும். குறிப்பாகப் பாடல்கள் தனிமனித வாழ்வில் மாற்றம் தர ஆற்றல் நிறைந்தவை ஆகும். கவலைகளை மறப்பதற்கும் வாழ்வில் புது ஊக்கத்தைத் தருவதற்கும் இசைக்கு மாபெரும் ஆற்றல் உண்டு. மிகக் குறிப்பாக, பாடலில் - படைத்த கடவுளின் பிரசன்னமும் இடைபடுதலும் கலரும் போது அது மாந்தர் மத்தியில் வெகுச்சிறப்பினைக் கொண்டு வருகிறது.

திருச்சபைத் தொழுகைகளில் பாடல்கள், பாடகர்குழு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பரலோகத்தைக் கூட பக்திமான்கள் தரிசிக்கும் போது அங்குப் பாடல்கள் பாடப்படுவதையே கேட்டு அதைத் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக ஆண்டவரைப் போற்றிப்பாடும் பாடல்கள் ஒருவரை, சவால் நிறைந்த சூழல்களில் அமைதி நிறைந்தவராகவும் மகிழ்ச்சி நிறைந்தவராகவும் மாற்றுகிறது. இந்த உண்மையை உணர்த்தும் 100-வது திருப்பாடல் கூறும் ஆழமான உண்மைகளை நாம் அறிந்துகொள்வோம்.

### 1. மீட்பில் மகிழச் செய்யும் பாடல்கள் (திபா. 100 : 2)

"அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு
ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" மாற்கு 14 : 26

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாகத் தன் சீடர்களோடு பஸ்கா ஆசரித்தார். அப்போது அவர்கள்

“ஸ்தோத்திரப் பாடலை”ப் பாடினார்கள் என்று திருமறை (மாற். 14 : 26) கூறுகிறது. இது இஸ்ரவேல் மக்கள் எல்லோரும் செய்யும் ஒன்றாகும். “ஸ்தோத்திரப் பாடல்” என்று சொல்லும் போது அது என்ன பாடல்? அதாவது சங்கீதம் 136, 148 முதலான சங்கீதங்களை இஸ்ரவேல் மக்கள் ஸ்தோத்திரப் பாடலாகப் பஸ்கா பெருவிழாவின் போது பாடுவர். ஆம்! இந்த சங்கீதங்களே “ஸ்தோத்திரப் பாடல்” ஏன் இந்தப் பாடல்களைப் (சங்கீதம்) பாடினார்கள் என்றால், அச்சங்கீதங்கள் யெகோவா என்னும் தங்கள் தெய்வம் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தங்களை மீட்டுக்கொண்ட வரலாற்றைச் சொல்லும் திருப்பாடல்கள் ஆகும். ஆண்டவர் தங்களை மீட்டுக்கொண்டார். அவரே அடிமைத்தனத்தினின்று எங்களை விடுவித்தார் என்பதை அறிக்கைச் செய்யும் வண்ணமாகவும் அதை வரும் தலைமுறைக்குக் கூறி அறிவிக்கும் வண்ணமாகவும் இவ்விதத்திலே கடவுளுக்கு நன்றி சொல்லும் வண்ணமாய் ஸ்தோத்திரப் பாடலைப் பாடினர்.

புதிய ஏற்பாட்டில் வரும்போது சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, (எபேசியர் 5 : 19) என்று திருத்தூதுவர் பவுல் திருச்சபைக்கு ஆலோசனை சொல்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனித குமாரனாக இந்த உலகத்தில் வந்து சிலுவையில் அறையுண்டபின் எந்த மீட்பின் வரலாற்றைப் பாட வேண்டும்? ஆம்! இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தால் மீட்டார் என்பதையே பாட வேண்டும்.

அதாவது பாடல் மீட்பின் அனுபவத்திலிருந்து எழ வேண்டும். அதுவே இறையவருக்கு நம்மிடம் உள்ள எதிர்பார்ப்பு. அப்படி மீட்பின் அநுபவம் சார்ந்த நிலைகளில் பாடும்போது, அது மீட்பிலே வளரப்பண்ணுகிறது. மட்டுமல்ல மகிழ்ச்சிக்கு அடிப்படை ஆதாரமாகிறது.

இதனால் இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தாலும் காயத்தின் தழும்புகளாலும் உருவாக்கின மீட்பை அநுபவித்துப் பாடவேண்டும் அதுவே உண்மையான மகிழ்ச்சிக்கு ஆதாரம்.

**2. மேய்ச்சலில் மகிழப்பண்ணும் பாடல்கள் :** (திபா. 100 : 3)

அனைத்து ஆற்றலும் நிறைந்த கடவுளை மேய்ப்பராகவும் மக்களை ஆட்டு மந்தையாகவும் திருமறை அடையாளப்படுத்துகிறது.

ஆட்டுமந்தைக்கு முக்கியத் தேவை என்பது புல்வெளி அதாவது உணவு. ஒரு சிறந்த மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு சிறந்த புல்வெளியைக் காட்டுகிறார்.

கிறிஸ்தவ வாழ்வைப் பொறுத்தவரை புல்வெளிக்கு ஒப்பானது என்னவெனில் "ஆண்டவரின் திருவார்த்தைகளே" திருவசனங்கள் ஒருவரை "உண்மை" நிறைந்தவராக உருமாற்றுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, "ஆவியோடும் உண்மையோடும் அவரைத் (ஆண்டவரை) தொழுதுகொள்ள வேண்டும்" (யோவான் 4 : 24) என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். அப்படி உண்மை உள்ளவர்களாய்க் கடவுளைத் தொழவும் அவரைப் பாடி மகிமைப்படுத்தவும் ஒருவர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பதே இயேசு நாதர் தரும் அறிவுரை. அப்படி ஆவியோடும் உண்மையோடும் பாட, தொழுது கொள்ள ஆண்டவரின் திருவார்த்தைகளே ஆதாரம். ஆம்! கர்த்தர் அருளும் "மேய்ச்சல்" மிக மிக முக்கியமான அடித்தளம்.

ஆகவே, ஆண்டவரை உண்மையாய் பாடி உயர்த்த வேண்டும் என விரும்பும் ஒரு நபர், தன்னலம் (Selfishness) துறந்து இறையவரின் பெயர் ஒன்றே மாட்சிமைப் பட வேண்டும் என விரும்புவார். அதற்காக ஆண்டவரின் மேய்ச்சலை நாடுவார் ஆம்! அப்படி கடவுளின் மேய்ச்சல் மகிழ்ச்சிக்கு வித்திடுகின்ற ஒன்றாய் அமைகின்றது. ஆகவே, ஆண்டவர் காண்பிக்கும் "மேய்ச்சல்" மிக முக்கியமானது.

இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து அனைத்து ஆற்றலும் நிறைந்த ஆண்டவரை இயேசு கிறிஸ்து மூலம் பாடிப் புகழ்ந்தனர். (வெளி. 4 : 11) என்று திருவெளிப்பாடுக் கூறுகிறது. அதாவது ஆண்டவரின் பெயருக்கு மட்டுமே மாட்சிமை உருவாகட்டும் எனப் பாடினர். ஆம்! அங்கு தன்னலம் இல்லை, சுயநலம் இல்லை - "பிறர்நலம்" மட்டும் தான்!

இறை வார்த்தை ஒருவரது தன்னலத்தை அகற்றிப் பிறர்நலம் உடையவராய் அவரை மாற்றுகிறது. அப்படி "மேய்ச்சல்" ஒருவரை அல்லது ஒரு சமூகத்தைப் புகழ்ந்துப் பாடப் பண்ணுகிறது. அது நிறைவான வாழ்விற்கு இட்டுச் செல்கிறது.

தற்காலத்தில் பாடகர்குழுக்களில் "தன்னலம்" மேலோங்கி நிற்கிறது. "நான்" புகழப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு அநேகர்

காணப்படுகின்றனர். அதாவது எனது “குரல்” அல்லது எங்கள் “பாடகர்குழு” வின் குரல் பிறரால் புகழ்ந்துப் பேசப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு அநேகர் அல்லது பெரும்பாலான பாடகர்குழுக்கள் பாடுகின்றன. இது திருமறைக்கு எதிரான ஒன்று. தன்னைப் பிறர் புகழும் வண்ணம் யாரும் பாடக்கூடாது.

மாறாக, மீட்பின் அநுபவத்திலிருந்து திரியேக கடவுளுக்கு நன்றி சொல்லும் வண்ணம் பாட வேண்டும். மேலும், மேய்ச்சலை உள்வாங்கி உண்மையோடு ஆண்டவரைப் போற்ற வேண்டும்.

அதுவே ஆசீர்வாதம்!

அதுவே மெய்யான மகிழ்ச்சி!

அதுவே உண்மையான இறை பக்தி!


அருள்திரு. J.T. **ஜெறோம்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 1 |
| | கீர். | 131 |

இறைவேண்டல் குழு ஆண்டுவிழா

# இறைவேண்டல் தடைகளை உடைக்கும்

திப. 12 : 1-17



“பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது திருச்சபை அவருக்காக கடவுளிடம் உருக்கமாக வேண்டியது” (திப. 12 : 5)

இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின், ஏரோது சிரியா, யூதேயாவை ஆளுகை புரிந்த காலம். பேதுரு, யோவான் பிற மக்களைக் கிறிஸ்துவின் நற்செய்தியால் ஒன்றிணைத்ததை ஏற்க மறுத்த யூதர் கலகம் செய்தனர். இது பஸ்காவின் புளிப்பில்லா அப்பப் பண்டிகை நாட்களில் ஆபிப் மாதம் 7-ஆம் நாள் (யாத். 12 : 16) சபை கூடிவருதல். ஏரோது யாக்கோபைக் கொன்று பேதுருவைச் சிறையில் அடைத்து மக்களின் நல்மதிப்பை, அங்கீகாரமாகப் பெற முயலுகிறார். சபை மக்கள் இணைந்து பேதுருவுக்காய் இறைவேண்டல் புரிந்தனர். இவ்விறை வேண்டுதலால் தடைகள் தகர்ந்து விடுதலை அனுபவமாயிற்று என அறிவோம்.

**1. சிறைதாண்டும் இறைவேண்டல்** (திப. 12 : 4)

அந்தோணயாவில் உள்ள பாதுகாப்பு அரணில் பேதுரு அடைக்கபட்ட சிறைசாலை அமைந்திருந்தது. யாக்கோபைப் பட்டயத்தால் கொன்ற ஏரோது புளிப்பில்லா அப்பப் பண்டிகை நாட்களில் பேதுருவைக் கொன்று கலகத்தை ஏற்படுத்த விரும்பாமல், வசந்தகாலப் பண்டிகை அமைதியுடன் நடைபெற பேதுருவைச் சிறையில் அடைத்தார். நான்கு சிறைக் காவலர் நடுவே சங்கிலிகளால் கட்டபட்டு பேதுரு அடைபட்டிருந்தார் என்பது சிறைச்சாலை அமைந்திருந்த இடத்தின் முக்கியத்துவத்தையும், தொடக்க கால கிறிஸ்தவர் சந்தித்த சவால்களையும், துன்புறுத்தபட்ட கடின தன்மையையும் நமக்குக் காண்பிக்கிறது.

சிறைதாண்டும் இறைவேண்டலின் வழியே சிறைச்சாலையில் அடைபட்டாலும் உடனிருக்கும் ஆண்டவரின் வல்ல செயல்களை நாம் அறிந்துகொள்கிறோம். திருமறையில் சிறைச்சாலையில் அடைபட்ட யோசேப்புடன் கர்த்தர் இருந்தார் (ஆதி. 39 : 21). தானியேலுடன்

இருந்தார் (தானி. 6 : 22), பவுல் சீலாவுடன் (அப். 16 : 25) கர்த்தரைப் பாடி மகிமைப்படுத்துகையில் இம்மானுவேல் உடனிருந்தார் எனபதைப் படித்து நம்புகிறோம். இன்றும் இயேசு கிறிஸ்துவைப் போல நீதிக்காய் சிறைபட்டோரை விடுவிக்கும் ஆண்டவர் நம் நடுவில் இருக்கிறார்.

**2. தடை தாண்டும் இறைவேண்டல்** (திப. 12 : 5).

ஊக்கமான இறைவேண்டல் விடுதலை தரும் என்பதில் கிறிஸ்தவராகிய நமக்கு அசைவில்லா நம்பிக்கை. துன்பகரமான சிறையிருப்பில் சபை மக்களின் இறைவேண்டல், பேதுருவின் சிறையிருப்பில் மக்கள் உடனிருந்தார்கள் என்ற ஆழ்ந்த செய்தியை நமக்குத் தருகிறது. மேலும் தனிமனித பாடுகளில் குழு இறைவேண்டலில் இணைவதால் பாடுகள் பகிரப்பட்டு விடுதலை உருவாகிறது என்ற உண்மையை நாம் கண்டுகொள்கிறோம்.

**3. சிந்தை தாண்டும் இறைவேண்டல்** (திப. 12 : 17).

எழுந்திரு, உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள், உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்ற கர்த்தருடைய தூதனின் குரல் தூக்கத்தால் இழைத்த அனுபவமாய் அல்லாமல் நடைமுறையான பேர் விடுதலையைக் காண்பிக்கிறது. ரோதை என்னும் பெண்ணுடன் இறைவேண்டலில் இணைந்திருந்தோர் பயத்தால் நம்ப மறுத்தாலும் கர்த்தரின் வல்ல செயல்களை உணர்த்தியது. பேதுரு தமது விடுதலையைச் சீடருக்கு அறிவித்துப் புறப்பட்டார் என்ற சிந்தனை இயேசு கிறிஸ்துவின் திருத்திட்டமாம் உலகெங்கும் நற்செய்தி சொல்லுங்கள் என்ற மேலான சிந்தை மானுட பெலவீனங்களைக் கடந்து பேதுருவுடன் செல்கிறது என்ற அறிவினைப் பெறுகிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் இணைந்திடும் இறைவேண்டல் தடை, சிறை, சிந்தை தாண்டி நற்செய்தி பணியில் நம்மை இணைத்திட ஆண்டவரே அருள் செய்வாராக, ஆமென்.

அருள்திரு. **ஜோசப் C.G. ஸெனித்**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 270 |
| | கீர். | 5 |

நூலக ஆண்டு விழா

# அறியாமை அகல அறிவைப் பெருக்கு

2 திமொ. 3 : 12-17



"நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு"

( 2 திமொ. 3 : 14)

பாப்டிஸ்டு சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு புத்தகக்கடையில் அசாதாரணமான நிலையில் ஒரு கடிதம் கிடைத்தது. ஐந்து டாலருக்கான நோட்டும் அந்த கடிதத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. அனுப்பியவரின் பெயரோ, இடப்பெயரோ குறிப்பிடப்படாத அந்தக் கடிதத்தில் இப்படியாக எழுதப்பட்டிருந்தது.

"சில மாதங்களுக்கு முன் நான் உங்கள் புத்தகக் கடைக்கு வந்திருந்தேன். அவ்வேளையில் நான் மது அருந்திப் போதையில் காணப்பட்டேன். என்னிடத்திலோ எந்தப் பணமும் இல்லை. நான் அங்கிருந்த ஒரு புத்தகத்தைத் திருடினேன். ஜாண் கிளேபுள் என்பவர் எழுதின துன்பப்படுகின்ற சகப் பயணியின் காலடிகள் என்ற தலைப்புள்ள புத்தகத்தையே நான் திருடினேன்."

ஆனால் இன்று என்னுடைய வாழ்க்கை புதியதாயிருக்கிறது. நான் செய்த தவறுகளை இன்று நான் திருத்திக் கொண்டிருக்கிறேன். அதனால் திருடின புத்தகத்தின் விலையாக ஐந்து டாலரை அனுப்புகிறேன். நீங்களும் கடவுளுமாகச் சேர்ந்து என் பாவங்களை மன்னியுங்கள். உங்களுக்கு என்னைத் தெரியாது என்றாலும் எனக்கு மன்னிப்புத் தாருங்கள். இப்படிக்கு என்று எழுதி அதன் கீழே கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரன் என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த மனிதன் தன்னுடைய வாழ்வின் தவறை உணர்ந்து திருந்தியது போல நாமும் நல்ல பயனுள்ள நூல்களைக் கற்பதன் விளைவாக அறியாமையை அகற்றி விடலாம். அனுதின வாழ்வில் திருமறை கற்று சாதனைகள் படைத்தவர்கள் பலர் உள்ளனர். வாழ்வில் உயர்ந்தவர்களும் பலர் உள்ளனர்.

நூல்களை மூன்று விதமாக வாசிப்பவர்கள்

1. Eye Reading - 90% : மக்கள் இதை வாசிப்பு என்று நினைப்பார்கள். இது பள்ளியில் கற்றுத் தரப்பட்டு நம்மால் சோதிக்கப்பட்டது.

2. Ear Reading : கண்களால் பார்த்து வாசிப்பதை விட காதுகளால் கேட்டு வாசிப்பவர்கள் சிலர்.

3. Finger Reading : கண்பார்வை அற்றவர்கள் புத்தகங்களை விரல்களால் வாசிப்பார்கள். இதை Braille Reading என்று கூறுவர்.

ஃப்ரான்சிஸ் பேகன் புத்தக வாசிப்பைக் குறித்து கூறும்போது சில நூல்களை ருசி பார்க்கவேண்டும், சில நூல்களை அப்படியே விழுங்க வேண்டும். சில நூல்களையோ மெதுவாக மென்று சுவைத்துச் சீரணிக்க வேண்டும் என்கிறார்.

இதில் வேதாகமம் கடைசி பிரிவைச் சார்ந்தது அதைத் தியானிப்பது மெதுவாக மென்று சுவைத்துச் சீரணிப்பதாகும். இந்த நூலக ஆண்டுவிழாவில் எப்படி அறியாமையை அகற்றுவது எனறு தியானிப்போம்.

**1. அறியாமை அகல திருமறையை வாசி**

தொழில்நுட்பம் வளர்ந்த இந்தக் காலத்தில் மனிதனுக்கு வேதத்தை வாசிப்பதற்கு நேரமில்லை. இயந்திரம் போல் சுழன்று கொண்டு கடமைகளை நிறைவேற்றுகிறான். ஆனால் தன்னைச் சீர்படுத்த நேரமில்லை. பணம் காய்க்கும் மரமாக விளங்குகிறான். இதை வேதத்தில் பார்க்கும்போது ஓசியா 8 : 12 “என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்.”

மாற்றுச் சமய நண்பன் ஒருவன் ஐவன் என்ற வாலிபனிடம் தன் வாழ்வில் உள்ள கவலைகளையும் பிரச்சனைகளையும் அழுது கொண்டு கூறினான். இதைக் கேட்டவாலிபன் சற்று யோசித்து விட்டு தன்னிடம் இருந்த திருமறையைக் கொடுத்து இதை வாசியுங்கள் என்றான் ஆர்வமுடன் இல்லம் சென்று மாற்றுச் சமய நண்பன் திருமறையை வாசித்தான். அவன் வாழ்வில் இருந்த அறியாமையாகிய துன்பங்கள் களைந்தன. வாழ்வில் மகிழ்ச்சி பொங்கியது.

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்

அருளப்பட்டிருக்கிறது. தீமோ. 3 : 16, யோசுவா 1 : 8 இரவும் பகலும் நீ அதை வாசிக்க வேண்டும். எனவே வேதத்தை வாசிக்கும்போது அறியாமை அகல்கிறது.

## 2. அறியாமை அகல திருமறையைத் தியானி

வேதத்தை வாசிப்பதோடு நிறுத்தி கொள்ளாமல் வேதத்தை நாம் தியானிக்க வேண்டும்.

உமது வசனத்தைத் தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்.

சங். 119 :148; சங்கீதக்காரராகிய தாவீது தன் வாழ்வில் நெருக்கங்கள் வந்தபோதும் நேரப்பட எழுந்து கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பதற்கு ஆவலோடு காத்து இருக்கிறார்.

யோசுவாவிடம் கர்த்தர்: “இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக ; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய்”. யோசுவா 1: 8b என்றார்.

மோசேக்குப் பின் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த யோசுவாவைக் கர்த்தர் தெரிந்தெடுத்தார். இந்த யோசுவாவிடம் ஆண்டவர் கூறும்போது இரவும் பகலும் விடாமல் நியாயப்பிரமாணப் புத்தகத்தைத் தியானிப்பாயாக இதன் மூலம்உன் வழி செவ்வைப்படும் நீ அறிவுள்ளவனாய் உலகில் காணப்படுவாய் என்றார்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவராகக் காணப்பட்டார். சாத்தான் இயேசுவைச் சோதனை செய்ய வந்தபோது வசனத்தினால் வீழ்த்தினார். தன்னிடம் குற்றம் கண்டுபிடிக்க வந்தவரைத் தம் அறிவால் சிந்திக்க வைத்தார்.

இயேசு கிறிஸ்துவைப் போல் நாமும் அறியாமை இருள் அகல அறிவை வேதவசனத்தின் மூலம் பெருக்கி இருள் நிறைந்த உலகத்தை ஒளியாக மாற்றுவோம்.

திரு. J. **காட்பிறே**

| | | |
|---|---|---|
| 𝄞 | ஞா. | 424 |
| | கீர். | 215 |

# Notes

## Notes

# Notes



திருப்பீடம், C.S.I. சேகர ஆலயம், காஞ்சிரபுரம்

**2023-ஆம் ஆண்டு பேராய கருப்பொருள்**

**கிறிஸ்துவின் அன்பு உலகை**

**ஒப்புரவுக்கும் ஒன்றிப்புக்கும் நெருக்கி ஏவுகிறது**

**Christ's Love Moves the World to Reconciliation and Unity**


வெளியீடு

தொடர்புத்துறை

கன்னியாகுமரிப் பேராயம்

DIOCESAN PRESS

Nagercoil, 04652 - 231643